கலைஞரின்
கடிதங்கள்



51

20.03.2014 - முதல்
22.08.2014 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 51

20.03.2014 - 22.08.2014

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00**


CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2258
L894.811
L(வரை).51

இ.ஆ.ப. அவர்கள் நூலகம்
பேராசிரியர் அப்பாதுரை நினைவகம்
சென்னை-18
மாநில அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3867. நிலைகுலைந்த ஆட்சியில் விலைவாசி நிலவரம்!	20-3-2014	21
3868. பட்டியல் தருகிறேன்; பரப்பிடுக!	21-3-2014	30
3869. இப்போதாவது ஒரு கணம் சிந்திப்பீர்களா?	23-3-2014	45
3870. எல்லோருக்கும் தெரிந்த உண்மை!	25-3-2014	53
3871. “சலசல”வெனப் பெருகும் சாட்சிய அருவிகள் பாரீர்!	31-3-2014	59
3872. பொய் சொல்வது நாங்களா? அல்லது நீங்களா?	3-4-2014	69
3873. ஒவ்வொருவரும் ஒரு வாக்கு; ஒவ்வொருவராலும் ஒரு வாக்கு!	5-4-2014	75
3874. கங்கையே சூதகமானால் எங்கே போய் மூழ்குவது?	10-4-2014	82
3875. துரோகம் செய்தது யார்? புரிகிறதா இப்போது!	17-4-2014	98
3876. நீதியே! நீ இன்னும் இருக்கின்றாயா?	20-4-2017	108

3877. எச்சரிக்கை தேவை; வெற்றி நமதே!	23-4-2014	116
3878. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (1)	6-5-2014	126
3879. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (2)	7-5-2014	134
3880. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (3)	8-5-2014	141
3881. சொத்துக்குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (4)	09-05-2014	151
3882. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (5)	10-5-2014	160
3883. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (6)	11-5-2014	169
3884. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (7)	12-5-2014	177
3885. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (8)	13-5-2014	186
3886. அந்த நாள்; என்றுதான் வருமோ?	7-6-2014	195
3887. தாமதமாகும் நீதி; தடுக்கப்படும் நீதியாகி விடும்!	8-6-2014	202
3888. தமிழர்களின் இந்த விருப்பமாவது நிறைவேறுமா?	09-06-2014	209
3889. நீண்ட வரலாறுதான்; ஆனால் நினைவில் நிறுத்த வேண்டியது!	16-6-2014	216

3890. சூட்சமத்தைப் புரிந்துகொள்வாய்!	27-6-2014	225
3891. மணம் இல்லையா? மார்க்கம் தெரியவில்லையா?	27-06-2014	228
3892. நெல் கொள்முதல் விலையை ரூ.2000 என உயர்த்துக!	28-6-2014	234
3893. பெரியார் கூறிய கட்டுப்பாடு காத்திட; அண்ணா வழியில் வாரீர்!	29-6-2014	238
3894. அரைவேக்காடு யார்; ஜெயாவா, நானா?	30-6-2014	246
3895. நீதிபதி சந்துருவின் நெறி தவறாத வழிகள்!	2-7-2014	251
3896. வருமான வரி வழக்கில் புது திருப்பம்; ஏன்? எவ்வாறு?	3-7-2014	258
3897. ஒரே ரகுபதி தலைமையில், ஒன்பது விசாரணைகளா?	5-7-2014	266
3898. இனி என்ன செய்யப் போகிறது இந்த அரசு?	7-7-2014	273
3899. “அம்மா” ஆட்சியில் தொடரும் அகால மரணங்கள்!	8-7-2014	279
3900. வார்த்தைப் போட்டிக்கு வர விரும்பவில்லை!	09-07-2014	286
3901. வருமான வரித்துறையுடன் திடீர் சமரச மர்மம் என்ன?	12-7-2014	292
3902. இலங்கைப் பிரச்சினையில் நமது நம்பிக்கை மெய்யாகுமா?	15-07-2014	297
3903. வாழ்க பெருந்தலைவர் காமராஜரின் புகழ்!	16-7-2014	303

3904. கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படாதீர்!	17-7-2014	310
3905. பொய்க்குளி பேச்சுக்கு மறுப்பு!	18-07-2014	318
3906. இதுதானே; அண்ணா கண்ட அன்புவழி!	21-07-2014	324
3907. சர்ச்சையை உருவாக்கவா சமஸ்கிருத வாரம்?	22-7-2014	332
3908. நீதியின் கழுத்தை நெரிக்கும் கட்ஜுவின் நேர்மையற்ற கருத்து!	23-7-2014	339
3909. தமிழகச் சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு!	24-7-2014	349
3910. உணரும் காலம் வெகு விரைவில் வந்தே தீரும்!	31-7-2014	357
3911. இதற்குப் பெயரா “பெண்களுக்குப் பாதுகாப்பு”?	8-8-2014	363
3912. இந்த நாளில் அன்பு வேண்டுகோள்!	11-08-2014	374
3913. சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் பிரச்சினை - இந்த அரசின் அணுகுமுறை என்ன?	12-08-2014	380
3914. குண்டர் சட்டத்தை மேலும் கொடுமையாக்குவதா?	15-8-2014	387
3915. நீதிக்குத் தலைவணங்க ஒரு வாய்ப்பு!	22-8-2014	395

3867. நிலைகுலைந்த ஆட்சியில் விலைவாசி நிலவரம்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையினை முதலமைச்சர் ஜெயலலிதா "மிகப் பெரிய கபட நாடகம்; பொய்ப் பித்தலாட்டத்தின் உச்சக் கட்டம்" என்றெல்லாம் "ஜெயா பிராண்ட்" அரசியல் நாகரிகத்தோடு விமர்சித்து வருகிறார். கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அந்தத் தேர்தல் அறிக்கையில் "நுகர்பொருள்களின் விலைகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்குச் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, வாங்கும் சக்தி குறைவாக உள்ள ஏழையெளிய நடுத்தரக் குடும்பத்தினர் பயன் பெறும்வகையில் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம்" என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தை ஆளும் கட்சியான அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் விலைவாசியைக் கட்டுப்படுத்துவது பற்றி எதுவும் கூறப்படவில்லை. விலைவாசிக் கட்டுப்பாடு குறித்து அந்த அளவுக்கு அக்கறை அ.தி.மு.க.வுக்கு! ஜெயலலிதா 2011ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிக்கு வந்து மூன்றாண்டுகள் ஆகின்றன. இந்த மூன்றாண்டுகளில், இந்த ஆட்சியில் விலைவாசி எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது?

	தி.மு.க. ஆட்சியில் விலைகள் நிலவரம்	அ.தி.மு.க. ஆட்சியில் விலைகள் நிலவரம்
துவரம்பருப்பு ஒரு கிலோ	62 ரூபாய்	84 ரூபாய்
உளுத்தம்பருப்பு ஒரு கிலோ	56 ரூபாய்	84 ரூபாய்
கடலைப் பருப்பு ஒரு கிலோ	38 ரூபாய்	74 ரூபாய்

பயத்தம்பருப்பு ஒரு கிலோ	80 ரூபாய்	100 ரூபாய்
பூண்டு ஒரு கிலோ	100 ரூபாய்	140 ரூபாய்
மஞ்சள் ஒரு கிலோ	65 ரூபாய்	160 ரூபாய்
புதுப்புளி ஒரு கிலோ	100 ரூபாய்	120 ரூபாய்
பழைய புளி ஒரு கிலோ	60 ரூபாய்	100 ரூபாய்
மிளகாய் ஒரு கிலோ	70 ரூபாய்	140 ரூபாய்
தனியா ஒரு கிலோ	80 ரூபாய்	116 ரூபாய்
புழுங்கல் அரிசி ஒரு கிலோ	40 ரூபாய்	50 ரூபாய்
பொன்னி அரிசி (25 கிலோ)	855 ரூபாய்	1,315 ரூபாய்
பொன்னி பச்சரிசி ஒரு கிலோ	32 ரூபாய்	54 ரூபாய்
மிளகு ஒரு கிலோ	275 ரூபாய்	680 ரூபாய்
வெந்தயம் ஒரு கிலோ	50 ரூபாய்	100 ரூபாய்
நல்லெண்ணெய் ஒரு லிட்டர்	84 ரூபாய்	220 ரூபாய்
கடலை எண்ணெய் ஒரு லிட்டர்	86 ரூபாய்	110 ரூபாய்
பாமாயில் ஒரு லிட்டர்	36 ரூபாய்	66 ரூபாய்
சிமெண்ட் ஒரு மூட்டை	250 ரூபாய்	350 ரூபாய்
கம்பி ஒரு டன்	48,000 ரூபாய்	28,000 ரூபாய்
மணல் ஒரு லோடு	7,000 ரூபாய்	19,000 ரூபாய்
செங்கல் ஒரு லோடு	13,500 ரூபாய்	18,000 ரூபாய்

அ.தி.மு.க. ஆட்சியில், முதலமைச்சர் ஜெயலலிதா மிகவும் சிரமப்பட்டு விலைகளை இந்த அளவிற்குக் குறைத்துள்ளார்! அதனால்தான் அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே விலைவாசியைக் கட்டுப்படுத்துவது பற்றி எதுவும் கூறவில்லை போலும்!

அ.தி.மு.க. ஆட்சியில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் எட்டாத உயரத்திற்குச் சென்றுள்ளதோடு, கட்டுமானப் பொருள்களின் விலையும் உயர்ந்துவிட்டது. அதன் காரணமாக கட்டுமானத் தொழில் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான கட்டுமானத் தொழிலாளர்கள்

வேலையிழந்து பரிதவிக்கிறார்கள். ஆனால் விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்று கூறித் தான் தப்பித்துக் கொள்ள முயலுகிறார். விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் காரணம் என்றால், தமிழகத்திலே பால் விலையை உயர்த்தவும், பேருந்துக் கட்டணத்தை உயர்த்தவும், மின் கட்டணத்தை உயர்த்தவும் யார் காரணம்? விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் முழு முதல் காரணம் என்றால், அ.தி.மு.க. அரசின் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் விலைவாசியைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கை பற்றி விளக்குவது ஏன்?

ஜெயலலிதா, 2011ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக வரவு செலவுத் திட்டத்தை அவையிலே வைப்பதற்கு முன்பாகவே வழக்கத்திற்கு முற்றிலும் மாறாகத் தமிழக மக்கள் தலையில் சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு வரிகளைச் சுமத்தினார். அத்துடன் இல்லாமல்- பஸ் கட்டண உயர்வு - பால் விலை உயர்வு - மின் கட்டண உயர்வு என்று பல உயர்வுகளைச் செய்து, ஏழையெளிய நடுத்தரக் குடும்பத்தினர் மீது சுமைகளை ஏற்றினார். மக்களைப் பழிவாங்கும் காரியத்தை அடுக்கடுக்காக நடத்திக் கொண்டே, அந்தப் பழியைக் கடந்த கால கழக அரசின் மீதும், மத்திய ஆட்சியின் மீதும் போடுவதற்கு அவர் பகீரதப் பிரயத்தனம் செய்தார். தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோது பெட்ரோல் விலையை, டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தவில்லையா? உயர்த்திக் கொண்டுதான் இருந்தார்கள். அந்த உயர்வை அவ்வப்போது கடுமையாக எதிர்த்துக் குரல் கொடுத்தோம்; இருந்தாலும் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அந்தச் சுமையையெல்லாம் தமிழக அரசு தாங்கிக் கொண்டு பேருந்துக் கட்டணத்தை ஒரு பைசா கூட உயர்த்தாமல் பார்த்துக் கொள்ளவில்லையா? ஆவின் பால் விலையை அதிகமாக உயராமல் பார்த்துக் கொள்ளவில்லையா? பெட்ரோல், டீசல் மீது மத்திய அரசு விலையை உயர்த்தியபோது, அதற்கான விற்பனை வரியை விதிக்காமல் தமிழக அரசு தவிர்த்து விடவில்லையா?

பேருந்துக் கட்டணங்களைப் பொறுத்தவரையில், சாதாரண புறநகர்ப் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு கழக ஆட்சியில் 28 பைசா வீதம் வசூலிக்கப் பட்டு வந்த கட்டணத்தை, 50 சதவிகித அளவிற்கு அதாவது மேலும் 14 பைசா என்ற அளவிற்கு உயர்த்தி,

கிலோ மீட்டர் ஒன்றுக்கு 42 பைசா என்று நிர்ணயம் செய்தது அ.தி.மு.க. அரசு. இதன் காரணமாகப் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளையே பயன்படுத்தும் மக்கள் பாதிப்புக்காளாவார்களே என்று சிறிதேனும் எண்ணிப் பார்த்தார்களா?

விரைவு மற்றும் செமி-டீலக்ஸ் புறநகர்ப் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு கழக ஆட்சியில் 32 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்தை ஜெயலலிதா 75 சதவிகிதம் உயர்த்தி, அதாவது 24 பைசா வீதம் உயர்த்தி, கிலோ மீட்டர் ஒன்றுக்கு 56 பைசா வீதம் வசூலிக்க ஆணையிட்டார்.

சூப்பர் டீலக்ஸ் மற்றும் சொகுசு புறநகர்ப் பேருந்துகளுக்குக் கழக ஆட்சியில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 38 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்தை, ஜெயலலிதா கிலோ மீட்டர் ஒன்றுக்கு 60 பைசா என்று உயர்த்தினார்.

புறநகர்ப் பேருந்துகளைப் பொறுத்து இதுதான் நிலைமை என்றால், நகரப் பேருந்துகளைப் பொறுத்த வரையில், சென்னை நீங்கலாக இதரப் பகுதிகளில் குறைந்தபட்சக் கட்டணம் இரண்டு ரூபாய் என்பதை, ஜெயா ஆட்சியில் மேலும் 50 சதவிகித அளவிற்கு, அதாவது ஒரு ரூபாய் அளவிற்கு உயர்த்தி, மூன்று ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது.

நகரப் பேருந்துகளில் அதிகப்பட்சக் கட்டணமாகக் கழக ஆட்சியில் 7 ரூபாய் வசூலிக்கப்பட்டு வந்தது. அதை ஜெயலலிதா 70 சதவிகித அளவிற்கு உயர்த்தி, 12 ரூபாய் கட்டணம் என்று நிர்ணயித்தார்.

சென்னை நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், கழக ஆட்சியில் குறைந்தபட்சக் கட்டணம் 2 ரூபாய் என்பதை ஜெயலலிதா 3 ரூபாயாகவும், அதிகப்பட்சக் கட்டணம் 12 ரூபாய் என்பதை 14 ரூபாயாகவும் உயர்த்தினார்.

பேருந்துக் கட்டணங்கள் எந்த அளவிற்கு அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளன என்பதற்கு உதாரணம் கூற வேண்டுமேயானால், திருச்சிக்கு டீலக்ஸ் பேருந்தில் பயணம் செய்ய கழக ஆட்சியில் 105 ரூபாய் கட்டணம் என்றிருந்தது, அ.தி.மு.க. ஆட்சியில் 180 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டது. மதுரைக்கு கழக ஆட்சியில் 145 ரூபாய் என்றிருந்த பேருந்துக் கட்டணம் அ.தி.மு.க. ஆட்சியில் 255

ரூபாயாகவும், நெல்லைக்கு கழக ஆட்சியில் 200 ரூபாய் என்றிருந்த கட்டணம் அ.தி.மு.க. ஆட்சியில் 350 ரூபாயாகவும், கோவைக்கு கழக ஆட்சியில் 165 ரூபாய் என்றிருந்த கட்டணம் அ.தி.மு.க. ஆட்சியில் 290 ரூபாயாகவும் ஜெயலலிதா உயர்த்தினார்.

2006ஆம் ஆண்டு முதல் 2011 மே திங்கள் வரை நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேருந்துக் கட்டணம் ஒரு பைசா கூட உயர்த்தப்படவில்லை என்பதையும், ஜெயலலிதா 2006ஆம் ஆண்டுக்கு முன்பு பதவியிலே இருந்தபோது பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய பிறகு தற்போது மீண்டும் அவர் பொறுப்புக்கு வந்த ஒருசில மாதங்களிலேயே பேருந்துக் கட்டணத்தை உயர்த்திப் பொதுமக்களை வாடச் செய்தார் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விடுக்கின்ற ஒவ்வொரு அறிக்கையிலும், தமிழ்நாடு மின்வாரியத்தைத் தி.மு. கழக அரசும், முதல் அமைச்சராக இருந்த நானும் சீர்கேடு அடையச் செய்து விட்டதாகத் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல் அமைச்சராக வந்தபோதும், 1-12-2001 முதல் மின் கட்டணங்களை உயர்த்தினார். மீண்டும் 2003ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் 15-3-2003 அன்று 1398 கோடி ரூபாய்க்கு மின் கட்டண உயர்வுகளைச் செய்தார். தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்ட விவசாயம், குடிசைகளுக்கான இலவச மின்சாரத்தை அப்போதுதான் ரத்து செய்தார். வீடுகளுக்கான மின் கட்டணத்தை 22.13 சதவிகிதமும், கல்வி நிலையங்களுக்கு 16.61 சதவிகிதமும் உயர்த்தினார்.

அதற்குப் பிறகு தி.மு. கழக ஆட்சிக் காலத்தில்; தமிழ்நாடு மின்சார வாரியம், 18-1-2010 அன்று மின் கட்டணத்தை மாற்றி அமைப்பதற்கான மனுவைத் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திடம் தாக்கல் செய்தது. அதனை பல்வேறு கட்டங்களில் பரிசீலித்து 31-7-2010 அன்று மின் கட்டண மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன. அதன்படி இரண்டு மாதங்களுக்கு 600 யூனிட்களுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர், குடிசைவாசிகள், விசைத்தறி மின் நுகர்வோர், கைத்தறி மின் நுகர்வோர், பொது வழிபாட்டிடங்கள் மற்றும்

வேளாண் மின் நுகர்வோருக்கு எந்தவிதமான மின் கட்டண உயர்வும் செய்யப்படவில்லை.

இரண்டு மாதத்திற்கு 600 யூனிட்களுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின்நுகர்வோருக்குக்கூட யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் மட்டுமே உயர்த்தப்பட்டது. தொழில் மின் நுகர்வோரில், உயர் அழுத்த வகையினருக்கு யூனிட் ஒன்றுக்கு 50 காசுகளும் மற்றும் தாழ்வழுத்த வகையினருக்கு யூனிட் ஒன்றுக்கு 30 காசுகளும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

இன்னும் சற்று விளக்கமாகக் கூற வேண்டுமேயானால், தமிழகத்தில் அப்போது வீடுகளுக்கு மின்சாரம் உபயோகிப்போர் மொத்தம் 149.86 இலட்சம் பேரில் 134.67 இலட்சம் பேருக்கு எந்தவிதமான மின் கட்டண உயர்வும் கழக ஆட்சியில் செய்யப்படவில்லை. 600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் 3 லட்சத்து 21 ஆயிரம் பேர்களுக்கு மட்டும் யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற அளவிற்கு கழக ஆட்சியிலே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. தாங்கும் சக்தி அற்றவர்களுக்குக் கட்டண உயர்வு செய்யாமல் பாதுகாத்தது

தி.மு. கழக அரசு. ஆனால் அதற்கே அப்போது பா.ம.க. நிறுவனரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற வேறு சில கட்சியினரும் கண்டனம் தெரிவித்தார்கள். குறிப்பாக இன்றைய முதலமைச்சர், ஜெயலலிதா அவர்கள் 2-8-2010 அன்று விடுத்த அறிக்கையில்,

“விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கச் சொன்னால், விலைவாசியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கிறார் முதல்வர் கருணாநிதி. இரண்டு மாதத்துக்கு 600 யூனிட் மின்சாரத்துக்கு மேல் பயன்படுத்தும் வீடுகளுக்கு மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வீடுகளில் மாதம் 300 யூனிட் மின்சாரப் பயன்பாடு என்பது சர்வ சாதாரணம். மேலும் வாடகை வீடுகளில் குடியிருக்கும் ஏழை எளிய மக்கள் கூடுதல் மின்சாரக் கட்டணத்துக்கு ஆளாக்கப்படுவார்கள். மின் கட்டண உயர்வால் வீட்டு வாடகையும் உயரலாம். தொழிற் சாலைகள், சிறு, குறுந்தொழில்கள், குடிசைத் தொழில்கள், கல்வி நிறுவனங்கள் என எல்லாத் தரப்புக்கும் மின் கட்டண உயர்வால் கடும் பாதிப்பு ஏற்படும். மின் கட்டண உயர்வால் அத்தியாவசியப்

பொருள்களின் விலையும் மேலும் உயரக் கூடும். சாமானிய மக்கள் மீது திணிக்கப்பட் டுள்ள இந்தக் கூடுதல் சுமையை உடனடியாக நீக்க தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

- என்று என்னைக் கேட்டுக் கொண்ட அம்மையார் ஜெயலலிதா, அ.தி.மு.க. ஆட்சி பதவியேற்றதும் எதைப் பற்றியும் எண்ணிப் பார்க்காமல் சகட்டு மேனிக்கு அனைத்துத் தரப்பினருக்கும் மின் கட்டணத்தை உயர்த்தினார். ஜெயலலிதாவின் இந்தப் பொற்கால (?) ஆட்சியிலே, ஆட்சிக்கு வந்த ஆறே மாதங்களில் மின் கட்டணத்தை எந்த அளவிற்கு உயர்த்தப் பரிந்துரை செய்தார்கள் என்றால், வீடுகளுக்கு இரண்டு மாதங்களுக்கு 50 யூனிட் வரை மின்சாரம் உபயோகிப்போருக்கு யூனிட் ஒன்றுக்கு 65 காசு என்றிருந்த மின் கட்டணத்தை இனிமேல் யூனிட் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் அளவிற்கும் - 51 யூனிட் முதல் 100 யூனிட் வரை மின்சாரம் உபயோகிப்போருக்கு யூனிட் ஒன்றுக்கு 75 காசு என்றிருந்த மின் கட்டணத்தை ஒன்றரை ரூபாய் அளவிற்கும் - 101 யூனிட் முதல் 150 யூனிட் வரை மின்சாரம் உபயோகிப்போருக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 75 பைசா என்றிருந்ததை, இனி இரண்டு ரூபாய் அளவிற்கும் - 151 யூனிட் முதல் 200 யூனிட் வரை உபயோகிப்போருக்கு 85 பைசா என்றிருந்ததை இரண்டு ரூபாய் என்றும் 201 யூனிட் முதல் 500 யூனிட் வரை மின்சாரத்தை உபயோகிப்போருக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.20 என்றிருந்ததை, ரூ. 3.50 என்ற அளவிற்கும் - 501 முதல் 600 யூனிட் வரை உபயோகிப் போருக்கு வசூலிக்கப்பட்டு வந்த ரூ. 1.80 என்பதை ரூ. 5.75 என்ற அளவிற்கும் - 601 யூனிட்களுக்கு மேல் மின்சாரத்தை உபயோகிப்போருக்கு ரூ. 4.05 என்றிருந்த மின் கட்டணத்தை ரூ. 5.75 என்ற அளவிற்கும் உயர்த்துவதாகத் திட்டமிட்டு ஒழுங்குமுறை ஆணையத்திற்குப் பரிந்துரை செய்தார்கள் என்றால் - கழக ஆட்சியில் எந்த அளவிற்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டது, 600 யூனிட் வரை வீடுகளுக்கு மின்சாரத்தை உபயோகிப்போருக்கு மின் கட்டண உயர்வே இல்லை என்று அறிவித்ததையும், தற்போது 50 யூனிட் வரை மின்சாரம் உபயோகிப் போருக்கும் ஏழை நடுத்தர மக்களுக்கேகூட மின் கட்டணத்தை உயர்த்தத் திட்டமிட்டிருப்பதையும் ஒப்பிட்டுப்பார்த்து ஏழை எளிய நடுத்தர மக்களின் பொருளாதார நிலை அறிந்து அரவணைப்பது யார் என்பதை உணர வேண்டும்.

மேலும் வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டணம், 120 யூனிட் வரை ஒரு யூனிட்டுக்கு ரூ. 1.50 என்பதிலிருந்து ரூ. 2.50க்கும், 120 யூனிட்டுக்கு மேல் யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் என்பதை 5 ரூபாயாகவும் - தனியார் கல்வி நிலையங்களுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ. 4.80 என்பதை ரூ. 5.00 என்றும், திரையரங்குகளுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ. 5.50 என்பதிலிருந்து ரூ. 7.00 என்றும், தொழிற் சாலைகளுக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ. 4 என்பதிலிருந்து ரூ. 5 ஆகவும் உயர்த்த அ.தி.மு.க. அரசினர் பரிந்துரை செய்தார்கள்.

14-2-2011 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "பால் தட்டுப்பாட்டினை உருவாக்கி, தட்டுப்பாடுகளை உருவாக்கும் தறிகெட்ட அரசாக மைனாரிட்டி தி.மு.க. அரசு விளங்குகிறது. பால் உற்பத்தியாளர்களை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய தி.மு.க. அரசு வழிப்பறிக் கொள்ளையர்களைப் போல நடந்து கொள்கிறது" என்றெல்லாம் வாய்ச்சவடால் விட்டார். ஆனால் இவருடைய ஆட்சியில் என்ன ஆயிற்று? பால் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசாமல், போராட நினைத்த அவர்களை அச்சுறுத்தி அடக்கி விட்டு, தன்னிச்சையாகவே கொள்முதல் விலையையும், விற்பனை விலையையும் உயர்த்தியிருக்கிறார்.

அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சமன்படுத்திய பாலின் விலையை லிட்டர் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த 17 ரூபாய் 75 பைசாவிலிருந்து - 24 ரூபாயாக உயர்த்த முடிவெடுத்தார்கள். அதாவது லிட்டர் ஒன்றுக்கு 6 ரூபாய் 25 பைசா அளவிற்கு ஜெயலலிதா உயர்த்தினார்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் 1-9-2009 அன்று பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 13.45லிருந்து ரூ. 15.64 ஆகவும், எருமைப் பால் விலையை 18 ரூபாயிலிருந்து 23 ரூபாயாகவும் - அதன் பின் 5-1-2011இல் பசும்பாலின் கொள் முதல் விலையை ரூ. 15.64 லிருந்து ரூ. 16.64 ஆகவும், எருமைப் பால் விலையை 23 ரூபாயிலிருந்து ரூ. 25.20 ஆகவும் - 16-2-2011 அன்று பசும்பாலின் கொள்முதல் விலையை ரூ. 16.64லிருந்து 18 ரூபாயாகவும், எருமைப்பால் விலையை ரூ. 25.20லிருந்து 26 ரூபாயாகவும் அதிகப்படுத்திக் கொடுத்த போதிலும், அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகப் பாலின் விற்பனை விலை லிட்டர் ரூ. 17.75 என்பதிலிருந்து ஒரு

பைசா கூட உயர்த்தவில்லை என்பதும், "விலைவாசியை நான் ஆட்சிக்கு வந்தால் குறைப்பேன்" என்றும் "வானத்தை வில்லாக வளைப்பேன்" என்றும் கூறி ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா ஒரே நேரத்தில் லிட்டர் ஒன்றுக்கு பாலின் விலையை ரூ. 6.25 உயர்த்தினார் என்பதையும் நினைவிலே கொள்ள வேண்டும்.

பெட்ரோல் - டீசல் விலை உயர்வு விலைவாசியைப் பாதிக்கும் என்று வாதிடும் ஜெயலலிதாவுக்கு, பேருந்துக் கட்டணம் - மின் கட்டணம் உயர்வு விலைவாசியைப் பெரிதும் பாதிக்கும் என்ற உண்மை தெரியாதா? "வாங்கும் சக்தி மிகுந்துள்ள செல்வந்தர்களைச் சிறிது பாதித்தாலும், வாங்கும் சக்தி குறைவாகவே உள்ள ஏழை எளிய நடுத்தர மக்களை எந்த வகையிலும் பாதிக்காமல் கொள்கை முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைப்படி நடை போட்டது தி.மு. கழக அரசு. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைக் காதிலே போட்டுக் கொள்ளாமல், ஏழை எளிய நடுத்தர மக்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், மற்றவர்கள் மீது பழி சுமத்தியே காலத்தைக் கழித்து விடலாம் என்று கனவு காண்கிறார் ஜெயலலிதா!

அன்புள்ள,

மு.க.

20-3-2014

3868. பட்டியல் தருகிறேன்; பரப்பிடுக!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா கலந்து கொள்ளும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம் என்று ஒரு பட்டியலை ஊருக்கு ஊர் தொடர்ந்து சொல்லிவருவதைத் தொடர்ந்து, 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டுவரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களுக்காகச் செய்த சாதனைகளில் ஒருசிலவற்றைப் பட்டியலிட வேண்டிய கடமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளேன். இது சாதனைகளின் சுருக்கமே தவிர, முழுப் பட்டியல் அல்ல.

- 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு **7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி;**
- **விவசாயிகளுக்கான பயிர்க்கடன்** வட்டி 2005-2006இல் 9 சதவீதம்; 2006-2007 கழக அரசில் 7 சதவீதம்; 2007-2008இல் 5 சதவீதம்; 2008-2009இல் 4 சதவீதம்; 2009-2010இல் பயிர்க்கடன் வட்டி ரத்து; 2006க்குப் பின் இதுவரை 36 இலட்சத்து 71 ஆயிரத்து 372 விவசாயிகளுக்கு 8 ஆயிரத்து 838 கோடியே 6 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 2005-2006இல் நெல் கொள்முதல் குவிண்டாலுக்கு விலை ரூபாய் 600; 2010-2011இல் சாதா ரக நெல் விலை 1050 ரூபாய்; சன்ன ரக நெல் விலை 1100 ரூபாய்;
- மீண்டும் புதுப்பொலிவுடன் **117 உழவர் சந்தைகள்;** மேலும் புதிதாக 45 உழவர் சந்தைகள் அமைப்பு;

- **பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில்** 2006இல் 50 சதவீத காப்பீட்டுத் தொகையை அரசே மானியமாக வழங்கி, ஊக்கப்படுத்தியதால் 2005-2006இல் ஒரு இலட்சம் விவசாயிகள் பயனடைந்த நிலையில்; 2009-2010ஆம் ஆண்டில் 9 இலட்சத்து ஓராயிரத்து 643 விவசாயிகள் அரசின் மானிய உதவி பெற்றுப் பயிர்க் காப்பீடு செய்தனர். இதுவரை 9 இலட்சத்து ஆயிரத்து 643 விவசாயிகளுக்கு 974 கோடி ரூபாய் இழப்பீடுத் தொகை வழங்கப்பட்டுள்ளது;

- **கரும்பு** விவசாயிகளுக்கு 2005-2006இல் டன் ஒன்றுக்கு வழங்கப்பட்ட விலை ரூ.1014; தற்போது டன் ஒன்றுக்கு ரூ.2000 வழங்கப்படுகிறது.

- ஆதிதிராவிட விவசாயிகள் **'தாட்கோ'** நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை வட்டியுட்பட 5 கோடியே 25 இலட்சம் தள்ளுபடி;

- நில அடமானத்தின்மீது தொழில்புரிய வழங்கப்பட்ட **பண்ணைசாராக் கடன்**களுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு; வாங்கிய கடன் அசல் தொகையைச் செலுத்தினால் கடன் ரத்து;

- மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் புரட்சிகரமான திட்டத்தின்கீழ் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டம்;**

- 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டம்;**

- கழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் சலுகைகளால் உணவு தானிய உற்பத்தி 2005 - 2006இல் 61.17 இலட்சம் டன்; 2008-2009இல் 71.01 இலட்சம் டன்; 2009-2010இல் 84.29 இலட்சம் டன் என உயர்வு.

- விவசாயிகளைச் சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்துச் சுழல்நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் 27 ஆயிரத்து 294 குழுக்கள் அமைக்கப்பட்டு, 27 கோடியே 29 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் சுழல்நிதியாக வழங்கப்பட்டு, 32 ஆயிரத்து 940 குழுக்களுக்கு 402

கோடியே 56 இலட்சம் ரூபாய் பயிர்க் கடனாகவும் அளிக்கப்பட்டுள்ளது.

❖ **விவசாயிகளுக்கு** இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில், மின்சாரம் விரயமாவதைத் தடுத்திட, சிறு குறு விவசாயிகளுக்கு பழைய மின் மோட்டார்களுக்குப் பதிலாக **இலவசமாகப் புதிய மின்மோட்டார்களும்**; பெரும் விவசாயிகளுக்கு பம்ப்செட்டுகளில் உள்ள பழைய மின் மோட்டார்களுக்குப் பதிலாக 50 சதவீத மானியத்தில் புதிய மின்மோட்டார்களும் 5 ஆண்டுகளில் மாற்றி அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

❖ 1 இலட்சத்து 5 ஆயிரத்து 494 கைத்தறி நெசவாளர்களுக்கும், 90 ஆயிரத்து 547 விசைத்தறி நெசவாளர்களுக்கும், சிறப்புத் தொகை செலுத்தி மின் இணைப்பு பெற்ற 2 இலட்சத்து 39 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்; மேலும், 2 இலட்சம் பம்ப் செட்டுகளுக்கும் இலவச மின்சார இணைப்பு படிப்படியாக வழங்கிட ஆணையிடப்பட்டு வழங்கப்படுகிறது.

❖ **விவசாயத் தொழிலாளர் நல வாரியம்** உட்பட 35 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 13 இலட்சத்து 55 ஆயிரத்து 884 உறுப்பினர்கள் சேர்ப்பு;

❖ 21 இலட்சத்து 41 ஆயிரத்து 692 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1011 கோடியே 62 இலட்சத்து 81 ஆயிரத்து 687 ரூபாய் உதவித் தொகை;

❖ தென்னை விவசாயிகளின் நலன்களை மேம்படுத்திட திரு. ச.ராஜ்குமார் மன்றாடியார் தலைமையில் 27.8.2010 அன்று தென்னை விவசாயிகள் நல வாரியம் அமைப்பு;

❖ 3742 கோடியே 42 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய்ச் செலவில் ஒரு கோடியே 72 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க முடிவு செய்யப்பட்டு, இதுவரை ஒரு கோடியே 62 இலட்சத்து 59 ஆயிரத்து 526

குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 661 கோடி ரூபாய்ச் செலவில் 29 இலட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன;
- 1 இலட்சத்து 79 ஆயிரத்து 2 **நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு** 2 இலட்சத்து 12 ஆயிரத்து 995 ஏக்கர் **இலவச நிலம்;**
- 8 இலட்சத்து 30 ஆயிரத்து 495 **ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்;**
- **காமராஜர் பிறந்த நாளில் "கல்வி வளர்ச்சி நாள்"** என பள்ளிகளில், கல்வி விழா;
- 2 வயது முதல் 15 வயது வரை உள்ள 73 இலட்சம் **குழந்தைகள், மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் வாரம் 5 நாட்களும் முட்டைகள்;** சாப்பிடாத குழந்தைகளுக்கு **வாழைப் பழங்கள்;**
- **தமிழ் வழியில் பயிலும்** 50 இலட்சத்திற்கு மேற்பட்ட **மாணவ மாணவியர்க்கு** அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் **சிறப்புக் கட்டணங்களும்,** 11 இலட்சம் மாணவ, மாணவியருக்கு 10, 12ஆம் வகுப்புகளின் **அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.**
- பட்டப்படிப்பு பயிலும் 3 இலட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட **கலை அறிவியல் கல்லூரி மாணவ மாணவியரின் படிப்புக் கட்டணங்கள் ரத்து;** 2010-2011 முதல் எம்.ஏ., எம்.எஸ்சி. வகுப்புகளுக்கும் படிப்புக் கட்டணங்கள் ரத்து.
- படிப்பைத் தொடர இயலாமல் **இடையில் நிறுத்திய ஏழை மாணவர்களில்** ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகளுக்கேற்ற **தொழிற் பயிற்சிகளைச்** சமுதாயக் கல்லூரிகள் மூலம் பெற, ஒரு கோடி ரூபாய் செலவில் திறந்த நிலைப் பல்கலைக் கழகம் மூலம் தலா ஆயிரம் ரூபாய் உதவித் தொகை;

- ஆண்டுதோறும் 24 இலட்சத்து 82 ஆயிரம் **பள்ளி மாணவர்களுக்கும்**, 4 இலட்சத்து 35 ஆயிரம் **கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ்;**
- ஏழை மகளிர்க்குப் பட்டப்படிப்புவரை வழங்கப்பட்ட இலவசக் கல்வி, முதுகலைப் பட்டப் படிப்புவரை நீட்டிப்பு.
- **தொழிற்கல்வி படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து.**
- பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களிலிருந்து ஒற்றைச்சாளர முறையில் தொழிற் கல்லூரிகளில் சேரும் **முதல் தலைமுறை மாணவர்களுக்குக்** கல்விக் கட்டணம் 20 ஆயிரம் ரூபாய் ரத்து செய்யப்பட்டு முதலாண்டில் 67 ஆயிரத்து 405 மாணவ மாணவியரும் இரண்டாம் ஆண்டு நேரடிச் சேர்க்கையில் 10 ஆயிரத்து 750 மாணவ மாணவியரும் பயன்;
- பொறியியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கான குறைந்தபட்ச மதிப்பெண் வெகுவாகக் குறைக்கப்பட்டு அதிக அளவில் மாணவர்கள் சேர்ந்து பயில்கின்றனர்.
- சென்னை, கோவை, திருச்சி, நெல்லை, மதுரை ஆகிய இடங்களில் 5 **புதிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள்;**
- 2006க்குப்பின், ஒரத்தநாடு, பெரம்பலூர், வால்பாறை, சுரண்டை, குளித்தலை, லால்குடி, மேட்டூர், புதுக்கோட்டை, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், பென்னாகரம், திருப்பத்தூர் (வேலூர்), வேதாரண்யம் ஆகிய 14 **இடங்களில் அரசின் புதிய கலை அறிவியல் கல்லூரிகள்;**
- **"மாவட்டத்திற்கொரு மருத்துவக் கல்லூரி" கோட்பாட்டின்படி** விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 6 **புதிய மருத்துவக் கல்லூரிகள்;**
- **அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லா** திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், திருக்குவளை,

இராமநாதபுரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் ஆகிய 12 **மாவட்டங்களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள்.**

- ❖ **பத்தாம் வகுப்புவரை** பள்ளிகளில் தமிழ் மொழி கட்டாயப் பாடமெனச் சட்டம்;
- ❖ நூறாண்டுக்கனவை நனவாக்கிச் **"செம் மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்"** சென்னையில் அமைப்பு.
- ❖ உலகெங்கும் வாழும் தமிழர்கள் உவக்க கோவை மாநகரில் 2010 ஜூன் திங்களில் **உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு.**
- ❖ தஞ்சையில் 2010 செப்டம்பரில் **மாமன்னர் இராஜராஜனின் தஞ்சைப் பெரிய கோயில்** 1000 ஆம் ஆண்டு நிறைவு விழா.
- ❖ அருந்தமிழ்ச் சான்றோர் 113 பேரின் நூல்கள் நாட்டுடைமை; 7 கோடியே 61 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை;
- ❖ **நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ்** வழங்கப்பட்ட நிதியுதவி மாதம் 500 ரூபாய் என்பது 1.9.2006 முதல் **1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.** 2006க்குப்பின் புதிதாக 2500 நலிந்த கலைஞர்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க அனுமதிக்கப் பட்டு இதுவரை 9 ஆயிரத்து 563 கலைஞர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர். இவர்களில், தற்போது 5 ஆயிரத்து 41 கலைஞர்கள் நிதியுதவி பெறுகின்றனர்.
- ❖ **தமிழறிஞர்கள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ்** 999 தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் 3 **ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் 15 ரூபாய் மருத்துவப் படியும்,** 528 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மாதம் 1500 **ரூபாய் குடும்ப ஓய்வூதியமும் 15 ரூபாய் மருத்துவப் படியும் வழங்கப்படுகிறது.**

❖ **எல்லைக் காவலர்கள்** 339 பேருக்கு மாதந்தோறும் 4 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் 15 ரூபாய் மருத்துவப்படியும், 166 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கு மாதம் 2000 ரூபாய் குடும்ப ஓய்வூதியமும் 15 ரூபாய் மருத்துவப்படியும் வழங்கப்படுகிறது.

❖ **4724 திருக்கோவில்களில் 523 கோடி ரூபாய் செலவில்** திருப்பணிகள் செய்து குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன;

❖ **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம்** உட்பட அனைத்துத் திருமண உதவித் திட்டங்களின் நிதியுதவி 10 ஆயிரம் ரூபாய் என்பது 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு; 4 இலட்சத்து 67 ஆயிரத்து 419 ஏழைப் பெண்களுக்கு 882 கோடியே 6 இலட்சம் ரூபாய் நிதியுதவி;

❖ **ஏழைக் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவித்** திட்டத்தின்கீழ் 25 இலட்சத்து 76 ஆயிரத்து 612 ஏழை மகளிர்க்கு மொத்தம் 1389 கோடியே 42 இலட்சம் ரூபாய் நிதியுதவி;

❖ 50 வயது கடந்து **திருமணமாகாமல் வறுமையில்** வாடும் 12 ஆயிரத்து 904 **ஏழைப் பெண்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகை;**

❖ **"வருமுன் காப்போம் திட்டம்"** மீண்டும் செயல்படுத்தப்பட்டு 18 ஆயிரத்து 742 மருத்துவ முகாம்களில் ஒரு கோடியே 77 இலட்சத்து 5 ஆயிரத்து 85 பேர் ஏழை எளியோர் பயன்;

❖ தமிழகத்தில் உள்ள 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்; புதிதாக உருவாக்கப்பட்ட 116 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தலா மூன்று செவிலியர்களைப் பணியமர்த்தி 24 மணிநேரமும் மருத்துவ சேவை அளிப்பதால், அங்கு 2005-2006இல் நடைபெற்ற மகப்பேறுகளின் எண்ணிக்கை 82 ஆயிரத்து 532 என்பது, 2009-2010இல் 2 இலட்சத்து 98 ஆயிரத்து 853 ஆக, மூன்று மடங்கு உயர்ந்து கிராமப்புற மகளிர் மகிழ்ச்சி;

- **குழந்தைகள் உயிர் காத்திட மூடிய அறுவை சிகிச்சைக்கு** 20 ஆயிரம் ரூபாய்; சாதாரண திறந்த அறுவை சிகிச்சைக்கு 50 ஆயிரம் ரூபாய்; **கடினமான திறந்த அறுவை சிகிச்சைக்கு** 1 இலட்சம் ரூபாய் என அரசு நிதி உதவி வழங்கப்படுகிறது. 21.11.2007இல் தொடங்கப்பட்ட **இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சைத்** திட்டம், 3.6.2008இல் தொடங்கப்பட்ட **பள்ளிச் சிறார் இருதய அறுவை சிகிச்சைத்** திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின்கீழ் 3264 சிறார்க்கு 17 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் புகழ்வாய்ந்த 28 தனியார் மருத்துவமனைகளின் மூலம் இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு, குழந்தைச் செல்வங்களின் அரிய உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

- கிராமப்புற ஏழைகளுக்கும் உடனடி மருத்துவ வசதி கிடைக்கச் செய்திட இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து 15.9.2008இல் தொடங்கப்பட்ட 445 ஊர்திகளுடன் கூடிய அதிநவீன **"அவசர கால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டம்"** தமிழகம் முழுவதும் நடைமுறை; 8 இலட்சத்து 8 ஆயிரத்து 907 பேர் பயன்;

- அரசு ஊழியர்களுக்கு நான்காண்டுகளில் 2 இலட்ச ரூபாய்வரை மருத்துவ உதவி வழங்கும் புதிய **"மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்";**

- **"உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்"** 2009 ஜூலை முதல் நடைமுறை; 1 கோடியே 34 இலட்சம் குடும்பங்கள் பதிவு; இதுவரை 3 இலட்சத்து 3 ஆயிரத்து 328 ஏழை மக்களுக்கு 781 கோடியே 40 இலட்சம் ரூபாய்ச் செலவில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன;

- இதய நோய், நீரிழிவு நோய், புற்று நோய் போன்றவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உடற்பரிசோதனை செய்யும், **"நலமான தமிழகம் திட்டம்."**

- மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுப் பலனின்றி உயிரிழந்தவர்களின் உடல்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்ல **இலவச அமரர் ஊர்தி சேவைத் திட்டம்.**

- ஏறத்தாழ 2 இலட்சத்து 35 ஆயிரத்து 464 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 62 ஆயிரத்து 349 கோடி ரூபாய் முதலீட்டிலான **27 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்; 24 அரசாணைகள் மூலம் 51 புதிய தொழிற் சாலைகள்** அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் இதுவரை 12 தொழிற் சாலைகள் திறப்பு;

- 4 இலட்சத்து ஓராயிரத்து 704 படித்து வேலை வாய்ப்பற்ற **இளைஞர்களுக்கு** 284 கோடி ரூபாய் **உதவித் தொகை** வழங்கப்பட்டுள்ளது;

- ஏறத்தாழ 5 இலட்சத்து 9 ஆயிரத்து 336 **இளைஞர்களுக்கு அரசு அலுவலகங்களில் புதிய வேலைவாய்ப்புகள்** வழங்கப்பட் டுள்ளன;

- புதுப்பிக்கத் தவறிய 2 இலட்சத்து 70 ஆயிரம் இளைஞர்கள் 2001 முதல் பதிவு மூப்புடன் மீண்டும் புதுப்பித்துப் பயன்;

- **ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை** மாதம் 200 ரூபாய் என்பது 1.9.2006 இல் 400 ரூபாய் எனவும், 24.11.2010 முதல் 500 ரூபாய் என மேலும் உயர்த்தப்பட்டு, மொத்தம் 23 இலட்சத்து 71 ஆயிரத்து 370 பேர் மாதம் 500 ரூபாய் வீதம் உதவித்தொகை பெறுகின்றனர். இந்த உதவித் தொகை மாதம் 750 ரூபாயாக உயர்த்தப்படும் என தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

- **கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித் தொகை** மாதம் 200 ரூபாய் என்பது 500 ரூபாய் என உயர்த்தப்பட்டு, 2006 முதல் ஆண்டுதோறும் 10 ஆயிரம் கடும் மாற்றுத் திறனாளிகள் பயன்;

- 1989இல் தருமபுரி மாவட்டத்தில் கழக அரசு தொடங்கிய மகளிர் திட்டத்தின்மூலம் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள **மகளிர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை** 5,54,538. இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் 9 ஆயிரத்து 32 கோடி ரூபாய்.

- 2006க்குப்பின் 26 இலட்சத்து 95 ஆயிரம் மகளிர் உறுப்பினரைக் கொண்ட 1 இலட்சத்து 75 ஆயிரத்து 493 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு; 7,756.13 கோடி ரூபாய் அளவுக்குப் பொருளாதாரக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

- 2,81,883 **மகளிர் குழுக்களுக்கு** வழங்கப்பட்டுள்ள **சுழல் நிதி** 281 கோடியே 88 இலட்சம் ரூபாய்.

- மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போலவே 2006க்குப்பின் 96 ஆயிரத்து 699 **நகர்ப்புற சுயஉதவிக் குழுக்கள்** ஏற்படுத்தப்பட்டு 96.70 கோடி ரூபாய் சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

- சுய உதவிக் குழு உறுப்பினர்களாகிய 79,643 **இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சிகள்** வழங்கப்பட்டுள்ளன.

- 2,549 கோடி ரூபாய்ச் செலவில் 12 ஆயிரத்து 618 **கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்;**

- அதேபோல, **அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 280 கோடி ரூபாய்ச் செலவில் 561 பேரூராட்சிகளில் கட்டமைப்புப் பணிகள்;** நிதிநிலையில் நலிந்த 30 நகராட்சிகளிலும் தலா 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன;

- மாநகராட்சி, நகராட்சிகளின் நிதிநிலை மேம்பட்டு மக்களுக்கு வசதிகள் செய்திட அவை அரசுக்குச் செலுத்த வேண்டிய 793 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி;

- உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு 2006-2007இல் 8 விழுக்காடு; அதாவது 2112 கோடி ரூபாய்; 2007-2008இல் 9 விழுக்காடு; அதாவது 2734 கோடி ரூபாய்; 2008-2009இல் 9 விழுக்காடு; அதாவது 2959 கோடி ரூபாய்; 2009-2010இல் 9.5 விழுக்காடு;

அதாவது 3316 கோடி ரூபாய்; 2010-2011இல் 10 விழுக்காடு என மேலும் உயர்த்தி, 4030 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ 12 ஆயிரத்து 94 கோடி ரூபாய்ச் செலவில் 57 ஆயிரத்து 787 கிலோ மீட்டர் நீளச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளும் பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன;

❖ 4 ஆயிரத்து 945 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு வழித் தடச் சாலைகள் இடைவெளித் தடங்களாகவும்; 2611 கிலோ மீட்டர் ஒரு வழித் தடச் சாலைகள் இருவழித் தடங்களாகவும்; 168 கிலோ மீட்டர் நீள இருவழித் தடச் சாலைகள் பல வழித் தடங்களாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

❖ மாநில நெடுஞ்சாலைகளில் அகலப்படுத்த இயலாத 32 கிலோ மீட்டர் தவிர ஒரு வழித் தடச்சாலைகளே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுதவிர 11 ஆயிரத்து 219 கிலோமீட்டர் நீளச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ தமிழகத்தில் உள்ள சாலைகளில் 1046 பாலங்கள் மற்றும் 3800 மிகச் சிறுபாலங்கள் 881 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டுள்ளன;

❖ தமிழகத்தில் உள்ள 4,676 கி.மீ. தேசிய நெடுஞ் சாலைகளில் 3,226 கி.மீ நீளச் சாலைகள் 4 வழிச்சாலைகளாக மாற்றப்பட்டு உள்ளன;

❖ தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை அனைத்தும் ரத்து; நிலவரி, ஏக்கர் ஒன்றுக்குப் புன்செய் நிலங்களுக்கு 15 ரூபாய் என்பது 2 ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு 50 ரூபாய் என்பது 5 ரூபாய் என்றும் பெயர் அளவிற்கு மட்டுமே வசூலிக்க அரசு ஆணை;

❖ ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய **4 நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.**

❖ **அரியலூர், திருப்பூர் புதிய மாவட்டங்கள் உதயம்;**

- தருமபுரி மாவட்டத்தில் அரூர்-புதிய கோட்டம்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம் புதிய கோட்டம்; திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை புதிய கோட்டம் என மூன்று புதிய கோட்டங்கள்.

- திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம் பட்டு; திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர்; திருவள்ளூர் மாவட்டம் மாதவரம்; கரூர் மாவட்டம் தரகம்பட்டியைத் தலைமை இடமாகக் கொண்டு கடவூர்; கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி; வேலூர் மாவட்டம் ஆம்பூர்; திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம்; காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர், சோழிங்கநல்லூர் என **9 புதிய வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.**

- கட்டணம் உயர்த்தப்படாமல் 12 ஆயிரத்து 137 புதிய பேருந்துகளுடன் மேலும் 3000 **புதிய பேருந்துகள்;**

- இஸ்லாமியர் சமுதாயம் மேன்மை பெற 3.5 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு; **அருந்ததியர் சமூகத்தின்** அவலம் தீர 3 விழுக்காடு **தனி உள் ஒதுக்கீடு;**

- சமத்துவ சமுதாயம் காணும்நோக்கில் **அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம்** நிறைவேற்றப்பட்டு பல்வேறு சாதிகளையும் சார்ந்த 216 பேருக்கு அர்ச்சகர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- **அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தில் வசிக்க** ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள 145 **பெரியார் நினைவு சமத்துவபுரங்களுடன்** மேலும் 95 சமத்துவபுரங்கள் அமைத்து 240 **சமத்துவ புரங்களையும்** தந்தை பெரியார் திருவுருவச் சிலைகளுடன் நிர்மாணிக்கும் திட்டம் நடைமுறை; 95 சமத்துவபுரங்களில் இதுவரை 65 சமத்துவபுரங்கள் திறப்பு; 30 சமத்துவபுரங்கள் அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

- சென்னை கோட்டூர்புரத்தில் உலகத் தரத்திலான 179 கோடி ரூபாய்ச் செலவில் **"அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்"** 15.9.2010இல் திறப்பு;

- ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைத்திட 910 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு; புதிய சட்டமன்ற - தலைமைச்செயலக வளாகம் திறந்து சாதனை;
- **100 கோடி ரூபாய்ச் செலவில் அடையாறு தொல்காப்பியப் பூங்கா;**
- சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் 8 கோடி ரூபாய்ச் செலவில் உலகத்தரத்திலான **"செம்மொழிப் பூங்கா"** 24.11.2010இல் திறப்பு;
- சென்னை மாநகர் குடிநீர்ப் பற்றாக்குறையை முற்றிலும் தீர்த்திட, வட சென்னை மீஞ்சூரில் **"கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்"** நிறைவேற்றப்பட்டு, 31.7.2010இல் திறப்பு;
- மத்திய அரசு அனுமதித்துள்ள 908 கோடி ரூபாய் நிதியுதவியுடன் தென் சென்னையில் நெம்மேலியில் **"கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்;"** உருவாகி வருகிறது.
- ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி உதவியுடன் 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **"மெட்ரோ ரயில் திட்ட"** அமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன;
- 1929 கோடி ரூபாய் மதிப்பீட்டில், **"ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;"**
- 630 கோடி ரூபாய்ச் செலவில், **"இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றம்;"**
- சென்னைத் துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை 1,655 கோடி ரூபாய் மதிப்பீட்டில், **"பறக்கும் சாலைத் திட்டம்;"** பிரதமரால் அடிக்கல் நாட்டப்பட்டு வேகமாக உருவாகி வருகிறது.
- மத சுதந்திரம் பேண - **"கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் ரத்து;"**
- **"மூன்றாவது காவல் ஆணையம்"** மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர்.பூர்ணலிங்கம் தலைமையில்

அமைக்கப்பட்டு, அது வழங்கிய 444 பரிந்துரைகளில் இதுவரை 278 பரிந்துரைகள் நடைமுறை;

- 2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 **சத்துணவுப் பணியாளர்கள்** பயன்பெற **காலமுறை ஊதியம்; ஓய்வூதியம்;**
- டெஸ்மா, எஸ்மா சட்டங்களை நீக்கி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு பறிக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் வழங்கப்பட்டு, 1.1.2006 முதல் தமிழகத்தில் ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் 6வது ஊதியக் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- இதன்காரணமாக, 11 ஆயிரத்து 93 கோடி ரூபாய் அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு நிலுவைத் தொகையாக அனுமதிக்கப்பட்டுப் புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது.
- ஏறத்தாழ 2 இலட்சம் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் பயன்பெறும்வகையில் 200 கோடி ரூபாய் கூடுதல் செலவில் ஒரு நபர் குழு பரிந்துரை 1.8.2010 முதல் நடைமுறை;
- ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை நீக்கி 163 கோடி ரூபாய்ச் செலவில் கூடுதல் சலுகைகள்; 2.73 இலட்சம் ஆசிரியர்கள் பயன்.
- அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்கள், அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களில், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப் படும் ஊர்திப்படி 300 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக 1.10.2010 முதல் உயர்த்தி வழங்கிட ஆணை;
- 21 இலட்சம் குடிசை வீடுகளை 6 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" என்னும் புரட்சிகரமான திட்டம் இவ்வாண்டில் நடைமுறை. நடப்பாண்டில் ஒரு வீட்டிற்கு 75

ஆயிரம் ரூபாய் மானியம் வீதம் 2,250 கோடி ரூபாய்ச் செலவில் 3 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு, 15.8.2010 முதல் பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்குரிய பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

❖ இத்திட்டத்தின்கீழ் முதல் வீடு கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே வல்லம்படுகை கிராமத்தில் 9.10.2010 அன்று பயனாளிக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இது வரை 77 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு; 60 ஆயிரத்து 486 வீடுகளுக்குப் பயனாளிகள் குடிபுகுந்துள்ளனர்.

❖ மேலும் 12 இலட்சம் பயனாளிகளுக்குத் தகுதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக மேலும் 3 இலட்சம் குடிசைகள் இத்திட்டத்தின்கீழ் கான்கிரீட் வீடுகளாகக் கட்டப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டு 2 இலட்சத்து 98 ஆயிரத்து 162 வீடுகள் கட்டுவதற்குப் பணி ஆணைகள் வழங்கப்பட்டு உள்ளன.

உடன்பிறப்பே, கழக ஆட்சியில் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப்பட்ட சாதனைகளின் தலைப்புகளை மட்டுமே இங்கே திரட்டித் தந்துள்ளேன். இந்தச் சாதனைகள் அனைத்துமே அறிவிப்புகளாக இல்லாமல், தமிழ்நாட்டு மக்களுக்கு செய்து தரப்பட்டவை என்பதை நீயும் அறிவாய்; அதனை அவர்களும் அறிவார்கள். இந்தத் தேர்தல் நேரத்தில் கடந்த மூன்றாண்டுகளில் அ.தி.மு.க. அரசு என்னென்ன சாதனைகளைச் செய்தது என்பதை முதலமைச்சரே ஊருக்கு ஊர் எடுத்துச் சொல்லி வருகின்ற நேரத்தில், இந்தப் பட்டியலையும் நீயும் துண்டு அறிக்கைகளாகத் தயாரித்து வாக்காளர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்திட வேண்டிய கடமையையும் செய்வாய் என்ற நம்பிக்கையோடு இந்தப் பட்டியலை இங்கே எழுதியுள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

21-3-2014

3869. இப்போதாவது ஒரு கணம் சிந்திப்பீர்களா?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா பேசும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் எல்லாம் மத்திய அரசில் கிட்டத்தட்ட 17 ஆண்டுக் காலம் அங்கம் வகித்த தி.மு.கழகம் தமிழ்நாட்டு மக்களுக்காக என்ன செய்தது என்ற கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டு, அதற்கான விடையினை, தி.மு. கழகம் மத்திய அரசிலே அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டு மக்களுக்காக என்னென்ன திட்டங்களை மத்திய அரசிடம் கேட்டுப் பெற்றது என்ற பட்டியலைத் தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டோம். அதற்குப் பிறகும் அதே கேள்வியை ஜெயலலிதா தொடர்ந்து கேட்டுவந்ததின் பேரில் அந்தப் பட்டியலையும் வெளிப்படையாகத் தெரிவித்தோம். என்றாலும் இப்போதும் முதலமைச்சர் ஜெயலலிதா அதே கேள்வியைத்தான் திரும்பத் திரும்ப ஒவ்வொரு கூட்டத்திலும் கேட்டு வருகிறார்.

மத்திய அரசின் மூலம் சில சலுகைகளை, சாதனைகளைப் பெறுவதற்கு அந்த ஆட்சியிலே அங்கம் வகிக்க வேண்டும் என்பதுகூட முக்கியமல்ல! குறிப்பாக தலைமைச் செயலகத்தில், விடுதலை நாளன்று ஆளுநர் தான் கொடியேற்றி வந்தார். ஆளுநருக்குப் பதிலாக, அந்த நாளில் அந்தந்த மாநில முதல் அமைச்சர்களே கொடியேற்றுகின்ற உரிமை என்னுடைய வேண்டு கோளின் பேரில்தான் அனைத்து மாநில முதல் அமைச்சர்களுக்கும் கிடைத்தது. ஆனால் அப்போது தி.மு.கழகம் மத்திய ஆட்சியிலே அங்கம் வகிக்கவில்லை.

மத்திய அரசில் தி.மு. கழகம் அங்கம் வகித்த நேரத்திலேகூட, தி.மு. கழகத்தின் பலம் என்ன என்பதை உணர்ந்து,

அதற்கேற்பத்தான் தமிழகத்தின் வேண்டுகோள்களை மத்திய அரசிடம் தெரிவித்து, அவைகளைப் பெற முடிந்தது. அதனால்தான் அகில இந்திய அளவில், திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் ஒரு நல்ல தோழமைக் கட்சி என்ற பெயரினை இன்றளவும் பெற முடிந்திருக்கிறது. ஆனால் அ.தி.மு.க.வுக்கு உள்ள பெயர் என்ன?

1998ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகள் எல்லாம் சேர்ந்து தமிழகத்திலே தோழமை கொண் டிருந்தன. அப்போது தேர்தலுக்கு முன்பே, அ.தி.மு.க.வின் அவைத் தலைவராக இருந்த நாவலர், "பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், தமிழகத்தில் தி.மு.க. அரசைக் கலைக்கக் கோருவோம்" என்ற அறிவிப்பினை வெளிப்படையாகச் செய்தார்.

அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது பற்றி, பா.ஜ.க. தலைவராக இருந்த வாஜ்பாய் அவர்கள் விளக்கம் அளிக்கும் வகையில், "ஊழல் புகார்கள் கூறப்பட்டோர் மீதான குற்றங்கள் உரிய நீதிமன்றங்களில் நிரூபிக்கப்பட்டால் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட குற்றம் சாட்டப்பட்ட கட்சித் தலைவர்களுடனான உறவை பா.ஜ.க. முறித்துக் கொள்ளும்" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பா.ஜ.க.வின் பொதுச் செயலாளராக இருந்த கோவிந்தாச்சார்யா கூறும்போது, "தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வுடன் பாரதீய ஜனதா தேர்தல் உடன்பாடு செய்து கொண்டது வழுவல்தான்" என்றார். மேலும் அவர், "உத்தரப்பிரதேச அமைச்சரவையில் தேவையற்ற நபர்களை அமைச்சர்களாக்கியது, அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி வைத்தது என்று இரண்டு வழுவல்களை பா.ஜ.க. செய்துவிட்டது, தற்காப்பின் பொருட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்று கூறினார்.

தேர்தலுக்கு முன்பு 14-2-1998 அன்று மாலை 4 மணி அளவில் கோவையில் அடுத்தடுத்து 13 இடங்களில் குண்டு வெடித்து 30க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். அத்வானி அன்றையதினம் பேசவிருந்த மேடைக்கு அருகே 2 குண்டுகள் வெடித்து, பத்துப் பேர் இறந்தனர். இந்தச் சம்பவம் காரணமாக நாடாளுமன்றத் தேர்தல் முடிவு தி.மு.கழகக் கூட்டணிக் குப் பெரிதும் பாதகமாக அமைந்தது. தி.மு.கழகக் கூட்டணி

10 இடங்களிலும், அ.தி.மு.க. கூட்டணி 30 இடங்களிலும் வெற்றிபெற்றன. அகில இந்திய அளவில், பா.ஜ.க. கூட்டணி 254 இடங்களிலும், காங்கிரஸ் கூட்டணி 168 இடங்களிலும், ஐக்கிய முன்னணி 93 இடங்களிலும், மற்ற கட்சிகள் 17 இடங்களிலும் வெற்றிபெற்றன. நாடாளுமன்ற பா.ஜ.க. தலைவராக வாஜ்பாய் தேர்ந்தெடுக்கப்பட்டார். 9-3-1998 அன்று டெல்லி சென்று, வாஜ்பாய் அவர்களை ஜெயலலிதா சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த போது, "தமிழகத்தில் தி.மு.க. அரசைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்" என்று கூறினார். "காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவிக்குச் சோனியா காந்தி வரும் வாய்ப்பு இருக்கிறதே?" என்று செய்தியாளர் கேட்டபோது, "அத்தகைய நிலை ஏற்படுவது இந்த நாட்டுக்கு நேரும் துயரம், 98 கோடி மக்களைக்கொண்ட இந்தியாவில் தலைமை வகிக்கும் திறமையும், தகுதியும் கொண்டவர்கள் எவரும் இல்லையா?" என்று பதிலளித்தார்.

குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன், பா.ஜ.க. தலைவர், வாஜ்பாய் அவர்களை 11-3-1998 அன்று ஆதரவு எம்.பி.க்களின் பட்டியலோடும், ஆவணங்களோடும் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆனால் வாஜ்பாய் அவர்கள் 11ஆம் தேதியன்று குடியரசுத் தலைவரைச் சந்திக்க முடியவில்லை. காரணம் என்ன தெரியுமா? பா.ஜ.க. அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிய கட்சிகள் எல்லாம் தங்களது ஆதரவுக் கடிதங்களைக் கொடுத்த நிலையில், தமிழகத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகளிடமிருந்து பா.ஜ.க. அரசை ஆதரிப்பதாகத் தெரிவிக்கும் கடிதங்கள் வந்து சேராததால், வாஜ்பாய் குடியரசுத் தலைவரைக் குறிப்பிட்ட நேரத்தில் சந்திக்க முடியவில்லை.

நிபந்தனையில்லாமல் பா.ஜ.க. அரசுக்கு ஆதரவு தருவதாகக் கூறிய ஜெயலலிதா, ஆதரவுக் கடிதம் தருவதற்கு முன்பு, தமிழகத்திலே தி.மு.க. அரசைக் கலைக்க பா.ஜ.க. உத்தரவாதம் தர வேண்டுமென்றும், தன் மீதுள்ள வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்றும், சுப்பிரமணியன் சுவாமிக்கு நிதி அமைச்சர் பொறுப்பும், வாழப்பாடி ராமமூர்த்திக்குச் சட்ட அமைச்சர் பொறுப்பும் வழங்கிட வேண்டுமென்றும் நிபந்தனைகளைத் தெரிவித்திருப்பதாகவும், ஆனால் அந்த நிபந்தனைகளையேற்க

பா.ஜ.க. தலைமை திட்டவட்டமாக மறுத்துவிட்டது என்றும், 13-3-1998 தேதிய ஏடுகள் செய்தி வெளியிட்டன. அந்தச் செய்திகளை ஜெயலலிதா மறுத்து, தமிழக அரசின் தேவைகள் குறித்துச் சாதகமான பதிலை எதிர்பார்த்துக் கொண் டிருப்பதால்தான் ஆதரவுக் கடிதம் கொடுப்பதில் தாமதம் என்று கூறினார்.

14-3-1998 அன்று ஜெயலலிதா செய்தியாளர்களைச் சந்தித்து, வாஜ்பாய் தலைமையிலான ஆட்சி மத்தியிலே அமைவதற்கான ஆதரவுக் கடிதங்களை அ.தி.மு.க.வும், கூட்டணிக் கட்சிகளும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி விட்டதாகவும், ஆட்சி அமைக்க ஆதரவு உண்டு, ஆனால் அமைச்சரவையிலே சேரமாட்டோம், பா.ஜ.க. என்னை மதிக்கவில்லை, அவமதித்து விட்டது, பா.ஜ.க.வின் போக்கு சரியில்லை என்றும் தெரிவித்தார். ஆனால் 15-3-1998 அன்று மீண்டும் செய்தியாளர்களிடம் ஜெயலலிதா, “மத்திய அமைச்சரவையில் அ.தி.மு.க., பா.ம.க., வாழப்பாடி காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்கும்” என்றார். அவ்வாறே, தம்பிதுரை, சேடப்பட்டி முத்தையா, வாழப்பாடி ராமமூர்த்தி, ரங்க ராஜன் குமாரமங்கலம், தலித் எழில்மலை, ஜனார்த்தனம், ஆர்.கே. குமார் ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த தி.மு.க. தமிழ்நாட்டுக்கு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்தது என்று கேட்ட ஜெயலலிதாவுக்கு விளக்கமாக எங்கள் தேர்தல் அறிக்கையிலேயே அவைகளைப் பட்டியலிட்டிருக்கிறோம். ஆனால் 1998இல் மத்திய அரசில் பங்கேற்ற அ.தி.மு.க.வின் இலட்சணம் என்ன? என்னென்ன திட்டங்களைத் தமிழகத்திற்காகக் கேட்டுப் பெற்றார்கள்?

சென்னை உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசின் வழக்குகளை நடத்த, ஜெயலலிதா தேர்ந்தெடுத்த 33 அ.திமு.க. வழக்கறிஞர்களுக்குத் தம்பிதுரை நியமன உத்தரவுகளை வாங்கிக் கொடுத்தார். அந்த வழக்கறிஞர்கள் ஜெயலலிதாவின் இல்லத்திற்கு வரவழைக்கப்பட்டு, அங்கே ஒவ்வொருவருக்கும் அந்த நியமன உத்தரவை ஜெயலலிதாவே வழங்கினார். “ஸ்டேட்ஸ்மேன்” நாளேடு இதைக் கிண்டல் செய்து அப்போது எழுதியது. ஒரு மாத காலத்திலேயே அ.தி.மு.க. சார்பில் மத்திய அமைச்சராக இருந்த சேடப்பட்டி முத்தையாவை நீக்கிவிட்டுத் திண்டுக்கல் சீனிவாசன்

என்பவரை மத்திய அமைச்சர் என்று அறிவித்தார். சேடப்பட்டியை நீக்கியதைப் போலக் குற்றச்சாட்டுகள் தங்கள் பெயரில் கொண்ட மத்திய அமைச்சர்களைப் பிரதமர் உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்றார் ஜெயலலிதா. வேறு வழியின்றி மத்திய அமைச்சராக இருந்த பூட்டாசிங் அவர்களைப் பிரதமர் நீக்கினார்.

2-4-1998 அன்று ஜெயலலிதா டெல்லி சென்று பிரதமரைச்சந்தித்து விட்டுச் சென்னை திரும்பியதும், விமான நிலையத்திலேயே செய்தியாளர்களிடம், தி.மு.கழக அரசைக் கலைக்க வேண்டுமென்று வலியுறுத்துவோம் என்றார். குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றி, அதன் மீதான விவாதத்திற்குப் பிரதமர் வாஜ்பாய் பதிலளித்துக் கொண்டிருந்தபோது, அப்போது காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகவும், தற்போது குடியரசுத் தலைவராகவும் உள்ள பிரணாப் முகர்ஜி அவர்கள் எழுந்து, "தமிழ்நாட்டு மக்கள் விரைவில் தி.மு.க. ஆட்சியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று மத்திய அமைச்சர் ரெங்கராஜன் குமாரமங்கலம் சென்னையில் பேட்டி அளித்தது பற்றிப் பிரதமரின் கருத்து என்ன?" என்று கேட்ட போது, "எந்த மாநிலத்திலும் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல் படுத்துவதை எங்கள் அரசு கடுமையாக எதிர்க்கும்" என்று பிரதமர் பதிலளித்தார்.

25-4-1998 அன்று மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவராக இருந்த ஜஸ்வந்த் சிங் சென்னை வந்து ஜெயலலிதாவைச் சந்தித்துவிட்டு, பின்னர் செய்தியாளர்களிடம், விரைவில் கூடவுள்ள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க ஜெயலலிதா ஒப்புக்கொண்டதாகக் கூறினார். அதுபற்றி 26-4-1998 தேதிய "தினமணி" முதல் பக்கத்தில் "கைகேயி வெற்றி - மக்களின் தோல்வி" என்ற தலைப்பில் அருமையான ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது.

மத்திய அரசில் பங்கேற்ற அ.தி.மு.க. நிறைவேற்றிய மற்றொரு மகத்தான சாதனை - மத்திய அரசில் அங்கம் வகித்த அ.தி.மு.க. சார்பாக அமைச்சராக இருந்த ஒருவர் 7-5-1998 அன்று பிறப்பித்த ஆணையில் சென்னையில் ஜெயலலிதாவின் வருமான வரி வழக்குகளை விசாரித்து வந்த அதிகாரிகள் உட்பட89 துணை ஆணையர்களையும், 108 உதவி ஆணையர்களையும் இட மாற்றம் செய்த சாதனையாகும். இவ்வாறு செய்த போதிலும், அவர்

ஜெயலலிதாவை வழக்குகளிலிருந்து தப்புவிக்கச் சரியாகக் கவனம் செலுத்தாத காரணத்தாலோ என்னவோ, ஒரு சில நாட்களில் மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

அ.தி.மு.க.வின் நடவடிக்கைகள் பற்றி, 13-6-1998 அன்று சென்னையில் ப. சிதம்பரம் அவர்கள் அளித்த பேட்டியில், "தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அ.தி.மு.க. சொல்லி வருகிறது. அதற்கு பா.ஜ.க. அரசு பலியாகுமா இல்லையா என்பதுதான் கேள்வி" என்றார். மத்திய உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி அவர்கள் "தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டுமென்று கோரும் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவுக்கு "முடியாது" என்பதுதான் பதிலாக இருக்கும்" என்றார். அதைப் பற்றி, "தேசியப் பாதுகாப்பிலே அக்கறை இல்லாத ஒருவர் உள்துறை அமைச்சராக மத்தியிலே இருப்பதற்காக வேதனைப்படுவதாக" ஜெயலலிதா கூறினார்.

3-7-1998 அன்று "தினமணி" நாளேடு "தமிழகத்துக்குத் தலைகுனிவு" என்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தில், "மத்திய அரசை நிலைகுலைய வைப்பதே அ.தி.மு.க.வின் சாதனையாக இருக்கிறது" என்று எழுதியது.

15-7-1998 அன்று "ஸ்டேட்ஸ்மேன்" நாளேடு வெளியிட்ட செய்தியில், "மத்திய அரசுடன் ஜெயலலிதா செய்து கொண்டுள்ள தற்காலிக சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து, அவர்மீது உள்ள வருமான வரி மற்றும் இதர வழக்குகளில் இருந்து அவரை விடுவிக்க வாஜ்பாய் அரசு வழிவகைகளை மேற்கொண்டுள்ளது. ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளை மேற்பார்வையிட்டு வந்த ஆணையாளர் எஸ்.சி. ஜாதவ் மும்பையில் சிறந்த பதவி எனக் கருதப்படும் ஒரு பதவிக்கு மாற்றப்பட்டார். அவருடைய பதவியை கே. கோபாலன் என்பவர் ஏற்றுக்கொண்டார். நேர்மையுடன் செயல்படக்கூடியவரான பி.கே. ஸ்ரீதரன் வேறு ஒரு முக்கியப் பொறுப்புக்கு மாற்றப்பட்டார். அவரது இடத்துக்கு என்.பி. திரிபாதி என்பவர் நியமிக்கப்பட்டார். இப்படிப்பட்ட மாறுதல்கள் மூலம் ஜெயலலிதாவும், சசிகலாவும் அவருடைய உறவினர்களும் ஒரு தற்காலிக விடுதலையை அடையக் கூடும் என்று வருமான வரித் துறை அதிகாரிகள் குற்றம்சாட்டினர். ஜெயலலிதாவைச் சமாதானப்படுத்தியதன் மூலம் பா.ஜ.க. அரசு

தனக்குத் தேவையான ஆதரவைப் பெற்றது. அதற்குப் பதிலாக தமிழ்நாட்டில் தி.மு.க. அரசைக்கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டுள்ளனர்" என்று எழுதியிருந்தது. 21-7-1998 அன்று "எகனாமிக் டைம்ஸ்" நாளேடும் இதே கருத்தில் கட்டுரை ஒன்றைத் தீட்டியிருந்தது.

இதற்கிடையே 26-2-1999 அன்று அ.தி.மு.க.வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் சந்தித்து, வாழப்பாடி ராமமூர்த்தியிடம் இருந்த பெட்ரோலியத் துறையை அ.தி.மு.க.வுக்கு ஒதுக்க வேண்டுமென்று வலியுறுத் தினர்.

1998ஆம் ஆண்டு இறுதியில் நீதித் துறை வட்டாரங்களில் நடைபெற்ற ஒருசில மாறுதல்கள் ஏடுகளில் முக்கியத்துவம் பெற்றன. ஜெயலலிதா மற்றும் முன்னாள் அமைச்சர்கள், அதிகாரிகள் மீதான பல கோடி ரூபாய் ஊழல் வழக்குகளில் பா.ஜ.க. அரசு இரட்டை நிலை மேற்கொண்டது. அது பற்றி அருமை நண்பர் மூப்பனார் அவர்கள் தலைமையிலான தமிழ் மாநிலக் காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தில், "உச்சநீதிமன்றம் உட்பட அனைத்து நீதிமன்றங்களும் ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள் மீதுள்ள வழக்குகளில் வழக்குத் தொடர போதிய சாட்சியம் இருக்கிறது என்று சொல்லிய பிறகும், பிரதமர் அலுவலகம் இந்த வழக்குகளைப் பழிவாங்கும் செயல் என்று அறிவித்திருப்பது, பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க. அரசு எதற்கும் தயாராக இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது" என்று குறிப்பிட்டார்கள்.

பா.ஜ.க. இந்த அளவிற்கு நடந்துகொண்ட போதிலும், ஜெயலலிதா குடியரசுத் தலைவரைச் சந்தித்து பா.ஜ.க. ஆட்சிக்கு அளித்து வந்த தனது ஆதரவைத் திரும்பப் பெற்றார். 15-4-1999 அன்று செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து, பா.ஜ.க. அரசுக்கு ஜெயலலிதா கொடுத்த நிர்ப்பந்தம் பற்றிக் கேட்டபோது அவர்களிடம் நான் ஒரு நீண்ட அறிக்கையினை அளித்தேன். அதில் ஜெயலலிதா எந்தெந்த அதிகாரிகளை எப்படியெல்லாம் மாற்ற வேண்டும், யார் யாருக்கு எந்தெந்தப் பதவி தரப்பட வேண்டும் என்று ஜெயலலிதா தன் கைப்பட எழுதிய பரிந்துரைகளையெல்லாம் தொகுத்துக் கொடுத்திருந்தேன்.

தி.மு.க. மத்திய ஆட்சியில் அங்கம் வகித்தபோது என்ன செய்தார்கள் என்று கூட்டத்திற்குக் கூட்டம் கேட்கிற ஜெயலலிதா அவர்களே, நாங்கள் உங்களைப் போல இப்படியெல்லாம் மத்திய அரசிடம் கேட்கவில்லைதான்; ஆனால் தமிழ்நாட்டிற்குத் தேவையான சேது சமுத்திரம் திட்டத்தைக் கேட்டுப் பெற்றோம்; தமிழ் மொழிக்குச் செம்மொழித் தகுதி பெற்றுத்தந்தோம்; சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டத்தைப் பெற்றோம்; சென்னை மாநகருக்கு மெட்ரோ ரெயில் திட்டத்தைக் கொண்டு வந்தோம்; ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கேட்டுப் பெற்றோம்; கடல்சார் தேசியப் பல்கலைக் கழகம் கிடைத்தது; இப்படி எண்ணற்ற திட்டங்களையெல்லாம் பெற்றுத்தந்தோம்.

இப்போதாவது உண்மை புரிகிறதா? நாங்கள் என்ன செய்தோம்? நீங்கள் எப்படிக் கிழித்தீர்கள்? ஒரு மத்திய ஆட்சியை எந்த அளவிற்குச் சித்திரவதை செய்தீர்கள்? கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. விலகிய நாளை, பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்கள் மனம் வெதும்பி, "நிம்மதியோடு இன்றிரவு தூங்குவேன்" என்று கூறினார் என்றால், அ.தி.மு.க.வுடன் கூட்டணி இருந்த காலம்தான் தனது அரசியல் வாழ்க்கையிலேயே மிகவும் வேதனையான காலம் என்று வர்ணித்தார் என்றால், கூட்டணி, தோழமை, மத்திய அரசில் அங்கம் வகிப்பது பற்றியெல்லாம் பேசுவதற்கு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதை, தமிழ்நாட்டு மக்கள் இப்போதாவது ஒருக்கணம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

23-3-2014

3870. எல்லோருக்கும் தெரிந்த உண்மை!

உடன்பிறப்பே,

"தினத்தந்தி" நாளிதழ் இன்று (24-3-2014) முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ள முதலமைச்சர் ஜெயலலிதாவின் பேச்சுக்கான தலைப்பு, "கரசேவைக்கு எதிரான கொள்கை உடையவர் என்றால், பாரதீய ஜனதாவுடன் கருணாநிதி கூட்டணி சேர்ந்தது ஏன்?" என்பதாகும். கேட்டிருப்பது முதலமைச்சர் ஜெயலலிதா; வெளியிட்டிருப்பது "தினத்தந்தி"; பதில் சொல்லாமல் இருக்கலாமா? எனவே பதிலை நான் சொல்லி விடுகிறேன், உண்மையை நீயே உணர்ந்து கொள்!

தூத்துக்குடியில் பேசிய ஜெயலலிதா, அ.தி.மு.க. ஒருபோதும் கரசேவைக்கு ஆட்களை அனுப்பியதே இல்லை என்று கூறினார். அதற்குத்தான் நான் விளக்கமாகத் தேதிவாரியாகப் பதில் அளித்திருந்தேன். 24-11-1992 அன்று "தினமணி" நாளிதழ் முதலமைச்சர் ஜெயலலிதா டெல்லியில் ஒருமைப்பாட்டு மன்றக் கூட்டத்தில் பேசியதை வெளியிட்டிருந்ததை அப்படியே எடுத்துக்காட்டியிருந்தேன். அந்தச் செய்திக்குத் தலைப்பே "கரசேவை : ஜெயலலிதா வலியுறுத்தல்" என்பது தான்! ஜெயலலிதா அந்தக் கூட்டத்தில் பேசும்போது, "கரசேவை நடைபெறுவதற்குப் பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கத் தேவையான முடிவை இந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு எடுக்க வேண்டியுள்ளது. கரசேவையை அனுமதிக்கும்படி நீதிமன்றங்களை அணுகத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். உத்தரப்பிரதேச அரசு கையகப்படுத்திய இடத்தில் கரசேவை நடைபெறத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு பேசிவிட்டு, தற்போது கரசேவையை தான் ஆதரிக்கவில்லை என்றால் எது உண்மை? முதல் அமைச்சரின் இந்தப் பேச்சுக்கு நன்றி தெரிவித்து "தமிழ்நாடு விசுவ இந்து பரிஷத்" சார்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன்.

கரசேவைக்கு தான் ஆட்களை அனுப்பவில்லை என்று ஜெயலலிதா கூறியதற்கு, அப்போது "டைம்ஸ் ஆப் இந்தியா" வெளியிட்ட செய்தியையே எடுத்துக் காட்டியிருந்தேன். அந்தச் செய்தியில், உத்தரப்பிரதேச மாநில "விசுவ இந்து பரிஷத்" அமைப்பின் செயலாளர், அயோத்தியில் நடைபெற்ற கரசேவைக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினரை தமிழக முதல்வர் ஜெயலலிதா அனுப்பிவைத்துள்ளார் என்றும், மேலும் கரசேவைக்குரிய பல உதவிகளைச் செய்வதாக உறுதியும் அளித்துள்ளார் என்று குறிப்பிட்டிருந்ததையும், அந்தச் செய்தியை "தீக்கதிர்" நாளேடு 7-12-1992 அன்று "பெட்டிச் செய்தி"யாக வெளியிட்டிருந்ததையும் எடுத்துக்காட்டி, "நான் கூறுவது உண்மையா? கரசேவைக்கு ஆட்களை அனுப்பவில்லை என்று ஜெயலலிதா கூறுவது உண்மையா?" என்று கேட்டிருந்தேன்.

இஸ்லாமியர்களின் இனிய நண்பராக விளங்கிய நாடாளுமன்ற உறுப்பினர், ஏ.கே.ஏ. அப்துல் சமத் அவர்கள், "அயோத்தியில் நடைபெற்ற கரசேவையில் அ.தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்" என்று கூறி வெளிவந்த செய்தியையும் நான் விளக்கியிருந்தேன். இவ்வளவிற்கும் பிறகு ஜெயலலிதா தான் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்.

தற்போது கடலூர் கூட்டத்தில், கரசேவையை ஆதரித்த பா.ஜ.க.வுடன் தி.மு.க. எவ்வாறு கூட்டு வைத்துக்கொண்டது என்ற கேள்வியை ஜெயலலிதா எழுப்பியிருக்கிறார். கரசேவை நடைபெற்றது 6-12-1992. பா.ஜ.க.வுடன் தி.மு.க. கூட்டணி கொண்டது 1999ஆம் ஆண்டு. ஏழு ஆண்டுகள் கழித்து, பா.ஜ.க.வுடன், தி.மு.க. கூட்டணி வைத்துக்கொண்டது என்றாலும், அதற்கான விளக்கத்தையும் வெளியிடத் தயாராகவே இருக்கிறேன்.

1991ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க., காங்கிரஸ் கட்சியோடு உறவுகொண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிறகு, ஓராண்டு காலத்திற்குள்ளாகவே 1992ஆம் ஆண்டில் கரசேவைப் பிரச்சினையில் பா.ஜ.க.வை ஆதரித்ததை ஜெயலலிதா வசதியாக மறந்து விட்டார் போலும்!

1-12-1992 அன்று பிரதமர் நரசிம்மராவ் தமிழகத்திற்கு வரவிருந்த நேரத்தில், அதற்கு முதல் நாள் ஜெயலலிதா, "தினமணி" பொறுப்பாசிரியராக இருந்த பிரபு சாவ்லா அவர்களுக்கு அளித்த பேட்டியில், "ராஜீவ் காந்திக்கும், நரசிம்மராவுக்கும் என்ன

வித்தியாசம்?" என்று கேட்டபோது, தனக்கும் நரசிம்மராவுக்கும் இடையே தலைமுறை இடைவெளி இருப்பதாகப் பதில் கூறியவர்தான் ஜெயலலிதா!

1999ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம், பா.ஜ.க.வுடன் உறவு கொள்ள நேரிட்டதற்கு முழுமுதல் காரணம் சாட்சாத் இந்த ஜெயலலிதாதான்! ஆம்; 1998ஆம் ஆண்டு, பா.ஜ.க. அரசில், வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, அதில் அங்கம் வகித்த அ.தி.மு.க., பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று வலியுறுத்தினார் என்பதையும், கடைசிவரை அதனைக் கேட்க பா.ஜ.க.வினரும், குறிப்பாகப் பிரதமர் வாஜ்பாய் அவர்களும் மறுத்து விட்டார்கள் என்பதையும் நான் ஏற்கனவே விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். மத்திய உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி அவர்களையே "தேச விரோதி" என்று ஜெயலலிதா அப்போது விமர்சித்தார். என்னுடைய பவள விழா நிகழ்ச்சியில் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்த பா.ஜ.க.வைச் சேர்ந்த இல. கணேசனைத் திட்டித் தீர்த்தார்.

28-7-1998 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், காவிரிப் பிரச்சினையிலே நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பினை அமல்படுத்துவது பற்றிப் பேசுவதற்காக 6-8-1998 அன்று முதலமைச்சர் என்ற முறையில் டெல்லிக்கு வரவேண்டுமென்று தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையில் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை 3-8-1998 அன்று கூட்டி, கருத்துக்களைக் கேட்ட போது, மற்றக் கட்சித் தலைவர்கள் எல்லாம் டெல்லிக்குப் போகலாம் என்று கூறிய நேரத்தில், அ.தி.மு.க. மட்டும் செல்லக் கூடாது என்றார்கள். டெல்லியில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில்தான் நடுவர் மன்ற இடைக்கால ஆணையில் தெரிவித்திருந்த 205 டி.எம்.சி. தண்ணீர் விடப்பட வேண்டுமென்ற முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. அனைத்துக் கட்சித் தலைவர்களும், நாளேடுகளும் அந்த முடிவைப் பெரிதும் பாராட்டிய நேரத்தில், ஜெயலலிதா மட்டும், "வாஜ்பாய், கருணாநிதியின் தந்திரத்திற்கு ஆளாகிவிட்டார், இரண்டு பேரும் சேர்ந்து செய்து கொண்டிருக்கின்ற உடன்பாட்டை நிராகரிக்கிறோம்" என்றார். ம.தி.மு.க. நடத்திய அண்ணா பிறந்த நாள் விழாப் பேரணியில்

கலந்துகொள்ள வந்த வாஜ்பாயிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, "அ.தி.மு.க. உறுதியான, நம்பத் தகுந்த கூட்டாளியா என்பதை எதிர்காலம்தான் தீர்மானிக்கும். மத்திய ஆட்சிக்குத் தி.மு.க. போன்ற கட்சிகள் ஆதரவு தர முன்வந்தால், அதை நாங்கள் ஏற்போம், ஆதரவு வேண்டாம் என்று கூறமாட்டோம், ஆதரவு பற்றி தி.மு.க.வுடன் நாங்கள் இதுவரை பேச்சுவார்த்தை நடத்தவில்லை. மதச்சார்பற்ற கட்சி என்று பா.ஜ.க. நிரூபித்தால், அதற்கு ஆதரவு தரத் தயார் என்று கருணாநிதி கூறியுள்ளார்" என்றெல்லாம் தெரிவித்தார்.

வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அரசுக்கு அளித்து வந்த ஆதரவை அ.தி.மு.க. திரும்பப் பெற்றுக்கொண்டதை அடுத்து, 16-4-1999 அன்று மக்களவையில் நம்பிக்கைகோரும் தீர்மானத்தை வாஜ்பாய் முன்மொழிந்தபோது, நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவராக இருந்த தம்பி முரசொலிமாறன் பேசினார். பேசும்போது, "25 தி.மு.கழக எம்.பி.க்கள் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் உதவியோடு திருமதி இந்திரா காந்தி தனது சிறுபான்மை அரசை அமைத்தார். திருமதி இந்திரா காந்தி தி.மு.க.வின் உதவியோடுதான் மன்னர் மானியத்தை ஒழித்தார். தி.மு.க.வின் ஆதரவோடுதான் வங்கிகளைத் தேசிய மயமாக்கினார். நெருக்கடி நிலையின் போது நாங்கள் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகிவிட்டோம். அப்போது நாங்களும், பா.ஜ.க. உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் தோழர்களும் சிறைத் தோழர்களானோம். எங்களுடைய நீண்ட கால அரசியல் வரலாற்றில், காரணம் எதுவாக இருந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், சிறுபான்மையினருக்கும் ஆதரவு அளித்துப் பாதுகாத்து வந்திருக்கிறோம். அவ்வாறு செய்வதற்கு நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள உறுதியை இன்று மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். நேற்று வரை நான் இந்த அரசை எதிர்த்து வந்தேன். காவிரிப் பிரச்சினைச் சிக்கலைத் தீர்த்த இந்த அரசுக்குரிய பெருமையைத் தவிர, இந்த அரசின் எந்தச் சாதனைகளையும் நான் பாராட்ட முடியாது. ஆனால் அ.தி.மு.க. நண்பர்களின் ஆதரவோடு நடைபெறும் முயற்சி மாநிலத்தின் நலனுக்கும், தேசத்தின் நலனுக்கும் எதிரானது. எனவே தற்போதைய அரசு தொடர்வதை நாங்கள் ஆதரிக்கிறோம்" என்றெல்லாம் மாறன் பேசினார்.

அதுபற்றி என்னிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, "ஜெயலலிதாவின் ஊழலைவிட மதவாதம் என்பது

கொடுமையானதல்ல; அதனால் மதவாதம் இனிமையானது என்று பொருள் அல்ல. பாம்பைவிட மோசம் என்று ஒரு பெண்ணையோ ஆணையோ சொன்னால், பாம்பு நல்லது என்று அர்த்தமா? பாம்புக்கும் விஷம் உண்டு என்றுதான் அர்த்தம்" என்று கூறினேன். மேலும், "தி.மு.கழகம் என்றைக்கும் சிறுபான்மைச் சமுதாயத்தின் பாதுகாப்பு அரணாகத்தான் இருக்கும், மதவெறியை மாய்ப்பதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல, அது எங்கள் குருதியோட்டத்தோடு கலந்த ஒன்று. பா.ஜ.க.வின் கொள்கையில் நாங்கள் சமரசமாகி அந்த அடிப்படையில் இந்த முடிவை எடுக்கவில்லை. தி.மு.கழகத்தின் கொள்கை, கோட்பாடுகள் அப்படியே இருக்கின்றன. அவற்றை அப்படியே சிந்தாமல், சிதறாமல் காப்பாற்றக்கூடிய பொறுப்பும், கடமையும் எங்களுக்கு என்றைக்கும் உறுதியாக உண்டு. அதே நேரத்தில், இந்தியாவினுடைய அரசியலில், ஜனநாயகத்தில், எங்களுக்கு ஒரு உறுதியான நிலை இருக்க வேண்டுமென்ற கோட்பாடும் உண்டு. வாஜ்பாய் அவர்களைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையில் எனக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு. அவர் ஒரு நல்ல மனிதர் என்று பலமுறை சொல்லியிருக்கிறேன்" என்று குறிப்பிட்டேன்.

2-6-1999 அன்று கழகப் பொதுக்குழு கூடி நீண்ட நேரம் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்தது. அந்தப் பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில்தான் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேருகின்ற முடிவினை தி.மு.க. எடுத்தது. அதே தீர்மானத்தில், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்காகத் தி.மு.கழகம் தொடர்ந்து பாடுபடும் என்ற உறுதியும் தெரிவிக்கப்பட்டது.

உடன்பிறப்பே, கரசேவைக்கு எதிரான கொள்கை உடையவர் என்றால், பா.ஜ.க.வுடன் கருணாநிதி கூட்டணி சேர்ந்தது ஏன் என்று கடலூர் கூட்டத்தில் கேள்விகேட்ட ஜெயலலிதாவுக்கு இதுதான் பதில். இவர் தற்போது கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கடைசி வரை நம்பவைத்து கடைசியில் கழுத்தறுத்தாரே, அதைப்போல பா.ஜ.க. கட்சியோடு 1998ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே கூட்டணி அமைத்து வெற்றிபெற்று, மத்திய ஆட்சியிலும் அங்கம் வகித்து, பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் படாதபாடுபடுத்தி, கடைசியில் ஆதரவையும் விலக்கிக்கொண்டு ஆட்சியைக் கவிழ்த்திருக்காவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேருகின்ற

நிலையே ஏற்பட்டிருக்காது. பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்து, அவர்களை நிராதரவாக விட்டுவிட்ட நிலையில் மனிதாபிமான எண்ணத்தோடு, அதே நேரத்தில் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது என்ற எழுத்துப்பூர்வமான உத்தரவாதத்தோடுதான் தி.மு.க. அந்த அணியோடு கூட்டுச்சேர நேரிட்டது.

பா.ஜ.க.வோடு தி.மு. கழகம் கூட்டணி சேர நேரிட்டாலும், தி.மு. கழகம் என்றைக்கும் அதன் அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுத்ததில்லை; ஜெயலலிதா மத்திய ஆட்சியில் பங்கேற்றபோது பா.ஜ.க.வினருக்குக் கொடுத்த தொந்தரவைப் போல தரவும் இல்லை. கரசேவைக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்ற ரீதியில் தி.மு. கழகம் என்றைக்கும் செயல்பட்டதுமில்லை. ஆனால் ஜெயலலிதா?

4-7-1999 அன்று சென்னையில் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற வாழ்வுரிமை மாநாட்டில் பேசிய ஜெயலலிதா, "இஸ்லாமியச் சகோதரர்களுக்கு நான் ஒரு உத்தரவாதம் தருகிறேன். நான் முன்பு ஒரு தவறு செய்துவிட்டேன். செய்த தவறை ஒப்புக்கொள்ளும் துணிச்சல் எப்போதும் எனக்கு உண்டு. அந்தத் தவறுக்குப் பரிகாரமாகத்தான் பி.ஜே.பி. ஆட்சியை நானே கவிழ்த்தேன். இனி ஒருபோதும் பி.ஜே.பி.யுடன் அ.தி.மு.க. கூட்டு வைத்துக் கொள்ளாது" என்று முழங்கினார். ஆனால் இந்த உறுதிமொழியைக் கொடுத்த ஜெயலலிதா 2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அதே பா.ஜ.க.வோடு கூட்டணி சேர்ந்து போட்டியிட்டுத் தோற்றார். அவர் எப்படிக் கூட்டுச் சேர்ந்தார் என்று நான் கேட்கத் தயாராக இல்லை. இஸ்லாமியர்களுக்கு எதிராக ஜெயலலிதா கரசேவையை ஆதரித்தார், ஆட்களை அனுப்பினார் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதானே! அதை நான் விளக்கத் தேவையில்லை. ஒவ்வொரு இஸ்லாமியச் சகோதரனுக்கும் அந்த உண்மை தெரியும். எனவே ஜெயலலிதா என்ன பொய் சொன்னாலும், அது உண்மை ஆகிவிடாது.

அன்புள்ள,

மு.க.

25-3-2014

3871. "சலசல"வெனப் பெருகும் சாட்சிய அருவிகள் பாரீர்!

உடன்பிறப்பே,

பெங்களூரில் நடைபெறும் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தில் இருப்பதைத் தொடர்ந்து, அரசு வழக்கறிஞர் பவானிசிங், குற்றம் சாட்டப்பட்டவர்கள் சேர்த்த சொத்துக்கள் குறித்து, சாட்சியங்கள் அளித்த விவரங்களையெல்லாம் நான்கு நாட்களாகத் தொகுத்துக் கூறிவருகிறார். அந்த விவரங்களைத் தமிழ்நாட்டில் உள்ள நாளேடுகள் வெளியிடாமல் மறைக்கின்ற காரணத்தால், அந்த விசாரணை விவரங்களை இங்கே தெரிவித்திருக்கிறேன். இந்த விவரங்களையெல்லாம் வாக்காளப் பெருமக்களிடம் நேரடியாகவோ, துண்டு அறிக்கைகள் மூலமாகவோ கொண்டு சேர்த்திட வேண்டிய இன்றியமையாப் பணி உனக்குள்ளது. நாளையே அதை நிறைவேற்றிடுவாய் என்ற நம்பிக்கையோடு அதை இங்கே தருகிறேன்.

ஜெயலலிதா தரப்பினர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கை மேலும் தாமதப்படுத்த வழியில்லாத நிலையில் தற்போது அரசு வழக்கறிஞர் பவானிசிங் பெங்களூரு நீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பினர் வாங்கிய சொத்துக்களைப் பற்றிய விவரங்களை ஆதாரத்தோடு எடுத்துக்கூறித் தன் வாதத்தைத் தொடங்கியிருக்கிறார்.

அப்போது, அவர் ஜெயலலிதாவிற்குச் சொந்தமாகக் கொடநாட்டில் 898 ஏக்கர் நிலமும், நெல்லையில் 1,197 ஏக்கர் நிலமும், வாலாஜாபாத்தில் 200 ஏக்கர் நிலமும், ஊத்துக்கோட்டையில் 100 ஏக்கர் நிலமும், சிறுதாவூரில் 25 ஏக்கர் நிலமும் உள்ளதற்கான சாட்சியங்களை நீதி மன்றத்திலேயே அவர் படித்துக் காண்பித்தார்.

1997 அக்டோபர் 21ஆம் தேதியன்று, ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. 259 சாட்சிகள் சேர்க்கப்பட்டனர். தமிழகத்தில் மீண்டும் 2001 மே மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளவர் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், சென்னையில் நடந்து வந்த விசாரணையில் ஏற்கனவே சாட்சியம் அளித்த 76 பேரிடம் மீண்டும் விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டு, 2002 நவம்பர் முதல் 2003 பிப்ரவரி 21ஆம் தேதிவரை விசாரணை நடந்தது. அதைத் தொடர்ந்து குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313 விதியின்படி, வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வர்கள் நேரில் ஆஜராகாமல், நீதிமன்ற உத்தர வின்படி நேரில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வீட்டிற்கே சென்று அவர்களிடம் கேள்விகேட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

இதனிடையில் இவ்வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றம் செய்யக்கோரித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், பொதுச்செயலாளர் அன்பழகன் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவினையேற்று வழக்கைப் பெங்களூருக்கு மாற்றம் செய்து 2003 நவம்பர் 18ஆம் தேதி உத்தரவிட்டது.

சொத்துக் குவிப்பு வழக்கு 1.7.1991க்கு முன் இருந்த சொத்துக்கள் - ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த 1.7.1991 முதல் 30.4.1996 வரையில் சேர்த்த சொத்துக்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளன.

வழக்கு காலத்திற்கு முன் ரூ. 2 கோடியே 1 லட்சத்து 82 ஆயிரத்து 953 மதிப்புள்ள சொத்து இருந்ததும், வழக்கு காலத்திற்குப் பின் சொத்து மதிப்பு ரூ. 64 கோடியே 42 லட்சத்து 89 ஆயிரத்து 616 சேர்த்துள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டது.

1 முதல் 4 வரையிலான குற்றவாளிகள் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்கள் என்பதற்கான பல கம்பெனிகளின் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் நான்கு குற்றவாளிகளும் கூட்டுச் சதி செய்து, முதல் குற்றவாளி முதலமைச்சராக இருந்தபோது, அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவருக்காகவும், அவரைச் சார்ந்த மற்ற 3 குற்றவாளிகளுக்காகவும் சேர்த்துத் தங்களது வருமானத்திற்கு

அதிகமாகச் சொத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்பதுதான் இந்த வழக்கின் அடிப்படையாகும்.

மூன்றாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள வி.என். சுதாகரனை முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளவர் (ஜெயலலிதா) தத்துப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு பிரம்மாண்டமான முறையில் திருமணம் செய்து வைத்துள் ளார். அதற்கான ஆதாரங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குற்றவாளிகள் பல நிறுவனங்களை வாங்கியதற்கான ஆவணங்கள் குறித்தும், அந்த நிறுவனங்களின் பெயரிலேயே பல அசையாச் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ள விவரங்களையும் அரசு வழக்கறிஞர் பெங்களூர் நீதி மன்றத்தில் படித்துக் காண்பித்தார்.

குறிப்பாக இசையமைப்பாளர் கங்கை அமரனுக்குச் சொந்தமான, சென்னையை அடுத்த சிறுதாவூரில் உள்ள பங்களாவுடன் கூடிய 22 ஏக்கர் நிலத்தினைச் சுதாகரன் மிரட்டி வாங்கியது குறித்து அளிக்கப்பட்ட சாட்சியத்தினை நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பவானிசிங் படித்துக் காண்பித்தார்.

(அந்த நிலத்தில்தான் இப்பொழுது முதலமைச்சர் ஜெயலலிதா பங்களா கட்டிக் குடியிருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.)

ஜெயலலிதா கொடநாட்டில் வாங்கிய 898 ஏக்கர் நிலத்தினைச் சீரமைக்க வேளாண்மைத் துறை அலுவலர் ராதாகிருஷ்ணனை அழைத்தது பற்றி அந்த அதிகாரியே சாட்சியம் அளித்துள்ளதை அரசு வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார்.

மேலும், அதே வேளாண்மைத் துறை அதிகாரி ராதாகிருஷ்ணன், சுதாகரனால் முறைகேடாகச் சொந்தத் தேவைகளுக்காக அனுப்பப்பட்டு, அவர் திருநெல்வேலியில் 1190 ஏக்கர் நிலத்தினை ஆய்வு செய்த பிறகு, வாங்கியது குறித்த சாட்சியத்தையும் பவானிசிங் நீதிமன்றத்தில் எடுத்துக்காட்டி வாதிட்டார்.

அதுமட்டுமல்லாமல், சென்னை அருகே உள்ள வாலாஜாபாத்தில் 100 ஏக்கர் நிலத்தினை அந்த இடத்தின் உரிமையாளர்களை அணுகி, வாங்கிக் கொடுத்த நிலத்தரகர்

ராஜாராம் வழங்கியிருந்த சாட்சியத்தையும் நீதிமன்றத்தின் கவனத்திற்குப் பவானிசிங் கொண்டுவந்தார்.

இவ்வாறு ஜெயலலிதா உள்ளிட்ட குற்றவாளிகளால் வாங்கப்பட்ட பல சொத்துக்கள் தொடர்பான விவரங்களையும், அது தொடர்பான சாட்சியங்களையும் நீதிமன்றத்தில் எடுத்துக்காட்டிய அரசு சிறப்பு வழக்கறிஞர் பவானிசிங்,

"வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளவர்களின் பொருளாதார நிலைக்கும், அவர்கள் வாங்கிக் குவித்துள்ள நிலங்களின் மதிப்புக்கும் துளியும் சம்மந்தமில்லை. இவை அனைத்தும் வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்துள்ளதன் மூலம் வாங்கப்பட்ட நிலங்கள் என்பது சாட்சியங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது."

"இந்த வழக்கில் முக்கிய சாட்சிகளான ராஜகோபால் மற்றும் ராதாகிருஷ்ணன் போன்ற அரசு அதிகாரிகள் போயஸ் தோட்டத்திற்கு வரவழைக்கப்பட்டு, அங்கு அவர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன" என்றும் பவானிசிங் வாதிட்டார்.

ராஜகோபால் என்ற சார்பதிவாளரைப் பயன்படுத்திப் பல இடங்களில் அரசு நிலங்கள் வாங்கப்பட்டு மெடோ ஆக்ரோபார்ம், லெக்ஸ் பிராபர்ட்டீஸ் உட்பட பல நிறுவனங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள சுதாகரன், இளவரசி ஆகியோர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள சசிகலாவின் நேரடிப் பார்வையில் நிலம் வாங்கியதைச் சாட்சிகள் ஆதாரத்துடன் தெரிவித்துள்ளனர் என்றும் பவானிசிங் தெரிவித்தார்.

பவானிசிங் நீதிமன்றத்தில் தெரிவித்த ஜெயலலிதா தரப்பினரின் சொத்துப் பட்டியல் :-

1. சென்னை அருகே வாலாஜாபாத்தில் 100 ஏக்கர்,
2. சிறுதாவூரில் 25 ஏக்கர் அளவில் ஒரு பங்களா.
3. நீலாங்கரையில் 2 ஏக்கர்.

4. கொடநாட்டில் 898 ஏக்கர் மற்றும் பங்களாக்கள். (இங்கு ஒரு ஏக்கர் ரூ. 5 கோடி மதிப்பு இருக்கும். இதுவே 4 ஆயிரம் கோடியைத் தாண்டுகிறது. இது ஒரு உத்தேச மதிப்புதான்.)

5. காஞ்சிபுரத்தில் 200 ஏக்கர்.

6. கன்னியாகுமரியில் மீனங்குளம், சிவரங்குளம், வெள்ளங்குளம் பகுதியில் ஆயிரத்து 190 ஏக்கர்.

6. தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் பகுதியில் 200 ஏக்கர்.

7. ரெவரே அக்ரோ பார்ம் பெயரில் 100 ஏக்கர்

8. 30 வண்ணங்களில் பலவித கார்கள், டிரக்கர்கள்

9. ஐதராபாத்தில் திராட்சைத் தோட்டம்.

நான்கு நாட்களில் அரசு வழக்கறிஞரால் நீதிமன்றத்தில் எடுத்துவைக்கப்பட்ட, சாட்சியங்களால் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பு வருமாறு :-

1) வாலாஜாபாத்தில் ஜெ. தரப்பினர் வாங்கியிருப்பது 100 ஏக்கர் நிலம். இங்கே ஒரு ஏக்கர் நிலம் அரசு மதிப்பு 40 லட்சம் ரூபாய்; சந்தை மதிப்பு 50 லட்சம் ரூபாய். அதன்படி 100 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 40 கோடி ரூபாய் - சந்தை மதிப்பு 50 கோடி ரூபாய்.

2) சிறுதாவூரில் வாங்கியிருப்பது 25.4 ஏக்கர். இங்கே ஒரு ஏக்கர், அரசு மதிப்பு 1.7 கோடி ரூபாய் - சந்தை மதிப்பு 2 கோடி ரூபாய். அதன்படி சிறுதாவூர் நிலத்தின் அரசு மதிப்பு 42.5 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 50 கோடி ரூபாய்.

3) நீலாங்கரையில் ஒரு ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 35 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 50 கோடி ரூபாய். அதன்படி அங்கே இருக்கும் 2 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 70 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 100 கோடி ரூபாய்.

4) காஞ்சிபுரத்தில் ஒரு ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 30 லட்சம் ரூபாய், சந்தை மதிப்பு 50 இலட்ச ரூபாய்.

ஜெ. தரப்பினர் வாங்கியுள்ள 200 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 60 கோடி ரூபாய், சந்தை மதிப்பு 100 கோடி ரூபாய்.

5) தூத்துக்குடி திருவைகுண்டம் பகுதியில் ஒரு ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 15 இலட்சம் ரூபாய்; சந்தை மதிப்பு 25 இலட்சம் ரூபாய். அங்கே வாங்கியுள்ள 1,167 ஏக்கரின் அரசு மதிப்பு 175 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 292 கோடி ரூபாய்.

6) பையனூரில் ஒரு ஏக்கர் நிலம், அரசு மதிப்பு 2 கோடி ரூபாய், சந்தை மதிப்பு 3 கோடி ரூபாய். அங்கே வாங்கியுள்ள 5 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 10 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 15 கோடி ரூபாய்.

7) கொடநாட்டில் ஒரு ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 3 கோடி ரூபாய், சந்தை மதிப்போ 5 கோடி ரூபாய். அங்கே வாங்கியுள்ள 898 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 2,450 கோடி ரூபாய், சந்தை மதிப்போ 4,500 கோடி ரூபாய்.

இந்தப் பட்டியல்படி, 1991-96ஆம் ஆண்டுகளில், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, இவர்கள் வாங்கிப் போட்டுள்ள சொத்துக்களில், ஒரு பகுதி சொத்துக்களின் இன்றைய அரசு மதிப்பு 2,847 கோடியே 50 இலட்சம் ரூபாய். சந்தை மதிப்போ 5,107 கோடி ரூபாய்.

இத்துடன் நகை, வைரம், கம்பெனி முதலீடுகள், அசையும் சொத்துக்களைக் கணக்கில் சேர்த்தால் மேலும் பல கோடி ரூபாய் வரும்.

நீதிமன்றத்தில் வெளியான மேலும் சில விவரங்கள் :-

திருவைகுண்டம் தாலுகாவில் உள்ள சேரகுளம், பண்டாரபுரம், வள்ளிகுளம் உள்ளிட்ட பல கிராமங்களில் விவசாயிகளுக்குச் சொந்தமான 1,167 ஏக்கர் நிலங்களைச் சிவா என்ற ரியல் எஸ்டேட் உரிமையாளர், தனது பெயரில், ஜெனரல் பவர் ஆப் அட்டர்னி செய்துகொண்டபின், சென்னையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில், ரியர்வ்யூ அக்ரோ பார்ம் என்னும்

நிறுவனத்தின் பெயரில், அதனைக் கிரயம் செய்து கொடுத்ததாகச் சாட்சியம் அளித்துள்ளார்.

ரியர்வ்யூ அக்ரோ பார்ம் என்ற நிறுவனத்தின் உரிமையாளர்கள் யார்?

சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோராகும்.

இந்த நிலங்களைக் குறைந்த மதிப்பீட்டில், குறைவான முத்திரைத்தாள் கட்டணத்தில் பதிவு செய்து கொடுக்கும்படி திருவைகுண்டம் சார்பதிவாளரான தன்னிடம் கேட்டதாகவும், அதற்குத் தான் மறுத்த போது, சென்னையில் இருந்து வந்திருந்த சார்பதிவாளர் ஒருவர், இது மேலிட விவகாரம் என்பதால் மறுக்காமல் பதிவு செய்து கொடுக்கும்படி தன்னை வலியுறுத்தியதாகவும், தான் மறுத்துவிட்டதாகவும், சாட்சியம் அளித்தார். அதனால் மீதமுள்ள 1,153 ஏக்கருக்கான இடத்திற்கு, பவர் பத்திரம் தயார் செய்துகொண்டு, அவை ராஜகோபால் பொறுப்பிலே இருந்த சென்னை அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சாட்சியங்களை எடுத்துரைக்கும்போது,

அரசு வழக்கறிஞர் பவானிசிங், போயஸ் கார்டன் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் கட்டிடத்தைத் தனது தாயின் பெயரிலான சந்தியா நாட்டிய கலா நிகேதன் என்கிற டிரஸ்டின் பெயரில் வாங்கியதை மேலெழுந்த வாரியாகச் சொன்னார்.

சந்தியா நாட்டிய கலா நிகேதன் என்கிற டிரஸ்டின் ஒரே டிரஸ்டி ஜெயலலிதாதான் என்பதை அரசு வழக்கறிஞர் கூறவில்லை.

ஆனால், நீதிபதி குன்ஹா அவர்களே, அந்த டிரஸ்டில் ஜெயலலிதாதானே ஒரே டிரஸ்டி, அதனால்தானே அந்த இடத்தை அவர் கையெழுத்துப் போட்டு வாங்கினார் என்று தானாகவே கேட்டு, அதற்குப் பவானிசிங் ஆமாம் என்று தெரிவித்திருக்கிறார்.

ஊட்டியில் 898 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள கொடநாடு தேயிலைத் தோட்டம், ஆங்கிலேயரான கிரேக் ஜோன்ஸ் என்ப வருக்குச் சொந்தமானதாக இருந்தது. அவர் அதை விற்பனை செய்வதற்கான முயற்சியை மேற்கொண்டார். அதை வாங்க அடிசன்ஸ், எஸ்ஸார் ஆகிய இரண்டு பெரிய நிறுவனங்கள்

முன்வந்தன. அந்தத் தகவல் கிடைத்ததும், கும்பல் ஒன்று தேயிலைத் தோட்ட மேனேஜரை, நம்பர் பிளேட் இல்லாத காரில் மிரட்டி அழைத்துச் சென்றதோடு, அந்தக் கொடநாடு தேயிலைத் தோட்டத்தைச் சென்னையைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்குத்தான் விற்க வேண்டும் என்று மிரட்டியது.

கிரேக் ஜோன்ஸ் காவல் நிலையத்தில் 23.10.1995 அன்று புகார் கொடுக்க, அதையும் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் மிரட்டி, திரும்ப வாங்கச் செய்துவிட்டனர். அப்போது பத்து கோடி ரூபாய் மதிப்பிலான, அந்தத் தேயிலைத் தோட்டத்தை ரூபாய் 7.5 கோடிக்கு உடையார் குடும்பத்தின் பெயரில் பதிவுசெய்தனர். ஆனால் இரண்டொரு மாதங்களில் கொடநாடு தேயிலைத் தோட்டம் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் பெயரில் பதிவு செய்யப்பட்டது. (இதற்கான சாட்சியங்கள் தெரிவித்த விவரங்களையும் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் பவானிசிங் எடுத்துரைத்தார்.)

கனரா வங்கி அதிகாரி கொடுத்துள்ள சாட்சியத்தில், வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா கடந்த 1992ம் ஆண்டு ரூ.1 கோடியும், இரண்டாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள சசிகலா ரூ.25 லட்சமும் வங்கியில் மூன்றாண்டுகளுக்கு டெபாசிட் செய்ததாக அளித்துள்ள சாட்சியத்தை அரசு வழக்கறிஞர் பவானிசிங் எடுத்துக் கூறினார்.

கம்பெனிகள் பதிவு செய்யும் அரசின் அதிகாரியாக இருந்த ஒருவர் அளித்துள்ள சாட்சியத்தில்; ஜெயா பப்ளிகேஷன், சசி என்டர்பிரைசஸ், லெக்ஸ் பிராபர்ட்டீஸ், ரிவர்வியூ ஆக்ரோ பார்ம், சிக்னோரா பிசினஸ், மெடோ ஆக்ரோ பார்ம், பீன் பீச், ராமராஜ் ஆக்ரோ பார்ம், சூப்பர் - டூப்பர் டி.வி, இண்டோ கெமிக்கல்ஸ், ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் ஆகிய கம்பெனிகள் எந்தெந்தத் தேதிகளில் யார் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன? அதன் தலைவர், நிர்வாக இயக்குனர்கள் யார்? பங்குதாரர்கள் யார்? என்னென்ன தொழில்கள் செய்யப்படுகின்றன? என்பன உள்ளிட்ட பல தகவல்கள் குறித்துப் புள்ளி விவரங்களோடு சாட்சியங்கள் அளிக்கப்பட்டுள்ளதை பவானிசிங் நீதிமன்றத்தில் தெளிவாகப் படித்துக்காட்டினார். மேலும் தமிழக அரசின் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியும் இது தொடர்பாகச் சாட்சியம் அளித்துள்ளார்.

விவசாயிகளிடம் வாங்கிய நிலங்கள் அனைத்தும் வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் பங்குதாரர்களாக இருக்கும் கம்பெனிகள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதைப் பவானிசிங் ஆதாரத்துடன் எடுத்துக்கூறினார்.

கடந்த 1992 டிசம்பர் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் ரிவர்வியூ ஆக்ரோ கம்பெனி பெயரில் பலரிடமிருந்து 426.62 ஏக்கர் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகச் சாட்சிகள் கூறியுள்ளதை பவானிசிங் தெரிவித்தார். இவ்வாறு பல்வேறு சாட்சியங்களை நீதிமன்றத்தில் பவானிசிங் படித்துக் காண்பித்தார்.

தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது இரண்டு ஆண்டுகள் மாதம் ஒரு ரூபாய் வீதம் ரூ.24 சம்பளம் வாங்கினார். ஆனால், ரூபாய்14 கோடி மதிப்புள்ள கட்டிடங்களை அவர் கட்டியுள்ளார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோர் வீட்டில் பறிமுதல் செய்யப்பட்ட தங்க, வைர ஆபரணங்கள் குறித்து மதிப்பீடு செய்யும்படி தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட வாசுதேவன் கொடுத்துள்ள சாட்சியத்தில் எண் 36, போயஸ் கார்டன் வீட்டில் 23 கிலோ 113 கிராம் தங்க ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. அதன் மொத்த மதிப் பீடு ரூ.3 கோடியே 35 லட்சத்து 50 ஆயிரத்து 43 ஆகும்.

மேலும் ஈபல் லீலாவதி கொடுத்த சாட்சியத்தில் நமச்சிவாயா ஹவுசிங், அய்யப்பா பிரா பர்ட்டிஸ், நவசக்தி கன்ஸ்ட்ரக்ஷன், ஓசியானிக் கன்ஸ்ட் ரக்ஷன், லெக்ஸ் பிராபர்ட்டிஸ், கிரின் கார்டன் அப்பார்ட்மெண்ட் உள்பட பல நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளதைப் பவானிசிங் தனது வாதத்தில் குறிப்பிட்டார்.

உடன்பிறப்பே, தமிழ்நாட்டில் எப்படிப்பட்டவருடைய தலைமையிலே ஆட்சி நடைபெறுகிறது. அவர்கள் எப்படியெல்லாம் பேசுகிறார்கள். "ஊழல்" என்றால் அப்படிப்பட்ட ஒரு வார்த்தையையே கேள்விப்படாதவர்கள் போலும், "சுத்த சுயம்பிரகாசம்" என்றும், தங்களைத் தவிர நாட்டிலே கட்சி நடத்தும் அத்தனைப் பேரும் ஊழல்வாதிகள் என்றும் சொல்லிக்கொண்டு; நம்மீது புழுதி வாரித் தூற்றுகிறார்கள் என்பதையெல்லாம்

தோலுரித்துக் காட்டிடும் விவரங்கள் இவை. இந்தக் குற்றச் சாட்டுகளுக்கெல்லாம் என்ன விளக்கம் தரப்போகிறார்கள் என்பதை இன்னும் சில நாள்களில் நடைபெறும் விசாரணையின் போது நாம் காணலாம். இந்த உண்மைகள் உலகத்திற்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த வழக்கினை இத்தனை ஆண்டு காலமும் வாய்தா வாங்கித் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்தார்கள். அதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. சிலரைப் பல நாள் ஏமாற்றலாம்; பலரைச் சில நாள் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியுமா?

அன்புள்ள,

மு.க.

31-3-2014

(குறிப்பு:- இந்தக் கடிதத்தைக் கழகத் தோழர்கள் துண்டறிக்கைகளாக அச்சியற்றி, பொது மக்களுக்கு வழங்கிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.)

3872. பொய் சொல்வது நாங்களா? அல்லது நீங்களா?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா கோவையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ஏப்ரல் 1ஆம் தேதியன்று, தொழில் வளர்ச்சி பற்றி அவருக்கே உரிய பாணியில் பேசியிருக்கிறார். தமிழகத் தொழில் அதிபர்கள் கர்நாடகாவுக்குப் போய்விட்டார்கள் என்று நானும், பொருளாளர் தம்பி ஸ்டாலினும் பொய்ப்பிரச்சாரம் செய்வதாகக் கூறியிருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவே, அந்தப் பேச்சில் கர்நாடகாவில் உள்ள சாம்ராஜ் நகரில் தொழில் துவங்க வருமாறு கர்நாடக முதலமைச்சர் அழைப்பு விடுத்தார் என்றும், இந்தக் கூட்டத்தில் கோவை மாவட்டத்தைச் சார்ந்த தொழில் அதிபர்கள் கலந்து கொண்டார்கள் என்றும் தொடர்ந்து தெரிவித்திருக்கிறாரே தவிர, நல்லவேளையாக அதை மறுக்கவில்லை. இந்தியாவில் எத்தனையோ மாநிலங்கள் இருக்க, கர்நாடக மாநில முதலமைச்சர் தமிழகத்திலே உள்ள ஒரு நகரில், தமிழகத்திலே உள்ள தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்து கர்நாடகாவில் வந்து தொழில் தொடங்குங்கள் என்று அழைக்கிறார் என்றால், அதற்கு என்ன அர்த்தம் என்பதைச் சாதாரண ஒரு தொழில் அதிபர்கூடப் புரிந்துகொள்ள முடியும்.

"தினமலர்" நாளேடு தி.மு.கழக இதழ் அல்ல! அந்த இதழில் ஜனவரி 22ஆம் தேதி ஒரு செய்தி வந்தது. அதன் தலைப்பே, "தள்ளி விடும் தமிழகம்; கவர்ந்திழுக்கும் கர்நாடகம் - கை நழுவிய 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு" என்பதாகும். அந்தச் செய்தியில், "கொங்கு மண்டலத் தொழிலதிபர்களின், 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் கர்நாடகாவிற்குச் செல்ல உள்ளன. தமிழகத்தில் மோசமாகி வரும் முதலீட்டுச் சூழல்தான் இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது. இந்த நிலை தொடர்ந்தால், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இருந்தும், வேறு

மாநிலங்களுக்குத் தொழில்கள் இடம்பெயர வாய்ப்பு உள்ளது. தமிழக - கர்நாடகா எல்லையில் உள்ள சாம்ராஜ் நகர் மாவட்டத்தில், 1,400 ஏக்கரில் தொழில் மண்டலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு முதலீட்டாளர்களை இழுக்கும் வகையில், கோவையில், கடந்த, 20ம் தேதி சாம்ராஜ் நகர் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டில் பேசிய கர்நாடக முதலமைச்சர் சித்தராமய்யா "கர்நாடகாவில் தொழில் துவங்க வாருங்கள், அனைத்து வசதிகளையும் செய்து தருவோம்" என்று தமிழக தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த மாநாட்டின் விளைவாக, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட கொங்கு மண்டலப் பகுதிகளில் தொழில் நடத்தும் ஏறத்தாழ 200 தொழில் அதிபர்கள், 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கு, சாம்ராஜ் நகரில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளனர்" என்றெல்லாம் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு மாநாடு நடைபெற்றதாக நானோ, ஸ்டாலினோ கூறவில்லை. "தினமலர்" நாளேட்டிலும், வேறு சில நாளேடுகளிலும் இந்தச் செய்தி வெளிவந்துள்ளது. ஆனால் கோவையில் போய் முதலமைச்சர் ஜெயலலிதா நாங்கள் ஏதோ பொய் கூறிவிட்டதாகப் புலம்பியதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

தங்கள் மாநிலத்திலே தொழில் தொடங்க வாருங்கள் என்று கர்நாடக முதல் அமைச்சர் நம்முடைய மாநிலத்திற்கு வந்து மாநாடு நடத்துகிறார். அதற்காக வெட்கப்பட வேண்டாமா? தமிழ்நாடு என்ன செய்கிறது? தமிழக முதலமைச்சர் என்ன செய்கிறார்? இவர்களுக்குத் தொழில் வளர்ச்சியில் அக்கறை இருந்தால், பெங்களூரில் சென்று மாநாடு நடத்தி, அங்கே யுள்ள தொழில் அதிபர்களையெல்லாம் தமிழகத்திற்கு வாருங்கள் என்று அழைக்க வேண்டியது தானே? அதை விட்டு விட்டு, எங்கள் மீது ஜெயலலிதா பாய்ந்து குதறுவது ஏன்? இந்த அரசுக்கு எதிராக எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக நாங்களா இந்தச் செய்தியைச் சொன்னோம். இந்தச் செய்தியை வெளியிட்ட பத்திரிகைகளை விட்டுவிட்டு, அவ்வாறு பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று நாங்கள் கூறியது குற்றமா?

இந்த மாநாட்டிற்குப் பிறகு, கர்நாடகா தொழில் வர்த்தக சபை கூட்டமைப்பின் உதவிச் செயலாளர், விஜயகுமார் என்பவர்,

“கோவையில் நடத்தப்பட்ட மாநாடு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. ஒரே நாளில், 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவுக்கு சாம்ராஜ்நகர் தொழில் மண்டலத்தில் முதலீடு செய்ய முன்வந்திருப்பது பெரிதும் மகிழ்ச்சியை அளித்துள்ளது” என்று கூறி, அதுவும் நாளேட்டில் அப்போதே வெளிவந்தது. ஜெயலலிதா ஏன் அப்போதே அந்தச் செய்தியை மறுக்கவில்லை?

குறிப்பாக, “திருப்பூரைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனம் ஒன்று, 2000 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளது. கோவையைச் சேர்ந்த பெண் தொழிலதிபர் ஒருவர், அந்தத் தொழில் மண்டலத்தில், 1000 கோடி ரூபாய் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்” என்று செய்தி வந்ததா? இல்லையா? இதுபற்றி ஜெயலலிதா கோவையில் ஏன் வாய் திறக்கவில்லை?

மாறாக, கூட்டம் முடிந்தவுடன் தொழிலதிபர்கள், “எங்களை அழைத்தார்கள், வந்தோம், அவ்வளவு தான். எந்தச் சூழ்நிலையிலும் சாம்ராஜ் நகரில் தொழில் தொடங்க நாங்கள் தயாராக இல்லை” என்று சொன்னதாக அனைத்து நாளிதழ்களிலும் வந்துள்ளது என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். தொழில் முனைவோர் சிலர், “யாரும் இங்கிருந்து தொழிலை அங்கு இடம்மாற்ற வில்லை, தங்கள் தொழிலை அங்கு விரிவாக்கம் செய்கின்றனர். கிரானைட் பாலிஷிங் தொழிலுக்குக் கர்நாடகா மாநிலம் சிறப்பான இடம். அதேபோல உணவு பதப்படுத்துதல், காற்றாலை மின் உற்பத்தி போன்ற தொழில்களை அங்கே விரிவாக்கம் செய்ய, நல்ல வாய்ப்பு உள்ளது” என்றெல்லாம் கூறியதாகத்தான் “தினமலர்” இதழ் வெளியிட்டிருக்கிறது. மேலும், அந்த இதழ், “இவை கூடுதல் முதலீடுகள் என்றாலும், தமிழகத்திற்கு இவை கிடைத்திருந்தால், இங்கு வேலை வாய்ப்பு அதிகரித்து இருக்கும். ஆனால், தமிழகத்தில் மின்வெட்டு, அரசு நிர்வாகக் கோளாறு, உள்கட்டமைப்புப் பற்றாக்குறை, ஆட்சியாளர்களைச் சந்திக்க முடியாத சூழல் உள்ளிட்ட காரணங்களால், முதலீட்டுச் சூழல் நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது என்பதே உண்மை. இதனால், தமிழகத் தொழில் முனைவோர், சத்தீஸ்கர், கர்நாடகா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். சாம்ராஜ் நகர் முதலீட்டாளர் மாநாடு, கொங்கு மண்டலத் தொழில் வரலாற்றில் ஒரு குறிக்கப்பட வேண்டிய சகாப்தமாக மாறலாம்

எனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்" என்றெல்லாம் எழுதியிருக்கிறதே, முதலமைச்சர் ஜெயலலிதா அந்த ஏட்டிற்கு அல்லவா விளக்கம் அளித்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு, அந்த இதழில் இவ்வாறு செய்தி வந்திருக்கிறது என்று சொன்னால், நாங்கள் சொல்வது பொய்ப் பிரச்சாரமா? கோவையில் முதல்வர் கலந்துகொண்ட கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிரித்திருக்க மாட்டார்களா?

தமிழகத்திலிருந்து இவ்வாறு தொழில் முதலீடுகள் வெளி மாநிலங்களுக்குச் செல்ல என்ன காரணம் என்பது பற்றியும் பலரிடம் பேட்டி கண்டு "தினமலர்" நாளேடு 24-1-2014 அன்று அரைப் பக்க அளவிற்குச் செய்தி வெளியிட்டது. அந்தச் செய்திக் கட்டுரையின் தலைப்பைப் பார்த்தாலே நிலைமையைப் புரிந்து கொள்ள முடியும். என்ன தலைப்பு தெரியுமா? "தமிழகத்தை ஆட்டிப் படைக்கும் லஞ்சம், மின்வெட்டு, நில மதிப்பு - மேற்கு மாவட்ட முதலீடுகள் கர்நாடகா செல்லும் மர்மம் இதுதான்!" - இப்படியெல்லாம் நாளேடுகளில் வருகின்ற செய்திகளைப் பார்த்து உண்மையைப் புரிந்துகொள்ளாமல், நாங்கள் பொய் கூறுகிறோம் என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசினால் என்ன அர்த்தம்? "தமிழகத்தை ஆட்டிப் படைக்கும் லஞ்சம்" என்றே தலைப்புச் செய்தி வெளியிட்டு, எத்தனை நாட்களாகிறது? தமிழக அரசு அதற்குப் பதிலளித்திருக்க வேண்டாமா? முதல் அமைச்சர் ஜெயலலிதா நம்மீது கோபப்படுவதற்குப் பதிலாக நாளேடுகளைப் படித்து அவருடைய ஆட்சி பற்றி மக்களிடம் என்ன கருத்து இருக்கிறது, பத்திரிகைகள் என்ன எழுதுகிறார்கள், உண்மை என்ன என்பதைப் புரிந்துகொள்ள முன்வர வேண்டும். ஹெலிகாப்டரிலேயே பறந்து கொண்டிருந்தால், கீழே நடப்பது புரியாது! கீழே இறங்கிவரக் கற்றுக்கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் ஜெயலலிதா கோவையில் பேசும்போது, அவருடைய மூன்றாண்டு கால ஆட்சியில் 33 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 31,306 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட 33 நிறுவனங்களில், இதுவரை எத்தனை நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிலைத் தொடங்கியிருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்க முடியுமா?

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல நிறுவனங்களுடன் போடலாம். உண்மையில் தொழில் தொடங்கினால்தானே பயனளிக்கும்.

முதலமைச்சர் நேற்று பேசிய கூட்டத்திலேயே; 31,706 கோடி ரூபாய்க்கு 34 மாதங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டதில், 10,660 கோடி ரூபாய் முதலீடுகள் தான் கிடைக்கப் பெற்றதாக அவரே தெரிவித்திருக்கிறார். ஆனால் முதல் அமைச்சர் ஜெயலலிதா பேரவையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பற்றியெல்லாம் விளக்கமாக நீண்ட நேரம் பேசி, அதற்கு நான் 6-2-2014 அன்றே விளக்கமாகப் பதில் கூறிவிட்டேன். ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா அந்தப் பதிலைப் படிக்காத காரணத்தால், பேரவையிலே பேசியதையே கோவைக் கூட்டத்திலும் பேசியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றியும், முதலீடுகள் எவ்வாறு வெளி மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றன என்பது பற்றியும், நாங்கள் பொய் சொல்வதாகக் கோவையில் நடைபெற்ற கூட்டத்தில் முதலமைச்சர் பேசியிருக்கிறாரே; இந்த ஆட்சியின் தொழில் வளர்ச்சிக்குச் சான்றாக மேலும் ஒரு உதாரணம் கூறுகிறேன்.

தி.மு.கழக ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 93 ஆயிரம் ஆகும். ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற பெண்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 78 ஆயிரம். வேலை வாய்ப்பினை இழந்த பெண்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 15 ஆயிரம் ஆகும். இதுதான் தொழில் வளர்ச்சிக்கான அடையாளமா?

மற்றுமோர் உதாரணம்! தமிழக அரசு இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளை ஆலங்குளத்திலும், அரியலூரிலும் நடத்தி வருகிறது. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில், 2010-2011ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் உற்பத்தி 2 இலட்சத்து 3 ஆயிரத்து 40 டன்கள். அ.தி.மு.க. ஆட்சியில், 2011-2012ஆம் ஆண்டில் அங்கே சிமெண்ட் உற்பத்தி 1 இலட்சத்து 34 ஆயிரத்து 640 டன்கள். 68 ஆயிரத்து 400 டன்கள் குறைவு. அதுபோலவே அரியலூர் அரசு சிமெண்ட் தொழிற்சாலையில் கழக ஆட்சியில் உற்பத்தி 4 இலட்சத்து 90 ஆயிரத்து 35 டன்கள். அ.தி.மு.க.

ஆட்சியில் உற்பத்தி 3 இலட்சத்து 88 ஆயிரத்து 55 டன்கள். கழக ஆட்சியைவிட 1 இலட்சத்து ஓராயிரத்து 980 டன்கள் குறைவு. தொழில் வளர்ச்சி என்றால் உற்பத்தியும் தொடர்ந்து அதிகரித்திருக்க வேண்டாமா? இதுதான் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருகியிருப்பதற்கான அடையாளமா?

ஏன்? அம்மையாருக்கு அவ்வப்போது மிக வேண்டியவர் சுப்பிரமணியம் சுவாமி! அவர் அம்மையாரின் ஆட்சி பற்றி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? முதலமைச்சருக்குப் படிக்க நேரம் இருந்திருக்காது. இப்போது அவர் கூறியதை நான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன். "தொழில் வளம், பொருளாதார வளம் எதுவுமே இல்லை. தமிழகம், கர்நாடகம் என பிரித்துப்பார்க்க வேண்டியதில்லை. ஆனால், இங்கிருக்கும் தொழில் அதிபர்களை, கர்நாடக முதல்வர் சித்தராமையா, தங்கள் மாநிலத்துக்குக் கவர்ந்து போயிருப்பதாக அறிந்தேன். தமிழகத்தில் இருந்து 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடுகள், கர்நாடகத்துக்குப் போயிருப்பதற்கான காரணம், அதை இங்கேயே தக்கவைக்க, தமிழக அரசு எந்த முயற்சியும் எடுக்காததே! கடுமையான மின் பற்றாக்குறையும், அரசு அதிகாரிகளின் ஒத்துழையாமையும் எல்லா நிலைகளிலும் இருப்பதால், வெளிமாநிலங்களில் இருந்து யாரும் தமிழகத்தில், முதலீடு செய்ய முன்வரவில்லை. தகவல் தொழில் நுட்பத் துறையில், தமிழகம், நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலை மாறியிருக்கிறது. அதற்குக் காரணம், மாநில அரசு நிர்வாகம் சரியில்லாததே" என்று தெரிவித்திருக்கிறார் என்றால், முதலமைச்சர் ஜெயலலிதாவே, பொய் சொல்வது நாங்களா? அல்லது நீங்களா?

அன்புள்ள,

மு.க.

3-4-2014

3873. ஒவ்வொருவரும் ஒரு வாக்கு; ஒவ்வொருவராலும் ஒரு வாக்கு!

உடன்பிறப்பே,

ஏப்ரல் 5ஆம் தேதி கோவையில் தொடங்கி, 21ஆம் தேதி சென்னைவரை என்னுடைய தேர்தல் சுற்றுப் பயணம் வரையறுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. என்னுடைய உடல் நலம் இந்தச் சுற்றுப் பயணத்தைத் தாங்குமா, அன்றாடம் நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர், வேனிலேயே அமர்ந்து பயணம் செய்ய முடியுமா என்றெல்லாம் என்னை நாள்தோறும் சந்திக்கும் உடன்பிறப்புகள் கவலையோடு கேட்கிறார்கள். உடல் நலத்தைப் பற்றி நான் என்றைக்கு அக்கறை கொண்டேன்? நான் சுற்றுப்பயணம் தொடங்குவதற்கு முன்பே நம்முடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தனது பிரச்சாரத்தைத் தொடங்கிக் கடந்த இரண்டு மூன்று நாட்களாகத் தென் சென்னை, திருப்பெரும்புதூர், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறார்.

பொருளாளர், தம்பி ஸ்டாலினைப் பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. இதற்குள் 20 தொகுதிகளில் பிரச்சாரத்தை முடித்துவிட்டார். அவரது உழைப்பைப் பற்றியும், அவர் வாக்காளர்களைச் சந்தித்து பேசுவது பற்றியும் நேரிலும், தொலைபேசியிலும் பல நண்பர்கள் என்னிடம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஒரு சிலர், “நீங்கள் அந்தக் காலத்திலே உணர்ச்சியோடும், எழுச்சியோடும் பேசுவீர்களே, நாள்தோறும் பகல் என்றும், இரவு என்றும் பாராமல் ஓயாது உழைப்பீர்களே, இரவெல்லாம் தூங்காமல் கழக உடன்பிறப்புகளுடன் தொடர்புகொண்டு ஆங்காங்குள்ள நிலைமைகளை அறிந்து ஊக்கமளித்து அறிவுரை வழங்குவீர்களே, அதைப் போலவே இருக்கிறது” என்றெல்லாம் என்னிடம் கூறும்போது, என்னுடைய பழைய கால நினைவுகள் என் உள்ளத்தில் நிழலாடத்தான் செய்கின்றன. முதன்மைச் செயலாளர்

ஆற்காடு வீராசாமியும் என்னுடன் வருவதாகக் கூறினார். அவரது உடல் நிலை கருதி வேண்டாமென்று கூறியுள்ளேன். துணைப் பொதுச் செயலாளர் துரைமுருகன் என்னுடன் சுற்றுப்பயணத்தில் வருகிறார். மற்ற துணைச் செயலாளர்களான சகோதரி சற்குணப் பாண்டியன், வி.பி. துரைசாமி மற்றும் தலைமைக் கழகத்தில் உள்ள முன்னணிப் பேச்சாளர்களான மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, அ. ரகுமான்கான், திருச்சி சிவா, பேராயர் எஸ்றா சற்குணம், வாகை சந்திரசேகர், குஷ்பூ சுந்தர், கம்பம் செல்வேந்திரன், பேராசிரியர் சபாபதி மோகன், நூர்ஜகான் பேகம், சங்கரி நாராயணன், புலவர் இந்திர குமாரி, புதுக்கோட்டை விஜயா, தஞ்சை கூத்தரசன், வி.பி. ராஜன், நெல்லிக்குப்பம் புகழேந்தி, திண்டுக்கல் லியோனி, குமரிமுத்து, வாசு விக்ரம், இனிகோ இருதயராஜ் போன்றவர்கள் கலந்துகொள்ளும் பிரச்சார நிகழ்ச்சிகளும் முரசொலியில் வந்துள்ளன. மகளிர் அணியைச் சேர்ந்த வசந்தி ஸ்டான்லி, விஜயா தாயன்பன் போன்றவர்கள் நேரில் என்னைச் சந்தித்து, நாங்களும் தேர்தல் சுற்றுப் பயணத்தில் கலந்துகொள்ள வேண்டாமா என்று உரிமையோடு கேட்டுப் பிரச்சார நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.

தோழமைக் கட்சிகளின் தலைவர்களும், முன்னணியினரும் இடைவெளியின்றித் தொடர்ந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாகத் திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் இளவல் கி. வீரமணி அவர்கள் ஒரு மாத காலத்திற்குச் சுற்றுப்பயணத் திட்டம் வகுத்துக் கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். அதுபோலவே பேராசிரியர் சுப. வீரபாண்டியன், பேராசிரியர் காதர் மொய்தீன், பேராசிரியர் ஜவாஹிருல்லா போன்றவர்களின் நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகியுள்ளன.

தொல். திருமாவளவன், டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் தங்கள் தொகுதிகளிலே வாக்குகளைக் கேட்கின்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு, மற்றத் தொகுதிகளுக்கும் சென்று பிரச்சாரம் செய்துவருகின்றனர். பிரபல எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன் நமக்கு ஆதரவாகத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார். மேலும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், சமூக இயக்கங்களைச் சார்ந்தவர்களும், குறிப்பாக மாற்றுத் திறனாளிகள் - திருநங்கையர் - சிறுபான்மையினர் - ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் - வழக்கறிஞர்கள் - நெசவாளர்கள், விவசாயிகள், மீனவர்கள்,

மாணவர்கள், தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் தங்களால் இயன்ற அளவிற்கு ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் எடுத்து வைக்கப்படும் ஆணித்தரமான விளக்கங்களையும், செய்திகளையும் தொலைக்காட்சி வாயிலாக நீ கண்டிருப்பாய்! இதற்கிடையே அ.தி.மு.க.விற்காக - ஒரே ஒரு தலைவி மட்டும் - பாவம் மிகவும் சிரமப்பட்டு - பக்கம் பக்கமாக எழுதிக் கொடுக்கப்பட்ட பேச்சைத் தூக்கிக் கொண்டு "கெலிகாப்டரில்" பறந்து சென்று, மேடையில் அலுப்பு சலுப்பின்றி ஏறி, வேறு யாரையும் பேச விடாமல், வேட்பாளரைக்கூட வாக்குக் கேட்கவோ, உட்காரவோகூட அனுமதிக்காமல், கடும்வெயிலில் குடி தண்ணீர்கூடக் கொடுக்கப்படாமல், அழைத்து வரப்பட்ட அப்பாவிப் பொதுமக்களை உட்கார வைத்து, அவர்களிடம் செய்வீர்களா, நீங்கள் செய்வீர்களா என்று திரும்பத் திரும்பக் கேள்விகளைக் கேட்டு, அவர்களும் எந்தவிதமான பதிலும் சொல்லாமல், அழைத்து வரப்பட்டபோது கொடுக்கப்பட்ட வாக்குறுதி காப்பாற்றப்படுமா? எப்போது அனுப்பு வார்கள் என்ற ஏக்கத்தோடு அமர்ந்திருக்கின்ற நிலையைக் கண்டிருப்பீர்கள். மேடையிலே பேசிய பேச்சையே திரும்பத் திரும்ப 24 மணி நேரமும் ஒளிபரப்ப ஒரு தொலைக்காட்சி! அது தவிரப் பேச்சை சி.டி.யாகத் தயாரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் அனுப்புவதற்கான ஏற்பாடு என்று இதுதான் அங்கே நடக்கிறது!

முதலமைச்சர் ஜெயலலிதா பேசுகின்ற அந்தக் கூட்டங்களில் எல்லாம் வசை புராணம்தான்! மத்திய காங்கிரஸ் அரசைப் பற்றித் துரோகம், துரோகம் என்று ஒரு நீண்ட பட்டியல்! அதற்குத் தி.மு.கழகம் துணை போனதாகக் குற்றம் சுமத்தி அதற்காகப் பாதி நேரம்! தான் செய்யாததை எல்லாம் செய்ததாகவும், தி.மு. கழகத்தின் சாதனைகளையெல்லாம் தான்தான் நிறைவேற்றியதாகவும், பொய் மூட்டைகளை ஆங்காங்கே அவிழ்த்துவிடுவதற்குப் பாதி நேரம்! இதற்குத்தான் முதலமைச்சர் நேரத்தைச் செலவிடுகிறாரே தவிர, கடந்த மூன்றாண்டு காலத்தில், அவருடைய ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களுக்காக என்ன செய்தோம், நாள்தோறும் பேரவையிலே 110வது விதியின் அறிக்கைகளைப் படித்தோமே,

வேறு எந்த அமைச்சரையும் படிக்க அனுமதிக்காமல், தானே படித்து, அதனை கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டிப் பத்திரிகைகளில் இடம்பெறச் செய்து விளம்பரம் தேடிக் கொண்டோமே, அந்த அறிவிப்புகள் எல்லாம் என்ன ஆயிற்று? வண்டலூரில் பேருந்து நிலையம் வரும் என்று சொன்னோமே, முதியோருக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்குவோம் என்று சொன்னோமே, "மோனோ" ரெயில் வரப்போகிறது என்று ஆட்சிக்கு வந்ததிலிருந்து சொல்லிக் கொண்டிருக்கிறோமே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்குவோம் என்று சொன்னோமே, விலைவாசியைக் குறைப்போம் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னோமே, மின்வெட்டே இல்லாத மாநிலமாக, மின்மிகை மாநிலமாகத் தமிழகத்தை ஆக்குவோம் என்று பலமுறை சொன்னோமே, 5.6 இலட்சம் பேருக்குப் புதிதாக வேலைவாய்ப்பினை உருவாக்கப் போவதாகச் சொன்னோமே, இருபதாயிரம் தொழிற்சாலைகள் உருவாக்கிடப் போவதாக அறிவித்தோமே, அவற்றை யெல்லாம் செய்தோமா? ஏன் செய்யவில்லை என்றெல்லாம் அந்த கூட்டங்களிலே சொல்ல வேண்டியதுதானே?

கடந்த மூன்றாண்டு காலத்தில், அதற்கு முன்பிருந்த தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சாதனைத் திட்டங்களையெல்லாம் முட்டுக்கட்டை போட்டு, மூடு விழா நடத்திக் கொண்டிருப்பதைப் பற்றி மக்களிடம் சொல்ல வேண்டியதுதானே? மாநிலத்தின் மேம்பாட்டுக்காக மத்திய அரசிடம் திட்டங்களைக் கேட்டுப் பெற்றுச் செயலாக்கம் செய்யும் காலமெல்லாம் மாறி, மத்திய அரசே முன்வந்து தமிழகத்திற்கு வழங்கிய அடிப்படை கட்டமைப்பு வசதி அளிக்கும் திட்டங்களுக்கெல்லாம், தடை போட்டதற்கான காரணம் என்ன? என்பதைப் பற்றிப் பொதுமக்களுக்கு விளக்கம் அளிப்பதுதானே? சேதுத் திட்டத்தை ஏற்கனவே தேவை என்று அறிவித்தோம், தற்போது அதை வேண்டாமென்று உச்ச நீதிமன்றத்திலேயே கோரிக்கை வைக்கிறோம், என்ன காரணம் தெரியுமா என்று சொல்ல வேண்டியதுதானே? அதையெல்லாம் மக்களிடம் விளக்காமல், மத்திய அரசு இன்னின்ன ஊழல்களைச் செய்தது, அதிலே ஊழல், இதிலே ஊழல் என்று முதலமைச்சர் ஜெயலலிதா புழுதிவாரித் தூற்றுவதற்காகப் பட்டியலிட்டால், உடனடியாக அம்மையார் என்னென்ன ஊழல் செய்தார் என்று எதிர்க்கட்சிகள் பட்டியலிடத்தானே செய்வார்கள்?

இதற்கெல்லாம் பதிலளிக்காமல் முதலமைச்சர் ஜெயலலிதா குற்றச்சாட்டுகளை எடுத்துவைத்ததற்கெல்லாம் நான் ஒவ்வொரு நாளும் "உடன்பிறப்பு" மடலின் மூலம் விளக்கமாகப் பதில் அளித்திருப்பதை நீ கண்டிருப்பாய்! முதல் அமைச்சர் கேட்ட எந்தக் கேள்விக்கும், நான் விளக்கம் அளித்திடத் தவற வில்லை. ஆனால் மாறாக நாம் கேட்ட கேள்விக்குத் தான் முதலமைச்சர் ஜெயலலிதா எந்த விளக்கமும் அளிக்கவில்லை. குறிப்பாக இஸ்லாமியர்களுக்கு நாம் இட ஒதுக்கீடு வழங்கவில்லை என்று முதல் பொய் சொன்னார். அதற்கு அடுத்த நாளே, எந்தத் தேதியில் அவர்களுக்கு 3.5 சதவிகித தனி இட ஒதுக்கீடு வழங்கித் தி.மு.கழக ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டது என்ற விவரத்தையும், இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் தெரிவித்த மறுப்பையும் எடுத்துக்காட்டியிருந்தேன். அதன்பிறகு அந்தப் பொய்யை விட்டுவிட்டு, கரசேவைக்கு தான் ஆள் அனுப்ப வில்லை என்று அடுத்த பொய்யைச் சொன்னார். அதற்கும் நான் விரிவாகப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை யெல்லாம் எடுத்துக் காட்டினேன். உடனே அதை விட்டுவிட்டு வேறொன்றைப் பேச ஆரம்பித்து விட்டார். கோவையில் சென்று தொழில் முதலீடுகள் தமிழகத்தை விட்டு வேறு மாநிலங்களுக்குச் செல்லவில்லை என்றும், நானும், ஸ்டாலினும் பொய் சொல்வதாகவும் ஒரு பெரிய பொய்யை அவிழ்த்துவிட்டார். அதற்கும் நான் விரிவாகப் பதிலளித்திருக்கிறேன். நீ படித்திருப்பாய்.

எப்படியோ அவர்கள் பாணியில் பிரச்சாரம் செய்யட்டும். நாம் நம்முடைய வழியில் நமது பயணத்தைத் தொடருவோம். கழகத்தின் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு விட்டது. அ.தி.மு.க.வும் தனது தேர்தல் அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை அந்த அறிக்கைகளைப் படித்துப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். சுருக்கமாகக் கூற வேண்டுமேயானால், தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை "இசை"; அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை "வசை".

என்னுடைய சுற்றுப்பயணத்தை நான் தொடங்குவதற்கு முன்பு நான் உன்னிடம் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் தமிழ்நாட்டிலே இப்போது வெளிவருகின்ற

பத்திரிகைகளில் பெரும்பாலானவை அரசு தருகின்ற முழு பக்க விளம்பரங்களுக்காகவும், ஆளுங்கட்சியினர் அவிழ்த்து விட்டுள்ள அடாவடி அரசியலாலும், அவர்கள் மீது கொண்டுள்ள அச்சத்தினாலும், நம்மீது கல்லைத் தூக்கிப் போடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. குறிப்பாகக் கழகத்திலே ஏதாவது ஒரு சிறு சம்பவம் எங்கேயாவது தோன்றினால் போதும், உடனே அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, "பேனைப் பெருமாள் ஆக்கி" என்பார்களே, அதைப்போல ஒன்றை நூறாக்கி, அந்தச் செய்திக்கு கண்ணும் காதும் வைத்து வெளியிடுகிறார்கள். ஏன் இப்படி முக்கியத்துவம் தருகிறார்கள் என்பதைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட இயக்கத்தின் இனம், மொழி போன்ற தனிச்சிறப்பு வாய்ந்த அடையாளங்களில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை; நம்பிக்கை இல்லாதது மட்டுமல்லாமல், ஒருவகை ஒவ்வாமையே அவர்களிடம் இருக்கிறது. அந்தத் தொகுதியிலே வேட்பாளரை எதிர்த்து இப்படி நடக்கிறது, இந்தத் தொகுதியிலே வேட்பாளரை எதிர்த்து இவர்கள் எல்லாம் பணியாற்றவில்லை என்பது போன்ற செய்திகளுக்குத்தான் முக்கியத்துவம் தருகிறார்கள். அவர்களுடைய எண்ணம் எல்லாம், எப்படியாவது உற்சாகத்தோடு பணியாற்றுகின்ற நம்முடைய ஆர்வத்தைக் குறைத்திட வேண்டும் என்பதுதான். ஆனால் நாம் அவர்களை நினைத்துக் கவலைப்படுவதைவிட, அந்தச் செய்திக்குக்கூட நாம் ஏன் இடம்கொடுக்க வேண்டும்? நம்மை நாமே சரியாகத் தயார்படுத்திக்கொண்டு விட்டால், மற்றவர்களால் நம்மிடையே எவ்வாறு பூசலை ஏற்படுத்திட முடியும்! நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், எழுதியிருக்கிறேன். "நீர் இடித்து நீர் விலகாது" - தொகுதியிலே வாய்ப்பு கேட்கும்போது எல்லோரும் கேட்பார்கள். ஆனால் ஒருவருக்கு வாய்ப்பு தரப்பட்டு விட்டது, மற்றவருக்கு அடுத்த முறை பரிசீலிக்கப்படும் என்ற நிலை ஏற்பட்டவுடன், அனைவரும் சேர்ந்து போட்டியிடுகின்ற வேட்பாளருக்கு ஆதரவாகத்தான் செயல்படுகிறோம். ஏனென்றால் அங்கே போட்டியிடுவது யாரோ ஒரு வேட்பாளர் அல்ல. தி.மு. கழகம் போட்டியிடுகிறது, கழகத்தைத் தோற்றுவித்த நம்மை யெல்லாம் நாள்தோறும் இயக்கிக் கொண்டிருக்கின்ற மாபெரும் சக்தியான பேரறிஞர் அண்ணாதான் அங்கே வேட்பாளர். அந்த எண்ணத்தோடு கழகத் தோழர்கள் பாடுபட வேண்டுமென்று பணிவன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை நகர்மன்ற முன்னாள் தலைவரும், கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினருமான தம்பி சி. இறைவன் நேற்றையதினம் எனக்கொரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் கழக உறுப்பினர்களாகத் தற்போது 80 இலட்சம் பேர் இருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் மக்களவைத் தேர்தலில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் இந்தத் தேர்தலில் தவறாமல் நமது அணியினருக்கு வாக்களிக்க வேண்டும். அதே நேரத்தில் கழக உறுப்பினர்கள் 80 இலட்சம் பேரும், ஒவ்வொருவரும் கழக உறுப்பினர் அல்லாத மற்றொருவரைத் தன்னுடன் அழைத்துச்சென்று, நமது அணியின் வேட்பாளருக்கு வாக்கு அளிக்கச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் அந்தப் பணியினை முறையாகவும், சரியாகவும் செய்வார்களானால், மேலும் 80 லட்சம் வாக்குகள் நமக்குக் கிடைக்கும். இரண்டையும் சேர்த்தால் தி.மு.கழகத்தின் சார்பில் மட்டுமே தமிழகத்தில் மொத்தம் நமது அணிக்கு ஒரு கோடியே அறுபது இலட்சம் வாக்குகளை மிகச் சுலபமாகப் பெற்று விடலாம். நமது அணிக்கு இந்த வாக்குகள் கிடைக்குமேயானால் மிகப் பெரும் வெற்றி உறுதி என்றெல்லாம் எழுதியிருக்கிறார்.

உடன்பிறப்பே, இறைவன் எழுதியுள்ள கணக்கு சரியான கணக்காகவே எனக்குத் தோன்றுகிறது. எனவே கழக உறுப்பினராக உள்ள ஒவ்வொருவருக்கும், என்னுடைய அன்பான வேண்டுகோள் இதுதான்; நீங்கள் ஒவ்வொருவரும் கழக உறுப்பினர் அல்லாத மேலும் ஒருவரை அணுகி, அவரையும் நம்முடைய அணிக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்யும் பணியிலே ஈடுபட வேண்டும். “நமது அண்ணன் எழுதி விட்டார், எனவே ஒருவரைச் சேர்த்தால் போதும்” என்று எண்ணிடாமல், குறைந்த பட்சம் ஒரு வாக்கு, அதற்கு மேல் நீங்கள் எத்தனை வாக்குகளை வேண்டுமானாலும் சேர்க்கலாம். தவறாமல், கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் ஒரு வாக்கு; ஒவ்வொருவராலும் ஒரு வாக்கு என்பதை மறவாமல் இன்று முதல் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெற்றி நமதே! உன்னுடைய இனிய முகம் காண இன்றே புறப்படுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

5-4-2014

3874. கங்கையே சூதகமானால் எங்கே போய் மூழ்குவது?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா உள்ளிட்டவர்கள் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை முதலில் தமிழகத்தில் நடைபெற்றபோது, ஆளுங்கட்சியாக அ.தி.மு.க. இருந்தது. விசாரணை முறையாக நடக்கத் தவறியது கண்டு, அந்த வழக்கினை வேறு மாநிலத்திற்கு மாற்றக்கோரி கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தொடுத்த வழக்கில் 2003ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் தேதியன்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் எஸ்.என்.வரியவா, எச்.கே. சேமா ஆகியோர் கொண்ட பெஞ்ச் அவ்வழக்கின் விசாரணையை கர்நாடக மாநிலத்திற்கு மாற்றி உத்தரவிட்டது.

அந்த வழக்கில் உச்ச நீதி மன்ற நீதிபதிகள் கூறும்போது, "It does appear that the new public prosecutor is hand in glove with the accused thereby creating a reasonable apprehension of likelihood of failure of justice in the minds of the public at large. There is strong indication that the process of justice is being subverted." (புதிய அரசு வழக்கறிஞர் குற்றவாளிகளோடு (ஜெயலலிதா குழுவினரோடு) இணைந்து செயல்படுவது நன்றாகத் தெரிகிறது. அதன் காரணமாகப் பொதுவாக நீதி கிடைக்காது என்ற ஒரு நம்பத்தகுந்த ஐயம் மக்கள் மனதிலே எழுந்துள்ளது. நீதி திசை திரும்பிச் செல்வது நிச்சயமாகத் தெரிகின்றது. 313வது விதிப்படி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும்போது, ஜெயலலிதா நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாமல் இருக்க தாக்கல் செய்த தவறான மனுவிற்கு அரசு வழக்கறிஞர் எதிர்ப்பே தெரிவிக்காமல் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது வருந்தத்தக்கது. (The conduct of the Public Prosecutor in not opposing such a frivolous application has to be deprecated).

ஜெயலலிதா நேரில் ஆஜராகாமல் இருக்க விசாரணை நீதிமன்றம் அனுமதி கொடுத்ததற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் தங்களுடைய கடுமையான எதிர்ப்பை இந்தத் தீர்ப்பிலே தெரிவித்திருப்பதோடு, "நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்த போதிலும், உங்களைவிடச் சட்டம் பெரியது. நேரில் ஆஜராகாமல் இருக்க விதிவிலக்கு கொடுக்கக் கூடிய அளவிற்கு அவரது மனுவிலே காரணங்கள் கூறப்படவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், நீதியின் பாதையிலே குறுக்கிட்ட செயல்தான் நடைபெற்றுள்ளது". (The Judges took serious exception to the trial court dispensing with the personal appearance of Ms. Jayalalithaa and said "be you ever so high, the law is above you. The grounds cited by her in the application were not all mitigating circumstances to have granted dispensation of personal appearance. To say the least, that was a ploy adopted to circumvent the due process of law.) நீதிபதிகள் மேலும் கூறுகிறார்கள்.

"In our view, the petitioner has raised many justifiable and reasonable apprehensions of miscarriage of justice and likelihood of bias, which would require our interference" அதாவது "எங்களுடைய கருத்தின்படி; மனுதாரர் (பேராசிரியர்) நியாயப்பூர்வமான, அர்த்தம் பொதிந்த சந்தேகங்களை எழுப்பி, அதாவது நீதி திசை திரும்பியும், பாரபட்சமாகவும் செல்வதால் எங்களுடைய குறுக்கீடு அவசியம் தேவை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகளே தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும் உச்சநீதிமன்றத்தில் வழங்கப்பட்ட இத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான குறிப்புகள் வருமாறு:-

தி.மு.க. தொடர்ந்துள்ள வழக்கில் போதுமான முதல் நிலை ஆதாரங்கள் இருப்பதாகவே நீதிமன்றம் கருதுகின்றபடியால் இவ்வழக்கைத் தமிழ்நாட்டில் நடத்தினால் நியாயம் கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது. எனவே இவ்வழக்கு மாற்றப்பட வேண்டிய வழக்கேயாகும்.

கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, கர்நாடக அரசோடு கலந்து பேசி, இந்த வழக்கிற்காக ஒரு சிறப்பு நீதிமன்றத்தை ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஆறு வார காலத்திற்குள் பெங்களூரில் அமைக்கவேண்டும்.

குற்றவியல் வழக்குகளில் பயிற்சி பெற்ற முதுநிலை வழக்கறிஞர் ஒருவரை இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நியமிப்பதுடன், அவருக்கு இளநிலை வழக்கறிஞர் ஒருவரும் அமர்த்தப்பட வேண்டும்.

தலைமை நீதிபதியினால் நியமிக்கப்படும் அரசு வழக்கறிஞர் ஏற்கனவே பிறழ் சாட்சியம் அளித்த - பல்டி அடித்த அரசுத் தரப்பு சாட்சிகளை (Hostile) மீண்டும் அழைத்து மறு விசாரணை செய்வதுடன், வேண்டுமென்றே மாற்றிச் சாட்சியமளித்த அந்தச் சாட்சிகள் மீது குற்றவியல் நடவடிக்கைகளைத் தனியே எடுக்கவும் அறிவுறுத்தப்படுகின்றது.

சாட்சிகளுக்கு மிரட்டுதல் இருப்பதாகக் கருதும் பட்சத்தில், அவர்களுக்குக் கர்நாடக அரசு போதிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

குற்றவாளிகள் அனைவரும் கேள்வி எழுப்பப் படும்போது நீதிமன்றத்தில் தவறாது ஆஜராவதுடன், **இவ்வழக்கைத் தினமும்** (Daily Basis) **எடுத்து விசாரிக்க வேண்டும்.**

வழக்குத் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் தமிழ்நாடு அரசு உடனடியாகச் சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

உச்ச நீதிமன்றம் இந்த வழக்கினை விரைவாக விசாரிக்க வேண்டுமென்றும், அன்றாடம் விசாரிக்க வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்து அது வெளிவந்தது 18-11-2003. அப்போது தமிழகத்தில் நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சி. இந்த உச்சநீதிமன்ற உத்தரவை ஏற்று, சென்னை தனி நீதிமன்றம், வழக்கை பெங்களூருக்கு மாற்றம் செய்வதற்கான அதிகாரப்பூர்வ உத்தரவை எப்போது பிறப்பித்தது தெரியுமா?

10-9-2004. அதாவது பத்து மாதங்களுக்குப் பிறகு தான் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

அதற்குப் பிறகு தற்போது 10 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் வழக்கு முடிந்தபாடில்லை. காரணம், இடை யிடையே பல்வேறு சாக்குபோக்குகளைக் காரணமாகக் காட்டி, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்திட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, வாய்தா பெற்றதுதானே தவிர வேறல்ல. அவர்கள் நியாயமானவர்கள் என்றால் வரம்பு கடந்து வாய்தா கோரி இழுத்தடிக்க வேண்டிய அவசியம் என்ன? மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம் ஏற்படும்!

பெங்களூருக்கு வழக்கு விசாரணை மாற்றப்பட்ட போதே, இந்த வழக்கு முடியும் கட்டத்தில்தான் இருந்தது. ஒருசில மாதங்களில் தீர்ப்பு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வாய்தா வாங்கும் திறமை காரணமாகப் பத்தாண்டு காலமாக இந்த வழக்கு இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

அரசு வழக்கறிஞர், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வாதாட வேண்டியவர். ஆனால் தற்போது அரசு வழக்கறிஞராக உள்ள பவானிசிங், அவ்வாறு வாதாடாமல் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வாதாடுகிறார் என்று தி.மு.க. சார்பில் கூறப்பட்டது. கர்நாடக மாநில அரசும், அந்தக் குற்றச்சாட்டினை ஏற்றுக்கொண்டு அரசு வழக்கறிஞர் பதவியிலிருந்து பவானிசிங்கை நீக்கி உத்தரவிட்டது. ஆனால் குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதிமன்றம் வரை சென்று, தங்களுக்கு எதிராக வாதாட வேண்டிய அரசு வழக்கறிஞராக பவானிசிங் நீடிக்க வேண்டுமென்றும், நீதிபதியாக ஓய்வு பெற்று செல்கிற நீதிபதி பாலகிருஷ்ணா அவர்களே இந்த வழக்கினைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்றும் வாதாடினார்கள். இந்த விசித்திரத்தைக் கண்டு சட்ட நெறிமுறைகளில் நம்பிக்கை கொண்டோர் ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தனர். அப்போது ஓய்வு பெற்ற நீதிபதி பாலகிருஷ்ணா தொடர்ந்து இந்த வழக்கினை விசாரிக்க முன்வராத நிலையில், தற்போது இந்த வழக்கினை நேர்மையான நீதிபதி மைக்கேல் டி. குன்கா விசாரித்து வருகிறார்.

என்றபோதிலும், அரசு வழக்கறிஞரான பவானிசிங் அவர்களை கர்நாடக மாநில அரசே மாற்றிய நிலையில், உச்ச நீதிமன்றம்

அதுவும், தற்போது தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றத்தின் அதே நீதிபதி, திரு. சவுஹான் அவர்கள் இந்த வழக்கினைப் பவானிசிங் அவர்களே தொடர்ந்து அரசு சார்பில் நடத்தலாம் என்று முடிவு செய்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினருக்கு ஆதரவாகவும், அரசு தொடுத்துள்ள வழக்குக்குப் பாதகமாகவும் பவானிசிங், எந்தெந்த வகையில் நடந்து கொள்கிறார் என்பதற்கான பல சான்றுகளும் உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும், இறுதியில் ஜெயலலிதா தரப்பினரின் கோரிக்கை ஏற்கப்பட்டு அவரே அரசாங்க வழக்கறிஞராக நீடிக்கலாம் என்று அனுமதி வழங்கப்பட்டுப் பவானிசிங்கே நீடித்து வருகிறார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு யார் அரசாங்க வழக்கறிஞராகத் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று குற்றம் சாட்டப்பட்டோர் சார்பில் கேட்கப்பட்டதோ, அதே அரசாங்க வழக்கறிஞர் பவானிசிங் தற்போது தனக்கு உடல் நலம் சரியில்லை என்றும், தன்னால் வாதாட இயலவில்லை என்றும், வழக்கினை ஒத்திவைக்க வேண்டுமென்றும் கோருகிறார் என்றால், அதிலே பொதிந்துள்ள உண்மையை அனைவராலும் புரிந்துகொள்ள முடிகிறதா? இல்லையா?

27-1-2014 அன்று நடைபெற்ற விசாரணையின்போது, வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்கு நேரில் ஆஜராகாமல் இருப்பதற்காக விலக்களிக்க வேண்டுமென்று கோரி, அவர்களுடைய வழக்கறிஞர்கள் நீதிபதியின் முன்னால் மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில் ஜெயலலிதா, தமிழக முதல்வராக இருப்பதால் அரசுப் பணி இருப்பதாகவும், சசிகலாவுக்கு கண் வலி இருப்பதாகவும், சுதாகரனுக்கு மூட்டு வலி இருப்பதாகவும், இளவரசிக்கு நீரிழிவு நோய் இருப்பதாகவும், அதனால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்குக் கழக வழக்கறிஞர், தாமரைச்செல்வன் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், இதற்கு ஆட்சேபணை தெரிவிக்க வேண்டிய எதிர் தரப்பு வழக்கறிஞர், அதாவது அரசு வழக்கறிஞர் எந்த விதமான ஆட்சேபமும் தெரிவிக்கவில்லை. அரசு வழக்கறிஞர் பவானிசிங் ஆட்சேபணை தெரிவிக்காத காரணத்தால், நீதிபதி அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். அப்போதுகூட நீதிபதி, “நீதிமன்றத்தில்

ஆஜராவதில் இருந்து விலக்குக் கோரும் மனுவில் உரிய மருத்துவச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை. இருப்பினும் இந்த முறை மட்டும் இம்மனுக்களை ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

அடுத்து ஜெயலலிதாவின் வழக்கறிஞர், தங்கள் கட்சிக்காரர்களின் வீடுகளில் சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட பொருள்களில் வழக்குக்குத் தொடர் பில்லாதவற்றைத் திரும்பக் கொடுக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஒரு மனுவினைப் புதிதாக தாக்கல் செய்தார். வழக்கு முடிவடையும் கட்டத்தில் இருக்கிறபோது, இவ்வளவு நாட்களும் சும்மா இருந்துவிட்டுத் திடீரென்று இப்படியொரு கோரிக்கையைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வைக்க வேண்டிய அவசியம் என்ன? வழக்கினைத் தாமதம் செய்வதுதான் நோக்கமா?

அந்த மனு மீதான ஆட்சேபணையைத் தாக்கல் செய்யும்படி அரசு வழக்கறிஞரிடம் நீதிபதி கேட்டபோது, ஆட்சேபணை மனுவைத் தாக்கல் செய்ய இரண்டு வாரம் கால அவகாசம் வேண்டுமென்று அரசு வழக்கறிஞர் பவானிசிங் கேட்டார். கைப்பற்றப்பட்ட பொருள்களைத் திரும்ப கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு ஆட்சேபணையைத் தெரிவிக்குமாறு நீதிபதி அரசு வழக்கறிஞரைக் கேட்டால், அதற்கு அரசு வழக்கறிஞர் இரண்டு வார காலம் அவகாசம் வேண்டும், 2 வாரத்திற்கு வழக்கு விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டார். (ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி, வழக்கு விசாரணையை ஒத்திவைக்க எடுக்கப்படும் முயற்சி தெரிகிறதல்லவா?) எதற்காக அவ்வளவு கால அவகாசம்? அதுவும் அரசு வழக்கறிஞரே கேட்கிறார்! யாரோடு கலந்தாலோசனை செய்ய அவ்வளவு கால அவகாசம் தேவைப்படுகிறது அவருக்கு?

அதை ஏற்றுக் கொள்ளாத நீதிபதி, வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஜனவரி 31ஆம் தேதிக்குள் ஆட்சேபணை மனுவினைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார். அப்போதும் அரசு வழக்கறிஞர் தமிழக லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த வேண்டும் என்பதால் ஒரு வார கால அவகாசமாவது வேண்டுமென்று கேட்ட போது, நீதிபதி அதனை ஏற்காமல் நிராகரித்து விட்டார்.

அரசு தரப்பு வழக்கறிஞர் இவ்வாறு கால அவகாசம் கேட்டபோது, அதிருப்தி தெரிவித்த நீதிபதி, **"இது குற்றவியல் நீதிமன்றமா அல்லது ஒத்திவைப்பு நீதிமன்றமா?"** என்று முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கிறார். மேலும் நீதிபதி அவர்கள், "இந்த வழக்கு விசாரணை கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடந்து வருகிறது. விசாரணை நடந்த நாட்களைக் காட்டிலும், ஒத்தி வைக்கப்பட்ட நாட்கள் தான் அதிகம் இருந்துள்ளது. தனி நீதிமன்றம் மற்றும் தனி நீதிபதி நியமனம் செய்ததின் நோக்கம், விசாரணை தினமும் நடந்து விரைவில் முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான். அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. இனியாவது வழக்கு தடை இல்லாமல் நடக்க வேண்டும்" என்றெல்லாம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா கருத்து தெரிவித்திருக்கிறார்.

ஜனவரி 20ஆம் தேதியன்று விசாரணை நடந்தபோது, சென்னையிலிருந்து பெங்களூர் கொண்டு வரப்பட்ட அசையும் சொத்துக்கள் தொடர்பான அத்தனை விவரங்களையும், பரிசுப் பொருள்களின் பட்டியலையும் தங்களுக்கு வேண்டும் என்று ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர்கள் மனு தாக்கல் செய்து, நீதிபதி அப்போது அதனைத் தள்ளுபடி செய்தார்.

மேலும் நீதிபதி அவர்கள், இந்த வழக்கை விரைந்து முடிக்க வசதியாக, வழக்கறிஞர்களின் இறுதி வாதம் பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி முதல் தொடங்கப்படும் என்றும், உச்சநீதிமன்ற உத்தரவின்படி தினமும் விசாரணை நடக்கும் என்றும், முதலில் அரசுத் தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்த பின், குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்ய வேண்டும் என்றும், இறுதிக் கட்ட வாதம் தொடங்குவதை எந்த நிலையிலும் காலம் கடத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் திட்டமிட்டு, வழக்கு தாமதப்படுத்தப்பட்ட இந்த நிலையிலும் இந்த வழக்கினை மேலும் தொடர்ந்து தாமதப்படுத்த பல்வேறு தந்திரங்களும் உத்திகளும் கையாளப்படுகின்றன. அதிலே ஒன்றுதான் அரசு வழக்கறிஞரே சில நாட்களுக்கு முன் ஒரு மனுவினைத் தாக்கல் செய்தார். அதாவது சென்னையில் உள்ள பாஸ்கரன் என்பவரிடம் கொடுக்கப்பட்ட ஜெயலலிதாவுக்குச் சொந்தமான 1,116 கிலோ வெள்ளிப் பொருள்களை, பெங்களூர் நீதிமன்றத்துக்குக்

கொண்டுவர வேண்டுமென்று ஒரு மனுவினை அரசு வழக்கறிஞர் நீதிபதியிடம் தாக்கல் செய்தார். வழக்கு முடிகின்ற நேரத்தில், அரசு வழக்கறிஞர் இவ்வாறு ஒரு மனுவினைத் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன? வழக்கினைத் தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்த மனு, அரசு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், பேராசிரியர் சார்பில் ஒரு மனு மூலமாக அந்தப் பாஸ்கரன் ஏற்கனவே இறந்து விட்டார் என்ற விவரம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனுவினைத் தள்ளுபடி செய்துதான், சிறப்பு நீதிபதி 28-2-2014 அன்று தீர்ப்பு அளித்திருக்கிறார். அந்தத் தீர்ப்பில்தான்,

"இந்த வழக்கு கடந்த 9 ஆண்டுகளுக்கும் மேலாக பெங்களூரில் நடந்து வருகிறது. நீதிபதி பி.ஏ.மல்லிகார் ஜுனையா, இந்த வழக்கினை விசாரித்த போது, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 313இன் கீழ், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் நேரில் ஆஜராகி, வாக்குமூலம் கொடுத்துவிட்டனர். நீதிபதி பாலகிருஷ்ணா இந்த வழக்கினை விசாரித்தபோது, சாட்சிகள் விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. அரசு மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர்களும் வாதத்தை முடித்துவிட்டனர். இந்த வழக்கு தொடர்பாக அனைத்து விவகாரங்களும் முடிந்துள்ளதாக நீதிபதி பாலகிருஷ்ணா 14-8-2013 அன்றே குறிப்பிட்டிருந்தார். தற்போது வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த 13 ஆண்டுகளாக அரசுத்தரப்பில் ஜெயலலிதா தரப்புக்குச் சொந்தமான இந்த வெள்ளிப் பொருள்களை பாஸ்கரனிடமிருந்து பெற்றுக் கொண்டு வந்து நீதி மன்றத்தில் ஒப்படைப்பது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வழக்கில் மூன்றாவது நபர் (கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர்) சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்று, சென்னையில் இருந்த தங்க, வெள்ளி ஆபரணங்கள் பெங்களூருக்கு கொண்டு வரப்பட்ட நேரத்தில், பாஸ்கரனிடமிருந்து இந்த வெள்ளிப் பொருள்களைக் கொண்டு வர வேண்டுமென்று அரசு வழக்கறிஞர் பவானிசிங் ஏன் மனு தாக்கல் செய்யவில்லை?

அரசு வழக்கறிஞரான, பவானிசிங் கடந்த 2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து பணியாற்றி வருகிறார். அந்தக்

காலகட்டங்களில் இது போன்ற மனு எதையும் அவர் தாக்கல் செய்யவில்லை.

இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டு மூன்று நாட்கள் வாதம் செய்ததாகச் சொல்லும் பவானி சிங்கிற்கு, முதல் குற்றவாளியின் வெள்ளிப் பொருள்கள் சென்னையில் இருப்பது தெரியவில்லையா? வழக்கில் இறுதி வாதத்திற்காக ஆவணங்களைப் படித்தபோதுதான் வெள்ளிப் பொருள்கள் குறித்த விவரம் அவருக்குத் தெரிந்ததாகச் சொல்வது உண்மையாகவும், நம்பும் வகையிலும் இல்லை. மேலும் வெள்ளிப் பொருள்களை வாங்கிச் சென்ற பாஸ்கரன் உயிருடன் இல்லை என்பது தெரிந்தும், அவரிடம் பொருள்களைக் கேட்கச் சொல்வதும், அவர் இறந்து விட்ட தகவல் நீதிமன்றத்தில் மரணச் சான்றிதழுடன் உறுதி செய்யப்பட்ட போதும், அரசு வழக்கறிஞர் அதனை ஏற்காமல், தனது கருத்தில் உறுதியாக இருந்து, தொடர்ந்து மனுவை வலியுறுத்துவதும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல.

இதனைப் பார்க்கும்போது, வழக்கைக் கால தாமதம் செய்யும் நோக்கத்தில் அரசு வழக்கறிஞர் பவானிசிங் நடந்து கொண்டார் என்றே கருதத் தோன்றுகிறது. சொத்துக் குவிப்பு வழக்கில் முதல் குற்றவாளி வீட்டில் இருந்த வெள்ளிப் பொருள்கள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் விலை மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரம் வழக்கு ஆவணங்களில் உள்ளது. வழக்கு விசாரணை முடியும் நிலையில், வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர கால நேரத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லை. அந்த வாதமும் சரியானதல்ல. எனவே வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்ற அரசு வழக்கறிஞரின் மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை. இது தேவையற்ற மனு என்று கருதித் தள்ளுபடி செய்கிறேன்" என்று அரசு வழக்கறிஞர், பவானிசிங் அவர்களின் மனு பற்றி சிறப்பு நீதிபதி அவர்கள் தன்னுடைய உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், இந்த வழக்கில் அரசு வழக்கறிஞர் எவ்வாறெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அனுசரணையாக நடந்து கொண்டு வருகிறார் என்பதைப் புரிந்துகொள்ள வேறு உதாரணம் வேண்டுமா?

இந்த வழக்கறிஞர் பவானிசிங் அவர்கள், இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நீடிக்க வேண்டுமென்றுதான்,

குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்கு தொடுத்ததின் உண்மையான பொருளும் உள் நோக்கமும் இப்போதாவது புரிகிறதா இல்லையா? சொத்துக் குவிப்பு வழக்கினைப் பொறுத்தவரை ஜெயலலிதாவுக்கு இரண்டு வழக்கறிஞர்கள் - ஒருவர் அரசு சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, அரசு தொடுத்த வழக்கினைப் புறக்கணித்து, தான் ஆற்றிட வேண்டிய கடமையிலிருந்து தவறி, குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினருக்கு ஆதரவாக வாதாடும் அரசு வழக்கறிஞர் பவானிசிங்; மற்றொருவர் ஜெயலலிதாவிடம் சம்பளம் பெற்றுக் கொண்டு, அவருக்கு ஆதரவாக வாதாடும் அவருடைய சொந்த வழக்கறிஞர் பி. குமார். நீதிமன்ற வரலாற்றில் இதுவரை கண்டும் கேட்டுமிராத இந்த வெட்கக்கேடான உண்மையைத் தமிழ்நாட்டு நாளேடுகள் மறைக்க முயன்றாலும், மக்களுக்குத் தெரியாமல் போய்விடுமா?

நீதிபதி ஜான் மைக்கேல் டி. குன்கா 7-3-2014 அன்று இறுதி வாதம் தொடங்குமென்று அறிவித்தார். ஆனால் அன்றையதினம் அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவே இல்லை. வழக்கு 10ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 10ஆம் தேதியன்றும் அரசு வழக்கறிஞர் பவானிசிங் ஆஜராகவில்லை. இதை அடுத்து வழக்கு 14-3-2014 அன்று விசாரணைக்கு வந்தது. நீதிபதி இறுதி வாதத்தைத் தொடங்க உத்தரவிட்டார். அன்றைய தினம் பவானி சிங் நீதிமன்றத்தில் ஆஜராகி, உடல் நிலை சரியில்லை என்று காரணம் கூறி, வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த அவர் மேற்கொண்டு வரும் முயற்சியின் தொடர்ச்சியாகப் பத்து நாட்கள் அவகாசம் கேட்டுக்கொண்டதோடு, அதற்கான மருத்துவச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தார். நீதிபதி அந்தச் சான்றிதழ்களைப் பார்த்து அதிருப்தி அடைந்த நிலையில், நீதிமன்றத்தில் ஆஜராகியும் வாதிடாத அரசு வழக்கறிஞர் பவானி சிங் அவரது ஒரு நாள் ஊதியமான 65 ஆயிரம் ரூபாயை அபராதமாக செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டார். 15ஆம் தேதியன்றும் பவானி சிங் நீதிமன்றத்தில் எந்தவித அறிவிப்புமின்றியும், காரணத்தைத் தெரிவிக்காமலும் ஆஜராகவில்லை. அவரது உதவியாளர் முருகேஷ் அரசு வழக்கறிஞர் வராதது பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றார். எனவே அரசு வழக்கறிஞரின் அன்றைய நாள் சம்பளமான 65 ஆயிரம் ரூபாயையும் அபராதமாகச் செலுத்த நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞரின் வாதம் முடிந்த பிறகுதான் தங்கள் வாதத்தைத் தொடங்க முடியுமென்று கூறிவிட்டார்கள். அதற்குப் பிறகு நீதிபதி அவர்கள் அரசு வழக்கறிஞர் 21-3-2014 அன்று வாதத்தைத் தொடங்க வேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவிட்டார்.

இதற்கிடையே அரசு வழக்கறிஞர் பவானிசிங், நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததற்காகச் சிறப்பு நீதிமன்றம் விதித்த அபராதத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவைக் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சத்திய நாராயணராவ் தள்ளுபடி செய்ததால், 21-3-2014 அன்று பவானிசிங் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகி தனது இறுதி வாதத்தைத் தொடங்கி, இந்த வழக்கில் சாட்சியம் அளித்தோர் என்னவெல்லாம் கூறினார்கள் என்பதையெல்லாம் நீதிமன்றத்தில் தொடர்ந்து கூறி வருகிறார். பல கோடி ரூபாய்க்கு ஜெயலலிதா சொத்துக் குவித்தது பற்றி, சாட்சிகள் எல்லாம் என்ன கூறியிருக்கிறார்கள் என்பது தற்போதுதான் உலகத்திற்குத் தெரிய வந்து கொண்டிருக்கிறது.

அந்த சாட்சிகள், தங்கள் சாட்சியங்களில் இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றிய உண்மைகளைக் கூறினார்கள் என்பதை நானும் என்னுடைய தேர்தல் சுற்றுப்பயணங்களில் எடுத்துக்கூறி, அதை ஒருசில நாளேடுகளும் வெளியிடத் தொடங்கியதுதான் தாமதம்! தவறு செய்தவர்களால் தாங்கிக் கொள்ள முடியுமா? இந்த வழக்கு விசாரணையை மேலும் தள்ளிவைக்க வாய்தா வாங்கிட என்னவெல்லாம் செய்யலாம் என்று படாதபாடுபட்டுப் பல்வேறு வழிகளிலும் முனைகிறார்கள்.

அதில் ஒன்றுதான், ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாடுவதற்காக அரசினால் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர், கடமை தவறி நடந்து கொள்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி, கர்நாடக அரசே அவரை விலக்கிய நிலையில், ஜெயலலிதா தரப்பினர் உச்ச நீதிமன்றம் வரை அதே அரசு வழக்கறிஞரான பவானிசிங் அவர்களே நீடிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, உச்ச நீதிமன்ற நீதிபதி சவுஹான் அவர்கள்தான் அப்போதும் பவானிசிங் தொடரலாம் என்று உத்தரவிட்டார். அந்த அரசு வழக்கறிஞர், சிறப்பு நீதிமன்றத்தில், தொடர்ந்து ஆஜராகாத காரணத்தால், சிறப்பு நீதிபதி அபராதம் விதித்தார்.

அதனை எதிர்த்துப் பவானிசிங் கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, அங்கேயும் அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கைத் தற்போது அதே பவானிசிங் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார். அதற்குப் பின்னால் நடந்திருக்கக் கூடிய மர்மங்களையெல்லாம், நீங்கள்தானே யூகித்துக்கொள்ள வேண்டும்.

இந்த வழக்கில், தனக்கு எதிராக வாதாடுவதற்காக அரசால் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட வழக்கறிஞரே நீடிக்க வேண்டுமென்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் விரும்புவதற்குக் காரணம் என்ன?

அந்தக் குறிப்பிட்ட வழக்கறிஞர், உச்ச நீதிமன்றம்வரை சென்று, இந்த வழக்கினை மேலும் மூன்று வாரங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பதின் காரணம் என்ன?

உண்மையிலேயே பவானிசிங்கிற்கு உடல் நலம் சரியில்லை என்றால், அந்தப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டியதுதானே? அல்லது அவருடைய உதவியாளரைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டியதுதானே? உடல் நலம் அவருக்குச் சரியான பிறகு, மீண்டும் அவரே வந்து விசாரணையைத் தொடரலாம் அல்லவா?

உச்சநீதிமன்றம் 2003ஆம் ஆண்டு விரைவிலே முடிக்கப்பட வேண்டுமென்றும், நாள்தோறும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்ட பிறகும், உச்சநீதிமன்ற உத்தரவுக்கே புறம்பாகத் தற்போது உச்சநீதிமன்றமே மூன்று வாரக் காலத்திற்கு வழக்கினை நிறுத்திவைக்க வேண்டிய அவசியம் என்ன?

அந்த மூன்று வார காலம் என்பது தற்போது முக்கியமான கட்டம். அந்த மூன்று வார காலத்திற்குள், நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. அதற்குள் இந்த வழக்கு நடைபெற்று, தீர்ப்பு கூறப்படுமானால், குற்றம் சாற்றப்பட்டவர்களை அது பாதிக்கக் கூடும் என்று நினைத்தோ என்னவோ, இப்படி ஒரு "வழக்கு ஒத்திவைப்பு" நடைபெற்றுள்ளதோ என்று நடுநிலையாளர்கள் சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டுள்ள தல்லவா? அதன் ரகசியம்தான் என்ன?

வழக்கறிஞர் ஒருவருக்கு உடல் நலம் இல்லை என்பதற்காக, வழக்கு விசாரணையே மூன்று வாரகாலத்திற்கு ஒத்தி

வைக்கப்படலாம் என்றால், இனி நாட்டிலே உள்ள அத்தனை வழக்கறிஞர்களும், வாய்தா வாங்குவதற்காக, ஆளுக்கு ஒரு மருத்துவச் சான்றிதழைப் பெற்று, மூன்று வாரம் என்றும், மூன்று மாதம் என்றும், வழக்கினை விசாரிக்கத் தடை கோருவார்களானால் அதன் விளைவு எங்கே போய் முடியும்?

உச்ச நீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பினை வழங்கியவர் பி.எஸ். சவுகான் மற்றும் ஜே. செல்லமேஸ்வர் ஆகியோர் அடங்கிய அமர்வாகும். இதில் பி.எஸ். சவுகான் அவர்கள் இன்னும் சில நாட்களில் ஓய்வு பெறவிருக்கிறார் என்ற உண்மையையும் மறந்து விட முடியாது. இவரேதான் கடந்த சில வாரங்களுக்கு முன்பு இந்த வழக்கில் பவானிசிங் அரசு வழக்கறிஞராக நீடிக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்தவரும் ஆகும். பவானிசிங்கின் முக்கிய கோரிக்கை அபராதத் தொகையைப் பற்றியதுதான்; ஆனால் உச்ச நீதிமன்ற நீதிபதி, மூன்று வாரக் காலத்திற்கு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையையே ரத்து செய்கிறார் என்றால் உச்ச நீதிமன்றம் எந்த அளவிற்குப் பெருந்தன்மையோடு(?) நடந்து கொண்டிருக் கிறது என்பது தெரிகிறதா? அதனால் தான் நான் சேலம் கூட்டத்தில் பேசும்போது, "நீதியே நீ இன்னும் இருக்கின்றாயா? அல்லது நீயும் அந்தக் கொலைக்களத்திலே உயிர் விட்டாயா?" என்று பூம்புகார் திரைப்படத்தில் கொடுமுடி கோகிலம், கே.பி. சுந்தராம்பாள் பாடியதை நினைவூட்டினேன்.

எனவே சொத்துக் குவிப்பு வழக்கு எப்படியெல்லாம், வாய்தாவுக்கு மேல் வாய்தா வாங்கப்பட்டு நீதிமன்ற வரலாறு காணாத வகையில் இழுத்தடிக்கப்பட்டு எத்தனை ஆண்டுக் காலமாக நடைபெறுகிறது? சுமார் 65 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு வழக்கு என்று வழக்கு தொடுத்த போதிலும், அந்தச் சொத்துக்களின் மதிப்பு 5000 கோடி ரூபாய் அளவுக்குத் தற்போது பெருகியிருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், இந்த வழக்கில் நீதியை நெரிக்கவும், வளைக்கவும் எப்படியெல்லாம் காரியங்கள் திட்டமிட்டு நடைபெற்று வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்த வழக்கில் நேர்மைக்கும் நியாயத்திற்கும் ஆதரவாக அரசு சார்பில் வாதாட வேண்டிய அரசாங்க வழக்கறிஞர் எப்படியெல்லாம் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்கிறார் என்பதை அகில

இந்தியாவிலும் உள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வழக்கில் மொத்த சாட்சிகள் 259 பேர்; அதில் 209 சாட்சிகள் கொடுத்துள்ள சாட்சியங்களைப் பவானிசிங் படித்து முடித்து விட்டார். இன்னும் 50 பேர் சாட்சியங்களைத்தான் படிக்க வேண்டும். ஒரு நாள் வேலைதான் மீதம் இருக்கும். இந்த நிலையில்தான் உச்ச நீதிமன்றம் வழக்கினை மூன்று வாரங்களுக்குத் தடை விதித்துள்ளது. பவானி சிங் அவர்களுக்கு சிறப்பு நீதிமன்றம் விதித்த அபராதம் இரண்டு நாள்களுக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். அந்தத் தொகையைச் செலுத்தாமல் இருக்க, பவானிசிங் செலவழித்திருப்பது எவ்வளவு தெரியுமா? உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் ஒரு வழக்கில் ஆஜராகக் குறைந்த பட்சம் பத்து இலட்சம் ரூபாய் வாங்குகிறார்கள். பவானி சிங்குக்காக உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய நாகேந்திர ராய் அவர்கள் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவர் என்பதால் அவருக்கு பத்து இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கும். அதைத் தவிர உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய இரண்டு இலட்சம் ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும். எனவே ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயைப் பாதுகாக்க, யாராவது 12 இலட்சம் ரூபாயைச் செலவழிப்பார்களா? அதிலும் பவானிசிங் அவர்களின் நிதி நிலையைப் பார்த்தால் அவர் அரசு வழக்கறிஞர் என்ற அளவில் 12 இலட்சம் ரூபாயைக் கட்டக்கூடிய அளவிற்கு வசதி படைத்தவராகத் தெரியவில்லை. எனவே அவரைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி, அவருக்காக உச்சநீதிமன்றத்தில் யாரோ பணம் செலவழித்து, மூத்த வழக்கறிஞரை நியமித்து வாதாடியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறதா? இல்லையா?

அவ்வாறு பின்பலமாக இருந்தவர்களுக்கு என்ன இலாபம்? அரசு வழக்கறிஞர் பவானிசிங் நீடித்தால், அவருடைய வாதம் தங்களுக்குப் பயன்படும் என்று நினைப்பவர்கள் யார்? அப்படி நினைப்பவர்களுக்கு, இந்த விசாரணையில் மேலும் ஒரு வாய்தா மூன்று வாரங்களுக்கு கிடைப்பதன் காரணமாக, நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்பாகத் தீர்ப்பு வராமல் செய்யலாம். அப்படித் தீர்ப்பு சொல்லப்பட்டு விடுமானால், தேர்தல் முடிவினைப் பாதிக்குமோ என்று அஞ்சுகிறார்கள் என்றால், அவர்கள் மடியிலே கனம் இருப்பதாகத்தானே பொருள்! வழக்கை

மூன்று வாரங்களுக்கு ஒத்திவைப்பதன் காரணமாக, தேர்தலுக்கு முன்பாகத் தீர்ப்பு வருவதை ஒத்திவைக்க விரும்புகிறார்கள் என்பதுதானே பொருள்! இந்தக் கருத்தினை நான் மட்டும் கூறவில்லை. பொருளாதாரம் மற்றும் சட்ட நிபுணரான டாக்டர் கே. ஸ்ரீதர் கூறும்போது, "பொதுவாகக் குற்றவாளிகள் தரப்பில்தான் வாய்தா கேட்பார்கள், ஆனால் இதில் அரசுத் தரப்பில் வாய்தா கேட்பது என்பது சரியான நடைமுறை அல்ல! பவானிசிங் தனது சொந்த செலவில் உச்ச நீதிமன்றத்தை நாடவில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது" என்று கூறியிருக்கிறார். அதுபோலவே மூத்த வழக்கறிஞர், சுரேஷ் நாயக் கூறும்போது, "இவ்வழக்கில் அரசுத்தரப்பில் வாதம் செய்பவர் (பவானிசிங்) எப்படிச் செயல்படுகிறார் என்பதை சட்ட நிபுணர்கள் பார்த்து வருகிறார்கள். கடந்த 17 ஆண்டுகளாகச் சட்டத் துறைக்குச் சவால் விடும் வகையில் நடந்துவரும் இவ்வழக்கின் போக்கைக் கவனிக்காத சட்ட நிபுணர்கள், அரசியல்வாதிகள் இல்லை. பவானி சிங் அவர்களுக்கு தனி நீதிமன்றம் அபராதம் விதித்து எடுத்துள்ள நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றம்வரை செல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும் குறைந்த அபராதத்தை ரத்து செய்வதற்காகப் பல லட்சம் செலவிடும் நிலையில் அவர் இல்லை. அவரை ஏதோ சில அரசியல் சக்திகள் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது" என்று மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. சுரேஷ் நாயக் கூறியிருக்கிறார்.

எப்படியோ, மூன்று வாரக் காலத்திற்கு வழக்கினை நடத்தக் கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் தடை பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடையைப் பெறக் காரணம், அரசு வழக்கறிஞரின் உடல் நிலையோ, அவருக்கு விதிக்கப்பட்ட அபராதமோ அல்ல என்பது மக்களுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. என்ன காரணம் என்பதும் மக்களுக்குத் தெளிவாகிவிட்டது. இப்படி யெல்லாம் செய்து, வழக்கைத் திசை மாற்ற நினைப்பவர்கள் யார், எதற்காக அவர்கள் அப்படி செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளும் நிலையில்தான் தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் இருக்கிறார்கள். அவர்கள் நன்றாகவே சிந்திப்பார்கள், நன்றாகவே முடிவெடுப்பார்கள்!

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் விரைவில் ஓய்வு பெறப் போகிறார்; சொத்துக் குவிப்பு வழக்கினை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ள சவுஹான் அவர்களும் விரைவில் ஓய்வு பெறப்போகிறார். தலைமை நீதிபதியாக வரப்போகிற நீதியரசர் திரு. லோதா அவர்கள் கடந்த மார்ச் மாதம் 10ஆம் தேதியன்று ஒரு சிறப்பான தீர்ப்பினை வெளியிட்டார். அந்தத் தீர்ப்பில், "பதவியில் இருக்கும் நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு எதிரான வழக்குகளில், அவை தொடரப்பட்ட, ஓர் ஆண்டுக்குள் வழக்கு விசாரணையை நீதிமன்றங்கள் முடித்து விட வேண்டும். நீதிமன்றங்கள் அவ்வாறு ஓர் ஆண்டுக்குள் விசாரணையை முடிக்க முடியாவிட்டால், அதற்கான காரணம் குறித்து அந்தந்த நீதி மன்றங்களுக்குரிய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் விளக்கம் அளிக்க வேண்டும். எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், அந்த வழக்குகள் தினமும் விசாரிக்கப்பட வேண்டும். இதுபோன்ற வழக்குகள் பல ஆண்டுகளுக்கு நிலுவையில் இருப்பதால், கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான பலரும் தொடர்ந்து நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் உறுப்பினர்களாகப் பதவியில் நீடித்து வருகின்றனர்" என்று தீர்ப்பு அளித்ததையும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ்த் தொடுக்கப்பட்ட வழக்குகளின் விசாரணைக்குத் தடை விதிக்கக்கூடாது என்ற அம்சம், அந்த சட்டத்திலே இடம்பெற்றிருப்பதையும், தற்போது அதற்கு எதிர்மறையாக 3 வாரங்களுக்கு உச்சநீதிமன்றமே விசாரணைக்குத் தடை விதித்திருப்பதையும் பார்க்கும்போது, பசும்பொன் தேவர் திருமகன் அடிக்கடி சொல்கின்ற ஒரு சொற்றொடர்தான் ஞாபகத்திற்கு வருகிறது! "மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால் எங்கே போய் மூழ்குவது?

இப்படியெல்லாம் செய்வதால் தீர்ப்புகளைத் தள்ளிப்போகச் செய்யலாமே தவிர; தீர்ப்புகளை மாற்றித் தப்பிக்க நிச்சயமாக முடியாது. நியாயமான, நேர்மையான தீர்ப்பு விரைவில் வந்தே தீரும்! அப்போது உண்மை ஊருக்கும், உலகத்திற்கும் புரியும்!

அன்புள்ள,

மு.க.

10-4-2014

3875. துரோகம் செய்தது யார்? புரிகிறதா இப்போது!

உடன்பிறப்பே,

காவேரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்திற்கு தி.மு.க. தொடர்ந்து துரோகம் இழைத்து வருவதாக ஜெயலலிதா கரூர் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் குற்றஞ்சாட்டியிருக்கிறார். முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்ந்து சொல்லிவருகிற இந்தக் குற்றச்சாட்டிற்கு நான் பலமுறை பதில் கூறி விட்டேன். இருந்தாலும் அவர் பேசுவதற்கு வேறு பொருள் கிடைக்கவில்லை என்றால் உடனே, காவேரியிலோ, கச்சத் தீவிலோ, இலங்கைப் பிரச்சினையிலோ "தி.மு.க. துரோகம் செய்து விட்டதாக"க் கூறத் தொடங்கி விடுவார்.

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு 8-2-2013 அன்று பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா காவேரி நதிநீர் பற்றி விரிவாகப் பேரவையில் பேசியிருந்தார். அப்போதே அதற்கு 12-2-2013 அன்று பதில் எழுதி விட்டேன்.

அப்போது காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையைத் தனது இடைவிடா முயற்சிகளால் பெற்றுக் கொண்டு வந்ததைப் போல ஜெயலலிதா பேரவையிலே கூறினார். **காவேரி நடுவர் மன்றம் என்ற ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முதன் முதலாகத் தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோதுதான் 17-2-1970 அன்றே மத்திய அரசுக்குக் கடிதமே எழுதப்பட்டது. நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்று சட்டமன்றத்தில் தி.மு. கழக ஆட்சியிலேதான் 8-7-1971 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோதுதான், 27.7.1989 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று, நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தக்

கூட்டத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. தவிர அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டனர். **நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்பதில் ஜெயலலிதாவுக்கு எந்த அளவுக்கு ஆர்வம் இருந்தது என்பதை, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அ.தி.மு.க. புறக்கணித்ததிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.**

2-12-1989 அன்று திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நடுவர் மன்றம் அமைக்கக் கோரி கடிதம் எழுதினேன். பேரவையிலே அதைப்பற்றித் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி அனுப்புமாறு வி.பி. சிங் அவர்கள் என்னிடம் தெரிவித்ததின் பேரில், 24-4-1990 அன்று நடுவர் மன்றம் தேவை என்று பேரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் விளைவாகத்தான் 2-6-1990 அன்று நடுவர் மன்றம் அதுவும் தி.மு. கழக ஆட்சியிலே, நான் முதலமைச்சராக இருந்தபோதுதான் அமைந்தது.

28-7-1990இல் கழக ஆட்சியில்தான் இடைக்காலத் தீர்ப்பினைக் கோரி நடுவர் மன்றத்தில் மனு செய்தோம். 5-1-1991 அன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கிடத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் கூறியது. நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்று தீர்ப்பளியுங்கள் என்று உச்சநீதிமன்றத்தில் 10-1-1991 அன்று தி.மு.கழக ஆட்சியிலே வழக்கு தொடர்ந்து, 26-4-1991 அன்று உச்சநீதிமன்றம் "அதிகாரம் உண்டு" என்று தீர்ப்பு வழங்கியது. கழக ஆட்சியில் கோரிப் பெற்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பின் காரணமாகவே 25-6-1991இல் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை அளித்தது. இதற்கிடையில்தான் 31.1.1991 அன்று கழக ஆட்சி கலைக்கப்பட்டு, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளிவந்த போதிலும், எந்தவிதமான விளைவுகளும் ஏற்படவில்லை. 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

1996ஆம் ஆண்டு மீண்டும் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துவதில் தாமதத்தைத் தவிர்க்கும்வண்ணம், திட்டத்தை இறுதி செய்து

அரசிதழில் வெளியிட வேண்டுமென்று 9-7-1997, 23-7-1997, 29-9-1997, 1-11-1997, 6-11-1997 ஆகிய நாட்களில் பிரதமருக்கு நான் எழுதிய கடிதங்கள் மூலமாகவும், 27-7-1997 மற்றும் 29-9-1997 ஆகிய நாட்களில் பிரதமரை நேரில் சந்தித்த போதும் கேட்டுக்கொண்டேன். மேலும் 10-11-1997 அன்று மத்திய அரசுக்கு அப்படியொரு ஆணை பிறப்பிக்க உச்சநீதிமன்றத்தில் முறையீட்டு மனு ஒன்றும் தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. மீண்டும் 28-3-1998, 6-4-1998 மற்றும் 31-5-1998 ஆகிய நாட்களில் பிரதமருக்குக் கடிதம் மூலமாகவும், 7-4-1998 அன்று நேரிலும் சந்தித்து, வரைவுத் திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடக் கேட்டுக் கொண்டேன்.

21-7-1998 அன்று உச்சநீதிமன்றம், "பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்க்கப் போவதாக மத்திய அரசு உறுதியளித்து, 15 மாதமாகிறது. இன்னமும் இணக்கமான திட்டம் உருவாக்கப்பட வில்லை. இந்த நிலை நீடித்துக் கொண்டே போவதை அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்தது.

28-7-1998 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள், 6-8-1998 அன்று பிரதமர் அலுவலகத்தில் காவிரி பிரச்சினை பற்றிப் பேசுவதற்காக ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் என்னைக் கலந்துகொள்ள கடிதம் எழுதியிருந்தார். அதிலே கலந்து கொள்வது பற்றி 3-8-1998 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, பிரதமர் நடத்தவிருந்த கூட்டத்தில் நான் கலந்துகொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா அந்தக் கூட்டத்திற்கு நான் செல்லக் கூடாது என்று அறிக்கை விடுத்தார்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடத்திய அந்தக் கூட்டத்தின் இறுதியில் தான், 7-8-1998இல் தி.மு. கழக ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி இடைக்கால ஆணையில் கூறப்பட்ட 205 டி.எம்.சி. தண்ணீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், பிரதமர் தலைமையில் காவிரி பாயும் நான்கு மாநில முதல்வர்கள் அடங்கிய காவிரி ஆணையம் அமைக்கப்படும் என்றும் முடிவாயிற்று. அந்த ஒப்பந்தத்தை சி. சுப்பிரமணியம், ஜி.கே. மூப்பனார், சங்கரய்யா, ஆர். நல்லகண்ணு, அப்துல் சமது,

எம்.ஏ. லத்தீப், குமரிஅனந்தன், திண்டிவனம் ராமமூர்த்தி, ஆர்.எம். வீரப்பன், ஜி.ஏ. வடிவேலு, இல. கணேசன், எஸ். திருநாவுக்கரசு, பேராயர் எஸ்றா சற்குணம் போன்ற தலைவர்களும் மற்றும் ஏடுகள் இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, விடுதலை, தீக்கதிர், தி டைம்ஸ் ஆப் இந்தியா, தி இந்துஸ்தான் டைம்ஸ் ஆகிய நாளேடுகளும் கல்கி, குமுதம், சாவி, துக்ளக், ஆனந்தவிகடன், குங்குமம் ஆகிய கிழமை இதழ்களும் பாராட்டின. இதுதான் உண்மையில் நடந்த வரலாறு.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்றால், "தி இந்துஸ்தான் டைம்ஸ்" ஏடு, "Karunanidhi Scores Diplomatic Victory" என்ற தலைப்பில், **"காவிரிப் பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தையின் முடிவு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களுக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய அரசியல் வெற்றியாகும். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த கர்நாடகம் ஒத்துக்கொண்டதே மிகப் பெரிய வெற்றியாகும். ஜூன் 1990 முதல், அதாவது நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்திற்கு கர்நாடகம் வழங்கவேண்டுமென்று தீர்ப்பளித்த அந்த நாள் முதல், கர்நாடகத்தில் தொடர்ந்து இருந்து வந்த அரசுகள், இடைக்காலத் தீர்ப்பை ஒத்துக்கொள்ளவில்லை. கர்நாடகத்தை இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளச் செய்து, நடுவர் மன்றம் தமிழகத்திற்கு வழங்கிட வேண்டிய தண்ணீரின் அளவு பற்றிய இறுதித் தீர்ப்பை வெளியிடும்போது 205 டி.எம்.சி. தண்ணீர் என்பது அடிப்படை அளவுகோலாக இருக்கும் என்பதையும் திரு. கருணாநிதி உறுதிசெய்து கொண்டுள்ளார். அ.தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் "கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தையே கூடாது" என்று எடுத்திருந்த அணுகுமுறையைத் திரு. கருணாநிதி வெற்றிகரமாக உடைத்தெறிந்து விட்டார். அதன் மூலம் பிரச்சினைகளை வழக்குகளின் மூலம் அல்லாது, பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்வது சிறந்தது என்பதையும் நிரூபித்துக் காட்டிவிட்டார். பேச்சுவார்த்தைக்குக் கதவடைக்காததன் மூலம், திரு. கருணாநிதி தன்னுடைய மிகப்பெரிய அரசியல் முதிர்ச்சியை வெளிக்காட்டியுள்ளார். ஆணையத்திற்குப் பிரதமரைத் தலைவராக அமைத்துக் கொண்டதன் மூலம், மத்திய அரசில் நடுவர் மன்றத் தீர்ப்பினை கர்நாடகம் அமல்படுத்துவதை உறுதிசெய்து கொள்வதற்**

கான ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொண்டார்" என்று "இந்துஸ்தான் டைம்ஸ்" எழுதியது.

அதுமாத்திரமல்ல; வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களும், ஏடுகளும் பாராட்டிய போது ஜெயலலிதா அதனை வரவேற்றாரா என்றால் இல்லை. மாறாக அந்தத் தீர்வினை நிராகரிக்கிறோம் என்றும், அதனை ஏற்கமாட்டோம் என்றும் கூறினார்.

அந்த முடிவு காண வழி வகுத்தவர், பா.ஜ.க. பிரதமராக இருந்த திரு. வாஜ்பாய். அப்போது அவர் அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்தவர். இருந்தாலும், அந்தக் கூட்டணியிலே இல்லாத தி.மு.க.வின் தலைவனான என்னை அழைத்து சுமூக முடிவு கண்டார். ஆனால் மத்திய அரசில் இடம்பெற்ற அ.தி.மு.க. தலைவி அந்த ஒப்பந்தம் பற்றி பத்திரிகையாளர்களிடம் என்ன கூறினார் தெரியுமா?

"காவிரிப் பிரச்சினையில் வாஜ்பாய், கருணாநிதியின் தந்திரத்திற்கு ஆளாகிவிட்டார். இரண்டு பேரும் சேர்ந்து செய்துகொண்டிருக்கின்ற உடன்பாட்டை நாங்கள் நிராகரிக்கிறோம்" என்றார்.

மக்கள் கடந்த கால நிகழ்வுகளை மறந்திருப்பார்கள் என்று எப்போதும் மனப்பால் குடித்து; தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் ஜெயலலிதா, இத்தனையையும் இப்போது மறைத்து விட்டு, அவருடைய இடைவிடா முயற்சிகளால்தான் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பிலே முடிவு காணப்பட்டதைப் போலவும், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு போன்றவை அமைக்கப்பட்டன என்பதைப் போலவும் தன்னைத் தானே தட்டிக் கொடுத்துப் பாராட்டிக் கொண்டுள்ளார்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தி.மு. கழக ஆட்சியிலேதான் 5-2-2007 அன்று வெளியிடப்பட்டது. இந்தத் தீர்ப்பினைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த எம். கிருஷ்ண சாமி, திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி. வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என். வரதராசன், இந்தியக்

கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் ரெங்கநாதன், உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் கே.எஸ். நடராசன் ஆகியோர் அப்போது வரவேற்று அறிக்கை கொடுத்தனர்.

ஆனால் அ.தி.மு.க.வின் சார்பில் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் இறுதித் தீர்ப்பை "ஏற்க முடியாத தீர்ப்பு" என்றும், "கருணாநிதியால் காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய தீர்ப்பை முழுமையாகப் பெற்றுத்தர முடியவில்லை. இந்த இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்குப் பாதகமாக வந்துள்ளது. இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்றுத் தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்றும் எப்போதும் போல எனது ராஜினாமாவை வலியுறுத்தி அறிக்கை விடுத்தார்.

அந்த ஜெயலலிதாதான், இப்போது நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட அவர்தான் பாடுபட்டதாகச் சொல்லிக்கொள்கிறார். அதற்காகத் தி.மு.க. எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்கிறார்.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்தபோதுகூட, தி.மு.கழக அரசு அந்த நிலையிலும், இந்த இறுதித் தீர்ப்பு குறித்து ஜெயலலிதாவைப் போலத் தன்னிச்சையாக முடிவெடுக்க விரும்பாமல், 19-2-2007 அன்றும் 15-4-2007 அன்றும் அனைத் துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டித் தான் முடிவெடுத்தது. ஆனால் தற்போது ஜனநாயக மரபுகளைப் போற்றக்கூடிய வகையில், அவ்வாறு எந்த அனைத்துக் கட்சிக் கூட்டமும் கூட்டப்படாமல், தமிழக முதலமைச்சர்; தான் நினைத்ததே முடிவு என்பதைப் போலச் செயல்பட்டு வருகிறார்.

எனவே ஜெயலலிதா காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் ஏற்கவில்லை, இறுதித் தீர்ப்பையும் ஏற்கவில்லை என்பதுதான் உண்மை. காவிரி நதி நீர் ஆணையத்தையாவது ஏற்றுக் கொண்டாரா?

காவிரி நதி நீர் ஆணையம் (Cauvery Authority) அமைக்கப்பட்டு, 11-8-1998 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. 2-4-2002 அன்று சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, "செயல் படாத ஆணையம் காவேரி ஆணையம்", "பல் இல்லாத

ஆணையம்", அந்த ஆணையத்தை ஏற்காமல் நாங்கள் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம்" என்று சொன்னார்.

21-6-2002 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் "எவ்வித அதிகாரமும் இல்லாமல், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்த இயலாத நிலையில் காவிரி நதி நீர் ஆணையம் உள்ளது. எனவே இந்த ஆணையத்தின் கூட்டங்களில் இனிமேல் தமிழ்நாடு கலந்துகொள்ளாது" என்று விளைவுகளைப் பற்றி விரிவாக எண்ணிப் பார்க்காமல் கொண்டதே கோலம் என்ற பாணியில் முடிவெடுத்து அறிவித்தார்.

அ.தி.மு.க. அரசின் இந்த அமைச்சரவை முடிவினைப் பற்றி என்னிடம் கருத்துக் கேட்டபோது, "ஆணையத்தைப் புறக்கணிக்க ஜெயலலிதா அரசு எடுத்த முடிவு, விவேகமானதல்ல. குறுவை நெல் பயிரிடுவதற்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு மத்திய அரசின் தலையீட்டையும் உதவியையும் பெற அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும். தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவுகளை எல்லாம் மாற்றும் போக்கு தான் அ.தி.மு.க. அரசில் மேலோங்கி நிற்கிறது. காவிரிப் பாசனப் பகுதிக்கு, உரிய நேரத்தில் நீர் கிடைக்க முயற்சி மேற்கொண்டது தி.மு.க. ஆட்சிக் காலம். ஆணையக் கூட்டத்துக்குச் செல்லமாட்டேன் என்பது அ.தி.மு.க. ஆட்சிக் காலம்" என்று நான் கூறினேன்.

காவிரி ஆணையத்தைப் புறக்கணிப்புச் செய்தார் ஜெயலலிதா. 2-7-2002 அன்று காவிரி டெல்டா விவசாயிகள், ஜெயலலிதாவின் புறக்கணிப்புக்காகக் கண்டனம் தெரிவித்து 17-7-2002 அன்று உண்ணா நோன்பு என அறிவித்திருந்தனர். அதற்கு முன்பே 10-7-2002 அன்று கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, "காவிரியில் தண்ணீர் திறந்துவிட என்னிடம் ஜெயலலிதா கூறவில்லை. பிரதமர் வாஜ்பாய்தான் 3 டி.எம்.சி. நீர் திறந்துவிடச் சொன்னார்" என்று தெரிவித்தார்.

காவேரி ஆணையத்தைப் புறக்கணிப்போம் என்று 2002ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தெரிவித்தவர்தான் ஜெயலலிதா. அதற்கடுத்த நாள் "அழைத்தால் பார்க்கலாம்" என்றார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் ஆட்சியிலே

இல்லாத நேரத்திலேகூட, 5-7-2002 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு காவிரி நதி நீர் ஆணையத்தை உடனே கூட்ட வேண்டுமென்று கோரிக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், "தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்ற உத்தரவைக் கண்காணிப்ப தற்காகவே தங்களது (பிரதமரது) தலைமையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல்அமைச்சர்களை உறுப்பினர்களாகக்கொண்டு காவிரி நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டது. ஆனால், நடுவர் மன்ற ஆணையின்படி தண்ணீர் திறந்து விடப்படாததால், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் மிகுந்த துயருக்குள்ளாகியுள்ளனர். காவிரிப் பாசன விவசாயிகளின் இந்தத் துயரத்தை உணர்ந்து, பிரச்சினை ஓரளவேனும் குறைக்கப்பட தமிழகத்திற்கு 3 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விடும்படிக் கர்நாடக முதலமைச்சரைத் தாங்கள் கேட்டுக் கொண்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தாங்கள் விடுத்த அந்தக் கோரிக்கையைக் கர்நாடக அரசு ஏற்க மறுத்துள்ளது. எனவே, காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்தை விரைவில் கூட்டி நடுவர் மன்ற உத்தரவை உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகிறேன்" என்று எழுதியிருந்தேன்.

5-7-2002 அன்று பிரதமருக்குக் காவேரி ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென்று நான் எழுதிய கடிதத்திற்கு, 10-7-2002 அன்று பிரதமர் எழுதிய பதில் கடிதத்தில், அதைப் பற்றிக் கவனிப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறே காவிரி நதி நீர் ஆணையம் கூட்டப்பட்டது.

டெல்லியில் பிரதமர் கலந்துகொண்ட காவேரி ஆணையக் கூட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா கலந்துகொண்டபோதே 27-8-2002 அன்று அங்கே சுமூகமாகப் பேசித் தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகை காணாமல், அவருக்கே உள்ள முன் கோபம் காரணமாகப் பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தை மறந்து, இடையிலே வெளிநடப்புச் செய்வதாகக் கூறிவிட்டு, வெளியே வந்துவிட்டார். 29-11-2002 அன்று மீண்டும் காவேரி ஆணையக் கூட்டம். கர்நாடக முதல் அமைச்சர் முதல் நாளே சென்று விட்டார். ஆனால் நம்முடைய முதல்அமைச்சர் ஜெயலலிதா கடைசி நிமிடம்வரை வருவதாகச் சொல்லிவிட்டு,

பிறகு டெல்லி பயணத்தையே ரத்து செய்துவிட்டார். யாருக்கு இழப்பு? தமிழ்நாட்டு விவசாயிகளுக்குத்தான்!

இதற்கிடையில் **"பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையம் மீது நம்பிக்கை இல்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்குக் கடிதம் எழுதியது, கடுமையான ஆட்சேபத்துக்குரியது; அந்த அவதூறுக் கடிதத்தை நான்கு நாட்களுக்குள் திரும்பப் பெற வேண்டும்"** என்று தமிழக அரசு வழக்கறிஞரிடம், உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் வழக்கறிஞரான திரு. கே.கே. வேணுகோபால், நீதிபதிகளிடம், "பிரதமர் மீதும், அவரது தலைமையில் செயல்படும் காவிரி நதிநீர் ஆணையத்தின் மீதும் தமிழகம் முழு நம்பிக்கை வைத்துள்ளது. காவிரி நதி நீர் ஆணையத்தின் மீது நம்பிக்கை தெரிவித்தும், பிரதமர் வாஜ்பாய்க்கு இது தொடர்பாக எழுதிய கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்காகவும் மீண்டும் ஒரு கடிதத்தை வெகு விரைவில் பிரதமர் வாஜ்பாய்க்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுதி **அனுப்புவார்"** என்றும் தெரிவித்தார்.

அதற்கிணங்க, 16-11-2002 அன்று பிரதமருக்குத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், "பிரதமர் மீது தனிப்பட்ட முறையில் தான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும், ஏற்கனவே தான் சொன்ன அத்தனையையும் மறந்துவிட்டு காவேரி ஆணையத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதாகவும்" எழுதியிருந்தார்.

வரலாற்று ரீதியிலான இத்தனை உண்மை நிகழ்வுகளையும் யார் நினைவிலே வைத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் என்ற நம்பிக்கையால்தான் முதலமைச்சர் ஜெயலலிதா காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், துரும்பைக் கூடக் கிள்ளிப்போடவில்லை என்றும் தொடர்ந்து பேசி வருகிறார்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் ஜெயலலிதா ஒவ்வொரு கட்டத்திலும் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன்களைப் புறக்கணித்து எவ்வாறெல்லாம் நடந்துகொண்டார் என்பதைத் தொகுத்துக் கூற வேண்டுமேயானால்,

நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கிய போதும், கர்நாடக அரசாகத் தண்ணீர் திறந்து விட்டால்தான் உண்டு என்று சொன்னவர்தான் ஜெயலலிதா.

இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்துவது பற்றி மத்திய அரசு விளக்கம் கேட்டு, ஒன்பது மாத கால தாமதத்திற்குப் பிறகு, பதில் அனுப்பியவர் தான் ஜெயலலிதா.

இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்த 1991 முதல் 1996 வரை ஐந்தாண்டு காலம் ஆட்சியிலே இருந்த ஜெயலலிதா எந்த முயற்சியும் எடுக்கவில்லை பிரதமர் வி.பி. சிங் இடம், அ.தி.மு.க. சார்பில் கொடுத்த மனுவில் 1974ஆம் ஆண்டோடு காவிரி ஒப்பந்தம் முடிந்துவிட்டது என்று எழுதிக் கொடுத்தவர்தான் ஜெயலலிதா.

29-11-2002 அன்று காவிரி ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல், ரத்து செய்தவர் ஜெயலலிதா. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இப்போது புரிகிறதா? காவேரிப் பிரச்சினையில் துரோகம் செய்தது யார் என்று?

அன்புள்ள,
மு.க.
17-4-2014

3876. நீதியே! நீ இன்னும் இருக்கின்றாயா?

உடன்பிறப்பே,

உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதாவின் வருமான வரித் துறை வழக்கை விசாரிக்க நான்கு மாத கால அவகாசம் வேண்டுமென்று கோரித் தாக்கல் செய்த மனு ஒரு வாரத்திற்குள்ளாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஒரு சில வழக்குகள் ஆண்டுக்கணக்கில் கால தாமதமாகிக் கொண்டிருக்கின்றன. நீதிமன்றங்களில் இப்படிப்பட்ட முரண்பாடுகள் ஏன்?

அதைத்தான் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய "நீதி தேவன் மயக்கம்" என்ற நாடகத்தை எடுத்துக்காட்டி விரிவாகப் பேசியிருந்தேன். உதாரணமாக, பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் சொத்துக்குவிப்பு வழக்கு எத்தனை ஆண்டுகளாக நடைபெறுகிறது? எத்தனை வாய்தாக்கள் பெறப்பட்டிருக்கின்றன? வருமான வரித்துறை சார்பில் தாக்கல் செய்த வழக்கு எத்தனை ஆண்டுகளாக விசாரணையில் உள்ளது?

வருமான வரித் துறை சம்பந்தமாக நான்கு வழக்குகள் சசி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின்மீது தொடுக்கப்பட்டுள்ளன. சசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் என். சசிகலா மற்றும் டி.வி. தினகரன் ஆகிய இருவரையும் பங்குதாரர்களாகக் கொண்டு 6-2-1989 அன்று பதிவு செய்யப்பட்டது. பின்னர் 4-5-1990 அன்று அந்த நிறுவனம் ஜெ. ஜெயலலிதா மற்றும் என். சசிகலா ஆகிய இருவரையும் பங்குதாரர்களாகக் கொண்டு மாற்றி அமைக்கப்பட்டது. அந்த சசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் என்ன செய்து கொண்டிருந்தது தெரியுமா?

அனைத்து வகைக் கார்கள் சம்பந்தமான வணிகத்தையும், வாகனங்கள் மற்றும் பொருள்கள் சம்பந்தமான வணிகத்தையும் மேற்கொள்வதற்காக என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. பாவம்; நம்முடைய முதலமைச்சர் ஜெயலலிதா எப்படியெல்லாம்

சிரமப்பட்டு, கார் விற்பனை போன்ற வணிகத்தை நடத்தி, அந்த நிறுவனத்திற்கு வருவாயைத் தேடியிருக்கிறார்! ஆனால் அந்த நிறுவனத்தின் சார்பில் திரட்டப்பட்ட வருவாய்க்கு, வேண்டுமென்றே திட்டமிட்டு வருவாய் வரிக் கணக்குத் தாக்கல் செய்யவில்லை (Willful and deliberate failure to file returns) என்பதற்காகத்தான் இந்த வழக்கு.

இரண்டு வழக்குகள் 1991-92 மற்றும் 1992-93 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான வருமான வரிக் கணக்கு சம்பந்தமானவை. மேலும் இரண்டு வழக்குகள் 1993-94ஆம் ஆண்டுக்கான வருமான வரிக் கணக்கு சம்பந்தப்பட்டவை. இந்த வழக்குகளுக்கு அடிப்படையான புகார் அறிக்கைகள் சென்னை வருமான வரித் துறை ஆணையரின் அனுமதி பெற்று 21-8-1997 அன்று சென்னை கூடுதல் முதன்மை மாநகர மாஜிஸ்திரேட்டிடம் தாக்கல் செய்யப்பட்டன. ஜெயலலிதாவும், சசிகலாவும் தங்களை இந்த வழக்குகளிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரி மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு, அதனை நடத்தாமல் காலம் கடத்தியதைத் தொடர்ந்து, வருமான வரித் துறை, உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தை அணுகியது. 4-9-2006 அன்று உச்சநீதிமன்றம்; நான்கு வாரக் காலத்திற்குள் விசாரணை நீதிமன்றத்தில் ஜெயலலிதாவும் சசிகலாவும் தங்களை விடுவிக்க வேண்டுமென்று தொடுத்த வழக்கை முடிவு செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டது. அவ்வாறே முதன்மை மாநகர மாஜிஸ்திரேட் அவர்கள் விசாரித்து ஜெயலலிதாவின் மனுவினைத் தள்ளுபடி செய்தார். அதாவது 1997ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு தங்களை அந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மனுத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இடையில் அந்த ஒன்பதாண்டு காலம் என்ன நடந்தது? ஒன்றும் நடக்கவில்லை. அவ்வளவுதான்!

எழும்பூர் மாஜிஸ்திரேட், ஜெயலலிதா தரப்பினரின் விடுவிப்பு மனுவினைத் தள்ளுபடி செய்ததால், சென்னை உயர்நீதிமன்றத்தில் அதனை எதிர்த்து ஜெயலலிதா தரப்பினர் மேல் முறையீடு செய்துகொண்டனர். அந்த மேல் முறையீட்டு மனுவும் 2-12-2006 அன்று உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

உயர்நீதிமன்றத்தின் இந்த ஆணையை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பினர் மேல் முறையீடு செய்து கொண்டார்கள். அந்த மேல் முறையீட்டினை விசாரித்த உச்சநீதிமன்றம், "சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவில் குறுக்கிடுவதற்கு எந்தவிதமான அடிப்படையான காரணமும் இல்லை; மேல் முறையீட்டினை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு அந்த வழக்கில் எந்த விதமான நியாயமும் இல்லை" என்று தெரிவித்ததோடு, விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கினை நான்கு மாத காலத்திற்குள் விசாரணை செய்து முடிக்குமாறு 30-1-2014 அன்று தீர்ப்பளித்தது.

உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது 2-12-2006. அதை எதிர்த்து ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்து கொண்டு, அந்த மனு எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. வழக்கு தாக்கல் செய்யப்பட்டது 1997 ஆம் ஆண்டு. மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அது 2006 ஆம் ஆண்டு அதாவது 9 ஆண்டுகளுக்குப் பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உச்சநீதி மன்றம் 2006 ஆம் ஆண்டு செய்துகொண்ட அப்பீலை, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 30-1-2014 இல் தள்ளுபடி செய்ததோடு, நான்கே மாதங்களில் விசாரணையை நடத்தி முடிக்குமாறு ஆணை பிறப்பித்திருக்கிறது.

உச்சநீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பில், "குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு குற்றம்சாட்டிய வருமான வரித் துறையின் மீதா அல்லது குற்றம்சாட்டப்பட்ட ஜெயலலிதா மற்றும் சசிகலா மீதா என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். இந்த வழக்கைப் பொறுத்தவரையில், குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு, உள்நோக்கம் இருந்திருப்பதை யூகிக்க முடிகிறது என்பதால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தான் தாங்கள் எவ்வித அய்யப்பாட்டிற்கும் இடமின்றி நிரபராதிகள் என்பதை நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் எத்தகைய சூழலில் தாங்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யவில்லை என்பதை விசாரணை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்" (The question is on whom the burden lies, either on the prosecution or the assessee, under Section 278E to prove whether the assessee has or has not committed willful default in filing the returns. Court in a prosecution of offence, like Section 276CC

has to presume the existence of mens rea and it is for the accused to prove the contrary and that too beyond reasonable doubt. Resultantly, the appellants have to prove the circumstances which prevented them from filing the returns as per Section 139(1) of in response to notices under Sections 142 and 148 of the Act) என்று குறிப்பிட்டிருப்பதில் இருந்து, இந்த வழக்கில் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்க வேண்டிய கடப்பாடு ஜெயலலிதாவுக்கும், சசிகலாவுக்குந்தான் உள்ளது என்பதை மனதிலே கொள்ளவேண்டும்.

உச்சநீதிமன்றம் இப்படியெல்லாம் எழுதி, நான்கே மாதங்களில் இந்த வழக்கினை விசாரித்து முடிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்த அந்த வழக்கில்தான்; தற்போது அதே உச்சநீதிமன்றம் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா பிரச்சாரம் செய்ய வேண்டியிருப்பதால் மேலும் 3 மாதங்களுக்கு விசாரணையைத் தள்ளி வைத்ததுடன், விசாரணை நீதிமன்றம் குறிப்பிடும் நாளில் ஜெயலலிதாவும், சசிகலாவும் தவறாமல் ஆஜராக வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரப் பணிகள் இன்னும் நான்கு நாட்களுக்குத்தான் இருக்கின்றன. ஆனால் உச்ச நீதிமன்றம் மூன்று மாத காலம் அவகாசம் கொடுத்துள்ளது. இதைப் பற்றி யார் கேள்வி கேட்க முடியும்?

இதோ மேலும் ஒரு நிகழ்வு. ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் 1993-94 ஆம் ஆண்டுக்கான தங்களது வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யாதது பற்றிய வழக்கு உச்சநீதிமன்றத்தில் 24.2.2006 அன்று நீதிபதிகள் பி.என். அகர்வால், ஏ.கே. மாத்தூர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. ஜெயலலிதாவின் வக்கீல் ஆறு வாரம் அவகாசம் வேண்டுமென்றார்.

அப்போது நீதிபதிகள் கூறியது என்ன தெரியுமா?

“நீதி பரிபாலன முறையையே நீங்கள் கேலிக் கூத்தாக்கி வருகிறீர்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த நீதிமன்ற நடவடிக்கைகளை இழுத்துச்செல்ல முடியும்? குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313வது பிரிவின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராகி கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி மற்றவர்களுக் கெல்லாம் முன்மாதிரியாக நீங்கள் இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் என்ன பதில் மனுவை உங்களால் தாக்கல்

செய்ய முடியும்? (ஜெயலலிதாவின் வழக்கறிஞரைப் பார்த்து) உங்கள் கட்சிக்காரர் நீதிமன்றத்தில் ஆஜராகி கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டு மென்று நாங்கள் இன்றைக்கே ஆணை பிறப்பிக்க விரும்புகிறோம்."

Hindu dated 25-2-2006 Court pulls up Jayalalithaa

"You (Jayalalithaa) are making a mockery of the Judicial Process. How long you can drag the proceedings? You must set an example to others by presenting yourself in the court for questioning under section 313 cr. P.C. What counter affidavit you can file in this matter. We want to pass an order today itself directing your client to be present in the Court ."

இதோ மற்றொரு வழக்கு! கடந்த 1995ஆம் ஆண்டு ஜெ.ஜெ. டி.வி.க்கு டிரான்ஸ்பாண்டர் என்ற கருவியை வாங்குவதில் முறைகேடு நடந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டது. ஜெ.ஜெ. டி.வி. நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட சூப்பர் டூப்பர் நிறுவனம் மீதான வழக்கு உட்பட 5 வழக்குகளை அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் தாக்கல் செய்தார்கள். இந்த வழக்கில் சசிகலா, பாஸ்கரன் ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அரசுத் தரப்பு சாட்சி விசாரணை பல ஆண்டுகளுக்கு முன்பே முடிவடைந்து விட்டது. அதைத் தொடர்ந்து குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 313ஆம் பிரிவின்படி, சாட்சியங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கேள்விகளைக் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் மாஜிஸ்திரேட் கேட்க வேண்டும். அதற்கு அவர்கள் அளிக்கும் பதிலை மாஜிஸ்திரேட் பதிவு செய்யவேண்டும். இதற்காக வழக்கை மாஜிஸ்திரேட் ஏப்ரல் 28ஆம் தேதிக்குத் தள்ளிவைத்துள்ளார். அன்று சசிகலா, பாஸ்கரன் ஆகியோர் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார். அதே நாளில்தான் முதலமைச்சர் ஜெயலலிதா மீதான வருமான வரி வழக்கும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அன்றைக்காவது வருவார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

இந்த நிகழ்வுகளையெல்லாம் மனதிலே கொண்டுதான் காஞ்சிபுரத்தில் 17-4-2014 அன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், "நாங்கள் வந்தால்தான் நீங்கள் வழக்கை நடத்தவேண்டும்; வராவிட்டால் ஒத்திவைக்க வேண்டும்; இல்லாவிட்டால் வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று

சொல்கிற அளவுக்கு, நடப்பது ஜெயலலிதா ராஜ்யமா? அல்லது நீதியின் ராஜ்யமா?" என்ற முக்கியமான வினாவினை எழுப்பியிருந்தேன்.

எப்படிப்பட்டவர் நம்முடைய முதலமைச்சராக வாய்த் திருக்கிறார் என்று ஒருக்கணம் எண்ணிப் பாருங்கள்!

கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கில் 2000ஆம் ஆண்டில் சிறப்பு நீதிமன்றத்தில் ஓராண்டு கடுங்காவல் தண்டனை பெற்றவர்!

ஆந்திர மாநிலத்தில் தனக்குச் சொந்தமான திராட்சைத் தோட்டத்திலிருந்து 1987 முதல் 1993 வரை திராட்சை விவசாயம் செய்யாமலேயே, 60 இலட்சம் ரூபாய் வருமானம் வந்ததாக உண்மைக்கு மாறான தகவலைத் தந்தவர்!

(இதிலே ஒரு சில வழக்குகளில் ஜெயலலிதா மேல் முறையீடு செய்துகொண்டு அங்கே தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டிருக்கிறார் என்ற போதிலும், விசாரணை நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற நிகழ்ச்சிகளை மட்டுமே இங்கே தொகுத்துள்ளேன்.)

1991-92 மற்றும் 1992-93 ஆண்டுகளுக்கான வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யாமல், வாய்தாவுக்கு மேல் வாய்தா ஆண்டுக்கணக்கில் வாங்கி வருபவர்!

கோப்பிலே கையெழுத்துப் போட்டுவிட்டு, பிறகு அந்தக் கையெழுத்து தன்னுடையது இல்லை என்று நீதிமன்றத்திலேயே சொன்னவர்!

2001ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் நான்கு தொகுதிகளில் வேட்பு மனுத் தாக்கல் செய்யக் கூடாது என்று தெரிந்துகொண்டே, மக்களின் அனுதாபத்தைச் சம்பாதிப்பதற்காகப் போட்டியிட்டவர்!

தண்டனை பெற்ற காரணத்தால், தேர்தலில் போட்டியிடக் கூடாது என்பது தெரிந்தே, தேர்தலில் போட்டியிட்டவர்!

தண்டனை பெற்ற ஒருவர் முதலமைச்சராகப் பதவியேற்கக் கூடாது என்பதை மீறி, முதலமைச்சராக ஒருசில மாதங்கள்

அதிகாரம் செலுத்தி, பின்னர் உச்சநீதிமன்றத் தீர்ப்பால் பதவி பறிக்கப்பட்டவர்!

முதலமைச்சராகத் தனது பிறந்த நாளைக் கொண்டாடிய போது, பரிசாகப் பெற்ற 2 கோடியே 15 இலட்சம் ரூபாயை தனது சொந்தக் கணக்கில் வரவு வைத்துக் கொண்டவர்!

அரசுக்குச் சொந்தமான "டான்சி" நிலத்தைக் குறைந்த விலையில் வாங்கிக்கொண்ட வழக்கில், தனி நீதிமன்றத்தில் மூன்றாண்டு கடுங்காவல் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டவர்!

டான்சிக்குச் சொந்தமான மற்றொரு இடத்தைச் சசி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வாங்கியதற்காகத் தொடுக்கப்பட்ட வழக்கில் இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையும் ஐந்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டவர்!

டான்சி வழக்கில் 25-11-2003 அன்று உச்சநீதி மன்றம் அளித்த தீர்ப்பில், "பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் குறைந்தபட்ச நடத்தை மற்றும் ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதைக் குற்றவியல் சட்டம் வலியுறுத்துகிறது. இத்தகைய நிலையில் உயர் பதவியில் இருப்பவர்கள் அந்தச் சட்டத்தில் ஒளிந்துகொள்ளாமல் உயர்ந்தபட்ச நாணயத்துடன் நடந்து கொள்ள வேண்டும். பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் நடத்தை நெறிமுறைகளை மதித்து நடக்க வேண்டுமே தவிர, குற்ற வழக்குகளில் உள்ள நெளிவு சுளிவுகளில் ஒளிந்து தப்பித்துக் கொள்ளக் கூடாது. உயர் பதவியில் இருப்பவர்கள் அரசின் சொத்தைப் பயன்படுத்தி தங்கள் செல்வங்களை அதிகரிப்பது அல்லது அரசுக்கு உரியதைத் தங்களுக்குரியதாக மாற்றிக் கொள்வது என்கிற போக்கு அதிகரித்து வருகிறது. அத்தகைய போக்கை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம்" என்ற சான்றிதழை உச்சநீதி மன்றத்திடமிருந்து பெற்றவர்தான் நம்முடைய முதலமைச்சர்!

ஏன்; மாதம் ஒரு ரூபாய் மட்டுமே ஊதியமாகப் பெற்று ஆட்சி நடத்துவதாகக் கூறிக் கொண்டு, ஐந்தாண்டு காலத்தில் தற்போதைய மதிப்புப்படி ஐந்தாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைக் குவித்து, பெங்களூர் நீதிமன்றத்தில் ஆண்டுக் கணக்கிலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே;

வாய்தாவுக்கு மேல் வாய்தா வாங்கி வழக்கினை ஒத்திப்போட்டுக் கொண்டு வருகிறாரே, அந்தச் சிறப்புக்குரியவர்தான் நம்முடைய முதலமைச்சர்!

அவர்தான் நாற்பது இடங்களிலும் அ.தி.மு.க. வேட்பாளர்களை நிறுத்தி, வேறு எந்தத் தோழமைக் கட்சிகளுக்கும் ஒரு இடம் கூடக் கொடுக்காமல், அத்தனைத் தொகுதிகளிலும் போட்டியிட்டு, "கெலிகாப்டரில்" பறந்து சென்று, சிரமம் இல்லாமல் வாக்குகளைக் கேட்டு வருகிறார்.

நானோ இந்த 90 வயதில், அதிலும் நான் பயணம் செய்ய வசதியற்ற ஒரு வேனில், தூக்கித் தூக்கிப் போடுகின்ற நிலையில் சாலை வழியாக, பல நூறு கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து வந்து மக்களைச் சந்திக்கிறேன். வேன் ஒவ்வொரு பள்ளத்திலும் விழும்போது, நான் முதுகிலே செய்து கொண்ட அறுவை சிகிச்சை காரணமாக வலியினால் அவஸ்தைப்படுகிறேன். மக்கள் வெள்ளத்தில் நான் செல்கின்ற வேன் உள்ளே செல்ல முடியாமல் தவிக்கிறது. ஒவ்வொரு கூட்டத்தில், மக்கள் தருகின்ற உற்சாகத்தில் ஒரு மணி நேரம் பேசிவிட்டு, தங்குமிடத்திற்குச் சென்றால் உடம்பு முழுவதும் வலி! இரவு முழுவதும் தூக்கமில்லை. என்னுடன் பயணம் செய்த இரண்டு மருத்துவர்களிடம் கேட்டால், எந்த அளவிற்கு நான் சிரமப்படுகிறேன் என்பதைக் கூறுவார்கள். ஒரு நாள் ஓய்வு எடுக்கலாம், ஒரு கூட்டத்தையாவது ரத்து செய்யக்கூடாதா என்றால், உடனே நூறு பேர் வந்து விடுகிறார்கள்.

என்னால் முடிந்தவரை உழைக்கிறேன்; உழைக்கிறேன்! முடிவினை நல்ல விதமாக நீ எடுப்பாய் என்பதை நானறிவேன். எனினும் தமிழக வாக்காளர்களை அணுகி, அவர்களையும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கச் செய்திடப் பாடுபடுவாய் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

20-4-2017

3877. எச்சரிக்கை தேவை; வெற்றி நமதே!

உடன்பிறப்பே,

நாளை தமிழகத்திலே நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. கடந்த இரண்டு மூன்று மாதங்களாக ஒவ்வொரு நாளும் நீர் பாய்ச்சி, இமையசைக்காமல் காப்பாற்றி, களைகளை நீக்கி, உரமிட்டு பயிர் வளர்த்து, நீ உழைத்த உழைப்புக்கான அறுவடையைக் காணக்கூடிய நாள்! நேற்று மாலையோடு ஒலிபெருக்கி வாயிலாகப் பிரச்சாரம் செய்வது முடிந்துவிட்டது. நமது கழகத்தின் சார்பில் நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும் வயதையும் உடல் நலிவையும் பொருட்படுத்தாமல் எங்களால் முடிந்த அளவுக்குக் காரிலும், வேனிலும் பயணம் செய்து பிரச்சாரம் செய்திருக்கிறோம். இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் 90 வயதைக் கடந்தும் ஈடுபட்ட அரசியல் தலைவர்கள் இந்தியாவிலேயே நானும், பேராசிரியரும், கேரளத்தில் அச்சுதானந்தமும்தான் என்று பத்திரிகைகளே சுட்டிக்காட்டியிருந்தன.

கழகப் பொருளாளர் தம்பி ஸ்டாலின் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. தமிழகம் முழுவதிலும் ஒரு தொகுதி பாக்கியில்லாமல், வேனிலேயே பயணம் செய்து பிரச்சாரம் செய்திருக்கிறார். இந்தத் தேர்தலில் அவருடைய பிரச்சாரம் பற்றிப் பாராட்டி எழுதாத ஏடுகளே இல்லை. கழக ஆட்சியின் போது தமிழக மக்களுக்காக ஆற்றிய பணிகள், சாதனைகள் பற்றியும்; அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாக அலங்கோலங்கள், அவலங்கள் பற்றியும், ஒவ்வொரு கூட்டத்திலும் திரண்டு வந்த மக்களிடையே எளிதில் புரியும் வண்ணம் கழகப் பொருளாளர் தம்பி ஸ்டாலின் விளக்கிச் சொன்னதை நீயே நேரிலும் கண்டிருக்கிறாய்; கேட்டிருக்கிறாய். முதலமைச்சர் ஜெயலலிதாவின் கேள்விகளுக்கெல்லாம் அவ்வப்போது ஆணித்தரமாகவும், ஆதாரங்களுடனும் பதிலளித்திருக்கிறார்.

அடுத்து கழகத்தின் முன்னணித் தலைவர்கள், கலையுலகத்தினர், கழகச் சொற்பொழிவாளர்கள், பல்வேறு அணிகளைச் சேர்ந்தவர்கள், துணைப் பொதுச் செயலாளர்களான சகோதரி சற்குணப் பாண்டியன், வி.பி. துரைசாமி மற்றும் கவிஞர் கனிமொழி, ரகுமான்கான், திருச்சி சிவா, பேராயர் எஸ்றா சற்குணம், வாகை சந்திரசேகர், குஷ்பூ சுந்தர், கம்பம் செல்வேந்திரன், பேராசிரியர் சபாபதி மோகன், நூர்ஜகான் பேகம், சங்கரி நாராயணன், புலவர் இந்திர குமாரி, புதுக்கோட்டை விஜயா, தஞ்சை கூத்தரசன், வி.பி. ராஜன், நெல்லிக்குப்பம் புகழேந்தி, திண்டுக்கல் லியோனி, குமரிமுத்து, வாசு விக்ரம், இனிகோ இருதயராஜ், மனுஷ்யபுத்திரன் மற்றும் தோழமைக் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் எல்லாம் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். முக்கியமாகத் திராவிடர் கழகத்தின் தலைவர், தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் ஒருநாள் கூடப் பாக்கியில்லாமல், தேர்தல் பயணத்தில் ஈடுபட்டு, கழகக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை அறிவியல்பூர்வமாக விளக்கிப் பேசியிருக்கிறார். துணைப் பொதுச் செயலாளர் துரைமுருகன் என்னுடன் சுற்றுப்பயணத்தில் உடன் வந்தார். அவர்களுக்கெல்லாம் கழகத்தின் தலைவர் என்ற முறையில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமக்கு எதிரானப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர், முதலமைச்சர் ஜெயலலிதாதான்! அலுங்காமல், குலுங்காமல், கெலிகாப்டரிலேயே அத்தனை ஊர்களுக்கும் பயணம் செய்து, அழைத்து வரப்பட்டவர்கள் பசியோடும், தாகத்தோடும் வெயிலின் கொடுமையில் இயற்கை உபாதைகளுக்குக்கூட வெளியே செல்ல முடியாமல் அடைத்து வைக்கப்பட்ட நிலையில், அவர்களிடையே எழுதிக் கொடுக்கப் பட்ட உரையை வரி விடாமல் படித்து, இடையிடையே "செய்வீர்களா, நீங்கள் செய்வீர்களா" என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டு, ஒவ்வொரு கூட்டத்திலும் தன்னால் முடிந்த அளவுக்குப் பொய்களை வாரி இறைத்திருக்கிறார்.

நேற்றையதினம் சென்னையில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களுக்குத் தான் மூடு விழா நடத்தவில்லை என்றும், மக்கள் நலத் திட்டமாக இருந்தால் அதனை நிறைவேற்ற அ.தி.மு.க.

அரசு தயங்காது என்றும் ஒரு மிகப் பெரிய பொய்யை இறக்குமதி செய்திருக்கிறார். அதுபற்றி நேற்றைய தினம் நடைபெற்ற அண்ணா நகர் கூட்டத்தில் நான் விரிவாகவே பதிலளித்திருக்கிறேன். ஜெயலலிதா கூறிய அந்தப் பொய்த் தொகுப்பின் முதல் கருத்தாக, "மதுரவாயல் - சென்னை துறைமுக உயர்மட்டச் சாலைத் திட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. அந்தத் திட்டத்தை நாங்கள் முழுமையாக எதிர்க்கவில்லை" என்று பேசியிருக்கிறார். அவருடைய கட்சிப் பத்திரிகையிலேயே வெளிவந்துள்ளது. இல்லை என்று மறுக்க முடியாது. ஆனால் மதுரவாயல் - சென்னை துறைமுக உயர்மட்டச் சாலைத் திட்டம் யாரால் தடுத்து நிறுத்தப்பட்டது, அதை எதிர்த்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்திய ஒப்பந்ததாரர் நீதிமன்றத்திற்குச் சென்று 600 கோடி ரூபாய்க்கு மேல் தனக்கு இழப்பீடு தரவேண்டுமென்று வழக்கு தொடுத்தது, மத்திய அரசே மூத்த அதிகாரிகளை அனுப்பி தமிழக அரசிடம் வேண்டுகோள் விடுத்தது, அதையும் மீறி தமிழக அரசு, குறிப்பாக ஜெயலலிதா அந்தத் திட்டத்தைத் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் பிரதமரே வந்து அடிக்கல் நாட்டினார் என்பதற்காகவே அந்தத் திட்டத்தை இயங்க விடாமல் தடுத்தார் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள்.

இறுதியாகச் சென்னை உயர்நீதிமன்றம் அந்தத் திட்டத்தைத் தொடரலாம் என்று அனுமதித்த பிறகும்கூட, ஜெயலலிதா அரசு, சமச்சீர் கல்வித் திட்ட வழக்கில் நடந்து கொண்டதைப் போலவே உச்சநீதிமன்றம் வரை சென்றது என்பதும் நினைவிலே கொள்ளத்தக்கது. அதையெல்லாம் அப்படியே மறைத்து விட்டு, சென்னையிலே ஜெயலலிதா பிரச்சாரம் செய்தபோது, மதுரவாயல் உயர் மட்டச் சாலைத் திட்டத்தை தாங்கள் முழுமை யாக எதிர்க்கவில்லை என்று பேசியபோது, அதைக் கேட்ட மக்கள் எப்படியெல்லாம் சிரித்திருப்பார்கள்! நம்முடைய முதல் அமைச்சரைப் போல இந்த அளவுக்குப் பொய் சொல்வதற்கு யாரால் முடியும்; பொய்ச் சொல்வதில் அவரோடு போட்டியிடுவதற்கு யாராலும் இயலாது என்றுதானே எண்ணியிருப்பார்கள்!

இப்படித்தான் ஜெயலலிதா பிரச்சாரத்தை மார்ச் திங்களில் தொடங்கிய போதே, இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகித இட ஒதுக்கீட்டினைத் தான்தான் கொடுத்ததாக ஒரு இமாலயப் பொய்யைக் கூறி, முஸ்லீம் பெருமக்கள் எல்லாம் உடனடியாகக்

கலைஞர் ஆட்சியில் அது கிடைத்தது என்று அறிக்கை மேல் அறிக்கை விடுத்தார்கள். பிறகு கரசேவையைத் தான் ஆதரிக்கவில்லை என்றும், அதற்காக ஆட்களை அனுப்பி வைக்கவில்லை என்றும் அடுத்த பொய்யைச் சொன்னார். அதற்கும் விளக்கமாகப் பா.ஜ.க. சார்பில் ஜெயலலிதா ஆட்களைக் கரசேவைக்கு அனுப்பி வைத்ததற்கு நன்றி கூறி அளித்த பேட்டி நாளேடுகளில் வெளிவந்ததை எடுத்துக்காட்டியிருந்தேன். டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கரசேவையை ஆதரித்து ஜெயலலிதா பேசியதையும் எடுத்துக்காட்டியிருந்தேன். அதற்குப் பிறகு தொடர்ச்சியாக இலங்கைப் பிரச்சினை, காவிரிப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, மீனவர் பிரச்சினை என்று எந்தெந்தப் பிரச்சினைகளில் எல்லாம் ஜெயலலிதா இரட்டை வேடம் போட்டு, நாட்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தாரோ, அவற்றைப் பற்றி தலைகீழாக மாற்றி ஒவ்வொரு பொய்யாகச் சொல்லிக்கொண்டே இருக்கிறார். அதற்கான விளக்கங்களை அவ்வப்போது நானும் விரிவாகத் தெரிவித்திருக்கிறேன்.

நேற்றைய தினம் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த அ.தி.மு.க. அரசு தயங்கவில்லை என்றும், மக்கள் விரோதத் திட்டமாக இருந்தால் அதனை முடக்கி வைக்கவும் தயங்க மாட்டோம் என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இவர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஓமந்தூரார் வளாகத்தில் கழக ஆட்சியில் கட்டப்பட்டு, முறையாகச் செயல்பட்டு வந்த தலைமைச் செயலகத்தையும், சட்டமன்றத்தையும் முடக்கிவைத்தாரே, அது மக்கள் விரோதத் திட்டமா? ஜெயலலிதா பதில் கூறத் தயாரா? சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று சொன்னாரே, அது மக்கள் விரோதத் திட்டமா? பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவினையொட்டி, வேறு எங்குமில்லாத அளவுக்கு நூலகம் ஒன்றினைக் கட்டி, சிறப்பாக அனைவரும் பயன்பெற்று பாராட்டுகின்ற வகையிலே நடை பெற்றுக் கொண்டிருந்ததே, ஆராய்ச்சி மாணவர்கள் எல்லாம் அதனைப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்களே, அந்த நூலகத்தையே மருத்துவமனையாக மாற்றப்போகிறேன் என்று அறிவித்தது யார்? ஜெயலலிதா தானே? பிறகு நீதிமன்றத்தின் உத்தரவால், அந்த நூலகம் தொடரலாம் என்று ஆணை வந்த போதிலும், அந்த நூலகத்தைப் பராமரிப்பின்றி விட்டிருக்கிறார்களே,

அது தன்னலத் திட்டமா? இன்றையதினம்கூட அந்த நூலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் தங்களுக்கு ஊதியம் முறைப்படி வழங்கப்படவில்லை என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்களே? தமிழர்களின் நூற்றாண்டுக் கனவான தமிழ் மொழிக்குச் செம்மொழி தகுதி வேண்டுமென்று கேட்டு, மத்திய அரசிடம் அதற்கு ஒப்புதல் பெற்று, அதற்கான செம்மொழி தமிழாய்வு நிறுவன அலுவலகத்தையும் தமிழகத்திற்குக் கொண்டு வந்தோமே, அது தன்னலத் திட்டமா?

சென்னையில், தலைமைச் செயலகத்தில், பாவேந்தர் ஆய்வு நூலகம் ஒன்றினைச் சிறப்பாகக் கழக ஆட்சியில் அமைத்து நடைபெற்று வந்ததே, அது தன்னலத் திட்டமா? மெட்ரோ ரெயில் திட்டம், எந்த அளவிற்கு வேகமாக நடைபெற்று வந்தது, தற்போது ஆமை வேகத்தில் நடக்கிறதே, இது மக்கள் நலத் திட்டம் இல்லையா? சென்னையின் இதயம் போன்ற நடுப்பகுதியில் கழக ஆட்சியில் தனியாரிடமிருந்து அரசு இடத்தைத் திரும்பப்பெற்று செம்மொழிப் பூங்கா அமைக்கப்பட்டு, அதில் சென்னை வாழ் மக்கள் அன்றாடம் நூற்றுக் கணக்கில் பார்த்து மகிழ்ந்தார்களே, அது தன்னலத் திட்டமா? ஏன்? சென்னை - திருப்பதி அகல சாலைத் திட்டம் உட்பட 15 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கான நெடுஞ்சாலைத் திட்டங்கள் எல்லாம் முடக்கப்பட்டதே, அவைகள் எல்லாம் மக்கள் நலத் திட்டங்கள் இல்லையா? அவைகளையெல்லாம் ஏன் ஜெயலலிதா முடக்கி வைத்தார்? சாதாரண ஏழையெளிய மக்கள் நலப் பணியாளர்கள் என்ன பாவம் செய்தார்கள்? கழக ஆட்சியிலே அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களை ஜெயலலிதா அரசு விரட்டி விரட்டி அடிக்கிறதே, அது தன்னலத் திட்டமா? அந்த மக்கள் நலப் பணியாளர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? அவர்களைப் பணியிலிருந்து நீக்கியதால் தற்கொலை செய்துகொண்டு இறந்தவர்கள் எத்தனை பேர்? அவர்களின் குடும்பங்கள் எல்லாம் இன்றைக்கு நடுத் தெருவில் நிற்கிறார்களே? அந்தத் திட்டம் தன்னலத் திட்டமா? ஏன் தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டு என்று தமிழர்களின், ஆராய்ச்சியாளர்களின் கனவை நினைவாக்கினோம்; அ.தி.மு.க. ஆட்சியில் அது மாற்றப்படவில்லையா? அது தன்னலத் திட்டமா? அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியங்கள் அமைத்தோமே,

சிறப்பாகச் செயல்பட்டதே, அது மக்கள் நலத் திட்டம் இல்லையா? எது மக்கள் நலத் திட்டம் இல்லை?

மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கக் கூடியதும், கருணாநிதி குடும்பத்தின் அட்சயப் பாத்திரம்தான் சேது சமுத்திரத் திட்டம் என்று ஜெயலலிதா வாய்க் கூசாமல் பேசியிருக்கிறார்!

சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தித் தமிழகம் முழுவதும் 23.7.1967 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து எழுச்சி நாள் கூட்டங்கள் நடத்தினாரே, அது தன்னலத் திட்டமா?

சேது சமுத்திரத் திட்டத்தின் தொடக்க விழாவைத் தடுக்க வேண்டும் என்பதற்காகச் சிலர் நீதிமன்றத்தின் மூலமாகத் தடை பெற முயன்றபோது, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களின் அமர்வு,

> “தேசிய நலனுக்காகக் கொண்டு வரப்படும் சேது சமுத்திரத் திட்டத்தைத் தடை செய்யும் நோக்கத்தோடு மனுதாரர் நீதிமன்றத்துக்கு விரைந்து வந்து வழக்கு தொடுத்துள்ளார். சேது சமுத்திரத் திட்டம் நாட்டிற்கு நல்ல பலனைக் கொடுக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஏனென்றால் தற்போது கப்பல்கள் இலங்கை நாட்டைச் சுற்றி வங்காள விரிகுடா கடலுக்கு வரவேண்டியுள்ளது. பாக்ஜலசந்தியிலே குறுக்காகக் கப்பல் கால்வாய் அமைத்தால் பெருமளவு பணமும், நேரமும் சேமிக்கப்பட ஏதுவாகும். இந்தக் கால்வாய் திட்டம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே விழாவுக்குத் தடை கிடையாது”.

- என்று கூறித் தீர்ப்பளித்தாரே, அதற்கும் ஜெயலலிதா உள்நோக்கம் கற்பிக்க முயலுகிறாரா?

2001 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும், 2004 ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும், இதே ஜெயலலிதா சேது சமுத்திரத் திட்டத்தால் நம் நாடு மட்டும் அல்ல; தென் கிழக்கு ஆசிய நாடுகளும் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் பயன் அடையும். வாணிபமும் தொழிலும் பெருகும். இத்திட்டத்தின் தேவையை, முக்கியத்துவத்தை

உணர்ந்து முன்னுரிமை கொடுத்து ஒரு காலக்கெடுவுக்குள் நிறைவேற்றும்படி மைய அரசை விடாது தொடர்ந்து வலியுறுத்தும் என்றெல்லாம் குறிப்பிட்டாரே, அப்படியென்றால் ஜெயலலிதா குடும்பத்தின் அட்சயப் பாத்திரமாகச் சேது சமுத்திரம் திட்டம் அப்போது இருந்ததா? தற்போது அந்த வருவாய் இல்லை என்பதால் எதிர்க்கிறாரா? அதுதான் உண்மைக் காரணமா?

சேது சமுத்திரத் திட்டத்தை வரவேற்று, தமிழகத்திலே உள்ள பல்வேறு கட்சித் தலைவர்கள் அறிக்கைகளையெல்லாம் கொடுத்தார்களே; பெருந்தலைவர் காமராஜர் அவர்களால், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால், இந்தத் திட்டம் வலியுறுத்தப்பட்டதே, அவர்கள் எல்லாம் தன்னலத்திற்காக இந்தத் திட்டம் வேண்டுமென்று சொன்னார்கள் என்று ஜெயலலிதா கூறுகிறாரா? அவர்கள் எல்லாம் சேது சமுத்திரத் திட்டத்தைத் தங்கள் குடும்பத்திற்கான அட்சயப் பாத்திரம் என்று தான் கருதினார்களா?

மீனவர்கள் பிரச்சினையில் தனக்குத்தான் அக்கறை என்றும், மற்றவர்களுக்கு அக்கறையில்லை என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். "மத்திய அரசின் சார்பில், இரண்டு நாடுகளின் மீனவர் பிரதிநிதிகளைச் சந்திக்கவைக்க நாள் குறிப்பிட வேண்டுமென்று தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும், தமிழக அரசிடமிருந்து பதில் வரவில்லை" என்றும் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களே ஜெயலலிதாவைப் பற்றியும், மீனவர் பிரச்சினையிலே அவருக்கு உள்ள அக்கறை குறித்தும் தெரிவித்தாரே, அது உண்மையா? இல்லையா? அதுதான் மீனவர்கள்பால் ஜெயலலிதா காட்டிய அக்கறையா?

16-3-2013 அன்றே பிரதமர் கடிதம் எழுதியிருக்கிறார். ஏன் அதற்குப் பதில் எழுதவில்லை? ஆறு மாதங்கள் கழித்து 20-9-2013 அன்றுதான் தமிழக முதல்அமைச்சர் இருநாட்டு மீனவர்களின் பிரதிநிதிகள் சந்திப்பதற்கான தமிழக அரசின் ஒப்புதலைத் தெரிவித்துப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருப்பதாக, பிரதமரே 9-11-2013 தேதிய கடிதத்தில் நன்றி தெரிவித்திருக்கிறார். உண்மையிலேயே தமிழக மீனவர்களின் துன்பங்களில் ஜெயலலிதாவுக்கு அக்கறை இருக்குமானால், பிரதமரின்

கடிதத்திற்கு ஆறு மாதங்கள் தாமதம் செய்திருப்பாரா? மீனவர்கள் சிறை பிடிக்கும்போதெல்லாம் பிரதமருக்கு ஒரு கடிதத்தை எழுதி விட்டு, அதை அவசர அவசரமாக ஏடுகளிலே விளம்பரப்படுத்திக் கொண்டால், இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதாக அர்த்தம் ஆகிவிடுமா?

சென்னையைச் சுற்றி இரண்டு நாட்கள் ஜெயலலிதா வலம் வந்தாரே; எதைப் பார்த்தார்? முக்கிய சாலைகளின் வழியாகவே சென்றதால்,

அவர் சிலவற்றைக் கண்டிருக்க முடியாது. போரூரில் 34.72 கோடி ரூபாய்ச் செலவில் மேம்பாலம் கட்டுவதற்குக் கழக ஆட்சியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகளும் தொடங்கி நடந்து வந்தனவே; அ.தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு, அந்தப் பணிகள் ஏன் முடக்கி வைக்கப்பட்டது?

49.55 கோடி ரூபாய்ச் செலவில் மூலக்கடை பகுதியில் மேம்பாலம் கட்டும் பணி - அண்ணா நகர் இரண்டாவது நிழல் சாலை - திருமங்கலம் முகப்பேர் சாலை - உள்வட்டச் சாலை சந்திப்பில் 60.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலம் கட்டும் பணி - 69.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வடபழனியில் உள் வட்டச் சாலை - என்.எஸ்.கே. சாலை சந்திப்பில் மேம்பாலப் பணி - 117 கோடி ரூபாய்ச் செலவில் பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் நெல்சன் மாணிக்கம் சாலைச் சந்திப்பு மற்றும் அண்ணா வளைவில் மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலம் அமைக்கும் பணி - 80.68 கோடி ரூபாய்ச் செலவில் வியாசர்பாடி ரெயில்வே மேம்பாலப் பணி - 1081.40 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை வெளிவட்டச் சாலைப் பணிகள் என்று கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட பணிகள் எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் அப்படி அப்படியே நிற்கிறதே, இவைகள் எல்லாம் மக்கள் நலப் பணிகளா? அல்லது தன்னலப் பணிகளா?

இதே சென்னை மாநகரை எடுத்துக்கொண்டால் என்ன நிலைமை? குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவது தடுக்கப்படவில்லையே? தினந்தோறும் குப்பைகளை அகற்றுவதற்குப் பதிலாக 821 குப்பைத் தொகுப்பு மையங்களை உருவாக்கி, குப்பை மறைத்து வைக்கப்படுகிறதே; இது சுகாதாரச்

சீர்கேட்டிற்கும், கொசு உற்பத்திக்கும் புதிய புதிய நோய்கள் உருவாவதற்கும் முக்கிய காரணமாக உள்ளதே; கொசுத் தொல்லை - குண்டும் குழியுமான சாலைகள் - எரியாத தெரு விளக்குகள் - தூர்வாரப்படாத மழைநீர் வடிகால் வாய்க்கால்கள் - சீர் செய்யப்படாத பாதாளச் சாக்கடைகள் - எங்கெங்கும் மண்டிக் கிடக்கின்றனவே; இதுபற்றியெல்லாம் அ.தி.மு.க அரசோ, சென்னை மாநகராட்சியோ ஏதாவது கவலைப்படுகிறதா? ஜெயலலிதாதான் கவலைப்படுகிறாரா?

வாக்களிக்கும் மக்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளாமல், சட்டமன்றத்திலும், வெளியிலும் ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கைகளையே தொடர்ந்து ஊக்குவித்து வரும் ஜெயலலிதா, பொதுநலம், தன்னலம் பற்றியெல்லாம் பேசுவதற்கோ, சுமார் ஐந்தாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சொத்துக்களைக் குவித்து, வாய்தா வாங்கியே காலத்தையும் நீதியையும் தள்ளிவைத்துவரும் ஜெயலலிதா ஊழல் பற்றி உபன்னியாசம் செய்வதற்கோ எந்தவிதமான நியாயமும் இல்லை என்பதைத் தமிழக வாக்காளப் பெருமக்கள் நன்றாகவே புரிந்துகொண்டு, இந்த அரசுக்கு நல்ல படிப்பினையைத் தரத் தயாராகிவிட்டார்கள்.

அதனால்தான் நான் கடந்த சில நாட்களுக்கு முன்பாகவே கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் ஒரு வாக்கு; ஒவ்வொருவராலும் ஒரு வாக்கு என்பதைப் பற்றி விரிவாகக் கூறியிருந்தேன். எனவே கழகத் தோழர்கள் அனைவரும் அந்த அடிப்படை இலக்கணத்தை மனதிலே கொண்டு, தங்களால் குறைந்தபட்சம் ஒரு வாக்கு, அதற்கு மேல் எத்தனை வாக்குகளை வேண்டுமானாலும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அளித்திடவும், நமது வேட்பாளர்கள் அனைவரும் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிடவும் தங்களால் இயன்ற அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகள் இந்தத் தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற்றுவிட வேண்டும் என்று எந்தக் காரியத்தையும் செய்திட துடித்துக் கொண்டிருப்பதால், நமது கூட்டணியின்

வேட்பாளர்களுக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள முகவர்கள் (ஏஜெண்டுகள்) கண்ணும் கருத்துமாகவும் மிகுந்த எச்சரிக்கை யோடும் செயல்பட வேண்டும். வாக்குப் பதிவு முடிந்த பிறகு, மின்னணு வாக்குப் பதிவு பெட்டிகள் உரிய இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும் போதும், அவை வாக்கு எண்ணிக்கை மையங்களில் பத்திரப்படுத்தி வைக்கப்படும்போதும், மிகவும் விழிப்பாக இருந்திட வேண்டும். கடிதம் நீண்டு கொண்டே போகிறது. வேன் பிரச்சாரத்திற்குச் செல்ல வேண்டும் என்பதற்காக மாவட்டச் செயலாளர்களும், வேட்பாளர்களும் நேரமாகி விட்டது என்று காத்திருக்கிறார்கள். கவனம், கவனம்! கடந்த சில நாட்களாகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றி விட்டு, கடைசி இரண்டு நாட்களில் ஏமாந்துவிடக் கூடாது. எச்சரிக்கை தேவை; வெற்றி நமதே!

அன்புள்ள,

மு.க.

23-4-2014

3878. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (1)

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இப்போது மூன்றாவது முறையாகத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை நடத்தி வரும் நேரத்தில், அவர் மீது கடந்த காலத்தில் பல்வேறு வழக்குகள் நடைபெற்று, அவற்றில் விசாரணை நீதிமன்றத்தில் சட்டப்படி அவர் தண்டிக்கப்பட்ட போதிலும், பின்னர் மேல் முறையீடு செய்து அதன் மூலம் தப்பித்துக் கொண்டிருக்கிறார். எல்லா வகையிலும் எவ்வளவோ முயன்றும், தப்பிக்க முடியாத சில வழக்கு களை எப்படியோ வாய்தாக்களுக்கு மேல் வரலாறு கண்டிராத வகையில், "கின்னஸ்" ஆவணத்திலே இடம்பிடிக்கக்கூடிய வகையில் வாய்தாக்களை வாங்கி, தீர்ப்புகளை தள்ளிப்போட்டு வருகிறார்! அத்தகைய வழக்குகளில் மிக முக்கியமான ஒன்றுதான் பெங்களூரில் நடைபெற்று வரும் சொத்துக் குவிப்பு வழக்கு.

இந்த வழக்கு எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? எத்தனை வாய்தாக்கள் வாங்கப்பட்டன? என்ற விவரங்களைத் தமிழ்நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் ஊழல் செய்தவர்கள் மீதான வழக்குகள் எல்லாம் ஒரு சில மாதங்களிலேயே முடிவுற்று, அவர்கள் தண்டனை அனுபவிக்கும் இந்நாளில், முறைகேடுகளைச் செய்து பல்லாயிரம் கோடி ரூபாய்களை குவித்துள்ள ஒருவர் தமிழகத்தின் முதலமைச்சராகவே இருந்துகொண்டு, எப்படியெல்லாம் நீதியை வளைக்கவும் நெரிக்கவும் முயற்சி செய்கிறார் என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் இந்த வழக்கிலும், வேறு சில வழக்குகளிலும் இவர் எப்படியெல்லாம் நீதி பரிபாலன நெறிமுறைகளைச் சவாலுக்கு அழைத்திடும் வண்ணம் நடந்து கொண்டிருக்கிறார் என்பதைத் தொடர்ந்து விளக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பெரும்பான்மையாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருந்தது என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி மத்திய அரசினால் கலைக்கப்பட்ட பிறகு, நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஜெயலலிதா முதன் முறையாகத் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டுவரை முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் வெளியிட்ட விவரப்படி, ஜெயலலிதா முதல் முறையாக, முதல் அமைச்சராக பொறுப்பேற்பதற்கு முன்பு அவருக்கு இருந்த சொத்து மதிப்பு அதாவது 1-7-1991 அன்றைய தேதியில் 2 கோடியே 1 லட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய்.

1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையில் ஜெயலலிதாதான் தமிழகத்தின் முதலமைச்சர். ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ஐந்தாண்டுகள் அனுபவித்து முடிந்த பிறகு 30-4-1996 அன்று ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரத்து 395 ரூபாயாகும்.

ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியில் இருந்தபோதே, தமிழகத்தில் பெருமளவுக்கு ஊழல்கள் பல்கிப் பெருகி நடைபெறுவதைச் சுட்டிக்காட்டி, 15-4-1995 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அப்போது தமிழக ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி அவர்களிடம் 539 பக்கங்கள் கொண்ட ஊழல் குற்றப்பட்டியலை, நானும், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், மற்றும் முரசொலி மாறன், நாஞ்சிலார், ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், என்.வி.என். சோமு, ரகுமான்கான் ஆகியோரும் சென்று கொடுத்தோம்.

அந்தக் குற்றச்சாட்டுப் பட்டியலில் மொத்தம் 28 ஊழல்களை வரிசைப்படுத்தியிருந்தோம். அதில் 25வது குற்றச்சாட்டுதான், ஜெயலலிதா வருமானத்தை மீறி அதிகச் சொத்து சேர்த்தது பற்றியதாகும். அதில், "தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும், அவரது வீட்டில், அவருடன் வசிக்கும் அவருடைய தொழில் கூட்டாளிகளான சசிகலாவும், அவரது

சகோதரர்களும் தமிழகம் முழுவதும் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை வாங்கி மலையெனக் குவித்துக் கொண்டிருக் கிறார்கள். செல்வி ஜெயலலிதா முதல்வரானதிலிருந்து அவருக்கு நெருக்கமானவர்கள் சொத்துக்களை வாங்கு வதில் ஈடுபட்டிருக்கும் வகையும் வேகமும் பொதுமக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருப்பதுடன் எப்படி இவர்களால் இப்படிச் செய்யமுடிகிறது என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது" என்று தொடங்கி 15-4-1995 தேதியிட்ட "இந்தியா டுடே" இதழில் வெளிவந்த ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு விவரங்களை யெல்லாம் தெரிவித்திருந்தோம். இந்தச் செய்தி தமிழ்நாட்டு மக்களும் இந்திய மக்களும் நன்கறிந்த செய்திதான். நாமாக இட்டுக் கட்டிப் பரப்பிய செய்தியல்ல.

நமக்கு முன்பே, சுப்பிரமணிய சுவாமி அவர்கள் தமிழக ஆளுநரிடம் முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து வழக்குப் போடுவதற்கான அனுமதி கோரியிருந்ததால், ஆளுநர் அதற்கான அனுமதியை சுப்பிரமணிய சுவாமி அவர்களுக்குக் கடிதத்தின் மூலம் வழங்கினார். இதன் காரணமாகச் சுப்பிரமணிய சுவாமி மீது கோபம் கொண்ட அ.தி.மு.க. வினர் 6-4-1995 அன்று சென்னையில் நடைபெற்ற ஜனதா கட்சிப் பொதுக் கூட்டத்தில் அவர் மீதும், சந்திரலேகா மீதும் கற்களையும், செருப்புகளையும் வீசி ரகளை செய்தனர். வழக்கு தொடுப்பதற்கான அனுமதியைத் தமிழக ஆளுநர் வழங்கினார் என்பதற்காக 27-4-1995 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் அ.தி.மு.க. ஆட்சியில், ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களைத் திரும்பப் பெறக் கோரும் தீர்மானம் ஒன்றையே அ.தி.மு.க.வினர் நிறைவேற்றினர்.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 1996 ஜூன் 14ஆம் தேதி தாக்கல் செய்த மனுவில் 1.7.1991 முதல் 30.4.1996 வரை தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்துள்ளதாகக் கூறியிருந்தார். அதையேற்றுக் கொண்ட நீதிமன்றம் விசாரணை நடத்தும்படி உத்தரவிட்டது. அதை அப்போது போலீஸ் அதிகாரியாக இருந்த லத்திகாசரண், புகார் மீது விசாரணை நடத்தும்படி போலீஸ் அதிகாரி வி.சி. பெருமாளுக்கு 26.6.1996 அன்று உத்தரவிட்டார்.

விசாரணையைத் தடுத்திட ஜெயலலிதா உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, விசாரணை சிறிது காலம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், பின்னர் தடையை நீக்கி விசாரணையைத் தொடர உயர்நீதிமன்றம் ஒப்புதல் அளித்தது. இந்த வழக்கிலே ஜெயலலிதா, பிறகு உயர்நீதிமன்றத்திலே தனக்கு முன் ஜாமீன் கோரினார். அதனை நிராகரித்து, உயர்நீதிமன்றம் ஜெயலலிதா மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் வழக்கிற்கு அடிப்படை ஆதாரம் உள்ளது என்றும், அரசியல் பகை காரணமாக இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது சரியல்ல என்றும் தீர்ப்பு கூறியது.

மூத்த போலீஸ் அதிகாரி திரு. வி.சி. பெருமாள் முதல் நிலை விசாரணையை முடித்து, குற்றச்சாட்டுகளுக்குத் தேவையான பூர்வாங்க ஆதாரங்கள் இருந்ததால், விரிவான விசாரணையை மேற்கொள்ளலாம் என்றும், விரிவான விசாரணை அதிகாரியாக திரு. நல்லம்ம நாயுடு அவர்களை நியமனம் செய்தும் 7-9-1996 அன்று உத்தரவிட்டார். அதன்படி 18-9-1996 அன்று முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். தொடர் விசாரணையை மேற்கொள்ள திரு. நல்லம்ம நாயுடுவுக்கு உதவியாக, 16 காவல் துறை இன்ஸ்பெக்டர்களை நியமனம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதோடு, அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்கள். ஜெயலலிதா தமிழகத்தின் பல்வேறு இடங்களில் வாங்கிய அசையா சொத்துக்களின் விவரங்களை நேரில் சென்று ஆய்வுசெய்து தேவையான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக 16-10-1996 அன்று முதன்மை அமர்வு நீதிமன்றத்திடம் ஒப்புதலும் பெறப்பட்டது. 6-12-1996 அன்று ஜெயலலிதாவின் சென்னை வீட்டையும், ஐதராபாத் திராட்சை தோட்டத்தையும் நேரில் சோதனையிடுவதற்கான அனுமதியினையும் நீதிமன்றத்திடம் பெறப்பட்டு, அவ்வாறே சோதனைகளும் நடைபெற்றன.

அந்த நேரத்தில் ஜெயலலிதா வேறொரு வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறையிலே இருந்தார். விசாரணை அதிகாரி நல்லம்ம நாயுடு, ஜெயலலிதாவைச் சிறையில் சந்தித்து, அவரது வீட்டைச் சோதனை செய்யும்போது, ஜெயலலிதா தரப்பிலே

பாஸ்கரன், விஜயன் ஆகிய இருவரையும் தனது தரப்புப் பிரதிநிதிகளாக நியமனம் செய்யவும், வீட்டைச் சோதனையிடவும் ஒப்புதல் பெற்றார். அவ்வாறே 7-12-1996 முதல் 12-12-1996 வரை ஜெயலலிதாவின் வீடும், ஐதராபாத் திராட்சை தோட்டமும் காவல் துறையினரால் சோதனையிடப்பட்டன. சோதனையின் போது வீட்டில் இருந்த தங்க, வைர நகைகள், வெள்ளிப் பொருள்கள். ஆவணங்கள் மற்றும் ரொக்கத் தொகை கைப்பற்றப்பட்டு வெள்ளிப் பொருள்களைத் தவிர மற்றவை நீதிமன்றப் பொறுப்பிலே ஒப்படைக்கப்பட்டன. (வெள்ளிப் பொருள்கள் வீட்டிலே வைக்கப்பட்டு பாஸ்கரன் என்பவர் பொறுப்பிலே விடப்பட்டன) விசாரணை அறிக்கை கொடுத்தபின், 1997 ஜூன் 4ஆம் தேதி சென்னை தனி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர்.

மறுநாள், 5-6-1997 அன்று வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்குச் சம்மன்கள் அனுப்பப்பட்டன. 1997 அக்டோபர் 21ஆம் தேதியன்று 2, 3 மற்றும் நான்காம் குற்றவாளிகளான சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் தாக்கல் செய்த விடுவிப்பு மனுவைத் தள்ளுபடி செய்து நான்கு குற்றவாளிகள் மீதும் தனி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. 259 சாட்சிகள் சேர்க்கப்பட்டனர். அதில் 39 சாட்சிகளைத் தவிர மற்றவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டதையும், தனி நீதிபதி நியமனம் செய்யப்பட்டதையும் எதிர்த்து ஜெயலலிதா தரப்பினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பின்பற்றியே விசாரணைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதால் ஜெயலலிதா தரப்பினரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து ஜெயலலிதா தரப்பினர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் செய்த மேல் முறையீடும் 14-5-1999 அன்று நீதிபதிகள் ஜி.டி. நானாவதி, எஸ்.பி. குர்துக்கர் ஆகியோரால் தள்ளுபடி செய்யப்பட்டது. ஜெயலலிதா தரப்பினர் மீதான விசாரணைக்குத் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டதும், தனி நீதிபதி நியமனம் செய்யப்பட்டதும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி சரியானது என்பது நிலைநாட்டப்பட்டது.

இந்நிலையில் தமிழகத்தில் மீண்டும் 2001 மே மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளவர் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சி மீண்டும் தமிழகத்தில் ஏற்பட்ட பிறகு, இந்த வழக்கு விசாரணையில் சுணக்கம் ஏற்பட்டது. ஜெயலலிதா பதவியேற்றதே செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததையொட்டி, 21-9-2001 அன்று ஜெயலலிதா முதலமைச்சர் பதவியிலிருந்து இறங்கினார். ஆனால் அவர் மீதான வேறு சில குற்றச்சாட்டுகள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மேல் முறையீட்டில் ரத்து செய்யப்பட்ட காரணத்தால், ஜெயலலிதா மீண்டும் இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று 2-3-2002இல் முதலமைச்சராகப் பதவியேற்றார். ஜெயலலிதா மற்றும் மூன்று பேர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை சென்னையில், முதலாவது தனி நீதிமன்றத்தில், அ.தி.மு.க. ஆட்சியில், நீதிபதி ஆர். ராஜமாணிக்கம் அவர்கள் முன்பு மீண்டும் 2002ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கியது. அப்போது சென்னையில் நடந்து வந்த விசாரணையில் ஏற்கனவே சாட்சியம் அளித்த 76 பேரிடம் மீண்டும் விசாரணை நடத்த முடிவு செய்து, 2002 நவம்பர் முதல் 2003 பிப்ரவரி 21ஆம் தேதி வரை மறு விசாரணை நடந்தது. ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்த 76 பேர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அந்தச் சாட்சிகள் ஏற்கனவே கொடுத்த வாக்குமூலத்திற்கு மாற்றாக மறு சாட்சியம் அளித்தனர். அதைத் தொடர்ந்து குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313 விதியின்படி, வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நேரில் ஆஜராகாமல், நீதிமன்ற உத்தரவின்படி அவர்களிடம் நேரில் சென்று கேள்வி கேட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. நடைமுறைக்கு மாறான இந்த முறைகேட்டினை எதிர்த்து ஆட்சேபித்திருக்க வேண்டிய அரசு வழக்கறிஞர், அ.தி.மு.க. ஆட்சியினால் நியமனம் செய்யப்பட்டவர் என்ற காரணத்தால், எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

இவற்றுக்கிடையேதான் இவ்வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றம் செய்யக்கோரித் தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அந்த மனுவில், ஜெயலலிதாவிற்கு எதிரான வழக்கு விசாரணை நியாயமாக நடைபெற ஏதுவாக இந்த வழக்கை வேறு மாநிலத்திற்கு

மாற்ற உத்தரவிட வேண்டும் என்றும், இவ்வழக்கில் ஏற்கனவே 250 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 2000ஆம் ஆண்டிலேயே அரசுத் தரப்பு விசாரணை முடிந்துவிட்ட நிலையில் ஜெயலலிதா தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் சாட்சிகளிடம் மறு விசாரணை நடைபெற்று வருகிறது என்றும், இந்த மறு விசாரணையின் போது பல்வேறு சாட்சிகளும் தாங்கள் ஏற்கனவே அளித்த சாட்சியத்தை மாற்றிக் கூறி வருகின்றனர் என்றும், லஞ்ச ஒழிப்புத் துறை முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருப்பதால் விசாரணை அதிகாரிகள் நியாயமாக நடந்துகொள்ள வாய்ப்பில்லை என்றும், விசாரணை அதிகாரிகள் சாட்சியங்களைக் கலைத்து ஜெயலலிதாவையும் வழக்கில் தொடர்புடைய மற்றவர்களையும் விடுவிக்க முயற்சிக்கக்கூடும் என்பதால் தமிழகத்திற்கு வெளியே சுயேச்சையான ஒரு அமைப்பின் மூலம் விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருந்தார்.

பேராசிரியர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, உச்ச நீதிமன்றம், சென்னை தனி நீதிமன்றத்தில் நடந்துவந்த விசாரணைக்கு 2003 பிப்ரவரி 28ஆம் தேதி இடைக்காலத் தடை விதித்தது. இம்மனுவை விசாரணை நடத்திய உச்ச நீதிமன்றம், இவ்வழக்கைப் பெங்களூருக்கு மாற்றம் செய்து 2003 நவம்பர் 18ஆம் தேதி உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.என். வரியவா அவர்களும், எச்.கே. சீமா அவர்களும் அளித்த அந்தத் தீர்ப்பு மிக முக்கியமானது. அதன் முக்கிய பகுதிகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. அந்தத் தீர்ப்பின் தொடக்கத்திலேயே நீதிபதிகள்,

“ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரரான (பேராசிரியர்) அரசியல் எதிரி என்ற முறையில் இந்த வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாகவும், அரசியல் காரணங்களுக்காகவே இந்த வழக்கு தொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். இந்த வாதம் ஏற்புடையதல்ல. **ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளுக்கு அவைக்குள்ளும், அவைக்கு வெளியேயும் முக்கியமானதோர் இடம் உண்டு. ஆட்சியிலே இருப்பவர்களைக் கண்காணிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு எதிர்க் கட்சிகளுக்குண்டு. ஆட்சியிலே உள்ள கட்சியின் தவறான செயல்முறைகளையும், நடவடிக்கைகளையும் எதிர்ப்பதுதான் அவர்களுடைய**

முக்கியமான ஆயுதமாகும். பொதுவாக மக்களுடைய குறைகளை எதிரொலிக்கக் கூடியவர்களே இவர்கள்தான். அந்த நிலையில் எதிர்க்கட்சி என்ற முறையில் மனுதாரர் (பேராசிரியர்) உண்மையில் மாநிலத்தின் அரசு நிர்வாகத்திலும், நீதி நிர்வாகத்திலும் அக்கறை உள்ளவராவார். அப்படிப்பட்டவரிடமிருந்து தாக்கல் செய்யப்படுகின்ற மனு, அரசியல் காரணத்திற்காக போடப்பட்ட ஒன்று என்று கூறி அலட்சியப்படுத்தக்கூடிய ஒன்றல்ல. இந்த வழக்கில் மனுதாரர் (பேராசிரியர்) பல நியாயமானதும், ஏற்கத்தக்கதுமான காரணங்களை அதாவது இதிலே நீதி மறுக்கத்தக்க வகையிலும், ஒரு தலைப்பட்சமாகவும் வழங்கக்கூடிய நிலை ஏற்படலாம் என்று வலுவான ஐயங்களை எழுப்பியிருப்பதை எங்கள் கருத்தின் அடிப்படையில் ஏற்கிறோம்" என்று உச்ச நீதிமன்றம் 18-11-2003 அன்று தனது தீர்ப்பில் தெரிவித்தது.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

6-5-2014

3879. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (2)

உடன்பிறப்பே,

பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களின் மனுவின் மீது உச்ச நீதிமன்றம் 2003ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பின் முற்பகுதியை நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அந்தத் தீர்ப்பின் அடுத்தடுத்த பகுதிகள் வருமாறு :-

"அரசு அதிகாரியாக இருந்த திரு. எஸ்.எஸ். ஜவகர் ஐ.ஏ.எஸ்., முன்னாள் துணைச் செயலாளர், ஜனவரி 2003இல் அரசுத் தரப்பு சாட்சியாகச் சாட்சியம் அளித்துள்ளார். இவரே 2000ஆம் ஆண்டில் அரசுத் தரப்பு சாட்சியாகச் சாட்சியம் அளித்திருக்கிறார். **2003இல் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தூண்டுதலின் பேரில் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, 2000ஆம் ஆண்டு அவர் அளித்த முதல் சாட்சியம் கட்டாயத்தின் பேரில் கூறப்பட்டது என்று சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த சாட்சி அடித்த பல்டி குறித்து அரசு வழக்கறிஞர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுபோலவே என்.வி. பாலாஜி என்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் ஆடிட்டர் 2000ஆம் ஆண்டில் அளித்த சாட்சியத்திற்கும் மீண்டும் திரும்ப அழைத்தபோது அளித்த சாட்சியத்திற்கும் இருந்த மாறுபாடுகள் குறித்து அரசு வழக்கறிஞர் கண்டுகொள்ளவே இல்லை".**

"இவர்களைப் போல மேலும் பல சாட்சிகள் மீண்டும் சாட்சியம் என்ற பெயரால் அழைக்கப்பட்டபோது, அவர்கள் எல்லாம் தாங்கள் முதலில் அளித்த சாட்சியம் கட்டாயத்தின் பேரில் அளிக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பல்டி அடித்த சாட்சிகள் என்று அரசு வழக்கறிஞர் சேர்க்கவில்லை".

"எந்தெந்த சாட்சிகள் இவ்வாறு மாறினார்கள் என்பதற்குச் சில உதாரணங்களைத் தந்துள்ளோம். **இதிலிருந்து**

குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் எந்த அளவிற்கு அரசுத் தரப்பினர் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது".

"மனுதாரரின் (பேராசிரியர்) வழக்கறிஞர் திரு. அந்த்யார்ஜுனா எங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவந்தார். **முதல் குற்றவாளியிடம் (ஜெயலலிதா) விதி 313இன் படி நடத்தப்பட்ட விசாரணை குறித்துத் தெரிவித்து, சட்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட முறையிலே அது நடந்ததாகக் கூறியிருக்கிறார்.** முதல் குற்றவாளி 24-2-2003 அன்று தாக்கல் செய்த மனுவில் அவர், தான் நேரில் ஆஜராகாமலிருக்க அனுமதிக்க வேண்டும் என்றும் அவருடைய வழக்கறிஞர் மூலமாகக் கேள்விகளுக்குப் பதிலளிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். அந்த மனுவின் பாரா 5இல் தூத்துக்குடி மாவட்டத்தில் கடுமையாக ஒரு வாரம் தேர்தல் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அப்போதுதான் திரும்பியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். சுரம் காரணமாகப் படுக்கையில் இருப்பதால் மருத்துவர்கள் மேலும் சில நாட்கள் ஓய்வெடுக்கும்படி பணித்திருக்கிறார்கள். எனவே 313வது விதியின்படி நேரில் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத நிலை உள்ளது. மனுவின் 6வது பாராவில், அவர் இந்த வேண்டுகோளை தான் வகிக்கும் பதவி காரணமாகக் கொடுக்கவில்லை என்றும், உடல் நிலை காரணமாகவே தருவதாகவும் தெரிவித்திருக்கிறார். அரசு வழக்கறிஞர் இந்த மனு மீது எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை" என்றெல்லாம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வழக்கைச் சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து கர்நாடக மாநில உயர்நீதிமன்றத்திற்கு மாற்றிப் பிறப்பித்த தீர்ப்பில் தொடர்ந்து குறிப்பிட்ட முக்கியக் கருத்துகள் :- The Supreme Court Judges said that "it is undisputed that 76 witnesses have been recalled. Many of them had earlier been cross examined. We were informed that witnesses were recalled as senior counsel for Ms. Jayalalithaa had been busy attending to some other case filed against her when they were first examined."

(இந்த வழக்கில் 76 சாட்சிகள் மீண்டும் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர்

ஏற்கனவே குறுக்கு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டவர்கள். ஏன் அவர்களை மீண்டும் அழைத்தீர்கள் என்று கேட்டதற்கு, ஜெயலலிதாவின் மூத்த வழக்கறிஞருக்கு அவர் மீதுள்ள வேறு பல வழக்குகளில் ஆஜராக வேண்டிய பணிகள் இருந்த காரணத்தினால் தற்போது மீண்டும் அந்தச் சாட்சிகள் திரும்ப அழைக்கப்படுகிறார்கள் என்று காரணம் சொல்லியிருக்கிறார்கள்.) இப்படி சாட்சிகளை அழைத்தது பற்றி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"The Bench said that the fact that witnesses were recalled for cross examination on flimsy grounds after Ms. Jayalalithaa assumed power as Chief Minister and the Public Prosecutor appointed by her Government did not oppose and / or gave consent to application for recall of witnesses was indicative of how "judicial process is being subverted"

அதாவது, **"ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சாதாரணமான ஏதோவொரு காரணத்தைக் கூறி இந்த சாட்சிகள் மீண்டும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஜெயலலிதாவின் அரசினால் நியமிக்கப்பட்ட அரசாங்க வழக்கறிஞர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனுமதி கொடுத்திருக்கிறார். இது ஒன்றே எந்த அளவிற்கு நீதி இந்த வழக்கிலே திசை திருப்பப்பட்டுள்ளது என்பதை நன்றாக விளக்குகின்றது"** என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் தீர்ப்பிலே கூறினார்கள்.

"It does appear that the new public prosecutor is hand-in-glove with the accused thereby creating a reasonable apprehension of likelihood of failure of justice in the minds of the public at large. There is strong indication that the process of justice is being subverted."

(அரசின் புதிய வழக்கறிஞர் குற்றவாளிகளோடு (ஜெயலலிதா குழுவினரோடு) இணைந்து செயல்படுவது நன்றாகத் தெரிகிறது. அதன் காரணமாகப் பொதுவாக நீதி கிடைக்காது என்ற ஒரு நம்பத்தகுந்த ஐயம் மக்கள் மனதிலே எழுந்துள்ளது. நீதி திசை திரும்பிச் செல்வது நிச்சயமாகத் தெரிகின்றது)

"313வது விதிப்படி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப் படும்போது, ஜெயலலிதா நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாமல்

இருக்க தாக்கல் செய்த தவறான மனுவிற்கு அரசு வழக்கறிஞர் எதிர்ப்பே தெரிவிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது வருந்தத்தக்கது. (The conduct of the Public Prosecutor in not opposing such a frivolous application has to be deprecated").

ஜெயலலிதா நேரில் ஆஜராகாமல் இருக்க விசாரணை நீதிமன்றம் அனுமதி கொடுத்ததற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களுடைய கடுமையான எதிர்ப்பை இந்தத் தீர்ப்பிலே தெரிவித்திருப்பதோடு, **"நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்த போதிலும், உங்களைவிடச் சட்டம் பெரியது. நேரில் ஆஜராகாமல் இருக்க விதிவிலக்கு கொடுக்கக்கூடிய அளவிற்கு அவரது மனுவிலே காரணங்கள் கூறப்படவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், நீதியின் பாதையிலே குறுக்கிட்ட செயல்தான் நடைபெற்றுள்ளது"** என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(The Judges took serious exception to the trial court dispensing with the personal appearance of Ms. Jayalalithaa and said "be you ever so high, the law is above you. The grounds cited by her in the application were not all mitigating circumstances to have granted dispensation of personal appearance. To say the least, that was a ploy adopted to circumvent the due process of law.)

நீதிபதிகள் தீர்ப்புரையை முடிக்கும்போது மேலும் கூறுகிறார்கள் -

(In our view, the petitioner has raised many justifiable and reasonable apprehensions of miscarriage of justice and likelihood of bias, which would require our interference)

அதாவது "எங்களின் கருத்தின்படி; மனுதாரர் (பேராசிரியர்) நியாயப்பூர்வமான, அர்த்தம் பொதிந்த சந்தேகங்களை எழுப்பி, அதாவது நீதி திசை திரும்பியும், பாரபட்சமாகவும் செல்வதால் எங்களுடைய குறுக்கீடு அவசியம் தேவை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை" என்று உச்சநீதிமன்ற நீதிபதிகளே தெரிவித்திருக்கிறார்கள்.

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கை வேறு மாநில நீதிமன்றத்துக்கு மாற்றிட வேண்டுமென்று நமது பேராசிரியர் வைத்த வேண்டுகோள் மனுவை ஏற்று உச்ச நீதிமன்றம்

அளித்துள்ள தீர்ப்பில் இவ்வாறெல்லாம் தெரிவித்ததோடு, பின்வரும் முடிவுகளை அறிவித்தார்கள். அதாவது,

1. **"செல்வி ஜெயலலிதா தலைமையிலான அரசு; 1997ன் சி.சி. எண். 7 வழக்கில் தீய நோக்கத்தோடு, வேண்டுமென்றே அரசு வழக்கறிஞரின் உதவியோடு நேர்மையான சுதந்திரமான விசாரணையைக் குலைப்பதற்காகத் தலையிட்டுள்ளது".**

2. **"தங்கள் முந்திய வாக்குமூலங்களை மாற்றிக் கூறிய சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவோ, மறு விசாரணை செய்யவோ முயற்சிக்காமல் அரசு வழக்கறிஞர் கடமையிலிருந்து தவறியிருப்பது, அரசு வழக்கறிஞர் துறை, ஜெயலலிதா உட்பட குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்படுவதற்கு வழியமைத்துக் கொடுக்க ரகசியமாக முடிவுசெய்து செயல்பட்டுள்ளது. இதன்மூலம் நீதி நிர்வாகத்தில் தலையிட்டுள்ளது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாகிறது".**

3. **"முதல் அமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா சென்னையிலேயே இருக்கும்பொழுது இந்திய குற்றவியல் சட்டம் 313வது பிரிவின்கீழ் அவர் நேரில் ஆஜராகாமல் இருப்பதற்கு அரசு வழக்கறிஞர் ஒப்புதல் அளித்திருப்பது, அரசு வழக்கறிஞர் சுதந்திரமாகச் செயல்படவில்லை; முதல் குற்றவாளியான செல்வி ஜெயலலிதாவின் விருப்பப்படியே செயல்படுகிறார் என்பதைத் தெரிவிக்கிறது".**

4. **"1997ன் சி.சி. எண். 7 வழக்கில் முதல்அமைச்சர் ஜெயலலிதாவின் சட்ட விரோதத் தலையீடும், குற்றம் சாட்டப்பட்டவருக்கு அரசு வழக்கறிஞர் சட்ட விரோத உதவியளித்ததும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21வது பிரிவையும், இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 313வது பிரிவையும் மீறிய செயலாகும். எல்லாவற்றையும்விட, இது குற்றவியல் நீதி முறையைக் குலைக்க மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சியாகும்".**

மேலும் உச்சநீதிமன்றத்தில் வழங்கப்பட்ட இத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான குறிப்புகள் வருமாறு :-

"தி.மு.க. தொடர்ந்துள்ள வழக்கில் போதுமான முதல் நிலை ஆதாரங்கள் இருப்பதாகவே நீதிமன்றம் கருதுகின்றபடியால்

இவ்வழக்கை தமிழ்நாட்டில் நடத்தினால் நியாயம் கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது. எனவே இவ்வழக்கு வேறு மாநிலத்திற்கு மாற்றப்பட வேண்டிய வழக்கேயாகும்".

"கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, கர்நாடக அரசோடு கலந்து பேசி, இந்த வழக்கிற்காக ஒரு சிறப்பு நீதிமன்றத்தை ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஆறு வார காலத்திற்குள் பெங்களூரில் அமைக்க வேண்டும்".

"குற்றவியல் வழக்குகளில் பயிற்சி பெற்ற முதுநிலை வழக்கறிஞர் ஒருவரை இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நியமிப்பதுடன், அவருக்கு இளநிலை வழக்கறிஞர் ஒருவரும் அமர்த்தப்பட வேண்டும்".

"தலைமை நீதிபதியினால் நியமிக்கப்படும் அரசு வழக்கறிஞர் ஏற்கனவே பிறழ் சாட்சியம் அளித்த - பல்டி அடித்த அரசுத் தரப்பு சாட்சிகளை (Hostile) மீண்டும் அழைத்து மறு விசாரணை செய்வதுடன், வேண்டுமென்றே மாற்றி சாட்சியமளித்த அந்தச் சாட்சிகள் மீது குற்றவியல் நடவடிக்கைகளைத் தனியே எடுக்கவும் அறிவுறுத்தப்படுகின்றது".

"சாட்சிகளுக்கு மிரட்டுதல் இருப்பதாகக் கருதும் பட்சத்தில், அவர்களுக்குக் கர்நாடக அரசு போதிய போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்".

"குற்றவாளிகள் அனைவரும் கேள்வி எழுப்பப்படும்போது நீதிமன்றத்தில் தவறாது ஆஜராவதுடன், இவ்வழக்கைத் தினமும் (Daily Basis) **எடுத்து விசாரிக்க வேண்டும்".**

"வழக்குத் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் தமிழ்நாடு அரசு உடனடியாக சிறப்பு நீதி மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்".

இவ்வாறு உச்ச நீதிமன்றம் 18-11-2003 அன்று தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பையொட்டி செய்தியாளர்கள் என்னிடம் அப்போது கருத்துக் கேட்டபோது "எத்தகைய தீர்ப்பை நாங்கள் கோரினோமோ, அதே வகையிலான தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது. எங்களது கோரிக்கையை ஆராய்ந்து, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அளித்த தீர்ப்பில் இருந்து, நீதி, சட்டம் ஆகியவற்றுக்குப் புறம்பான வகையில் தமிழ்நாட்டில்

இந்த விசாரணை நடந்திருப்பது நிரூபணம் ஆகியிருக்கிறது. நேர்மையான முறையில் நீதி கிடைப்பதற்கு உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு உதவிசெய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதற்கு ஜெயலலிதா தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும்" என்று கூறினேன். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களும், காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையின் பொதுச் செயலாளராக அப்போதிருந்த இன்றைய மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களும்; ஜெயலலிதா முதலமைச்சர் பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டுமென்று வலியுறுத்தினார்கள்.

உச்ச நீதிமன்றம் இந்த வழக்கினை விரைவாக விசாரிக்க வேண்டுமென்றும், அன்றாடம் விசாரிக்க வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்து; அது வெளிவந்தது 18-11-2003. அப்போது தமிழகத்தில் நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சி. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவை ஏற்று, சென்னை தனி நீதிமன்றம், வழக்கைப் பெங்களூருக்கு மாற்றம் செய்வதற்கான அதிகாரப்பூர்வ உத்தரவை எப்போது பிறப்பித்தது தெரியுமா? 10-9-2004. அதாவது பத்து மாதங்களுக்குப் பிறகுதான் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவின் மீதே, அ.தி.மு.க. அரசு எவ்வளவு மெத்தனப் போக்குடன் நடவடிக்கை எடுத்தது என்பது விளங்குகிறதல்லவா?

அதற்குப் பிறகு தற்போது 10 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் வழக்கு முடிந்தபாடில்லை. காரணம், இடையிடையே பல்வேறு சாக்குபோக்குகளைக் காரணமாகக் காட்டி, சட்டத்தின் சந்துபொந்துகளில் நுழைந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்திட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, வரிசைவரிசையாக வாய்தாக்கள் பெற்றதுதானே தவிர வேறல்ல.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

7-5-2014

3880. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (3)

உடன்பிறப்பே,

பெங்களூருக்கு வழக்கு விசாரணை மாற்றப்பட்ட போதே, இந்த வழக்கு முடியும் கட்டத்தில்தான் இருந்தது. ஒருசில மாதங்களில் தீர்ப்பு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், குற்றஞ்சாட்டப்பட்ட வர்களின் அடுக்கடுக்காக வாய்தா வாங்கும் அபாரத்திறமை காரணமாகப் பத்தாண்டு காலமாக இந்த வழக்கு இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

28-3-2005 அன்று சாட்சிகளின் வாக்குமூலங்களும், வழக்கு ஆவணங்களும் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டு அனைத்துக் குற்றவாளிகளுக்கும் மற்றும் தமிழக அரசுக்கும் வழங்கப்பட்டது.

ஜெயலலிதா உட்பட நான்கு பேர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை பெங்களூரில் இரண்டாண்டுகளுக்குப் பிறகு தொடங்கியபோதும் ஜெயலலிதா தனி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. ஜெயலலிதா தரப்பில் ஒரு மாதம் அவகாசம் கேட்டார்கள். அப்போதைய சிறப்பு நீதிபதி பச்சாபுரே அவகாசம் தர மறுத்து, 18-4-2005க்கு வழக்கை ஒத்திவைத்தார். 18ஆம் தேதியன்றும் ஜெயலலிதா, சசிகலா ஆஜராக வில்லை. ஜெயலலிதாவின் வழக்கறிஞரும் ஆஜராகவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கான மூத்த வழக்கறிஞரின் உதவியாளர், மூத்த வழக்கறிஞர் உடல்நலம் சரி இல்லாமல் மருத்துவமனையிலே இருப்பதாகக் கூறினார். “அவர் வராமல் போகட்டும், குற்றஞ்சாட்டப்பட்ட 5 பேரும் எங்கே? குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆஜராகாமல் இருப்பதை வைத்தே தீர்ப்பு வழங்கி விடுவேன்” என்று கண்டிப்புடன் எச்சரிக்கை செய்தார் நீதிபதி. (இவ்வாறு நீதிபதி 18-4-2005 அன்று தெரிவித்த பிறகும்,

ஒன்பதாண்டுகள் கடந்து முடிந்திருக்கின்றன. இன்னும் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படவில்லை என்பதுதான் நீதி பரிபாலன முறையின் வேடிக்கையான நிகழ்வு) இறுதியாக விசாரணையை 2005, மே 9ந்தேதிக்கு ஒத்திவைத்த நீதிபதி அன்று ஜெயலலிதா, சசிகலா உட்பட அனைவரும் கண்டிப்பாக கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.

9-5-2005 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கே.டி. துளசி நீண்ட நாள் அவகாசம் கேட்டார். அப்போது ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட ஐந்து பேரும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் நீதிபதி பச்சாபுரே கடும் கோபமடைந்தார். "வருகிற 16ந்தேதி இறுதி அவகாசம் தருகிறேன், அதற்கு மேல் அவகாசம் தரமாட்டேன்" என்றும், "அன்று ஜெயலலிதா, சசிகலா உட்பட ஐந்து பேரும் கண்டிப்பாக ஆஜராக வேண்டும்" எனவும் உத்தரவிட்டார். அவரது வழக்கறிஞர்கள் அன்றையதினம் ஆஜராகி வழக்கைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கூறியபோது, நீதிபதி பச்சாப்புரே என்ன சொன்னார் தெரியுமா?

"நீண்ட அவகாசம் கேட்பதை ஏற்க முடியாது. வழக்கை தினந்தோறும் நடத்தவுள்ளேன். இப்படி அடிக்கடி வாய்தா கேட்டால் எப்படி வழக்கை விரைவாக நடத்துவது? (ஜெயலலிதாவின் வழக்கறிஞர் தனக்கு வேறு நீதிமன்றங்களில் பணியிருப்பதாகக் கூறினார்) உங்களுக்குப் பல கோர்ட்டுகளில் வேலை இருக்கும். உங்கள் ஒருவருக்காக இந்த வழக்கைத் தள்ளி வைக்க முடியுமா? இது நியாயமற்றது. பல ஆண்டுகளாக இந்த வழக்கு முடிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இப்படி அடிக்கடி அவகாசம் கேட்பதை ஏற்க முடியாது. இரண்டரை ஆண்டுகளாக வழக்கை வாய்தா கேட்டு இழுத்தடித்துவிட்டு தற்போது மீண்டும் வாய்தா கேட்பது சரிதானா? **சுப்ரீம் கோர்ட்டு இந்த வழக்கை விரைவாக நடத்த வேண்டுமென்று எனக்கு உத்தரவிட்டு உள்ளது. கடந்த ஆறு மாதமாக இந்த வழக்கில் எந்த விசாரணையும் நடக்கவில்லை. நான் தனியாகக் கடந்த ஆறு மாதமாக நீதிமன்றத்தில் உட்கார்ந்து வருகிறேன். தனிச் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளது போல உணருகிறேன்"** என்று நீதிபதி பச்சாப்புரே மனம் நொந்து அப்போதே சொன்னார்.

ஆனால் 16ம் தேதியன்றும் யாரும் ஆஜராகவில்லை. மாறாக அ.தி.மு.க. வழக்கறிஞர், லண்டன் சொத்துக் குவிப்பு வழக்கில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை நகல்களைத் தங்களுக்குத் தர வேண்டுமென்றும், அதன் பிறகுதான் வழக்கு விசாரணை நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அப்போது, நீதிபதி, "வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக இப்படி லண்டன் சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றப் பத்திரிகை நகலைத் தரவேண்டும் என்று கேட்கிறீர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்வளவு நாட்களும் இத்தனை வாய்தா கேட்கும்போது ஏன் இதைக் கேட்கவில்லை. தற்போது கேட்பது நியாயமற்றது. இருந்தாலும் நான் நகல்களை உடனே தருகிறேன், நாளைக்கு வாதாட நீங்கள் தயாரா?" என்றார்.

(நீதிபதியின் ஆணையின் பேரில் உடனடியாகக் குற்றப் பத்திரிகை நகல் தரப்பட்டவுடன், அது 1800 பக்கங்கள் கொண்டதாக உள்ளது என்றும், வழக்கை 3 வார காலத்திற்குத் தள்ளிவைக்க வேண்டுமென்றும் ஜெயலலிதாவின் வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டார்கள்) 3 வார வாய்தாவிற்கு நேரம் கொடுக்க மறுத்து நீதிபதி விசாரணையை 25-5-2005ஆம் தேதிக்குத் தள்ளிவைத்தார்.

இதற்கிடையே 27-6-2005 அன்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது முதல் குற்றவாளியான ஜெயலலிதா, 11-2-2002இல் சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்து நிலுவையில் இருந்த ஒரு மனுவினை அதாவது - இந்தச் சொத்துக் குவிப்பு வழக்குடன் இலண்டனில் ஓட்டல் வாங்கிய வழக்கையும் இணைத்து ஒன்றாக விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை, பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, அவ்வாறு விசாரிக்க உத்தர விட்டது. இவ்வாறு இரண்டு வழக்குகளையும் சேர்த்ததை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் ஜூலை 2005இல் ஒரு மனு கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. முதலில் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்த உச்சநீதிமன்றம், பிறகு சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணையைத் தொடரலாம் என்று உத்தரவிட்டது.

ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தொடர்ந்து இந்த வழக்கின் விசாரணையைக் காலவரம்பின்றி நீடித்துக்கொண்டே போவதில் சட்ட விதிமுறைகளை மதிக்காமல் எப்படியெல்லாம் செயல்பட்டார்கள் என்பதை நினைவிலே கொள்வது அவசியம்.

நான்காண்டுகளுக்கும் மேலாகத் தாமதப்படுத்தப்பட்டு வந்த இந்த வழக்கு விசாரணையில், 3-3-2010 அன்று 42 அரசு சாட்சிகளுக்கு சம்மன் அனுப்ப உத்தரவிட்டதை மாற்றம் செய்யக் கோரி குற்றவாளிகள் மனு ஒன்றினைத் தாக்கல் செய்தனர். 5-3-2010 அன்று இந்த மனுவினை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதே மார்ச் திங்களில்; சென்னை சிறப்பு நீதிமன்றத்தால் 5-6-1997இல் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டதை எதிர்த்து கர்நாடக உயர்நீதிமன்றத்தில், மனு ஒன்றினைக் குற்றவாளிகள் தாக்கல் செய்தனர்.

10-3-2010 அன்று இந்த மனுவும் கர்நாடக உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

கர்நாடக உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால், அதனை எதிர்த்து குற்றவாளிகள் உச்சநீதி மன்றத்தில் 19-3-2010 அன்று மனு தாக்கல் செய்தனர். அப்போது இந்த வழக்கில், உச்சநீதிமன்றம் தெரிவித்த வழிகாட்டுதல்படி, தேதிகள் மற்றும் விசாரணையை மறு பட்டியலிட்டு 3-5-2010 அன்று வழக்கை மீண்டும் துவக்க 22-3-2010 அன்று நாள் குறித்தது விசாரணை நீதிமன்றம்.

இந்த வழக்கின் விசாரணை அதிகாரிக்கு அனுமதி வழங்கப்படவில்லை, எனவே விசாரணை முழுவதும் சட்ட விரோதமானது, வழக்கு விசாரணை முழுவதையும் அத்துடன் நிறுத்த வேண்டுமென்று குற்றவாளிகள் 18-4-2010 அன்று ஒரு மனுவினைத் தாக்கல் செய்தனர். ஆனால் இந்த மனுவை 27-4-2010 அன்று விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இதனை எதிர்த்துக் குற்றவாளிகள் உச்சநீதிமன்றத்தில் எஸ்.எல்.பி. மனுவைத் தாக்கல் செய்தனர். இதனை விசாரித்த உச்சநீதிமன்றம், இந்த வழக்கை உயர்நீதிமன்றத்தில் குற்ற நடைமுறைச் சட்டம் 482இன்படி தாக்கல் செய்யலாம் என்று தெரிவித்ததை அடுத்து, இந்த மனு திரும்பப் பெறப்பட்டது.

மீண்டும் 7-5-2010 அன்று, முதல் குற்றவாளியான ஜெயலலிதா, 11-5-2010இல் உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு பற்றிய விசாரணை வருகிறது என்றும், அதனால் வழக்கை விசாரணை நீதிமன்றத்தில் ஒத்திவைக்க வேண்டும் என்றும் ஒரு கோரிக்கையினை வைத்து, அதன் காரணமாக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அதே ஆண்டில், மே திங்களில் 70 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப் பத்திரிகையில் கண்ட ஆவணங்களின் மூன்று படிகள் தேவை என்று முதல் குற்றவாளியான ஜெயலலிதா மனுதாக்கல் செய்தார். 26-6-2010 அன்று அவர் கேட்டவாறே ஆவணங்கள் வழங்கப்பட்டன.

15-7-2010 அன்று முதல் குற்றவாளியான ஜெயலலிதா ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நகல்கள் தேவையில்லை என்று மனுதாக்கல் செய்தார். 21-7-2010 அன்று மூன்றாவது குற்றவாளியான சுதாகரன் சார்பிலும், அதே மனு தாக்கல் செய்யப்பட்டது. 22-7-2010 அன்று இந்தக் கோரிக்கை சில வழிகாட்டுதல்களுடன் நிராகரிக்கப்பட்டது. எனவே 29-7-2010 அன்று முதல் குற்றவாளியான ஜெயலலிதா கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்.

நீதிமன்றத்தில் சாட்சிகள் ஆஜராகியிருந்த போதிலும், குற்றவாளிகள் வழக்கை ஒத்திவைக்கக் கேட்டுக்கொண்டதால், வழக்கு விசாரணை 6-8-2010, 9-8-2010, 11-8-2010, மற்றும் 13-8-2010 ஆகிய தேதிகளில் சாட்சிகளை விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் ஆணை பிறப்பித்தும், அது நடக்கவில்லை.

மொழிபெயர்க்கப்பட்ட நகல்கள் சம்பந்தமாகக் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா செய்துகொண்ட மேல் முறையீட்டு மனு நிலுவையில் இருந்ததால், தனி நீதிமன்றம் விசாரணையைத் தொடர்ந்து ஒத்திவைக்க நேரிட்டது.

19-10-2010 அன்று விசாரணையின்போது, குற்றவாளிகள் வழக்கை மீண்டும் ஒத்திவைக்க வேண்டுமென்று கோரினர். அவர்களது கோரிக்கையினை விசாரணை நீதிமன்றம் நிராகரித்து, சாட்சிகளை மறு விசாரணைக்கு 16-11-2010 அன்று ஆஜராகும்படி உத்தரவிட்டது. 16-11-2010 அன்றும் குற்றவாளிகள் விசாரணையை ஒத்திவைக்க வேண்டுமென்று

மீண்டும் கோரினர். அந்தக் கோரிக்கையையும் விசாரணை நீதிமன்றம் நிராகரித்து, 18-11-2010க்கு விசாரணையை ஒத்திவைத்தது. 18-11-2010 அன்று குற்றவாளிகள், தாங்கள் கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு ஒன்றினைத் தாக்கல் செய்திருப்பதாகவும், உயர்நீதி மன்றம், விசாரணை நீதிமன்ற விசாரணையைத் தள்ளிவைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவித்ததை அடுத்து, விசாரணை நீதிமன்றம் 25-11-2010க்கு ஒத்திவைத்தது.

23-11-2010 அன்று கர்நாடக உயர்நீதிமன்றம், குற்றவாளிகளின் கோரிக்கையை நிராகரித்தது. 25-11-2010 அன்று உயர்நீதி மன்றத்தின் உத்தரவு விசாரணை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, விசாரணை நீதிமன்றம் தனது விசாரணையை 30-11-2010க்கு ஒத்திவைத்தது. 30-11-2010 அன்று குற்றவாளிகள், கர்நாடக உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிராக, உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யவிருப்பதாகத் தெரிவித்ததின் அடிப்படையில், 15-12-2010க்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

15-12-2010 அன்று இரண்டு சாட்சிகளின் மறு விசாரணையும், மறு குறுக்கு விசாரணையும்; 16-12-2010 அன்று மூன்று சாட்சிகளின் மறு விசாரணையும், குறுக்கு விசாரணையும்; 3-1-2011 அன்று நான்கு சாட்சிகளின் மறு விசாரணையும், குறுக்கு விசாரணையும்; 4-1-2011 அன்று இரண்டு சாட்சிகளின் மறு விசாரணையும், குறுக்கு விசாரணையும் நடைபெற்றன. சாட்சியத்தை மொழிபெயர்த்ததில் பிழைகள் இருப்பதாகவும், குற்றவாளிகள் தரப்பில் சரியான மொழிபெயர்ப்பைச் செய்து, தாக்கல் செய்வதற்குக் கால அவகாசம் வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கப்பட்டதால், விசாரணை நீதிமன்றம் 18-1-2011க்கு விசாரணையை ஒத்திவைத்தது.

18-1-2011 அன்று குற்றவாளிகள் தரப்பில் வழக்கறிஞர் ஒருவரின் தந்தையார் இறந்துவிட்டதால், வழக்கை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோரப்பட்டு, அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அன்றையதினம் 5 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர். குற்றவாளிகள் தரப்பில் குறுக்கு

விசாரணையைத் தள்ளிவைக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டு, அதுவும் நிராகரிக்கப்பட்டது.

19-1-2011 அன்று மூன்று சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். குற்றவாளிகள் தரப்பில் குறுக்கு விசாரணையைத் தள்ளிவைக்க வேண்டுமென்று மீண்டும் கோரிக்கை வைக்கப்பட்டு, அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதே நாளில் அரசு சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய தரப்பு வாதத்தை நிறைவு செய்ததாகப் பதிவு செய்தார். குற்றவாளிகள் தரப்பில் சாட்சியங்களைப் படித்துப் பார்ப்பதற்குக் கால அவகாசம் கேட்கப்பட்டு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதுவரை நான் விவரித்தவாறே, தொடர்ந்து வழக்கு விசாரணையைக் கால வரையறையின்றித் தாமதப்படுத்துவதற்காக, குற்றவாளிகள் வாய்தாவுக்கு மேல் வரிசையாக வாய்தா வாங்கிக் காலம் கடத்தி வந்தனர். இறுதியில் விசாரணை சிறப்பு நீதிபதியின் கண்டிப்பான நடவடிக்கைகளின் காரணமாக வேறு வழியில்லாமல் அரசு வழக்கறிஞர் சாட்சியங்களைத் தொகுத்துப் படிக்கத் தொடங்கினார்.

அரசு வழக்கறிஞர், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வாதாட வேண்டியவர். கடந்த காலத்தில் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அப்போது தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தால், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அனுசரணையாக அரசு வழக்கறிஞர் நடந்து கொண்டதையெல்லாம் உச்ச நீதிமன்றமே 2003ஆம் ஆண்டில் தனது தீர்ப்பில் எடுத்துக்காட்டி, வழக்கைக் கர்நாடகாவிற்கு மாற்றிய பிறகும், 2-2-2013 அன்று கர்நாடக அரசினால் நியமனம் செய்யப்பட்ட அரசு வழக்கறிஞர் பவானிசிங், தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் பின்பற்றப்பட்ட அதே பாணியில், குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக வாதாடுகிறார் என்று தி.மு.க. சார்பில் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அவரை நீக்க வேண்டுமென்று தி.மு.க. கோரியது. கர்நாடக மாநில அரசும், அந்தக் குற்றச்சாட்டினை ஏற்றுக் கொண்டு அரசு வழக்கறிஞர் பதவியிலிருந்து பவானிசிங்கை

நீக்கி உத்தரவிட்டது. ஆனால் குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதிமன்றம்வரை சென்று, தங்களுக்கு எதிராக வாதாட வேண்டிய அரசு வழக்கறிஞராகப் பவானிசிங்தான் நீடிக்க வேண்டுமென்றும், நீதிபதியாக ஓய்வு பெற்று செல்கிற நீதிபதி பாலகிருஷ்ணா அவர்கள்தான் இந்த வழக்கினைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்றும் வாதாடினார்கள். இந்த விசித்திரத்தைக் கண்டு சட்ட நெறி முறைகளில் நம்பிக்கை கொண்டோர் ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தனர். அப்போது ஓய்வு பெற்ற நீதிபதி பாலகிருஷ்ணா தொடர்ந்து இந்த வழக்கினை விசாரிக்க முன்வராத நிலையில், தற்போது இந்த வழக்கினை நீதிபதி மைக்கேல் டி. குன்கா விசாரித்து வருகிறார்.

நீதிபதி பாலகிருஷ்ணா அவர்களே சொத்துக் குவிப்பு வழக்கினைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதிமன்றம்வரை சென்றது தொடர்பாக எனக்கு வேறொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஏற்கனவே கூட அதைத் தெரிவித்திருக்கிறேன்.

"கோடநாடு எஸ்டேட்" பற்றி உச்சநீதிமன்றத்தில் 4-4-2008 அன்று சொல்லப்பட்ட ஒரு தீர்ப்பு அப்போதே "இந்து" நாளிதழில் வெளிவந்தது. நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்த சாலையில் தடுப்பு (கேட்) ஒன்றை அமைத்து, அந்த வழியாக யாரும் செல்ல முடியாத அளவிற்குக் கோடநாடு எஸ்டேட் மானேஜர் தடுப்பதாகவும், அந்தத் தடுப்பினை நீக்கிட வேண்டுமென்றும் கூறி, பொதுமக்கள், கோட்ட வருவாய் அலுவலரிடம் (சப்-டிவிஷனல் மேஜிஸ்திரேட்) முறையிட்டு; அவர் அப்போது பிறப்பித்த ஆணையில், சாலையில் உள்ள அந்தத் தடுப்பினை அகற்றவும், அதையும் 24 மணி நேரத்திற்குள் நிறைவேற்றிட வேண்டுமென்றும், தவறினால் இந்திய தண்டனைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உத்தரவிட்டார்.

அந்த உத்தரவை எதிர்த்துக் கோடநாடு எஸ்டேட் நிர்வாகத்தின் சார்பில், அதன் மேலாளர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுத்தார். அந்த வழக்கு விசாரணைக்காக முதலில் ஒரு நீதிபதியிடம் போடப்பட்டு, அவர் அந்தக் குறிப்பிட்ட

வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு, பின்னர் அந்த வழக்கு வேறொரு நீதிபதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

இவ்வாறு வழக்கு மாற்றப்பட்டதை எதிர்த்து, ஜெயலலிதா, சசிகலா தரப்பினர் அப்போதே உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் முறையிட்டபோது, "நீதிபதியை நிர்ணயம் செய்வது என்பது தலைமை நீதிபதியின் தனிப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்" என்று உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆணையிட்டார். அத்துடன் விட்டார்களா என்ன?

அந்த ஆணையை எதிர்த்து, உச்சநீதிமன்றத்திற்குக் கோடநாடு எஸ்டேட் மேலாளர் மேல் முறையீடு செய்தார். அந்த வழக்கு தான் 4-4-2008 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் முன்பு வந்தது. அப்போது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, கோடநாடு எஸ்டேட் மேலாளருடைய கோரிக்கை நியாயம் அற்றது என்றும், இதுபோன்ற வழக்குகளை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறினார். (When Counsel said that it was a bonafide petition, the Chief Justice of India said, "It is bereft of bonafide, we will not entertain such matters")

உச்சநீதிமன்ற நீதிபதி, கோடநாடு எஸ்டேட் வழக்கறிஞரைப் பார்த்து, "உங்களுக்கு என்ன வேண்டும்? உங்களுக்கு இந்த நீதிபதிதான் வேண்டுமென்று வேட்டை ஆடுகிறீர்களா? உங்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட நீதிபதிதான் உங்களுடைய வழக்கை விசாரிக்க வேண்டுமென்று கோருவதற்கு உங்களுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது" என்றும் சொல்லியிருக்கிறார். (The Chief Justice of India asked : "What do you want? You are Bench hunting. The Chief Justice of the High Court knows many things which you may not know. You have absolutely no right to say that your matter should be heard by a particular Judge")

என்றென்றும் நினைவில் நிலைத்திருக்கக் கூடிய சட்ட நீதியின் சாரம் தோய்ந்த இந்த வார்த்தைகளையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் மறந்திருக்கக் கூடுமென்றுதான் சிலர் எண்ணுகிறார்கள்.

பெங்களூரு சொத்துக் குவிப்பு வழக்கில் குறிப்பிட்ட நீதிபதிதான் அந்த வழக்கினைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்று வைக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டு, புதிய நீதிபதி ஒருவர் அங்கே விசாரணையை மேற்கொண்டு வருகிறார்.

நீதிபதி பாலகிருஷ்ணாதான் சொத்துக் குவிப்பு வழக்கினைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பினர் கோரிக்கை வைத்து, அது நிறைவேறாமல் போனபோதே சட்டம் தன் கடமையைச் சிறப்பாகச் செய்கிறது என்றுதான் எல்லோராலும் கருதப்பட்டது.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

8-5-2014

3881. சொத்துக்குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (4)

உடன்பிறப்பே,

ஏற்கனவே 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் திட்டமிட்டு, விசாரணை தாமதப்படுத்தப்பட்ட இன்றைய நிலையிலும் இந்த வழக்கினை தொடர்ந்து மேலும் தாமதப்படுத்த பல்வேறு தந்திரங்களும் உத்திகளும் கையாளப்படுகின்றன. அதிலே ஒன்றுதான் அரசு வழக்கறிஞரே ஒரு மனுவினைத் தாக்கல் செய்தது. அதாவது சென்னையில் உள்ள பாஸ்கரன் என்பவரிடம் கொடுக்கப்பட்ட ஜெயலலிதாவுக்குச் சொந்தமான - 1,116 கிலோ வெள்ளிப் பொருள்களை, பெங்களூர் நீதிமன்றத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு மனுவினை அரசு வழக்கறிஞர் நீதிபதியிடம் தாக்கல் செய்தார். வழக்கு முடிகின்ற நேரத்தில், அரசு வழக்கறிஞரே முன்வந்து இவ்வாறு ஒரு மனுவினைத் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன? வழக்கினைத் தொடர்ந்து தாமதப்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு அந்த மனு, அரசு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், பேராசிரியர் சார்பில் ஒரு மனு மூலமாக, குறிப்பிட்ட அந்தப் பாஸ்கரன் என்பவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என்ற விவரம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே அரசு வழக்கறிஞர் பவானி சிங் தாக்கல் செய்த இந்த மனுவினைத் தள்ளுபடி செய்து, சிறப்பு நீதிபதி 28-2-2014 அன்று தீர்ப்பு அளித்திருக்கிறார். அந்தத் தீர்ப்பில்தான்:

“இந்த வழக்கு கடந்த 9 ஆண்டுகளுக்கும் மேலாக பெங்களூரில் நடந்து வருகிறது. நீதிபதி பி.ஏ. மல்லி கார்ஜுனையா, இந்த வழக்கினை விசாரித்தபோது, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 313இன் கீழ், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் நேரில் ஆஜராகி, வாக்குமூலம் கொடுத்துவிட்டனர். நீதிபதி பாலகிருஷ்ணா இந்த வழக்கினை விசாரித்த போது, சாட்சிகள் விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. அரசுத் தரப்பு மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர்களும் வாதத்தை முடித்து

விட்டனர். இந்த வழக்கு தொடர்பாக அனைத்து விவகாரங்களும் முடிவுக்கு வந்துள்ளதாக நீதிபதி பாலகிருஷ்ணா 14-8-2013 அன்றே குறிப்பிட்டிருந்தார். அதையும் கடந்து தற்போது வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த 13 ஆண்டுகளாக அரசுத் தரப்பில் ஜெயலலிதா தரப்புக்குச் சொந்தமான இந்த வெள்ளிப் பொருள்களை பாஸ்கரனிடமிருந்து பெற்றுக் கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஒப்படைப்பது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை".

"வழக்கில் மூன்றாவது நபர் (கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர்) சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்று, சென்னையில் இருந்த தங்க, வெள்ளி ஆபரணங்கள் பெங்களூருக்குக் கொண்டு வரப்பட்ட நேரத்தில், பாஸ்கரனிடமிருந்து இந்த வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்று அரசு வழக்கறிஞர் பவானி சிங் ஏன் மனு தாக்கல் செய்யவில்லை ?"

"அரசு வழக்கறிஞரான, பவானி சிங் கடந்த 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து பணியாற்றி வருகிறார். அந்தக் கால கட்டங்களில் இதுபோன்ற மனு எதையும் அவர் தாக்கல் செய்யவில்லை ."

"இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ள பவானி சிங்கிற்கு, முதல் குற்றவாளியின் வெள்ளிப் பொருள்கள் சென்னையில் இருப்பது தெரியவில்லையா? வழக்கில் இறுதி வாதத்திற்காக ஆவணங்களைப் படித்தபோதுதான் வெள்ளிப் பொருள்கள் குறித்த விவரம் அவருக்குத் தெரிந்ததாகச் சொல்வது உண்மையாகவும், நம்பும்படியாகவும் இல்லை. மேலும் வெள்ளிப் பொருள்களை வாங்கிச் சென்ற பாஸ்கரன் உயிருடன் இல்லை என்பது தெரிந்தும், அவரிடம் பொருள்களைக் கேட்கச் சொல்வதும், அவர் இறந்து விட்ட தகவல் நீதிமன்றத்தில் மரணச் சான்றிதழுடன் உறுதி செய்யப்பட்ட போதும், அரசு வழக்கறிஞர் அதனை ஏற்காமல், தனது கருத்தில் உறுதியாக இருந்து, தொடர்ந்து மனுவை வலியுறுத்துவதும் சட்டப்படி ஏற்கத் தக்கதல்ல. இதனைப் பார்க்கும்போது, வழக்கைக் கால தாமதம் செய்யும் நோக்கத்திலேயே அரசு வழக்கறிஞர் பவானி சிங் நடந்து கொள்கிறார் என்றே கருதத் தோன்றுகிறது. சொத்துக் குவிப்பு வழக்கில் முதல் குற்றவாளி வீட்டில் இருந்த வெள்ளிப் பொருள்கள்

அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் விலை மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரம் வழக்கு ஆவணங்களில் உள்ளது. வழக்கு விசாரணை முடியும் நிலையில், வெள்ளிப் பொருள்களைக் கொண்டு வருவதற்காக, கால நேரத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லை. அந்த வாதமும் சரியானதல்ல. எனவே வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்ற அரசு வழக்கறிஞரின் மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை. இது தேவையற்ற மனு என்று கருதி தள்ளுபடி செய்கிறேன்"

என்று அரசு வழக்கறிஞர் பவானிசிங் அவர்களின் மனு பற்றி சிறப்பு நீதிபதி அவர்களே விரிவாகத் தன்னுடைய உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், இந்த வழக்கில் அரசு வழக்கறிஞர் எவ்வாறெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு மிகவும் அனுசரணையாக நடந்து கொண்டு வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேறு உதாரணம் வேண்டுமா?

இப்படிப்பட்ட வழக்கறிஞர் பவானி சிங் அவர்கள் இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நீடிக்க வேண்டுமென்று, குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதி மன்றம் வரை சென்று வழக்கு தொடுத்து வலியுறுத்தியதின் உண்மையான பொருளும் உள்நோக்கமும் இப்போதாவது உள்ளங்கை நெல்லிக்கனியென ஊராருக்குப் புரிகிறதா இல்லையா?

சொத்துக் குவிப்பு வழக்கினைப் பொறுத்தவரை ஜெயலலிதாவுக்கு இரண்டு வழக்கறிஞர்கள் - ஒருவர் அரசு சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, அரசு தொடுத்த வழக்கினைப் புறக்கணித்து, தான் ஆற்றிட வேண்டிய கடமையிலிருந்து தவறி, குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினருக்கு ஆதரவாக வாதாடும் அரசு வழக்கறிஞர் பவானி சிங்; மற்றொருவர் ஜெயலலிதாவிடம் சம்பளம் பெற்றுக் கொண்டு, அவருக்கு ஆதரவாக வாதாடும் அவருடைய சொந்த வழக்கறிஞர் பி.குமார். நீதிமன்ற வரலாற்றில் இதுவரை கண்டும் கேட்டுமிராத இந்த வெட்கக்கேடான உண்மையை தமிழ்நாட்டு நாளேடுகள் மறைக்க முயன்றாலும், பொது அறிவு மிகுந்த தமிழக மக்களுக்குத் தெரியாமல் போய்விடுமா?

நீதிபதி ஜான் மைக்கேல் டி. குன்கா 7-3-2014 அன்று இறுதி வாதம் தொடங்குமென்று அறிவித்தார். ஆனால் அன்றையதினம்

அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவே இல்லை. வழக்கு 10ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. 10ஆம் தேதியன்றும் அரசு வழக்கறிஞர், பவானி சிங் ஆஜராகவில்லை. இதை அடுத்து வழக்கு 14-3-2014 அன்று விசாரணைக்கு வந்தது. நீதிபதி இறுதி வாதத்தைத் தொடங்க உத்தரவிட்டார். அன்றைய தினம் பவானி சிங் நீதிமன்றத்தில் ஆஜராகி, உடல் நிலை சரியில்லை என்று காரணம் கூறி, வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த அவர் மேற்கொண்டு வரும் முயற்சியின் தொடர்ச்சியாக பத்து நாட்கள் அவகாசம் கேட்டுக் கொண்டதோடு, அதற்கான மருத்துவச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தார். நீதிபதி அந்தச் சான்றிதழ்களைப் பார்த்து அதிருப்தி அடைந்த நிலையில், நீதிமன்றத்தில் ஆஜராகியும் வாதிடாத அரசு வழக்கறிஞர் பவானி சிங் அவரது ஒரு நாள் ஊதியமான 65 ஆயிரம் ரூபாயை அபராதமாகச் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டார். 15ஆம் தேதியன்றும் பவானி சிங் நீதிமன்றத்தில் எந்தவித அறிவிப்புமின்றியும், காரணத்தைத் தெரிவிக்காமலும் ஆஜராகவில்லை. அவரது உதவியாளர் முருகேஷ் அரசு வழக்கறிஞர் வராதது பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றார். எனவே அரசு வழக்கறிஞரின் அன்றைய ஒரு நாள் சம்பளமான 65 ஆயிரம் ரூபாயையும் அபராதமாகச் செலுத்த நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞரின் வாதம் முடிந்த பிறகுதான் தங்கள் வாதத்தைத் தொடங்க முடியுமென்று கூறி விட்டார்கள். அதற்குப் பிறகு நீதிபதி அவர்கள் அரசு வழக்கறிஞர் 21-3-2014 அன்று வாதத்தைத் தொடங்க வேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவிட்டார்.

இதற்கிடையே அரசு வழக்கறிஞர் பவானி சிங், நீகி மன்றத்தில் ஆஜர் ஆகாததற்காக சிறப்பு நீதிமன்றம் விதித்த அபராதத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சத்திய நாராயண ராவ் தள்ளுபடி செய்ததால், 21-3-2014 அன்று பவானி சிங் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகி தனது இறுதி வாதத்தைத் தொடங்கி, இந்த வழக்கில் சாட்சியம் அளித்தோர் என்னவெல்லாம் கூறினார்கள் என்பதையெல்லாம் தொகுத்து நீதிமன்றத்தில் தொடர்ந்து கூறி வருகிறார். பல நூறு கோடி ரூபாய்க்கு ஜெயலலிதா சொத்துக் குவித்தது பற்றி, சாட்சிகள்

எல்லாம் என்ன கூறியிருக்கிறார்கள் என்பது அதன் பிறகுதான் உலகத்திற்கு ஒவ்வொன்றாகத் தெரிய வந்து கொண்டிருக்கிறது.

அந்தச் சாட்சிகள், தங்கள் சாட்சியங்களில் இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி என்னென்ன உண்மைகளைக் கூறினார்கள் என்பதை நானும் ஏப்ரல் மாதம் என்னுடைய தேர்தல் சுற்றுப் பயணங்களில் எடுத்துக் கூறி, அதை ஒருசில நாளேடுகளும் வெளியிடத் தொடங்கியதுதான் தாமதம்! தவறு செய்தவர்களால் தாங்கிக் கொள்ள முடியுமா? இந்த வழக்கு விசாரணையை மேலும் தள்ளி வைக்க வாய்தா வாங்கித் தாமதப்படுத்திட என்ன வெல்லாம் செய்யலாம் என்று படாதபாடுபட்டு பல்வேறு வழிகளிலும் முனைகிறார்கள்.

அதில் ஒன்றுதான், ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாடுவதற்காக அரசினால் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர், கடமை தவறி நடந்து கொள்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி, கர்நாடக அரசே அவரை விலக்கிய நிலையில், ஜெயலலிதா தரப்பு உச்சநீதிமன்றம் வரை சென்று அதே அரசு வழக்கறிஞரான பவானி சிங் அவர்களே நீடிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தது; அந்தக் கோரிக்கையினையும் ஏற்று, உச்சநீதிமன்ற நீதிபதி சவுஹான் அவர்கள் தான் அப்போதும் பவானி சிங் தொடரலாம் என்று உத்தரவிட்டார்.

அந்த அரசு வழக்கறிஞர், பவானி சிங் சிறப்பு நீதி மன்றத்தில், தொடர்ந்து ஆஜராகாத காரணத்தால், சிறப்பு நீதிபதி அபராதம் விதித்தார். அதனை எதிர்த்து பவானி சிங் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, அங்கேயும் அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கை அதே பவானி சிங் பின்னர் உச்சநீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்றார்.

இந்த வழக்கில், தனக்கு எதிராக வாதாடுவதற்காக அரசால் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட வழக்கறிஞரே நீடிக்க வேண்டுமென்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் விரும்புவதற்கும், முயற்சிப்பதற்கும் காரணம் என்ன?

அந்தக் குறிப்பிட்ட வழக்கறிஞர், உச்சநீதிமன்றம் வரை சென்று, இந்த வழக்கினை மேலும் மூன்று வாரங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பதற்கான காரணம் என்ன?

உண்மையிலேயே பவானி சிங்கிற்கு உடல் நலம் சரியில்லை என்றால், அந்தப் பதவியிலிருந்து விலகிக் கொள்ள வேண்டியதுதானே? அல்லது அவருடைய உதவியாளரைக் கொண்டு விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டியதுதானே? உடல் நலம் அவருக்குச் சரியான பிறகு, மீண்டும் அவரே வந்து விசாரணையைத் தொடரலாம் அல்லவா?

உச்சநீதிமன்றம் 2003ஆம் ஆண்டு வழக்கு விரைவிலே முடிக்கப்பட வேண்டுமென்றும், நாள்தோறும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்ட பிறகும், உச்சநீதிமன்ற உத்தரவுக்கே புறம்பாக - உச்சநீதிமன்றமே மூன்று வார காலத்திற்கு வழக்கினை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் என்ன? அந்த மூன்று வார காலம் என்பது முக்கியமான கட்டம். மூன்று வார காலத்திற்குள், இந்த வழக்கு நடைபெற்று, தீர்ப்பு கூறப்படுமானால், நாடாளுமன்றத் தேர்தலில் குற்றம் சாற்றப்பட்டவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடும் என்று நினைத்தோ என்னவோ, இப்படி ஒரு "வழக்கு ஒத்தி வைப்பு நாடகம்" நடைபெற்றுள்ளதோ என்று நடுநிலையாளர்கள் சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதல்லவா? அதன் ரகசியம்தான் என்ன?

வழக்கறிஞர் ஒருவருக்கு உடல் நலம் இல்லை என்பதற்காக, வழக்கு விசாரணையே மூன்று வார காலத்திற்கு ஒத்தி வைக்கப்படலாம் என்றால், இனி நாட்டிலே உள்ள அத்தனை வழக்கறிஞர்களும், வாய்தா வாங்குவதற்காக, ஆளுக்கு ஒரு மருத்துவச் சான்றிதழைப் பெற்று, மூன்று வாரம் என்றும், மூன்று மாதம் என்றும், வழக்கினை விசாரிக்கத் தடை கோருவார்களானால் அதன் விளைவு எங்கே போய் முடியும்?

உச்சநீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பினை வழங்கியது பி.எஸ். சவுஹான் மற்றும் ஜே. செல்லமேஸ்வர் ஆகியோர் அடங்கிய அமர்வாகும். இதில் பி.எஸ். சவுஹான் அவர்கள் விரைவில் ஓய்வு பெறவிருக்கிறார் என்ற உண்மையையும் மறந்து விட முடியாது. இவரேதான் கடந்த சில வாரங்களுக்கு முன்பு இந்த வழக்கில் பவானி சிங் அரசு வழக்கறிஞராக நீடிக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்தவரும் ஆவார். பவானி சிங்கின் முக்கிய கோரிக்கை அபராதத் தொகையைப் பற்றியதுதான்; ஆனால் உச்சநீதிமன்ற நீதிபதி, மூன்று வார காலத்திற்கு சிறப்பு நீதிமன்றத்தில்

விசாரணையையே ரத்து செய்கிறார் என்றால் உச்சநீதிமன்றம் எந்த அளவிற்கு மிகுந்த பெருந்தன்மையோடு(?) நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரிகிறது அல்லவா?

பவானி சிங் அவர்களுக்கு சிறப்பு நீதிமன்றம் விதித்த அபராதம் இரண்டு நாட்களுக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். அந்தத் தொகையைச் செலுத்தாமல் இருக்க, வழக்கு தொடுத்ததன் மூலம் பவானி சிங் செலவழித்திருப்பது எவ்வளவு தெரியுமா? உச்சநீதி மன்றத்தில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞர்கள் ஒரு வழக்கில் ஆஜராக இலட்சக்கணக்கில் கட்டணம் வாங்குகிறார்கள். பவானி சிங்குக்காக உச்சநீதி மன்றத்தில் வாதாடிய நாகேந்திர ராய் அவர்கள் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவர் என்பதால் அவருக்குப் பல இலட்ச ரூபாய் கட்டணமாகக் கொடுக்கப்பட்டிருக்கும். அதைத் தவிர உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய இரண்டு இலட்சம் ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும். எனவே ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயைப் பாதுகாக்க, யாராவது பல இலட்சம் ரூபாயைச் செலவழிப்பார்களா? அதிலும் பவானி சிங் அவர்களின் நிதி நிலையைப் பார்த்தால், அவர் அரசு வழக்கறிஞர் என்ற முறையில் இலட்சக்கணக்கில் கட்டக்கூடிய அளவிற்கு வசதி படைத்தவராகத் தெரியவில்லை. எனவே அவரைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி, அவரிடமிருந்து பிரதிபலனாக எதையோ எதிர்பார்த்து (?) அவருக்காக உச்சநீதிமன்றத்தில் வேறு யாரோ பணம் செலவழித்து, மூத்த வழக்கறிஞரை நியமித்து வாதாடியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது அல்லவா?

அவ்வாறு பின்புலமாக இருந்தவர்களுக்கு என்ன இலாபம்? அரசு வழக்கறிஞர் பவானி சிங் நீடித்தால், அவருடைய வாதம் தங்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நினைப்பவர்கள் யார்? அப்படி நினைப்பவர்களுக்கு, இந்த விசாரணையில் மேலும் மூன்று வாரங்களுக்கு ஒரு வாய்தா கிடைப்பதன் காரணமாக, நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக தீர்ப்பு வராமல் செய்யலாம். அப்படி தீர்ப்பு வெளிவந்து விடுமானால், அது தேர்தல் முடிவினைப் பாதிக்குமோ என்று அஞ்சுகிறார்கள் என்றால், அவர்கள் மடியிலே கனம் இருப்பதாகத்தானே பொருள்! வழக்கை மூன்று வாரங்களுக்கு ஒத்தி வைப்பதன் காரணமாக, தேர்தலுக்கு முன்பாகத் தீர்ப்பு வருவதை ஒத்தி வைக்க விரும்புகிறார்கள் என்பதுதானே பொருள்! இந்தக் கருத்தினை நான் மட்டும்

கூறவில்லை. பொருளாதாரம் மற்றும் சட்ட நிபுணரான டாக்டர் கே. ஸ்ரீதர் கூறும்போது, **"பொதுவாக குற்றவாளிகள் தரப்பில்தான் வாய்தா கேட்பார்கள், ஆனால் இதில் அரசுத் தரப்பில் வாய்தா கேட்பது என்பது சரியான நடைமுறை அல்ல! பவானி சிங் தனது சொந்த செலவில் உச்சநீதிமன்றத்தை நாடவில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது"** என்று கூறியிருக்கிறார். அதுபோலவே மூத்த வழக் கறிஞர், சுரேஷ் நாயக் கூறும்போது, **"இவ்வழக்கில் அரசுத் தரப்பில் வாதம் செய்பவர் (பவானி சிங்) எப்படிச் செயல்படுகிறார் என்பதைச் சட்ட நிபுணர்கள் பார்த்து வருகிறார்கள். கடந்த 17 ஆண்டுகளாக சட்டத் துறைக்கு சவால் விடும் வகையில் நடந்து வரும் இவ்வழக்கின் போக்கைக் கவனிக்காத சட்ட நிபுணர்களோ அரசியல்வாதிகளோ இல்லை. பவானி சிங் அவர்களுக்கு தனி நீதிமன்றம் அபராதம் விதித்து எடுத்துள்ள நடவடிக்கையை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை செல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும் குறைந்த அபராதத்தை ரத்து செய்வதற்காக பல லட்சம் செலவிடும் நிலையில் அவர் இல்லை. அவரை ஏதோ சில அரசியல் சக்திகள் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது"** என்று மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. சுரேஷ் நாயக் கூறியிருக்கிறார்.

எப்படியோ, மூன்று வார காலத்திற்கு வழக்கினை நடத்தக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் தடைபெற்றார்கள். அந்தத் தடையைப் பெறக் காரணம், அரசு வழக்கறிஞரின் உடல் நிலையோ, அவருக்கு விதிக்கப்பட்ட அபராதமோ அல்ல என்பது மக்களுக்கு நன்றாகப் புரிந்து விட்டது. என்ன காரணம் என்பதும் மக்களுக்குத் தெளிவாகி விட்டது. இப்படியெல்லாம் செய்து, வழக்கை திசை திருப்பிட நினைப்பவர்கள் யார், என்ன நோக்கத்தோடு அவர்கள் அப்படிச் செய்கிறார் கள் என்பதை எளிதில் புரிந்து கொள்ளும் நிலையில் தான் தமிழகப் பொதுமக்கள் இருக்கிறார்கள்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக கடந்த மாதம் வரையில் இருந்த தமிழகத்தைச் சேர்ந்த திரு. சதாசிவம் அவர்கள் தற்போது ஓய்வு பெற்று புதிதாக வந்திருக்கும் நீதியரசர் திரு. லோதா அவர்கள் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் தேதியன்று ஒரு சிறப்பான தீர்ப்பினை வெளியிட்டார். அந்தத் தீர்ப்பில், **"பதவியில் இருக்கும் நாடாளு மன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு எதிரான**

வழக்குகளில், அவை தொடரப்பட்ட, ஓர் ஆண்டுக்குள் வழக்கு விசாரணையை நீதிமன்றங்கள் முடித்து விட வேண்டும். நீதிமன்றங்கள் அவ்வாறு ஓர் ஆண்டுக்குள் விசாரணையை முடிக்க முடியாவிட்டால், அதற்கான காரணம் குறித்து அந்தந்த நீதிமன்றங்களுக்குரிய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் விளக்கம் அளிக்க வேண்டும்" என்று தீர்ப்பு அளித்ததையும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளின் விசாரணைக்குத் தடை விதிக்கக் கூடாது என்ற அம்சம், அந்தச் சட்டத்திலேயே இடம் பெற்றிருப்பதையும், ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் மட்டும், அதற்கு எதிர்மறையாக 3 வாரங்களுக்கு உச்சநீதிமன்றமே விசாரணைக்குத் தடை விதித்திருப்பதையும் பார்த்தோம்.

அபராதம் விதித்ததை ரத்து செய்யக் கோரி, பவானி சிங் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு மீதான விசாரணையின் போது, பவானி சிங் சார்பில் ஆஜரான வழக்கறிஞரிடம், இந்த வழக்கில் அதிகப்படியான வாய்தா வாங்கியதால் நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையை ஏன் செலுத்தக்கூடாது என்று நீதிபதிகள் கேட்டனர். அபராதத் தொகையை, பின்னர் 20 ஆயிரமாகக் குறைத்தது மட்டுமன்றி அதனை அவசியம் செலுத்த வேண்டுமென்றும் நீதிபதிகள் கூறிவிட்டார்கள்.

மேலும் பெங்களூரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் கண்டிப்பாக ஆஜராக வேண்டுமென்றும், தந்தை இறந்து விட்டார், தாய் இறந்து விட்டார் என்று சாக்குபோக்கு சொல்லக் கூடாது என்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. மேலும் மூன்று வார காலம் விதித்திருந்த தடையை உச்சநீதிமன்றம் நீக்கி உத்தரவிட்டது.

அன்புள்ள,

மு.க.

09-05-2014

(தொடரும்)

3882. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (5)

உடன்பிறப்பே,

ஏற்கனவே 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் திட்டமிட்டு, விசாரணை தாமதப்படுத்தப்பட்ட இன்றைய நிலையிலும் இந்த வழக்கினைத் தொடர்ந்து மேலும் தாமதப்படுத்த பல்வேறு தந்திரங்களும் உத்திகளும் கையாளப்படுகின்றன. அதிலே ஒன்றுதான் அரசு வழக்கறிஞரே ஒரு மனுவினைத் தாக்கல் செய்தது. அதாவது சென்னையில் உள்ள பாஸ்கரன் என்பவரிடம் கொடுக்கப்பட்ட ஜெயலலிதாவுக்குச் சொந்தமான - 1,116 கிலோ வெள்ளிப் பொருள்களை, பெங்களூர் நீதிமன்றத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஒரு மனுவினை அரசு வழக்கறிஞர் நீதிபதியிடம் தாக்கல் செய்தார். வழக்கு முடிகின்ற நேரத்தில், அரசு வழக்கறிஞரே முன்வந்து இவ்வாறு ஒரு மனுவினைத் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன? வழக்கினைத் தொடர்ந்து தாமதப்படுத்த வேண்டுமென்ற உள்நோக்கத்தோடு அந்த மனு, அரசு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், பேராசிரியர் சார்பில் ஒரு மனு மூலமாக, குறிப்பிட்ட அந்தப் பாஸ்கரன் என்பவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என்ற விவரம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே அரசு வழக்கறிஞர் பவானிசிங் தாக்கல் செய்த இந்த மனுவினைத் தள்ளுபடி செய்து, சிறப்பு நீதிபதி 28-2-2014 அன்று தீர்ப்பு அளித்திருக்கிறார். அந்தத் தீர்ப்பில்தான்:

“இந்த வழக்கு கடந்த 9 ஆண்டுகளுக்கும் மேலாக பெங்களூரில் நடந்து வருகிறது. நீதிபதி பி.ஏ. மல்லி கார்ஜுனையா, இந்த வழக்கினை விசாரித்தபோது, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 313இன் கீழ், குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் நேரில் ஆஜராகி, வாக்குமூலம் கொடுத்துவிட்டனர். நீதிபதி பாலகிருஷ்ணா இந்த வழக்கினை விசாரித்தபோது, சாட்சிகள் விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. அரசுத் தரப்பு மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர்களும் வாதத்தை முடித்து விட்டனர். இந்த

வழக்கு தொடர்பாக அனைத்து விவகாரங்களும் முடிவுக்கு வந்துள்ளதாக நீதிபதி பாலகிருஷ்ணா 14-8-2013 அன்றே குறிப்பிட்டிருந்தார். அதையும் கடந்து தற்போது வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த 13 ஆண்டுகளாக அரசுத் தரப்பில் ஜெயலலிதா தரப்புக்குச் சொந்தமான இந்த வெள்ளிப் பொருள்களைப் பாஸ்கரனிடமிருந்து பெற்றுக் கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஒப்படைப்பது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை".

"வழக்கில் மூன்றாவது நபர் (கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர்) சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்று, சென்னையில் இருந்த தங்க, வெள்ளி ஆபரணங்கள் பெங்களூருக்குக் கொண்டு வரப்பட்ட நேரத்தில், பாஸ்கரனிடமிருந்து இந்த வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்று அரசு வழக்கறிஞர் பவானிசிங் ஏன் மனு தாக்கல் செய்யவில்லை?"

"அரசு வழக்கறிஞரான, பவானிசிங் கடந்த 2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து பணியாற்றி வருகிறார். அந்தக் கால கட்டங்களில் இதுபோன்ற மனு எதையும் அவர் தாக்கல் செய்யவில்லை."

"இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டுள்ள பவானிசிங்கிற்கு, முதல் குற்றவாளியின் வெள்ளிப் பொருள்கள் சென்னையில் இருப்பது தெரியவில்லையா? வழக்கில் இறுதி வாதத்திற்காக ஆவணங்களைப் படித்தபோதுதான் வெள்ளிப் பொருள்கள் குறித்த விவரம் அவருக்குத் தெரிந்ததாகச் சொல்வது உண்மையாகவும், நம்பும்படியாகவும் இல்லை. மேலும் வெள்ளிப் பொருள்களை வாங்கிச் சென்ற பாஸ்கரன் உயிருடன் இல்லை என்பது தெரிந்தும், அவரிடம் பொருள்களைக் கேட்கச் சொல்வதும், அவர் இறந்துவிட்ட தகவல் நீதிமன்றத்தில் மரணச் சான்றிதழுடன் உறுதிசெய்யப்பட்ட போதும், அரசு வழக்கறிஞர் அதனை ஏற்காமல், தனது கருத்தில் உறுதியாக இருந்து, தொடர்ந்து மனுவை வலியுறுத்துவதும் சட்டப்படி ஏற்கத் தக்கதல்ல. இதனைப் பார்க்கும்போது, வழக்கைக் கால தாமதம் செய்யும் நோக்கத்திலேயே அரசு வழக்கறிஞர் பவானி சிங் நடந்து கொள்கிறார் என்றே கருதத் தோன்றுகிறது. சொத்துக் குவிப்பு வழக்கில் முதல் குற்றவாளி வீட்டில் இருந்த வெள்ளிப்

பொருள்கள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் விலை மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரம் வழக்கு ஆவணங்களில் உள்ளது. வழக்கு விசாரணை முடியும் நிலையில், வெள்ளிப் பொருள்களைக் கொண்டு வருவதற்காக, கால நேரத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லை. அந்த வாதமும் சரியானதல்ல. எனவே வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்ற அரசு வழக்கறிஞரின் மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை. இது தேவையற்ற மனு என்று கருதித் தள்ளுபடி செய்கிறேன்”

என்று அரசு வழக்கறிஞர் பவானி சிங் அவர்களின் மனு பற்றி சிறப்பு நீதிபதி அவர்களே விரிவாகத் தன்னுடைய உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், இந்த வழக்கில் அரசு வழக்கறிஞர் எவ்வாறெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு மிகவும் அனுசரணையாக நடந்துகொண்டு வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேறு உதாரணம் வேண்டுமா?

இப்படிப்பட்ட வழக்கறிஞர் பவானிசிங் அவர்கள் இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நீடிக்க வேண்டுமென்று, குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதி மன்றம் வரை சென்று வழக்கு தொடுத்து வலியுறுத்தியதின் உண்மையான பொருளும் உள்நோக்கமும் இப்போதாவது உள்ளங்கை நெல்லிக்கனியென ஊராருக்குப் புரிகிறதா இல்லையா?

சொத்துக் குவிப்பு வழக்கினைப் பொறுத்தவரை ஜெயலலிதாவுக்கு இரண்டு வழக்கறிஞர்கள் - ஒருவர் அரசு சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, அரசு தொடுத்த வழக்கினைப் புறக்கணித்து, தான் ஆற்றிட வேண்டிய கடமையிலிருந்து தவறி, குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினருக்கு ஆதரவாக வாதாடும் அரசு வழக்கறிஞர் பவானிசிங்; மற்றொருவர் ஜெயலலிதாவிடம் சம்பளம் பெற்றுக்கொண்டு, அவருக்கு ஆதரவாக வாதாடும் அவருடைய சொந்த வழக்கறிஞர் பி.குமார். நீதிமன்ற வரலாற்றில் இதுவரை கண்டும் கேட்டுமிராத இந்த வெட்கக்கேடான உண்மையைத் தமிழ்நாட்டு நாளேடுகள் மறைக்க முயன்றாலும், பொது அறிவு மிகுந்த தமிழக மக்களுக்குத் தெரியாமல் போய்விடுமா?

நீதிபதி ஜான் மைக்கேல் டி. குன்கா 7-3-2014 அன்று இறுதி வாதம் தொடங்குமென்று அறிவித்தார். ஆனால் அன்றையதினம்

அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவே இல்லை. வழக்கு 10ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 10ஆம் தேதியன்றும் அரசு வழக்கறிஞர், பவானிசிங் ஆஜராகவில்லை. இதை அடுத்து வழக்கு 14-3-2014 அன்று விசாரணைக்கு வந்தது. நீதிபதி இறுதி வாதத்தைத் தொடங்க உத்தரவிட்டார். அன்றைய தினம் பவானி சிங் நீதிமன்றத்தில் ஆஜராகி, உடல் நிலை சரியில்லை என்று காரணம் கூறி, வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த அவர் மேற்கொண்டுவரும் முயற்சியின் தொடர்ச்சியாகப் பத்து நாட்கள் அவகாசம் கேட்டுக்கொண்டதோடு, அதற்கான மருத்துவச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தார். நீதிபதி அந்தச் சான்றிதழ்களைப் பார்த்து அதிருப்தி அடைந்த நிலையில், நீதிமன்றத்தில் ஆஜராகியும் வாதிடாத அரசு வழக்கறிஞர் பவானிசிங் அவரது ஒரு நாள் ஊதியமான 65 ஆயிரம் ரூபாயை அபராதமாகச் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டார். 15ஆம் தேதியன்றும் பவானிசிங் நீதிமன்றத்தில் எந்தவித அறிவிப்புமின்றியும், காரணத்தைத் தெரிவிக்காமலும் ஆஜராகவில்லை. அவரது உதவியாளர் முருகேஷ் அரசு வழக்கறிஞர் வராதது பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றார். எனவே அரசு வழக்கறிஞரின் அன்றைய ஒரு நாள் சம்பளமான 65 ஆயிரம் ரூபாயையும் அபராதமாகச் செலுத்த நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞரின் வாதம் முடிந்த பிறகுதான் தங்கள் வாதத்தைத் தொடங்க முடியுமென்று கூறிவிட்டார்கள். அதற்குப் பிறகு நீதிபதி அவர்கள் அரசு வழக்கறிஞர் 21-3-2014 அன்று வாதத்தைத் தொடங்க வேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவிட்டார்.

இதற்கிடையே அரசு வழக்கறிஞர் பவானிசிங், நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததற்காக சிறப்பு நீதிமன்றம் விதித்த அபராதத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சத்திய நாராயணராவ் தள்ளுபடி செய்ததால், 21-3-2014 அன்று பவானிசிங் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகித் தனது இறுதி வாதத்தைத் தொடங்கி, இந்த வழக்கில் சாட்சியம் அளித்தோர் என்னவெல்லாம் கூறினார்கள் என்பதையெல்லாம் தொகுத்து நீதிமன்றத்தில் தொடர்ந்து கூறிவருகிறார். பல நூறு கோடி ரூபாய்க்கு ஜெயலலிதா சொத்துக் குவித்தது பற்றி, சாட்சிகள்

எல்லாம் என்ன கூறியிருக்கிறார்கள் என்பது அதன் பிறகுதான் உலகத்திற்கு ஒவ்வொன்றாகத் தெரியவந்து கொண்டிருக்கிறது.

அந்தச் சாட்சிகள், தங்கள் சாட்சியங்களில் இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி என்னென்ன உண்மைகளைக் கூறினார்கள் என்பதை நானும் ஏப்ரல் மாதம் என்னுடைய தேர்தல் சுற்றுப் பயணங்களில் எடுத்துக்கூறி, அதை ஒருசில நாளேடுகளும் வெளியிடத் தொடங்கியது தான் தாமதம்! தவறு செய்தவர்களால் தாங்கிக்கொள்ள முடியுமா? இந்த வழக்கு விசாரணையை மேலும் தள்ளிவைக்க வாய்தா வாங்கித் தாமதப்படுத்திட என்னவெல்லாம் செய்யலாம் என்று படாதபாடுபட்டுப் பல்வேறு வழிகளிலும் முனைகிறார்கள்.

அதில் ஒன்றுதான், ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாடுவதற்காக அரசினால் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர், கடமை தவறி நடந்துகொள்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி, கர்நாடக அரசே அவரை விலக்கிய நிலையில், ஜெயலலிதா தரப்பு உச்சநீதிமன்றம் வரை சென்று அதே அரசு வழக்கறிஞரான பவானி சிங் அவர்களே நீடிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தது; அந்தக் கோரிக்கையினையும் ஏற்று, உச்சநீதிமன்ற நீதிபதி சவுஹான் அவர்கள்தான் அப்போதும் பவானிசிங் தொடரலாம் என்று உத்தரவிட்டார்.

அந்த அரசு வழக்கறிஞர், பவானிசிங் சிறப்பு நீதி மன்றத்தில், தொடர்ந்து ஆஜராகாத காரணத்தால், சிறப்பு நீதிபதி அபராதம் விதித்தார். அதனை எதிர்த்து பவானிசிங் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, அங்கேயும் அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கை அதே பவானிசிங் பின்னர் உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச்சென்றார்.

இந்த வழக்கில், தனக்கு எதிராக வாதாடுவதற்காக அரசால் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட வழக்கறிஞரே நீடிக்க வேண்டுமென்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் விரும்புவதற்கும், முயற்சிப்பதற்கும் காரணம் என்ன?

அந்தக் குறிப்பிட்ட வழக்கறிஞர், உச்சநீதிமன்றம்வரை சென்று, இந்த வழக்கினை மேலும் மூன்று வாரங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பதற்கான காரணம் என்ன?

உண்மையிலேயே பவானிசிங்கிற்கு உடல் நலம் சரியில்லை என்றால், அந்தப் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டியதுதானே? அல்லது அவருடைய உதவியாளரைக் கொண்டு விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டியதுதானே? உடல் நலம் அவருக்குச் சரியான பிறகு, மீண்டும் அவரே வந்து விசாரணையைத் தொடரலாம் அல்லவா?

உச்சநீதிமன்றம் 2003ஆம் ஆண்டு வழக்கு விரைவிலே முடிக்கப்பட வேண்டுமென்றும், நாள்தோறும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்ட பிறகும், உச்சநீதிமன்ற உத்தரவுக்கே புறம்பாக - உச்சநீதிமன்றமே மூன்று வார காலத்திற்கு வழக்கினை நிறுத்திவைக்க வேண்டிய அவசியம் என்ன? அந்த மூன்று வார காலம் என்பது முக்கியமான கட்டம். மூன்று வார காலத்திற்குள், இந்த வழக்கு நடைபெற்று, தீர்ப்பு கூறப்படுமானால், நாடாளுமன்றத் தேர்தலில் குற்றம் சாற்றப்பட்டவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடும் என்று நினைத்தோ என்னவோ, இப்படி ஒரு "வழக்கு ஒத்திவைப்பு நாடகம்" நடைபெற்றுள்ளதோ என்று நடுநிலையாளர்கள் சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதல்லவா? அதன் ரகசியம்தான் என்ன?

வழக்கறிஞர் ஒருவருக்கு உடல் நலம் இல்லை என்பதற்காக, வழக்கு விசாரணையே மூன்று வாரகாலத்திற்கு ஒத்தி வைக்கப்படலாம் என்றால், இனி நாட்டிலே உள்ள அத்தனை வழக்கறிஞர்களும், வாய்தா வாங்குவதற்காக, ஆளுக்கு ஒரு மருத்துவச் சான்றிதழைப் பெற்று, மூன்று வாரம் என்றும், மூன்று மாதம் என்றும், வழக்கினை விசாரிக்கத் தடைகோருவார்களானால் அதன் விளைவு எங்கே போய் முடியும்?

உச்சநீதிமன்றத்தில் இந்தத் தீர்ப்பினை வழங்கியது பி.எஸ். சவுகான் மற்றும் ஜே. செல்லமேஸ்வர் ஆகியோர் அடங்கிய அமர்வாகும். இதில் பி.எஸ். சவுகான் அவர்கள் விரைவில் ஓய்வு பெறவிருக்கிறார் என்ற உண்மையையும் மறந்துவிட முடியாது. இவரேதான் கடந்த சில வாரங்களுக்கு முன்பு இந்த வழக்கில் பவானிசிங் அரசு வழக்கறிஞராக நீடிக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்தவரும் ஆவார். பவானிசிங்கின் முக்கிய கோரிக்கை அபராதத் தொகையைப் பற்றியதுதான்; ஆனால் உச்சநீதிமன்ற நீதிபதி, மூன்று வாரகாலத்திற்குச் சிறப்பு நீதிமன்றத்தில்

விசாரணையையே ரத்து செய்கிறார் என்றால் உச்சநீதிமன்றம் எந்த அளவிற்கு மிகுந்த பெருந்தன்மையோடு(?) நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரிகிறது அல்லவா?

பவானிசிங் அவர்களுக்குச் சிறப்பு நீதிமன்றம் விதித்த அபராதம் இரண்டு நாட்களுக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். அந்தத் தொகையைச் செலுத்தாமல் இருக்க, வழக்கு தொடுத்ததன் மூலம் பவானிசிங் செலவழித்திருப்பது எவ்வளவு தெரியுமா? உச்சநீதிமன்றத்தில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞர்கள் ஒரு வழக்கில் ஆஜராக இலட்சக்கணக்கில் கட்டணம் வாங்குகிறார்கள். பவானிசிங்குக்காக உச்சநீதிமன்றத்தில் வாதாடிய நாகேந்திரராய் அவர்கள் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவர் என்பதால் அவருக்குப் பல இலட்ச ரூபாய் கட்டணமாகக் கொடுக்கப்பட்டிருக்கும். அதைத் தவிர உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய இரண்டு இலட்சம் ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும். எனவே ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயைப் பாதுகாக்க, யாராவது பல இலட்சம் ரூபாயைச் செலவழிப்பார்களா? அதிலும் பவானிசிங் அவர்களின் நிதி நிலையைப் பார்த்தால், அவர் அரசு வழக்கறிஞர் என்ற முறையில் இலட்சக்கணக்கில் கட்டக்கூடிய அளவிற்கு வசதி படைத்தவராகத் தெரியவில்லை. எனவே அவரைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி, அவரிடமிருந்து பிரதிபலனாக எதையோ எதிர்பார்த்து (?) அவருக்காக உச்சநீதிமன்றத்தில் வேறு யாரோ பணம் செலவழித்து, மூத்த வழக்கறிஞரை நியமித்து வாதாடியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது அல்லவா?

அவ்வாறு பின்பலமாக இருந்தவர்களுக்கு என்ன இலாபம்? அரசு வழக்கறிஞர் பவானிசிங் நீடித்தால், அவருடைய வாதம் தங்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று நினைப்பவர்கள் யார்? அப்படி நினைப்பவர்களுக்கு, இந்த விசாரணையில் மேலும் மூன்று வாரங்களுக்கு ஒரு வாய்தா கிடைப்பதன் காரணமாக, நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன்பாகத் தீர்ப்பு வராமல் செய்யலாம். அப்படி தீர்ப்பு வெளிவந்து விடுமானால், அது தேர்தல் முடிவினைப் பாதிக்குமோ என்று அஞ்சுகிறார்கள் என்றால், அவர்கள் மடியிலே கனம் இருப்பதாகத்தானே பொருள்! வழக்கை மூன்று வாரங்களுக்கு ஒத்திவைப்பதன் காரணமாக, தேர்தலுக்கு முன்பாகத் தீர்ப்பு வருவதை ஒத்திவைக்க விரும்புகிறார்கள் என்பதுதானே பொருள்! இந்தக் கருத்தினை நான் மட்டும்

கூறவில்லை. பொருளாதாரம் மற்றும் சட்ட நிபுணரான டாக்டர் கே. ஸ்ரீதர் கூறும்போது, "பொதுவாகக் குற்றவாளிகள் தரப்பில்தான் வாய்தா கேட்பார்கள், ஆனால் இதில் அரசுத் தரப்பில் வாய்தா கேட்பது என்பது சரியான நடைமுறை அல்ல! பவானிசிங் தனது சொந்த செலவில் உச்சநீதிமன்றத்தை நாடவில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது" என்று கூறியிருக்கிறார். அதுபோலவே மூத்த வழக்கறிஞர், சுரேஷ் நாயக் கூறும்போது, "இவ்வழக்கில் அரசுத் தரப்பில் வாதம் செய்பவர் (பவானிசிங்) எப்படிச் செயல்படுகிறார் என்பதைச் சட்ட நிபுணர்கள் பார்த்து வருகிறார்கள். கடந்த 17 ஆண்டுகளாக சட்டத் துறைக்குச் சவால் விடும் வகையில் நடந்து வரும் இவ்வழக்கின் போக்கைக் கவனிக்காத சட்ட நிபுணர்களோ அரசியல்வாதிகளோ இல்லை. பவானிசிங் அவர்களுக்குத் தனி நீதிமன்றம் அபராதம் விதித்து எடுத்துள்ள நடவடிக்கையை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை செல்ல வேண்டிய அவசியமில்லை. மேலும் குறைந்த அபராதத்தை ரத்து செய்வதற்காகப் பல லட்சம் செலவிடும் நிலையில் அவர் இல்லை. அவரை ஏதோ சில அரசியல் சக்திகள் **தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது**" என்று மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. சுரேஷ் நாயக் கூறியிருக்கிறார்.

எப்படியோ, மூன்று வார காலத்திற்கு வழக்கினை நடத்தக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் தடைபெற்றார்கள். அந்தத் தடையைப் பெறக் காரணம், அரசு வழக்கறிஞரின் உடல் நிலையோ, அவருக்கு விதிக்கப்பட்ட அபராதமோ அல்ல என்பது மக்களுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. என்ன காரணம் என்பதும் மக்களுக்குத் தெளிவாகி விட்டது. இப்படியெல்லாம் செய்து, வழக்கை திசை திருப்பிட நினைப்பவர்கள் யார், என்ன நோக்கத்தோடு அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் என்பதை எளிதில் புரிந்துகொள்ளும் நிலையில்தான் தமிழகப் பொதுமக்கள் இருக்கிறார்கள்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக கடந்த மாதம் வரையில் இருந்த தமிழகத்தைச் சேர்ந்த திரு. சதாசிவம் அவர்கள் தற்போது ஓய்வு பெற்றுப் புதிதாக வந்திருக்கும் நீதியரசர் திரு. லோதா அவர்கள் கடந்த மார்ச் மாதம் 10ஆம் தேதியன்று ஒரு சிறப்பான தீர்ப்பினை வெளியிட்டார். அந்தத் தீர்ப்பில், "பதவியில் இருக்கும் நாடாளுமன்ற மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு

எதிரான வழக்குகளில், அவை தொடரப்பட்ட, ஓர் ஆண்டுக்குள் வழக்கு விசாரணையை நீதிமன்றங்கள் முடித்துவிட வேண்டும். நீதிமன்றங்கள் அவ்வாறு ஓர் ஆண்டுக்குள் விசாரணையை முடிக்க முடியாவிட்டால், அதற்கான காரணம் குறித்து அந்தந்த நீதிமன்றங் களுக்குரிய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியிடம் விளக்கம் அளிக்க வேண்டும்" என்று தீர்ப்பு அளித்ததையும், ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ்த் தொடுக்கப்பட்ட வழக்குகளின் விசாரணைக்குத் தடை விதிக்கக் கூடாது என்ற அம்சம், அந்தச் சட்டத்திலேயே இடம் பெற்றிருப்பதையும், ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் மட்டும், அதற்கு எதிர்மறையாக 3 வாரங்களுக்கு உச்சநீதிமன்றமே விசாரணைக்குத் தடை விதித்திருப்பதையும் பார்த்தோம்.

அபராதம் விதித்ததை ரத்துசெய்யக் கோரி, பவானிசிங் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு மீதான விசாரணையின் போது, பவானிசிங் சார்பில் ஆஜரான வழக்கறிஞரிடம், இந்த வழக்கில் அதிகப்படியான வாய்தா வாங்கியதால் நீதிமன்றம் விதித்த அபராதத் தொகையை ஏன் செலுத்தக்கூடாது என்று நீதிபதிகள் கேட்டனர். அபராதத் தொகையை, பின்னர் 20 ஆயிரமாகக் குறைத்தது மட்டுமன்றி அதனை அவசியம் செலுத்த வேண்டுமென்றும் நீதிபதிகள் கூறிவிட்டார்கள்.

மேலும் பெங்களூரில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் கண்டிப்பாக ஆஜராக வேண்டுமென்றும், தந்தை இறந்துவிட்டார், தாய் இறந்து விட்டார் என்று சாக்குபோக்கு சொல்லக் கூடாது என்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. மேலும் மூன்று வார காலம் விதித்திருந்த தடையை உச்சநீதிமன்றம் நீக்கி உத்தரவிட்டது.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

10-5-2014

3883. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (6)

உடன்பிறப்பே,

21-3-2014 முதல் தனது இறுதி வாதத்தைப் பவானிசிங் தொடங்கினார். பெங்களூரில் நடைபெறும் இந்த வழக்கில் அரசு வழக்கறிஞர் பவானிசிங் அவர்களே, சாட்சிகள் எல்லாம் தங்கள் சாட்சியங்களில் என்ன தெரிவித்தார்கள் என்பதையெல்லாம் வரிசையாக நீதிமன்றத்திலே தொகுத்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சாட்சியங்கள் மூலமாக வெளிவந்த விபரங்கள் தமிழகத்தில் "முரசொலி", "தினகரன்" ஆகிய ஏடுகளைத் தவிர மற்ற ஏடுகளால் வெளியிடப்படவில்லை. அவர் படித்துக் காட்டிய சாட்சியங் களாவன:-

ஜெயலலிதாவிற்குச் சொந்தமாகக் கொடநாட்டில் 800 ஏக்கர் நிலமும், நெல்லையில் 1,190 ஏக்கர் நிலமும், ஊத்துக்கோட்டையில் 200 ஏக்கர் நிலமும், சிறுதாவூரில் 25 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டதற்கான சாட்சியங்களை நீதிமன்றத்தில் அவர் படித்துக் காண்பித்தார்.

''அந்த நிலங்களை, அப்போது அரசுப்பணியில் இருந்த வேளாண்மைத் துறை அதிகாரி ராதா கிருஷ்ணன் என்பவரை, முறைகேடாகச் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தி, நிலங்களை அவர் ஆய்வு செய்தபிறகு, வாங்கப்பட்டுள்ளன'' என்றும் பவானிசிங் குறிப்பிட்டார்.

மேலும், வாகனங்கள் வாங்கிக்கொடுத்தவர்கள் அளித்த சாட்சியங்களின் விவரத்தையும் பவானிசிங், நீதிபதியிடம் எடுத்துரைத்தார்.

''1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலான அந்த ஐந்தாண்டுகளில் ஜெயலலிதா உள்ளிட்ட குற்றவாளிகள், சேர்த்த சொத்துக்களின்

அன்றைய மதிப்பு பல லட்சங்கள். இன்று அதன் மதிப்பு 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பெருகி உள்ளது" என்றும் பவானிசிங் தனது வாதத்தின் போது சுட்டிக்காட்டினார்.

மேலும் அரசு வழக்கறிஞர், "இந்த வழக்கில் 1 முதல் 4 வரையிலான குற்றவாளிகள் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்கள் என்பதற்குப் பல கம்பெனிகளின் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் நான்கு குற்றவாளிகளும் கூட்டுச் சதி செய்து, முதல் குற்றவாளி முதலமைச்சராக இருந்தபோது, அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவருக்காகவும், அவரைச் சார்ந்த மற்ற 3 குற்றவாளிகளுக்காகவும் தங்களது வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்பதுதான் இந்த வழக்கின் சாராம்சமாகும்" என்றும் எடுத்துரைத்தார் பவானிசிங்.

"இந்த வழக்கில் மூன்றாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள வி.என்.சுதாகரனை முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளவர் (ஜெயலலிதா) தத்துப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டு பிரம்மாண்டமான முறையில் திருமணம் செய்து வைத்துள்ளார்."

"குற்றம் சாட்டப்பட்டவர்கள் வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்திருப்பதற்கான ஆவணங்கள் உள்ளன" என்ற விபரங்களை நீதிமன்றத்தில் எடுத்துக்கூறினார்.

குற்றவாளிகள் பல நிறுவனங்களை வாங்கியதற்கான ஆவணங்கள் குறித்தும், அந்த நிறுவனங்களின் பெயர்களிலேயே பல அசையாச் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ள விவரங்களையும் பவானிசிங் படித்துக் காண்பித்தார்.

சசிகலாவும், இளவரசியும் சென்று நீலாங்கரையில் உள்ள ஒரு பங்களாவைச் சுற்றிப்பார்த்து, அதை வாங்கியது சம்மந்தமாக அந்த இடத்தின் உரிமையாளர் வழங்கியிருந்த சாட்சியத்தையும்; அதேபோன்று நீலாங்கரையில் நீச்சல் குளம் உள்பட ஒரு பங்களா அமைந்த இடத்தினைச் சுதாகரன் வாங்கியது சம்மந்தமாக அந்த இடத்தின் உரிமையாளர் அளித்திருந்த சாட்சியத்தையும்; ஜெயலலிதா கொடநாட்டில் வாங்கிய 800 ஏக்கர் நிலத்தினைச் சீரமைக்க வேளாண்மைத்துறை அலுவலர் ராதாகிருஷ்ணனை அழைத்தது பற்றி அந்த அதிகாரியே அளித்த

சாட்சியத்தையும்; மேலும், அதே வேளாண்மைத் துறை அதிகாரி ராதாகிருஷ்ணன், சுதாகரனால் முறைகேடாகச் சொந்தத் தேவைகளுக்காக அனுப்பப்பட்டு, அவர் திருநெல்வேலியில் 1190 ஏக்கர் நிலத்தினை ஆய்வு செய்த பிறகு, வாங்கியது குறித்த சாட்சியத்தையும்; சென்னை அருகே உள்ள வாலாஜாபாத்தில் 100 ஏக்கர் நிலத்தினை அந்த இடத்தின் உரிமையாளர்களை அணுகி, வாங்கிக் கொடுத்த நிலத்தரகர் ராஜாராம் வழங்கியிருந்த சாட்சியத்தையும்; நீதிமன்றத்தில் படித்துக் காண்பித்த அரசு சிறப்பு வழக்கறிஞர் பவானிசிங், **''வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளவர்களின் பொருளாதார நிலைக்கும், அவர்கள் வாங்கிக் குவித்துள்ள நிலங்களுக்கும் துளியும் சம்மந்தமில்லை. இவை அனைத்தும் வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்துள்ளதன் மூலம் வாங்கப்பட்ட நிலங்கள் என்பது சாட்சியங்கள் மூலம் தெளிவாகத் தெரிகிறது. 5 ஆண்டுகளில் பல லட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பான சொத்துக்கள், இன்றைக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ளவையாக விளங்குகின்றன''** என்றும் குறிப்பிட்டார்.

அரசு வழக்கறிஞர் பவானி சிங் - நீதிமன்றத்தில் பட்டியலிட்ட ஜெயலலிதாவின் சொத்துக்களில் சில!

1. சென்னை அருகே வாலாஜாபாத்தில் 600 ஏக்கர்,
2. சிறுதாவூரில் 25 ஏக்கர் பரப்பளவில் ஒரு பங்களா.
3. நீலாங்கரையில் 2 ஏக்கர்.
4. கொடநாட்டில் 800 ஏக்கர் மற்றும் பங்களாக்கள். (இங்கு ஒரு ஏக்கர் ரூ. 5 கோடி மதிப்பு இருக்கும். இதுவே 4 ஆயிரம் கோடியைத் தாண்டுகிறது. இது ஒரு உத்தேச மதிப்புதான்.)
5. காஞ்சிபுரத்தில் 200 ஏக்கர்.
6. கன்னியாகுமரியில் மீனங்குளம், சிவரங் குளம், வெள்ளங்குளம் பகுதியில் 1,190 ஏக்கர்.
7. தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் பகுதியில் 200 ஏக்கர்.

8. ரெவரே அக்ரோ பார்ம் பெயரில் 100 ஏக்கர்

9. 30 வண்ணங்களில் பலவித கார்கள் மற்றும் டிரக்கர்கள்

10. ஐதராபாத்தில் திராட்சைத் தோட்டம்.

அரசு வழக்கறிஞரால் நான்கு நாட்களில் நீதிமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்ட, சாட்சியங்களால் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பு வருமாறு :-

1) வாலாஜாபாத்தில் ஜெயலலிதா தரப்பினர் வாங்கி யிருப்பது 100 ஏக்கர் நிலம். இந்த 100 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 40 கோடி ரூபாய் - சந்தை மதிப்பு 50 கோடி ரூபாய்.

2) சிறுதாவூரில் வாங்கியிருப்பது 25.4 ஏக்கர். இந்த நிலத்தின் அரசு மதிப்பு 42.5 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 50 கோடி ரூபாய்.

3) நீலாங்கரையில் இருக்கும் ஜெயலலிதா தரப்பினரின் 2 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 70 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 100 கோடி ரூபாய்.

4) காஞ்சிபுரத்தில் ஜெயலலிதா தரப்பினர் வாங்கியுள்ள 200 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 60 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 100 கோடி ரூபாய்.

5) கன்னியாகுமரியில் ஜெயலலிதா தரப்பினர் வாங்கியுள்ள 1,190 ஏக்கரின் அரசு மதிப்பு 175 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 292 கோடி ரூபாய்.

6) பையனூரில் வாங்கியுள்ள 5 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 10 கோடி ரூபாய்; சந்தை மதிப்பு 15 கோடி ரூபாய்.

7) கொடநாட்டில் ஒரு ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 3 கோடி ரூபாய்; சந்தை மதிப்போ 5 கோடி ரூபாய். அங்கே ஜெயலலிதா தரப்பினர் வாங்கியுள்ள 898 ஏக்கர் நிலத்தின் அரசு மதிப்பு 2,450 கோடி ரூபாய், சந்தை மதிப்போ 4,500 கோடி ரூபாய்.

8) தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் பகுதியில் 200 ஏக்கர்.

9) ரெவரே அக்ரோ பார்ம் பெயரில் 100 ஏக்கர்

10) 30 வண்ணங்களில் பலவித கார்கள், டிரக்கர்கள்

11) ஐதராபாத்தில் ஜெயலலிதாவின் திராட்சைத் தோட்டம்.

இந்தப் பட்டியல்படி, 1991-96 - இந்த ஐந்து ஆண்டுகளில், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, வாங்கிப் போட்டுள்ள சொத்துக்களில், ஒரு பகுதி சொத்துக்களின் இன்றைய அரசு மதிப்பு 2,847 கோடியே 50 இலட்சம் ரூபாய்; சந்தை மதிப்போ 5,107 கோடி ரூயாய். இத்துடன் நகை, வைரம், கம்பெனி முதலீடுகள் போன்ற அசையும் சொத்துக்களின் மதிப்பையும் கணக்கில் சேர்த்தால் மேலும் பல கோடி ரூபாய் வரும். அதாவது ஜெயலலிதா முதலமைச்சர் பொறுப்பை ஏற்காதபோது இருந்ததைவிட 310 மடங்கு அதிகச் சொத்துகளை ஐந்தாண்டுகளில் குவித் திருக்கிறார்.

இவ்வாறு சொத்துக்களை வாங்கிக் குவிப்பதற்காகவே ஜெயலலிதா தரப்பினர் இரண்டாண்டு காலத்தில் (1993-1994) 32 புதிய கம்பெனிகளை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தக் கம்பெனிக்ளின் பெயரில் வங்கிகளில் கோடிக்கணக்கான ரூபாய் ரொக்கமாக டெபாசிட் செய்யப்பட்டு, அந்தப் பணத்தின் மூலம், அந்தக் கம்பெனிகள் பெயரில் தமிழகம் முழுவதும் பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்கள் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மெடோ அக்ரோ பார்ம்ஸ் பெயரில் 200 ஏக்கர் நிலமும்; ரிவர்வே அக்ரோ ப்ராடக்ட்ஸ் பெயரில் 1,190 ஏக்கர் நிலமும்; கொடநாடு எஸ்டேட்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் 898 ஏக்கர் நிலமும்; ராமராஜ் அக்ரோ மில்ஸ் பெயரில் 50 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டுள்ளதுடன்; சூப்பர் டூப்பர் கம்பெனி; ஆஞ்சனேயா பிரிண்டர்ஸ் (ஜெ.ஜெ. டி.வி. ஆபீஸ், நமது எம்.ஜி.ஆர். அலுவலகம் எல்லாம் இங்கேதான் உள்ளன); ஜெயா பப்ளிகேஷன்ஸ்; சசி எண்டர்பிரைசஸ்; இண்டோ-டோகா கெமிகல்ஸ் அண்ட் பார்மசூடிகல்ஸ்; கிரீன் பார்ம் ஹௌசஸ்; மெட்டல் கிங்ஸ் (இந்தக் கம்பெனிக்காகத்தான் டான்சி நிலம் வாங்கப்பட்டது) என 32 கம்பெனிகள் ஜெயலலிதா தரப்பினர் பெயர்களில் வரிசையாகத் தொடங்கப்பட்டுள்ளன.

இவை தவிர, சென்னை மாமல்லபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள நீலாங்கரையில் 2 ஆயிரத்து 400 சதுர அடி நிலம், நான்காவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள இளவரசி பெயரில் கடந்த 1995 மே 17ம் தேதி கிரயம் செய்யப்பட்டுள்ளதாக அகமது என்பவர் சாட்சியம் அளித்துள்ளார்.

தமிழக அரசின் பொதுப்பணித் துறையில் செயற் பொறியாளராக இருந்த வி. பாஸ்கரன் அளித்துள்ள சாட்சியத்தில், திருவாரூர் மாவட்டம், வண்டாம் பாளையத்தில் இயங்கி வந்த ராம்ராஜ் ரைஸ் மில்லை வாங்கி ராம்ராஜ் ஆக்ரோ மில்லாக மாற்றம் செய்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் ஆடிட்டராக இருந்த கோபால்ரத்தினம் அளித்துள்ள சாட்சியத்தில், “கடந்த 1964 முதல் 1986-ஆம் ஆண்டுவரை ஜெயலலிதாவின் ஆடிட்டராக நான் பணியாற்றி வந்தேன். ஜெயலலிதா மற்றும் அவரது தாயார் பெயரில் இருந்த சொத்துகள், அதன் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றை ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டு, வருமானவரியும் செலுத்தப்பட்டது. கலாநிகேதன் நாடக மன்றம், ஜாக்பாட், (குதிரைப் பந்தயத்தின் மூலம் 1970ஆம் ஆண்டில் கிடைத்தது) நிலத்தில் விளையும் பயிர்கள் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவையும் சொத்துக் கணக்கில் காட்டப்பட்டுள்ளன” என்றார்.

தமிழகக் காவல் துறையில் வீடியோகிராபராகப் பணியாற்றி வந்த ராஜேந்திரன் கொடுத்துள்ள சாட்சியத்தில், வழக்கின் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா உள்பட வழக்கில் குற்றவாளிகளாக இருப்போருக்குச் சொந்தமான - எண் 31ஏ, போயஸ் கார்டன், எண் 36 போயஸ் கார்டன் வீடு, சிறுதாவூர் பங்களா, பையனூர் பங்களா, ஐதராபாத் திராட்சைத் தோட்டம், கொடைக்கானல் பங்களா, கொடநாடு தேயிலைத் தோட்டம், சென்னையில் உள்ள கிண்டி, தியாகராய நகர், அண்ணாநகர், கொட்டிவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி, அரும்பாக்கம், பரமேஸ்வர்நகர், மந்தைவெளி, நுங்கம்பாக்கம், சாந்தோம், செய்யூர் உள்பட பல பகுதிகளில் உள்ள வீடு, பங்களா, அலுவலகங்கள் மற்றும் ‘நமது எம்.ஜி.ஆர்.’, ஆஞ்சநேயா

பிரிண்டர்ஸ், ஜெயாபப்ளிகேஷன், சசி எண்டர்பிரைசஸ் உள்பட பல இடங்களில் தமிழக லஞ்ச ஒழிப்புப் போலீசார் சோதனை நடத்தியதைப் படம் பிடித்துள்ளதை ஆதாரங்களாகத் தெரிவித்துள்ளார்.

தாஜுதீன் என்பவர் கொடுத்துள்ள சாட்சியத்தில், சென்னை ஜெம்ஸ் கோர்ட் சாலையில் தங்களுக்குச் சொந்தமான கட்டிடத்தை விற்பனை செய்ய முடிவு செய்திருந்ததாகவும், அதைத் தெரிந்துகொண்ட ஒருவர், கட்டிடத்தைத் தங்களுக்கு விற்பனை செய்யும்படி வலியுறுத்தியதாகவும் கூறியுள்ளார். சுமார் 60 ஆயிரம் சதுர அடிகள் கொண்ட அந்தக் கட்டிடத்தை ஜெயலலிதா, சசிகலா, வி.என்.சுதாகரன் பெயரில் தாஜுதீன் கிரையம் செய்துகொடுத்துள்ளார். இதற்காக ரூ.1 லட்சத்து 84 ஆயிரத்து 500 காசோலையாகவும், ரூ.500 ரொக்கப் பணமாகவும் கொடுத்ததாக தாஜுதீன் சாட்சியம் அளித்துள்ளார். அந்தக் கட்டிடம் 'சசி எண்டர் பிரைசஸ்' நிறுவனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

ராஜகோபாலன் என்பவர் கொடுத்துள்ள சாட்சியத்தில் தஞ்சை மாவட்டம், மன்னார்குடியில் தங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான நிலத்தை ரூ.8 லட்சத்து 85 ஆயிரம் கொடுத்து குற்றவாளிகள் வாங்கியதாகக் கூறியுள்ளார். அதை - எண் 36, போயஸ் கார்டன், சென்னை என்ற முகவரியில் பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகக் கூறியுள்ளார்.

வெங்கட்ராமன் என்பவர் கொடுத்துள்ள சாட்சியத்தில், மாமல்லபுரம் சாலையில் உள்ள சிறுதாவூரில் தனக்குச் சொந்தமாக 1.5 ஏக்கர் நிலம் இருந்தது என்றும், தான் திருவல்லிக்கேணியில் வசித்து வந்தாலும், அடிக்கடி சிறுதாவூரில் உள்ள நிலத்தைப் பார்த்து வந்ததாகவும், ஒருமுறை நிலத்தைப் பார்க்கச் சென்றபோது, நிலத்தின் ஒரு பகுதியில் முள்வேலி போடப்பட்டிருந்ததைப் பார்த்து, நிலத்தின் பக்கத்தில் உள்ளவர்களிடம் கேட்டதாகவும், அதற்கு அவர்கள், "மூன்று பேர் வந்து வேலி போட்டதாகக் கூறியதாகவும், அதன் பின்னர் வேலி போட்டவர்களே அவரைச் சந்தித்து, "நிலத்தை முழுமையாகத் தங்களுக்கு விற்க வேண்டும்" என்று வற்புறுத்தியதாகவும் கூறியுள்ளார். "தான் நிலத்தை விற்பனை செய்யும் யோசனையில் இல்லை" என்று இவர்

தெரிவித்துள்ளார். ஆனால், "இந்த நிலத்தை வாங்குபவர் தமிழக முதல்வராக இருக்கும் ஜெயலலிதா. எனவே முரண்டு பிடிக்காமல் நிலத்தை எழுதிக்கொடுக்க வேண்டும்" என்று மிரட்டினர். "வேறு வழியில்லாமல், பல லட்சம் மதிப்புள்ள நிலத்தை ரூ.39 ஆயிரத்திற்கு எழுதிக்கொடுத்தேன்" என்று அந்த நிலத்தின் உரிமையாளரான வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெயலலிதா உள்ளிட்டோர் எப்படிப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி, எத்தனை இடங்களில் சொத்துகளை வாங்கிக் குவித்துள்ளனர் என்ற விபரங்களை அரசு வழக்கறிஞர் பவானிசிங் மேலே கூறிய சாட்சியங்களின் அடிப்படையில் விளக்கினார்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

11-5-2014

3884. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (7)

உடன்பிறப்பே,

பெங்களூரில் நடைபெறும் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில், அரசு வழக்கறிஞர் பவானிசிங் தொகுத்துச் சொல்லியிருக்கும் சாட்சியங்களைப் பற்றிய மேலும் பல விபரங்கள் வருமாறு:-

சிவசங்கர் என்பவர் கொடுத்துள்ள சாட்சியத்தில், "நான் சேலம் மாவட்டம், ராசிபுரத்தில் வசிக்கிறேன். எனது தாயார் லட்சுமியம்மாள் பெயரில் திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் 3.84 ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தைச் சசிகலா பெயரைச் சொல்லி ரூ.3 லட்சத்து 84 ஆயிரத்திற்கு ராம்ராஜ் அக்ரோ மில் நிறுவனத்தின் பெயரில் கிரயம் செய்து கொண்டனர்" என்று தெரிவித்திருக்கிறார்.

சாமிநாதன் என்பவர் கொடுத்துள்ள சாட்சியத்தில், கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள பையனூரில் தனக்குச் சொந்தமான 3.30 ஏக்கர் நிலத்தை ரூ.1 லட்சத்து 65 ஆயிரம் கொடுத்து வி.என். சுதாகரன் பெயரில் பத்திரம் பதிவு செய்து கொண்டதைச் சுட்டிக் காட்டினார்.

"சிட்கோ" நிறுவன மேலாளர் கோவிந்தராஜன் கொடுத்துள்ள சாட்சியத்தில், ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு 1 .12 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யும்படி விண்ணப்பம் கொடுக்கப்பட்டது; அதைப் பரிசீலனை செய்த அப்போதைய சிட்கோ தலைவர் சுலோச்சனா சம்பத், "நிலம் ஒதுக்கீடு செய்யும்படி" பரிந்துரை செய்தார்; அதையேற்று அப்போது "சிட்கோ" நிர்வாக இயக்குனராக இருந்த பாண்டே ஐ.ஏ.எஸ்., ரூ.8 லட்சத்து 59 ஆயிரத்து 590-க்கு நிலம் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் "சிட்கோ"வுக்குச் சொந்தமான 3 கிரவுண்டு நிலத்தை சூப்பர்-டூப்பர் டி.வி. நிறுவனத்திற்கு வழங்கும்படி விண்ணப்பம் கொடுக்கப்பட்டது; விதிமுறைப்படி நிலம் கேட்டு யார் விண்ணப்பித்தாலும், 3 நபர் "கமிட்டி" ஆய்வு செய்து, நிலம் வழங்கப் பரிந்துரை செய்தால் மட்டுமே வழங்க வேண்டும். ஆனால் விண்ணப்பம் கொடுத்த ஒரே நாளில் விதிமுறை மீறி டி.வி. நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்ததாக "சிட்கோ" நிறுவன மேலாளர் சந்திரன் சாட்சியம் அளித்தார்.

சென்னை அபிராமபுரத்தில் உள்ள இந்தியன் வங்கியில் மேலாளராகப் பணியாற்றிய பவானி கொடுத்துள்ள சாட்சியத்தில், வழக்கில் முதல் குற்றவாளியான ஜெயலலிதாவைப் பங்குதாரராகக் கொண்டு இயங்கி வரும் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு வங்கியில் இருந்து ரூ.1.50 கோடி கடன் 1992ம் ஆண்டு வழங்கப்பட்டது என்று எடுத்துரைத்துள்ளார்.

இந்தத் தொகையிலிருந்துதான் "அமிர்தாஞ்சன் மாளிகை" வாங்கப்பட்டது. இது மைலாப்பூர் "லஸ் கார்னர்" பகுதியிலே உள்ள ஒரு பிரசித்திபெற்ற மாளிகை. இந்த இடம் ராமாயி அம்மாள் என்பவருக்குச் சொந்தமானது. அதிலே உள்ள கட்டிடம் அவருடைய சகோதரர் நாகேஸ்வரராவ் என்பவருக்குச் சொந்த மானது. இந்தக் கட்டிடத்தைக் காண்பித்து, நாகேஸ்வரராவ் ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். ஜெயலலிதா, சசிகலா, இளவரசி ஆகியோர் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் அதே வங்கியிலிருந்து தான் இந்தக் கடனும் பெறப்பட்டிருந்தது. இதை வங்கி அதிகாரிகள் மூலம் தெரிந்துகொண்ட ஜெயலலிதா தரப்பினர், உடனடியாக அந்த மாளிகையைப் பார்வையிட்டு, எவ்வளவு கடன் பாக்கியிருக்கிறதோ, அந்தத் தொகையை மட்டுமே வங்கியில் செலுத்தி, அந்த இடத்தை மிரட்டி, கட்டாயப்படுத்தி, விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். நாகேஸ்வரராவ் இந்த இடத்தை வேறொருவரிடம் இரண்டரை கோடி ரூபாய்க்கு விற்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அதனை நிறைவேற்றவிடாமல், ஜெயலலிதா தரப்பினர், குறைந்த விலைக்கு நாகேஸ்வராவை மிரட்டி வாங்கிக் கொண்டனர். இந்த விவரங்களை நாகேஸ்வராவே தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்ததை ரமேஷ் என்ற வங்கி அதிகாரி அவருடைய சாட்சியத்தில் உறுதிப்படுத்தினார்.

ஆந்திர மாநிலம் செகந்திராபாத்தில் உள்ள வங்கியில் ஜெயலலிதா 13.1.1993 அன்று ரூ.6.30 லட்சம், 29.1.1993 அன்று ரூ.3.50 லட்சம், 8.1.1994 அன்று ரூ.6.20 லட்சம், 24.12.1994 அன்று ரூ.9.00 லட்சம் என்று மொத்தம் ரூ.25 லட்சம் டெபாசிட் செய்துள்ளதாக, பாராமார்க் என்பவர் சாட்சியம் கொடுத்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி கிராம நிர்வாக அதிகாரி ஜெயராமன் கொடுத்துள்ள சாட்சியத்தில், 9.89 ஏக்கர் நிலம் சசிகலா பெயரில் கிரயம் செய்யப்பட்டுள்ளதையும்; அதில் சசிகலாவின் கணவர் நடராஜன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதையும்; சசிகலா பெயரில் 13.57 ஏக்கர் நிலம் மூன்று பேரிடமிருந்து வாங்கப்பட்டுள்ளதையும்; முகமது ஆயூப் கொடுத்துள்ள சாட்சியத்தில், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் சசிகலா பெயரில் மூன்று பேரிடம் 13.57 ஏக்கர் நிலம் வாங்கி கிரயம் செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளதையும்; தமிழகத்தில் வாங்கிய சொத்துக்களை நேரடியாகப் பதிவுத் துறை அலுவலகம் சென்று பதிவு செய்யாமல், சம்மந்தப்பட்ட பகுதி சார்பதிவாளரை வழக்கின் முதல் குற்றவாளியான ஜெயலலிதா தன் வீட்டிற்கே வரவழைத்து அங்கேயே பத்திரப் பதிவு செய்துள்ளதையும்; யார் யார் பெயரில் எவ்வளவு நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற புள்ளி விவரங்களையும் அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ரிவர்வே ஆக்ரோ நிறுவனம் மட்டும் சுமார் 100க்கும் மேற்பட்ட பத்திரப் பதிவுகள் மூலம் 948.80 ஏக்கர் நிலத்தைப் பல கோடி ரூபாய் மதிப்பில் வாங்கி வழக்கில் மூன்றாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள வி.என்.சுதாகரன் பெயரில் கிரயம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த பையனூரில் இசையமைப்பாளர் கங்கை அமரன் மற்றும் அவரது மனைவி மணிமேகலை பெயரில் இருந்த நிலங்கள் ரூ.9 லட்சத்து 80 ஆயிரம் கொடுத்து வாங்கப்பட்டுள்ளது. அன்றைய மார்க்கெட் விலையைவிட அடிமாட்டு விலைக்கு நிலம் வாங்கி இந்த வழக்கில் இரண்டாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள சசிகலா பெயரில் அந்த நிலம் பதிவு செய்துள்ளதைப் பவானிசிங் விளக்கினார்.

ராமையாவுக்குச் சொந்தமான நிலம் ரூபாய் ஒரு லட்சம், காந்தபாயிக்குச் சொந்தமான நிலம் ரூ.3 லட்சத்து 4 ஆயிரத்து 500; வசந்தபாயிக்குச் சொந்தமான நிலம் ரூ.3 லட்சத்து 46 ஆயிரத்து 500, அசோக்குமார் என்பவருக்குச் சொந்தமான நிலம் ரூ.2.84 லட்சம் - என்று மொத்தம் ரூ.17 லட்சத்து 26 ஆயிரம் கொடுத்து நிலங்களை வாங்கிச் சசிகலா பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அரசு வழக்கறிஞர் எடுத்துக்கூறினார்.

சிறுதாவூரில் அமானுல்லாவுக்குச் சொந்தமான 11.8 ஏக்கர் நிலம் ரூ.1.90 லட்சத்திற்கும்; கோபிநாத் என்பவருக்குச் சொந்தமான 10.86 ஏக்கர் நிலம் ரூ.1.80 லட்சத்திற்கும்; அமானுல்லாவுக்குச் சொந்தமான 7.44 ஏக்கர் நிலம் ரூ.1.10 லட்சத்திற்கும்; முனியன் என்பவருக்குச் சொந்தமான 3.03 ஏக்கர் நிலம் ரூ.1.07 லட்சத்திற்கும்; வாங்கிப் பதிவு செய்யப்பட்டுள்ளதையும்; பழனிசாமி என்பவருக்குச் சொந்தமான, ஒவ்வொன்றும் 3,197 சதுர அடி கொண்ட 3 கட்டிடங்கள் ரூ.15 லட்சம் கொடுத்து பதிவு செய்யப்பட்டுள்ளதையும்; புள்ளி விவரத்துடன் பவானிசிங் தெரிவித்தார்.

மெடோ ஆக்ரோ பார்ம் நிறுவனத்திற்காகப் பலரிடம் ரூ.16 லட்சத்து 94 ஆயிரத்து 250 என்ற விலையில் 113.21 ஏக்கர் நிலம் வாங்கிப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ராமராஜ் ஆக்ரோ நிறுவனத்திற்காகக் காந்தி என்பவருக்குச் சொந்தமான 18.58 ஏக்கர் நிலம் ரூ.3 லட்சத்து 96 ஆயிரம் கொடுத்து வாங்கிப் பதிவு செய்யப்பட்டுள்ளது; லட்சுமி என்பவருக்குச் சொந்தமான 3.84 ஏக்கர் நிலம் ரூ.76 ஆயிரத்து 800க்கும், அசோகன் என்பவருக்குச் சொந்தமான 8.01 ஏக்கர் நிலம் ரூ.1 லட்சத்து 62 ஆயிரத்து 200க்கு வாங்கிப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்காக வாடே ரமேஷ் என்பவருக்குச் சொந்தமான 6 ஆயிரத்து 943 சதுர அடி கொண்ட கட்டிடம் ரூ.90 லட்சத்திற்கு வாங்கிப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

லெக்ஸ் பிராபர்ட்டிஸ் நிறுவனத்திற்கு ரூ.26 லட்சம் மதிப்பில் கட்டிடம் வாங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அரசு வழக்கறிஞர் பவானிசிங் தெரிவித்தார்.

தமிழக அரசின் பத்திரப் பதிவுத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ராஜகோபால் கொடுத்துள்ள சாட்சியத்தில் வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் பெயரில் சென்னையில் உள்ள ஈஞ்சம்பாக்கம், வெட்டு வாங்கேணி, நீலாங்கரை, பையனூர், திருவல்லிக்கேணி, கிண்டி உள்பட பல பகுதிகளிலும், நெல்லை, தஞ்சாவூர், கொடைக்கானல், கொட நாடு, ஆந்திர மாநிலம் உள்பட பல இடங்களிலும் நிலம் மற்றும் கட்டிடங்கள் வாங்கிக் குவித்துள்ளதைக் குறிப்பிட்டார்.

கன்னியாகுமரியில் உள்ள மீனங்குளம், சிவரங்குளம், வெள்ளங்குளம் உள்ளிட்ட பல கிராமங்களில் விவசாயி களுக்குச் சொந்தமான 1,190 ஏக்கர் நிலங்களைச் சிவா என்ற ரியல் எஸ்டேட் உரிமையாளர், தனது பெயரில், "ஜெனரல் பவர் ஆப் அட்டர்னி" செய்துகொண்ட பின், சென்னையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில், ரியர்வ்யூ அக்ரோ பார்ம் என்னும் நிறுவனத்தின் பெயரில், அதனைக் கிரயம் செய்துகொடுத்ததாக, ராஜகோபால் சாட்சியம் அளித்துள்ளார். ரியர்வ்யூ அக்ரோ பார்ம் என்ற நிறுவனத்தின் உரிமையாளர்கள் யார்? சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோராவர்.

இந்த நிலங்களைக் குறைந்த மதிப்பீட்டில், குறைவான முத்திரைத் தாள் கட்டணத்தில் பதிவு செய்து கொடுக்கும்படி தன்னிடம் கேட்டதாகவும், அதற்கு மறுத்தபோது, சென்னையில் இருந்து வந்திருந்த சார்பதிவாளர் ஒருவர், இது மேலிட விவகாரம் என்பதால் மறுக்காமல் பதிவுசெய்து கொடுக்கும்படி வற்புறுத்தியதாகவும், தான் மறுத்து விட்டதாகவும், சாட்சியம் அளித்தார். அதனால் அங்கே பதிவு செய்யாமல், பவர் பத்திரம் தயார் செய்துகொண்டு, அவை ராஜகோபால் பொறுப்பிலே இருந்த சென்னை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாட்சியங்களை எடுத்துரைக்கும்போது, அரசு வழக்கறிஞர் பவானிசிங், போயஸ் கார்டன் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் கட்டிடத்தைத் தனது தாயின் பெயரிலான "சந்தியா நாட்டிய கலா நிகேதன்" என்கிற டிரஸ்டின் பெயரில் வாங்கியதை மேலெழுந்தவாரியாகச் சொன்னார். "சந்தியா நாட்டிய கலா நிகேதன்" என்கிற டிரஸ்டின் ஒரே டிரஸ்டி ஜெயலலிதாதான் என்பதை அரசு வழக்கறிஞர் கூறவில்லை. ஆனால், நீதிபதி

குன்ஹா அவர்களே, "அந்த டிரஸ்டில் ஜெயலலிதாதானே ஒரே டிரஸ்டி, அதனால்தானே அந்த இடத்தை அவர் கையெழுத்துப் போட்டு வாங்கினார்" என்று அவராகவே கேட்டு, அதற்குப் பவானிசிங் "ஆமாம்" என்று தெரிவித்திருக்கிறார்.

ஊட்டியில் 898 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள கொடநாடு தேயிலைத் தோட்டம், ஆங்கிலேயரான கிரேக் ஜோன்ஸ் என்பவருக்குச் சொந்தமானதாக இருந்தது. அவர் அதை விற்பனை செய்வதற்கான முயற்சியை மேற்கொண்டார். அதை வாங்க அடிசன்ஸ், எஸ்ஸார் ஆகிய இரண்டு பெரிய நிறுவனங்கள் முன்வந்தன. அந்தத் தகவல் கிடைத்ததும், கும்பல் ஒன்று தேயிலைத் தோட்ட மேனேஜரை, நம்பர் பிளேட் இல்லாத காரில் வந்து மிரட்டி, கொடநாடு தேயிலைத் தோட்டத்தைச் சென்னையைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்குத்தான் விற்க வேண்டும் என்று கூறினர். அது குறித்து கிரேக் ஜோன்ஸ், காவல் நிலையத்தில் 23-10-1995 அன்று புகார் கொடுக்க, மறுநாளே அதையும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் மிரட்டி, திரும்ப வாங்கச் செய்துவிட்டார். அப்போது பத்து கோடி ரூபாய் மதிப்பிலான, அந்தத் தேயிலைத் தோட்டத்தை ரூ. 7.5 கோடிக்கு உடையார் குடும்பத்தின் பெயரில் பதிவு செய்தனர். ஆனால் இரண்டொரு மாதங்களில் கொட நாடு தேயிலைத் தோட்டம் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் பெயரில் பதிவு செய்யப்பட்டது. சாட்சியங்கள் தெரிவித்த இந்த விவரங்களையும் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் பவானிசிங் எடுத்துரைத்தார்.

தஞ்சை நகரின் வ.உ.சி. நகரில், தான் வாழ்ந்து வந்த வீட்டை ரூ.11 லட்சத்திற்கு வி.என்.சுதாகரன் பெயரில் கிரயம் செய்து கொடுத்ததாகக் கணபதி பிள்ளை என்பவர் அளித்துள்ள சாட்சியத்தைப் பவானிசிங் எடுத்துக்கூறினார்.

தனியார் நிறுவனத்தின் மூலம் ரூ.10 லட்சம் கொடுத்து வாங்கப்பட்ட - நவீன தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட பேருந்தில் மேலும் வசதிகள் ஏற்படுத்தும் பொறுப்பு மும்பையில் உள்ள பஸ் பாடி பில்டர்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ரூ.23 லட்சம் செலவு செய்து சொகுசுப் பேருந்தாக அதனை மாற்றியதுடன், 2 ஏ.சி. இயந்திரம், சோனி டி.வி., வி.சி.ஆர்., அமெரிக்கன் டாய்லட், கிரானைட் மார்பிள் ப்ளோரிங் மற்றும் தேக்கு

மரத்திலான மர வேலைப்பாடுகள் செய்து கொடுத்ததாகவும், பேருந்தை நவீனப்படுத்தும் பணியை அப்போது தமிழகப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவரின் மேற்பார்வையில் செய்ததாகவும், தயாரிக்கப்பட்ட பேருந்தைச் சென்னை போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதா வீட்டிற்குக் கொண்டு சென்று ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோர் பார்வையிட்டு ஒப்புதல் அளித்ததாகவும் மும்பையைச் சேர்ந்த குருதேவ்சிங் அளித்துள்ள சாட்சியத்தைப் பவானிசிங் படித்துக்காட்டினார். அந்த சொகுசுப் பேருந்து ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டதாக ஆதாரத்துடன் விளக்கினார்.

கடலூரில் 3.5 ஏக்கர் நிலத்தில் கெமிக்கல் தொழிற் சாலை ரூ.30 லட்சத்திற்கும், அதே பகுதியில் ஜேம்ஸ் பேட்ரிக் என்பவருக்குச் சொந்தமான நிலம் ரூ.50 லட்சத்திற்கும் வாங்கப்பட்டு, குற்றவாளிகள் பெயரில் இயங்கி வரும் நிறுவனங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பவானிசிங் தெரிவித்தார். அதன் அருகில் மேலும் 3 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டது.

சென்னை தியாகராயர் நகரில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் ரமேஷ் என்பவருக்குச் சொந்தமான 4 கிரவுண்ட் நிலத்தை ரூ. 90 லட்சத்திற்கு வி.என்.சுதாகரன் வாங்கிப் பதிவு செய்துள்ளது தொடர்பான சாட்சியத்தையும்; கனரா வங்கி அதிகாரி கொடுத்துள்ள சாட்சியத்தில், வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா கடந்த 1992ம் ஆண்டு ரூ.1 கோடியும், இரண்டாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள சசிகலா ரூ.25 லட்சமும் வங்கியில் மூன்றாண்டுகளுக்கு டெபாசிட் செய்ததாக அளித்துள்ள விபரத்தையும் அரசு வழக்கறிஞர் எடுத்துச் சொன்னார்.

கம்பெனிகளைப் பதிவு செய்யும் அரசு அதிகாரியாக இருந்த ஒருவர் அளித்துள்ள சாட்சியத்தில்; ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி என்டர்பிரைசஸ், லெக்ஸ் பிராபர்ட்டீஸ், ரிவர்வியூ ஆக்ரோ பார்ம், சிக்னோரா பிசினஸ், மெடோ ஆக்ரோ பார்ம், பீன் பீச், ராமராஜ் ஆக்ரோ பார்ம், சூப்பர் - டூப்பர் டி.வி, இண்டோ கெமிக்கல்ஸ், ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ் ஆகிய கம்பெனிகள் எந்தெந்தத் தேதிகளில் யார் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன? அதன் தலைவர், நிர்வாக இயக்குனர்கள் யார்? பங்குதாரர்கள் யார்? என்னென்ன தொழில்கள் செய்யப்படுகின்றன? என்பன

உள்ளிட்ட பல தகவல்கள் குறித்துப் புள்ளி விவரங்களோடு விளக்கியதையும்; தமிழக அரசின் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியும் (ஷீலா பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்.) இது தொடர்பாக சாட்சியம் அளித்துள்ளதையும்; விவசாயிகளிடம் வாங்கிய நிலங்கள் அனைத்தும் வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் பங்குதாரர்களாக இருக்கும் கம்பெனிகள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதையும்; கடந்த 1992 டிசம்பர் 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் ரிவர்வே ஆக்ரோ கம்பெனி பெயரில் பலரிடமிருந்து 426.62 ஏக்கர் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகச் சாட்சிகள் கூறியுள்ளதையும் நீதிமன்றத்திலே அரசு வழக்கறிஞர் பவானிசிங் படித்துக்காட்டினார்.

தமிழக முதல்வராக ஜெயலலிதா ஐந்தாண்டுகள் இருந்தபோது முதல் 27 மாதங்களுக்கு மட்டுமே மாதம் ஒரு ரூபாய் வீதம் ரூ.27 சம்பளம் வாங்கினார் என்றும்; ஆனால், ரூ.14 கோடி மதிப்புள்ள கட்டிடங்களை அவர் கட்டியுள்ளார் என்றும்; மேலும் அவரது வீட்டில் சோதனை நடத்தியபோது ரூ.90 லட்சம் மதிப்புள்ள 23 கிலோ தங்கம், வைர ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன என்றும்; பெங்களூர் தனி நீதிமன்றத்தில் அரசு சிறப்பு வழக்கறிஞர் பவானிசிங் தெரிவித்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோர் வீட்டில் பறிமுதல் செய்யப்பட்ட தங்க, வைர ஆபரணங்கள் குறித்து மதிப்பீடு செய்யும்படி தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட வாசுதேவன் கொடுத்துள்ள சாட்சியத்தில்; எண் 36, போயஸ் கார்டன் வீட்டில் 23 கிலோ 113 கிராம் தங்க ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அதன் மதிப்பு ரூ.91 லட்சத்து 57 ஆயிரத்து 253 என்றும், வைர ஆபரணங்களின் மதிப்பு ரூ.2 கோடியே 43 லட்சத்து 92 ஆயிரத்து 790 என்றும் இரண்டும் சேர்த்து மொத்தம் ரூ.3 கோடியே 35 லட்சத்து 50 ஆயிரத்து 43 என்று மதிப்பீடு செய்துள்ள விபரத்தைத் தெரிவித்திருந்தார்.

மேலும் வாசுதேவன் தன்னுடைய சாட்சியத்தில், எண் 31 ஏ. போயஸ் கார்டன் வீட்டில் ரூ.47 லட்சத்து 61 ஆயிரத்து 816 மதிப்புள்ள தங்க ஆபரணங்களையும் மற்றும் ரூ. 55 லட்சத்து 80 ஆயிரம் மதிப்புள்ள ஆயிரத்து 116 வெள்ளிப் பொருள்களையும் மதிப்பீடு செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

செவாலியே சிவாஜிகணேசன் சாலையில் உள்ள கிரி சண்முகம் வீட்டில் பறிமுதல் செய்யப்பட்ட 13 வகையான பொருள்களின் மதிப்பு ரூ.11 லட்சத்து 94 ஆயிரத்து 382 என்றும்; என்னென்ன ஆபரணங்கள் எவ்வளவு எடை கொண்டது, அதன் மதிப்பு எவ்வளவு என்றும்; புள்ளி விவரங்களுடன் அரசால் நியமனம் செய்யப்பட்ட மதிப்பீட்டாளர் வாசுதேவன் தெரிவித்திருக்கிறார். அரசு வழக்கறிஞர் பவானிசிங் வெளிக்கொணர்ந்த சாட்சியங்கள் இவை மட்டுமா?

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

12-5-2014

3885. சொத்துக் குவிப்பு வழக்கு; ஒரு தொடர்கதை! (8)

உடன்பிறப்பே,

பெங்களூருவில் நடைபெற்று வரும் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு வழக்கறிஞர் பவானிசிங் அவர்கள், சாட்சியங்களின் மூலம் வெளிவந்த விபரங்களை, மேலும் தொடர்ந்து தொகுத்துக் கூறினார்.

தமிழக வீட்டு வசதிக் கழகச் செயலாளர் பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்., கொடுத்துள்ள சாட்சியத்தில், வழக்கில் மூன்றாவது குற்றவாளியான வி.என். சுதாகரன் மற்றும் நான்காவது குற்றவாளியான இளவரசி ஆகியோருக்கு; முதல் குற்றவாளியான ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்தபோது, தமிழக வீட்டு வசதிக் கழக விதிமுறைகளை மீறி, இருவருடைய ஆண்டு வருமானம் பல லட்சம் ரூபாயாக இருந்தும், தலா ரூ.48 ஆயிரம் என்று போலி வருமானச் சான்றிதழ் பெற்று இருவருக்கும் தலா ஆயிரத்து 800 சதுரஅடி வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளதை ஆதாரங்களுடன் விளக்கி வாதிட்டார்.

பல்வேறு நிறுவனங்களின் பெயரில் ஜெயலலிதாவும், அவரது உடன்பிறவா சகோதரி சசிகலா மற்றும் இளவரசி ஆகியோரும் வங்கியில் கணக்குகள் வைத்திருந்தது தொடர்பாகவும், அந்த நிறுவனங்களுக்கிடையே முறைகேடாகப் பணப்பரிமாற்றங்கள் செய்தது குறித்தும் இந்தியன் வங்கிக்கிளை மேலாளர் அளித்த சாட்சியத்தை அரசு வழக்கறிஞர் பவானிசிங் தனி நீதிமன்றத்தில் விரிவாக எடுத்துரைத்தார். அப்போது சென்னை அபிராமபுரத்தில் உள்ள இந்தியன் வங்கியின் மேலாளர் மாணிக்கவாசகம் அளித்திருந்த சாட்சியத்தில், “வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா, சசிகலா, இளவரசி ஆகியோரைப் பங்குதாரர்களாகக் கொண்டு இயங்கி வரும் ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி எண்டர்பிரைசஸ், ஜெயா

ரியல் எஸ்டேட் கம்பெனி, ஆஞ்சநேயா பிரிண்டர்ஸ், ஜெயா பைனான்ஸ், ஜெயா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ராமராஜ் ஆக்ரோ மில்ஸ், கோபால் பிரமோட்டர்ஸ், ஜெயா பார்ம் ஹவுஸ், ஜெயா ஹவுசிங் டெவலப்மெண்ட், லட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நமச்சிவாயா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மெட்டல்கிங் அப்பார்ட்மெண்ட் உள்பட பல நிறுவனங்கள் பெயரில் எங்கள் வங்கியில் தனித்தனியாகக் கணக்குகள் தொடங்கப்பட்டன. அதில் கடந்த 1991 முதல் 1996ஆம் ஆண்டுவரை அனைத்துக் கம்பெனிகளின் கணக்கு எண்ணிலும் பணப் பரிமாற்றம் நடந்துள்ளது. பணப் பரிமாற்றத்தின் போது காசோலையாகக் கொடுக்கப்பட்டதில் பங்குதாரர்களாக உள்ளவர்கள் கையெழுத்துப் போட்டுள்ளனர். ஒரு கம்பெனியில் இருந்து இன்னொரு கம்பெனியின் வங்கிக் கணக்கிலும் பணப் பரிமாற்றம் நடந்தது. மேலும் கம்பெனிகளுக்குத் தேவையான நிலம், இயந்திரம், கட்டிடம் ஆகியவை வாங்குவதற்காகக் கடனும் பெறப்பட்டுள்ளது. கடன் பத்திரங்களிலும் பங்குதாரர்கள் கையெழுத்துப் போட்டுள்ளனர்" என்று சொன்னதையும்; எந்தெந்தத் தேதியில் பணப் பரிமாற்றம் நடந்தது, எந்தெந்தத் தேதியில் வங்கியில் கடன் பெறப்பட்டது, கம்பெனிகளின் முகவரி யார் வீட்டு விலாசத்தில் உள்ளது என்பன உள்பட பல தகவல்கள் குறித்துப் புள்ளி விவரங்களுடன் மாணிக்கவாசகம் சாட்சியம் அளித்துள்ளதையும் பவானிசிங் விளக்கினார்.

மெடோ ஆக்ரோ பார்ம் நிறுவனத்திற்குத் தேவையான நிலம் வாங்கிக் கொடுத்தது தொடர்பாக ரியல் எஸ்டேட் அதிபர்கள் கண்ணன் மற்றும் கணேசன் ஆகியோரிடம் மெடோ ஆக்ரோ பார்ம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆர். தியாகராஜன் வாக்குமூலம் தந்தார். அதைத் தொடர்ந்து ரிவர்வே ஆக்ரோ பார்ம் நிறுவனத்தின் இயக்குனர் குமாரிடம் வழக்கறிஞர் ஆர்.தியாகராஜன் விசாரணை நடத்தியபோது, ரிவர்வே ஆக்ரோ பார்ம் நிறுவனத்திற்காக 10.9.1994 அன்று ஜெயக்கொடி என்பவருக்குச் சொந்தமான நிலத்தை சிவா என்ற ரியல் எஸ்டேட் முகவர் மூலம் வாங்கியதாகத் தெரிவித்தார்.

மேலும் 21.12.1996 அன்று வீரபத்ரம் குடும்பத்திற்குச் சொந்தமான நிலம், முத்து நாடார் குடும்பத்திற்குச் சொந்தமான நிலம், சாமுவேல் நாடார் குடும்பத்திற்குச் சொந்தமான நிலம், ரவி குடும்பத்திற்குச் சொந்தமான நிலம், முத்துபாண்டியன்

குடும்பத்திற்குச் சொந்தமான நிலம், மந்திரம் குடும்பத்திற்குச் சொந்தமான நிலம், கிருஷ்ணன் கோனார் குடும்பத்திற்குச் சொந்தமான நிலம், பத்மநாப ரெட்டியார் குடும்பத்திற்குச் சொந்தமான நிலம் ஆகிய நிலங்கள் அனைத்தையும்; 17.2.1992 அன்று துரை, கண்டசி நாடார் குடும்பத்திற்குச் சொந்தமான நிலத்தையும்; 18.8.1994 அன்று ராஜா நாடார், சண்முகம் நாடார், பேரின்ப நாடார், சண்முகசுந்தரம் நாடார் ஆகியோர் குடும்பத்திற்குச் சொந்தமான நிலங்களையும்; சிவா என்ற நிலமுகவர் மூலம் வாங்கிப் பதிவு செய்ததாகவும் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் லெக்ஸ் பிராபர்ட்டீஸ் டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் போன்றவை இணைக்கப்பட்டு, அவை குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் சொத்தாகக் காட்டப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனிகள் சார்பில் கடந்த மார்ச் திங்களில் பெங்களூரு தனி நீதிமன்றத்தில் "வழக்கில் இருந்து இந்த நிறுவனங்களை விடுவிக்கவேண்டும். மேலும் இது தொடர்பாக நாங்கள் தாக்கல் செய்துள்ள மனுவை விசாரணை நடத்தி முடிவு காணும்வரை மூல வழக்கை விசாரிக்காமல் தடைவிதிக்க வேண்டும்" என்று சிறப்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அம்மனுவை விசாரணை நடத்திய நீதிபதி ஜான் மைக்கேல் டி. குன்கா, "சொத்துக் குவிப்பு வழக்கில் கம்பெனிகள் இணைக்கப்பட்டுள்ளதை விடுவிக்கக் கோரித் தாக்கல் செய்துள்ள கோரிக்கையை ஏற்று விசாரணைக்கு அனுமதிக்கிறேன். ஆனால், மூல வழக்கு விசாரணையை நடத்தத் தடை கோரும் மனுவைத் தள்ளுபடி செய்கிறேன்" என்று தீர்ப்பளித்தார்.

மேலும் மூல வழக்கிற்குத் தடைவிதிக்கக் கோரியதற்குக் கண்டனம் தெரிவித்து, "நீதிமன்ற நேரத்தை வீணாக்கியதற்காக" ரூ. 10 ஆயிரம் அபராதம் விதித்து மார்ச் 14 ஆம் தேதி தீர்ப்பளித்தார். தனி நீதிமன்றம் வழங்கிய அந்தத் தீர்ப்பை எதிர்த்து லெக்ஸ் பிராபர்ட்டீஸ் கம்பெனி சார்பில் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு, நீதிபதி சத்யநாராயணா முன் 29.4.2014 அன்று விசாரணைக்கு வந்தது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி சத்யநாராயணா அவர்கள், அம்மனுவின் மீது அளித்த தீர்ப்பு வருமாறு:-

"சொத்துக் குவிப்பு வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் உச்சநீதிமன்ற வழிகாட்டு தலின்படி பெங்களூரில் தனிநீதிமன்றம் அமைக்கப்பட்டது. வழக்கு விசாரணையினைத் தினமும் நடத்த வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் பல மனுக்கள் போடப்படுகின்றன. சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து லெக்ஸ் கம்பெனியை விடுவிக்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கை ஏற்புடைய தல்ல. ஆகவே மனுவைத் தள்ளுபடி செய்கிறேன். மேலும் நீதிமன்ற நேரத்தை வீணாக்கும் வகையில் செயல்பட்டதற்காக தனி நீதிமன்றம் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்திருந்தது. அது குறைவானது என்பதால் 10 மடங்கு உயர்த்தி ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கிறேன். அபராதத் தொகையை வரும் 15 நாட்களில் செலுத்த வேண்டும்".

- இவ்வாறு கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி சத்ய நாராயணா அவர்கள் தீர்ப்பளித்தார். இதிலே இன்னும் வேடிக்கை என்னவென்றால், இதே லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனத்தினர் ஏற்கனவே ஒரு முறை தங்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பதுதான்.

லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அதனை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் சௌகான், செல்லமேஷ்வர், இக்பால் ஆகியோர், சொத்துக் குவிப்பு விசாரணைக்குத் தடை விதிக்குமாறு லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனம் முன்வைத்த கோரிக்கையை நிராகரிப்பதாக 8-5-2014 அன்று தெரிவித்தனர். மேலும் வழக்கு விசாரணையைத் தடுத்திடும் வகையில் செயல்படு வதாக அந்த நிறுவனத்திற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனத்தைப் போலவே, சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து மெடோ ஆக்ரோ பார்ம் மற்றும் ரிவர்வே ஆக்ரோ பார்ம் ஆகிய கம்பெனிகளை விடுவிக்க வேண்டுமென்று

தாக்கல் செய்த மனுவை விசாரணை நடத்த வேண்டும், அதுவரை மூல வழக்கு விசாரணைக்குத் தடை விதிக்க வேண்டுமென்று அந்தக் கம்பெனிகள் சார்பில் தனித்தனியாக மனுக்கள், விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த மனுக்கள் மீது விசாரணை நடத்திய நீதிபதி குன்ஹா, மூல வழக்கிற்குத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்ததுடன் நீதிமன்ற நேரத்தை வீணாக்கியதற்காக இரண்டு கம்பெனிகளுக்கும் தலா ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.

சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரிடம் சொத்து முடக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்யக் கோரி, தாக்கல் செய்துள்ள மனு தொடர்பாகச் சில கேள்விகளை நீதிபதி கேட்டார்.

அப்போது, "சொத்துக் குவிப்பு வழக்கு கடந்த 1996ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதை விசாரிக்க அமைக்கப்பட்ட சென்னை தனி நீதிமன்றத்தில் நீங்கள் கடந்த 1998ஆம் ஆண்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தீர்கள். அதில் வழக்கு காலத்தில் தமிழக லஞ்ச - ஒழிப்புப் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டு, வழக்கில் சான்றுப் பொருளாகச் சேர்த்து முடக்கி வைத்துள்ள அசையும் சொத்துகளை வாபஸ் வழங்கக் கேட்டிருந்தீர்கள். உங்கள் மனுவை விசாரணை நடத்திய நீதிமன்றம், உங்கள் கோரிக்கையை நிராகரித்து 2000ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பை எதிர்த்துச் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தீர்கள். அந்த மனு மீது கடந்த 2ஆம் தேதி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதில் சொத்துக்களை முடக்கம் செய்து தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ரத்து செய்ததுடன், சொத்து முடக்கம் தொடர்பான வழக்கை பெங்களூர் தனி நீதிமன்றம் விசாரணை நடத்தித் தீர்வு காணவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த சசிகலா, "நாங்கள் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் முழு விவரம் எனக்குத் தெரியவில்லை" என்றார்.

மேலும் நீதிபதி, "கடந்த பிப்ரவரி 21ஆம் தேதி அரசு வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில் வழக்கில் சான்றுப் பொருளாகச் சேர்க்கப்பட்டிருந்த ஆயிரத்து 116 கிலோ வெள்ளிப் பொருட்களைப் பெங்களூர்

கொண்டுவர வேண்டும் என்று கூறியிருந்தார். அரசு வழக்கறிஞரின் மனு மீது பதில் மனு தாக்கல் செய்தபோது, சொத்து முடக்கம் செய்துள்ளதை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் உங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை நிலுவையில் உள்ளதை ஏன் இந்த நீதிமன்றத்தில் உங்கள் தரப்பில் தெரிவிக்கவில்லை?" என்று நீதிபதி கேட்டதற்கு, "தெரியாது" என்று பதிலளித்தார்.

"இதுகுறித்து உங்களுக்குத் தெரியுமா?" என்று அரசு வழக்கறிஞர் பவானிசிங்கைப் பார்த்து நீதிபதி கேட்டார். அவரும் தனக்குத் தெரியாது என்று பதிலளித்தார்.

அதைத் தொடர்ந்து தமிழக லஞ்ச - ஒழிப்பு துணை காவல் கண்காணிப்பாளர் சம்மந்தத்திடம் நீதிபதி சில கேள்விகளை எழுப்பினார்.

"2006ஆம் ஆண்டு இதே வழக்கு தொடர்பாகச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயபால் அவர்கள் சொன்ன அதே கருத்தைக் கடந்த 2011ஆம் ஆண்டும், கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி ஜெகநாதனும் தெரிவித்திருந்தார். இந்த உண்மை உங்களுக்குத் தெரிந்திருந்தும், குற்றவாளிகள் தரப்பில் சொத்து முடக்கத்தை எதிர்த்துச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது தனியாக ஒரு அரசு வழக்கறிஞரை நியமனம் செய்தது ஏன்? அந்த மனு தொடர்பாக விவரங்களை இந்த நீதிமன்றத்தில் ஆஜராகும் கர்நாடக அரசு வழக்கறிஞரிடம் தெரிவிக்காமல் மறைத்தது ஏன்" என்று நீதிபதி கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சசிகலா, வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களும் சிறப்பு வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளதாகப் பதிலளித்தார்.

தமிழக அரசின் வருவாய்த் துறை இணை ஆணையர் தியாகராஜன் கொடுத்துள்ள சாட்சியத்தில், ஊத்துக் கோட்டை, அதிலிவாக்கம் கிராமத்தில் வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜெயலலிதா பெயரில் 220 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கு விளையும் பழத்தைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகத் தனியாகப் பதப்படுத்தல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அதே கிராமத்தில் வழக்கில் 2வது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு 40 ஏக்கர் நிலம்

இருந்தது. அதில் மாமரம் பயிரிட்டுள்ளனர். இந்த நிலங்களின் மதிப்பு பல லட்சம் என்று சாட்சியம் அளித்துள்ளதைப் படித்துக் காட்டினார்.

பெங்களூரு சொத்துக் குவிப்பு வழக்கை மேலும் இழுத்தடிக்க ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் பி.குமார் மனு ஒன்றைத் தாக்கல் செய்து வாதிடும்போது, "சொத்துக் குவிப்பு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள கம்பெனிகளை விடுவிக்கக் கோரித் தாக்கல் செய்துள்ள மனுவை முதலில் விசாரணை நடத்த முன்னுரிமை கொடுப்பதுடன், மூல வழக்கு விசாரணையை நிறுத்திவைத்து கம்பெனிகள் தொடர்பாக வழக்கைப் பெங்களூர் தனி நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் கடந்த ஏப்ரல் 2ஆம் தேதி வழங்கிய தீர்ப்பை அடிப்படையாக வைத்து முதலில் கம்பெனிகள் தொடர்பான மனுவை விசாரணை நடத்தவேண்டும். சொத்துக் குவிப்பு வழக்கில் கம்பெனிகள் யாருக்குச் சொந்தம் என்பது உறுதி செய்யப்பட்டால் மட்டுமே, எங்கள் கட்சிக்காரர் மீது சுமத்தியுள்ள குற்றங்களை நாங்கள் இல்லை என்று நிரூபிக்க முடியும்" என்றார்.

இவ்வழக்கு தொடர்பாக கடந்த 2006ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி ஜெயபால் முன்னிலையில் ஒரு மனு விசாரணைக்கு வந்தபோது, "சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பாக எந்த மனு மீதான விசாரணை, எந்த நீதிமன்றத்தில் நடந்தாலும், இவ் வழக்கு தொடர்பாகக் கர்நாடக உயர்நீதிமன்ற சிபாரிசின் பேரில், கர்நாடக அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள சிறப்பு வழக்கறிஞரின் கவனத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்பது மட்டுமில்லாமல், அவர் மட்டுமே ஆஜராகி வாதிடும் உரிமை பெற்றுள்ளார்" என்று தீர்ப்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும் இதே வழக்கின் மற்றொரு மனு கடந்த 2013ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி ஆறுமுகசாமி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, "சொத்துக் குவிப்பு வழக்கை விசாரணை நடத்திவரும் பெங்களூர் தனி நீதிமன்றத்தின் முடிவில் தலையிட முடியாது" என்று தீர்ப்பளித்துள்ளார்.

"சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பாக 2006ஆம் ஆண்டு நீதிபதி ஜெயபால் மற்றும் 2013ம் ஆண்டு நீதிபதி ஆறுமுகசாமி ஆகியோர் வழங்கியுள்ள தீர்ப்புகளின் அடிப்படையில் பார்க்கும்

போது, நீதிபதி அருணா ஜெகதீசன் வழங்கியுள்ள தீர்ப்பு எந்த வகையிலும் பெங்களூர் தனி நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே குற்றவாளிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவை ஏற்காமல் நிராகரிக்க வேண்டும்" என்று அரசு வழக்கறிஞர் பவானிசிங் சார்பில் வழக்கறிஞர் முருகேஷ் மரடி வாதிட்டார்.

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து கம்பெனிகளை விடுவிக்கக் கோரும் மனுவின் மீது நீதிபதி ஜான் மைக்கேல் குன்கா 7-5-2014 அன்று வழங்கிய தீர்ப்பில், "அந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மனு மீதான விசாரணை முடியும் வரை மூல வழக்கின்மீது விசாரணை நடத்தாமல் தடை விதிக்கவேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்க முடியாது. ஒரேநேரத்தில் இரு வழக்குகளும் நடைபெறும். மூல வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்கு முன், கம்பெனிகள் தொடர்பான மனுமீது தீர்ப்பு வழங்கப்படும்" என்று தெளிவுபடுத்தினார்.

சிறப்பு நீதிமன்றத்தில் 2500 பக்கங்கள் கொண்ட வழக்கின் சாட்சி ஆவணங்களைத் தொகுத்துக் கூறுகையில் அரசு வழக்கறிஞர் பவானிசிங்,

''குற்றவாளிகளுக்கு எதிரான சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் சொத்துக் குவித்துள்ளதற்கான ஆதாரங்களை 2 ஆயிரத்து 500 பக்கங்கள் கொண்ட ஆவணமாகத் தொகுத்து வழங்குகிறேன். வழக்கு தொடங்குவதற்கு முன் குற்றவாளிகளுக்கு 17 சொத்துகள் மட்டுமே இருந்தன. இது, வழக்கு காலத்தில் 306 சொத்துகளாக உயர்ந்துள்ளது. அதில், 289 சொத்துகள் பல வழிகளில் வருமானத்திற்கு அதிகமாகச் சேர்க்கப்பட்டவை என்பதற்கான எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் உள்ளன.

குறிப்பாக, வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் பொருளாதார நிலை, வழக்கு காலத்திற்கு முன்பு இருந்ததற்கும், வழக்கு காலத்தில் உயர்ந்துள்ளதற்கும் சம்மந்தமில்லாத வகையில் உள்ளது.

சொத்துக்குவிப்பு வழக்கில் சாட்சியங்கள் அளித்த வாக்குமூலம் அனைத்தும் உண்மை! அவற்றை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும்!'' என்று பவானிசிங் வலியுறுத்தினார்.

இதோ பவானிசிங் அவர்கள்தான் வழக்கு விசாரணையை இழுத்தடிக்க பல வழிகளிலும் முயன்றார் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

ஜெயலலிதா இவ்வாறு ஊழல் வழக்கில் சிக்கி ஆண்டுக் கணக்கிலே வாய்தா வாங்கி, அதன் மூலமாகத் தப்பித்துக் கொண்டு வருவது இந்த ஒரு வழக்கிலே மாத்திரமல்ல; வேறு சில வழக்குகளிலும் இதே நிலைதான்! ஆண்டுக் கணக்கிலே அந்த வழக்குகளும் தொடர்ந்து நடந்துகொண்டுதான் வருகின்றன.

இந்த நிகழ்வுகளையெல்லாம் மனதிலே கொண்டுதான் 17-4-2014 அன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், "நாங்கள் வந்தால்தான் நீங்கள் வழக்கை நடத்தவேண்டும்; வராவிட்டால் ஒத்திவைக்க வேண்டும்; இல்லாவிட்டால் வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று சொல்கிற அளவுக்கு நடப்பது ஜெயலலிதா ராஜ்யமா? அல்லது நீதியின் ராஜ்யமா?" என்ற முக்கியமான வினாவினை எழுப்பியிருந்தேன்.

அவர்களுக்கு இருக்கும் மன தைரியமெல்லாம், "நாம் எத்தனை கோடிக்குச் சொத்துக்களைக் குவித்தாலும், நீதிமன்றத்தில் வாய்தாக்களைப் பெற்று, வரம்பின்றி இழுத்தடித்து, எத்தனை ஆண்டுகளை வேண்டுமானாலும் நமது விருப்பத்தின்படி கழித்துவிடலாம்; மக்களோ நாம் எதைச் செய்தாலும், நம்மை நம்பி, வாக்களிக்கிறார்கள்" என்பதுதான்! இதுதான் சொத்துக் குவிப்பு வழக்கின் பதினாறு ஆண்டுக் கால வரலாறு! இந்த வழக்கின் தீர்ப்பைத்தான் தமிழ்நாடே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது; இந்தியா முழுதும் உள்ள வழக்கறிஞர்களும், நீதித்துறை ஆர்வலர்களும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு வரக்கூடிய நாள் வெகுதூரத்தில் இல்லை! பார்வையை மறைத்திடும் பனித்திரை விலகியே தீரும்! உண்மையை உலகம் உணரும்!

(முற்றும்)

அன்புள்ள,

மு.க.

13-5-2014

3886. அந்த நாள்; என்றுதான் வருமோ?

உடன்பிறப்பே,

இன்று 7-6-2014!

இப்போது என்னுடைய நினைவு பத்தாண்டுகளுக்குப் பின் நோக்கிப் பயணம் செய்து 2004ஆம் ஆண்டில் இதே ஜூன் 7ஆம் தேதியில் நிற்கிறது! ஆம்; 7-6-2004 அன்றுதான் டெல்லியில் நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய இந்தியக் குடியரசுத் தலைவர், டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள், "தமிழ் செம்மொழியெனப் பிரகடனப்படுத்தப்படும்" (Tamil will be declared as a Classical Language) என்று அறிவித்தார். அந்த அறிவிப்பு, உண்மையான தமிழ் அறிஞர்களையும், தமிழ் ஆர்வலர்களையும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களையும் மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்தியது.

இதனைத் தொடர்ந்து அதே 2004ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 21, 22 ஆகிய நாள்களில் சேலம் மாநகரில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகச் சிறப்பு மாநாட்டில் அமைதியாகக் கழகப் பணியாற்றும் செயல் வீரர்களில் ஒருவரான பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியம் முன்மொழிந்திட, திருவில்லிப்புத்தூர் தம்பி ச. அமுதன் வழிமொழிந்திட ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அந்தத் தீர்மானம்,

"கடந்த ஒரு நூற்றாண்டாகத் தமிழறிஞர்கள் பலரும், தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியேயென்று தக்க சான்றுகள் தந்து, வலியுறுத்தி வந்தாலும், தமிழ்மொழியின் அந்தச் சிறப்புத் தகுதியை மத்திய அரசு ஏற்கவேண்டும் என்பதைக் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே, பிரதமர் வாஜ்பய் அவர்களுக்குக் கடிதவாயிலாகவும், நேரிலும் பலமுறை வலியுறுத்தி வந்ததுடன், தி.மு.க. நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலும் அதனை இடம்பெறச் செய்து, தமிழ்மொழியைச் செம்மொழியென அறிவிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தியதற் கிணங்க,

மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, அதனை ஏற்றுக் குடியரசுத் தலைவர் உரையில் அறிவித்திருப்பதை இம்மாநாடு வரவேற்பதுடன், விரைவில் அதற்குரிய அரசாணை வெளியிடவும் கேட்டுக்கொள்கிறது."

இதுதான் அந்தத் தீர்மானம். இதனைத் தொடர்ந்து திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலிலும், டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் தலைமையிலும் இயங்கி வந்த மத்தியிலிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, 12.10.2004 அன்று, தமிழைச் செம்மொழியெனப் பிரகடனம் செய்து அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிவிக்கை வெளியானதும், நான் எவ்வளவு குதூகலம் கொண்டிருப்பேன் - எனது உள்ளம் எந்த அளவுக்கு மகிழ்ச்சியால் துள்ளியிருக்கும் - எனது மனத்தில் எவ்வளவு பெருமிதம் முளைத்திருக்கும்; என்பதையெல்லாம் உடன்பிறப்பே, என்னை முழுதும் அறிந்த நீ நிச்சயம் உணர்வாய். தந்தை பெரியார் அவர்கள் என்னைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டியபோதெல்லாம் - அறிஞர் அண்ணா அவர்கள் என்னை அரவணைத்து உச்சிமுகர்ந்து அன்புமழை பொழிந்த போதெல்லாம்; அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடான மகிழ்ச்சி அப்போது என்னுள் குடிகொண்டிருந்தது.

அந்த நேரத்தில் சோனியா காந்தி அம்மையார் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தையும் நினைவூட்டுவது சரியாக இருக்குமென்று கருதுகிறேன். அந்தக் கடிதம் :-

November 8, 2005

Dear Thiru Karunanidhiji,

I have received your letter of 28th October.

I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government, but particular credit goes to you and your Party.

With Regards,

Yours sincerely,

Sonia Gandhi.

தமிழைச் செம்மொழியென அறிவிக்க வேண்டுமென்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலே அல்ல; அதற்கு முன்பிருந்தே அந்த வேண்டுகோள் மத்திய அரசுக்குப் பல முறை அனுப்பப்பட்டுள்ளது. ஆட்சியிலே இருந்தாலும், எதிர்க்கட்சியாகச் செயல்பட்டாலும் திராவிட முன்னேற்றக் கழகம், தான் ஏற்றுக்கொண்ட இலட்சியங்களுக்காக என்றென்றும் தளராமல் குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கும் என்பதற்குக் கழக வரலாற்றில் எண்ணற்ற சான்றாவணங்கள் இருக்கின்றன. தமிழைச் செம்மொழியாகப் பிரகடனப்படுத்திட வேண்டுமென்பது கழகத்தின் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றிட, ஆட்சியில் இருந்தபோது மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக, எதிர்க்கட்சியாக இருந்தபோதும் கழகம் தொய்வில்லாத நடவடிக்கைகளை மேற்கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்கிற முறையில் நான், பிரதமர் வாஜ்பய் அவர்களுக்குத் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து, 22.4.2003 அன்றே ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில்:

“தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்பது எனது இதயபூர்வமான கோரிக்கை. கடந்த பல ஆண்டுகளாக நான் வலியுறுத்தி வரும் இந்தக் கோரிக்கையை மீண்டும் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்மொழி எப்போது தோன்றியது என்பதை இதுவரை எந்த அறிஞரும் கண்டுபிடிக்கவில்லை. கல்தோன்றி மண் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய மிக மூத்த மொழி தமிழ்மொழி என்று அறிஞர்கள் பலர் கூறியுள்ளனர். இதுவே தமிழின் தொன்மையைப் பறைசாற்றுகிறது. அத்தகைய பெருமை வாய்ந்த தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை நான் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறேன். தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்பாகப் பலமுறை நான் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன். இந்நிலையில், தங்கள் தலைமையில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, நீண்ட எதிர்பார்ப்புடன் கூடிய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் என்று நம்புகிறேன்” என்று மீண்டும் மத்திய அரசுக்கு நினைவூட்டி, வலியுறுத்தினேன்.

அதே 2003ஆம் ஆண்டில், தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளின் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களை நேரில் சந்தித்து, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்தி மனு கொடுத்தனர்.

இந்த வேண்டுகோள்கள் எல்லாம் சேர்ந்து தான் 2004ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிவிப்பாக வெளிவந்தது. இவ்வாறு அரும்பாடுபட்டுக் கொண்டு வந்த இந்த செம்மொழி அறிவிப்பினைத் தொடர்ந்து, அப்போது மத்திய அரசில் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த நண்பர் அர்ஜுன் சிங் அவர்களிடம் நான் வைத்த கோரிக்கையை அவர் அன்போடு ஏற்று, அதன் விளைவாகச் செம்மொழி மத்திய அலுவலகத்தையே மைசூரிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தோம். இதற்கான ஆணையும், செம்மொழி நிறுவனத்திற்கான சட்ட விதிமுறைகளுக்கான மத்திய அரசின் ஒப்புதலும் வருவதற்குத் தாமதமானபோது என்னுடைய செயலாளர்களில் ஒருவரான தம்பி கே. ராஜமாணிக்கம், ஐ.ஏ.எஸ்., அவர்களை டெல்லிக்கே அனுப்பி, அப்போது மத்திய அமைச்சராக இருந்த தம்பி டி.ஆர். பாலுவுடன் அர்ஜுன் சிங் அவர்களை நேரில் சந்திக்க வைத்து, அன்று ஒரே நாளில் மத்திய அமைச்சரே முன்னின்று மத்திய அரசின் அனுமதிகளையும், ஆணைகளையும் பெற்றுக் கொடுத்து உதவியதும் என்னுடைய நினைவிலே இருக்கிறது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத் தொடக்க விழா 30.6.2008 அன்று நடைபெற்றபோது ஆண்டுதோறும் செம்மொழித் தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் அறிஞருக்கு 10 இலட்சம் ரூபாய் பொற்கிழி விருது வழங்கிட ஒரு கோடி ரூபாய் நிதி என் சார்பில் வழங்கப்படும் என அறிவித்து, அதன்படி செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் "கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை" தொடங்கிட 21.7.2008 அன்று ஒரு கோடி ரூபாய் என்னுடைய சொந்த நிதியிலிருந்து வழங்கினேன்.

சென்னை தலைமைச் செயலகத்தில், சட்டமன்ற வளாகம் இருந்த இடத்தில் பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலகம் ஒன்றினை நிறுவி, பழம்பெரும் தமிழ் நூல்களையும், அரிய ஓலைச் சுவடிகளையும் அங்கே கொண்டு வந்து சேர்த்தோம்.

சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் முக்கியமானதொரு அரசு வளாகத்தில் செம்மொழி தமிழாய்வு நிறுவனத்திற்கே முதலமைச்சராக இருந்த நான் நேரில் சென்று, தமிழறிஞர்களை எல்லாம் அழைத்து அடிக்கடி கூட்டங்களை நடத்தி, செம்மொழியை எப்படியெல்லாம் மேலும் வளர்ச்சியுறச் செய்யலாம் என்பதற்கான திட்டங்களையெல்லாம் வகுத்தேன். செம்மொழி மத்திய நிறுவனத்திற்குப் புதிய அலுவலகம் கட்டுவதற்கான இடத்தை ஒதுக்கி, நிதியை ஒதுக்கி அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் கழக ஆட்சியிலே செய்யப்பட்டன. இவ்வளவு அரும்பாடுபட்டுக் கொண்டுவந்த அந்தச் செம்மொழி நிறுவனமும், செம்மொழி அறிவிப்பும், கழக ஆட்சி 2011ஆம் ஆண்டு மாறிய பிறகு என்ன கதியில் இருக்கின்றன?

"செம்மொழி"யைக் கொண்டு வர முழுமுதல் காரணமாக இருந்தவன் நான் என்ற காரணத்தால், இந்த அ.தி.மு.க. ஆட்சிக்கு, குறிப்பாக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு "செம்மொழி" என்றாலே ஒரு ஒவ்வாமை (அலர்ஜி). அதைப் பற்றி நினைப்பது கூடப் பாவம் என்று கருதுகிறார்கள். தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நிறுவன நூலகத்தை பதவியேற்பதற்கு முன்பாகவே தூக்கி வெளியே எறிந்தார்கள். தற்போது அந்த நூலகம் எங்கே இயங்குகிறது என்றே தெரியவில்லை. அதுபோலவே செம்மொழி அலுவலகம் என்ன ஆனது, இயங்குகிறதா இல்லையா என்ற விவரமும் தெரியவில்லை. எனக்கு "சன் தொலைக்காட்சி" நிறுவனத்திலிருந்து கிடைத்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயைச் செம்மொழி தமிழாய்வு நிறுவனத்திற்கு அளித்து, அதிலிருந்து கிடைக்கும் நிதியிலிருந்து தமிழ் மொழி ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் பத்து இலட்சரூபாயில் விருது அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டவாறு, அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து முறையாக வழங்கப்படவே இல்லை.

செம்மொழி மத்திய நிறுவனத்திற்காகக் கட்டப்பட வேண்டிய கட்டிடப் பணிகளும் விரைவுபடுத்தப்படாமல் அப்படியே கிடக்கின்றது. சில நாட்களுக்கு முன்பு இந்த நிறுவனத்திற்கு துணைத் தலைவரான டாக்டர் அவ்வை நடராஜன், மத்திய மனித வள மேம்பாட்டுத் துறைக்கு எழுதிய கடிதத்தில், செம்மொழி நிறுவனத்திலிருந்து அனுபவம் வாய்ந்த தமிழறிஞர்களை

வெளியேற்றி விட்டு, புதியதாக மீண்டும் தேர்வு செய்ய நடவடிக்கை எடுத்திருப்பது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி யுள்ளது என்று தெரிவித்திருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அவ்வை நடராஜன் துணைத் தலைவராக மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட போதிலும், அவருக்கு அதற்கான அதிகாரம் அளிக்கப்படாமல், இயக்குநருக்கே முழு அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளதாம். தற்போது சென்னை ஐ.ஐ.டி. இயக்குநராக இருப்பவர்தான், செம்மொழி நிறுவனத்தின் இயக்குநராகவும் பொறுப்பு வகிக்கிறார். இதுபற்றியெல்லாம் தமிழக அ.தி.மு.க. அரசு நமக்கென்ன என்ற அலட்சியமான பாணியில் அக்கறையற்ற நிலையிலே செயல்படுகிறது. கடந்த மூன்றாண்டு காலத்தில் முதல் அமைச்சரோ, யாராவது அமைச்சர்களோ இந்தச் செம்மொழி நிறுவன அலுவலகத்திற்கு ஒரு முறையாவது சென்றிருப்பார்களா, நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றி ஏதாவது கூட்டம் நடத்திப் பேசியிருப்பார்களா என்பதே சந்தேகம்தான்!

இந்தியாவில் தற்போது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஆட்சி மொழியாகத் தமிழ் இருக்கிறது. இலங்கையில் மூன்று ஆட்சி மொழிகளுள் தமிழும் ஒன்று. சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழ் இடம்பெற்றுள்ளது. தென்னாப்பிரிக்காவிலும் தமிழுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அரசில், செம்மொழிக்கு அங்கீகாரம் இருக்கிறதா?

செம்மொழி என்றால், அது தமிழறிஞர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மட்டும் உரிமையுடையதல்ல. தமிழ் மொழியின் பால் அக்கறை கொண்டவர்கள் அனைவருக்கும் அதிலே பொறுப்பு உண்டு. தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்டதால் தமிழகத்திற்கு என்னென்ன பயன்கள் ஏற்படும் என்றால்;

அனைத்து இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்த் துறை, தனித் துறைகளாக உருவாகும். இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு தமிழைச் செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும். தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும் உலக அளவில் தன் மதிப்பு உயரும். பன்னாட்டு மொழிக் கலைக் களஞ்சியங்களில் தமிழ் இலக்கியங்கள் இடம் பெறும். பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழிக்குத் தனி இருக்கை நிறுவப் பெறும். சமஸ்கிருதத்திற்கு இந்திய அரசு நேரடியாக 40

கோடி ரூபாயும், அரசு சார்பு நிறுவனங்கள் மூலமாக 100 கோடி ரூபாயும் ஒதுக்கி அந்த மொழியின் வளர்ச்சிக்கு உதவி வருவது போல, தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உதவி கிடைக்க வாய்ப்பு ஏற்படும். இந்திய மொழிகளில் மட்டுமல்லாது ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் தமிழ் இலக்கியங்களும், நவீன படைப்பு களும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

இந்த நன்மைகளைக் கருதியாவது அ.தி.மு.க. அரசு செயல்படுகிறதா என்றால், "இல்லை" என்பது தான் வேதனை. செம்மொழியினால் வரக்கூடிய நன்மைகளை எண்ணிப் பாராமல், செம்மொழி என்ற அறிவிப்பு வெளிவரக் காரணமாக இருந்தவன் நான் என்பதால், செம்மொழி என்றாலே ஒவ்வாமையைக் காட்டுகின்ற இந்த அரசு தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டாமா என்று தமிழர்கள் அனைவரும், தமிழ் உணர்வு உள்ளவர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டாமா என்பதை, செம்மொழி அறிவிப்பினை நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் அறிவித்த அந்த நாளை; இன்று நான் நினைவுபடுத்துகின்றேன்.

அன்புள்ள,

மு.க.

7-6-2014

3887. தாமதமாகும் நீதி; தடுக்கப்படும் நீதியாகி விடும்!

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் நடைபெற்று வருவது பற்றி விரிவாக நான் வெளியிட்ட கருத்துகள் அனைத்தும் ஒரு நூலாகவே ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியாகியுள்ளது. பொதுவாக நான் நீதிமன்றங்கள் பற்றியோ, அங்கே நீதிபதிகளால் வெளியிடப்படும் தீர்ப்புகள் பற்றியோ விமர்சித்துப் பழக்கப்பட்டவனல்ல. ஆனால் ஜெயலலிதா தரப்பினர் நீதிமன்றங்களை எந்த அளவுக்கு மதிக்கிறார்கள், எவ்வாறெல்லாம் தங்களுடைய சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள சட்ட விதிமுறைகளை முற்றிலுமாய் வளைத்து, நெளித்து பயன்படுத்திக் கொள்ள முனைகிறார்கள் என்பதை நான் மட்டுமல்ல; இந்த நாடே பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், 18-11-2003 அன்று அதாவது 11 ஆண்டுகளுக்கு முன்பு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.என். வரியவா அவர்களும், எச்.கே. சீமா அவர்களும் அளித்த தீர்ப்பிலேயே, **“குற்றம் சாற்றப்பட்ட வர்களுடன் எந்த அளவிற்கு அரசுத் தரப்பினர் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அரசு வழக்கறிஞர் குற்றவாளிகளோடு இணைந்து செயல்படுவது தெளிவாகத் தெரிகிறது. அதன் காரணமாகப் பொதுவாக நீதி கிடைக்காது என்ற ஒரு நம்பத்தகுந்த ஐயம் மக்கள் மனதிலே எழுந்துள்ளது. நீதி திசை திரும்பிச் செல்வது நிச்சயமாகத் தெரிகின்றது. இவ்வழக்கைத் தினமும் எடுத்து விசாரிக்க வேண்டும்”** என்று கண்டிப்புடன் தெரிவித்த பிறகும்; இந்த வழக்கு விசாரணை முடியவில்லை என்றால், எந்த அளவிற்குக்

குற்றம் சாற்றப்பட்டவர்கள், தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக வழக்கு விசாரணையை எல்லையே இல்லாமல் இழுத்தடித்துத் தாமதப்படுத்திடும் முயற்சியிலே ஈடுபட்டு, அதிலே பெருமளவுக்குத் தாங்கள் திட்டமிட்டபடி சாதித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

தற்போது இந்த வழக்கை விசாரித்து வரும் சிறப்பு நீதிபதி ஜான் மைக்கேல் குன்ஹா அவர்கள் விரைவிலே விசாரணையை முடித்து, தீர்ப்பினைத் தர வேண்டுமென்ற அக்கறையோடும், சட்ட நெறிகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற கடமை உணர்வோடும் செயல்படுகிறார் என்ற போதிலும், தீர்ப்பு வெளிவராமல், முடிவே இன்றித் தள்ளிவைக்க என்னென்ன முயற்சிகள் செய்யப்படு கின்றன தெரியுமா?

இந்த வழக்கில் எப்படியெல்லாம் வாய்தாவுக்கு மேல் வரிசை வரிசையாக வாய்தாக்கள் வாங்கித் தப்பிக்கிறார்கள் என்பது பற்றி நான் ஏற்கனவே விளக்கிய நிலையில், தீர்ப்பினைத் தள்ளிப் போடத் தற்போது, இறுதிக்கட்டமாக, என்னென்ன முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள் என்ற ஒரு விவரத்தைக் கூறுவதற்காகத்தான் இந்தக் கடிதம்.

ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் "லெக்ஸ் பிராபர்ட்டீஸ் டெவலப்மெண்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம்" போன்றவை இணைக்கப்பட்டு, அவை குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் சொத்து என்று ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு 15 ஆண்டு களுக்கு மேலாக நடைபெறுகிறது. இத்தனை ஆண்டுகள் அமைதியாக இருந்த இந்த நிறுவனம், வழக்கு முடிவடைந்து தீர்ப்பு வெளிவரவிருக்கும் இந்த முக்கியமான தருணத்தில், திடீரென்று கடந்த மார்ச் திங்களில், வழக்கிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டுமென்றும், அது தொடர்பாகத் தாக்கல் செய்துள்ள மனுவின் மீது முடிவு காணும்வரை, ஜெயலலிதா மீதான மூல வழக்கை விசாரிக்காமல் தடைவிதிக்க வேண்டும் என்றும் ஒரு மனுவினைப் பெங்களூர் நீதிமன்றத்தில் கோரிக்கையாக வைக்கிறார்கள். அதாவது இவர்களின் கோரிக்கை தங்கள் சொத்தினை விடுவிக்க வேண்டுமென்பது மாத்திரமல்ல;

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்குத் தடை விதிக்க வேண்டுமென்பதுதான்!

இந்தக் கோரிக்கையின் மீது தீர்ப்பளித்த குன்ஹா, சொத்துக் குவிப்பு வழக்கில் கம்பெனிகள் இணைக்கப்பட்டுள்ளதை விடுவிக்கக் கோரித் தாக்கல் செய்த கோரிக்கையை ஏற்று விசாரிக்க ஒப்புக் கொள்வதாகவும், அதே நேரத்தில் மூல வழக்கினை நடத்தத் தடைகோரும் கோரிக்கையைத் தள்ளுபடி செய்வதாகவும் கூறிவிட்டார்.

தனி நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பை எதிர்த்து லெக்ஸ் பிராபர்ட்டீஸ் கம்பெனி சார்பில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு, இரு தரப்பு வாதங்களையும் கேட்ட கர்நாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதி சத்யநாராயணா அவர்கள்,

"சொத்துக் குவிப்பு வழக்கை விரைந்து முடிக்கவேண்டும் என்பதற்காகத்தான் உச்சநீதி மன்ற வழிகாட்டுதலின்படி பெங்களூரில் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது. வழக்கு விசாரணையினைத் தினமும் நடத்தவேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் பல மனுக்கள் போடப்படுகின்றன. சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து லெக்ஸ் கம்பெனியை விடுவிக்கவேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கை ஏற்புடையதல்ல. ஆகவே மனுவைத் தள்ளுபடி செய்கிறேன். மேலும் நீதிமன்ற நேரத்தை வீணாக்கும் வகையில் செயல்பட்டதற்காக தனி நீதிமன்றம் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்திருந்தது. அது குறைவானது என்பதால் 10 மடங்கு உயர்த்தி ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கிறேன். அபராதத் தொகையை வரும் 15 நாட்களில் செலுத்த வேண்டும்".

இவ்வாறு கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சத்யநாராயணா அவர்கள் தீர்ப்பளித்தார். **(இதிலே இன்னும் வேடிக்கை என்னவென்றால், இதே லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனத்தினர் ஏற்கனவே ஒரு முறை தங்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரிக்கைவைத்து, அந்தக் கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பது தான்.)**

பெங்களூர் சிறப்பு நீதிமன்றம், கர்நாடகா உயர் நீதி மன்றம் ஆகியவை நிராகரித்த பிறகும், லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அதனை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சௌகான், செல்லமேஷ் வர், இக்பால் ஆகியோர், சொத்துக் குவிப்பு விசாரணைக்குத் தடை விதிக்குமாறு லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனம் முன் வைத்த கோரிக்கையை நிராகரிப்பதாக 8-5-2014 அன்று தெரிவித்தனர். மேலும் வழக்கு விசாரணையைத் தடுத்திடும் வகையில் செயல்படுவதாக அந்த நிறுவனத்திற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

பெங்களூரு சொத்துக் குவிப்பு வழக்கை மேலும் இழுத்தடிக்க ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் பி.குமார் மனு ஒன்றைத் தாக்கல் செய்து வாதிடும்போது, "சொத்துக் குவிப்பு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள கம்பெனிகளை விடுவிக்கக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவை முதலில் விசாரணை நடத்த முன்னுரிமை கொடுப்பதுடன், மூல வழக்கு விசாரணையை நிறுத்தி வைத்துக் கம்பெனிகள் தொடர்பாக வழக்கைப் பெங்களூர் தனி நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் கடந்த ஏப்ரல் 2ம் தேதி வழங்கிய தீர்ப்பை அடிப்படையாக வைத்து முதலில் கம்பெனிகள் தொடர்பான மனுவை விசாரணை நடத்த வேண்டும். சொத்துக் குவிப்பு வழக்கில் கம்பெனிகள் யாருக்குச் சொந்தம் என்பது உறுதி செய்யப்பட்டால் மட்டுமே, எங்கள் கட்சிக்காரர் மீது சுமத்தியுள்ள குற்றங்களை நாங்கள் இல்லை என்று நிரூபிக்க முடியும்" என்றார்.

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து கம்பெனிகளை விடுவிக்கக் கோரும் இந்த மனுவின் மீது நீதிபதி ஜான் மைக்கேல் குன்கா 7-5-2014 அன்று வழங்கிய தீர்ப்பில், "அந்த மனு ஏற்கனவே விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மனு மீதான விசாரணை முடியும்வரை மூல வழக்கின்மீது விசாரணை நடத்தாமல் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்க முடியாது. ஒரேநேரத்தில் இரு வழக்குகளும் நடைபெறும். மூல வழக்கில் தீர்ப்பு வழங்குவதற்கு முன், கம்பெனிகள் தொடர்பான மனு மீது தீர்ப்பு வழங்கப்படும்" என்று தெளிவுபடுத்தினார்.

இதையும் மீறி, லெக்ஸ் பிராப்பர்ட்டீஸ் நிறுவனத்தின் சொத்துக்களை முடக்கியதை எதிர்த்து, அந்த நிறுவனத்தின் இயக்குனர் சிவக்குமார் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவினைத் தாக்கல் செய்து, அந்த வழக்கு முடியும்வரை, ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்குக்குத் தடை விதிக்க வேண்டும் என்றார். **இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். சவுகான், சிக்ரி ஆகியோர் 13-5-2014 அன்று தடை விதிக்க முடியாது என்று கூறி, விசாரணையை 26-5-2014ஆம் தேதிக்குத் தள்ளிவைத்தனர். ஆனால் 26-5-2014 அன்று அதே உச்ச நீதிமன்றத்தில் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு ஜூன் 6ஆம் தேதி வரை தடை விதித்தும், ஜெயலலிதா மனு மீது தமிழக ஊழல் தடுப்பு பிரிவு டி.ஜி.பி. பதில் மனு தாக்கல் செய்ய வேண்டுமென்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.**

தமிழக அரசின் கட்டுப்பாட்டிலே உள்ள ஊழல் தடுப்புப் பிரிவு எப்படிப்பட்ட பதிலைத் தாக்கல் செய்யும் என்று நமக்குத் தெரியாதா என்ன? ஆனால் ஊழல் தடுப்புப் பிரிவு உச்ச நீதிமன்றம் தெரிவித்த 6-6-2014ஆம் தேதிக்குள்; பதிலையே தாக்கல் செய்யாமல், மேலும் கால அவகாசம் தங்களுக்கு வேண்டுமென்று 6-6-2014 அன்று உச்ச நீதிமன்றத்திலே வந்து தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கிடையே உச்ச நீதிமன்றம் விதித்த இந்த இடைக்காலத் தடையை ரத்துசெய்ய வேண்டுமென்று கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு, அதுபற்றி 6-6-2014 அன்று வாதாடிய கழகத்தின் மூத்த வழக்கறிஞர் சண்முக சுந்தரம், அரசு வழக்கறிஞரின் வாதத்தைக் கேட்காமல், சொத்துக் குவிப்பு வழக்குக்கு இடைக்காலத் தடை விதித்தது தவறு என்று வாதாடினார். ஆனால் ஜெயலலிதா அரசின் லஞ்ச ஒழிப்புத் துறையோ சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை மேலும் நான்கு வார காலத்திற்கு ஒத்தி வைக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். நீதிபதிகள் வழக்கு விசாரணையை நான்கு வார காலத்திற்கு ஒத்திவைக்க முடியாது என்று கூறி, ஜெயலலிதா தரப்பினர் வரும் வெள்ளிக்கிழமைக்குள் பேராசிரியர் சார்பாகத் தாக்கல் செய்த மனுவுக்கு 13ஆம் தேதி

பதிலளிக்க வேண்டுமென்று தெரிவித்ததோடு, வரும் 16ஆம் தேதி வரை மீண்டும் பெங்களூரில் நடைபெறும் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையை ஒத்திவைத்திருக்கிறார்கள். இதனைப் பார்க்கும் போது, "கங்கையிலே முளைத்தாலும் பேய்ச் சுரைக்காய் நல்ல சுரைக்காய் ஆகாது" என்ற பழமொழி நினைவுக்கு வந்தால், அதற்கு நான் பொறுப்பல்ல!

எப்படியோ சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை மேலும் பத்து நாட்களுக்கு உச்சநீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெங்களூருவில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்களுடைய இறுதி வாதத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்கலாம் என்று நீதிபதி கூறிய பிறகும், அவ்வாறு இறுதி வாதத்தை வைக்காமல் காலம் கடத்துவதிலே ஈடுபட்டு வந்ததாலும், 26-5-2014 அன்றும் இறுதி வாதத்தைத் தொடங்க முன்வராத காரணத்தினாலும், நீதிபதி தனது கண்டனத்தைத் தெரிவித்ததோடு, பிற்பகல் 3 மணிக்கு இறுதி வாதத்தைத் தொடங்கலாம் என்றும், அதுவரையில் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சசிகலா, இளவரசி ஆகியோர் கூண்டில் நிற்க வேண்டுமென்றும் உத்தரவிட்ட சம்பவமும் நடைபெற்றது.

இந்த வழக்கு பற்றி ஆங்கில நாளேடு "டைம்ஸ் ஆப் இந்தியா" 26-5-2014 அன்று வெளியிட்ட செய்தியில், "ஜெயலலிதாவின் அதிகார வளர்ச்சியைச் சொத்துக் குவிப்பு வழக்கு பாதிக்கும்" என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரையே தீட்டியிருந்தது.

"நெருங்குகிறது தீர்ப்பு நாள்" என்ற தலைப்பில் 4-6-2014 தேதிய "இந்தியா டுடே" தமிழ் வார இதழ் எழுதிய கட்டுரையில் எப்படியும் இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்ப்பு வெளியாகி விடலாம் என்று தெரிகிறது" என்று எழுதியுள்ளது.

இதற்கிடையே 29-5-2014 அன்று பெங்களூர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பினர் தாக்கல் செய்த மற்றொரு மனுவில், விசாரணை அதிகாரியாக இருந்த திரு. நல்லம நாயுடுவின் பரிந்துரைப்படி சொத்துக்களை முடக்கியது தவறு என்று தெரிவித்தார்கள். இந்த மனு மீது 4-6-2014 அன்று தீர்ப்பு வழங்கிய குன்ஹா அவர்கள், **"நல்லம நாயுடுவுக்கு சொத்துக்களை முடக்கும் அதிகாரம் இல்லை என்று குற்றவாளிகள் தரப்பில்**

எடுத்துவைக்கும் வாதம் ஏற்புடைய தல்ல; மேலும் கடந்த 1999 முதல் தற்போது வரை நூற்றுக்கும் மேற்பட்ட மனுக்களைத் தாக்கல் செய்துள்ள குற்றவாளிகளுக்கு, வழக்கு தொடர்ந்த 17 ஆண்டுகளுக்குப் பின் தான் விசாரணை அதிகாரிக்கு சொத்துக்களை முடக்கும் அதிகாரம் இல்லை என்பது நினைவுக்கு வந்ததா? இது இவ்வழக்கை **இழுத்தடிக்கும் முயற்சி என்பது தெளிவாகத் தெரிகிறது"** என்று கூறிக் குற்றவாளிகள் மற்றும் கம்பெனிகள் சார்பில் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை எப்படியெல்லாம் இழுத்தடிக்கப்படுகிறது என்பதற்கு இவைகள் எல்லாம் நல்ல விளக்கங்களாக அமையுமென்று கருதுகிறேன். Justice delayed, is Justice denied என்பது முதுமொழி. தாமதமாகும் நீதி, தடுக்கப்படும் நீதியாகிவிடும் அல்லவா?

அன்புள்ள,

மு.க.

8-6-2014

3888. தமிழர்களின் இந்த விருப்பமாவது நிறைவேறுமா?

உடன்பிறப்பே,

"மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடம் கட்டாயம்: அரசு உத்தரவுக்கு தடை விதிக்கக் கோரி வழக்கு - தமிழக அரசுக்கு நோட்டீஸ்" என்ற தலைப்பில் அனைத்து நாளேடுகளிலும் ஒரு செய்தி வந்துள்ளது. அதாவது மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடத்தைக் கட்டாய மாக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தடை விதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒருவர் மனு தாக்கல் செய்து, அந்த மனுவுக்கு ஜூன் 10ஆம் தேதிக்குள் பதிலளிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிக்கு மீண்டும் வந்ததும், சட்டப் பேரவையில் படிக்கப்பட்ட ஆளுநர் அறிக்கையிலேயே "பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர் அனைவரும் வரும் கல்வி ஆண்டு முதல் கட்டாயமாக தமிழை ஒரு பாடமாகப் பயின்றிட எதிர்ப்படும் இடையூறுகளைக் களைந்து, விரைவில் கல்வியாளர்களைக் கலந்து பேசி ஆணை பிறப்பிக்க இந்த அரசு உறுதி அளிக்கிறது" என்று தெரிவிக்கப்பட்டது.

ஏன்; அதற்கு முன்பே, கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், "தமிழகத்தில் செயல்படும் பலவகை பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் அனைவரும் தமிழ் மொழியை ஒரு பாடமொழியாகப் பயின்றிட ஏற்ற வழி காண்போம்" என்று அறிவித்திருந்தோம். இப்படிச் சொன்னதைச் செய்வதற்காகத்தான் ஆட்சிக்கு வந்ததும், ஆளுநர் உரையிலே அந்தத் தேர்தல் வாக்குறுதியை இடம் பெறச் செய்தோம்.

மீண்டும் அந்த ஆண்டு வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் பத்தி 40இல் "தேர்தல் அறிக்கை யைத் தொடர்ந்து

ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு, "தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ்தான் இல்லை" என்ற நாணமுறும் நிலையைப் போக்க நம் தமிழ் மொழியை, பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் கட்டாயமாக கற்பதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆண்டிலேயே முதலாம் வகுப்பில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிப்பது தொடங்கும். இது வரும் ஆண்டுகளில் படிப்படியாக பத்தாம் வகுப்புவரை விரிவுபடுத்தப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

மொழிக் கொள்கையைப் பொறுத்தவரை தமிழகத்திலே என்ன நடைமுறை பின்பற்றப்படுகின்றது? தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது என்ன செய்தது? தற்போது ஆட்சிப் பொறுப்பிலே உள்ள அ.தி.மு.க. அரசு தமிழ் மொழிக் கல்விக்கு என்ன செய்துள்ளது என்பதனை விளக்குவதற்காக சில கருத்துக்களை இக் கடிதத்தி ன் மூலம் எடுத்து வைத்திட விரும்புகிறேன்.

> 9.3.2002 அன்று தமிழக சட்டப் பேரவையில் அ.தி.மு.க. அரசின் சார்பில் ஆளுநரால் படிக்கப்பட்ட உரையில், "மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் பாடத் திட்டங்களில் தமிழ் மொழி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவது உறுதி செய்யப்படும்"

- என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின்மீது எந்த நடவடிக்கையையும் அ.தி.மு.க. அரசு ஓராண்டுக் காலம் எடுக்காமல் இருந்து 2003ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21ஆம் நாள் ஒரு அரசாணையைப் பிறப்பித்தது. அந்த ஆணையில் பள்ளிகளில் அனைவரும் பயில ஏதுவாக 1- 5 வகுப்புகளில் "அறிவியல் தமிழ்ப் பாடம்" கற்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போது 24.1.1968இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 105இல் உள்ள வார்த்தைகளையே குறிப்பிட்டு, அதே கொள்கைதான் கடைப்பிடிக்கப்படுகிறது என்று ஜெயலலிதா அரசின் 21.4.2003 தேதியிட்ட அரசாணை கூறியது.

ஆனால் தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது 27.12.1999 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 354ன்படி, 24.1.1968 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண். 105இல் உள்ள "வட்டார மொழி அல்லது தாய்மொழி" என்ற வார்த்தைகள் "தமிழ் அல்லது தாய்மொழி" என்று திருத்தப்பட்டது. இருமொழிக் கொள்கைக்கான அரசாணையில் தமிழ் என்ற வார்த்தையே இடம் பெறவில்லை என்ற சில தமிழ்ச் சான்றோர்களின் குறைபாடு தி.மு. கழக அரசு 1999இல் பிறப்பித்த இந்தத் திருத்தத்தின் மூலமாக நீங்கியது.

ஆனால் ஜெயலலிதா 21.4.2003இல் பிறப்பித்த அரசாணையில் கழக ஆட்சியில் இருமொழிக் கொள்கை குறித்த ஆணையில் தமிழ் என்று திருத்தியதைப் பற்றியே கவனத்தில் கொள்ளாமல், தமிழ்நாட்டில் 68ஆம் ஆண்டு பிறப்பித்த ஆணை அப்படியே நடைமுறையில் இருப்பதைப் போலக் கருதிக்கொண்டு அரசாணை பிறப்பித்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் 28.8.1997 அன்று தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுப்பிய கடிதத்தில், மாணவர்கள் தங்கள் இளம் வயதில் தாய்மொழியிலே படிப்பதன் மூலம் எந்த அளவிற்குப் பயன்பெறுவார்கள் என்பதை பள்ளிகளின் நிர்வாகத்திற்கு அறிவுறுத்தும்படி பணிக்கப்பட்டார்கள்.

27.11.1998இல் அரசாணை எண். 421இன்படி அனைத்து நர்சரி மற்றும் மழலையர் பள்ளிகளில் தமிழைப் பயிற்றுமொழியாக அறிமுகப்படுத்த வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. அதனை அமல்படுத்துவோருக்கு பதிவுக் கட்டணம் போன்றவற்றில் 50 சதவிகித சலுகையும் அறிவிக்கப்பட்டது. இது தமிழ்க் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக தி.மு. கழக ஆட்சியில் செய்யப்பட்ட செயல்தான்.

13.1.1999இல் அரசாணை எண்.6இன் படி கணக்கு, விஞ்ஞானம், சமூகவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங்களை தமிழிலே நடத்தும் பள்ளிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் புதுப்பிக்கப்படும் என்றும், தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு நடத்திடும் நர்சரி மற்றும் மழலையர் பள்ளிகளுக்கு பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் கழக

ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதுவும் தமிழ்க் கல்வியை ஊக்கப்படுத்தும் மற்றொரு அறிவிப்பாகும்.

3.5.1999இல் அரசாணை எண். 117இன்படி அரசாங்கம் நீதிபதி எஸ். மோகன் அவர்கள் தலைமையில் நான்கு உறுப்பினர்களுடன் கொண்ட குழு ஒன்றை, நர்சரி வகுப்பு முதற்கொண்டு உயர்நிலைப் படிப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வரவேண்டுமென்று தமிழ்ச் சான்றோர்கள் கொடுத்த கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக நியமித்தது. இதுவும் தமிழுக்காக கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைதான்.

13.1.1999 அன்று அரசாங்கம் பிறப்பித்த அரசாணையை எதிர்த்து பல சங்கங்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். உயர்நீதி மன்றம் 7.6.1999 அன்று அளித்த தீர்ப்பில் அரசாணை செல்லும் என்று தெரிவித்ததோடு, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்களுக்கு அந்த ஆணை பொருந்தாது என்றும் தெரிவித்தது. இதன் காரணமாக 27.1.2000 அன்று அரசாங்கம் 13.1.1999 அன்று வெளியிட்ட அரசாணைக்கு ஒரு திருத்தம் வெளியிட்டது. அதிலே பயிற்று மொழியாக தமிழ் அல்லது தாய்மொழி என்று இருக்கலாம் என்று கூறியது.

நீதிபதி எஸ். மோகன் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் 19-11-1999 அன்று அரசாணை எண். 324 பிறப்பிக்கப்பட்டது. அதன்படி

(1) அரசாங்கத்தின் மொழிக் கொள்கைகள் பற்றிய ஆணைகள் தொடர்ந்து அரசாணைகள் மூலமே அறிவிக்கப்படும்.

(2) அனைத்துப் பள்ளிகளிலும் (மெட்ரிகுலேஷன், அரசுப் பள்ளிகள், உதவி பெறும், உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற பள்ளிகள்) முதல் மொழியாக தமிழ் அல்லது தாய்மொழி இருக்கும்.

(3) மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசுப் பள்ளிகளில் பயிற்று மொழியாக தமிழ் அல்லது தாய்மொழி இருக்கும்.

(4) 2000-2001 முதல் மூன்றாண்டு காலத்திற்குள் தமிழ் அல்லது தாய்மொழி பயிற்று மொழி என்பது முடிவடைய வேண்டும்.

27.12.1999 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண். 355இன்படி, மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்புவரை தமிழ் அல்லது தாய்மொழி பயிற்று மொழியாக இருக்கும். 6ஆம் வகுப்பு முதல் தமிழ், தாய்மொழி அல்லது ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கும்.

நீதிபதி மோகன் அவர்களின் பரிந்துரைகளின் பேரில் அரசாங்கம் 19.11.1999ஆம் தேதி பிறப்பித்த அரசாணை 324ஐ எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் பல்வேறு சங்கத்தினர் ரிட் மனுக்களை முதல் பெஞ்சில் தாக்கல் செய்தார்கள். உயர்நீதி மன்றத்தின் முழு பெஞ்ச் ரிட் மனுக்களை ஏற்றுக் கொண்டு அரசாணையை ரத்து செய்தது.

உயர்நீதி மன்ற முழு பெஞ்சின் தீர்ப்புக்கு எதிராக தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை யிலே உள்ளது.

எனவே மேலே தெரிவித்துள்ள உயர்நீதி மன்ற முழு பெஞ்ச் தீர்ப்பின் காரணமாகத்தான் தமிழை பாடமொழியாகவும், பயிற்று மொழியாகவும் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை கொண்டு வருவதற்காக செய்யப்பட்ட மாற்றங்கள் எல்லாம் செல்லாமல் போய் பழைய பாடத் திட்ட முறையே தொடர்ந்து அமலில் இருந்து வந்தது. இது கழக ஆட்சி. அ.தி.மு.க. ஆட்சியில் என்ன நிலை தெரியுமா?

2003ஆம் ஆண்டு விடுதலை நாளில் தலைமைச் செயலகக் கோட்டையிலே கொடியேற்றி முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய உரையிலே என்ன சொன்னார் தெரியுமா?

“2003-2004 கல்வி ஆண்டு முதல் அனைத்து வகைப் பள்ளிகளிலும், 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்புவரை படிப்படியாக அறிவியல் தமிழ் என்னும் பாடத்தைக் கற்பிக்க ஏற்கனவே எனது அரசு, ஆணை பிறப்பித்துள்ளது.” என்று கூறிவிட்டு, ஆனால் அதற்கு மாறாக ஜெயலலிதாவே அதே நிகழ்ச்சியில் “இந்த ஆண்டிலிருந்தே அதாவது 2003-2004லேயே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும், எல்.கே.ஜி. முதல் 12ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் அறிவியல் தமிழ் என்னும் பாடத்தைக் கற்பிக்க ஆணை

பிறப்பித்துள்ளேன் என்பதை சுதந்திர திருநாளில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதாக" குறிப்பிட்டார்.

படிப்படியாகச் செய்யப்படும் என்று முதலில் கூறி, அரசாணையையும் பிறப்பித்து விட்டு, அதே முதலமைச்சர் "இந்த கல்வி ஆண்டிலேயே எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் அறிவியல் தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்க ஆணை பிறப்பித்துள்ளேன்" என்று கூறினார்.

அ.தி.மு.க. அரசு பதவியேற்றது முதலே பள்ளிக் கல்வித் துறையைப் பாழடிக்கின்ற செயல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. வந்ததும் வராததுமாக, சமச்சீர் கல்விச் சட்டத்தை ஏற்க மாட்டோம் என்ற ஒரு முடிவினை தன்னிச்சையாக எடுத்து, பாடப்புத்தகங்கள் எல்லாம் பல கோடி ரூபாய்ச் செலவில் தயாரான நிலையிலே, அவற்றையெல்லாம் விநியோகிக்கக் கூடாது என்று கூறி, சமச்சீர் கல்விச் சட்டத்திற்கு எதிராக திருத்தச் சட்டம் ஒன்றினை தங்களுக்குள்ள பெரும்பான்மை காரணமாக நிறைவேற்றிவிட்டு - புதிய பாடப் புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்கப் போகிறோம் என்று கூறி, அதற்கான டெண்டர்களை அவசர அவசரமாக அறிவித்து, மாணவர்கள் மூன்று மாத காலம் எதையுமே படிக்காமல் வீணடிக்கின்ற அளவிற்கு நடந்து கொண்டு அதன் மூலமாக மாணவர்களின் கல்வியைப் பாழடித்தனர். மாணவர்களின் மொத்தம் 200 வேலை நாட்களில் 60 வேலை நாட்கள் வீணானது.

உச்ச நீதி மன்றம் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியதால் - ஆத்திரமடைந்ததோடு, வேறு வழியின்றி வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளான அ.தி.மு.க. அரசு, ஒட்டு மொத்தமாக மாணவர்களின் கல்வியிலேயே அக்கறையற்ற தன்மையோடு நடந்து கொள்கிறது. உச்ச நீதி மன்றம் ஏதோ தவறு செய்து விட்டதைப் போல முதலமைச்சரே பேரவையிலே தெரிவித்தார். சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்களில் தவறு இருந்தால் அதனை அகற்றி விடலாம் என்று நீதிபதிகள் தெரிவித்ததை மனத்திலே வைத்துக் கொண்டு, தவறுகளைத் திருத்தாமல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தங்களுக்குப் பிடிக்காததை யெல்லாம் கிழித்தார்கள், அடித்தார்கள், மறைத்தார்கள்.

தமிழ் நாட்டிலே கல்வி கற்பவர்கள் தமிழைப் படிக்காமலேயே பல்கலைக் கழகம் வரை பட்டம் பெற்று வெளிவருகின்ற அடிப்படை முரண்பாட்டை அகற்றுவதற்காக, தி.மு.கழக ஆட்சியில் நிறை வேற்றப்பட்ட சட்டப்படிதான் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வகுப்பாகப் பெருகி, தற்போது பத்தாம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் தமிழை ஒரு பாடமாகக் கற்பிப்பது என்ற நிலை வந்துள்ளது. அதற்குத்தான் தடை விதிக்க வேண்டுமென்று யாரோ ஒருவர் நீதிமன்றத்தில் முறையிட்டு, அதற்கு அரசு ஜூன் 10ஆம் தேதிக்குள் பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்பப்படுகிறது.

கழக அரசு கொண்டு வந்து - நிறைவேற்றிய பல்வேறு திட்டங்களைக் கிடப்பிலே போட்டு, நடைமுறைப்படுத்தாத இந்த ஜெயலலிதா அரசு தமிழ் மொழிப் பாடம் என்ற முக்கியமான கொள்கையில் என்ன பதில் அளிக்கப் போகிறது? சமச்சீர் கல்விக் கொள்கையிலே எடுத்த நிலையைப் போல இல்லாமல், தொடக்கப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வியை அறிமுகப்படுத்தியிருக்கும் எதிர் மறை நடவடிக்கையைப் போல இல்லாமல், தமிழ் மொழிக் கல்வியின்பால் அக்கறையோடு நல்ல முடிவெடுத்து நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். இதுவே தமிழர்களின் விருப்பம்! தமிழர்களின் இந்த விருப்பமாவது நிறைவேறுமா?

அன்புள்ள,

மு.க.

09-06-2014

3889. நீண்ட வரலாறுதான்; ஆனால் நினைவில் நிறுத்த வேண்டியது!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா 13-6-2014 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வேண்டுமென்று கடிதம் எழுதி இருப்பதாக அனைத்து நாளேடுகளிலும் செய்தி வந்துள்ளது. ஆனால் இதே முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு 10-6-2014 அன்று ஒரு நீண்ட அறிக்கை எனக்குப் பதில் அளித்து வெளியிட்டார்.

காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்பது பற்றி கர்நாடகா மாநிலத்தில், அங்குள்ள முதலமைச்சர் அங்கேயுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்து அவர் களின் கருத்துகளைக் கேட்கிறார், அவர்களை அழைத்துக்கொண்டு டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து முறையிடுகிறார், அதுபோல தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து ஏன் பேசக் கூடாது?" என்று நான் கேட்டதற்குப் பதிலளித்துத்தான் முதல மைச்சர் அந்த அறிக்கையினை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில்; பாரதப் பிரதமரிடம் தான் அளித்த கோரிக்கையை பிரதமர் கனிவுடன் கேட்டு ஆவன செய்வதாக உறுதி அளித்துள்ளார் என்றும், தமிழகத்திற்கு உதவும் எண்ணத்தில் பாரதப் பிரதமர் இருக்கிறார் என்றும், காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது என்பது காவிரி நடுவர் மன்றத்தின் அம்சமாகும் என்றும், அதனைச் செயல்படுத்த மத்திய அரசிற்குச் சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்றும் ஜெயலலிதா தெரிவித்துவிட்டு, மூன்றே நாளில், காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக

அமைக்க வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறார் என்றால், 10ஆம் தேதிய அறிக்கையில் பிரதமருக்கு கால அவகாசம் தர வேண்டுமென்று அவர் எழுதியதை அவரே மறந்து விட்டாரா?

பிரதமருக்கு முதலமைச்சர் எழுதிய அந்தக் கடிதத்தில் தேவையில்லாமல் தி.மு.க.வை ஜெயலலிதா வீண் வம்புக்கு இழுத்துள்ளார். ஏற்கனவே ஆட்சியில் இருந்த தி.மு.க. அரசு காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட மத்திய அரசை வற்புறுத்தவில்லை என்ற ஒரு குற்றச் சாட்டினையும் ஜெயலலிதா தனது அறிக்கையில் வழக்கம்போல சொல்லியிருக்கிறார். காவேரிப் பிரச்சினை ஆனாலும், கச்சத் தீவுப் பிரச்சினை ஆனாலும், இலங்கைப் பிரச்சினை ஆனாலும் ஜெயலலிதாவுக்கு தி.மு. கழகத்தைக் குற்றம் சொல்லாவிட்டால் தூக்கம் வராது போலும்! காவேரிப் பிரச்சினை குறித்து ஜெயலலிதா தி.மு.க. மீது குற்றம் சாட்டி, அதற்கு நான் எத்தனை முறைதான் பதிலளிப்பது?

காவேரி நடுவர்மன்ற இடைக்கால ஆணையைத் தனது இடைவிடா முயற்சிகளால் பெற்றுக் கொண்டு வந்ததைப் போல ஜெயலலிதா பேரவையிலேயே கூறினார். **காவேரி நடுவர் மன்றம் என்ற ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முதன்முதலாக தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது தான் 17-2-1970 அன்று மத்திய அரசுக்குக் கடிதமே எழுதப்பட்டது. நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்று சட்ட மன்றத்தில் தி.மு.கழக ஆட்சியிலேதான் 8-7-1971 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதுதான், 27-7-1989 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று, நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது. ஆனால் அந்தக் கூட்டத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. தவிர அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

2-12-1989 அன்று திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நடுவர் மன்றம் அமைக்கக் கோரி கடிதம் எழுதினேன். பேரவையிலே அதைப் பற்றித் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி அனுப்புமாறு வி.பி. சிங்

அவர்கள் என்னிடம் தெரிவித்ததின் பேரில், 24-4-1990 அன்று நடுவர் மன்றம் தேவை என்று பேரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அந்தத் தீர்மானத்தின் விளைவாகத் தான் 2-6-1990 அன்று நடுவர் மன்றம் அதுவும் தி.மு. கழக ஆட்சியிலே, நான் முதலமைச்சராக இருந்த போதுதான் அமைந்தது.

28-7-1990இல் கழக ஆட்சியில்தான் இடைக்காலத் தீர்ப்பினைக் கோரி நடுவர் மன்றத்தில் மனுச் செய்தோம். 5-1-1991 அன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கிடத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் கூறியது. நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்று தீர்ப்பளியுங்கள் என்று உச்ச நீதிமன்றத்தில் 10-1-1991 அன்று தி.மு. கழக ஆட்சியிலே வழக்குத் தொடர்ந்து, 26-4-1991 அன்று உச்சநீதிமன்றம் "அதிகாரம் உண்டு" என்று தீர்ப்பு வழங்கியது. கழக ஆட்சியில் கோரிப் பெற்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பின் காரணமாகவே 25-6-1991இல் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை அளித்தது. இதற்கிடையில்தான் 31-1-1991 அன்று கழக ஆட்சி கலைக்கப்பட்டு, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளிவந்த போதிலும், எந்தவிதமான விளைவுகளும் ஏற்படவில்லை . 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை .

1996ஆம் ஆண்டு மீண்டும் தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துவதில் தாமதத்தைத் தவிர்க்கும் வண்ணம், திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டுமென்று 9-7-1997,23-7-1997, 29-9-1997, 1-11-1997, 6-11-1997 ஆகிய நாட்களில் பிரதமருக்கு நான் எழுதிய கடிதங்கள் மூலமாகவும், 27-7-1997 மற்றும் 29-9-1997 ஆகிய நாட்களில் பிரதமரை நேரில் சந்தித்த போதும் கேட்டுக் கொண்டேன். மேலும் 10-11-1997 அன்று மத்திய அரசுக்கு அப்படியொரு ஆணை பிறப்பிக்க உச்சநீதிமன்றத்தில் முறையீட்டு மனு ஒன்றும் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டது. மீண்டும் 28-3-1998, 6-4-1998 மற்றும் 31-5-1998 ஆகிய நாட்களில் பிரதமருக்குக் கடிதம் மூலமாகவும்,

7-4-1998 அன்று நேரில் சந்தித்தும், வரைவுத் திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடக் கேட்டுக் கொண்டேன்.

21-7-1998 அன்று உச்சநீதிமன்றம், "பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்கப் போவதாக மத்திய அரசு உறுதியளித்து 15 மாதமாகிறது, இன்னமும் இணக்கமான திட்டம் உருவாக்கப் படவில்லை, இந்த நிலை நீடித்துக் கொண்டே போவதை அனுமதிக்க முடியாது'' என்று தெரிவித்தது.

28-7-1998 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள், 6-8-1998 அன்று பிரதமர் அலுவலகத்தில் காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசுவதற்காக ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் என்னைக் கலந்துகொள்ள கடிதம் எழுதியிருந்தார். அதிலே கலந்து கொள்வது பற்றி 3-8-1998 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, பிரதமர் நடத்தவிருந்த கூட்டத்தில் நான் கலந்து கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா, "அந்தக் கூட்டத்திற்கு நான் செல்லக் கூடாது'' என்று அறிக்கை விடுத்தார்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடத்திய அந்தக் கூட்டத்தின் இறுதியில்தான், 7-8-1998இல் தி.மு. கழக ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி இடைக்கால ஆணையில் கூறப்பட்ட 205 டி.எம்.சி. தண்ணீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், பிரதமர் தலைமையில் காவிரி பாயும் நான்கு மாநில முதல்வர்கள் அடங்கிய காவிரி ஆணையம் அமைக்கப்படும் என்றும் முடிவாயிற்று. அந்த ஒப்பந்தத்தை சி.சுப்பிரமணியம், ஜி.கே. மூப்பனார், சங்கரய்யா, ஆர், நல்லகண்ணு , அப்துல் சமது, எம்.ஏ. லத்தீப், குமரி அனந்தன், திண்டிவனம் ராமமூர்த்தி, ஆர்.எம். வீரப்பன், ஜி.ஏ.வடிவேலு, இல.கணேசன், எஸ். திருநாவுக் கரசு, பேராயர் எஸ்றா சற்குணம் போன்ற தலைவர்களும் மற்றும் இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, விடுதலை, தீக்கதிர், தி டைம்ஸ் ஆப் இந்தியா, தி இந்துஸ்தான் டைம்ஸ் ஆகிய நாளேடுகளும் கல்கி, குமுதம், சாவி, துக்ளக், ஆனந்த விகடன், குங்குமம், ஆகிய கிழமை இதழ்களும் பாராட்டின. இதுதான் உண்மையில் நடந்த வரலாறு.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களும், ஏடுகளும் பாராட்டியபோது ஜெயலலிதா

அதனை வரவேற்றாரா என்றால் இல்லை. மாறாக அந்தத் முடிவினை நிராகரிக்கிறோம் என்றும், அதனை ஏற்க மாட்டோம் என்றும் கூறினார்.

அந்த முடிவு காண வழி வகுத்தவர், பா.ஜ.க. பிரதமராக இருந்த திரு. வாஜ்பாய். அப்போது அவர் அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்தவர். இருந்தாலும், அந்தக் கூட்டணியிலே இல்லாத தி.மு.க.வின் தலைவனான என்னை அழைத்து சுமூக முடிவு கண்டார். ஆனால் மத்திய அரசில் இடம் பெற்ற தி.மு.க. தலைவி அந்த ஒப்பந்தம் பற்றி பத்திரிகையாளர்களிடம் என்ன கூறினார் தெரியுமா?

காவிரிப் பிரச்சினையில் வாஜ்பாய், கருணாநிதியின் தந்திரத்திற்கு ஆளாகி விட்டார். இரண்டு பேரும் சேர்ந்து செய்து கொண்டிருக்கின்ற உடன்பாட்டை நாங்கள் நிராகரிக்கிறோம்" என்றார்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தி.மு.கழக ஆட்சியிலேதான் 5-2-2007 அன்று வெளியிடப்பட்டது. இந்தத் தீர்ப்பினைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த எம். கிருஷ்ணசாமி, திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன், மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என்.வரதராசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் கா. பாண்டியன், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கப் பொதுச்செயலாளர் ரெங்கநாதன், உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் கே.எஸ். நடராசன் ஆகியோர் அப்போது வரவேற்று அறிக்கை கொடுத்தனர்.

ஆனால் அ.தி.மு.க.வின் சார்பில் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் இறுதித் தீர்ப்பை "ஏற்க முடியாத தீர்ப்பு " என்றும், "கருணாநிதியால் காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தீர்ப்பை முழுமையாகப் பெற்றுத் தர முடியவில்லை . இந்த இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்குப் பாதகமாக வந்துள்ளது. இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்றும் எப்போதும் போல எனது ராஜினாமாவை வலியுறுத்தி அறிக்கை விடுத்தார். - அந்த ஜெயலலிதாதான், இப்போது நடுவர்

மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட அவர்தான் பாடுபட்டதாகச் சொல்லிக் கொள்கிறார். அதற்காக தி.மு.க. எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்கிறார்.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்தபோது கூட, தி.மு.கழக அரசு அந்த நிலையிலும், இந்த இறுதித் தீர்ப்பு குறித்து ஜெயலலிதாவைப் போலத் தன்னிச்சையாக முடிவெடுக்க விரும் பாமல், 19-2-2007 அன்றும் 15-4-2007 அன்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டித்தான் முடிவெடுத்தது. ஆனால் தற்போது ஜனநாயக மரபுகளைப் போற்றக் கூடிய வகையில், அவ்வாறு எந்த அனைத்துக் கட்சிக் கூட்டமும் கூட்டப்படாமல், தமிழக முதலமைச்சர்; தான் நினைத்ததே முடிவு என்பதைப் போலச் செயல்பட்டு வருகிறார்.

எனவே ஜெயலலிதா காவிரி நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் ஏற்கவில்லை, இறுதித் தீர்ப்பையும் ஏற்கவில்லை என்பதுதான் உண்மை. காவிரி நதி நீர் ஆணையத்தையாவது ஏற்றுக்கொண்டாரா?

காவிரி நதி நீர் ஆணையம் (Cauvery Authority) அமைக்கப்பட்டு, 11-8-1998 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. 2-4-2002 அன்று சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, "செயல்படாத ஆணையம் காவேரி ஆணையம்", "பல் இல்லாத ஆணையம்"; ''அந்த ஆணையத்தை ஏற்காமல் நாங்கள் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம்" என்று சொன்னார்.

21-6-2002 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் "எவ்வித அதிகாரமும் இல்லாமல், காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்த இயலாத நிலையில் காவிரி நதி நீர் ஆணையம் உள்ளது. எனவே இந்த ஆணையத்தின் கூட்டங்களில் இனிமேல் தமிழ்நாடு கலந்துகொள்ளாது" என்று விளைவுகளைப் பற்றி விரிவாக எண்ணிப் பார்க்காமல் கொண்டதே கோலம் என்ற பாணியில் முடிவெடுத்து அறிவித்தார்.

காவேரி ஆணையத்தைப் புறக்கணிப்போம் என்று 2002ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தெரிவித்தவர்தான் ஜெயலலிதா. அதற்கடுத்த நாள் "அழைத்தால் பார்க்கலாம்" என்றார். ஆனால்

என்னைப் பொறுத்தவரையில் நான் ஆட்சியிலே இல்லாத நேரத்திலே கூட, 5-7-2002 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு காவிரி நதி நீர் ஆணையத்தை உடனே கூட்ட வேண்டுமென்று கோரிக் கடிதம் எழுதினேன்.

நான் எழுதிய கடிதத்திற்கு 10-7-2002 அன்று பிரதமர் வாஜபாய் எழுதிய பதில் கடிதத்தில், அதைப்பற்றிக் கவனிப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறே காவிரி நதி நீர் ஆணையம் கூட்டப் பட்டது.

டெல்லியில் பிரதமர் கலந்து கொண்ட காவேரி ஆணையக் கூட்டத்தில் முதலமைச்சர் ஜெய லலிதா கலந்து கொண்டபோதே 27-8-2002 அன்று அங்கே சுமூகமாகப் பேசித் தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகை காணாமல், அவருக்கே உள்ள முன்கோபம் காரணமாகப் பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தை மறந்து, இடையிலே வெளிநடப்புச் செய்வதாகக் கூறிவிட்டு, வெளியே வந்துவிட்டார்.

29-11-2002 அன்று மீண்டும் காவேரி ஆணையக் கூட்டம். கர்நாடக முதல் அமைச்சர் முதல் நாளே சென்றுவிட்டார். ஆனால் நம்முடைய முதல் அமைச்சர் ஜெயலலிதா கடைசி நிமிடம்வரை வருவதாகச் சொல்லிவிட்டு, பிறகு டெல்லிப் பயணத்தையே ரத்து செய்துவிட்டார். யாருக்கு இழப்பு? தமிழ்நாட்டு விவசாயி களுக்குத்தான்!

இதற்கிடையில் "பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையம் மீது நம்பிக்கை இல்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்குக் கடிதம் எழுதியது, கடுமையான ஆட்சேபத்துக்குரியது ; அந்த அவதூறுக் கடிதத்தை நான்கு நாட்களுக்குள் திரும்பப் பெற வேண்டும்" என்று தமிழக அரசு வழக்கறிஞரிடம், உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் வழக்கறிஞரான திரு. கே.கே. வேணுகோபால், நீதிபதிகளிடம், "பிரதமர் மீதும், அவரது தலைமையில் செயல் படும் காவிரி நதிநீர் ஆணையத்தின் மீதும் தமிழகம் முழு நம்பிக்கை வைத்துள்ளது. காவிரி நதி நீர் ஆணையத்தின் மீது நம்பிக்கை தெரிவித்தும், பிரதமர் வாஜ்பாய்க்கு இது தொடர்பாக எழுதிய கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்காகவும் மீண்டும் ஒரு கடிதத்தை

வெகு விரைவில் பிரதமர் வாஜ்பாய்க்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுதி அனுப்புவார்" என்றும் தெரிவித்தார்.

அதற்கிணங்க, 16-11-2002 அன்று பிரதமருக்குத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், "பிரதமர் மீது தனிப்பட்ட முறையில்தான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும், ஏற்கனவே தான் சொன்ன அத்தனையையும் மறந்துவிட்டுக் காவேரி ஆணையத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதாகவும்" எழுதியிருந்தார்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் ஜெயலலிதா ஒவ்வொரு கட்டத்திலும் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன்களைப் புறக்கணித்து எவ்வாறெல்லாம் நடந்துகொண்டார் என்பதைத் தொகுத்துக் கூற வேண்டுமேயானால்,

நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியபோதும், ''கர்நாடக அரசாகத் தண்ணீர் திறந்து விட்டால்தான் உண்டு'' என்று சொன்னவர் தான் ஜெயலலிதா.

இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்துவது பற்றி மத்திய அரசு விளக்கம் கேட்டு, ஒன்பது மாத கால தாமதத்திற்குப் பிறகு பதில் அனுப்பியவர்தான் ஜெயலலிதா.

இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்த 1991 முதல் 1996 வரை ஐந்தாண்டு காலம் ஆட்சியிலே இருந்த ஜெயலலிதா எந்த முயற்சியும் எடுக்கவில்லை

பிரதமர் வி.பி. சிங்கிடம், அ.தி.மு.க. சார்பில் கொடுத்த மனுவில்; ''1974 ஆம் ஆண்டோடு காவிரி ஒப்பந்தம் முடிந்து விட்டது'' என்று எழுதிக்கொடுத்தவர்தான் ஜெயலலிதா.

29-11-2002 அன்று காவிரி ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல், ரத்து செய்தவர் ஜெயலலிதா. இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஊருக்கும் உலகத்திற்கும் இந்தத் தேதிவாரி நிகழ்ச்சிகள் மறந்து போயிருக்கும், தான் எதை வேண்டுமானாலும் கூறலாம் என்ற நினைப்பில்தான் ஜெயலலிதா என் மீது புழுதிவாரி இறைக்க எண்ணுகிறார். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் வெற்றி வாய்ப்பை இழந்திருக்கலாம். ஆனால் முதல் அமைச்சர் ஜெயலலிதா அறிக்கை விடுவதாக இருந்தாலும்,

பிரதமருக்குக் கடிதம் எழுதுவதாக இருந்தாலும் அவருடைய எண்ணம் தி.மு.கழகத்தையே சுற்றிச்சுற்றி வருவதில் இருந்தே, உண்மையான வெற்றி யாருக்கு என்பதை உலகம் புரிந்து கொள்ளும்!

அன்புள்ள,

மு.க.

16-6-2014

3890. சூட்சமத்தைப் புரிந்துகொள்வாய்!

உடன்பிறப்பே,

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் இடத்தில் கூட வெற்றி பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டதும்; அதைக்கண்டு எதிரிகளைவிட நம்மிடையே இருக்கின்ற ஒரு சில நண்பர்கள் எனப்படுவோர் அதிக மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

தி.மு. கழகத்தை இந்தத் தேர்தலோடு ஒழித்துக்கட்டி விடலாம் என்று கனவு கண்ட அவர்களிடையே - அடுத்துக் காண இருக்கின்ற களங்களுக்கு நம்மைத் தயார்படுத்திக் கொள்ளும் இந்தச் சூழலில் - இந்தக் கருத்து விளக்கத்தை என்னுடைய உடன்பிறப்புகள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் தருகிறேன்.

ஏதோ இந்த நாடாளுமன்றத் தேர்தலோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு முடிந்து விட்டது என்பதைப் போலவும், அடுத்து இந்தக் கழகம் எழவே எழாது, எழுந்து நடக்கவே செய்யாது என்ற நினைப்புடனும் திராவிட முன்னேற்றக் கழகத்தை இப்போதும் விடாமல் விமர்சித்து வருகிறார்கள். குறிப்பாக அப்படி விமர்சிப்பவர்கள் என்னைத் தாக்கிப் பேசியும் எழுதியும் நம்முடைய உயிரனைய தம்பிமார்களையும், உழைத்து இந்தக் கழகம் வளர்த்த தளபதிகளையும்; இழித்தும் பழித்தும், மக்கள் மன்றத்தில் அவர்களைப் பற்றிய சந்தேகங்களை எழுப்பியும், பிரச்சாரம் செய்வதிலிருந்தே அவர்களைத் தி.மு.கழகத் தொண்டர்களிடமிருந்து பிரித்துவிடலாம் என்று கனவு காண்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் ஒன்று சொல்வேன்! தயவுசெய்து திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள்! அதை எத்தனை எத்தனையோ வம்பர்களும், வஞ்சகர்களும் வீழ்த்த எண்ணி வீசிய வலைகள் எல்லாம் அறுந்து தூள்

தூளாகப் போய்விட்டன என்பதை இந்த நாடு உணரும் - நாமும் உணர்வோம்.

எதிரிகள் ஒரு தந்திரத்தைக் கையாளுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை நேரடியாகத் தாக்குவதற்குத் திராணி இல்லாத காரணத்தால்; முதற் கட்டமாக என்னைத் தூக்கிப் பேசியும், எழுதியும் - அதே நேரத்தில் என் தலைமையிலே உள்ள தளபதி ஸ்டாலின் போன்றவர்களை இழித்தும், பழித்தும் கேலி செய்தும், கிண்டல் புரிந்தும், மனத்தளர்ச்சி அடையச் செய்து - அடுத்த கட்டமாக அவர்களையும் வீழ்த்திவிட்டால், பின்னர் பூண்டற்றுப் போய்விடும் இந்தக் கழகம் என மனப்பால் குடிக்கின்ற காரணத்தால், ஒரே கட்டுரையில் என்னைப் புகழ்ந்தும், போற்றியும், என்னால்தான் இந்தக் கழகத்தைக் காத்திட முடியும் என்று துதி பாடியும் - அதைத் தொடர்ந்து அதே கட்டுரையில், அடுத்த வரியிலேயே கழகத்தில் தலை எடுக்கக் கூடிய ஸ்டாலின் போன்றவர்களை கேலியும், கிண்டலும் செய்தும் எழுதுகிறார்கள். என்னைப் பற்றிப் புகழ்ந்து எழுதினால் சிலருக்கு ஒருவித மகிழ்ச்சி ஏற்படும் என்றும் - அந்த மகிழ்ச்சி மறைவதற்குள்ளாகவே ஸ்டாலின் போன்றவர்களைத் தாக்கியும், கேலி செய்தும் அவர்கள் கட்சியை நடத்துவதற்கே தகுதியற்றவர்கள் என்பது போல விமர்சித்தும் கட்டுரைகள் தீட்டுகிறார்கள். அவர்கள் போடும் கணக்கு என்ன தெரியுமா? எல்லோரும் சேர்ந்து தலைவரை ஏற்கனவே இருந்ததைவிட ஓரளவு வீழ்த்தி விட்டோம்; அடுத்துப் பாடுபடுகிற தளபதி போன்றவர்களையும் வீழ்த்துவதற்கு இது தான் தக்க தருணம் என்று நம்புகிறார்கள் போலும்!

அந்த நம்பிக்கையிலேதான் கடந்த சில வாரங்களாக ஒருசிலர், அந்தத் தந்திரத்தில் ஈடுபட்டு - நம்முடைய அகம் குளிர்ந்திருப்பதைக் கண்டு, அப்படிக் குளிரவைத்தவர்கள் நாம்தானே; தொடர்ந்து இப்போது நாம் ஆற்றி வருகிற பணியின் மூலம் அறவே புல் பூண்டுகளே இல்லாமல் இந்தத் திராவிட இயக்கத்தை அழித்துவிட முடியாதா என்று கனவு காண்கிறார்கள். இவர்கள் கனவு முடிந்து, அதன் தொடர்பாக கதைகளைக் கட்டி, இந்தக் கழகத்தில் கலகம் விளைவித்து, அதன் மூலம் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வோம் என்று திராவிட இயக்கத்தைத் தரைமட்டமாக்கி விடுவோம் என்று மனப்பால்

குடிப்பவர்களுக்கு இடம்கொடுக்காமல், உடன்பிறப்பே, வஞ்சகம் புரிந்தும், இச்சகம் பேசியும் நம்மை நெருங்குவோர் யாராயினும், அவர்கள் எப்போதும் நம்மை வெறுப்பவர்களே என்பதைப் புரிந்து கொண்டு அவர்களை விட்டு விலகி நின்று உயிரனைய நம்முடைய கழகத்தை வளர்ப்போம். கழகக் கொடியை உயர்த்திப் பிடிப்போம் என உறுதி கொள்ள வா வா என்று உன்னை நான் அழைக்கிறேன்.

இந்தத் துண்டறிக்கையின் சூட்சமத்தை நீ புரிந்து கொண்டால் நான் என்ன கருதுகிறேன், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்!

அன்புள்ள,

மு.க.

27-6-2014

3891. மனம் இல்லையா? மார்க்கம் தெரியவில்லையா?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா ஆட்சியில் விலைவாசி நாளுக்கு நாள் கொடிய விஷம்போல் ஏறிக் கொண்டே போகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியை மக்கள் அளித்து விட்டார்கள் என்ற மமதையில் அ.தி.மு.க. ஆட்சியினர் மக்கள் படும் வேதனைகளை எண்ணிப் பார்க்கவே மறுக்கிறார்கள். அவர்களுக்குள்ள முதல் கவலை பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து தப்பிக்க என்ன செய்யலாம்? மத்தியிலே யாரையாவது பிடிக்கலாமா? யாராவது உதவிட முன் வருவார்களா? அதற்காக என்ன செய்தாலும் பரவாயில்லை என்பது பற்றித்தான்!

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது விலைவாசி பற்றி எத்தனை அறிக்கைகளை விட்டார்கள்? இப்போது கட்டுமானப் பொருள்களின் விலை ஏற்றத்தைப் பற்றிக் கூறவே வேண்டியதில்லை! ஏன், காய்கறி விலையிலே தொடங்கி, எதையெடுத்தாலும் விலை உயர்வுதான். அதைப் பற்றிக் கவலைப்பட்டு, இந்த ஆட்சியினர் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருகிறார்களா என்றால் இல்லை என்பதுதான் பதிலாக அமையும். 14-10-2007 அன்று ஜெயலலிதா ஓர் அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் அ.தி.மு.க. ஆட்சியில் சிமெண்ட், மணல், செங்கல், கம்பி, ஜல்லி போன்ற கட்டுமானப் பொருள்கள் என்ன விலை விற்றன? ஆனால் தி.மு.கழக ஆட்சியில் எந்த அளவுக்கு இவை விலை உயர்ந்துவிட்டன என்றெல்லாம் சுட்டிக் காட்டி, இந்த விலை ஏற்றத்தின் காரணமாக ஒட்டு மொத்தமாக கட்டுமானத் தொழில் நலிவடைந்து விட்டதோடு, இதையே நம்பி வாழும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது என்று குறிப்பிட்டு, அதற்காக 15-10-2007 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தினார்கள். அதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்றோ அல்லது யார்

நினைவூட்டப் போகிறார்கள் என்றோ அ.தி.மு.க. ஆட்சியினர் இன்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜெயலலிதா அவ்வாறு அறிக்கை விட்ட போது, சிமெண்ட் விலை 270 ரூபாய் என்று குறிப்பிட்டிருந்தார். அந்த விலையைக் குறைக்க கழக ஆட்சியில் எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன தெரியுமா? சிமெண்ட் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் அதிபர்களை எல்லாம் அழைத்துப் பேசினோம். விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அவர்களும் அதனை யேற்று சிமெண்ட் விலையை மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 20 குறைக்க ஒப்புக் கொண்டார்கள். அப்போதே அது செய்தியாக வெளிவந்தது. சிமெண்டைக் கொள்முதல் செய்து ஒரு மூட்டை சிமெண்ட் சலுகை விலையில் ரூ.200/- வீதம் விற்பனை செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. 2007-2008-ஆம் ஆண்டில் 31-3-2008 வரை 48,496 மெட்ரிக் டன் சிமெண்டும் - 2000-2009ஆம் ஆண்டில் 5 லட்சத்து 63 ஆயிரத்து 965 மெட்ரிக் டன் சிமெண்டும் - 2009-2010ஆம் ஆண்டில் 9 லட்சத்து 79 ஆயிரத்து 330 மெட்ரிக் டன் சிபொண்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு அரசே தனியார் நிறுவனங்களுடன் போட்டி போட்டு விலை குறைத்து விற்க நடவடிக்கை எடுத்ததால், வெளிச் சந்தையிலும் சிமெண்ட் விலை கணிசமாகக் குறைந்தது. ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சியினர் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? எந்த சிமெண்ட் உற்பத்தி நிறுவனத்தையாவது அழைத்து விலையைக் குறைக்கப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்களா? மது வகைகளின் விலையை உயர்த்திட மறைமுக பேரத்தில் ஈடுபடுவதற்குத்தான் அவர்களுக்கு நேரம் இருக்கிறதே தவிர, சிமெண்ட் விலை உயர்வு பற்றி அவர்களுக்கு என்ன கவலை?

சிமெண்ட் விலை கடந்த பதினைந்து நாட்களில் மட்டும் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது தெரியுமா? 19-6-2014 அன்று வெளியான "இந்து" இதழில் வந்துள்ள செய்திப்படி மே 31ஆம் தேதி ஒரு மூட்டை சிமெண்ட் 285 ரூபாய் என்பது, 17-6-2014 அன்று 350 ரூபாயாக உயர்ந்துள்ளது. "இந்து" மாத்திரமல்ல; 21-6-2014 தேதிய 'தினமலர்' செய்திப்படி, கடந்த வாரம் ஒரு மூட்டை சிமெண்ட் 310 ரூபாய் என்பது, இந்த வாரத்தில் 340 ரூபாய் என்ற

அளவுக்கு உயர்ந்திருக்கிறதாம். அ.தி.மு.க. ஆட்சியினர் இந்தச் செய்திகள் ஏடுகளிலே வெளிவந்ததைப் பார்க்க வில்லையா? கழக ஆட்சியில் சிமெண்ட் விலை மூட்டை ஒன்றுக்கு 200 என்று விற்கப்பட்ட போதே, அதற்காகப் போராட்டம் நடத்தக் கூறி அறிக்கை விட்ட இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, தற்போது சிமெண்ட் விலை மூட்டை ஒன்றுக்கு 340 ரூபாய் என்றும், 350 ரூபாய் என்றும் விற்கப்படுகின்ற இந்த நேரத்தில் அதைக் குறைக்கவும், கட்டுமானத் தொழிலைக் காப்பாற்றிடவும் எடுத்த நடவடிக்கை என்ன? இந்த ஆட்சியில் சிமெண்ட் விலை மட்டுமா ஏறியிருக்கிறது?

"கம்பி விலை டன்னுக்கு ரூ.3,300 உயர்வு" என்ற தலைப்பிலே "தினமலர்" 21-6-2014 அன்று வெளியிட்டுள்ள செய்தியில், "கடந்த வார நிலவரப்படி கம்பி ஒரு டன் 48,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது, தற்போது 52,800 ரூபாயாக உயர்ந்துள்ளது. முன் எப்போதும் இல்லாத வகையில், ஒரே வாரத்தில், பெரிய நிறுவனங்களின் கம்பிகள் விலை டன்னுக்கு 3,300 ரூபாய் உயர்ந்துள்ளது. இதனால், கட்டுமானச் செலவு வெகுவாக அதிகரிக்கும் என்று இத்துறையினர் அச்சம் தெரிவித்தனர்" என்று எழுதியுள்ளதை, அ.தி.மு.க. ஆட்சியினர் காணவில்லையா? அல்லது கண்டும் காணாமல் விட்டு விட்டார் களா?

கட்டுமானப் பொருள்களின் இந்த விலை உயர்வு பற்றி, அகில இந்திய கட்டுனர் வல்லுநர் சங்கத்தின் சார்பில் வெளியிட்ட பத்திரிகைச் செய்தியில், "கடந்த பத்து நாட்களில் சிமெண்ட், ஜல்லி, செங்கல் போன்ற அனைத்து கட்டுமானப் பொருள்களின் விலை 25 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை விலை உயர்ந் துள்ளது. சிமெண்ட் விலை தற்போது மூட்டைக்கு 70 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. சாதாரணமாக வீடு கட்டுபவர்களுக்கு சதுர அடி ஒன்றுக்கு ரூ.300 முதல் ரூ.400 வரை விலை உயர்வைச் சந்திக்க வேண்டியுள்ளது. அரசுத் துறை ஒப்பந்தங்களில் குறிப்பாக மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளில் இந்த விலை உயர்வுக்கு முன் போட்ட ஒப்பந்தங்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதால், இந்த ஒப்பந்தங்களை நிறைவேற்ற ஒப்பந்ததாரர்கள் 19 முதல் 90 சதவிகிதம் வரை அதிகமாகச் செலவு செய்தால்தான் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியும் என்ற

நிலை உள்ளது. இதனால் பெரும்பாலான பணிகளை கடந்த பத்து நாட்களாக தொடர முடியாத தேக்க நிலை உள்ளது" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள்.

"இந்து" ஆங்கில இதழில் 19-6-2014 அன்று வந்துள்ள செய்திப்படி, "The price of cement has increased on an average by Rs. 60 per bag and that of steel has nearly doubled. "What is shocking is that the price of cement has increased dramatically in less than 10 days all over south India" said Suresh Krishna, Vice-President of Confederation of Real Estate Developers Association of India, Chennai Region.

"வீடுகளுக்கான கட்டுமானச் செலவு அதிரடி உயர்வு - பொருள் விலை அதிகரிப்பால் சிக்கல்" என்ற தலைப்பில் 18-6-2014 அன்று வெளி வந்துள்ள பத்திரிகைச் செய்தியில், "சிமெண்ட், மணல், ஜல்லி உள்ளிட்ட கட்டுமானப் பொருள்கள் விலை உயர்வு காரணமாக, வீடுகளுக்கான கட்டுமான செலவு ஒரே வாரத்தில், சதுர அடிக்கு 300 ரூபாய் வரை அதிகரித்துள்ளது" என்று இந்திய கட்டுனர் வல்லுனர் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். முன்பு எப்போதும் இல்லாத வகையில் சிமெண்ட் விலை ஒரே வாரத்தில் மூட்டைக்கு 70 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. ஜல்லிகள் விலை 30 சதவீதமும், மணல் விலை 50 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக வீடுகளுக்கான கட்டுமான செலவு ஒரு சதுர அடிக்கு 300 முதல் 400 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதனால், நடுத்தர மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர் வாங்கும் வீடுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை கூடுதலாக செலவிட வேண்டும். சிமெண்ட் விலை உயர்வால், தமிழகம் முழுவதும் அரசு மற்றும் தனியார் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் ஒட்டுமொத்தமாக முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழக முதல்வர், இங்குள்ள உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசி விலை உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவை உள்ளிட்ட, கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்கள் மற்றும் சென்னையில் அனைத்து அமைப்புகளும் சேர்ந்து உண்ணா விரதம் முதலான போராட்டங்கள் நடத்த திட்டமிட்டுள்ளோம்" என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை வெளிவந்து எத்தனை நாட்களாகிறது? அரசாங்கம் எதாவது இது பற்றி சிந்தித்ததா? அக்கறை

செலுத்தியதா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிமெண்ட் நிறுவன அதிபர்களையெல்லாம் தலைமைச் செயலகத்திற்கே அழைத்து நான் பேசி, விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்ததுபோல் தற்போது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? இதற்கெல்லாம் நேரம் செலவழிக்க மனம் இல்லையா? மார்க்கம் இல்லையா?

22-6-2014 அன்று "சிமெண்ட், மணல் விலை உயர்வால் பணிகள் முடக்கம் அரசு தலையிட வலியுறுத்தல்" என்ற தலைப்பில் வெளிவந்த பத்திரிகைச் செய்தியில், சென்னை கட்டுமானப் பொறியாளர்கள் சங்க நிறுவனத் தலைவர் திரு வெங்கடாசலம் கூறும்போது, "சிமெண்ட், மணல், ஜல்லி விலை உயர்வால், அனைத்து வகை கட்டுமானப் பணிகளும் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் முன் எப்போதும் இல்லாத வகையில், கட்டுமானப் பணிக்கான சிமெண்ட், மணல், ஜல்லி ஆகியவற்றின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. பொதுப்பணித் துறை குவாரியில், ஒரு யூனிட் 300 ரூபாய்க்கு கொடுக்கப்படும் மணல், அதற்கு அடுத்த நிலையில், 2800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்த விலை, கட்டுமானப் பணி நடக்கும் இடத்துக்கு வரும்போது, மேலும் அதிகரிக்கிறது. அப்படியே, அதிக விலை கொடுத்தாலும், உரிய நேரத்துக்கு தரமான மணல் கிடைப்பதில்லை. வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்து வரப்படும் மணல், விற்பனைக்கு வரும்போது, கலப்படம் நிறைந்ததாக இருக்கிறது. சென்னைக்கும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கும் நாள் ஒன்றுக்கு 20 ஆயிரம் லோடு ஜல்லி தேவைப்படும். தற்போது, நான்கு இடங்களில் மட்டுமே குவாரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் போக்குவரத்துச் செலவும் சேர்ந்துள்ளதால், ஜல்லி விலை வெகுவாக உயர்ந்துள்ளது. தமிழக அரசு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, இப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும். இல்லாவிட்டால் ஒட்டுமொத்த கட்டுமானப் பணிகள் முற்றிலுமாக முடங்கிவிடும்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

தமிழக அரசு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுமென்று தெரிவித்திருக்கிறார்களே, தமிழக அரசு நடவடிக்கை எடுத்ததா? இல்லையென்றால் ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை?

நாடாளுமன்றத் தேர்தலில் 37 இடங்களில் வெற்றி பெற்று விட்டோம், இனி விலைவாசி உயர்வு பற்றி நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் பதிலா? "அம்மா" உணவகங்களையும், மருந்தகங்களையும் திறந்துவைத்து, "உப்பு" வியாபாரத்தையும் நடத்திவிட்டால் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்று எண்ணுகிறார்களா?

அன்புள்ள,

மு.க.

27-06-2014

3892. நெல் கொள்முதல் விலையை ரூ.2000 என உயர்த்துக!

உடன்பிறப்பே,

நேற்றைய தினம் "சூட்சமத்தைப் புரிந்து கொள்வாய்" என்ற தலைப்பில் நான் வெளியிட்ட "துண்டறிக்கை" போன்ற கடிதத்தில் மறைமுகமாகத் தெரிவித்த உண்மைகளை நீ புரிந்து கொண்டிருப்பாய் என்று நம்புகிறேன். தேர்தலில் கழகத்தினர் சிலர் அவசரப்பட்டுச் செய்த தவறு மீது தி.மு. கழகம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தொடர்ந்து எழுதினார்கள்; மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒரு சிலரைக் குறுநில மன்னர்கள் என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள். கழகம் அவர்கள்மீது நடவடிக்கையே எடுக்காது என்றார்கள். அவர்களின் எண்ணத்திற்கு மாறாக, கழகம் நடவடிக்கை எடுத்தவுடன், அய்யோ இவர்கள் மீது நடவடிக்கையா? இவர்கள் எல்லாம் எப்படிப்பட்ட தியாகிகள்? என்று எழுதுவதோடு, நடவடிக்கை எடுக்கப்பட்ட ஒன்றியச் செயலாளர்களை நேரில் சந்தித்து, அவர்களிடம் பேட்டிகண்டு பக்கம்பக்கமாக வெளியிடுகிறார்கள். நேற்று நான் எழுதியவாறு அவர்களின் நோக்கமெல்லாம் எப்படியாவது நம்முடைய திராவிட இயக்கத்தை இல்லாமல் செய்துவிட முடியாதா என்ற ஏக்கம்தான்! அதைப் புரிந்துகொண்டு நீ செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் நேற்றையதினம் நான் விளக்கியிருந்தேன்.

அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் முக்கிய கோரிக்கை ஒன்றைப் பற்றி இன்றையதினம் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு "கரீப்" பருவத்தில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையைக் குவிண்டாலுக்கு 50 ரூபாய் உயர்த்தி ரூ. 1,360 ஆக நிர்ணயிப்பது என்றும்; முதல் தர நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு

55 ரூபாய் உயர்த்தி ரூ. 1,400 ஆக நிர்ணயிப்பது என்றும் மத்திய அமைச்சரவையில் ஒப்புதல் தரப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு - தொடர்ந்து பயிர்கள் பொய்த்துப் போனது, கடும் வறட்சி, போதிய கடனுதவி அளிக்காதது, பயிர்க் காப்பீட்டில் முறைகேடுகள், வறட்சி நிவாரணத்தில் பாரபட்சம், கோமாரி நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகள் என வரிசையாகப் பிரச்சினைகள் தமிழகத்திலே உள்ள விவசாயிகள்மீது பாய்ந்து, பட்ட காலிலேயே படும் என்பதைப் போல அவர்கள் தொடர்ந்து படுகின்ற துயரங்களுக்கு அளவே இல்லாமல் போகிறது. ஆளும் அ.தி.மு.க.வினரோ விவசாயிகளிடம் அலட்சியத்தோடும், பாராமுகத்தோடும், நடந்து கொள்கிறார்கள்.

தமிழகத்தில் சுமார் 22 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடி செய்யப்படும் காவிரி டெல்டா மாவட்டங்கள் என்று பார்த்தால், திருவாரூர், நாகை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் முழுமையாகவும், திருச்சி, புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்கள் பகுதியாகவும் நெல் சாகுபடி செய்யப்படுகின்றது. இந்த டெல்டா மாவட்டங்களில் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள், தற்போது தங்களுடைய வாழ்வாதாரத்திற்காகப் பல இலட்சக்கணக்கானவர்கள் செங்கல்சூளை, திருப்பூர் ஏற்றுமதி நிறுவனங்கள், கட்டிடக் கட்டுமானப் பணிகள் என வேறு தொழில்களிலே ஈடுபடத் தொடங்கிவிட்டார்கள். இதனால் டெல்டா மாவட்டங்களில் விவசாயப் பணிகளைச் செய்வதற்கான தொழிலாளர்கள் கிடைப்பதில்லை.

வயலை உழவு செய்யும் டிராக்டர், நடவு செய்ய மற்றும் அறுவடை செய்யப் பயன்படும் இயந்திரங்களுக்குக் கூடுதல் வாடகை கேட்கிறார்கள். கேட்டால் டீசல் விலை ஏற்றம் என்கிறார்கள். இடுபொருள்களான விதை நெல், உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளின் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து உள்ளது. விவசாயம் செய்வதற்கான செலவுகளும், வேளாண் இடுபொருள்களின் விலையும் மிகவும் அதிகமாகிவிட்ட இந்த நிலையில் தான் நெல்லுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பும், ஏக்கமும் விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டுள்ளது.

2006-2007இல் தி.மு.கழகம் ஆட்சிக்கு ஐந்தாவது முறையாக வந்தபோது சன்ன ரக நெல் குவிண்டால் 650 ரூபாய் என்றும், சாதாரணரக நெல் 620 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டது, அது படிப்படியாக உயர்ந்து 2009-2010ஆம் ஆண்டில் சன்னரக நெல் விலையை 1,100 ரூபாய் என்றும், சாதாரணரக நெல் விலையை 1,050 ரூபாய் என்றும் உயர்த்தியிருந்தோம்.

கடந்த ஆண்டு நெல் கொள்முதல் விலை, மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையோடு தமிழக அரசின் மானியம் முறையே ரூ. 70, ரூ. 50 சேர்த்து, சன்னரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 1,415 மற்றும் பொதுரக நெல்லுக்கு ரூ.1,360 என்று விலை நிர்ணயித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அறிவித்தது. இந்த நிலை குறித்து அப்போது தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஆறுபாதி கல்யாணம் செய்தியாளர்களிடம் கூறும் போது, "குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ரூ. 2,000 கொள்முதல் விலையைத் தமிழக அரசு வழங்க வேண்டும்" என்று சொன்னார்.

நெல் பயிரிடும் விவசாயிகள் மற்றும் கரும்பு விவசாயிகளின் சிரமங்களை உணர்ந்து தி.மு.கழகப் பொதுக் குழுவிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றாக, "இன்றைய விலைவாசி உயர்வு, இடுபொருள்கள் விலை உயர்வு மற்றும் வேளாண்மைச் செலவினங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப, நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2,000 ரூபாய் வழங்கிட வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். அதனையேற்று விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய வகையில், உற்பத்திச் செலவைவிடச் சற்றுக் கூடுதலாகக் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு 2,000 ரூபாய் என்று நிர்ணயித்து வழங்கிட இந்த அரசு முன்வர வேண்டுமென்று; தீர்மானத்தை நிறைவேற்றி னோம்.

தஞ்சையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் மாநிலப் பொதுச் செயலாளர், சண்முகம், துரைமாணிக்கம் ஆகியோர் நேற்றையதினம் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில், "மத்திய அரசு நெல் குவிண்டாலுக்கு 50 ரூபாய் உயர்த்தித் தருவதாக அறிவித்துள்ளது. இது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. எனவே நெல் குவிண்டாலுக்கு 2,000 ரூபாய்

வழங்க வேண்டும்" என்று தெரிவித்திருப்பதோடு, இதற்காகத் தஞ்சை, திருவாரூர், நாகையில் ஜூலை 5ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் யார் சொன்னால் என்ன? யார் கேட்டால் என்ன? என்ற ரீதியில், எவர் என்ன சொன்னாலும் ஏற்க மாட்டேன் என்று விவசாய சங்கத் தலைவர்கள் சொன்னதையும் கேட்காமல், எதிர்க்கட்சிகள் கூறுவதையும் கேட்காமல், தன்னிச்சையாக விலையைச் சன்ன ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ. 1,415 என்றும், பொதுரக நெல்லுக்கு ரூ. 1,360 என்றும் விலை நிர்ணயித்தார்கள். தற்போது மத்திய அரசு நெல் விலையைக் குவிண்டாலுக்கு 1,360 என்று உயர்த்திய நிலையில் தமிழக அரசு மேலும் எவ்வளவு ரூபாயை உயர்த்தப் போகிறது? முத்தரப்புக் கூட்டம் நடத்தி அங்கே யோசனை பெற்று விவசாயப் பெருமக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் குவிண்டாலுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்று உயர்த்தப் போகிறதா? அல்லது தன்னிச்சையாகவே உயர்த்தப் போகிறதா? அப்படி உயர்த்தினால் எந்த அளவுக்கு உயர்த்தப் போகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் தமிழக அரசு தகுந்த முடிவெடுத்து அறிவிக்க வேண்டும். இந்த உண்மைகளையெல்லாம் உடன்பிறப்பே, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எடுத்துச் சொல்வதோடு, அவர்களின் கோரிக்கைக்குத் தி.மு. கழகம் என்றைக்கும் துணைநிற்கும் என்பதையும் நீ தெரிவித்திடுவாய் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

28-6-2014

3893. பெரியார் கூறிய கட்டுப்பாடு காத்திட; அண்ணா வழியில் வாரீர்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தில் சிறுபுகை மூட்டம் என்றாலும் அதைப் பெரிதாக்கி ஏதோ மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டுவிட்டதைப் போலவும், அதில் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகிவிட்டது போலவும் தமிழகத்திலே உள்ள சில நாளேடுகளும், வார இதழ்களும் செய்தி வெளியிடுகின்றன. அதே நேரத்தில், மாற்றார் முகாமில் மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டாலும், அதனை ஒன்றுமில்லை, சாதாரண புகைதான் என்பது போல அதே இதழ்கள் எழுதுகின்றன. அதற்கு உதாரணம்தான் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு. கழகம் தோற்று விட்டது என்றதும், அதுபற்றி எப்படியெல்லாம் செய்தி வெளியிட்டார்கள்? அதே நேரத்தில் பெங்களூரு சொத்துக்குவிப்பு வழக்கு; தீர்ப்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதே, அந்தச் செய்தியை அப்படியே மறைத்து விடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள்.

22-6-2014 தேதிய "குமுதம் ரிப்போர்ட்டர்" இதழ், "கட்சியின் அடிமட்ட நிர்வாகிகளும், தொண்டர்களும் பலரும் முன்வைத்த பிரதானமான கோரிக்கை, கட்சியில் குறுநில மன்னர்களாகத் திகழும் ஒரு சில சீனியர் மாவட்டச் செயலாளர்களின் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டுங்கள் என்பதுதான். கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர் கூறுகையில், நாடாளுமன்றத் தேர்தலில் 3 தொகுதிகளில் தோல்வியைத் தழுவியதற்கே அ.தி.மு.க. அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. அதே ஸ்டைல் நடவடிக்கைகளைத்தான் தி.மு.க. தொண்டர்களும் இப்போது விரும்புகிறார்கள்" என்றெல்லாம் எழுதியதோடு, "பதவியிழக்கும் 18 மா.செ.க்கள்?" என்ற தலைப்பில் 18 மாவட்டக் கழகச்

செயலாளர்களின் பெயரையும் வெளியிட்டிருந்தது. இது ஒரு உதாரணம்தான்.

இதே விதமாகத்தான் தொடர்ந்து எழுதிவந்தார்கள். "கலைஞருக்கு ஒரு பகிரங்க கடிதம்" என்ற தலைப்பில் "சைரன்" என்ற இதழில் "பேனாவைக் கீழே வைத்து சாட்டையைக் கையில் எடுங்கள் தலைவா?" என்று யாரோ ஒரு அன்புத் தொண்டன் எழுதுவதைப் போல நீண்ட கட்டுரை ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது. 28-5-2014 தேதிய ஜூ.வி. இதழ் அட்டையிலேயே "எல்லா மாவட்டச் செயலாளர்களையும் எடு" என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரை.

இந்தக் கட்டுரைகள் எல்லாம் கழகத்தின் மீது அக்கறையோடு எழுதப்பட்டவை அல்ல; தி.மு. கழகத்தில் ஏதாவது நிகழாதா? அப்படி நிகழ்ந்தால் திராவிட இயக்கம் என்பதையே பூண்டற்றுப் போகச் செய்துவிடலாமே; என்ற நப்பாசைதான். தி.மு. கழகம் ஆயிரம் காலத்துப் பயிர்! இதனை அழிக்க எத்தனையோ கொம்பர்கள் எல்லாம் முயன்று பார்த்து தோல்வியைத்தான் தழுவினார்கள். தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைப் போல தி.மு. கழகம் பல முறை தோல்வியைத் தழுவியிருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு வீறுகொண்டு எழுந்து நின்றிருக்கிறது. கழகத்தின் சார்பில் ஒரேயொரு இடத்தில் ஆசைத்தம்பி வெற்றி பெற்றதில்லையா? அதற்குப் பிறகு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு. கழக அணி 38 இடங்களில் வெற்றிபெற்றதில்லையா? எனவே தேர்தல் தோல்விகள், வெற்றிகள் என்பதெல்லாம் பகல் இரவு போலத்தான்! மாறி மாறி வரத்தான் செய்யும்! தற்போது மத்தியில் வெற்றி பெற்றுள்ள பா.ஜ.க. தோல்வியைக் கண்டதில்லையா? தமிழகத்திலே அ.தி.மு.க. தோல்வியைத் தழுவியதில்லையா? ஜெயலலிதாவே சட்டப் பேரவைத் தேர்தலில் தோற்றதில்லையா? அந்தக் கட்சி பெண்ணாகரத்தில் இடைத் தேர்தலில் "டெபாசிட்" தொகையை இழக்கவில்லையா? இந்த வெற்றி தோல்விகள் என்பதே இயக்கத்தின் ஆயுளை நிர்ணயிக்கக்கூடிய ஒன்றல்ல!

ஆனாலும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுக்குப்பிறகு, ஒரு சில இடங்களில் கழகத்தினர் சரியாகப் பணியாற்றவில்லை;

மாவட்டக் கழகச் செயலாளர்கள் தவறு செய்தார்கள்; கழக முன்னணியினரே தவறு செய்தார்கள்; அ.தி.மு.க.வினரிடம் பணம் பெற்று பணியிலே ஈடுபடாமல் இருந்தார்கள் என்பதை யெல்லாம் கேள்விப்பட்டுக் கழகத்தின் சார்பில் ஆறு பேர் கொண்ட குழு ஒன்றினை, கழகத்தின் உயர் நிலை செயல்திட்டக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி அமைத்தோம். அந்தக் குழு கலந்தாலோசித்து, அளித்த அறிக்கைப்படி தற்போது கழகத்தின் சார்பில் 34 மாவட்டக் கழகச் செயலாளர்கள் இருப்பதற்கு மாறாக, மாவட்டங்களைப் பிரித்து 65 மாவட்டங்கள் என்றாக்கி, ஒவ்வொரு மாவட்டத்தின் கீழ் எந்தெந்த சட்டமன்றத் தொகுதிகள் அடங்கும் என்ற விவரங்களையெல்லாம் வெளியிட்டோம்.

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பக்கம்பக்கமாக எழுதிய இதழ்கள், கழகம் எடுத்த இந்த நடவடிக்கை பற்றி ஏதாவது பாராட்டினார்களா என்றால் இல்லை, இல்லவே இல்லை. நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களும் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்களும் தேர்தலில் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து அறிக்கை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு, அவர்களும் அவ்வாறே தலைமைக் கழகத்திற்கு அளித்தார்கள். அந்த அறிக்கைகளையெல்லாம் தொகுத்து, வேட்பாளர்களும், பொறுப்பாளர்களும் யார் யார் மீது புகார் கொடுத்துள்ளார்கள், அவர்களில் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்காக, தலைமைக் கழகத்தினால் இரண்டு பேர் நியமிக்கப்பட்டு, அவர்கள் இருவரும் இரண்டு மூன்று நாள்கள் தலைமைக் கழகத்திலே இரவு பகலாகத் தங்கி, யார் யார் மீது எப்படிப்பட்ட புகார்கள் வேட்பாளர்களாலும், பொறுப் பாளர்களாலும் தரப்பட்டிருக்கின்றன என்பதையும், அவர்களில் யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும் பரிந்துரை செய்தார்கள்.

அந்தப் பரிந்துரைகள் அடிப்படையில்தான், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பு, கழகம் தன்னிச்சையாக முடிவெடுத்து விடாமல், அவர்களை உடனடியாக கட்சி உறுப்பினர் பொறுப்பிலிருந்தே விடுவித்து விடாமல், அவர்கள் வகித்த பொறுப்புகளிலே இருந்து மட்டும்,

அதுவும் தற்காலிகமாக விலக்கிவைக்கப்பட்டு, அதே நேரத்தில் அவர்கள் ஒரு வாரக் காலத்திற்குள் தங்கள் மீதான புகார்களுக்கான விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு, அதற்கான தலைமைக் கழக அறிவிப்பும் கடந்த 21-6-2014 அன்று வெளியிடப்பட்டது.

அந்த அறிவிப்புக்குப் பிறகு, நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களில், ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாம், தங்கள் விளக்கங்களைத் தலைமைக் கழகத்திற்கும், அதன் நகல் ஒன்றினை எனக்கும் அளித்துள்ளார்கள். தலைமைக் கழகம், அவர்களைத் தற்காலிகமாக விலக்கி வைத்து, ஏன் முழுவதுமாக நீக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தை அளிக்கும்படி கேட்டுக்கொண்ட நிலையில், அவர்கள் தந்த விளக்கங்கள் சிலவற்றை நான் புரட்டிப்பார்த்தேன். நேற்றையதினம் மாலையில் விளக்கம் கேட்கப்பட்ட ஒரு ஒன்றியச் செயலாளர், தங்கள் தொகுதியிலிருந்து சுமார் 100 பேர்களுடன் என்னைச் சந்தித்து, தான் அளித்த விளக்கத்தின் நகல் ஒன்றினைக் கொடுத்தார். அந்த விளக்கத்திலே, தான் ஐந்தாம் வகுப்பு வரைதான் படித்திருப்பதாகவும், ஆனால் அவருடைய மகன் பி.ஈ., படித்திருப்பதாகவும், எனவே அவருடைய மகனை நாடாளுமன்றத் தேர்தலில் நிறுத்த முயற்சித்ததாகவும், அதனால் அந்தத் தொகுதியிலே இடம்கிடைத்து போட்டியிட்டவருக்கு தன்னிடம் வருத்தம் என்றும், அதன் காரணமாகவே தன் மீது புகார் கூறி அறிக்கை கொடுத்திருப்பதாகவும் அதிலே எந்தவிதமான உண்மையும் இல்லை என்று தெரிவித்ததோடு, கழகத்திற்காக அவர் ஆற்றிய பணிகள் பற்றிய விவரங்களையெல்லாம் புகைப்பட நகல்களோடு என்னிடம் காட்டினார். தான் தேர்தல் நேரத்தில் ஆற்றிய பணிகளையொட்டி, ஆளுங்கட்சி சார்பில் தன் மீது நான்கு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதற்கான சான்றுகளையும் என்னிடம் எடுத்துக்காட்டினார்.

நான் அவரிடம், தேர்தலுக்குப் பிறகு உங்கள் தொகுதியிலே இருந்து சுமார் 100 பேர் நேரில் வந்து உம்மீது புகார் கொடுத்தார்களே என்று கேட்டபோது, அவர்கள் எல்லாம் அங்கே போட்டியிட்ட வேட்பாளர் பணம் கொடுத்து அழைத்து வந்தவர்கள் என்ற விவரத்தையும் கூறினார்.

நான் அவரிடம் இந்த விவரங்களையெல்லாம் அறிந்து கொள்வதற்காகத் தான் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது; வேட்பாளர்களும், பொறுப்பாளர்களும் தந்த அறிக்கை மீது எடுக்கப்பட்டது தற்காலிக நடவடிக்கைதான். அவர்களின் புகார்களையும், அதற்கு நீங்கள் தற்போது தரும் விளக்கங்களையும் நன்றாகப் படித்து, அவற்றிலே என்ன உண்மை என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு தான் கழகம் இறுதி முடிவெடுக்கும் என்று நான் கூறிய பிறகு, அந்த ஒன்றியச் செயலாளரும், அவருடன் வந்தவர்களும் மன ஆறுதலோடு திரும்பினார்கள்.

இது ஒரு உதாரணம்! இன்னொரு மாவட்டத்திலிருந்து; விளக்கம் கேட்டவர்கள் எல்லாம் இரண்டு மூன்று பேர் ஒன்றாகச் சேர்ந்து தலைமைக் கழகத்திலே விளக்க அறிக்கையினைக் கொடுத்து விட்டு, என்னிடம் ஒரு நகலை நேரில் கொடுக்க முடியாததால், என் வீட்டில் அதனைக் கொடுத்துவிட்டு, எப்படியாவது தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று தலைவரிடம் கூறுங்கள் என்று சொல்லிச் சென்றிருக்கிறார்கள். தற்காலிக நடவடிக்கைக்கு ஆளாகி உள்ளவர்களில் ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் விளக்கமளித்துள்ளார்கள். அந்த விளக்கங்களில் எல்லாம், அவர்கள் கடந்த காலத்தில் ஆற்றிய கழகப் பணிகள், ஏற்றுக் கொண்ட இன்னல்கள், தற்போது அவர்கள் மீது சாட்டப்பட்டுள்ள புகார்கள் எந்த வகையிலே அமைந்தவை என்பதையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கழகம் 33 பேர் மீது நடவடிக்கை எடுத்துவிட்டது, இனிமேல் கழகம் அவ்வளவுதான், அந்த 33 பேரில் ஓரிருவர் கழகத் தலைமையையும், கழகப் பொருளாளரையும் கடுமையாகச் சாடி அறிக்கைகள் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள், இனி கழகம் இல்லை, நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களையெல்லாம் தேடிச் சென்று அவர்களிடம் பேட்டி கண்டு, அதிலே ஏதாவது ஓரிரு வார்த்தைகள் கழகத் தலைமையைக் குற்றஞ்சாட்டி இருக்காதா, அதை ஊதிப் பெரிதுபடுத்தலாமா, அதற்கு எப்படி தலைப்புப் போடலாம் என்றெல்லாம் துடியாய்த் துடிக்கின்ற அந்த இதழாளர்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றம். கழகம் அனைத்து இடங்களிலும் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுவிட்டது, கழகம் இனி அவ்வளவுதான், எழவே எழாது என்றெல்லாம்

தற்காலிக நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் நினைத்திருந்தால், இத்தனை பேரோடு வந்து விளக்கம் தந்திருப்பார்களா? எங்கள் மீது தவறில்லை, புகார் தவறாகக் கூறப்பட்டுள்ளது, கழகத்திலே தொடர்ந்து பணியாற்ற அனுமதி அளியுங்கள் என்று கீழே விழுந்து கதறுகிறார்கள் என்றால் இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். இதையா அழித்துவிடப் பார்க்கிறார்கள்? விளக்கம் அளிக்க வந்த ஒன்றியச் செயலாளரும், அவருடன் வந்தவர்களும் கதறி அழுதார்களே, அவர்கள் எல்லாம் கழகத்தினால் என்ன பயன் கண்டார்கள்? சட்டப்பேரவை உறுப்பினராகத் தவிக்கிறார்களா? நாடாளுமன்ற உறுப்பினராகலாம் என்று கனவு காண்கிறார்களா? தோற்றுப்போன கழகம்தானே, இதிலே நீடிக்க விரும்புகிறார்களே, அதற்காகப் பல மைல் தூரம் ஓடிவந்து விளக்கம் அளிக்கிறார்களே, அவர்கள் என் கால்களில் விழுந்து கழகத்திலிருந்து நீக்கி விடாதீர்கள் என்று கெஞ்சுகிறார்களே; என் அருமை உடன்பிறப்புகளே, அவர்கள் அல்லவா கழகத்தின் ரத்த நாளங்கள். கழகம் உண்மையைப் புரிந்து கொள்ளாமல், தீர விசாரிக்காமல் எந்த ஒரு தொண்டர் மீதும் நடவடிக்கை எடுத்து விடாது! அதே நேரத்தில் புகார்கள் உண்மையாக இருக்குமானால், ஏதோ ஒன்றை எதிர்பார்த்து ஓரிருவர் தவறு செய்திருப்பார்களேயானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமலும் இருந்து விடாது. வீண் புகார்களை உண்மையென நம்பி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

அது மாத்திரமல்ல; கழகத்திலே நடு மட்டத்திலே இருப்பவர்கள் மாத்திரமல்ல; மேல்நிலையிலே உள்ளவர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் என்பவர்களே, தங்களையும் அறியாமல் இந்தத் தேர்தலில் சில தவறான செயல்களிலே ஈடுபட்டார்கள் என்பதையும் நான் நன்றாகவே அறிவேன். அவர்கள் மீது நடவடிக்கை கிடையாதா? நாங்கள்தான் தவறு செய்தோமா? என்ற எண்ணம் கூட ஒருசிலருக்கு எழலாம். உங்கள் எண்ணத்திலே வருவது, என் கவனத்திற்கு வராதா என்ன?

மேலும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தங்கள் மாவட்டத்தில் குழு ஒன்றைச் சேர்த்துக்கொண்டு, அந்தக் குழுவின் சார்பில் கூட்டங்களை நடத்துவதும், அதிலே தங்கள் புகைப்படங்களைப் பெரிதாகப் போட்டுக் கொள்வதோடு,

பொறுப்பிலே உள்ள மற்றவர்களின் புகைப்படங்களைப் புறக்கணிப்பதுமான செயல்களில் ஈடுபட்டுவருவதும் என் கவனத்திற்கு வராமல் இல்லை. அவர்களுக்கு அ.தி.மு.க. எதிரியாக, எதிர்க்கட்சியாகத் தெரிவதைவிட, நம்மவர்கள்தான் மிக நெருங்கிய எதிரிகளாகத் தெரிகிறார்கள். இப்படிப்பட்ட செயல்களும் கடந்த தேர்தலில் நாம் தோற்க ஒரு காரணம் என்பதை அவர்கள் எப்போதுதான் புரிந்துகொள்ளப் போகிறார்களோ?

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிகளும், சட்டப் பேரவைத் தேர்தல் முடிவுகளும் மட்டுமே கழகத்தின் வரலாறு அல்ல. தி. மு. கழகம் போன்ற மாபெரும் இயக்கத்தில் தேர்தல் வெற்றி கண்டு வெறி கொண்டு அலையவும் மாட்டோம்; அதே நேரத்தில் தோல்வி கண்டு துவண்டுவிடவும் மாட்டோம்.

தற்காலிகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் தவறே செய்யாதவர்கள், தேர்தலில் சிறப்பாகப் பணியாற்றினார்கள் என்றெல்லாம் நான் நம்பத் தயாராக இல்லை. வேட்பாளர்களும், பொறுப்பாளர்களும் அளித்த அறிக்கை யில் குறிப்பிட்டுப் புகார்கள் கூறப்படாததால் அவர்கள் இப்போது நடவடிக்கைக்கு ஆளாகாமல் இருந்திருக்கலாம். ஆனால் உப்பைத் தின்றால் தண்ணீர் குடித்தே ஆக வேண்டும் என்பதைப் போல தவறு செய்தவர்கள், தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும். அதற்கான நாட்கள் தள்ளிப் போகலாம், அவ்வளவுதான்.

உயர்நிலை செயல் திட்டக் குழு நடைபெற்றபோது, அதிலே பேசிய ஒரு உறுப்பினர், "தலைவர் அவர்களே, நீங்கள் நிச்சயமாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கமாட்டீர்கள்; ஏனென்றால் உங்கள் மனம் மிகவும் இளகியது; யார் மீதும் நடவடிக்கை எடுக்க உங்களுக்கு மனம் வராது" என்று கூறினார். நான் அப்போது எதுவும் கூறவில்லை. பேரறிஞர் அண்ணா ஒரு முறை கூறினார், நான்கை ஐந்தாக ஆக்க வேண்டும், ஐந்தை ஆறாக ஆக்க வேண்டும், மாறாக ஆறை ஐந்தாக ஆக்கி விடக்கூடாது என்றார். நானும் அதையே நினைத்துக் கொண்டிருப்பது உண்மைதான். ஒருசில கட்சிகளில் ஒருவர் நினைத்தால் இருக்கலாம், அவர் நினைக்கவில்லையென்றால் கட்டம் கட்டி விடுவார்கள் என்ற நிலையிலே நான் இல்லைதான். ஆனாலும் தவறு அளவுக்கு

மீறுமேயானால், நடவடிக்கை எடுக்கப்பட்டே தீர வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அண்ணா கூறியது இது. பெரியார் கூறியதோ, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதில் கட்டுப்பாடுதான் இயக்கத்திற்கு மிகவும் முக்கியமானது என்றார். எனவே நமது இயக்கத்திற்குக் கட்டுப்பாடு மிக மிக முக்கியம். அதைக்காப்பதற்கு, உடன்பிறப்பே நீங்கள் ஒவ்வொருவரும் துணை நிற்க வேண்டும் என்பதே என்னுடைய இந்த மடலின் வேண்டுகோள்.

அன்புள்ள,

மு.க.

29-6-2014

3894. அரைவேக்காடு யார்; ஜெயாவா, நானா?

உடன்பிறப்பே,

27-6-2014 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில், கேரள மாநில சட்டப் பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, முதலமைச்சர் உம்மன் சாண்டி, "முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், திருணக்கடவு மற்றும் பெருவாரிப்பள்ளம் ஆகிய நான்கு அணைகளும் இப்போது கேரளாவின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன. அந்த அணைகள் முழுக்க முழுக்கக் கேரளாவுக்குச் சொந்தமானவை. 2009ஆம் ஆண்டுவரை இந்தியாவில் உள்ள பெரிய அணைகளின் பட்டியலில் இந்த நான்கு அணைகளும் தமிழ்நாட்டிற்குச் சொந்தமானவை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கேரளா அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து 2012ஆம் ஆண்டு அந்த நான்கு அணைகளும் கேரளாவுக்குச் சொந்தம் என்று மாற்றப்பட்டது" என்று பேரவையிலேயே அறிவித்ததையும் குறிப்பிட்டு; "நதிநீர் சம்பந்தமாகத் தமிழ்நாட்டின் உரிமைகளை நான்தான் நிலைநாட்டி வருகிறேன்" என்று சொல்லி வரும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா; இந்த நான்கு அணைகளும் கேரளத்திற்குச் சொந்தம் என்று உம்மன் சாண்டி உரிமை கொண்டாடுகிறாரே, அந்த உரிமை யாரால் நிலைநாட்டப்பட்டது?" என்று கேள்வி எழுப்பியிருந்தேன்.

இந்தக் கேள்விக்கு ஜெயலலிதா என்ன பதில் சொல்லியிருக்க வேண்டும்? கேரள முதலமைச்சர் உம்மன்சாண்டி அறிவித்திருப்பது முற்றிலும் தவறானது என்று சொல்லி அவரது அறிவிப்பினைக் கண்டித்திருக்க வேண்டும் அல்லது கேரள முதலமைச்சர் செய்திருக்கும் அறிவிப்பினைப் பற்றி தமிழக அரசு மேற்கொண்ட அல்லது மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பற்றி விளக்கி இருக்க வேண்டும்.

இப்படி ஆக்கப்பூர்வமான பதிலை அளிக்காமல்; முக்கியமான இந்தப் பிரச்சினையில் தமிழக மக்களுக்கு விளக்கம் அளித்திட வேண்டிய முதலமைச்சர் ஜெயலலிதா, பிரச்சினையை நாட்டு மக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக என்மீது எரிச்சலையும் கோபத்தையும் கொட்டியிருக்கிறார். "ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கும்" முயற்சியில் நான் ஈடுபட்டிருப்பதாகவும், "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்றும், "அரை வேக்காட்டு அறிக்கை" என்றும் அவருக்கே உரிய அரசியல் பண்பாட்டையொட்டி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

என்னுடைய அறிக்கையை அச்சத்தின் காரணமாக வெளியிடாத தமிழ்நாட்டின் சில பத்திரிகைகள், ஜெயலலிதாவின் பதில் அறிக்கையை மட்டும் அவரைக் குளிர்விப்பதற்காகப் பெரிதாக வெளியிட்டிருக்கின்றன. பத்திரிகா தர்மம் தமிழகத்தில் கொடிக்கட்டிப் பறப்பதைப் பாரினில் அனைவரும் பார்த்து ரசிக்கிறார்கள்!

2009ஆம் ஆண்டின் பெரிய அணைகள் குறித்த தேசியப் பதிவேட்டில் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை குறித்த விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றும்; 2012ஆம் ஆண்டின் பதிவேட்டில் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை குறித்த விவரங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன என்றும்; எனினும் பின் குறிப்பில் இந்த நான்கு அணைகளும் தமிழ்நாட்டால் இயக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன என்றும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஜெயலலிதா தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சராக ஜெயலலிதாதானே பொறுப்பு வகித்தார்? தேசியப் பதிவேட்டில் இந்த நான்கு அணைகளும் 2012ஆம் ஆண்டு கேரள மாநில அணைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதை எதிர்த்து ஜெயலலிதா குரல் கொடுத்திருக்க வேண்டாமா? இதுகுறித்து மத்திய அரசுக்குத் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்க வேண்டாமா? ஆட்சியில் இருப்பவர்களுக்குத் தானே தேசியப் பதிவேட்டின் விவரங்கள் அனைத்தும் தெரியும். ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கும் என்னைப் பார்த்து 2012ஆம் ஆண்டில் ஏன் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்று கேட்டால்; அப்படிக்

கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை நடுநிலையாளர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

அ.தி.மு.க. அரசின் வற்புறுத்தலின் பேரில், 2013ஆம் ஆண்டு தேசியப் பதிவேட்டில்"இந்த நான்கு அணைகளும் தமிழ்நாடு பொதுப்பணித் துறையினரால் இயக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன" என்று பின்குறிப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஜெயலலிதா தன்னுடைய அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். ஆனால் 2009ஆம் ஆண்டும், 2012ஆம் ஆண்டும், 2013ஆம் ஆண்டு பின்குறிப்பில் குறிப்பிட்டிருந்ததைப் போலவே, "நான்கு அணைகளும் தமிழ்நாட்டால் இயக்கப்பட்டு, பராமரிக்கப்படுகின்றன" என்று குறிப்பிடப்பட்டிருந்தாக ஜெயலலிதாவே தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். உண்மை நிலை இப்படியென்றால், 2013ஆம் ஆண்டு பின் குறிப்பில் தெளிவாக்கப்பட்டது அ.தி.மு.க. அரசின் வற்புறுத்தலினால்தான் என்று ஜெயலலிதா உரிமை கொண்டாடிப் பெருமைப்பட்டுக் கொள்வதில் எந்தவிதப் பொருளும் இல்லை என்பதை அவருடைய அறிக்கையே காட்டிக் கொடுத்துவிட்டது.

"பெரியாறு அணை தமிழ்நாட்டிற்குச் சொந்தம்" என்று சொன்ன உச்ச நீதிமன்றத்தையே அவமதிக்கும் செயல் என்றெல்லாம் ஜெயலலிதா குறிப்பிட்டிருப்பது, கேரள முதல்வர் உம்மன் சாண்டி அவர்களின் அறிவிப்புக்குத்தான் பொருந்துமே தவிர, அதை எடுத்துச் சொன்ன எனக்கு எப்படிப் பொருந்தும்?

சொத்துக் குவிப்பு வழக்கு குறித்துப் பெங்களூரு தனி நீதிமன்றத்தையே சதா சர்வகாலமும் நினைத்துக் கொண்டிருக்கும் ஜெயலலிதா, நீதி மன்ற அவமதிப்பு என்று எனக்குப் "பூச்சாண்டி" காட்டுவது வேடிக்கையாக இருக்கிறது.

கேரள முதலமைச்சர் உம்மன் சாண்டி சட்டப்பேரவையிலே அறிவித்ததைத் தமிழக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக என்மீது பாய்ந்து பிறாண்டி இருக்கும் ஜெயலலிதா; தன்னுடைய அநாகரீகமான அணுகுமுறையைத் திருத்திக் கொண்டு, இனியாவது முறையான முயற்சிகளின் மூலம் தேசியப் பதிவேட்டில் இந்த நான்கு அணைகளும் தமிழகத்திற்குச் சொந்தமானவையே என்பதை உறுதி செய்ய வேண்டும். "பட்டுக்

கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப்பாக்கு பணத்துக்குப் பத்து என்றானாம்" என்ற பழமொழியின் பாணியில், ஜெயலலிதா மாநில நிர்வாகத்தை நடத்த நினைப்பது, தமிழக மக்களுக்கு எந்த வகையிலும் நன்மையைத் தராது.

கேரளத்தின் பம்பை, அச்சன்கோவில் ஆறுகளைத் தமிழகத்தின் வைப்பாறுடன் இணைப்பது பற்றிக் கேரள சட்டப்பேரவையில் நடந்த விவாதத்தை என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். 2012ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பைத் தனது பதில் அறிக்கையிலே ஜெயலலிதா குறிப்பிட்டிருக்கிறார். உச்சநீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பே கழக வழக்கறிஞர் திரு.கே.எஸ்.இராதாகிருஷ்ணன் 1983இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து; மேல்முறையீட்டினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததன் விளைவாகத்தான் வந்தது என்பதை ஜெயலலிதா தன்னுடைய அறிக்கையிலே மறைத்து விட்டாலும், நதிநீர் இணைப்பு குறித்து அறிந்தவர்கள் மறந்துவிட மாட்டார்கள்.

என்னுடைய அறிக்கைக்கு நேரடியாகப் பதில் சொல்ல இயலாத நிலையில், சுற்றி வளைத்து எதையாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக, "நதிநீர் இணைப்பு பற்றிப் பிரதமரிடம் நேரில் வலி யுறுத்தி உள்ளேன்" என்று ஜெயலலிதா தன்னுடைய அறிக்கையிலே பொத்தாம் பொதுவாகச் சொல்லியிருக்கிறார். ஏதோ நதிநீர் இணைப்பு குறித்து இவர்தான் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு முதன்முதலில் நடவடிக்கை எடுத்தவரைப் போல ஜெயலலிதா தன்னுடைய அறிக்கையிலே பெரிதுபடுத்திச் சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மை நிலை என்ன?

தி.மு.கழக ஆட்சியின்போது 2007- 2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே, "இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும், இறை யாண்மைக்கும் ஊறு விளைவிக்கும் வகையில் நதிநீர்ப் பங்கீடு பிரச்சினைகள் உருவாவதைத் தடுத்திட முதலில் தீபகற்ப நதிகளையாவது இணைத்திட வேண்டும் என்ற கோரிக்கையை அவசர அவசியம் கருதி, உடனடியாக நிறைவேற்றும் பணி மத்திய அரசால் தொடங்கப்பெற இந்த அரசு தொடர்ந்து தீவிர முயற்சி மேற்கொள்ளும்" என்று சுட்டிக்காட்டியதையொட்டி, நதிநீர்

இணைப்பு பற்றி, மத்திய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகளின் கவனத்தையும் ஈர்த்திடும் வகையில், தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்திலும் நான் விரிவாக எடுத்துரைத்திருக்கிறேன். நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததோடு நில்லாமல், வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கும், வெள்ள நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, வறட்சிப் பகுதிகளுக்கு நீரை எடுத்துச் செல்வதற்கும், மாநிலத் திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழகத்தில்தான் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

திருச்சிக்கு அருகே மாயனூரில் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டத்தின் கீழ், காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை கட்டும் பணிகள் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்றன. தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்காக 369 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றன. பெண்ணையாற்றுடன் செய்யாற்றை இணைக்கும் திட்டத்திற்கு 174 கோடி ரூபாய்க்கான கருத்துரு மத்திய அரசின் நீர்க் குழுமத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. நதிநீர் இணைப்பு பற்றி இப்போது வாய்கிழியப் பேசும் ஜெயலலிதா, காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கான பணிகளையும், தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கான பணிகளையும் கழக ஆட்சிக் காலத்தில் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து நிறைவேற்றிட, அ.தி.மு.க. ஆட்சியில் என்ன முயற்சி எடுக்கப்பட்டது என்பதை ஜெயலலிதா விளக்க முன்வருவாரா?

ஆத்திரத்தில் அரைவேக்காட்டு அறிக்கை வெளியிடுவது ஜெயலலிதாவா, நானா என்பதைத் தமிழக மக்கள் இப்போதாவது புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

30-6-2014

3895. நீதிபதி சந்துருவின் நெறி தவறாத வழிகள்!

உடன்பிறப்பே,

சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதி திரு. கே. சந்துரு அவர்கள் ஓய்வுபெற்ற பிறகு தனது சட்ட அனுபவங்களை அவ்வப்போது கட்டுரைகளாகத் தீட்டி வருகிறார். அவர் பதவியில் இருந்தபோது வழங்கிய சில முக்கிய தீர்ப்புகளைத் தொகுத்து, "அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்" என்ற சிறப்பான தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டிருக்கிறார். அந்தப் புத்தகத்தைச் சில நாட்களுக்கு முன்பு நான் படிப்பதற்காக அனுப்பியிருந்தார். அந்தப் புத்தகத்தின் சில குறிப்பிட்ட பகுதிகள்தான் இன்றைய உடன்பிறப்பு மடல். நான் படித்தபோது அடைந்த மகிழ்ச்சியை நீயும் அடைய வேண்டுமல்லவா?

இந்த நூலில் 15 தீர்ப்புகள் வெளியாகியுள்ளன. அந்தத் தலைப்புகளைப் பார்த்தாலே நீதிபதி சந்துரு அவர்கள் யார் என்பதை உன்னால் புரிந்துகொள்ள முடியும்! இதோ சில தலைப்புகள்!

1. இட ஒதுக்கீடு
2. சாதி மறுப்புத் திருமணங்கள்.
3. தீண்டாமைச் சுவர் தகர்ந்தது.
4. பாலியல் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட தலித் சிறுமிகள்
5. தலித்துகளின் வாழ்வுரிமை
6. பஞ்சமி நிலம்
7. மத மாற்றம்
8. நூலகத்திற்கு வந்த கேடு
9. கோவில்களில் வழிபாட்டுரிமை

இட ஒதுக்கீடு என்ற தலைப்பின் கீழ்தான் வழங்கிய ஒருசில தீர்ப்புகளை நீதிபதி சந்துரு அவர்கள் இந்த நூலில் இடம்பெறச் செய்திருக்கிறார். நெல்லை மாவட்டத்தில் ஒரு பள்ளியுடன் இணைந்த சத்துணவுக் கூடத்திற்கு ஆறுமுகத் தாய் என்ற பெண்ணைச் சமையல் உதவியாளராக மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்திருக்கிறார். அப்பெண் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அதனால் பள்ளியின் தாளாளர், தன்னைக் கலந்துகொள்ளாமல் நியமித்த நபரைப் பணியில் சேர்க்க முடியாது என்று கூற, அந்தப் பெண் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கூறியிருக்கிறார். மாவட்ட ஆட்சியர் அந்தப் பெண்ணைப் பணியில் சேர்க்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் பள்ளியை மூடிவிடுவேன் என்றும் தெரிவிக்க, பள்ளிதாளாளர் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார். அந்த வழக்கினை நீதிபதி சந்துரு விசாரித்து, அந்த ரிட் மனுவைத் தள்ளுபடி செய்து, பள்ளித் தாளாளரை உடனடியாக அப்பெண்மணியை வேலையில் அனுமதிக்க உத்தரவிட்டிருக்கிறார்.

சத்துணவு மையத்திற்குப் பணியாளர் அமர்த்தும் போது, சத்துணவு மைய வேலையைக் கோருவோர் மையம் அமைந்துள்ள இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்க வேண்டுமென்று விதி இருந்ததால், பட்டியல் சாதிகளைச் சேர்ந்த பெண்கள் ஊருக்கு வெளியே காலனியில் வசித்த காரணத்தால், பணிகள் கிடைப்பதில்லை என்று வசந்தா என்ற ஒரு பெண் வழக்கு தொடுத்தபோது, நீதிபதி சந்துரு அதனை விசாரித்து, சத்துணவு மையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை அரசமைப்பு சட்டத்திற்கு முரண்பட்டது என்றும், தகுதித் தேர்வில் இருவர் சமமாக மதிப்பெண் பெற்றால், தேர்வுக் குழுவினர் மையங்களுக்கு அருகிலே வசிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்றும் தீர்ப்பளித்திருக்கிறார்.

சத்துணவு மையங்களுக்கு உள்ள பணிகளுக்கு இடஒதுக்கீடு கிடையாது என்று கூறப்பட்டதைத் தொடர்ந்து திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த போத்துமல்லி என்ற பெண் ஒரு வழக்கு தொடுத்தார். அதன்மீது தீர்ப்புக் கூறிய சந்துரு அவர்கள் சத்துணவு மையங்களில் உள்ள பதவிகள் நிரப்பப்படும்போது, கட்டாயமாக

இட ஒதுக்கீடு சுழற்சி முறையைப் பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிட்டார். இதைப் பற்றி இந்நூலில் தனது தீர்ப்புகளை விவரித்துள்ள சந்துரு, என்னைப் பற்றியும் அதிலே எழுதும்போது, "அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதி உடனே இத்தீர்ப்பை அமுல்படுத்தி 6-7-2010 அன்று அரசாணை எண். 142, சமூக நலத்துறை சார்பாக வெளியிட்டார். அவ்வுத்தரவின் மூலம் கிட்டத்தட்ட 25 ஆயிரம் தலித் பெண்களுக்கு இட ஒதுக்கீடு மூலம் சத்துணவு பணிகளில் வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது" என்றும் மனம் திறந்து குறிப்பிட்டிருக்கிறார்.

பதினைந்து தலைப்புகளில் நீதிபதி சந்துரு அவர்கள், தான் வெளியிட்ட தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி எழுதியிருப்பதோடு, ஒவ்வொரு தீர்ப்புக்கும், அம்பேத்கர் சொன்ன தத்துவங்களை இணைத்து இந்த நூலின் தலைப்பான "அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்" என்பதை நிலைநாட்டியிருக்கிறார். அம்பேத்கர் சொல்லியிருக்கின்ற அந்தக் கருத்துகள் தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின் கருத்துகளோடு ஒத்த கருத்துகள் என்பதையும் அந்த கருத்துகளின் அடிப்படையில்தான் நீதிபதி சந்துரு அவர்கள் இந்தத் தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார் என்பதையும் இந்த நூலைப் படித்தபோது நான் புரிந்து கொண்டேன்.

"சாதி மறுப்புத் திருமணங்கள்" என்பது ஒரு கட்டுரைக்கான தலைப்பு. சாதி மறுப்புத் திருமணங்களுக்கெதிராக சமூகத்தில் நடைபெற்றுவரும் கொடுமைகளைப் பற்றி உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்து ஒன்று அந்தக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளது. அந்தக் கருத்து :-

"மனுதாரர் வயது வந்தவர் என்பதிலும், சம்பந்தப்பட்ட காலத்தில் அவர் வயது வந்தவரே என்பதிலும் எவ்வித விவாதமும் இல்லை. எனவே, தான் விரும்பிய எவரையேனும் திருமணம் செய்து கொள்ளவோ அல்லது விரும்பியவருடன் வாழ்வதற்கோ அவளுக்கு சுதந்திரம் உண்டு. இந்துத் திருமணச் சட்டப்படியோ அல்லது வேறு எந்தச் சட்டப்படியோ சாதிக் கலப்புத் திருமணம் செய்துகொள்ளத் தடை ஏதுமில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்கள் (சாதிக் கலப்புத் திருமணம் செய்து கொண்ட ஜோடி) எந்தக்

குற்றமும் செய்ததாக எங்களுக்குத் தெரியவில்லை. தங்களின் சகோதரி சாதி விட்டுத் திருமணம் செய்து கொண்டாள் என்று கோபம் அடைந்ததால்; தூண்டுதலின் பேரில் தொடரப்பட்ட குற்றவியல் வழக்கு முற்றிலும் நீதிமன்ற நடைமுறையையும், நிர்வாக இயந்திரத்தையும் துஷ்பிரயோகம் செய்வதாகும். வழக்குத் தொடுத்த அந்தச் சகோதரர்களின் சட்டவிரோத மற்றும் அடக்குமுறையான செயல்களுக்கு எதிராக, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, பெண்ணின் கணவர் மற்றும் அவரின் உறவினர்களின்மீது காவல் துறை நடவடிக்கை எடுத்திருப்பது எங்களுக்குப் பெரும் வேதனை அளிக்கிறது. தங்கள் சாதியை விட்டுத் திருமணம் செய்து கொள்ளும் இளம் ஆண்கள், பெண்களுக்கு எதிராக தொல்லைகள், பயமுறுத்தல்கள், வன்முறை போன்ற பல சம்பவங்கள் நடப்பது எங்கள் கவனத்திற்கு வந்து கொண்டிருப்பதால் இதுகுறித்துப் பொதுவான கருத்துகளைக் கூறுகிறோம். சரித்திரத்தில் சிக்கலான காலகட்டத்தை நாடு கடந்து சென்று கொண்டிருக்கும் வேளையில் இவ்வழக்கு போன்று பொதுமக்கள் நலன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் நீதிமன்றம் வாளாயிருக்க முடியாது. சாதி முறை என்பது நாட்டின் மீதான ஒரு சாபக்கேடாகும். இதனை எவ்வளவு சீக்கிரம் அழிக்கிறோமோ அவ்வளவு சீக்கிரம் அழிப்பது நல்லது. சாதிக் கலப்புத் திருமணம் என்பது சாதி முறையை ஒழிக்க வழிவகுக்கும் என்பதால் அவை நாட்டு நலனுக்கு ஆனவையாகும். இது ஒரு சுதந்திர ஜனநாயக நாடு. ஒருவர் வயது வந்த நிலை அடைந்ததும், அவனோ அவளோ தாம் விரும்பும் எவரையும் மணம் செய்து கொள்ளலாம்.

சாதிக் கலப்புத் திருமணம் அல்லது மதக்கலப்புத் திருமணம் செய்து கொண்டவரைப் பயமுறுத்துவதோ, வன்முறை விளைவிப்பதோ, அல்லது வன்முறை விளைவிக்கத் தூண்டுவதோ, இன்னல்கள் தருவதோ கூடாது. சாதிக் கலப்பு, மதக் கலப்புத் திருமணம் செய்து கொண்டால் அந்த ஜோடியை யாரும் துன்புறுத்தவோ, பயமுறுத்தல் அல்லது வன்முறைக்கு ஆளாக்கப்படாமலோ பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நாடு முழுவதும் உள்ள நிர்வாகத்திற்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும் உத்தரவிடுகிறோம். பயமுறுத்தல், துன்புறுத்தல், வன்முறை விளைவித்தல் போன்ற செயல்களில்

எவரேனும் தாமாக ஈடுபட்டாலும், அல்லது தூண்டுதலின் பேரில் நிகழ்த்தப்பட்டாலும், அத்தகையோர் மீது குற்றவியல் வழக்குப் பதிவுசெய்து மேலும் சட்டத்தில் உள்ள வழிவகைப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறோம்."

உச்ச நீதிமன்றம் இவ்வாறு கடுமையாகத் தெரிவித்துள்ள கருத்தை நீதிபதி சந்துரு அவர்கள் இந்த நூலில் எடுத்துக்காட்டியிருக்கிறார். இந்தக் கருத்தினை அவர் மேற்கோள் காட்டியிருப்பது அவர் வழங்கிய ஒரு தீர்ப்பினையொட்டித்தான். சாதி மறுப்புத் திருமணத்திற்கு உதவப்போனவர் மீது கிரிமினல் வழக்கு பதிந்து, அது நிலுவையில் இருந்ததனால், காவல் துறையில் அவருக்கு வேலை மறுக்கப்பட்டது. சிவனேசன் என்பவரின் நண்பர் சுதாகர். சுதாகருக்கும், அவருடன் படித்த அறச் செல்வி என்பவருக்கும் சாதி மறுப்புத் திருமணம் நடந்தது. காதல் திருமணம். திருமணத்தைப் பதிவுசெய்ய சாட்சியாகப் போனவர் சிவனேசன். அறச் செல்வியின் அண்ணியார் உள்ளூர் காவல்துறை உதவி ஆய்வாளர். அவரது முயற்சியால் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுச் சுதாகரும், சிவனேசனும் சிறையிலே அடைக்கப்பட்டனர். சிவனேசன் வழக்கு நிலுவையிலே இருக்கும்போது, இரண்டாம் நிலை காவலர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது குற்றப் பின்னணியை விசாரித்து அனுப்பிய அறிக்கையில், இவ்வழக்கு நிலுவையில் இருப்பதைப் பற்றிக் கூறப்பட்டிருந்ததால், அவருக்கு வேலை மறுக்கப்பட்டது. அதை எதிர்த்துத்தான் சிவனேசன் ரிட் மனு தாக்கல் செய்தபோது, அந்த வழக்கு நீதிபதி சந்துருவிடம் வந்ததால், சாதி மறுப்புத் திருமணத்தைப் பற்றி உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்தை மேற்கோள்காட்டி, சிவனேசனுக்கு வேலை அளிக்க மறுத்தது தவறு என்று தீர்ப்பு அளித்ததை அந்தக் கட்டுரையில் நீதிபதி சந்துரு எடுத்துக்காட்டியிருக்கிறார்.

சாதி மறுப்புத் திருமணங்கள் பற்றித் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் எடுத்துக் கூறி வரும் கருத்துகளுடன் ஒத்துப் போகும் ஒரு கருத்து இது என்பதால், இந்தக் கட்டுரை என்னைக் கவர்ந்தது.

"வன்கொடுமை இழைத்த காவலர்களுக்கு நிவாரணம் மறுப்பு" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில்தான் அளித்த இரண்டு மூன்று தீர்ப்புகளை நீதிபதி சந்துரு இந்த நூலில் எடுத்துக்காட்டியிருக்கிறார். குறிப்பாகத் தர்மபுரி மாவட்டத் திலுள்ள வாச்சாத்தி என்ற ஆதிவாசி கிராமத்தில், 1995ஆம் ஆண்டு நுழைந்த காவல் மற்றும் வனத்துறை அதிகாரிகள், அங்கிருந்த ஆதிவாசி மக்களை மிகக் கொடூரமாகத் தாக்கினர். பல பெண்கள் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டார்கள். அதன் பிறகு அமைக்கப்பட்ட நீதிபதி பானுமதி தலைமையிலான விசாரணைக் கமிஷன், அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருப்பதாகக் கூறி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது குற்றவியல் வழக்குகளும், துறை ரீதியான விசாரணையும் நடத்த பரிந்துரை செய்தது. வழக்கு சி.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. குற்றவியல் வழக்கு முடிவதற்கு முன்னால் தங்கள் மீது துறை விசாரணை நடத்தக்கூடாது என்று 12 காவலர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்கள். அவர்களின் மனுக்களைத் தள்ளுபடி செய்த நீதிபதி சந்துரு அவர்கள் தனது தீர்ப்பில், "Considering that the petitioners were charged for grave offences such as raping tribal women, the question of stalling the departmental action cannot indefinitely be postponed. In the light of the above factual matrix and the legal precedents cited above, this writ petiton stands dismissed" என்று தெரிவித்ததையும் இந்த நூலில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இதுபோலவே 22-11-2011 அன்று இரவு திருக்கோவிலூர் தாலுக்காவில், மணம்பூண்டி புறவழிச்சாலையில் நான்கு தலித் பெண்கள் தங்களது வேலையை முடித்துச் செல்கையில், அங்கு ரோந்துக்கு வந்திருந்த திருக்கோவிலூர் காவல் நிலைய ஆய்வாளர், சிறப்பு துணை ஆய்வாளர், தலைமைக் காவலர் மற்றும் இரண்டு காவலர்கள் சேர்ந்து அவர்களைப் பலவந்தப்படுத்தி வன்புணர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்கள் அளித்த புகாரின் பேரில் விழுப்புரம் சரக துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்தார். அவர்கள் தங்களுடைய தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்ய உயர் நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தபோது நீதிபதி சந்துரு அவர்கள்,

அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்து அளித்த தீர்ப்பையும் இந்த நூலிலே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

மேலும் நீதிபதி சந்துரு அவர்கள் வழங்கிய பல தீர்ப்புகளை, குறிப்பாகத் தலித் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளிலே அவர் அளித்த தீர்ப்புகளை உள்ளடக்கி இந்த நூல் அமைந்திருப்பதை நான் முழுவதும் படித்ததோடு, அந்தக் கருத்துகள் உனக்கும் தெரிய வேண்டுமென்பதற்காகவே இந்தக் கடிதத்தில் இவற்றைக் குறிப்பிட்டுள்ளேனே தவிர வேறு எந்த உள்நோக்கமும் அல்ல. இத்தகைய தீர்ப்புகளை வழங்கிய நீதிபதி சந்துரு அவர்கள் தி.மு. கழக அரசையும், ஏன் என்னையும்கூட விமர்சனம் செய்தவர் என்றுகூடச் சொல்வார்கள். இருந்தபோதிலும் இந்த நூலில் அவர் எழுதிய தீர்ப்புகளைப் பாராட்டுகின்ற வகையில்தான் இதனை எழுதினேன்.

அன்புள்ள,

மு.க.

2-7-2014

3896. வருமான வரி வழக்கில் புது திருப்பம்; ஏன்? எவ்வாறு?

உடன்பிறப்பே,

30-6-2014 அன்று சென்னை எழும்பூர் 1-வது பொருளாதார குற்றப் பிரிவு நீதிமன்றத்தில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதும், அவருடைய உடன்பிறவாச் சகோதரி சசிகலா மீதும், வருமான வரித் துறை தொடர்ந்த ஒரு வழக்கு நீதிபதி தெட்சிணா மூர்த்தி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட புதிய மனு ஒன்று ஏற்கப்பட்டு, விசாரணை ஜூலை 24ஆம் தேதிக்கு - ஆம் 24 நாட்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது.

ஜெயலலிதா மற்றும் சசிகலா பங்குதாரர்களாக இருந்த சசி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் வருமான வரிக் கணக்குகளை 1991-92 மற்றும் 1992-93ஆம் ஆண்டுகளில் தாக்கல் செய்யவில்லை. 1993-94ஆம் ஆண்டுக்கு, ஜெயலலிதா மற்றும் சசிகலாவின் தனிப்பட்ட வருமானங்களுக்கான ஆவணங்களையும் வருமான வரித்துறையிடம் அவர்கள் தாக்கல் செய்யவில்லை. இதற்காக அவர்கள் மீது 1996இல் வருமான வரித் துறையினர் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள முதலாவது பொருளாதார குற்றப்பிரிவு நீதிமன்றத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நிலுவையிலே உள்ளது. 30-6-2014 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதா, சசிகலா மற்றும் சசி எண்டர்பிரைசஸ் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், வருமான வரி தாக்கல் செய்யாதது தொடர்பாகத் துறை ரீதியான விசாரணைக்கு வருமான வரித் துறையிடம் ஒரு மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அது வருமான வரித் துறையில் நிலுவையில் உள்ளதாகவும், எனவே இந்த விசாரணையைத் தள்ளிவைக்க வேண்டுமென்றும்

கோரியிருக்கிறார்கள். வருமான வரித் துறை வழக்கறிஞர் அந்த மனு பரிசீலனையிலே உள்ளது என்று கூறியிருக்கிறார். இந்த நிலையில்தான் வழக்கு விசாரணையை வரும் 24ஆம் தேதிக்குத் தள்ளிவைத்துள்ளார்.

வருமான வரித் துறை சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ராமசாமி இதுபற்றிச் செய்தியாளர்களிடம் கூறும்போது, "முதலமைச்சர் சார்பிலும், சசிகலா நடராஜன் சார்பிலும், வருமான வரித்துறை இயக்குனர் ஜெனரலிடம் மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், கம்பவுண்டிங் முறையில் அதாவது வருமான வரி பாக்கி உட்பட அனைத்துக் கட்டணங்களையும் செலுத்தி, வருமான வரி பிரச்சினையைத் தீர்க்கத் தயார் என்று அந்த மனுக்களில் கூறியுள்ளதாகவும், அந்த மனுக்கள் மீது வருமான வரித்துறை என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பது தெரிந்த பிறகு, இந்த வழக்கு விசாரணையைத் தொடரலாம் என்றும், அதுவரை வழக்கு விசாரணையைத் தள்ளிவைக்க வேண்டு மென்று தெரிவிக்கப்பட்டது. நான் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதனால் வழக்கு விசாரணையை மாஜிஸ்திரேட்டு தள்ளி வைத்துள்ளார்" என்று வருமான வரித் துறை வழக்கறிஞர் தெரிவித்திருக்கிறார்.

இந்த வழக்கு பற்றி 20-4-2014 அன்று "நீதியே! நீ இன்னும் இருக்கின்றாயா?" என்ற தலைப்பில் "முரசொலி"யில் ஒரு கடிதம் தீட்டியிருந்தேன்.

ஜெயலலிதாவும், சசிகலாவும் தங்களை இந்த வழக்குகளிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரி மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு, அதனை நடத்தாமல் காலம் கடத்தியதைத் தொடர்ந்து, வருமான வரித்துறை உயர் நீதிமன்றம், மற்றும் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. 4-9-2006 அன்று உச்ச நீதிமன்றம் நான்கு வாரக் காலத்திற்குள் விசாரணை நீதிமன்றத்தில் ஜெயலலிதாவும் சசிகலாவும் தங்களை விடுவிக்க வேண்டுமென்று தொடுத்த வழக்கை முடிவு செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டனர். அவ்வாறே முதன்மை மாநகர மாஜிஸ்திரேட் அவர்கள் விசாரித்து ஜெயலலிதாவின் மனுவினைத் தள்ளுபடி செய்தார். அதாவது 1997ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு தங்களை அந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று

குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மனு தாக்கல் செய்து, அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

எழும்பூர் மாஜிஸ்திரேட்; ஜெயலலிதா தரப்பினரின் விடுவிப்பு மனுவினைத் தள்ளுபடி செய்ததால், சென்னை உயர் நீதிமன்றத்தில் அதனை எதிர்த்து ஜெயலலிதா தரப்பினர் மேல் முறையீடு செய்து கொண்டனர். அந்த மேல் முறையீட்டு மனுவும் 2-12-2006 அன்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் இந்த ஆணையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதாதரப்பினர் மேல் முறையீடு செய்து கொண்டார்கள். அந்த மேல் முறையீட்டினை விசாரித்த உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவில் குறுக்கிடுவதற்கு எந்தவிதமான அடிப்படையான காரணமும் இல்லை; மேல் முறையீட்டினை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு அந்த வழக்கில் எந்தவிதமான நியாயமும் இல்லை என்று தெரிவித்ததோடு, விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கினை நான்கு மாத காலத்திற்குள் விசாரணை செய்து முடிக்குமாறு 30-1-2014 அன்று தீர்ப்பளித்தது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டது 1997ஆம் ஆண்டு. மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அது 2006ஆம் ஆண்டு அதாவது 9 ஆண்டுகளுக்குப் பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது 2-12-2006. அதை எதிர்த்து ஜெயலலிதா 2006ஆம் ஆண்டு செய்து கொண்ட அப்பீலை, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு உச்ச நீதிமன்றம் கடந்த 30-1-2014இல் தள்ளுபடி செய்ததோடு, நான்கே மாதங்களில் விசாரணையை நடத்தி முடிக்குமாறு ஆணை பிறப்பித்தது. அவ்வாறு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து நான்கு மாதங்கள் முடிந்து விட்டன. ஆனால் விசாரணை முடிந்து விட்டதா என்றால் இல்லை.

உச்ச நீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பில், "குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு குற்றம் சாட்டிய வருமான வரித் துறையின் மீதா அல்லது குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா மற்றும் சசிகலா மீதா என்பது தான் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். இந்த வழக்கைப் பொறுத்தவரையில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு, உள்நோக்கம் இருந்திருப்பதை

யூகிக்க முடிகிறது என்பதால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்தான்; தாங்கள் எவ்வித அய்யப்பாட்டிற்கும் இடமின்றி நிரபராதிகள் என்பதை நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எத்தகைய சூழலில் தாங்கள் வருமான வரி கணக்கைத் தாக்கல் செய்யவில்லை என்பதை விசாரணை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருப்பதில் இருந்து, இந்த வழக்கில் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்க வேண்டிய கடப்பாடு ஜெயலலிதாவுக்கும், சசிகலாவுக்கும் தான் உள்ளது என்பதை மனதிலே கொள்ள வேண்டும்.

உச்சநீதிமன்றம் இப்படியெல்லாம் எழுதி; நான்கே மாதங்களில் இந்த வழக்கினை விசாரித்து முடிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்த அந்த வழக்கில்தான்; அதே உச்ச நீதிமன்றம் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா பிரச்சாரம் செய்ய வேண்டியிருப்பதால் 3 மாதங்களுக்கு விசாரணையைத் தள்ளி வைத்ததுடன், (அப்போது நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரப் பணிகள் முடிவடைய நான்கு நாட்கள் மட்டுமே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது) விசாரணை நீதிமன்றம் குறிப்பிடும் நாளில் ஜெயலலிதாவும், சசிகலாவும் தவறாமல் ஆஜராக வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பாவது மதிக்கப்பட்டதா? ஜெயலலிதாவும், சசிகலாவும் தவறாமல் விசாரணை நீதிமன்றம் குறிப்பிட்ட நாளில் ஆஜரானார்களா?

இதோ மேலும் ஒரு நிகழ்வு.. ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் 1993-94ஆம் ஆண்டுக்கான தங்களது வருமான வரி கணக்கைத் தாக்கல் செய்யாதது பற்றிய வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 24-2-2006 அன்று நீதிபதிகள் பி.என். அகர்வால், ஏ.கே. மாத்தூர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. ஜெயலலிதாவின் வக்கீல் அப்போது ஆறு வாரம் அவகாசம் வேண்டுமென்றார்.

அப்போது நீதிபதிகள் கூறியது என்ன தெரியுமா?

"நீதி பரிபாலன முறையையே நீங்கள் கேலிக் கூத்தாக்கி வருகிறீர்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த நீதிமன்ற நடவடிக்கைகளை இழுத்துச்செல்ல முடியும்? குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313வது பிரிவின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராகி கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி

மற்றவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக நீங்கள் இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் என்ன பதில் மனுவை உங்களால் தாக்கல் செய்ய முடியும்? (ஜெயலலிதாவின் வழக்கறிஞரைப் பார்த்து) உங்கள் கட்சிக்காரர் நீதிமன்றத்தில் ஆஜராகி, கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நாங்கள் இன்றைக்கே ஆணை பிறப்பிக்க விரும்புகிறோம்."

Hindu dated 25-2-2006 Court pulls up Jayalalithaa

"You (Jayalalithaa) are making a mockery of the Judicial Process. How long you can drag the proceedings? You must set an example to others by presenting yourself in the court for questioning under section 313 cr. P.C. What counter affidavit you can file in this matter. We want to pass an order today itself directing your client to be present in the Court"

20-3-2014 அன்று இந்த வழக்கு எழும்பூர் முதலாவது பொருளாதார குற்றப் பிரிவு நீதிமன்றத்தில் இதே நீதிபதி திரு. ஆர். தெட்சிணாமூர்த்தி அவர்கள் முன்பாக விசாரணைக்கு வந்தது. வழக்கில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்ய வேண்டியிருப்பதால், ஏப்ரல் 3ஆம் தேதி ஜெயலலிதாவும் சசிகலாவும் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார். ஆனால் ஏப்ரல் 3ஆம் தேதி ஜெயலலிதாவும், சசிகலாவும் நேரில் ஆஜராகவில்லை. அவர்களுடைய வழக்கறிஞர், ஜெயலலிதா தேர்தல் பிரச்சாரத்தில் இருப்பதாகவும், சசிகலாவுக்கு முதுகுவலி மற்றும் சர்க்கரை நோய் என்றும் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்களிக்க வேண்டு மென்றும் கோரினார். அப்போது வருமான வரித் துறை வழக்கறிஞர் அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அந்த நிலையில் மாஜிஸ்திரேட் ஜெயலலிதாவும், சசிகலாவும் ஏப்ரல் 10ஆம் தேதி நேரில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டார். ஆனால் அன்றும் அவர்கள் ஆஜராகவில்லை. மே 19ஆம் தேதி அன்று வழக்கு விசாரணைக்கு வந்த போதும் ஜெயாவும் சசியும் ஆஜராகவில்லை. ஜூன் 3ஆம் தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவ்வாறு ஜூன் 3ஆம் தேதியன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வழக்கை விசாரித்த நீதிபதி 9-6-2014 அன்று ஜெயலலிதாவும் சசிகலாவும் நீதிமன்றம் வர வேண்டுமென்று உத்தரவிட்டார். ஆனால் அவர்கள் ஆஜராகவில்லை. நீதிபதி தெட்சிணாமூர்த்தி

அவர்கள் ஜூன் 30ஆம் தேதி ஜெயலலிதாவும் சசிகலாவும் கண்டிப்பாக விசாரணைக்காக நேரில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டார். அந்த உத்தரவாவது நடைமுறைக்கு வந்ததா என்றால் இல்லை.

இப்படியெல்லாம் நீதிமன்ற உத்தரவுகளை அலட்சியப் படுத்தியவர்தான் ஜெயலலிதா. அவர் மீதான வழக்கிலேதான் நேற்றையதினம் விசாரணை நடைபெற்று 24ஆம் தேதிக்கு விசாரணை தள்ளி வைக்கப்பட்டுள்ளது. துறை ரீதியாக வழக்கை முடித்துக்கொள்ளத் தற்போது மனு தாக்கல் செய்திருப்பதாகவும், அந்த மனு பரிசீலனையிலே இருப்பதாகவும் கூறி வழக்கு விசாரணை தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

15-7-1998 அன்றே "ஸ்டேட்ஸ்மேன்" நாளேடு வெளியிட்ட ஒரு செய்தியில், "மத்திய அரசுடன் ஜெயலலிதா செய்து கொண்டுள்ள தற்காலிக சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து, அவர்மீது உள்ள வருமான வரி மற்றும் இதர வழக்குகளில் இருந்து அவரை விடுவிக்க வாஜ்பாய் அரசு வழிவகைகளை மேற்கொண்டுள்ளது. ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளை மேற்பார்வையிட்டு வந்த ஆணையாளர் எஸ்.சி. ஜாதவ் மும்பையில் சிறந்த பதவி எனக்கருதப்படும் ஒரு பதவிக்கு மாற்றப்பட்டார். அவருடைய பதவியை கே. கோபாலன் என்பவர் ஏற்றுக்கொண்டார். நேர்மையுடன் செயல்படக் கூடியவரான பி.கே. ஸ்ரீதரன் வேறு ஒரு முக்கிய பொறுப்புக்கு மாற்றப்பட்டார். அவரது இடத்துக்கு என்.பி. திரிபாதி என்பவர் நியமிக்கப்பட்டார். இப்படிப்பட்ட மாறுதல்கள் மூலம் ஜெயலலிதாவும், சசிகலாவும் அவருடைய உறவினர்களும் ஒரு தற்காலிக விடுதலையை அடையக் கூடும் என்று வருமான வரித்துறை அதிகாரிகள் குற்றம் சாட்டினர். ஜெயலலிதாவை சமாதானப்படுத்தியதன் மூலம் பா.ஜ.க. அரசு தனக்குத் தேவையான ஆதரவைப் பெற்றது. அதற்குப் பதிலாக தமிழ்நாட்டில் தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டுள்ளனர்" என்று எழுதியிருந்தது.

இன்னும் சொல்லப்போனால், பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைத்து, மத்திய ஆட்சியில் இருந்தபோது, நிதியமைச்சராக இருந்த பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான யஷ்வந்த் சின்கா அவர்கள் ஒரு புத்தகம்

எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தின் பெயர் "Confessions of a Swadeshi Reformer" (சுதேசி சீர்திருத்தவாதியின் வாக்குமூலம்). அந்த நூலில் பக்கம் 226இல், "In Chennai, after completing my programme in the forenoon, I quitely left for Jayalalitha's residence. Fortunately there were no photographers waiting there. I was rushed into the living room, where she waited for me. We chatted for a while, and then went for lunch. There were only three of us for lunch - Jayalalitha, Dilip Roy and myself. The lunch was delicious, served by liveried bearers wearing white gloves; everything was done in great style. As I was about to leave, Jayalalitha handed me an envelop. Later when I opened it, I found it was a note about her income tax cases. I met the Prime Minister a few days later and reported the details of my meeting with Jayalalitha in Chennai but forgot to mention the envelope. After I had finished my narration, Vajpayee innocently asked me about the envelope she had given to me and its contents. I was taken aback. Obviously, the Prime Minister of India gets to know everything, if he so wishes" (சென்னையில் காலையில் என்னுடைய நிகழ்ச்சிகள் முடிந்தவுடன், நான் ஜெயலலிதா வீட்டிற்குச் சென்றேன். நல்லவேளையாக அங்கே எந்த புகைப்படக்காரரும் காத்திருக்கவில்லை. ஜெயலலிதா இருந்த அறைக்கு நான் சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, மதிய உணவு அருந்தினோம். மூன்று பேர் மட்டுமே சாப்பிட்டோம் - ஜெயலலிதா, திலிப் ரே (நிலக்கரித் துறை இணை அமைச்சர்), நான். சாப்பாடு நன்றாக இருந்தது. நான் புறப்படும்போது என்னிடம் ஜெயலலிதா ஒரு கவரைக் கொடுத்தார். பிறகு நான் அதனைத் திறந்து பார்த்த போது அவருடைய வருமான வரி வழக்குகள் பற்றிய குறிப்புகள் இருந்தன. சில நாட்கள் கழித்து நான் பிரதமரைச் சந்தித்தேன். சென்னையில் ஜெயலலிதாவுடன் நடந்த பேச்சுவார்த்தை விவரங்களை அவரிடம் தெரிவித்தேன். ஆனால் ஜெயலலிதா கொடுத்த கவர் பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். அப்போது பிரதமர் (வாஜ்பாய்) "ஜெயலலிதா கொடுத்த கவரில் என்ன விஷயங்கள் இருந்தன?" என்றார். நான் திடுக்கிட்டுப் போனேன். நாட்டில் நடக்கும் விஷயங்களைத் தெரிந்து கொள்ள பிரதமர் நினைத்தால் அது முடியுமென்பதை நான் அறிந்துகொண்டேன்). இவ்வாறு யஷ்வந்த் சின்கா, முன்னாள் மத்திய நிதியமைச்சர், தான் எழுதிய நூலிலே குறிப்பிட்டிருக்கிறார்.

இது 1998இல் அ.தி.மு.க., பா.ஜ.க.வுடன் கூட்டணியில் அங்கம் வகித்தபோது நடைபெற்ற ஒரு சம்பவம். அதுவும் வருமான வரி வழக்கு குறித்த சம்பவம். அப்போது மத்திய நிதி அமைச்சரை ஜெயலலிதா அவருடைய வீட்டிற்கே அழைத்து உணவளித்து பரிந்துரை கவரையும் கொடுத்தார் என்பதை முன்னாள் மத்திய நிதி அமைச்சரே தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். தற்போது என்ன நிலை? இதற்கு முன்பு பிரதமர் மன்மோகன்சிங் தமிழகம் வந்தபோது, அவரை வரவேற்கச் செல்லாத தமிழக முதல்வர் ஜெயலலிதா தற்போது விமான நிலையத்திற்குச் சென்று இன்றைய பிரதமரை வரவேற்கிறார், வழி அனுப்புகிறார். பதினைந்து நிமிடம் தனித்து உரையாடுகிறார். அதற்குப் பிறகு தான் எழும்பூர் நீதிமன்றத்தில் வருமானவரித் துறை சார்பாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள மனு கொடுத்து, அது பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். வருமான வரித் துறை வழக்கறிஞரும் அதற்கு எதுவும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று பேட்டி அளிக்கிறார். நடக்கப்போவது என்ன? பா.ஜ.க. அரசு என்ன செய்யப் போகிறது? ஏற்கனவே பா.ஜ.க.வோடு அ.தி.மு.க. கூட்டணி அமைத்து, பல்வேறு பரிந்துரைகளையும், நிபந்தனைகளையும் கூறி, பா.ஜ.க. ஆட்சி கவிழவே காரணமாக இருந்த படிப்பினையை நினைவிலே கொள்ளப்போகிறதா? பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. உறவினை முறித்துக்கொண்ட அன்று தான் நிம்மதியாக இன்றிரவு தூங்குவேன் என்று கூறிய முன்னாள் பிரதமர் வாஜ்பய் அவர்களின் அறிவுரையை பா.ஜ.க.வும், அதன் பிரதமரும் மனதிலே கொள்வார்களா? இந்த வேடிக்கைகளைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு.க.

3-7-2014

3897. ஒரே ரகுபதி தலைமையில், ஒன்பது விசாரணைகளா?

உடன்பிறப்பே,

சென்னையில் 11 மாடிக் கட்டிடம் இடிந்து, இதுவரை 61 பேர் பலியான சம்பவம் குறித்து, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நீதிபதி ரெகுபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமித்திருக்கிறார். இதுபோல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றபோது, ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால், அப்போது ஜெயலலிதா எப்படியெல்லாம் அறிக்கை விட்டிருப்பார்! பத்து பேர் இறந்து விட்டார்கள் என்ற செய்தி வந்தவுடன், "மைனாரிட்டி ஆட்சியின் முதலமைச்சர், கருணாநிதி பொறுப்பேற்று உடனடியாக ராஜினாமா செய்துவிட்டு வெளியேற வேண்டும்" என்று கண்டன மழை பொழிந்திருப்பார். ஆர்ப்பாட்டம், மறியல் என்று ஊரையே நிலை குலையச் செய்திருப்பார். நாளேடுகளும் அவருக்கு "நாமாவளி" பாடியிருக்கும்! ஆனால் தற்போது சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நபர் கமிஷன் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்.

அரசுக்கு ஆதரவான ஜூ.வி. (6-7-2014) இதழே "மாபெரும் மனிதப் பேரழிவு நடந்திருக்கிறது சென்னையில். மொத்த இடத்தையும் தூர்த்து வாரும்போது இறந்தவர் எண்ணிக்கை மலைக்க வைக்கக் கூடியதாக இருக்கலாம். பணத்தாசை பிடித்த அதிகாரிகள், பேராசை பிடித்த பில்டர்கள் சேர்க்கையால் விலை மதிக்க முடியாத மனித உயிர்கள் பலியாகி இருக்கின்றன. காற்று, மழை, இடி, மின்னல்... என்று இயற்கையைக் குறை சொல்லித் தப்பிக்கவே அதிகாரத்தில் உள்ளவர்கள் முயற்சிக்கிறார்கள். அதன் மூலமாகத் தங்களது சுயநலச் செய்கைகளை மறைக்கிறார்கள். ஆனால், பிணவாடையை மிஞ்சியதாக ஊழல் வாடையை வெளியில் கொண்டு வந்து விட்டது மவுலிவாக்கம் சம்பவம்" என்று தொடங்கி நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறது.

நல்லவேளையாக அந்தக் கட்டிடம் கட்டப்பட்டு வருகின்ற நிலையிலேயே இடிந்துள்ளது. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, அதை வாங்கியவர்கள் எல்லாம் அங்கே குடியேறிய பின்னர் இதே சம்பவம் நடைபெற்றிருக்குமேயானால் எத்தனை பேர் மாண்டு மடிந்திருப்பார்கள்? எண்ணிப் பார்க்கவே முடியவில்லை! அதைப் பற்றியெல்லாம் நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற அரசு எண்ணிப் பார்க்கிறதா? செயற்குழு நடத்தி முதலமைச்சரைப் பாராட்டி ஏழு பாராட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றி மகிழ்ந்திருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சியிலே 61 பேர் மடிந்து மண்ணாகியிருக்கிறார்களே, அதற்காக அந்த ஆட்சியின் முதல்வரைப் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டியதுதானே?

சென்னையில், தரைத் தளத்துடன் கூடிய இரண்டு தளத்துக்கு மேற்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட வேண்டுமானால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (சி.எம்.டி.ஏ.) அப்ரூவலைப் பெற வேண்டும் என்பது விதி. இந்த விதியை நடைமுறைப்படுத்துவதற்குப் பல்வேறு துணை விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளை யெல்லாம் சி.எம்.டி.ஏ. அதிகாரிகள் முறையாக நடைமுறைப்படுத்துகிறார்களா? இந்தக் கட்டிடத்திற்கு ஒப்புதல் கொடுத்தபோது, அந்தத் துறையின் அமைச்சர் யார்? 61 பேர் இறந்திருக்கிறார்களே, இதற்குள் அரசாங்கம் அந்த அமைச்சர் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? வேறொரு ஆட்சி என்றால், முதலமைச்சரே பதவி விலக வேண்டுமென்று கூறியிருக்க மாட்டார்களா? இந்தக் கட்டிடத்திற்கு அனுமதி கொடுத்த கோப்பில் துறையின் அமைச்சர் கையெழுத்திட்டிருக்கிறாரா இல்லையா?

சி.எம்.டி.ஏ. அனுமதி கொடுத்த பிறகுகூட, கட்டிடம் கட்டும்போது பிளானிங் பர்மிஷனில் கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் கட்டடம் கட்டப்படுகிறதா என்று ஒவ்வொரு ஸ்டேஜிலும் சி.எம்.டி.ஏ. அதிகாரிகள் சென்று கவனிக்க வேண்டும். அப்படிக் கவனித்தார்களா? அல்லது ஒவ்வொரு முறையும் வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு வந்து விட்டார்களா?

இந்தக் கட்டிட அனுமதிக்காகத் தரப்பட்ட விண்ணப்பத்தில் நிலத்தின் மொத்த பரப்பளவு 1 லட்சத்து 11 ஆயிரத்து 684 சதுர அடி என்று கூறப்படுகிறது. அதாவது 10,375.7 சதுர

மீட்டர். இதில், திறந்தவெளி இடம், பூங்கா, நீச்சல்குளம் போன்றவற்றுக்கான இடங்கள் போக, 3,986.17 சதுர மீட்டரில், 11 தளங்கள் கொண்ட இரண்டு கட்டிடங்களைக் கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டிருக்கிறது. இதற்கான மனு முதலில் பிளானிங் பெர்மிஷன் செக்ஷனில் கொடுக்கப்பட்ட போதே, மண் வள ஆதார உறுதிச் சான்றிதழ் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் என்.ஓ.சி.க்கள் எதுவுமே இணைக்கப்படவில்லையாம். இந்தக் கட்டிடத்தைக் கட்டிய நிறுவனம், முதலில் துறையின் அமைச்சரைச் சந்தித்துப் பேசிவிட்டுத்தான் இந்தப் பணியையே தொடங்கியதாகவும், அதனால்தான் விண்ணப்பிக்கும்போதே இணைக்கப்பட வேண்டிய முக்கியமான சான்றிதழ்களை இணைக்காமலே விண்ணப்பித்தார்கள் என்றும் சொல்லப்படுவது உண்மைதானா?

அதன் பிறகு மண்வள ஆதார உறுதிக்கான சான்றிதழை யாரோ ஒரு பொறியாளரிடம் பெற்று அதனைத் தாக்கல் செய்துள்ளார்கள். இந்தக் கட்டிடத்திற்கு ஒப்புதல் தருவது பற்றிக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, வரை படத்தில் உள்ளதைப் போலச் சாலையின் அகலம் இல்லை, கட்டிடத்தின் பக்கவாட்டுப் பகுதியிலும் போதுமான காலி இடம் விடப்படவில்லை என்றெல்லாம் பேசப்பட்டபோதிலும், துறையின் அமைச்சர், அதற்கான விதிகளைத் தளர்த்தலாம் என்று தெரிவித்திருப்பதாகக் கூறி, அவ்வாறே முடிவெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதுவும் உண்மைதானா?

3-6-2013 அன்றுதான் இந்த நிறுவனத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஓராண்டு காலமாகக் கட்டிடம் கட்டப்பட்டு வரும் நிலையில் சி.எம்.டி.ஏ. அதிகாரிகள் யாராவது அந்த இடத்தை நேரில் சென்று பார்த்து ஆய்வு நடத்தினார்களா? இந்த இடத்தில் கட்டிடப் பணிகள் தொடங்கப்பட்ட போதே, அந்தப் பகுதியைச் சேர்ந்த சில சமூக சேவகர்கள், ‘‘அந்த இடம் களி மண் பூமி, அங்கே பல அடுக்கு மாடிக் கட்டிடம் கட்ட அனுமதி கொடுக்காதீர்கள், கொடுத்த அனுமதியை ரத்து செய்யுங்கள்’’ என்று புகார் கடிதங்கள் எழுதியதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா இல்லையா?

இதையெல்லாம் மீறி அரசு அனுமதி கொடுத்துவிட்டு, அதை மறைக்க பிளானிங் அப்ரூவல்படி கட்டாமல் விதிகளை மீறிக்

கட்டிடம் கட்டியதாக, அந்த நிறுவனத்தின் மீது பழியைப்போட்டுத் தாங்கள் தப்பிக்க நினைக்கிறார்கள் என்று சொல்லப்படுவது சரியா இல்லையா?

இந்தக் கட்டிடம் இடிந்து விழுந்த பிறகு, அந்தக் கட்டிடத்திற்கான அனுமதி கொடுத்தது பற்றிய முழு அறிக்கையும் வேண்டுமென்று முதலமைச்சர் அரசு ஆலோசகரிடம் கேட்டதாகவும், சி.எம்.டி.ஏ.வின் தற்போதைய உறுப்பினர் செயலாளர் கடந்த காலத்தில் எவ்வாறு விதிகள் தளர்த்தப்பட்டு அனுமதி கொடுக்கப்பட்டது என்பதை விளக்கியதாகவும், கடந்த காலத்தில் அங்கே அதிகாரியாக இருந்தவரைக் கூப்பிட்டு விசாரித்த நேரத்தில் அந்த அதிகாரி அமைச்சரின் அறிவுரைப்படிதான் நடந்து கொள்ள வேண்டியிருந்தது என்று விளக்கமளித்ததாகவும் செய்திகள் ஏடுகளில் வந்ததெல்லாம் உண்மையா இல்லையா?

இவைகள் எல்லாம் உண்மையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பாகவே, தற்போது நியமித்துள்ள ஒரு நபர் குழு ஆய்ந்தறிந்து முடிவெடுப்பதற்கு முன்பாகவே, முதலமைச்சர் அந்த இடத்தைப் பார்த்துவிட்டு, "சி.எம்.டி.ஏ. அனுமதி கொடுத்ததில் எவ்விதத் தவறும் இல்லை, முறையாக அனுமதி கொடுத்துள்ளனர், கட்டிடம் கட்டிய நிறுவனம், விதிகளை மீறிக் கட்டிடத்தைக் கட்டியுள்ளது" என்றெல்லாம் செய்தியாளர்களிடம் கூறியது சரிதானா? முதலமைச்சர் இவ்வாறு கூறியிருக்கும்போது, அதை மீறி விசாரணை நீதிபதி எவ்வாறு வேறு கருத்தினைத் தெரிவிக்க முடியும்? விசாரணைக் கமிஷன் நீதிபதியை எவ்வாறு சொல்ல வேண்டுமென்று அறிவுறுத்துவதைப் போல ஆகாதா?

இடிந்த கட்டிடத்திற்காக விதிகளைத் தளர்த்தி இரண்டு அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டது ஏன் என்று "தினமலர்" நாளிதழ் எழுதியிருந்தது. அவ்வாறு எழுதியதற்காக அந்த இதழ் மீது அவசர அவசரமாக அரசு வழக்கறிஞர் வழக்குத் தொடுத்திருக்கிறார். அது உண்மையை எழுதும் பத்திரிகைகளை மிரட்டுவதாகாதா?

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அந்த இடத்தைப் பார்க்க வருவதாகச் செய்தி தெரிவித்ததும் மீட்புப் பணிகள் சில மணி நேரங்கள் நிறுத்தப்பட்டதாகவும் செய்தி வந்தது. அதைப் பற்றிச் செய்தியாளர்கள் முதலமைச்சரிடம் கேள்வி கேட்டபோது, அந்தக் கேள்வி அரசியல் உள் நோக்கம் கொண்டது என்று பதில்

கூற முதல்வர் மறுத்துவிட்டார் என்ற செய்தியும் ஏடுகளில் வெளிவந்தது.

மண் பரிசோதனை வல்லுனர் ஒருவர், "தற்போது விபத்து ஏற்பட்ட மவுலிவாக்கத்தில் 25 மீட்டர் ஆழம் வரை களிமண்தான் உள்ளது. எனவே 26 மீட்டர் ஆழத்தில் "பைல் பவுண்டேஷன்" முறையில் அஸ்திவாரம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி அமைத்திருந்தால் இதுபோன்று கட்டடம் சரிந்திருக்காது" என்றெல்லாம் கூறியிருக்கிறாரே, இதையெல்லாம் சி.எம்.டி.ஏ. அதிகாரிகள் கவனித்தார்களா?

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு மீட்புப் பணிகளைப் பார்வையிட்டபின் "இந்தக் கட்டிடம் விதிமுறை மீறிக் கட்டப்பட்டுள்ளது, எனவே சம்மந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கட்டிடம் இடிந்து விழுந்தது குறித்து, தேசிய மனித உரிமை ஆணையம் தானாக முன்வந்து, விசாரணைக்கு எடுத்துக் கொண்டதோடு, இதைப் பற்றி விளக்கம் அளிக்கும்படி தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட அந்த நோட்டீசில், "பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் வந்த விபத்து குறித்த தகவல்கள் அடிப்படையிலும், முதல்அமைச்சர் அளித்த பேட்டியின் அடிப்படையிலும் இந்த விவகாரத்தை தேசிய மனித உரிமை ஆணையம் கையில் எடுத்துள்ளது. இது ஒரு மிகப் பெரிய மனித உரிமை மீறல் என மனித உரிமை ஆணையம் கருதுகிறது. விபத்தில் உயிரிழந்த மற்றும் காயம் அடைந்தவர்களின் உரிமையைப் பறிக்கும் செயல் எனக் கருதி, விபத்து குறித்து இரண்டு வார காலத்திற்குள் தமிழக அரசு தனது விளக்கத்தை அளிக்க வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

"அடுக்கு மாடிக் கட்டடங்கள் தொடர்பான சட்ட விதி முறைகளில் விரைவில் மாற்றம் கொண்டு வரப்படும். அடுக்கு மாடிக்கட்டடங்கள் இடிந்து விழுந்தால் அதற்கு அதிகாரிகளே இனி பொறுப்பேற்கவேண்டி நேரிடும்" என்று மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் வெங்கைய நாயுடு அவர்கள் நேற்று கூறியிருக்கிறார்.

இந்த நிலையில்தான் தமிழக முதலமைச்சர் ஒரு நபர் விசாரணைக் குழுவினை அறிவித்திருக்கிறார். இந்தக் கட்டிடத்திற்கு அனுமதி அளித்தது தமிழக அரசின் கட்டுப்பாட்டிலே உள்ள சி.எம்.டி.ஏ. அதற்குப் பொறுப்பேற்றிருப்பவர் தமிழக அமைச்சரவையிலே உள்ள ஒருவர். அவர்கள் மீதே பல்வேறு குற்றச்சாட்டுகள், இந்தக் கட்டிடத்திற்கு அனுமதி கொடுத்த நிலையிலே இருக்கின்றபோது, தமிழக அரசே ஒரு நீதிபதியை நியமித்து இதைப் பற்றி விசாரணை நடத்துகிறேன் என்பது எந்த அளவுக்குப் பொருத்தமானது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

தற்போது ஜெயலலிதா அமைத்துள்ள ஒரு நபர் குழுவினால் எந்தவிதமான உண்மையும் வெளிவராது என்ற கருத்துப் பரவலாகச் சொல்லப்படுகிறது. முதலமைச்சர் ஒரு நபர் விசாரணைக் கமிஷனை அறிவித்திருக்கிறாரே தவிர, அந்தக் கமிஷன் எத்தனை நாட்களுக்குள் இதுபற்றி விசாரித்து அறிக்கை தர வேண்டுமென்று சொல்லாமல் விட்டிருப்பதிலிருந்தே, இது ஒரு கண் துடைப்புக் கமிஷன், அரசினர் தப்பித்துக் கொள்வதற்காக நியமித்துள்ள கமிஷன் என்றுதான் எண்ண வேண்டியுள்ளது.

2011ஆம் ஆண்டு தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி ஏற்பட்டவுடன், கழக ஆட்சிக் காலத்தில் சிறப்பாகக் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலக வளாகம் கட்டியதில் முறைகேடு இருப்பதாகக் கூறி, ஜெயலலிதா அதனை விசாரிக்க நீதிபதி தங்கராஜ் அவர்களை நியமித்தார். சில மாதங்களிலேயே அவர் அந்தப் பதவியிலிருந்து விலகியதால், நீதிபதி ரெகுபதி அவர்களைத்தான் அந்தப் பொறுப்பிலே நியமித்து, அந்தப் பணிகளையும் இவர் ஆற்றி வருகிறார். மேலும் இதே நீதிபதி ரெகுபதிதான், தற்போது குண்டர் தடுப்புச் சட்ட வழக்குகளை விசாரிக்கும் அமைப்பின் நீதிபதியாகவும் உள்ளார். அதுமாத்திரமல்ல; நுகர்வோர் நீதிமன்ற நீதிபதியாகவும் இதே ரெகுபதிதான் இருக்கிறார். இத்தனை பொறுப்புகளையும் வகித்து வரும் நிலையில்தான் தற்போது இந்த மவுலிவாக்கம் கட்டிடம் இடிந்தது பற்றியும் அவரையே விசாரணை நீதிபதியாக நியமித்திருப்பதில் இருந்தே, இந்த விசாரணை என்பது உள்நோக்கத்தோடு, கண்துடைப்பாக அமைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தக் கட்டிடம் இடிந்து, இதுவரை 61 பேர் பலியாகியிருக்கிறார்கள் என்றால் இதற்கு இந்த ஆட்சியினரும், முதல் அமைச்சரும், இந்தத் துறையின் அமைச்சரும்தான் பொறுப்பேற்க வேண்டும். இதிலே என்னென்ன முறைகேடுகள் நடைபெற்றன, அதனால் பயன்பெற்றவர்கள் யார் யார் என்ற தகவல்கள் எல்லாம் வெளிவர வேண்டுமென்றால், சி.பி.ஐ. விசாரணை மேற்கொள்வதே பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால் இந்த அரசு கண்துடைப்புக் கமிஷனை நியமித்துள்ளது என்றே கருதப்படும்.

அன்புள்ள,

மு.க.

5-7-2014

3898. இனி என்ன செய்யப் போகிறது இந்த அரசு?

உடன்பிறப்பே,

23.6.2014 அன்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட ஓர் அறிக்கையில், காவேரி நதி நீர்ப் பிரச்சினையிலும், முல்லைப் பெரியாறு நதி நீர்ப் பிரச்சினையிலும் எப்படி தமிழ்நாட்டின் உரிமை தன்னால் நிலைநாட்டப்பட்டதோ, அதேபோன்று பாலாறு நதிநீர்ப் பிரச்சினையிலும் தமிழ்நாட்டின் உரிமை நிலை நாட்டப்படும் என்று தனக்குத் தானே புகழாரம் சூட்டிக் கொண்டார். நான் அதற்கு அப்போதே 27 ஆம் தேதியன்றே, காவேரி நதி நீர்ப் பிரச்சினையிலும், முல்லைப் பெரியாறு நதிநீர்ப் பிரச்சினையிலும் தன்னால் தமிழ்நாட்டின் உரிமை நிலை நாட்டப்பட்டது என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிக்கை விட்டிருக்கிறாரே, காவேரி நதி நீர்ப் பிரச்சினை தீர்ந்து விட்டதா? தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு முறையாகத் தண்ணீர் வருகிறதா? சாகுபடி ஒழுங்காக நடைபெறுகிறதா? முல்லைப் பெரியாறு நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமை முழுமையாக நிலைநாட்டப்பட்டு விட்டதா என்றெல்லாம் கேட்டிருந்தேன். அதற்கு இன்றுவரை பதில் இல்லை.

அதுபோலவே 27.6.2014 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில், கேரள மாநில சட்டப் பேரவையில், கேரள முதலமைச்சர் உம்மன்சாண்டி அவர்கள், முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், தூணக்கடவு மற்றும் பெருவாரிப் பள்ளம் ஆகிய நான்கு அணைகளும் 2009ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டிற்குச் சொந்தமானவை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கேரளா அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து 2012ஆம் ஆண்டு அந்த நான்கு அணைகளும் கேரளாவுக்குச் சொந்தம் என்று மாற்றப்பட்டது என்று பேசியிருக்கிறாரே, இந்த உரிமை யாரால் நிலைநாட்டப்பட்டது என்று கேட்டிருந்தேன்.

என்னுடைய கேள்விக்குத் தமிழக முதலமைச்சர், அந்த நான்கு அணைகளும் தமிழ்நாட்டால் இயக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன என்று பின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் நான் அவசரப்பட்டு அறிக்கை விட்டுவிட்டதாகவும் என்னைக் கடுமையாகத் தாக்கிப் பதில் கூறியிருந்தார். ஜெயலலிதாவின் இந்தக் கூற்றுக்கு நான் பதில் அளிப்பதற்கு முன்பாகவே, கேரள மாநில முதலமைச்சர் திரு. உம்மன் சாண்டி அவர்களே, 29.6.2014 அன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "இந்த நான்கு அணைகளும் தங்களுக்குச் சொந்தமானவை என்று தமிழ்நாடு உரிமை கொண்டாடுவது தவறானது, அந்த அணைகள் தமிழ்நாட்டால் இயக்கி, பராமரிக்கப்பட்டு வந்தாலும், அவற்றுக்குத் தமிழ்நாடு சொந்தம் கொண்டாட முடியாது. இரண்டு மாநிலங்களுக்கு இடையே செய்துகொண்ட உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விதி முறைப்படி முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், பெருவாரிப்பள்ளம், தூணக்கடவு அணைகளை தமிழ்நாடு பராமரித்தும், பரிபாலனை செய்தும் வருகிறது. தேசியப் பேரணைகள் பதிவேட்டில் நான்கு அணைகளும் கேரளாவுக்குச் சொந்தமானவை என்றே பதிவாகியுள்ளது. இந்தப் பிரச்சினையில் சமரசம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை" என்றெல்லாம் தெரிவித்திருந்தார். நான் கேரள முதலமைச்சரின் இந்தப் பதிலைச் சுட்டிக்காட்டி, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா என்னிடம் ஆத்திரம் காட்டுவதற்குப் பதிலாக, கேரள முதல்வரின் இந்தக் கூற்றுக்குப் பதில் அளிக்கும்படி தெரிவித்திருந்தேன். ஆனால் வழக்கம் போல ஜெயலலிதா மௌனமாகிவிட்டார். எந்தப் பதிலும் கூறவில்லை.

இதற்கிடையே டெல்லிக்கு வந்த கேரள முதலமைச்சரிடம், தினமணி செய்தியாளர், முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் கேரள அரசு மறு ஆய்வு மனு தாக்கல் செய்திருப்பது பற்றி கேள்வி கேட்ட நேரத்தில், கேரள முதலமைச்சர், "முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசின் நிலை எப்போதும் தெளிவாகவே உள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தினால், அணையைச் சுற்றியுள்ள ஐந்து கரையோர மாவட்டங்களுக்குப் பாதிப்பு ஏற்படும். அணையின் பாதுகாப்பு தொடர்பாகக் கேரள மாநிலத்துக்கு நிலவும்

அச்சத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என மறு ஆய்வு மனுவில் வலியுறுத்தியுள்ளோம். அதன் மீது உச்ச நீதிமன்றம் என்ன முடிவெடுக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். ஒருவேளை கேரளத்துக்குச் சாதகமான நிலை காணப்படாவிட்டால், குடியரசுத் தலைவர் மூலம் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தெளிவுரை கோரும் நட வடிக்கையை மேற்கொள்வதா அல்லது வேண்டாமா என்பதைச் சட்ட நிபுணர்களுடன் ஆராய்ந்து முடிவெடுப்போம்" என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும் முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரளத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞர் அரீஷ் சால்வே உள்ளிட்டவர்களோடு கேரள முதலமைச்சர் ஆலோசனையும் நடத்தியிருக்கிறார்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் கூறியது. அந்தத் தீர்ப்பை நிறைவேற்றும் வகையில் மத்திய அரசு கடந்த 1 ஆம் தேதி கண்காணிப்புக் குழுவை நியமித்தது. அந்தக் குழு செயல்பாட்டைத் தொடங்குவதற்கு முன்பாகவே, கேரளத்தின் மறு ஆய்வு மனுவை விசாரணைக்கு அனுமதிக்கவும், அதன்மீது முடிவெடுக்கும் வரை கண்காணிப்புக் குழுவின் செயல்பாட்டுக்குத் தடை விதிக்க வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றத்திடம் கேரள அரசு கேட்டுள்ளது. ஆனால் தமிழக அரசின் முதலமைச்சரோ, முல்லைப் பெரியாறு நதி நீர்ப் பிரச்சினையிலே தமிழ்நாட்டின் உரிமை தன்னால் நிலைநாட்டப்பட்டது என்று தனக்குத் தானே புகழ் பாடிக் கொண்டிருக்கிறார்.

இப்படித்தான் கடந்த ஆண்டு காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை அரசிதழில் வெளியிட உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. உடனே ஜெயலலிதா காவேரி நதி நீர்ப் பிரச்சினையில் தன்னால் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டு விட்டது என்று தஞ்சையிலே விவசாயிகளையெல்லாம் அழைத்து வந்து பாராட்டு விழா நடத்திக்கொண்டார்.

கேரள அரசு முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பானதாக இல்லை என்ற ஒரே காரணத்தைத்தான் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். இப்போதும் கூறுகிறார்கள். 1980 ஆம் ஆண்டிலேயே அணையைப் பலப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டு 1998இல் பலப்

படுத்தும் பணி நிறைவுற்றது. அணை பலம் உடையதா என்பதை சோதனை செய்ய மத்திய அரசு வடமாநிலங்களைச் சேர்ந்த 12 பேர் கொண்ட நிபுணர் குழுவை டாக்டர் எஸ்.எஸ். பிரார் தலைமையில் நியமித்து அந்தக் குழு முல்லைப் பெரியாறு அணையை நேரில் உரிய கருவிகளுடன் ஆய்வு செய்தது. அணை பலமாக உள்ளது, 145 அடி தண்ணீர் தேக்கலாம் என்று அறிக்கையை அந்தக் குழு கொடுத்தது. ஆனால் இந்த அறிக்கையைக் கேரள அரசு ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது.

1996ஆம் ஆண்டுக்கும், 1999ஆம் ஆண்டுக்கும் இடையில் மட்டும், தி.மு.கழக ஆட்சியில், இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காகப் பல கடிதங்களை நான் கேரள அரசுக்கு எழுதினேன். தேதியோடு சொல்லவேண்டுமேயானால், 2-12-1996, 29-3-1997, 7-11-1997, 3-12-1997, 9-12-1997, 10-12-1997, 11-12-1997, 15-12-1997, 8-1-1998, 20-1-1998, 24-2-1998, 3-4-1998, 28-5-1998, 13-6-1998, 2-7-1998, 13-8-1998, 21-8-1998, 30-9-1998, 13-10-1998, 24-5-1999, 6-7-1999, 14-7-1999, 22-7-1999, 5-8-1999 என்ற தேதிகளில் முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காகக் கடிதம் எழுதியிருக்கிறேன். 5.4.2000 அன்று நான் திருவனந்தபுரம் சென்று கேரள முதல்வருடன் பேச்சுவார்த்தையும் நடத்தியிருக்கிறேன். 19.5.2000 அன்று டெல்லியில் நடைபெற்ற இரண்டு மாநில முதல்வர்களுடனான பேச்சுவார்த்தையில் நானும், அமைச்சராக இருந்த தம்பி துரைமுருகனும் சென்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தினோம்.

பின்னர் டி.கே. மித்தல் தலைமையில் 11 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அனுப்பி மீண்டும் வேறு வேறு கோணத்தில் அணையை ஆய்வு செய்தது. இந்தக் குழுவினரும் சோதனை செய்து "அணை மிகவும் உறுதியாக உள்ளது, குறைந்த அளவிலான சீப்பேஜ் வாட்டர்தான் வருகின்றது" என்று மத்திய அரசுக்கு அறிக்கை கொடுத்தது. இதையும் கேரள அரசு ஏற்க மறுத்தது.

பின் கேரள அரசே, கொச்சி கடற்படையினரை வரவழைத்து, அணையில் நீரில் மூழ்கி எக்கோ டெஸ்ட் - நீர் கேமிரா போன்ற பல சோதனைகளைச் செய்து, அவர்களும் "அணை பலமாக உள்ளது,

ஆனால் 15 அடி சேறும் சகதியும் உள்ளது" என்று அறிக்கை கொடுத்தனர்.

முல்லைப் பெரியாறு அணை நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்த 2006ஆம் ஆண்டிலேயே உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் இந்த உத்தரவைக் கேரள அரசு ஏற்க மறுத்தது. உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியவுடன், கேரள அரசு ஒரு புதிய சட்டத்தினை இயற்றி உச்ச நீதிமன்றத் தீர்ப்பினைச் செயல்படுத்த முடியாதபடி செய்தார்கள். இதை எதிர்த்துத் தமிழகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் 25.9.2006 அன்று தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியவாறும், அதனைத் தொடர்ந்து 23.10.2006இல் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படியும், 29.11.2006 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் சைபுதீன் சோஸ் அவர்கள் முன்னிலையில் தமிழக முதல்வராக இருந்த நானும், கேரள முதலமைச்சர் அச்சுதானந்தம் அவர்களும் டெல்லியில் பேச்சுவார்த்தை நடத்தினோம். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் கேரள அமைச்சர்கள் அளவிலான பேச்சுவார்த்தை 18.12.2006 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் டெல்லியில் நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தைகளில் ஒருமித்த கருத்து எதுவும் எட்டப்படவில்லை.

அதன் பின்னர், இந்தியப் பிரதமர் அவர்கள் கூறியபடி மத்திய நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழக மற்றும் கேரள முதல்வர்களின் கூட்டம், 19.12.2007 அன்று டெல்லியில் நடைபெற்ற போதிலும், அதிலும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.

ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசமைப்புச் சட்ட அமர்வு, 20.1.2010 முதல் 17.2.2010 வரை வாதங்களைக் கேட்ட பிறகு, 18.2.2010 அன்று ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் அவர்களைத் தலைவராகக் கொண்டு, ஐந்து நபர்கள் கொண்ட ஓர் அதிகாரமளிக்கப்பட்ட குழுவினை (Empowered Committee) அமைக்க உத்தரவிட்டது. அந்தக் குழுவில் நீதிபதி ஏ.ஆர். லெட்சுமணனும், கேரளாவைச் சேர்ந்த உச்ச நீதி மன்ற முன்னாள் நீதிபதி கே.டி. தாமசும் இடம்பெற்றிருந்தனர். குழுவினர் அணையை ஆய்வு செய்து உச்ச நீதிமன்றத்தில் அணை

மிகுந்த பலத்துடன் இருப்பதாகத் தெரிவித்து, அதையடுத்து, அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்த அண்மையில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆர்.எம். லோதா தலைமையிலான பெஞ்ச் ஆணையிட்டது.

ஆனால் அதற்குப் பிறகும் கேரள அரசு அணை பலவீனமாக இருப்பதாகத் தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தில் மறு சீராய்வு மனுவினை இப்போது தாக்கல் செய்துள்ளது. இதற்கிடையே இரண்டு நாட்களுக்கு முன்பு இதுகுறித்து முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ் அவர்கள் அளித்த பேட்டியில், "முல்லைப் பெரியாறு அணை மிகுந்த பலத்துடன் உள்ளது. இந்தியாவிலேயே மிகவும் பாதுகாப்பான அணை முல்லைப் பெரியாறு மட்டுமே. ஆனாலும் அணை பலவீனமாக இருப்பதாகச் சிலர், கேரள மக்களிடையே பீதியைக் கிளப்பி வருகின்றனர்" என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனாலும் இதைப்பற்றித் தமிழக அரசின் சார்பில் என்ன செய்யப் போகிறார்கள்? கேரள முதல்வரும், கேரள அரசும் இதைப் பற்றி டெல்லியில் வழக்கறிஞர்களுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். சீராய்வு மனுவில் உச்ச நீதிமன்றம் தங்கள் கோரிக்கையை ஏற்காவிட்டால் குடியரசுத் தலைவரிடம் முறையிடுவோம் என்று கேரள முதல்வரே டெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். இதுபற்றியெல்லாம் கவலைப்படவோ, ஆலோசிக்கவோ தமிழகத்திலே ஓர் அரசு இருக்கிறதா? அந்த அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது, முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தன்னால்தான் தீர்வு ஏற்பட்டது என்று திரும்பத் திரும்ப சுய புராணம் பாடிக் கொண்டிருக்கப் போகிறதா? நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்குப் பெருவாரியாக வாக்களித்து விட்டார்கள், எனவே தங்களைக் கேள்வி கேட்க யாருக்கும் உரிமை இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கப் போகிறார்களா?

அன்புள்ள,

மு.க.

7-7-2014

3899. "அம்மா" ஆட்சியில் தொடரும் அகால மரணங்கள்!

உடன்பிறப்பே,

சென்னை போரூர் மவுலிவாக்கத்தில் ஜெயலலிதா அரசினால் அனுமதி வழங்கப்பட்டு - கட்டப்பட்டு வந்த 11 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து விலை மதிப்பில்லா 61 உயிர்கள் பலியாகியிருக்கின்றன. அந்தக் கட்டிடம் கட்டுவதற்கு, தவறாகவும், முறைகேடாகவும் அனுமதி வழங்கிய அமைச்சர் மீதோ மற்றவர்கள் மீதோ தக்க நடவடிக்கை எடுக்க முன்வராமல், பெயர் அளவுக்குக் கண்துடைப்பு விசாரணைக் கமிஷனை மற்றவர்களை ஏமாற்றுவதற்காக ஜெயலலிதா அறிவித்திருப்பதைக் கண்டித்தும், நடைபெற்ற சம்பவம் பற்றி விசாரிக்க சி.பி.ஐ. விசாரணைக்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்தியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரும் ஜூலை 12 ஆம் தேதியன்று காலை 10 மணி அளவில் ஆளுநர் மாளிகை நோக்கி மாபெரும் பேரணி ஒன்றினைச் சென்னை, காஞ்சிபுரம் மாவட்டக் கழகங்களின் சார்பில் நடத்துவதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, காஞ்சிபுரம் மாவட்டக் கழகங்களின் சார்பில் பேரணி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை ஒட்டியுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த கழகத் தோழர்களும் இந்தப் பேரணியில் கலந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஜூன் மாதக் கடைசியில் 28ஆம் தேதியன்று இந்த 11 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்ததில், 61 பேர் பலியாகியிருக்கிறார்கள். 27 பேர் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்குத் தலா இரண்டு இலட்சம் ரூபாய் மட்டுமே நிதி உதவி வழங்கப்படும் என்று முதலில் அறிவித்தார். ஆனால் அதே இடத்தைப் பார்வையிட்ட ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள்

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்த பிறகு, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, பலியானவர்களின் குடும்பத்தாருக்குத் தமிழக அரசின் சார்பில் மேலும் 5 இலட்ச ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

"பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்ற தலைப்பில், மவுலிவாக்கம் சம்பவம் பற்றிப் பத்திரிகையாளர் "சமஸ்" உருக்கமாக ஒரு பக்கத்திற்கு "இந்து" தமிழ் நாளிதழில் ஒரு கட்டுரை தீட்டியிருக்கிறார். புகைப்படங்களோடு வெளிவந்துள்ள அந்தக் கட்டுரையின் முகப்பில் "ஒரு வாரத்துக்கும் மேலாகிறது. இன்றுவரை பெயருக்குக் கூட சம்பிரதாய நடவடிக்கையாகக் கூட ஒருவர் கூடப் பொறுப்பேற்று ராஜினாமா செய்யவில்லை. ஒருவர் கூடப் பதவி-பணி நீக்கம் செய்யப்படவில்லை. ஊழலின் பெயரால் அரசு நிர்வாகம் சம்பந்தப்பட்ட ஒருவர்கூடக் கைது செய்யப்படவில்லை" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எப்படி ராஜினாமா செய்வார்கள்? யாரைப் பணி நீக்கம் செய்வார்கள்? சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுத்தால், அவர் எத்தனை சதவிகிதம் மேல் இடத்திற்கு கொடுத்தேன் என்பதைச் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்ற சிந்தனையில் இருப்பார்கள்.

சமஸ் மேலும் எழுதுகிறார், "தூர நின்னு பார்த்த நமக்கே சகிக்கலையே, எப்படிங்க அவங்களால எல்லாம் நிம்மதியா இருக்க முடியுது? மனசாட்சின்னு ஒண்ணு இருக்குமா? இருக்காதா? ஒரு வாரம் ஆகிவிட்டது சம்பவம் நடந்து, அதை விபத்து என்று குறிப்பிட என் கை கூசுகிறது. அது விபத்தா? ஊழலின் வெடிப்பா? நடந்தது படுகொலை. இந்த அமைப்பின் சகல மட்டங்களிலும் புரையோடியிருக்கும் ஊழல்வாதிகள் செய்த படுகொலை. இது ஒவ்வொருவரின் மனசாட்சிக்கும் தெரியும். இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்க வேண்டிய சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (சி.எம்.டி.ஏ.) தலைவர், தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம் சம்பவ இடத்தைப் பார்வையிடவே செல்லவில்லை" என்று தொடருகிறது கட்டுரை. சமஸ் தி.மு.கழகத்தையோ, வேறு எந்தக் கட்சியையோ சேர்ந்தவரல்ல. பொதுவான ஒரு பத்திரிகையாளர், நடுநிலைப் பத்திரிகை ஒன்றில் இந்த அளவுக்கு மனம் வெந்து

எழுதுகிறார் என்றால், இதற்காக சி.பி.ஐ. விசாரணை நடத்தப்பட வேண்டாமா என்பதைத்தான் நாம் கேட்கிறோம். அதற்கு இந்த ஆட்சியினரிடமிருந்து பதில் இல்லாத காரணத்தால் தான் 12ஆம் தேதி ஆளுநர் மாளிகை நோக்கிப் பேரணி நடத்துகிறோம்.

இச்சம்பவம் குறித்துச் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தைக் கண்காணிப்பதற்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி, எம்.ஜி. தேவசகாயம், "கட்டிடம் இடிந்து விழுந்ததற்கு சி.எம்.டி.ஏ.வின் முறையான ஆய்வு இல்லை என்பதும், ஊழலின் மொத்த உருவமாக சி.எம்.டி.ஏ. மாறியிருப்பதும் தான் அடிப்படைக் காரணம். ஆனால் அந்தத் துறை அதிகாரிகளைப் பாதுகாப்பதற்கு முதலமைச்சர் முயற்சிக்கிறார் என்பதுதான் அவர் சொல்லியிருக்கும் பதிலிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. பிளானிங் அப்ரூவலுக்கு மாறாக ஒருவர் பல அடுக்கு மாடிகள் கட்டி வருகிறார் என்றால், அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறது? சி.எம்.டி.ஏ.வுக்குத்தானே? அப்ரூவலுக்கு எதிராகக் கட்டிடம் கட்டப்படுகிறது என்றால் தடுக்க வேண்டியது தானே? அதிகாரிகள் ஏன் தடுக்கவில்லை? அவர்கள் தடுத்திருந்தால் ஜீரணிக்க முடியாத இந்தத் துயரத்தையும் தடுத்திருக்க முடியும்தானே? தங்களுடைய கடமையைச் செய்தார்களா? செய்யவில்லையே?" என்றெல்லாம் அந்த ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தேவசகாயம் கேட்டிருக்கிறார்.

இடிந்து விழுந்த கட்டிடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டதில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதுபற்றியெல்லாம் நான் விரிவாக 4-7-2014 தேதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். துறையின் அமைச்சரே தலையிட்டு இந்தக் கட்டிடத்திற்கான அனுமதியை வழங்கியிருக்கிறார் என்றும் ஏடுகளிலே செய்திகள் வந்துள்ளன. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா என்ன காரணத்தாலோ அந்தத் துறையின் அமைச்சரைக் காப்பாற்ற எண்ணி, அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல், நீதிபதி ரெகுபதி அவர்களை ஒரு நபர் விசாரணைக் கமிஷனாக நியமித்திருக்கிறார். அந்தக் கமிஷனுக்கும் எந்தவிதமான காலவரையறையும் குறிப்பிடவில்லை. அந்த நீதிபதி ஏற்கனவே பல பணிகளிலே ஈடுபட்டிருப்பவர். அவர்

வழக்கறிஞராக இருந்தபோதே, அ.தி.மு.க.விற்காகப் பாடுபட்டவர் என்றும் சொல்லப்படுகிறது.

கமிஷனை அறிவிப்பதற்கு முன்பாகவே, முதலமைச்சர் அளித்த பேட்டியில் எந்தவிதமான முறைகேடும் அனுமதி வழங்கியதிலே இல்லை என்று அறிவித்திருப்பது மறைமுகமாக விசாரணைக் கமிஷன் நீதிபதிக்கு வழங்கிய அறிவுரையாகவே கருதப்படும்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற மவுலிவாக்கம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. சதாசிவம் அவர்கள் கூறியதாக "நக்கீரன்" இதழில் வெளிவந்த செய்தியில், 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம், அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர்தான் இந்தக் கட்டிடத்திற்குப் பூஜை போட்டு, கட்டிட வேலையைத் துவங்கி வைத்தாராம். 2013இல் மணல் தட்டுப்பாடு பெரிய அளவில் இருந்ததால், க்ரஷர் மண்ணைப் பயன்படுத்தினார்களாம்! தூண்களில் கருங்கல் ஜல்லிகளைக் கூடத் தேவையான அளவுக்கு உபயோகிக்கவில்லையாம். இடிந்து விழுந்த இந்தக் கட்டிடத்தைப் பார்க்க முதல்அமைச்சர் வந்த போது, அந்த அமைச்சரும் உடன் வந்ததாக அந்தப் பத்திரிகை செய்தியிலே வெளிவந்துள்ளது. கட்டுமானத்துக்கு ஒரு வாரம் கடல் தண்ணீரைப் பயன்படுத்தியதாகவும் ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்ட போதெல்லாம் இதுபோன்ற அகால மரணங்கள் ஏற்பட்டுத்தான் வருகின்றன. உதாரணமாக 1992ஆம் ஆண்டு பிப்ரவரியில் கும்பகோணம் மகாமகக்குளத்தில் முதலமைச்சரும், அவருடைய உடன்பிறவாச் சகோதரியும் இறங்கிக் குளித்தபோது, அவர்களை வேடிக்கை பார்த்த கூட்டத்தில் 100க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். அந்தக் காட்சியை அப்போது சங்கராச்சாரியார் கூட, "அவாளுக்கு இவாள் ஊற்ற, இவாளுக்கு அவாள் ஊற்ற" என்றெல்லாம் வர்ணித்திருக்கிறார். 2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஏர்வாடியில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டு, அதிலே 28 பேர் பலியானார்கள். 2004ஆம் ஆண்டு ஜனவரியில் திருவரங்கத்தில் மணவிழா ஒன்றில் நடந்த தீ விபத்தில் 54 பேர் தீயில் கருகி மாண்டார்கள். அதன் பின்னர் அதே ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கும்பகோணத்தில் பள்ளி ஒன்றில் தீப்பிடித்து 94 குழந்தைகள் கருகினார்கள். மீண்டும் 2005ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். நகரில்

வெள்ள நிவாரணப் பொருள்கள் வழங்கியபோது, ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 23 பெண்களும், 19 ஆண்களுமாக, 42 பேர் இறந்த சம்பவமும், அ.தி.மு.க. ஆட்சியிலேதான் நடைபெற்றது. அதற்கு ஒரு மாதத்துக்கு முன்பே வட சென்னையில் வெள்ள நிவாரணப் பொருள்கள் வாங்க வந்த கூட்ட நெரிசலில் சிக்கி 6 பெண்கள் பலியானார்கள்.

எம்.ஜி.ஆர். நகர் சம்பவத்திற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ராமன் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்த நிலையில் பகுதிக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய தனசேகரனைக் கைது செய்து சிறையிலே அடைத்தார்கள். 26-12-2005 அன்று சென்னை முதன்மை செஷன்ஸ் நீதிமன்றம் அவரை ஜாமீனில் விடுதலை செய்யத் தீர்ப்பளித்த போதும், அ.தி.மு.க. அரசு அவரை ஜாமீனில் விடுவதற்குக்கூட இடைக்காலத் தடை பெற்றதோடு, அவர் மீது குண்டர் சட்டத்தைப் பயன்படுத்தி, சிறையிலிருந்து ஜாமீனில் கூட வெளியே வர முடியாமல் செய்தனர். சென்னை உயர் நீதிமன்றம் தனசேகரனுக்கு அளித்த ஜாமீன் சரியானதே என்று தெரிவித்த போது, அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கே.ஜி. பாலகிருஷ்ணன், நவ்லேக்கர் ஆகியோர் விசாரித்து அளித்த தீர்ப்பில்,

> “உங்கள் அரசின் (தமிழக அரசின்) பொறுப்பில்லாத அதிகாரிகள்தான் இந்தச் சோகச் சம்பவத்துக்குக் காரணம், உங்கள் அரசுதான் இதற்கு முழுப் பொறுப்பு. யாரோ வதந்தி கிளப்பினார் என்று பழியை இன்னொருவர் மேல் போட்டுவிட்டுத் தப்பிக்கப் பார்க்காதீர்கள். எங்கிருந்து கிளம்பியது என்பதே தெரியாத ஒரு விஷயத்தைத்தான் வதந்தி என்பார்கள். ஆனால், உங்கள் அரசு தனசேகரனும், வேறு சிலரும்தான் வதந்தி கிளப்பினார்கள் என்கிறது. அரசுதான் இதற்குப் பொறுப்பு. பொதுமக்கள் கூடும் இடத்தில் பாதுகாப்பு ஏற்பாடு செய்வது போலீசாரின் கடமை. வதந்தியால் தள்ளுமுள்ளு ஏற்பட்டு நெரிசலில் சிக்கி 42 பேர் இறந்ததாகக் கூறுவது பொறுப்பற்ற செயல். பாதுகாப்புத் தர வேண்டியது முழுக்க முழுக்க அதிகாரிகள் பொறுப்பு. தமிழ்நாட்டில் இப்படி அசம்பாவிதம் நடப்பது இது முதல் முறையல்ல. இப்படி அடிக்கடி நடக்கத்தான் செய்கிறது. இதற்காகத் தனசேகரன் மீது பழிபோட்டுத்

தப்ப முடியாது. தமிழக அரசின் அப்பீலைத் தள்ளுபடி செய்கிறோம்”

- என்று உறுதிபடத் தெரிவித்தார்கள்.

இப்படிப்பட்ட தீர்ப்புகளையெல்லாம் பெற்ற கட்சியினர்தான் தற்போதும் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறார்கள். தற்போதும் பழைய பாணியிலேதான் மவுலிவாக்கத்தில் நடைபெற்ற கட்டிட விபத்துக்கு, தங்களுக்கு வேண்டிய ஒரு நீதிபதியின் தலைமையிலே விசாரணைக் கமிஷன் நியமித்து தப்பித்துக்கொள்ள நினைக்கிறார்கள். நீதிபதி விசாரணையை முதல் நாள் அறிவித்துவிட்டு, அந்த விசாரணை தொடங்குவதற்கு முன்பாகவே கட்டிடம் இடிந்து விழுந்தது குறித்து விசாரிக்கச் சென்னை மாநகரக் காவல் ஆணையர் மேற்பார்வையில், சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்படும் என்றும், குழுவுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப் பல்வேறு துறை வல்லுநர்கள் இடம்பெறுவார்கள் என்றும் ஓர் அறிவிப்பினை முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார். அ.தி.மு.க. அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பவர்களே இதுபற்றிய விசாரணையை நடத்தினால் ஆட்சியினர் செய்த தவறுகளை நிச்சயம் எடுத்துக்கூற மாட்டார்கள். அது ஊரை ஏமாற்றும் விசாரணைகளாகவே அமையும் என்பதால்தான் சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று நாம் கேட்டு, அதற்குப் பலரும் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

மவுலிவாக்கம் கட்டிடத்தைப் பொறுத்தவரையில் அந்தக் கட்டிடத்தில் உள்ள குடியிருப்புகளை வாங்கியவர்களின் நிலைமை என்ன? ஒவ்வொருவரும் வங்கிகளிலே கடன் பெற்றோ, வேறு எங்கோ கடன் பெற்றோ அந்தத் தொகையைக் கட்டி வீடு வாங்கியிருக்கிறார்கள். தற்போது அவர்களின் கதி என்ன? அந்தப் பணம் திரும்பக் கிடைக்குமா? அவர்களுக்கு அரசின் பதில் என்ன? கட்டிடப் பணிகளை ஆற்ற இனித் தொழிலாளர்கள் கிடைப்பார்களா என்பதே கேள்விக்குறியாகிவிட்டது.

இது பற்றியெல்லாம் தீர விசாரித்து அறிக்கை பெற்றால்தான் பல பிரச்சினைகளுக்கு முடிவு தெரியும். அதனால்தான் சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கழகத்தின் சார்பில் கேட்டு, அதற்கு அ.தி.மு.க. ஆட்சியினர் எந்தவிதமான பதிலும்

தெரிவிக்காத நிலையில் ஆளுநரிடம் இது பற்றி முறையிட நாம் பேரணி நடத்தவிருக்கிறோம். அந்தப் பேரணியினைச் சிறப்பாக நடத்தித்தர வேண்டிய பொறுப்பு உன்னிடம் தான் இருக்கிறது. பேரணி சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்கள் சார்பில்தானே நடைபெறுகிறது என்று அண்டை மாவட்டத்திலே உள்ளவர்கள் நினைக்காமல், தொழிலாளியாகவாவது பணி புரிந்து தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றலாம் என்ற எண்ணத்துடன், நாளெல்லாம் உழைத்துத் தேய்ந்த 61 உயிர்கள் பலிகடாவாகியிருக்கிறார்களே; அவர்களுடைய குடும்பத்தினர் எங்கே என் மனைவி, எங்கே என் கணவன், எங்கே என் மகன் என்றெல்லாம் கதறிக் கதறி அழுகின்றார்களே, அந்த வேதனையை எண்ணித்தான் தி.மு. கழகம் இந்தப் பேரணியை நடத்திட முன் வந்துள்ளது. அ.தி.மு.க. ஆட்சியினர் அதற்குள் சி.பி.ஐ. விசாரணை நடத்துகிறோம், உண்மையை உலகத்திற்குத் தெரிவிக்கிறோம், என்றெல்லாம் அறிவித்து, ஊழலுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை. எனவே, இந்தப் பேரணியில் கலந்துகொள்வது நம்முடைய கடமை என்ற உணர்வோடு, கழக உடன்பிறப்புகள் அனைவரும் வரும் 12ஆம் தேதி நடைபெறவுள்ள பேரணியில் கலந்துகொள்ள வேதனையோடு அழைக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

8-7-2014

3900. வார்த்தைப் போட்டிக்கு வர விரும்பவில்லை!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் என்ற பதவியிலே இருப்பவர் பேசுவதற்கோ, அறிக்கை விடுவதற்கோ ஒரு நாகரிகம் உண்டு. ஆனால் அந்தப் பதவியையே அசிங்கப்படுத்திக் கொண்டிருப்பவர்தான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா! அதிகாரத்தில் இருக்கிறோம் என்ற ஆணவத்தில், அவருடைய அறிக்கையை முழுவதுமாக வெளியிட முழுப் பக்க விளம்பரங்களைப் பெறுகிற ஒருசில பத்திரிகைகள் இருக்கின்றன என்ற இறுமாப்பில் எதை வேண்டுமானாலும் தான் எழுதலாம் என்ற நினைப்பில் நதி நீர்ப் பிரச்சினை பற்றி நீண்ட அறிக்கையினை மீண்டும் வெளியிட்டிருக்கிறார். அதில் வழக்கம் போல - அரசியல் ஆதாயம் அடையலாம் என்று நான் எதிர்பார்த்து - வெத்து வேட்டு அறிக்கை வெளியிட்டு - தன்னிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதாகவும் எழுதியிருக்கிறார். சாக்கடையை கையினால் அள்ளினால் கை அழுக்காகாமல் என்ன செய்யும்?

"அரைவேக்காடு யார்?" என்ற தலைப்பில் நான் 30-6-2014 அன்று எழுதிய கடிதத்திற்கு 7-7-2014 அன்று ஜெயலலிதா பதில் அளித்திருக்கிறார். அந்தப் பதிலில் வழக்கம் போல என்னை வீண் வம்புக்கு இழுத்திருக்கிறார். முல்லைப் பெரியாறு, பரம்பிக்குளம், பெருவாரிப்பள்ளம், தூணக்கடவு ஆகிய அணைகள் 2012ஆம் ஆண்டு கேரளாவுக்குச் சொந்தம் என்று மாற்றப்பட்டதாக, கேரள சட்ட சபையில் அந்த மாநில முதலமைச்சர் திரு. உம்மன் சாண்டி தெரிவித்து, ஏடுகளில் அந்தச் செய்தி வந்ததைக் குறிப்பிட்டு, அதற்கு தமிழகத்தின் பதில் என்ன என்று கூற வேண்டாமா என்று கேட்டிருந்தேன். இதற்கு ஜெயலலிதா, கேரள முதல் அமைச்சருக்குப் பதில் கூறாமல், நான் ஏதோ தெரியாமல் கேட்டு விட்டேன் என்று எண்ணிக் கொண்டு, என்னை "அரைவேக்காடு" என்றெல்லாம் அநாகரிகமாகக் குறிப்பிட்டு பதில் அளித்திருந்தார்.

அதற்குத்தான் நான் விளக்கம் தெரிவித்து, அரைவேக்காடு யார்? நானா? ஜெயலலிதாவா? என்று கேட்டிருந்தேன்.

ஜெயலலிதாவின் இந்தப் பதில் பற்றி டெல்லியில் தினமணி இதழின் செய்தியாளர், கேரள முதலமைச்சரைச் சந்தித்து கேள்வி கேட்ட போது, கேரள முதல் அமைச்சர் மீண்டும் திட்டவட்டமாக இந்த நான்கு அணைகளும் தமிழ்நாட்டால் பராமரிக்கப்பட்ட போதிலும், அவற்றுக்கு தமிழ்நாடு சொந்தம் கொண்டாட முடியாது; தேசியப் பேரணைகள் பதிவேட்டில் இந்த நான்கு அணைகளும் கேரளாவுக்குச் சொந்தமானவை என்றே பதிவாகியுள்ளது, இந்தப் பிரச்சினையில் சமரசம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று பதில் அளித்திருக்கிறார். எனவே தமிழக முதலமைச்சர் பதில் கூற வேண்டியது கேரள முதல் அமைச்சருக்குத்தானே தவிர, என்னிடம் கோபப்பட்டு, ஆத்திரத்தைக் காட்ட வேண்டியதில்லை என்று 1-7-2014 அன்றே தெரிவித்திருந்தேன்.

இந்தக் கருத்தையே முதலமைச்சர் படிக்காமல், 7ஆம் தேதி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இந்த அணைகள் கேரளாவுக்குச் சொந்தம் என்று நான்தான் கூறியதைப் போல என்மீது பாய்ந்து பிறாண்டியிருக்கிறார். இந்த நான்கு அணைகளும் கேரளாவுக்குச் சொந்தம் என்று ஒரு தடவைக்கு இரண்டு தடவை கூறியிருப்பது கேரள முதலமைச்சர் திரு. உம்மன் சாண்டி தைரியம் இருந்தால், தெம்பு இருந்தால், நியாயம் இருந்தால் முதலமைச்சர் ஜெயலலிதா, உம்மன் சாண்டிக்குப் பதில் சொல்ல வேண்டுமே தவிர, என் மீது ஆத்திரப்பட்டு என்ன பயன்? கேரள முதலமைச்சர் இப்படியெல்லாம் சொல்லியிருக்கிறாரே, இதற்கு தமிழ்நாடு பதில் சொல்ல வேண்டாமா என்றுதானே கேட்டிருந்தேன். அது தவறா? இப்போதாவது புரிகிறதா அரை வேக்காடு யார் என்பது? அரை வேக்காடுகூட இல்லை, தான் ஒரு அரைக்கால் வேக்காடு, கொதியே வராத வேக்காடு என்று அறிக்கை மூலம் நிரூபித்து இருப்பது ஜெயலலிதா என்பது ஊர்ஜிதம் ஆகிறதா அல்லவா? இதிலே எனக்கென்ன அரசியல் ஆதாயம்?

அடுத்து ஜெயலலிதா வழக்கம் போல, காவேரி நதி நீர்ப் பிரச்சினை, கச்சத் தீவுப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை என்று எப்போதும் அவர் என் மீது சாட்டுகின்ற குற்றச்சாட்டுகளையே திரும்பவும் தன் அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் நான்

திரும்பத் திரும்ப விளக்கம் அளித்து விட்டேன். அதையெல்லாம் திரும்ப மீண்டும் ஒரு முறை நான் எடுத்துக் கூற விரும்பவில்லை. தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குவது போல பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியுமா?

ஜெயலலிதா 29-6-2014 அன்று வெளியிட்ட அறிக்கையில், "நதி நீர் இணைப்பு குறித்த பொது நல வழக்கினை விசாரித்த உச்ச நீதிமன்றம், 2012ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரு தீர்ப்பினை வழங்கியது" என்று குறிப்பிட்டிருந்த காரணத்தால், 30-6-2014 அன்று நான் அளித்த பதிலில், "உச்ச நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பே கழக வழக்கறிஞர் திரு. கே.எஸ். ராதாகிருஷ்ணன் 1983இல் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, மேல் முறையீட்டினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததன் விளைவாகத்தான் வந்தது என்பதை ஜெயலலிதா தன்னுடைய அறிக்கையிலே மறைத்து விட்டாலும், நதி நீர் இணைப்பு குறித்து அறிந்தவர்கள் மறந்து விட மாட்டார்கள்" என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதற்கு நேரடியாகப் பதில் கூற முடியாத ஜெயலலிதா, கே.எஸ். ராதாகிருஷ்ணன் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்த வழக்கினை, தி.மு.க. வினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்று எப்படி எடுத்துக் கொள்ள முடியும் என்று கேட்டிருக்கிறார். எப்படியோ, அந்த வழக்கு அ.தி.மு.க.வினாலோ, ஜெயலலிதாவினாலோ தொடுக்கப்பட்ட வழக்கு அல்ல என்பதை ஜெயலலிதா ஒப்புக் கொண்டால் சரி! ராதாகிருஷ்ணன் வழக்குத் தொடுத்த போது தி.மு.க.வில் இல்லை என்று புதிய கண்டுபிடிப்பு ஒன்றையும் சொல்லியிருக்கிறார். அவர் அப்போது எந்தக் கட்சியில் இருந்தாலும் இப்போது தி.மு.க.வில் தானே இருக்கிறார், அதனால்தான் கழக வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் என்று என் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தேன்.

ஜெயலலிதாவுக்காக அறிக்கை எழுதியவர்கள் ராதாகிருஷ்ணன் எழுதிய புத்தகங்களையும், கட்டுரைகளையும் தேடித் தேடிப் படித்து, அதிலே என்னைப் பற்றி அவர் மாற்றுக் கட்சியிலே இருந்த போது செய்த விமர்சனத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பாவம்; ஒரு மாநில முதலமைச்சரை அறிக்கை எழுதிக் கொடுத்தவர்கள் இப்படியெல்லாம் அவமானப்படுத்தியிருக்கக் கூடாது. ராதாகிருஷ்ணனின்

கட்டுரையிலே கூட, "தமிழக முதலமைச்சர் கருணாநிதி டெல்லியைப் பார்த்து நதி நீர் இணைக்க வேண்டும் என்று சொல்கின்றார்" என்ற உண்மையைத்தான் வெளியிட்டு, நதி நீர் இணைக்க வேண்டுமென்று நான் மத்திய அரசைப் பார்த்து அப்போதே கோரிக்கை வைத்ததை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

ஜெயலலிதா மீண்டும் தனது அறிக்கையில் நதி நீர் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றிட கருணாநிதி ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை என்று சொல்லிவிட்டு, அவரே தன்னையும் அறியாமல் அவருடைய அறிக்கையிலே, நதி நீர் இணைப்புத் திட்டத்திற்காக நான் என்ன செய்தேன் என்பதையும் தெரிவித்திருக்கிறார். உதாரணமாக அவருடைய அறிக்கையில், பெண்ணையாற்றுடன் செய்யாற்றினை இணைக்கும் திட்டத்திற்கு நிதி உதவி பெறும் கோரிக்கை 2008ஆம் ஆண்டு மத்திய அரசுக்கு தமிழக அரசால் அனுப்பி வைக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார். 2008ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல் அமைச்சராக நான் இருந்த போதுதான் அந்தக் கோரிக்கையே வைக்கப்பட்டது.

நதி நீர் இணைப்புக்காக தி.மு. கழக ஆட்சியில் 2007-2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே "இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் ஊறு விளைவிக்கும் வகையில் நதிநீர்ப் பங்கீடு பிரச்சினைகள் உருவாவதைத் தடுத்திட முதலில் தீபகற்ப நதிகளையாவது இணைத்திட வேண்டும் என்ற கோரிக்கையை அவசர அவசியம் கருதி, உடனடியாக நிறைவேற்றும் பணி மத்திய அரசால் தொடங்கப் பெற இந்த அரசு தொடர்ந்து தீவிர முயற்சி மேற்கொள்ளும்" என்று சுட்டிக்காட்டியதையொட்டி, நதிநீர் இணைப்பு பற்றி, மத்திய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுகளின் கவனத்தையும் ஈர்த்திடும் வகையில், டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்திலும் நான் விரிவாக எடுத்துரைத்திருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததோடு நில்லாமல், வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கும், வெள்ள நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து, வறட்சிப் பகுதிகளுக்கு நீரை எடுத்துச் செல்வதற்கும், மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

திருச்சிக்கு அருகே மாயனூரில் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டத்தின் கீழ், காவிரியின் குறுக்கே கட்டளையில் கதவணை கட்டும் பணிகள் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றன. தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்காக 369 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றன. பெண்ணையாற்றுடன் செய்யாற்றை இணைக்கும் திட்டத்திற்கு 174 கோடி ரூபாய்க்கான கருத்துரு மத்திய அரசின் நீர்க்குழுமத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது.

இந்த உண்மைகளையெல்லாம் அப்படியே மறைத்து விட்டு, நதி நீர் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற கருணாநிதி ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை என்று கூறுவது எத்தகைய ஏமாற்றுத்தனம் என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

வாதங்களை எடுத்து வைக்கட்டும், நான் வேண்டாமென்று கூறவில்லை. அரசியலிலே இருப்பவர்கள் தங்கள் தங்கள் வாதங்களை எடுத்து வைப்பதிலே தவறு இல்லை. ஆனால் முதலமைச்சர் பொறுப்பிலே இருப்பவருக்கு ஒரு நாகரிகம் வேண்டாமா? பண்பாடு வேண்டாமா? வேறு எந்த மாநிலத்திலாவது எந்த முதல் அமைச்சராவது இப்படியெல்லாம் வார்த்தைகளை வாரி இறைப்பதுண்டா? கேரள முதலமைச்சர் இப்படியெல்லாம் கூறியிருக்கிறாரே, இதற்கு தமிழக அரசு பதில் கூற வேண்டாமா என்று பொறுப்புடன் நான் கேட்டால், அவருக்குப் பதில் கூறுவதை விட்டு என்னை அரை வேக்காடு என்றும், வாங்கிக் கட்டிக் கொண்டேன் என்றும் ஒரு முதலமைச்சர் பதவியில் இருந்து கொண்டு எழுதுவது அவருக்கு வேண்டுமானால் சிறப்பாகத் தெரியலாம். ஆனால் அதே பாணியில் பதில் கூறுவதற்கு எனக்கு வெட்கமாக இருக்கிறது! தந்தை பெரியாரோடும், பேரறிஞர் அண்ணாவோடும், மூதறிஞர் ராஜாஜியோடும், பெருந்தலைவர் காமராஜரோடும், பெரியவர் பக்தவத்சலத்தோடும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தோடும், ஏன் எம்.ஜி.ஆரோடும், அகில இந்திய அளவிலேகூட அன்னை இந்திரா காந்தியோடும், சோனியா காந்தியோடும், மன்மோகன் சிங்கோடும் அரசியலை பண்பாட்டோடு நடத்திப் பழகி விட்டு, தற்போது

குழாய் அடியிலே சண்டை போடுவதைப் போன்ற மொழியிலே பதிலளிக்க நான் தயாராக இல்லை.

என்னை மாத்திரமல்ல; தமிழ்நாட்டுத் தலைவர்களை மாத்திரமல்ல; அகில இந்தியத் தலைவர் களையெல்லாம் ஜெயலலிதா எப்படியெல்லாம் விமர் சித்தார் என்பதை நாட்டு மக்கள் அறியமாட்டார்களா என்ன? நாவலர் நெடுஞ்செழியன் அவர் களையே "உதிர்ந்த ரோமம்" என்று ஜெயலலிதா விமர்சிக்கவில்லையா? அத்வானி அவர்களை "செலக்டிவ் அம்னீஷியா" என்று கூறவில்லையா? "செயல்படாத பிரதமர்" என்று நரசிம்மராவைப் பேசவில்லையா? ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி ஜெயலலிதாவிடம் தவறாக நடக்க முயன்றார் என்று சட்டப்பேரவையிலேயே தெரிவிக்க வில்லையா? கம்யூனிஸ்டுகள் உண்டியல் குலுக்குவதற்காகத்தான் "தகர டப்பா"வே கண்டுபிடிக்கப் பட்டது என்று தெரிவிக்கவில்லையா? இதெல்லாம் ஜெயலலிதாவுக்கு கை வந்த கலையாக இருக்கலாம்; என்னைப் பொறுத்தவரையில் நான் ஜெயலலிதாவுடன் இந்த அநாகரிக வார்த்தைப் போட்டிக்கு வரவிரும்பவில்லை.

கேரள முதலமைச்சர் திரு. உம்மன் சாண்டி அவர்கள் சொன்ன வார்த்தைகளை ஏற்க மறுத்து, தமிழ்நாட்டு மக்களுக்காக நான் வாதிட்டதற்காக - அதைப் புரிந்து கொள்ளும் சக்தியில்லாமல்; தேவையில்லாமல் ஜெயலலிதா என் மீது புழுதி வாரித் தூற்றியிருப்பது நியாயம்தானா என்பதை; இதைப் படித்து விட்டு நடுநிலையாளர்கள் சிந்தித்து தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு.க.

09-07-2014

3901. வருமான வரித்துறையுடன் திடீர் சமரச மர்மம் என்ன?

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதும், அவருடைய உடன்பிறவாச் சகோதரி சசிகலா மீதும், வருமான வரித் துறை தொடர்ந்த ஒரு வழக்கு பதினெட்டு ஆண்டுகளாக நீடித்து, தற்போது முடிவுக்கு வருகின்ற நேரத்தில், நீதிமன்றத்தில் ஜெயலலிதா ஆஜராக வேண்டும் என்று கடுமையாக நீதிபதி தெட்சிணாமூர்த்தி தெரிவித்த நிலையில், ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட புதிய மனுவில், தாங்கள் துறைவாரியாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள மனு ஒன்றினைத் துறையிடம் தாக்கல் செய்திருப்பதாகவும், அந்த மனு நிலுவையிலே இருப்பதாகவும் தெரிவித்து, அதற்கு வருமானவரித் துறையைச் சேர்ந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவிக்காததால், நீதிபதி விசாரணையை ஜூலை 24ஆம் தேதிக்கு தள்ளிவைத்தது பற்றி விரிவாக நான் 3-7-2014 அன்று தெரிவித்திருந்தேன்.

இந்த வழக்கு எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள முதலாவது பொருளாதாரக் குற்றப்பிரிவு நீதிமன்றத்தில் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக நிலுவையிலே உள்ளது. 18 ஆண்டுகள் வழக்கு நடைபெற்று - அதற்காக நீதிமன்றங்களும், அரசும், வழக்கறிஞர்களும் பல மணி நேரம் செலவிட்ட பிறகு, தற்போது எடுத்திருக்கும் இந்த முடிவினை ஜெயலலிதா தரப்பினர் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பே எடுத்து, அப்போது துறை மூலமாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வில்லையா? இந்த வழக்குக்காக உச்ச நீதிமன்றம்வரை சென்று, உச்ச நீதிமன்றத்தின் பொன்னான நேரம் செலவழிக்கப்பட்டதே, அப்போதே துறையின் வாயிலாகப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதாக ஜெயலலிதா தரப்பினர் கூறியிருக்கலாம் அல்லவா?

துறைவாரியாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் ஏற்கனவே துறையினரிடம் மனுக் கொடுத்தார்களா? அப்படிக் கொடுத்திருந்தால் அந்த மனுவின் கதி என்ன? அப்போது என்ன முடிவெடுக்கப்பட்டது?

இந்தப் பிரச்சினை தொடர்பாக தே.மு.தி.க. தலைவர், விஜயகாந்த் குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் எழுதிய கடிதத்தில், இந்த வழக்கு நடைபெறும் 18 ஆண்டுகளில், நீதிபதி பலமுறை உத்தரவிட்டும், ஒரு முறை கூட ஜெயலலிதா நீதிமன்றத்தில் ஆஜரானதில்லை என்றும், 30-6-2014 அன்று ஜெயலலிதா நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று நீதிபதி உத்தரவு பிறப்பித்த நிலையில் சராசரி இந்தியக் குடிமகன் இதுபோன்று செயல்பட்டிருக்க முடியுமா என்றும், அதற்குச் சட்டமும் நீதிமன்றமும் இடம் கொடுக்குமா என்றும், இந்த நிலையில் ஜெயலலிதா வருமானவரித் துறையின் இயக்குனர் ஜெனரலிடம் கம்பவுண்டிங் முறையில் வருமான வரி பாக்கியைச் செலுத்தி சமரசமாக தீர்த்துக்கொள்ளத் தயார் என்று அறிவித்திருப்பது சரிதானா என்றும், ஜெயலலிதாவின் வேண்டுகோளை வருமான வரித் துறை ஏற்றுக் கொள்ளுமேயானால், பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்தில் ஜெயலலிதா மீது நடைபெற்று வரும் சொத்துக் குவிப்பு வழக்கின் போக்கை அது திசை திருப்பிவிடும் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள் என்றும், அதைக் கருத்திலே கொண்டு வருமானவரித் துறை ஜெயலலிதாவின் சமரசம் பற்றி முடிவெடுக்க வேண்டுமென்று தே.மு.தி.க. தலைவர் பிரதமர் மோடி அவர்களுக்கும், குடியரசுத் தலைவருக்கும் கடிதம் எழுதி யிருக்கிறார். இந்தக் கடிதமும், அதன் கருத்துகளும் பிரதமர் மோடி அரசினால் அலட்சியப்படுத்தப்பட்டு விடக் கூடாது.

வருமானவரித் துறை சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ராமசாமி இதுபற்றி செய்தியாளர்களிடம் கூறும்போது, தான் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அதனால் வழக்கு விசாரணையை மாஜிஸ்திரேட்டு தள்ளிவைத்துள்ளார் என்று தெரிவித்திருக்கிறாரே, துறை வாயிலாக அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாமென்று அறிவுரை வழங்கப்பட்டதா?

ஜெயலலிதாவும், சசிகலாவும் தங்களை இந்த வழக்குகளிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரி மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு, அதனை நடத்தாமல்

காலம் கடத்தியதைத் தொடர்ந்து, வருமான வரித்துறை உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. 4-9-2006 அன்று உச்ச நீதிமன்றம் நான்கு வாரக் காலத்திற்குள் விசாரணை நீதிமன்றத்தில் ஜெயலலிதாவும் சசிகலாவும் தங்களை விடுவிக்க வேண்டுமென்று தொடுத்த வழக்கை முடிவுசெய்ய வேண்டுமென்று உத்தரவிட்டனர். அவ்வாறே முதன்மை மாநகர மாஜிஸ்திரேட் அவர்கள் விசாரித்து ஜெயலலிதாவின் மனுவினைத் தள்ளுபடி செய்தார். அதாவது 1997ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு தங்களை அந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மனுத் தாக்கல் செய்து, அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டதே, அப்போதே ஜெயலலிதா தரப்பினர் இந்தப் பிரச்சினையைத் துறை வாயிலாகத் தீர்த்துக் கொள்கிறோம் என்று தெரிவித்திருக்கலாம் அல்லவா? அப்போது மத்திய அரசில் தங்கள் கோரிக்கையைக் கேட்கின்ற அரசு இல்லை என்ற காரணத்தால் இந்தக் கோரிக்கையை வைக்கவில்லையா?

எழும்பூர் மாஜிஸ்திரேட்; ஜெயலலிதா தரப்பினரின் விடுவிப்பு மனுவினைத் தள்ளுபடி செய்ததால், சென்னை உயர் நீதிமன்றத்தில் அதனை எதிர்த்து ஜெயலலிதா தரப்பினர் மேல் முறையீடு செய்து கொண்டனர். அந்த மேல் முறையீட்டு மனுவும் 2-12-2006 அன்று உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் இந்த ஆணையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பினர் மேல் முறையீடு செய்து கொண்டார்கள். அந்த மேல் முறையீட்டினை விசாரித்த உச்ச நீதிமன்றம், "சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவில் குறுக்கிடுவதற்கு எந்தவிதமான அடிப்படையான காரணமும் இல்லை; மேல் முறையீட்டினை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு அந்த வழக்கில் எந்தவிதமான நியாயமும் இல்லை" என்று தெரிவித்ததோடு, விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கினை நான்கு மாத காலத்திற்குள் விசாரணை செய்து முடிக்குமாறு 30-1-2014 அன்று தீர்ப்பளித்தது. அந்த நேரத்திலாவது தாங்கள் இப்பிரச்சினையைத் துறைவாயிலாகத் தீர்த்துக் கொள்வதாக ஜெயலலிதா தரப்பினர் சொன்னார்களா என்றால் இல்லை.

உச்ச நீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பில், "குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எத்தகைய சூழலில் தாங்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யவில்லை என்பதை விசாரணை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருப்பதில் இருந்து, இந்த வழக்கில் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்க வேண்டிய கடப்பாடு ஜெயலலிதாவுக்கும், சசிகலாவுக்கும்தான் உள்ளது என்பதை மனதிலே கொள்ள வேண்டும்.

இதே வருமான வரித் துறை பற்றிய வழக்கு ஜெயலலிதா மீது உச்ச நீதிமன்றத்தில் 24-2-2006 அன்று நீதிபதிகள் பி.என். அகர்வால், ஏ.கே. மாத்தூர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. ஜெயலலிதாவின் வக்கீல் அப்போது ஆறு வாரம் அவகாசம் வேண்டுமென்றார்.

அப்போது நீதிபதிகள் "நீதி பரிபாலன முறையையே நீங்கள் கேலிக் கூத்தாக்கி வருகிறீர்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த நீதிமன்ற நடவடிக்கைகளை இழுத்துச் செல்ல முடியும்?" என்றெல்லாம் கேட்டார்களே, அப்போதாவது நாங்கள் துறை வாயிலாக பிரச்சினையைத் தீர்த்துக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? அல்லது துறையிடம் ஏற்கனவே முறையிட்டு, அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்கமாட்டோம் என்று தெரிவித்து விட்டார்களா?

ஏனென்றால் ஏற்கனவே யஷ்வந்த் சின்கா அவர்கள் மத்திய நிதி அமைச்சராக இருந்தபோதே, அவரை வீட்டிற்கு விருந்துக்கு அழைத்து வந்து வருமானவரி வழக்கு பற்றிய பரிந்துரையை ஜெயலலிதா கொடுத்தார் என்று அவரே தனது புத்தகத்தில் குறிப்பிட்டதையும் மறந்து விடுவதற்கில்லை.

இதுபோலத்தான் "வோடபோன்" நிறுவனத்துக்குக் கடந்த கால ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் வருமானவரிச் சட்டத்தில் சலுகை அளித்து, சமரச முடிவு காண முற்பட்டபோது, அதை எதிர்த்து முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பிஸ்வாஜித் பட்டாச்சார்யா உச்ச நீதிமன்றத்தில் பொது நல மனு ஒன்றைத் தாக்கல் செய்தார் என்பதும் மனதிலே கொள்ளத்தக்கது.

கடந்த 18 ஆண்டுக் காலமாக இந்த வழக்கை இழுத்தடித்து, வாய்தாவுக்கு மேல் வாய்தாவாங்கி, நீதிமன்றங்களின்

பொன்னான நேரத்தையெல்லாம் வீணடித்து, உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏற்கனவே தெரிவித்ததைப் போல, கேலிக் கூத்தாக்கி இருக்கிறார்கள். மத்திய அரசும், பிரதமரும், குறிப்பாக வருமான வரித்துறையும் எச்சரிக்கையோடு இந்தப் பிரச்சினையிலே இருக்க வேண்டும். ஜெயலலிதாதரப்பினரின் கோரிக்கையை ஏற்று, வருமான வரித்துறை, இந்த வழக்கில் பல ஆண்டுகள் நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்கிவிட்டு, தற்போது கம்பவுண்டிங் முறையில் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முன்வருமேயானால், அது ஒரு தவறான முன்மாதிரியாக அமைந்து, இதுபோன்ற தவறுகளைச் செய்வோரை ஊக்குவிப்பதாக ஆகிவிடும் என்பதைச் சம்பந்தப்பட்டோர் நினைவிலே கொண்டு, மத்திய அரசும், வருமானவரித் துறையும் இந்தப் பிரச்சினையை அணுகிட வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

12-7-2014

3902. இலங்கைப் பிரச்சினையில் நமது நம்பிக்கை மெய்யாகுமா?

உடன்பிறப்பே,

இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை, 11-7-2014 அன்று இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல். பெரீஸ் சந்தித்துப் பேசியிருக்கிறார். அவர்கள் பேசிய போது, தமிழக மீனவர்களின் பிரச்சினை குறித்து நீண்ட நேரம் உரையாடிய போதிலும், அதற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளரின் கருத்து நமக்கு வருத்தத்தைத் தரக் கூடியதாக அமைந்துள்ளது.

இலங்கை அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் கட்சியின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க என்பவர் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் கூறும்போது, "இந்திய - இலங்கை உடன்படிக்கை என்பது இலங்கை மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட ஒன்று. அது நாட்டு மக்கள் விரும்பி பெற்றுக் கொண்ட உடன்படிக்கை அல்ல. அத்துடன் வடக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களைக் கோரும் எந்த உரிமையும் விக்னேஸ்வரனுக்கு இல்லை" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக இலங்கை அமைச்சர் பெரீஸ், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருடன் பேசிய நேரத்தில் தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது குறித்தும், இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்தும் நீண்ட நேரம் பேசியிருக்கிறார்கள். இலங்கை அரசியல் அமைப்பின் 13வது அரசியலமைப்புச் சட்டப் பிரிவில் திருத்தம் கொண்டு வருவது பற்றியும் விவாதித்திருக்கிறார்கள். இது தவிர, ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினம் அருகே புதிய நகரம் ஒன்றினை இலங்கை அரசு அமைக்கவும், அதன் மூலம் 38 ஆயிரத்து 500 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் உள்ளதாக, வெளியுறவுத் துறை

செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருதீன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

மத்தியில் பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் அதிக அளவில் விடுதலை செய்யப்பட்டதற்காக, பெரீசுக்கு சுஷ்மா சுவராஜ் நன்றி தெரிவித்ததாக சையத் அக்பருதீன் அப்போது செய்தியாளர் களிடம் கூறியிருக்கிறார்.

மேலும், இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் போர்க் குற்ற விசாரணையை இந்தியா ஆதரிக்குமா என்று செய்தியாளர்கள் கேட்ட போது, இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தக் கோரும் தீர்மானம் கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் வாக்கெடுப்புக்கு வந்த போது, இந்தியா அந்த தீர்மானத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்ததோடு, இலங்கைக்கு வல்லுனர் குழுவை அனுப்பி விசாரிக்க வேண்டுமென்று தீர்மானத்தில் இடம் பெற்றிருந்த ஒரு பிரிவை எதிர்த்தே வாக்களித்தது என்றும், அந்தக் கொள்கையிலிருந்து பின் வாங்க மாட்டோம் என்றும் நமது வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்ததாக சில நாளேடுகளில் செய்தி வந்துள்ளது.

இவ்வாறு நமது வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியிருப்பது உண்மையானால், அது கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிலைப்பாட்டையே இந்த அரசின் நிலைப்பாடாகவும் கொண்டிருப்பதை உறுதி செய்வதாக உள்ளது.

2013ஆம் ஆண்டிலேயே அமெரிக்கா சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் இலங்கை அரசைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று வரவிருந்த நேரத்திலேயே நமது "டெசோ" இயக்கத்தின் சார்பில் இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தை இந்தியாவே முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அதற்காகவே 5-3-2013 அன்று இலங்கைத் தூதரகத்தின் முன்பு முற்றுகையிடுகின்ற போராட்டத்தையும், அதே நாளில் நாடாளுமன்றத்திற்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தினோம். அதன் பிறகு அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை 30க்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரிக்கின்றன, அதைப்போல இந்தியாவும் அதனை ஆதரித்திட முன்வர

வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். நாடாளுமன்றத்தில் தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ராஷ்ட்ரீய ஜனதா, சமாஜ்வாடி கட்சி, மார்க்சிஸ்ட், சி.பி.ஐ., திரிணாமுல் காங்கிரஸ், பகுஜன் சமாஜ், ஏன் பா.ஜ.க. போன்ற கட்சிகள் சார்பில் இலங்கை அரசைக் கண்டித்து கடுமையான வாதங்களை அப்போது எடுத்து வைத்தார்கள். குறிப்பாக பா.ஜ.க. சார்பில் பேசிய அந்தக் கட்சியின் மூத்தத் தலைவர்களில் ஒருவரான திரு. யஷ்வந்த் சின்கா அவர்கள், "இலங்கையில் வடக்கு மாகாணத்தில் நிறுத்தப்பட்டுள்ள ராணுவத்தை உடனே அகற்ற இலங்கை அரசை இந்தியா கேட்டுக் கொள்ள வேண்டும். இலங்கை இனப் படுகொலை தொடர்பாக வெளியில் உள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள் நடத்தும் பாரபட்சமில்லாத சர்வதேச விசாரணைக்கு இந்தியா குரல் கொடுக்க வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்கும் நாடாக மட்டும் இந்தியா விளங்கக் கூடாது; இந்தியாவே அந்தத் தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்லும் நாடாக இருக்க வேண்டும்" என்றெல்லாம் பா.ஜ.க.வைச் சேர்ந்த திரு.யஷ்வந்த் சின்கா பேசினார். அதற்குப் பிறகும் அன்றைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இறங்கி வராத காரணத்தால் 12-3-2013 அன்று "டெசோ" இயக்கத்தின் சார்பில் பொது வேலை நிறுத்தமும் நடத்தினோம். சென்னையில் அன்பகம் முன்பு கழகப் பொருளாளர் தளபதி ஸ்டாலின், தமிழர் தலைவர் கி. வீரமணி, தொல். திருமாவளவன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் சாலை மறியலிலே ஈடுபட்டு கைதானார்கள்.

16-3-2013 அன்று நான் விடுத்த ஓர் அறிக்கையில், அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தில், இலங்கையில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற இனப் படுகொலை குறித்தும், அந்தப் படுகொலைக்குக் காரணமான போர்க் குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது குறித்தும், அப்படி அடையாளம் காட்டப்படுபவர்கள் மீது சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தி, குறிப்பிட்ட காலவரையறைக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தை சேர்ப்பதற்கான முயற்சியை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினேன்.

தி.மு. கழகம் இந்த அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், தமிழகத்திலே உள்ள ஆளுங்கட்சிக்காரர்களும், வேறு சிலரும் மத்திய அரசைக் குறை கூற முற்பட்ட நேரத்தில் எல்லாம் "தி.மு. கழகம் அங்கம் வகிக்கும் மத்திய அரசு" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். தி.மு. கழகம் ஏதோ மத்திய அரசில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களைப் பெற்று, அந்த ஆட்சியின் ஸ்திரத் தன்மையை நிர்ணயிக்கும் ஒரு கட்சி என்பதைப் போல அவதூறு பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இலங்கையிலே நடைபெற்ற படுகொலைகளையெல்லாம் தி.மு.கழகம் நினைத்திருந்தால் தடுத்து நிறுத்தியிருக்கலாம் என்றெல்லாம் பேசினார்கள்.

அதுபற்றியெல்லாம் நினைவிலே எடுத்துக் கொள்ளாமல், அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை உரிய திருத்தங்களோடு ஆதரிக்க இந்திய அரசு முன்வர வேண்டுமென்று வலியுறுத்தி, அதற்கு மத்திய அரசிடமிருந்து இசைவான பதில் வராத நிலையில், தி.மு. கழகம் இந்திய அரசின் அமைச்சரவையிலே மேலும் நீடிப்பதென்பது அர்த்தமற்றதாகி விடும் என்று 15-3-2013 அன்று அறிக்கை விடுத்தேன். உடனே மத்திய அமைச்சர்கள் குலாம் நபி ஆசாத், ஏ.கே. அந்தோணி, ப. சிதம்பரம் ஆகியோர் என்னை நேரில் சந்தித்து ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து பேசினார்கள். அப்போது நான் அவர்களிடம், "இலங்கை அரசாலும், இலங்கை அரசின் நிர்வாகத்தில் உள்ளவர்களாலும், இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை போர்க் குற்றங்கள் என்றும், இனப்படுகொலை என்றும் இந்தியா பிரகடனப்படுத்த வேண்டும்; நம்பகத்தன்மை வாய்ந்த சுதந்திரமான பன்னாட்டு ஆணையம் ஒன்றை அமைத்து, இது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க தீர்மானத்தில் இந்தியா திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்றும், அந்தத் திருத்தங்கள் அடங்கிய தீர்மானத்தை இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். இதே கருத்தினை உள்ளடக்கி பிரதமருக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழிகாட்டும் தலைவராக விளங்கிய திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் கடிதமும் அனுப்பினேன்.

தி.மு.கழகம் முன்மொழிந்த திருத்தங்கள் எவற்றையும் இந்திய அரசு சிறிதும் பரிசீலனை செய்யாததால், மத்திய

அமைச்சரவையிலிருந்தும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்தும் தி.மு.கழகம் உடனடியாக விலகிக் கொள்வ தென்று முடிவு செய்து அறிவித்தது. இந்த அறிவிப்பினை தி.மு. கழகம் செய்த அடுத்த நாளே கழகப் பொருளாளர் தளபதி ஸ்டாலின் வீட்டில் சி.பி.ஐ. சோதனை மேற்கொண்டது. 27-3-2013 அன்று அவசரமாகக் கூட்டப்பட்ட கழகச் செயற் குழுவில் தி.மு.க. மத்திய அமைச்சரவையிலிருந்து விலகுகின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தி.மு. கழகம் மத்திய அரசிலிருந்து விலகியது. 2013ஆம் ஆண்டு தி.மு. கழகம் மேற்கொண்ட நடவடிக்கை இது.

2014ஆம் ஆண்டிலும் 21-2-2014 அன்று நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவராக இருந்த தம்பி டி.ஆர். பாலு தலைமையில், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களை நேரில் சந்தித்து, மனித குலத்துக்கே எதிரான போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் புரிந்த இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணை கோரி ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இந்தியா தனித் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்ற மனுவினைக் கொடுத்தார்கள். 4-3-2014 அன்று இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தக் கோரும் தீர்மானத்தை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஜெனீவா மாநாட்டில் தாக்கல் செய்தன. ஆனால் அந்தத் தீர்மானம் உலகத் தமிழர்களின் விருப்பத்தை முழுவதுமாக நிறைவேற்றுகின்ற அளவுக்கு இல்லை. அந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் ஜெனீவாவில் மனித உரிமை ஆணையத்தில் மார்ச் 24 அன்றும், அதன் மீதான வாக்கெடுப்பு மார்ச் 27 அன்றும் நடைபெறுமென்று அறிவித்த போது, அந்த விவாதத்தில் இந்திய அரசு பங்கேற்று, சர்வதேச, சுதந்திரமான, நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணை வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். ஆனால் நடந்தது என்ன?

அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானம் 23 நாடுகளின் ஆதரவோடு நிறைவேறியது. 12 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து இருக்கின்றன. 11 நாடுகள் வாக்கெடுப்பைப் புறக்கணித் திருக்கின்றன. அப்படிப் புறக்கணித்த நாடுகளில் ஒன்றுதான் இந்தியா. அப்போது ஐ.நா.வுக்கான நம்முடைய இந்தியப் பிரதிநிதி, ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் நிறைவேற்றப்பட்டுள்ள

தீர்மானம் இலங்கை போன்ற பிற நாட்டின் விவகாரங்களில் தலையிடுவதாக உள்ளது என்று விமர்சனம் செய்தார். பிற நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாதென்றால், பண்டித நேரு அவர்கள் தென் ஆப்பிரிக்காவின் நிற வெறிப் பிரச்சினையில் தலையிட்டிருக்க முடியுமா? வங்காள தேசத்தில் முஜிபுர் ரகுமானுக்கு இந்திரா காந்தி அம்மையார் உதவிக் கரம் நீட்டி விடுதலைக்கு உறுதுணை புரிந்திருக்க முடியுமா?

கடந்த கால ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே கையாண்ட அதே அணுகுமுறையை தற்போது பா.ஜ.க. அரசும் மேற்கொள்வது சரிதானா? இலங்கையிலே வாழும் இந்தியத் தமிழர்களைப் பாதுகாக்க இந்தியா முன்வர வேண்டாமா? ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி நடை பெற்ற போது இலங்கையிலே வாழும் இந்தியத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா நடந்து கொள்ள வேண்டுமென்று பா.ஜ.க.வைச் சேர்ந்த யஷ்வந்த் சின்கா நாடாளுமன்றத்தில் பேசியது இன்று மறந்து போய் விட்டதா? தங்கள் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு பிரதமர் மோடி தலைமையிலே உள்ள பா.ஜ.க. ஆட்சியில் ஏற்படும் என்று உலகத் தமிழர்கள் எல்லாம் நம்பிக் கொண்டிருக்கிறார்களே; கடந்த கால ஆட்சியிலே எடுத்த முடிவினைத்தான் இந்த ஆட்சியிலும் எடுப்போம் என்றால், ஆட்சி மாற்றம் எதற்காக? ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லையா? ஈழத் தமிழர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்த பா.ஜ.க. ஆட்சியில் விடிவு காலம் ஏற்படும் என்று இன்னமும் நம்புகிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நமது நம்பிக்கை மெய்யாகுமா?

அன்புள்ள,

மு.க.

15-07-2014

3903. வாழ்க பெருந்தலைவர் காமராஜரின் புகழ்!

உடன்பிறப்பே,

இன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 112-வது பிறந்த நாள்! அவரைப் பற்றிய ஒரு சில செய்திகளை இன்றைய கடிதத்தில் நினைவு கூர்வது அவருக்குக் கழகம் செலுத்துகின்ற மரியாதையாக இருக்குமென்று கருதுகிறேன்.

"கல்வி வளர்ச்சி நாள் விழா கொண்டாட அவசர உத்தரவு - ஆசிரியர்கள் தவிப்பு" என்ற தலைப்பில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு "தினமலர்" நாளேட்டின் சிறப்பு நிருபர் வெளியிட்ட செய்தியில்,

> "முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15ம் தேதி, கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டது. இவ்விழாவையொட்டி, அனைத்துப் பள்ளிகளிலும், பல்வேறு வகையான போட்டிகளை முன் கூட்டியே நடத்தி, அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, ஜூலை 15ம் தேதி பரிசுகள் வழங்கி, விழா கொண்டாடப்பட்டு வந்தது. இதற்காக, அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்குத் தனி நிதி உதவியும் வழங்கப்பட்டது. இந்த விழாவைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதற்காக, முந்தைய (தி.மு.கழக) அரசு தனி சட்டமும் கொண்டுவந்து அமல்படுத்தியுள்ளது. இந்நிலையில், இன்று காமராஜர் பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது. ஆனால், இவ்விழாவைக் கொண்டாடுவது குறித்தோ, முன்கூட்டியே போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படுவது குறித்தோ, தமிழக அரசு முன்கூட்டியே எவ்வித அறிவிப்பையும் பள்ளிகளுக்குத் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

நேற்று மாலை அவசர அவசரமாக அனைத்து மாவட்ட கல்வி அதிகாரிகள் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, "பேக்ஸ்", "இ. மெயில்" மூலம் காமராஜர் பிறந்த நாள் விழாவை அனைத்து வகையான பள்ளிகளிலும் கொண்டாட வேண்டும். அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு விழாவிற்கான செலவுத் தொகை பின்னர் வழங்கப்படும் என அரசு தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. கடைசி நேரத்தில், திடீரென அரசு இப்படி உத்தரவிட்டுள்ளதால், விழாவை எப்படி நடத்துவது என தெரியாமல் ஆசிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்."

இவ்வாறு "தினமலர்" நாளேட்டில் செய்தி வந்தது.

காமராஜர் பிறந்த நாளுக்கு முதல்நாள் திடீரென இவ்வாறு அவசரமாக அரசு அறிவிக்கக் கூட காரணம் என்ன? 14-7-2011 அன்று நான் விடுத்த ஓர் அறிக்கையில்;

2007-2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பள்ளிக்கும் தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு - பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என்று ஒவ்வொரு பள்ளியிலும் கொண்டாடப்பட வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் அறிவித்ததோடு அதனைச் சட்டமாகவும் கொண்டு வந்து தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றினோம். ஆனால் இந்த ஆண்டு அரசின் சார்பில் செய்துள்ள அறிவிப்பில் கூட - பெருந்தலைவர் காமராஜர் 109ஆம் பிறந்த நாள் அன்று அவரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும் மாலை அணிவிப்பார்கள் என்று மட்டுமே விளம்பரம் செய்யப்பட்டுள்ளதே தவிர - அந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் என்றுகூட அறிவிக்கப்படவில்லை என்றெல்லாம் தெரிவித்திருந்தேன்.

அதன் பின்னர்தான் அரசாங்கம் விழித்துக்கொண்டு காமராஜர் பிறந்த நாளைக் கொண்டாட முடிவு செய்தது. அதனால்தான் இந்த ஆண்டு என்னதான் இந்த ஆட்சியினர் செய்கிறார்கள் என்று இன்றுவரை பார்த்தேன். இன்றைய தினம் அரசின் சார்பில் வெளிவந்துள்ள அரைப்பக்க விளம்பரத்தில், முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் கடற்கரை காமராஜர் சாலையிலே

உள்ள பெருந்தலைவர் காமராஜரின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர, பள்ளிகளில் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடும்படி எந்த அறிவிப்பும் இல்லை.

காமராஜர் அவர்களுடைய பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடுவோம் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் அறிவித்து, அந்த அறிவிப்பு தொடர்ந்து நிரந்தரமாகச் செயல்பட குறுக்கே வருகின்ற அரசு எப்படியிருக்குமோ என்ற சந்தேகத்தினால் - அதை ஒரு சட்டமாகவே ஆக்கி, ஜூலை 15 என்றால் அன்றைய தினம் காமராஜருடைய பிறந்த நாளைச் சட்டப்படி பள்ளிகளில் கொண்டாட வேண்டுமென்று - சட்டப்பேரவையிலேயே சட்டம் நிறைவேற்றி, அதை கழக ஆட்சியில் உறுதிப்படுத்தியிருக்கிறோம்.

ஏன் சட்டத்தை மாற்ற முடியாதா என்று கேட்கக் கூடும். மாற்றலாம், ஆனால் ஒரு அறிவிப்பை மாற்றுவது சுலபம். அதைக் கண்டு கொள்ளாமலே இருந்து விட்டால் தானாகவே மாறிவிடும். அல்லது வேண்டுமென்றேகூட அறிக்கை விட்டு அதை மாற்றி விடலாம். ஆனால் சட்டமாகச் செய்தால், அதைத் திரும்பப் பெற, மாற்றுவதற்கு, சட்டசபையைக் கூட்டியாக வேண்டும். சட்டமன்றத்தைக் கூட்டி, இப்படிக் கழக ஆட்சிக் காலத்தில் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்தபோது காமராஜருடைய பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாள் என்று குறிப்பிட்டு கொண்டாடினார். அதற்காக ஒரு சட்டம் செய்தார், அந்தச் சட்டத்தை நாங்கள் விலக்கிக் கொள்கிறோம், ரத்து செய்கிறோம் என்று சொல்ல வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட சட்டத்தை ரத்து செய்துவிட்டு வெளியிலே நடமாட முடியுமா என்பது வேறு விஷயம். அதனால் தான் இதைச் சட்டமாகவே ஆக்கினோம்.

2006 - சட்டமன்றத் தேர்தலின் போது திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கை யில், 'காமராஜர் பிறந்த நாளாம் ஜூலை 15ஆம் தேதியைக் கல்விக் கண் திறந்த நாளாக அறிவித்துப் பள்ளிகளில் விழா எடுப்போம்' என வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டில் கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த நாளான ஜூலைத் திங்கள் 15ஆம் நாளைக் 'கல்வி வளர்ச்சி நாள்' என அரசு அறிவித்துக் கழக ஆட்சியில் 24.5.2006

அன்று ஆணை வெளியிட்டு, பின்னர் சட்டமாக்கப்பட்டது. அதன்படி, 15.7.2006 அன்று தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் காமராஜர் அவர்களின் திருவுருவப் படம் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, மாணவ, மாணவிகளுக்கு, பேச்சு, கட்டுரை ஓவியப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுப் பரிசுகள் அளிக்கப்பட்டன. அத்துடன் அவ்விழாவில் 2 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுத் தமிழகம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பின்னர், 15.7.2007 அன்று கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டபோது, சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டமும், 15.7.2008 அன்று கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டபோது, முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை வாழைப்பழம் வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டு; கழக ஆட்சி நடைபெற்றவரை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களை தி.மு. கழகம் பெருமைப்படுத்திய ஒரு சில நிகழ்வுகளை நினைவு கூர்ந்திட வேண்டுமென்றால், காமராசர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற வேளையில் அவர் சட்டப்பேரவை உறுப்பினர் அல்ல. ஆனால், 6 மாத காலத்தில் அவர் பேரவை அல்லது மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதனால் அப்பொழுது குடியாத்தம் இடைத்தேர்தலில் காமராசர் போட்டியிட்டார். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் “குணாளா, குலக்கொழுந்தே” என எழுதி, பெருந் தலைவர் காமராசரின் வெற்றிக்குப் பாடுபடுவோம் எனக் கூறி ஆதரவு தெரிவித்தார். அதன்படி, தி.மு. கழகம்; காமராசரின் வெற்றிக்காகப் பாடுபட்டு அவரை வெற்றிபெறச் செய்தது.

சென்னை மாநகராட்சி தி.மு. கழக நிர்வாகத்தில் இருந்தபோது பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்குப் பெரியார் பாலத்திற்கு அருகில் சிலை அமைத்து, அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களைக் கொண்டு 9.10.1961 அன்று அச்சிலையைத் திறந்து வைத்தது கழகம்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் 2.10.1975 அன்று மறைந்தபின், கிண்டி காந்தி மண்டபத்திற்கு அருகில் அவருக்கு நினைவு மண்டபம் எழுப்பியது. அந்த நினைவு மண்டப முகப்பில் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் மார்பளவுச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

1990-இல் சென்னை விமான நிலையத்தில் உள்ள உள்நாட்டு விமானப் போக்குவரத்து நிலையத்திற்கு "காமராசர் முனையம்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சென்னைக் கடற்கரைச் சாலைக்கு 1997-இல் "காமராசர் சாலை" எனப் பெயர் சூட்டப்பட்டது.

கடற்கரைக்கு அருகில் கட்டடங்கள் கட்டுவதற்குத் தடை இருந்த காரணத்தால், குமரி முனையில் காமராசரின் அஸ்திவைக்கப்பட்டிருந்த இடத்தில் மணி மண்டபம் கட்டமுடியாத நிலை இருந்தது. அதன்பின், அப்போதைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் பேசி, கோரிக்கை வைத்து, அனுமதி பெற்று, காமராசர் மணி மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 2.10.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.

2006- இல் பெருந்தலைவர் காமராசர் பெயரில் அரசு விருது ஒன்றை நிறுவி, சமூகப் பொதுத் தொண்டுகளில் சிறந்து விளங்கும் சான்றோர் ஒருவரை ஆண்டுதோறும் தேர்வு செய்து அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியுடன் பெருந்தலைவர் காமராசர் விருது வழங்கப்பட்டது.

2006-இல் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த ஜூலை 15 ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாள்" எனச் சட்டமியற்றி ஆண்டுதோறும் ஒவ்வொரு பள்ளிக்கும் தனி நிதி ஒதுக்கீடு செய்து கல்வி வளர்ச்சி நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் பேருந்து நிலையம் 77 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, 19.7.2010 அன்று பெருந்தலைவர் காமராசர் பெயர் சூட்டப்பட்டது.

இந்தியாவில் நெருக்கடி நிலை கொண்டு வரப்பட்டு, தலைவர்கள் எல்லாம் சிறையிலே வாடியபோது, சுதந்திர இந்தியாவில் ஜனநாயகம் வீழ்ச்சியடைகிறது என்பதையும், தனது

தேசிய சகாக்கள் சிறைவாசம் அனுபவிக்கிறார்கள் என்பதையும் தாங்கிக்கொள்ள முடியாத காமராசர் உடல் நலிவுற்றுப் படுத்த படுக்கையானார்.

ஒரு நாள் காலை நானும் அன்றைய கல்வி அமைச்சர் நாவலரும் காமராஜர் அவர்களைக் காண அவரது இல்லம் சென்றோம். அவர் அருகே அமர்ந்த என்னைக் கண்டதும் அவரது கண்கள் கலங்கின. மெதுவாகத் தொட்டேன். தழுவிக் கொண்டார். அவரது கண்கள் நீர்வீழ்ச்சிகளாயின. 'தேசம் போச்சு! தேசம் போச்சு' என்று உரக்கக் கூவினார். நான் வாய்விட்டுக் கதறி அழுது விட்டேன். நாவலர் கண்ணீர் வடித்தவாறு எங்களிருவரையும் தேற்றினார். 'அய்யா! நீங்கள் சொல்லுங்கள்! இப்போதே நாங்கள் அனைவரும் ராஜினாமா செய்து விடுகிறோம்! இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த, சர்வாதிகாரத்தை அழிக்க நீங்கள் தலைமையேற்று அணி நடத்துங்கள்! உங்கள் பின்னால் நாங்கள் வரத்தயார்!' என்றேன். "பொறுமையாக இருங்கள்! அவசரப்படாதீர்கள்! இப்போது இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் ஜனநாயகம் இருக்கிறது. நீங்கள் ராஜினாமா செய்தால் அதுவும் போய்விடும். கொஞ்ச நாள் பொறுமையாக இருங்கள்" என்று அவர் அறிவுரை கூறினார்.

அப்படிப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 112வது பிறந்த நாள் விழாதான் இன்று! மறைந்த தலைவர்கள் மற்றும் சான்றோர்கள் யாராயினும் அவர்களுக்கும் நமக்கும் எவ்வளவு கொள்கை வேறுபாடுகள், கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் அவர்களின் சிறப்புகளையும், சீலமிகு செயல்களையும், செயற்கரிய மக்கள் பணிகளையும், தியாகங்களையும், ஆற்றலையும், என்றைக்கும் நாம் மறந்ததில்லை; மறவாமல் போற்றிக் கொண்டிருக்கிறோம்.

கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, காவேரிப் பிரச்சினை, நெருக்கடி கால நிலை என்பன போன்றவற்றில் ஒவ்வொரு முடிவிற்கு முன்பும் அவர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் ஆயிற்றே என நினைக்காமல், அனுபவத்தில் மூத்த அரசியல் தலைவர் என்ற முறையில் அவரை நான் அணுகி அவருடைய வீட்டிற்கே சென்று அவருடைய கருத்துக்களைத் தெரிந்துகொண்டு அவ்வாறே செயல்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்து நடத்திய இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது மாநாட்டிற்கு வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றி அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்தவரே காமராஜர் அவர்கள்தான்.

இவ்வாறு எத்தனையோ நினைவுகள்!

மாற்றாரை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மாலை நேரப் பொதுக் கூட்டங்களில் பேசும்போது எப்படியெப்படியோ தாக்கிக் கொள்கிறோம். தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி கோலோச்சிய பிறகு, தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தது. அதற்காக தி.மு. கழகத்திடம் வெறுப்பைக் காட்ட வேண்டிய பெருந்தலைவர் அவ்வாறு நடந்து கொண்டதில்லை. அதனால்தான் அவர் பெருந்தலைவர் ஆனார். அஃதே போல பேரறிஞர் அண்ணா அவர்களும், அவருக்குப் பின் நானும் பெருந்தலைவர் காமராஜரிடம் எந்த அளவுக்கு மரியாதை செலுத்தினோம், பழகினோம் என்பதைத் தமிழகம் நன்கறியும். அந்தப் பெருந்தலைவர் பிறந்த நாள் விழாவான இன்று அவருக்கு என் புகழாஞ்சலியைச் செலுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். வாழ்க பெருந்தலைவர் காமராஜரின் புகழ்!

அன்புள்ள,

மு.க.

16-7-2014

3904. கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படாதீர்!

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டப்பேரவை 10ஆம் தேதி தொடங்கிக் கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகிறது. எனது உடல் நலம் குறித்து, அங்கே நான் அமர்வதற்கு இந்த ஆட்சியினர் முறையான இடவசதி செய்து தராத காரணத்தால், நான் சட்டப்பேரவைக்குச் செல்வதில்லை என்றாலும், அங்கே நடைபெறும் நடைமுறைகளை ஏடுகள் வாயிலாகவும், தொலைக்காட்சி வாயிலாகவும் கவனித்து வருகிறேன். ஆனால் அந்த நடைமுறைகள் வழக்கம் போலவேதான் உள்ளன. வழக்கம் போலவே என்றால், அனைத்துத் துறைகளுக்கான அறிவிப்புகளையும் முதலமைச்சரே 110வது விதியின் கீழ் படித்தல்; வெளிநடப்புகள் அல்லது வெளியேற்றங்கள்; எதிர்க் கட்சியினருக்கு வாய்ப்பு தராமை; ஆளுங்கட்சி பற்றியோ, முதலமைச்சர் பற்றியோ யாராவது எதிர்க்கட்சியினர் பேச முற்பட்டால், உடனே குறிப்பிட்ட சில அமைச்சர்கள் குறுக்கிட்டு அவர்களைப் பேச விடாமல் செய்தல்; அமைச்சர்கள் தங்கள் துறை சம்பந்தப்பட்ட மானியங்களுக்குப் பதில் அளிக்கும்போது முதலமைச்சருக்குப் பாராட்டுப் புராணம் படித்தல்; அத்துடன் என்னை எந்த அளவுக்குக் கடுமையாக விமர்சனம் செய்து தாக்கிப் பேசிட முடியுமோ அந்த அளவுக்குப் பேசுதல் என்ற இந்த நடைமுறைகள் அப்படியேதான் தொடருகின்றன.

தொழில் அமைச்சர் பேரவையில் முதலில் எங்கள் மீது தெரிவித்த குற்றச்சாட்டு, தி.மு.க. தலைவரும், உறுப்பினர் ஸ்டாலினும் தமிழகத்திலிருந்து முதலீட்டாளர்கள் கர்நாடகாவிற்கு சென்று விட்டதாக ஒரு தவறான கருத்தை மக்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள். எந்தெந்த தொழிற்சாலைகள் என்று விவரத்தைக் கூறவில்லை என்பதாகும். ஆனால் அதே அமைச்சர் அளித்த

பதிலில், "கர்நாடக முதல்வரும், அதிகாரிகளும் கோவையில் நடத்திய ஒருகூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரிடமும் விருப்ப வெளிப்பாட்டு விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டதன்பேரில் சிலர் அதனைக் கொடுத்துள்ளார்கள்" என்று அவரே தெரிவித்திருப்பதிலிருந்தே, நான் குறிப்பிட்டவாறே கோவையில் அப்படி ஒரு கூட்டம் நடைபெற்றதும், கர்நாடகா முதலமைச்சர் அங்கே வந்து தமிழ்நாட்டுத் தொழில் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்ததும் உண்மை என்பது தெளிவாகிறதா அல்லவா? மேலும் அந்த அமைச்சர் தன் பேச்சில், "குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம், வரிச்சலுகையும் தருகிறோம் என்று சொல்லி, ஆந்திர மாநிலத்திற்கு அழைக்கிறார்கள். அதுபோல ஆந்திர முதல்வர் இந்த வழியாகச் சென்னைக்கு வந்து செல்லும் போதெல்லாம் நம் தொழிலதிபர்களை அழைத்துக் குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம் என்று பேசுவார்" என்று கூறியிருப்பதில் இருந்தே, தமிழகத்தின் நிலைமை என்ன என்று தெரிகிறதே? இவர்கள் ஆளுகின்ற ஒரு மாநிலத்திற்கு வேறொரு மாநில முதல் அமைச்சர் வந்து கூட்டம் போட்டுத் தொழில் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள் என்றால், அதற்காக இவர்கள் வெட்கப்பட வேண்டுமே தவிர, எங்கள் மீது பாய்ந்து விழுந்து என்ன பயன்?

தொழில் அமைச்சர் பேரவையில் கூறியிருக்கின்ற குற்றச்சாட்டு, உண்மையில் அவர் கூறுவது அல்ல. கோவையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஏப்ரல் 1ஆம் தேதியன்று முதலமைச்சர் ஜெயலலிதா பேசியதுதான். முதல் அமைச்சர் அவ்வாறு பேசியதற்கு 3-4-2014 அன்றே "முரசொலி"யில் விரிவாகப் பதில் எழுதிவிட்டேன். இருந்தாலும் துறையின் அமைச்சர் பேரவையில் அதே கருத்தைப் பேசியிருக்கிறார்.

இந்தியாவில் எத்தனையோ மாநிலங்கள் இருக்க, கர்நாடக மாநில முதலமைச்சர் தமிழகத்திலே உள்ள ஒரு நகரில், தமிழகத்திலே உள்ள தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்துக் கர்நாடகாவில் வந்து தொழில் தொடங்குங்கள் என்று அழைக்கிறார் என்றால், அதற்கு என்ன அர்த்தம் என்பதைச் சாதாரண ஒரு தொழில் அதிபர் கூடப் புரிந்து கொள்ள முடியும்.

கர்நாடக முதலமைச்சர் கோவையில் கூட்டம் போட்டுத் தமிழக தொழில் முதலீட்டாளர்களை அழைக்கிறார் என்று

நாங்களாகச் சொல்லி விடவில்லை. "தினமலர்" நாளேடு தி.மு.கழக இதழ் அல்ல! தி.மு.க.வைக் கடுமையாக விமர்சிக்கின்ற ஏடுதான். அந்த இதழில் ஜனவரி 22ஆம் தேதி ஒரு செய்தி வந்தது. அதன் தலைப்பே, "தள்ளி விடும் தமிழகம்; கவர்ந்திழுக்கும் கர்நாடகம் - கை நழுவிய 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு" என்பதாகும். அந்தச் செய்தியில், "கொங்கு மண்டலத் தொழிலதிபர்களின், 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் கர்நாடகாவிற்குச் செல்ல உள்ளன. தமிழகத்தில் மோசமாகி வரும் முதலீட்டுச் சூழல்தான் இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. இந்த நிலை தொடர்ந்தால், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இருந்தும், வேறு மாநிலங்களுக்குத் தொழில்கள் இடம்பெயர வாய்ப்பு உள்ளது. தமிழக - கர்நாடகா எல்லையில் உள்ள சாம்ராஜ் நகர் மாவட்டத்தில், 1,400 ஏக்கரில் தொழில் மண்டலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு முதலீட்டாளர்களை இழுக்கும் வகையில், கோவையில், கடந்த, 20ம் தேதி சாம்ராஜ் நகர் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டில் பேசிய கர்நாடக முதலமைச்சர் சித்தராமய்யா "கர்நாடகாவில் தொழில் துவங்க வாருங்கள், அனைத்து வசதிகளையும் செய்து தருவோம்" என்று தமிழக தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த மாநாட்டின் விளைவாக, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட கொங்கு மண்டலப் பகுதிகளில் தொழில் நடத்தும் ஏறத்தாழ 200 தொழில் அதிபர்கள், 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கு, சாம்ராஜ் நகரில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளனர்" என்றெல்லாம் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியைத்தான் நாங்கள் குறிப்பிட்டோம். முதலமைச்சரும், துறை அமைச்சரும் "தினமலர்" நாளிதழ் செய்திக்குத்தான் மறுப்பு தெரிவிக்க வேண்டுமே தவிர, எங்கள் மீது கோபிப்பதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

இந்த மாநாட்டிற்குப் பிறகு, கர்நாடகா தொழில் வர்த்தக சபை கூட்டமைப்பின் உதவி செயலாளர், விஜயகுமார் என்பவர் "கோவையில் நடத்தப்பட்ட மாநாடு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. ஒரே நாளில், 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவுக்கு சாம்ராஜ் நகர் தொழில் மண்டலத்தில் முதலீடு செய்ய முன்வந்திருப்பது பெரிதும் மகிழ்ச்சியை அளித்துள்ளது" என்று கூறி, அதுவும் நாளேட்டில் அப்போதே வெளிவந்தது.

குறிப்பாக, "திருப்பூரைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனம் ஒன்று, 2000 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளது. கோவையைச் சேர்ந்த பெண் தொழிலதிபர் ஒருவர், அந்தத் தொழில் மண்டலத்தில், 1000 கோடி ரூபாய் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார்" என்று செய்தி வந்ததா? இல்லையா? இதுபற்றி அமைச்சர் அப்போது ஏன் பதில் கூறவில்லை? அப்போது விட்டுவிட்டு இப்போது சட்டப்பேரவையில் வந்து எந்தெந்த தொழிற் சாலை, எவ்வளவு முதலீடு என்று சண்டப் பிரசண்டம் செய்தால் என்ன அர்த்தம்?

தமிழகத்திலிருந்து இவ்வாறு தொழில் முதலீடுகள் வெளி மாநிலங்களுக்குச் செல்ல என்ன காரணம் என்பது பற்றியும் பலரிடம் பேட்டி கண்டு "தினமலர்" நாளேடு 24-1-2014 அன்று அரைப் பக்க அளவிற்குச் செய்தி வெளியிட்டது. அந்தச் செய்திக் கட்டுரையின் தலைப்பைப் பார்த்தாலே நிலைமையைப் புரிந்துகொள்ள முடியும். என்ன தலைப்பு தெரியுமா? "தமிழகத்தை ஆட்டிப்படைக்கும் லஞ்சம், மின்வெட்டு, நில மதிப்பு - மேற்கு மாவட்ட முதலீடுகள் கர்நாடகா செல்லும் மர்மம் இது தான்!" - இப்படியெல்லாம் நாளேடுகளில் வருகின்ற செய்திகளைப் பார்த்து உண்மையைப் புரிந்து கொள்ளாமல் எதிர்க்கட்சிகள் மீது கோபப்படுவது நல்லதா?

"தமிழகத்தை ஆட்டிப் படைக்கும் லஞ்சம்" என்றே தலைப்பு செய்தி வெளியிட்டு, எத்தனை நாட்களாகிறது? தமிழக அரசு அதற்குப் பதிலளித்திருக்க வேண்டாமா?

முதலமைச்சர் ஜெயலலிதா கோவையில் பேசும்போது, அவருடைய மூன்றாண்டு கால ஆட்சியில் 33 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 31,706 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட 33 நிறுவனங்களில், இதுவரை எத்தனை நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிலைத் தொடங்கியிருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்க முடியுமா? புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல நிறுவனங்களுடன் போடலாம். உண்மையில் தொழில் தொடங்கினால்தானே பயனளிக்கும்.

முதலமைச்சர் பேசிய தேர்தல் கூட்டத்தில் 31,706 கோடி ரூபாய்க்கு 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டதில்,

10,660 கோடி ரூபாய் முதலீடுகள்தான் கிடைக்கப் பெற்றதாக அவரே தெரிவித்திருக்கிறார். ஆனால் தொழில் துறை அமைச்சர் சட்டப்பேரவையில், கடந்த மூன்றாண்டுகளில் 68 திட்டங்களில் தமிழகத்தில் ஈர்த்த மொத்த முதலீடு 46,602.72 கோடி ரூபாய் என்று கூறுகிறார் என்றால் முதலமைச்சர் கூறியது உண்மையா? அமைச்சர் சட்டப்பேரவையில் கூறியது உண்மையா?

இன்னும் கூற வேண்டுமேயானால், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே முதலமைச்சர் ஜெயலலிதா இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பற்றியெல்லாம் விரிவாகப் பேசி, அதற்கு அப்போதே நான் பதிலளித்துவிட்டேன். இப்போது அமைச்சர் அதையேதான் திரும்பப் பேசியிருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேரவையில் படித்த பதிலிலேயே, "கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமும், அரசாணைகள் மூலமும் 54 தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்வதாகச் சொல்லப்பட்ட தொகை 66,664 கோடி ரூபாய் ஆகும். இதில் 15,982 கோடி ரூபாய்க்கான 12 தொழில்கள் தொடங்கப்படவே இல்லை" என்று கூறினார்.

இதிலிருந்து கழக ஆட்சியில் 50,682 கோடி ரூபாய்க்கான 42 தொழில்கள் தொடங்கப்பட்டதாக ஜெயலலிதாவே பேரவையில் ஒப்புக் கொண்டிருக்கிறார் அல்லவா? அதுவே தி.மு.கழக ஆட்சியில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டதற்கான ஆதாரம் இல்லையா?

அ.தி.மு.க. ஆட்சியில் 2011ஆம் ஆண்டு மே மாதம் முதல் இன்று வரை 1 லட்சத்து 46 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் 17 இந்திய மற்றும் பன்னாட்டுப் பெரும் நிறுவனங்களுடன் 26,625 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன என்றும், அதில் 10,660 கோடி ரூபாய் முதலீடுகள் கிடைக்கப்பெற்று, 10,022 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவித்திருக்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப் பட்டது 26,625 கோடி ரூபாய்க்கு! ஆனால் முதலீடுகள் கிடைக்கப் பெற்றது வெறும் 10,660 கோடி ரூபாய்க்குத் தான்! வெறும் நாற்பது சதவிகிதம்தான்! 1 லட்சத்து 46 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத்தக்க வகையில் ஒப்பந்தங்கள் போடப்பட்டதாகவும்,

10,022 பேருக்கு மட்டுமே வேலை கிடைக்கத் தக்க அளவிற்குத் தான் முதலீடுகள் கிடைக்கப்பெற்றதாகவும் முதலமைச்சர் ஜெயலலிதாவே பேரவையில் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்றால், நேற்றையதினம் தொழிலமைச்சர் சட்டப்பேரவையில் கிட்டத்தட்ட 1,62,667 பேருக்கு வேலை வாய்ப்பைப் புரட்சித் தலைவி அம்மா உருவாக்கியிருக்கிறார் என்று கூறியது உண்மைக்கு மாறான தகவல்தானே? பேரவையில் உண்மைக்கு மாறான தகவலைக் கூறலாமா? இதுதான் தொழில் வளர்ச்சிக்கான அடையாளமா?

4-2-2014 தேதிய நாளிதழ் ஒன்றுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில், அன்றைய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் "மத்திய அரசின் தொழில் துறை சார்பில் ஒரு பிரமாண்டமான தொழில் வளர்ச்சித் திட்டம் தமிழகத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான முதலீட்டில் 90 சதவிகிதம் வரை மத்திய அரசு கடனாக வழங்கும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு ஆர்வம் காட்டவில்லை" என்று தொடங்கித் தமிழக அரசு எவ்வாறு தொழில் வளர்ச்சியில் அக்கறை இல்லாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தாரே; முதலமைச்சர் ஜெயலலிதா அதற்கென்ன பதில் கூறப்போகிறார் என்று நான் அப்போதே கேட்டிருந்தேனே; முதலமைச்சரோ, துறையின் இந்த அமைச்சரோ ஏதாவது பதில் கூறினார்களா?

தி.மு.கழக ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றிய பெண்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 93 ஆயிரம் ஆகும். ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற பெண்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 78 ஆயிரம். வேலைவாய்ப்பினை இழந்த பெண்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 15 ஆயிரம் ஆகும். இதுதான் தொழில் வளர்ச்சிக்கான அடையாளமா?

சிமெண்ட் விலை பற்றியும் பேசிய அமைச்சர் என்னுடைய ஆட்சியிலேதான் விலை உயர்ந்தது என்று நீண்ட நேரம் பேசியிருக்கிறார். ஆனால் அப்போது விலை உயர்ந்தபோது கழக அரசு எவ்வாறு நடவடிக்கை எடுத்தது, இப்போது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றுதான் நான் கேட்டிருந்தேன். கழக ஆட்சியில் சிமெண்ட் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் அதிபர்களை எல்லாம் அழைத்துப் பேசினோம். விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அவர்களும்

அதனையேற்று சிமெண்ட் விலையை மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 20 குறைக்க ஒப்புக் கொண்டார்கள். அப்போதே அது செய்தியாக வெளிவந்தது. மேலும் சிமெண்டைக் கொள்முதல் செய்து, ஒரு மூட்டை சிமெண்ட் சலுகை விலையில் ரூ. 200/- வீதம் விற்பனை செய்ய அரசு ஆணை பிறப்பித்தோம். 2007-2008ஆம் ஆண்டில்,

31-3-2008 வரை 48,496 மெட்ரிக் டன் சிமெண்டும் - 2008-2009ஆம் ஆண்டில் 5 லட்சத்து 63 ஆயிரத்து 955 மெட்ரிக் டன் சிமெண்டும் - 2009-2010ஆம் ஆண்டில் 9 லட்சத்து 79 ஆயிரத்து 330 மெட்ரிக் டன் சிமெண்டும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறு அரசே தனியார் நிறுவனங்களுடன் போட்டி போட்டு விலை குறைத்து விற்க நடவடிக்கை எடுத்ததால், வெளிச் சந்தையிலும் சிமெண்ட் விலை கணிசமாகக் குறைந்தது. ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சியினர் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? எந்த சிமெண்ட் உற்பத்தி நிறுவனத்தையாவது அழைத்து விலையைக் குறைக்கப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்களா? தற்போது சிமெண்ட் விலை உயர்ந்திருப்பது பற்றி 19-6-2014 அன்று வெளியான "இந்து" இதழில் வந்துள்ள செய்திப்படி மே 31ஆம் தேதி ஒரு மூட்டை சிமெண்ட் 285 ரூபாய் என்பது, 17-6-2014 அன்று 350 ரூபாயாக உயர்ந்துள்ளது. "இந்து" மாத்திரமல்ல; 21-6-2014 தேதிய "தினமலர்" செய்திப்படி, கடந்த வாரம் ஒரு மூட்டை சிமெண்ட் 310 ரூபாய் என்பது, இந்த வாரத்தில் 340 ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறதாம். கருணாநிதி ஆட்சியில்தான் சிமெண்ட் விலை உயர்ந்தது என்று சட்டப்பேரவையில் அமைச்சர் பேசினாரே, அவர் இந்த நாளேடுகளில் வந்துள்ள செய்திக்கு என்ன பதில் கூறப்போகிறாராம்?

சிமெண்ட் உற்பத்தி பற்றியும் தொழில் அமைச்சர் பேரவையிலே பேசியிருக்கிறார். தமிழக அரசு இரண்டு சிமெண்ட் தொழிற்சாலைகளை ஆலங்குளத்திலும், அரியலூரிலும் நடத்தி வருகிறது. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில், 2010-2011ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியில் உற்பத்தி 2 இலட்சத்து 3 ஆயிரத்து 40 டன்கள். அ.தி.மு.க. ஆட்சியில், 2011-2012ஆம் ஆண்டில் அங்கே சிமெண்ட் உற்பத்தி 1 இலட்சத்து 34 ஆயிரத்து 640 டன்கள். 68 ஆயிரத்து 400 டன்கள் குறைவு. அதுபோலவே

அரியலூர் சிமெண்ட் அரசு சிமெண்ட் தொழிற்சாலையில் கழக ஆட்சியில் உற்பத்தி 4 இலட்சத்து 90 ஆயிரத்து 35 டன்கள். அ.தி.மு.க. ஆட்சியில் உற்பத்தி 3 இலட்சத்து 88 ஆயிரத்து 55 டன்கள். கழக ஆட்சியை விட 1 இலட்சத்து ஓராயிரத்து 980 டன்கள் குறைவு. இதுதான் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருகியிருப்பதற்கான அடையாளமா?

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பற்றி சுப்பிரமணியம் சுவாமி அவர்களே அண்மையில் கூறும்போது, "தொழில் வளம், பொருளாதார வளர்ச்சி எதுவுமே இல்லை. இங்கிருக்கும் தொழில் அதிபர்களை, கர்நாடக முதல்வர் சித்தராமையா, தங்கள் மாநிலத்துக்குக் கவர்ந்து போயிருப்பதாக அறிந்தேன். தமிழகத்தில் இருந்து 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடுகள், கர்நாடகத்துக்குச் சென்ற முதலீட்டை, இங்கேயே தக்கவைக்க, தமிழக அரசு எந்த முயற்சியும் எடுக்காதது ஏன்? கடுமையான மின் பற்றாக்குறையும், அரசு அதிகாரிகளின் ஒத்துழையாமையும் எல்லா நிலைகளிலும் இருப்பதால், வெளி மாநிலங்களில் இருந்து யாரும் தமிழகத்தில், முதலீடு செய்ய முன்வரவில்லை. தகவல் தொழில்நுட்பத் துறையில், தமிழகம், நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலை மாறியிருக்கிறது. அதற்குக் காரணம், மாநில அரசு நிர்வாகம் சரியில்லாததே" என்று தெரிவித்திருக்கிறார் என்றால், முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களே, எங்கள் மீது கோபப்பட்டு என்ன பயன்? இந்த விவரங்களையெல்லாம் திரட்டி நான் அறிக்கை வெளியிடுவது தவறா? பேரவையில் இருக்கிறோம் என்ற பாதுகாப்பில் அமைச்சர் என் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வக்கில்லாமல், என்னை "அறிக்கை நாயகர்" என்று பேரவையிலே கிண்டல் செய்வதா? இது போலத் தொடர்ந்து பேரவையை நடத்தச் செய்து, முதலமைச்சர் அவர்களே, தமிழகச் சட்டமன்றத்தின் மாண்பினைக் குலைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படாதீர்!

அன்புள்ள,

மு.க.

17-7-2014

3905. பொய்க்குளி பேச்சுக்கு மறுப்பு!

உடன்பிறப்பே,

15-7-2014 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் சமூக நலத்துறை பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கழகத்தின் சார்பில் டாக்டர் புஷ்பலீலா ஆல்பன் பேசும்போது, அந்தத் துறையிலே தி.மு.கழக ஆட்சியில் என்னென்ன சாதனைகள் செய்யப்பட்டன என்பதைப் பட்டியலிடும்போது, சுனாமி பேரழிவால் பெற்றோரை இழந்து தவித்த சிறுவர்களுக்கும், வளரிளம் பெண்களுக்கும் 5 லட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது என்றெல்லாம் கூறியிருக்கிறார். அப்போது முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு, சுனாமி ஏற்பட்டபோது அவர் தமிழ்நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு பலமுறை பயணம் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலவிதமான உதவிகளைச் செய்து காயப்பட்டவர்களை மருத்துவமனைகளில் சென்று பார்த்து பலருக்குப் பலவிதமான உதவிகளை வழங்கிய தாகவும், அப்போது நான் சேப்பாக்கம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன் என்றும், ஆனால் சென்னையிலே இருந்து கொண்டே சேப்பாக்கம் கூடச் செல்லவில்லை என்றும், பாதிக்கப்பட்ட தொகுதி மக்களைக் கூடப் பார்க்கவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். அதுபற்றி விளக்கமளிக்க கழக உறுப்பினர்கள் முற்பட்டபோது, பேரவைத் தலைவர் முதலமைச்சர் பேசிய பிறகு வேறு யாரும் பேச முடியாது என்றும், அதற்கு அனுமதிக்க முடியாது என்றும் கூறியதால், கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் சுனாமி பாதிப்பு ஏற்பட்ட போது நான் உடல் நலத்தோடு வீட்டிலே இருந்து கொண்டு பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்காமல் இருந்தேனா? சுனாமி விபத்து ஏற்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தேனா இல்லையா? அது முதலமைச்சருக்கு தெரியாதா? ஏடுகளில் எல்லாம் நான் மருத்துவமனையிலே இருந்த

செய்தி வந்ததே! முதலமைச்சர் அதை அப்படியே மறைத்துவிட்டு, நான் சென்னையிலே வீட்டிலே இருந்துகொண்டே சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்கச் செல்லவில்லை என்று உண்மைக்கு மாறாக குற்றஞ்சாட்டியிருக்கிறாரா இல்லையா?

தமிழகத்தில் சுனாமி விபத்து 26-12-2004 அன்று காலை ஏற்பட்டது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே எனக்கு விலாப்புறத்தில் கடுமையான வலி ஏற்பட்டு, முதலில் வீட்டிலேயே சிகிச்சை செய்து கொண்டு நலம் ஏற்படாததால், 26ஆம் தேதியன்று அப்பல்லோ மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டேன். இந்தத் தகவலை இப்போது நான் தெரிவிக்கவில்லை. கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களே அறிக்கை மூலமாக அப்போதே ஏடுகளுக்குத் தெரிவித்து பத்திரிகைகளிலும் அந்தச் செய்தி வந்திருக்கிறது. நான் மருத்துவமனையிலே இருந்தபோதிலும், உடனடியாகப் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்ல முடியாவிட்டாலும், சென்னையில் மு.க. ஸ்டாலின், ஆற்காடு வீராசாமி, டி.ஆர். பாலு போன்றவர்களை பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறச் செய்தேன். காலை 10 மணி அளவிலேயே மத்திய அமைச்சராக இருந்த தயாநிதி மாறனை தொலைபேசியில் டெல்லிக்குத் தொடர்பு கொண்டு, பிரதமரைச் சந்தித்து, பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற ராணுவத்தை ஈடுபடுத்தும்படி கேட்டுக் கொண்டேன். மாவட்டங்களில் உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்படி 26ஆம் தேதியன்றே மருத்துவமனையிலே இருந்தவாறு அறிக்கை விடுத்தேன். நான் மருத்துவமனையிலே இருந்தபோது, என்னைப் பற்றிய தவறான வதந்தி ஒன்று பரவி ஏராளமான தொலைபேசிகள் வீட்டிற்கு வந்ததால், அந்தச் செய்தியை மறுத்து தொலைக்காட்சி மூலம் பேட்டி கொடுத்தேன். சென்னை அப்பல்லோ மருத்துவமனைக்கே திருமதி சோனியா காந்தியும், பிரணாப் முகர்ஜியும் வந்து என் உடல் நிலை விசாரித்தபோது, சுனாமி நிவாரண நிதிக்காக கழகத்தின் சார்பில் ஒரு கோடி ரூபாய் நிதிக்கான காசோலையை வழங்கினேன். மத்திய உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ் பாட்டீல், அம்பிகா சோனி, ஆளுநராக இருந்த சுர்ஜித் சிங் பர்னாலா, தமிழர் தலைவர் கி. வீரமணி, ஜி.கே.வாசன், வைகோ , ஆர். நல்லகண்ணு , திருநாவுக்கரசர், சி.பி. ராதாகிருஷ்ணன், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், கவிப்பேரரசு வைரமுத்து, நீதியரசர் ரெத்தின வேல்பாண்டியன், பேராசிரியர் காதர் மொய்தீன், எஸ்.ஆர்.

பாலசுப்ரமணியம், ஜெயந்தி நடராஜன் ஆகியோர் அப்பல்லோ மருத்துவமனைக்கு வந்து என் உடல் நிலையை விசாரித்தனர்.

7-1-2005 அன்று சுனாமி பேரழிவு குறித்து ஆய்வு நடத்த வருகை தந்த பிரதமர் மன்மோகன் சிங் என் உடல் நலம் விசாரிப்பதற்காக என் இல்லத்திற்கு வந்தபோது, சுனாமி நிவாரண நிதிக்காக தி.மு.க. அறக்கட்டளையின் சார்பில் 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அளித்தேன். மேலும் நான் திரைக்கதை வசனம் எழுதிய "மண்ணின் மைந்தன்" படத்திற்காக வந்த ஊதியம் 11 இலட்சம் ரூபாய் - "கண்ணம்மா" படத்தின் மூலம் வந்த ஊதியம் 10 இலட்சம் ரூபாய் ஆக மொத்தம் 21 இலட்சம் ரூபாயை 10-1-2005 அன்று மு.க. ஸ்டாலின் மூலம் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா விடம் கொடுக்கச் செய்தேன்.

உடல் நலம் பெற்று 11-1-2005 அன்றுதான் அண்ணா அறிவாலயம் சென்று கழகப் பணிகளை மேற்கொண்டேன். ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா நான் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்கச் செல்லவில்லை என்று 9 ஆண்டுகளுக்குப் பிறகு என்னைக் குறை கூறுகிறார்.

உண்மையில் சுனாமி ஏற்பட்டபோது அந்தத் தகவலை முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கூற முடியாத அளவுக்கு அவர் தூங்கிக் கொண்டிருந்தார் என்றும், காலை 10 மணி அளவில்தான் அந்தச் செய்தியே அவருக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் அப்போதே செய்தி வந்ததா இல்லையா?

அரசு இயந்திரம் சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் எப்படி செயல்பட்டது? 2-1-2005 தேதிய ஜூ.வி. "அவசரத்துக்கு அசையாத அரசு இயந்திரம்" என்று தலைப்பிட்டு கட்டுரை தீட்டியிருந்தது. குமுதம் ரிப்போர்ட்டர் இதழ் "மீட்புப் பணிகளில் மெத்தனம்" என்ற தலைப்பிலே எழுதியிருந்தது. 1-1-2005 தேதிய நக்கீரன் இதழும் பக்கம் பக்கமாக அரசு செயலற்று இருந்ததைப் படம்பிடித்துக் காட்டியிருந்தது. 29-12-2004 தேதிய "இந்து" "A POOR RELIEF EFFORT" என்ற தலைப்பில் தலையங்கமே தீட்டியது.

பொதுவாக பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க நானா தயங்குபவன்? எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்தபோதே, ஒரு பெரும் புயல் தஞ்சைத் தரணியையே வெள்ளக் காடாக்கியது. அப்போது

சிறையிலே இருந்த நான் வெளியே வந்த அடுத்த கணமே, வீட்டிற்குச் சென்று ஓய்வெடுக்காமல், சிறைச்சாலையிலிருந்து புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்கினேன்.

திருச்சியில் ஒரு திருமண மண்டபத்தில் தீ விபத்து ஏற்பட்டு, 54 பேர் தீயில் வெந்து மடிந்த போது, முதலமைச்சராக இல்லாத நிலையிலும் நான் அங்கே சென்று நேரில் ஆறுதல் வழங்கினேன்.

2004ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் கும்பகோணத்தில் உள்ள பள்ளி ஒன்றில் 94 குழந்தைகள் தீக்கு இரையாகி கருகிய போது, அங்கும் நேரில் சென்று ஆறுதல் கூறியவன் நான்.

31-1-2007 அன்று நாகப்பட்டினத்தில் நடைபெற்ற மிகப்பெரிய விழா நிகழ்ச்சியில் அருள்மிகு மாதா அமிர்தானந்தமயி மடத்தின் சார்பில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்குக் கட்டப்பட்ட வீடுகளையெல்லாம் திறந்து வைத்தேன்.

என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய உடல்நிலை நன்றாக இருந்தால், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்க உடனடியாகச் சென்றிருப்பேன். இன்னும் சொல்லப் போனால், புழல் ஏரியில் விபத்து ஏற்படப் போகிறது என்ற செய்தி அதிகாலை 5 மணிக்கு காவல் துறை அதிகாரி மூலமாக எனக்கு வந்ததும், அந்த அதிகாலை நேரத்திலேயே தலைமைச் செயலகத்திற்குச் சென்றேன். கதவு திறக்கப்படாமல் இருந்ததால், சாவி வருகின்ற வரை வெளியே காத்திருந்தேன். பின்னர் அதிகாரிகளுடன் 6 மணிக்கு புழல் ஏரிக்கே சென்றேன். எனவே சென்னையிலே இருந்து கொண்டே நான் செல்லவில்லை என்று முதல் அமைச்சர் பதவியிலே இருப்பவர் உண்மைக்கு மாறாகக் குற்றம் கூறுவது சரியல்ல. நான் அந்த நேரத்தில் மருத்துவமனையிலே இருந்தது ஏடுகளில் எல்லாம் செய்தி வந்து, சோனியா காந்தி, பிரணாப் முகர்ஜி போன்றவர்கள் எல்லாம் வந்து பார்த்து சென்றிருக்கின்ற நிலையில், பேரவையில் முதல்வர் என்மீது சாட்டிய குற்றச்சாட்டு சரியல்ல என்பதற்காகத்தான் இவ்வளவு விவரங்களையும் எடுத்துக் காட்டினேன்.

ஏன், முதலமைச்சர் ஜெயலலிதாகூட கடந்த மே மாதம் ராஜீவ் காந்தி நினைவு நாளான 21ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பயங்கரவாத ஒழிப்பு உறுதிமொழி

ஏற்கும் நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளாமல் நிகழ்ச்சியையே ரத்து செய்தார். காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி சென்னை காமராஜர் சாலையிலே உள்ள காந்தி சிலைக்கு ஆளுநரும், முதல்வரும் மாலை அணிவிப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா கடைசி வரையில் அங்கே வரவே இல்லை. கடைசியில் பல் வலி என்றார்கள். எனவே உடல் நலம் பாதிப்பது என்பது இயற்கை நியதி. அதை மறைத்துக் குற்றம் கூறுவது சரியல்ல.

ஏன் ஒருமுறை சென்னையிலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் வரலாறு காணாத மழையும், வெள்ளமும் பெருகி மக்கள் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தபோது, ஜெயலலிதா ஐதராபாத்தில் இருந்தார். அதுபற்றி சில ஏடுகள் அவர் அங்கே யாகம் ஒன்றை நடத்திக் கொண்டிருப்பதாக செய்திகள் வெளியிட்டன.

அந்தச் சமயத்தில் இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் கே.ஆர். நாராயணன் மறைந்து, அவருக்காக எல்லோரும் அனுதாபச் செய்தி வெளியிட்டபோது, ஜெயலலிதா அனுதாபச் செய்திகூட வெளியிடவில்லை.

2005ஆம் ஆண்டு டிசம்பரில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது பெரு மழை பெய்து வெள்ளம் பாதித்தபோது, 4-12-2005 ஞாயிறு அன்று பகல் 12.30 மணி அளவில் நான் புறப்பட்டு, கோட்டூர்புரம், அடையாறு, சைதாப் பேட்டை பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு பகுதிகளைப் பார்வையிட்டு, மக்களுக்கு ஆறுதல் கூறினேன். அந்தச் செய்தியைக் கேட்ட பிறகு தான், முதலமைச்சர் ஜெயலலிதா பிற்பகல் 3.15 மணிக்கு போயஸ் தோட்டத்திலிருந்து வெள்ளப் பகுதிகளையே பார்க்கப் புறப்பட்டார்.

இவ்வாறு போட்டா போட்டிக்கு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் முதலமைச்சர் பொறுப்பிலே இருப்பவர், சட்டமன்றத்திலே பேசும்போது உண்மைக்கு மாறான தகவலை, சென்னையிலே இருந்து கொண்டே நான் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்கவில்லை என்றெல்லாம் குற்றம் சாட்டுவது சரியல்ல. உண்மைக்கு மாறான அந்தக் குற்றச்சாட்டினை மறுத்து உண்மையைச் சொல்வதற்கு கழக

உறுப்பினர்கள் முற்பட்டபோது, அதற்கும் பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை என்றால், அது சட்டமன்ற மரபுப்படி சரியானதுதானா? பொதுவாக முதலமைச்சர் பேசிவிட்டால், அதன் பிறகு மீறி யாரும் பேசக் கூடாது என்றால், நடைபெறுவது ஜனநாயகம்தானா?

அன்புள்ள,

மு.க.

18-07-2014

3906. இதுதானே; அண்ணா கண்ட அன்புவழி!

உடன்பிறப்பே,

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்த பிறகு 27-6-2014 அன்றும், 29-6-2014 அன்றும் முறையே "சூட்சுமத்தைப் புரிந்து கொள்வாய்" என்ற தலைப்பிலும், "பெரியார் கூறிய கட்டுப்பாடு காத்திட; அண்ணா வழியில் உழைப்போம் வாரீர்" என்ற தலைப்பிலும் இரண்டு உடன்பிறப்பு மடல்களை நான் எழுதியிருந்தேன் அல்லவா; அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த மூன்றாவது கடிதம்!

நாடாளுமன்றத் தேர்தலில் கழகம் அனைத்து இடங்களிலும் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டதும், இனி அவ்வளவுதான்; திராவிட முன்னேற்றக் கழகத்தால் இனி எழுந்திருக்கவே முடியாது; கழகத்தின் முன்னணித் தலைவர்கள் எல்லாம் தி.மு. கழகத்தை விட்டு விலகி விடுவார்கள்; தொண்டர்களோ கேட்கவே வேண்டியதில்லை; ஆயிரக்கண கில் நம்முடைய கட்சியிலே வந்து இணைந்து விடுவார்கள் ; தி.மு. கழகத்தின் தலைமை இனி எழுந்திருக்கவே எழுந்திருக்காது என்றெல்லாம் வழக்கம்போல் நம்முடைய எதிரிகள் மனப்பால் குடித்தார்கள்! அவர்களுடைய கற்பனை எண்ணங்களை எல்லாம் தூள் தூளாக்குகின்ற விதத்திலே கழகத்திலிருந்து அடி மட்டத்திலே ஆணி வேர்களாக உள்ள ஒரு தொண்டன் கூட அசையவில்லை என்பதைப் பார்த்த பிறகுதான், அவர்கள் யோசிக்கத் தொடங்கினார்கள்.

மாற்றார் நினைப்பையும், ஆசையையும் உள்ளடக்கிச் சில வார ஏடுகளும், நாளேடுகள் ஒன்றிரண்டும் கழக வேட்பாளர்களை, கழக முன்னணியினரே தோற்கடித்தார்கள்; தேர்தலில் தீவிரமாகப் பணியாற்ற வில்லை; மாற்றாரிடம் பணம் பெற்றுக் கொண்டு

துரோகம் விளைவித்தார்கள் என்று இட்டுக் கட்டப்பட்ட செய்தியினைத் திட்டமிட்டுப் பரப்பினார்கள். மாவட்டக் கழகச் செயலாளர்கள் சிலர் குறுநில மன்னர்களாகத் திகழ்கிறார்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; அ.தி.மு.க. என்றால் இந்நேரம் அவர்களையெல்லாம் தூக்கிப் போட்டிருக்கும் என்றெல்லாம் செயற்கையான செய்திகளை வெளியிட்டார்கள். அவர்களாகவே தி.மு. கழகம் நடவடிக்கை எடுக்கவிருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்களின் பட்டியல் என்று 18 மாவட்டக் கழகச் செயலாளர்களின் பெயர்களையும் வெளியிட்டிருந்தார்கள். மற்றொரு ஏடு, "எல்லா மாவட்டக் கழகச் செயலாளர்களையும் எடு" என்ற தலைப்பிலே நீண்ட கட்டுரையே வெளியிட்டது. உண்மையில் அவர்களுக்கு கழகத்தினைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கிடையாது, எப்படியாவது தி.மு. கழகம் நடவடிக்கை எடுத்தால் அந்தக் கட்சியில் பிளவு ஏற்படாதா, கழகம் உடைந்துவிடாதா, நடவடிக்கை எடுக்கப்படுபவர்கள் எல்லாம் ஒன்று திரண்டு ஓரணியாக கழகத்திலிருந்து விலகிவிட மாட்டார்களா என்ற நப்பாசையில்தான் அவர்கள் அவ்வாறு அபாண்டமாகச் செய்தி வெளியிட்டார்கள்.

இதற்குப் பிறகுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக் குழுவினைக் கூட்டி இந்த நடவடிக்கை எடுப்பது பற்றி பேசினோம். அதில் ஒரு உறுப்பினர்கூட என்னைப் பார்த்து, "தலைவர் அவர்களே, நீங்கள் நிச்சயமாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கமாட்டீர்கள்; ஏனென்றால் உங்கள் மனம் இளகியது; யார் மீதும் நடவடிக்கை எடுக்க உங்கள் மனம் வராது" என்றார். நடவடிக்கை எடுப்பதற்கு நீண்ட நேரம் ஆகாது. அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் சட்டப்பேரவையில் கூறியிருப்பதைப் போல - அவர் வெளியிலே செல்லும்போது பதவியை இழக்கக் கூடிய நிலை அந்தக் கட்சியிலே ஏற்படலாம், ஆனால் தி.மு.க.வில் அப்படியல்ல என்று கூடச் சொல்லியிருக்கிறார். கொலு பொம்மைகளை நினைத்தவாறு இடம் மாற்றி வைப்பதைப் போல தி.மு.கழகத்திலே சர்வாதிகாரம் கிடையாதுதான். குற்றவாளிகள் தண்டிக்கப் படலாம்; ஆனால் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு விடக் கூடாதல்லவா? எனவே தி.மு. கழகத்தில் நடவடிக்கை என்றால், அதற்காக விளக்கம் கேட்டு, அதிலே என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் பரிசீலித்து அதற்குப் பிறகு ஜனநாயக ரீதியாக

முடிவெடுக்கிறோம். விளக்கமும் கிடையாது, வெங்காயமும் கிடையாது, அம்மா நினைத்தால் அவ்வளவுதான்; இன்றைக்கு சசிகலாவையும் அவருக்கு வேண்டியவர்களையும் வீட்டைவிட்டு வெளியே அனுப்புவோம், நாளைக்கு சேர்த்துக் கொள்வோம், நினைத்தால் அவருடைய கணவரையே பிடித்துப் பலமுறை சிறையிலே அடைப்போம் என்றெல்லாம் சொல்வார்கள்.

அந்த வகையில்தான் கழக வேட்பாளர்களின் தோல்விக்கு கழகத் தோழர்கள், முன்னணியினர் யாராவது காரணமாகச் செயல்பட்டார்களா என்று அந்தந்த வேட்பாளர்களிடமே அறிக்கை கேட்டுப் பெற்றோம். அந்தந்த நாடாளுமன்றத் தொகுதிகளில் தலைமைக் கழகத்தின் சார்பில் நியமிக்கப்பட்டிருந்த பொறுப்பாளர்களிடமும் தனியாக அறிக்கை கேட்டுப் பெற்றோம். அந்த அறிக்கைகளில் உள்ள புகார்களில் அதிக அளவுக்கு யார் யார் மீது குற்றச்சாட்டுகள், புகார்கள் கூறப்பட்டிருந்தனவோ, அவர்களையெல்லாம் தற்காலிகமாக நீக்கி வைத்து, அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என்றும், அவர்கள் பதிலளிக்காவிட்டால், அவர்கள் பதில் கூறுவதற்கு எதுவும் இல்லை என்று கருதி சட்டதிட்டங்கள்படி நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தலைமைக் கழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

கழகத்தின் இந்த நடவடிக்கைக்குப் பிறகாவது நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. ஒரு இடத்திலே கூட வெற்றிபெற முடியாத அளவுக்கு தோற்றுவிட்டது, இனி இங்கே இருந்து பயனில்லை, பழுத்த மரத்தைத் தேடிச் செல்லலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்ட 33 பேரில், ஒருவரைத் தவிர வேறு யாரும் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. அந்த ஒருவரும் கூட, அங்கிருந்து வந்தவர்தான்; அவரை நாம் தான் தூக்கி வைத்து அமைச்சர் பதவி கூடக் கொடுத்துப் பார்த்தோம். ஆனால் அவர் தன் குணத்தைக் காட்டிவிட்டார். விளக்கம் அளிப்பதற்குப் பதிலாக, கழகத் தலைமையைத் தாக்கி பதில் அளித்திருந்தார்.

அவரைத் தவிர மற்றவர்கள் அளித்த விளக்கங்களை நான் பலமுறை படித்தேன். அதில் ஒன்றிரண்டை இங்கே சுருக்கமாகக் கூறுகிறேன்.

சீனி. அண்ணாதுரை :- எனது தந்தையார் ஆர். சீனிவாசன் முதல் மறைந்த என் சகோதரர் மாவீரன் சீனி. பன்னீர்செல்வம் அவர்களைத் தொடர்ந்து நானும், எனது குடும்பமும் கழகமே உயிர் மூச்சாகக் கருதி கழகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறோம். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எனது கடமையை எப்பொழுதும்போல் கழகத்தின் வெற்றிக் காக ஓய்வின்றி பணியாற்றியுள்ளேன். கழக விரோத மற்றும் துரோக நடவடிக்கைகளில் நான் ஈடுபட்ட தில்லை. எக்காலத்திலும் ஈடுபடமாட்டேன். கழகமே எனது உயிர் மூச்சு.

நோ.வை. முத்துகுமாரசாமி:- நான் கழகத்திற்கு எவ்வித துரோகமும் செய்தது கிடையாது. கழகத்தால் தான் எனக்குப் பெருமை. நான் தி.மு.க.காரன் என்று சொல்லிக் கொள்வதில்தான் மகிழ்ச்சி. குறிப்பாகக் கழகத் தலைவர் அவர்களின் உடன்பிறப்பு என்பதிலும், கழகப் பொருளாளர் தளபதியார் அவர்களின் தம்பி என்பதிலும்தான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தங்கள் கட்டளைக்கு காத்திருப்பவரில் நானும் ஒரு கடைநிலை ஊழியர். என்மீது ஏதாவது குற்றச்சாட்டு இருக்கும் என தலைமைக் கழகம் கருதுமானால் அதற்காக நான் மனப்பூர்வமாக மன்னிப்பு கோருகிறேன்.

கோழிக்கடை ந. கணேசன் :- வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திற்கு வந்த போது மாபெரும் வரவேற்பு அளித்தேன். இதனால் காவல்துறை, ஒன்றியச் செயலாளரான என் மீது வழக்குத் தொடர்ந்துள்ளது. நான் எந்தக் காலத்திலும் கழகத்திற்கு ஒரு துளி அளவு கூட துரோகம் செய்ய நினைக்காதவன். கழகத்தைக் கட்டிக் காக்க வேண்டுமென்னும் ஆர்வம் மிக்கவன். ஒழுங்கு நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

கோ.செயபால் :- நான் தந்தை பெரியாரின் சுயமரி யாதை கொள்கையை ஏற்றுக் கொண்டவன். தலைவர்தான் என் உயிர், கழகம்தான் என் மூச்சு என்று செயல்பட்டு வருகிறேன். இதுநாள் வரையில் கழகத்திற்கோ தலைவருக்கோ எந்த ஒரு எதிரான செயலிலும் ஈடுபடாமல் செயல்பட்டு வருகிறேன். நான் ஏதேனும் தவறு செய்துள்ளதாகக் கருதினால் என்னை மன்னித்து தொடர்ந்து

கழகப் பணி ஆற்றிட வாய்ப்பு வழங்குமாறு மிகுந்த பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க. மாரியப்பன் :- அய்யா அவர்களே! நான் 2003இல் இருந்து கட்சிக்காகப் பாடுபட்டு வருகிறேன். எனக்கு நினைவு வந்த வயதி லிருந்து கலைஞர் கட்டிக் காத்த தி.மு.க. ஒன்றுதான் என் உயிர். அப்படிப்பட்ட கழகத்திற்கு நான் என்றும் துரோகம் நினைக்க மாட்டேன். நான் என்றும் தலைவர் கலைஞர், பேராசிரியர், தளபதியார் வழியில்தான் என் உயிர் உள்ளவரை கழகத்திற்காகப் பாடுபடுவேன்.

தென்றல் செல்வராஜ் :- 1980இல் கழகத்தில் என்னை இணைத்துக் கொண்டது முதல் இன்றுவரை நடைபெற்ற தேர்தல்களில் கழகம் அறிவித்த வேட்பாளர்கள் அனைவருக்கும் உண்மையாக உழைத்ததோடு மட்டுமல்லாமல் கழகமே என் உயிர் மூச்சாகக் கொண்டு செயல்படுபவன் நான். தற்போது என் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிந்து மிகவும் வேதனை அடைகிறேன். வெட்கி தலைகுனிகிறேன். என்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் தாங்கள் தரும் எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்கிறேன். நான் எந்தச் சூழ்நிலையிலும் எந்த நேரத்திலும் நம்முடைய கழகத்திற்கு துரோகம் செய்யமாட்டேன். உண்மைத் தொண்டனை கழகமும், தலைவரும் என்றென்றும் கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

எஸ்.எம் போஸ் :- எனது 47 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் தலைமைக்கோ, இயக்கத்திற்கோ மாறாக நான் எதிரிக்கு கிஞ்சிற்றும் இடம் கொடுத்ததில்லை. இயக்கம்தான் எனது மூச்சு. என்னால் இந்த இயக்கத் திற்கு துரோகமோ, தலைமைக்கு துரோகமோ செய்ய என் இதயம் இடம் கொடுக்காது. தெரிந்தோ, தெரியாமலோ தவறுகள் ஏற்பட்டிருந்தாலும் என்னை மன்னித்து இயக்கப் பணியாற்றிட அனுமதி கொடுக்க வேண்டுகிறேன்.

உடன்பிறப்பே, இந்தப் பிரச்சினையில் தலைமைக் கழகத்திற்கு வந்த அனைத்துக் கடிதங்களின் சுருக்கங் களையும் வெளியிட விரும்பினாலும், அனைத்தும் இதே பாணியில்தான் எழுதப்பட்டுள்ளன. கழகத் தலைமை இந்த

விளக்கங்களையெல்லாம் அப்படியே முழுவதும் உண்மை என்று ஏற்றுக்கொண்டு, இவர்கள் மீது தரப்பட்ட புகார்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்ற முடிவுக்கும் வந்துவிடவில்லை. ஒரு மாபெரும் இயக்கத்தில் - ஒரே இயக்கத்தில் இருந்தா லும் ஆங்காங்கு ஓரிருவரிடையே கருத்து வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும் என்பதை உணராதவன் அல்ல நான். நம்மைப் பிடிக்காதவர்கள் வேண்டுமானால் இதையே ஒரு காரணமாக வைத்து ஒன்றைப் பத்தாக்கி, துரும்பைத் தூணாக்கி, சிறு கீறலைக் கூட மிகப் பெரும் பிளவு என்று கூற முன்வருவார்கள். நமது இயக்கம் ஜனநாயக இயக்கம். சர்வாதிகார இயக்கங்களில் வேண்டுமானால் இன்று நீ மந்திரி, நாளை எந்திரி என்றும், இன்று நீ மாவட்டக் கழகச் செயலாளர், நாளை இன்னொருவர் மாவட்டக் கழகச் செயலாளர் என்றும் அறிவிப்புகளைத் தன்னிச்சையாகச் செய்யக் கூடும். அந்தச் செய்திகளை ஒரு நாளோடு முடித்துக் கொள் கின்ற ஏடுகள், நம்முடைய இயக்கத்திலே எப்போதோ ஒரு சிறு மாற்றம் என்றாலும், அதுபற்றி பத்து நாட்கள் கற்பனைக் கதைகளையெல்லாம் வெளியிடுவார்கள்.

புகார்கள் வந்தவைகளில் ஒருசில உண்மையாகக் கூட இருக்கலாம். அந்த ஒருசிலர், நான் மட்டுமா தவறு செய்தேன்; மற்றவர்கள் எல்லாம் தவறே செய்யவில்லையா? அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை; நாங்கள் மாத்திரம் பலிகடாவா என்று நினைக்கலாம்.

ஓரிருவர் மீது சொல்லப்பட்ட புகார்களில் உண்மை இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்ட நேரத்திலே கூட, என்னையும் மீறி, கடந்த காலத்தில் அவர்கள் கழகத்திற்காக உழைத்த உழைப்பு, பட்டபாடு, அனுபவித்த கஷ்ட நஷ்டங்கள் எல்லாம் என் நினை விலே வருகின்றன. கடந்த காலத்தில் கழகத்திலே இருந்த ஒரு சிலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட தில்லையா? அப்போது அதை நீ ஏற்றுக் கொள்ளவில் லையா? என்ற கேள்விகள் வரலாம். கழகம் அவ்வாறு நடவடிக்கை எடுத்ததும் உண்டு. அப்போது என் மனம் எந்த அளவுக்கு வேதனைப்பட்டிருக்கும் என்பதை என்னை உணர்ந்தவர்கள்தான் அறிவார்கள்.

தி.மு.கழகம் கடுமையாக நடவடிக்கை எடுக்கும். பலர் மீது நடவடிக்கை எடுத்து கட்சியை விட்டு நீக்கும். அதனால்

ஏராளமானவர்கள் கழகத்தை விட்டு மாற்றுக் கட்சிக்குச் சென்றுவிடுவார்கள். தி.மு. கழகம் என்ற ஒன்று இல்லாமலே போய்விடும் என்றெல்லாம் சிலர் எதிர்பார்த்து காத்திருந்தார்கள். "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நீண்ட கட்டுரையில் குறிப்பிட்ட ஒரு கதைதான் என் ஞாபகத்திற்கு வருகிறது.

மருத்துவன் ஒருவன் பிழைப்பு நாடி வேற்றூர் சென்றானாம். ஒரு நாள் காலை - அந்த ஊர் மக்களிலே பலர் காலை வெயிலில் வயலில் வேலை செய்து கொண்டிருக்கக் கண்டான். அதைப் பார்த்ததும் மருத்துவனுக்கு மகிழ்ச்சி. காலை வெயில் பித்தத்தை ஏற்படுத்தும். இந்த ஊர் மக்கள் காலை வெயிலில் பணியாற்றுகிறார்கள். நிச்சயமாக பித்தம் சம்பந்தப்பட்ட நோய் உண்டாகும். நமக்கு நிறைய வருமானம் கிடைக்கும். ஏற்ற இடம் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்து தன் ஊர் சென்று மருந்து மூட்டைகளுடன் மாலையிலே வந்தான். வந்ததுமே மகிழ்ச்சி போய் விட்டதாம். கவலை வந்துவிட்டதாம். காரணம் என்னவென்றால், அந்த ஊர் மக்கள் எல்லாம் மாலை வெயிலிலே காய்ந்து கொண்டிருந்ததைக் கண்டானாம். மாலை வேளையில் அந்த வெயில் உடலில் பட்டால் பித்தம் போய்விடும் என்பது மருத்துவ உண்மை . மருத்துவன் என்ன செய்வான்? அந்த ஊர் பயன் இல்லை என்று எண்ணி வேறு இடம் நாடினானாம். அதைப்போல கழகத்திலே பிளவு ஏற்படும் என்று எண்ணி வாய் பிளந்து, மனப்பால் குடித்த வர்கள் எல்லாம் கழகத்தின் நடவடிக்கை காரணமாக ஏமாந்து போய் விட்டார்கள். தற்காலிக நடவடிக்கை எடுத்து விளக்கம் கேட்டபோது, யாரும் விளக்கமளிக்க முன்வர மாட்டார்கள், அவ்வளவு பேரும் கழகத்தைவிட்டு வெளியேறி விடுவார்கள் என்று எதிர்பார்த்தவர்கள், அய்யோ நடவடிக்கை ரத்தா? கழகம் மீண்டும் ஒன்றாகி விடுகிறதா? என்றெல்லாம் எண்ணக் கூடும். கழகம் கண்ணாடிக் குடுவை அல்ல கண்ணாடி உடைந்தால் ஒட்ட வைக்க முடியாது. கழகம், மாபெரும் நீர்த் தேக்கம், நீரடித்து நீர் விலகாது!

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் வருத்தம் அடையலாம். அவர்களுக்கெல்லாம் ஆறுதலாகத்தான் விரைவில் மாவட்ட, ஒன்றிய, நகரத் தேர்தல்கள்

வரவிருக்கின்றன. அந்தத் தேர்தலில் உண்மையிலேயே தவறு செய்தவர்களை, கழகத் தோழர்களே தோற்கடிக்கச் செய்வார்கள். அதையும் மீறி தவறுகள் தொடருமேயானால், புகார்கள் தொடர்ந்து வருமேயானால், பெரியார் கூறிய கழகக் கட்டுப்பாடுதான் முக்கியம் என்பதைத் தவிர வேறு வழியில்லை. கழகக் கட்டுப்பாடே, கழகத்தின் உயிர் மையம்! குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை; கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

அன்புள்ள,

மு.க.

21-07-2014

3907. சர்ச்சையை உருவாக்கவா சமஸ்கிருத வாரம்?

உடன்பிறப்பே,

கடந்த சில வாரங்களுக்கு முன், சமூக வலைத்தளங்களில் இந்தியைப் பயன்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு மத்திய அரசு ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. அதைப் பற்றி 17-6-2014 அன்று "தி எகானமிக் டைம்ஸ்" ஆங்கில நாளிதழ் "பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் முன்னுரிமைப்படி வெளியிடப்படும் ஆணை - சமூக வலைத்தளங்களில் அரசு அதிகாரிகள் இந்தி மொழியையே பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அரசின் உள்துறை கேட்டுக் கொள்கிறது" என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரை வெளியானதும் நான் உடனடியாக அதுபற்றி அறிக்கை ஒன்றினை வெளியிட்டு, பிரதமர் அவர்கள் அதுபற்றி கவனம் செலுத்த வேண்டுமென்பதே நாட்டின் நலன் நாடுவோர் அனைவரது விருப்பமும் வேண்டுகோளுமாகும் என்று தெரிவித்திருந்தேன். இந்த அறிக்கைக்குப் பிறகு பிரதமர் அலுவலகம் "சமூக வலைத்தளங்களில் இந்தி மொழி தொடர்பு மொழியாக, இந்தி பேசும் மாநிலங்களில் மட்டுமே பயன்படுத்தப்படும்" என்றும், "இந்தி பேசாத மாநிலங்களில் எந்த மாற்றமும் இருக்காது" என்றும் தெரிவித்திருந்தது. மேலும் தமிழ்நாட்டிற்கு வந்திருந்த மத்திய அமைச்சர் வெங்கைய நாயுடு அவர்களும் செய்தியாளர்களிடம் கூறும்போது, "எந்தப் பகுதி மக்கள் மீதும் மொழியைத் திணிக்க முடியாது; பா.ஜ.க.வைப் பொறுத்தவரை சமூக வலைத்தளங்களில் அலுவலக மொழியாக இந்தியைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது; அனைத்துப் பிராந்திய மொழிகளுக்கும் தாய்மொழிக்கான உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதே பா.ஜ.க. வின் நிலைப்பாடு!" என்று அறிவித்தார். இந்த விவரங்களை நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

இதற்குப் பிறகு தென்னிந்திய மாநிலங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் இந்தி மொழி கட்டாயமாகி வருகிறது

என்றும், இந்தி பயிற்சிக்குச் செல்லாத மற்றும் தேர்வு எழுதாத 11 ஊழியர்களுக்கு "மெமோ" கொடுக்கப்பட்டுள்ளது என்றும், வருகைப் பதிவேடு மற்றும் அரசு ஆணைகளிலும் இந்தி புகுந்திருப்பது மத்திய அரசு அலுவலர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் 30.6.2014 செய்தி வந்தது.

தற்போது மத்திய அரசின் நிறுவனமான சி.பி.எஸ்.ஈ. (Central Board of School Education) இயக்குநர் சார்பில் நான்கு பக்க சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அந்தச் சுற்றறிக்கையில், ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தை சமஸ்கிருத வாரமாகக் கொண்டாட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜூன் மாதம் 30ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவு, சமஸ்கிருதம் என்றால் என்ன என்றே தெரியாத பிராந்தியங்களுக்கும்கூடப் பொருந்தும் வகையில் உள்ளது என்று மொழியியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சமஸ்கிருதத்தைக் கற்பிக்கவும் பயிலவும் சி.பி.எஸ்.இ. உறுதி பூண்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியப் பண்பாட்டின் ஆணி வேர் சமஸ்கிருதம் தான்; இதில் இந்திய அறிவுக் களஞ்சியம் உள்ளது என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தைப் பிரபலப்படுத்த கட்டுரைப் போட்டி போன்றவற்றை நடத்த வேண்டுமென்றும் இந்தச் சுற்றறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. மாணவர்களிடையே சமஸ்கிருதம் பற்றிய விழிப்புணர்ச்சியை வலுப்படுத்திட முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அதிலே தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், முந்தைய தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின்போது, மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த முரளி மனோகர் ஜோஷி, ஆண்டுதோறும் ஆகஸ்ட் முதல் வாரத்தை சமஸ்கிருத வாரமாகக் கொண்டாட வேண்டுமென்று உத்தரவிட்டார். இந்திய மொழிகள் அனைத்துக்கும் சமஸ்கிருதம்தான் தாய் என்ற எண்ணத்தை மாணவர்களிடையே பதியவைக்கும் பொருட்டு, 2001-ஆம் ஆண்டு நடந்ததைப் போலவே இப்போது மீண்டும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மொழியியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள் என்றெல்லாம் செய்தி வந்துள்ளது.

இந்தித் திணிப்பை எப்படி ஏற்க முடியாதோ, அதைப் போல சமஸ்கிருதத் திணிப்பையும் ஏற்க முடியாது. தமிழ்நாட்டில் மற்ற

கட்சிகள் எல்லாம் கூட சமஸ்கிருத வாரம் கொண்டாடப்படுவதற்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நடவடிக்கையை உடனடியாக மத்திய அரசாங்கம் கைவிட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறது.

சமஸ்கிருத மொழி பற்றி எழுதும்போது, நான் சில நாட்களுக்கு முன்பு படித்த திரு. கோ. வேள்நம்பி எழுதிய "அஞ்சிறைத் தும்பி சிலம்பொலி சு.செல்லப்பன்" என்ற நூலில் தமிழ் - உலக முதன்மொழி என்ற தலைப்பில் வெளிவந்த சில செய்திகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

சீகன்பால்கு என்னும் ஜெர்மானியப் பாதிரியார் தமிழ்நாட்டின் தரங்கம்பாடியில் தங்கிச் சமயத் தொண்டாற்றி வந்தார். அவர், தம் தாய் நாடு திரும்பியபோது இலண்டன் வழியே சென்றார். இலண்டனின் மிகப் பெரிய கிறித்துவ அடிகளார் காண்டர்பரியார், சீகன்பால்குவுக்கு விருந்தொன்று வைத்து, தமிழ்நாட்டில் அரிய சமயத் தொண்டாற்றித் திரும்பியுள்ள அவருக்கு மிக உயர்ந்த மொழியான இலத்தீன் மொழியில் பாராட்டிதழ் படித்துத் தருவதாய்ப் பெருமையுடன் கூறியிருக்கிறார். வரவேற்பினை ஏற்றுப் பேசிய சீகன்பால்கு, "உயர்ந்த மொழியான இலத்தீனில் எனக்கு வரவேற்பிதழ் படித்தளிப்பதாகச் சொன்னீர்கள். நானும் ஓர் உயர்ந்த மொழியில் நன்றி கூறுவதுதான் பொருத்தம்" எனச் சொல்லித் தமிழில் பேசியிருக்கிறார். அங்கிருந்தோர் அவரிடம் அம்மொழியின் பெயரைக் கேட்டதும், "தமிழ்" என்று பெருமை பொங்க சீகன்பால்கு கூறினாராம். இது ஒன்று.

அடுத்து, வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரும், அவர் காலத்தில் வாழ்ந்த காஞ்சி சங்கராச்சாரியாரும் ஒரு முறை ஒருவரையொருவர் காண நேர்ந்தது. சங்கராச்சாரியார், வள்ளலாரிடம், "உங்கள் பாசுரங்களைப் படித்துப் பார்த்தேன். தமிழ் மொழி நன்றாக இருக்கிறது; என்றாலும் வடமொழிதான் உலகில் உள்ள எல்லா மொழிகளுக்கும் தாய்" என்றாராம். உடனே வள்ளலார், "வடமொழி, தாய்மொழி என்றால், தமிழ் தான் தந்தை மொழி" என்றாராம்! தாய் இருந்தாலும், தந்தை இன்றேல் பிறப்பு ஏது? உலக மொழிகள் தோன்றத் தமிழே முதற்காரணம் என்பதை வள்ளலார் கூறியிருக்கிறார்.

"செந்தமிழை யாம் ஒருவருக்கும் காசுக்கு விற்பதில்லை" என்று நிமிர்ந்த கல்விச் செருக்கோடும், பெருமிதத்தோடும்

கூறியவர் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை திரு. பரிதிமாற் கலைஞர். அவர், "ஆரிய மொழிக்குரிய நெடுங்கணக்கு, தமிழ் முறையைப் பார்த்துச் செய்யப்பெற்றது என்பது ஆராய்ச்சியாளர்கள் முடிவு. ஆரியர்கள் தாங்கள் சென்ற இடங்கட்குத் தக்கபடி புதிய லிபியை ஏற்படுத்திக் கொள்ளும் இயல்புடையவர். ஆரியர் தமிழ் லிபியை ஒட்டிக் கிரந்தம் என்னும் பெயரில் புதியதோர் லிபியை ஏற்படுத்திக் கொண்டனர்" எனத் "தமிழ் மொழியின் வரலாறு" என்னும் தம் நூலில் எழுதியிருக்கிறார்.

மனோன்மணியம் நாடக நூலை எழுதிய சுந்தரனார் அவர்கள் அந்த நூலில் தமிழ் வணக்கம் கூறுமிடத்து "ஆரியம் போலுலக வழக்கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்று பெருமைப்படுத்தியதையும்; மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் "தமிழ் வரலாறு" எனும் நூலில், "உலகமொழிகள் ஏறத்தாழ மூவாயிரம் எனக் கணக் கிடப்பட்டுள்ளன. அவற்றுள், தொன்மை, முன்மை, எண்மை, ஒண்மை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புக்களை ஒருங்கேயுடையது தமிழே" என்று விளக்கியிருப்பதையும் யாரும் மறுத்துவிட முடியாது.

தாய்மொழிக் கல்விக்கு மாறாக – சமஸ்கிருதத்தினை இந்தியா முழுதும் பாட மொழியாக ஆக்கினால், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் இந்தியரை ஒன்றிணைக்கலாம் என்று ஆங்கில ஆட்சியினர்க்கு எடுத்துரைத்ததன் காரணமாக இந்தியா முழுவதும் சமஸ்கிருத ஆதரவும், எதிர்ப்பும் எழுந்தன. தமிழ் அறிஞர்கள் எதிர்த்துக் குரல் கொடுத்தனர். அப்போது பரிதிமாற்கலைஞர், தமிழ்ப் பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளை முதலியோர் சமஸ்கிருதம் தாய்மொழிப் பாடமாக ஆவதை எதிர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டனர். 1856இல் கால்டுவெல் அவர்கள் தாம் எழுதிய "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலில், "திராவிட மொழிகள் அனைத்திலும் உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு, உயிர் வாழ்வதோடு, அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்" என்று கூறியுள்ளார். 1887இல் பரிதிமாற் கலைஞர் தாம் இயற்றிய "தமிழ் மொழியின் வரலாறு"

என்னும் நூலில் "திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம். இம்மொழி நூலிலக்கணம் தமிழ் மொழியின்கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம்" எனக்கூறி, உரிய விளக்கங்கள் அளித்துள்ளார்.

கல்லூரிப் பாடத் திட்டத்தில் தாய்மொழிக் கல்வியாகச் சேர்க்கப்பட வேண்டியது அவரவர் தாய்மொழியா? அல்லது இந்தியாவின் ஒரே செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சமஸ்கிருதமா? என்ற விவாதம் ஒரு கட்டத்தை எட்டியபோது, அதனை முடிவு செய்யும் பொறுப்பை அன்று இந்தியாவின் புகழ் பெற்ற பல்கலைக் கழகமாகத் திகழ்ந்த சென்னைப் பல்கலைக்கழகத் திடம் ஒப்படைக்க முடிவுசெய்தார் வைஸ்ராய் கர்ஸான் பிரபு அவர்கள். வைஸ்ராயிடமிருந்து வந்த கோரிக்கை மொழித் தொடர்புடையதாக இருப்பதால் அதன் மீது முடிவெடுக்கத் தகுந்த அமைப்பு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமே எனக் கருதிய அன்றைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், முடிவெடுக்கும் முழுப் பொறுப்பையும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் திடமே ஒப்படைத்தார். இதை அறிந்த பரிதிமாற் கலைஞரும், மு.சி. பூரணலிங்கம் பிள்ளை அவர்களும் முடிவெடுக்கும் அதிகாரம் படைத்த ஆசிரியர் சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே சந்தித்து, தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினர். இதற்காக இவ்விருவரும் பம்பரம் போல் சுழன்று செயலாற்றினர். இவர்கள் விரும்பியது போலவே பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், "கல்லூரிகளில் அவரவர் தாய்மொழிக் கல்வியே பாடமாக்கப்பட வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றி, பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பியது. துணைவேந்தர், அந்த முடிவையே சென்னைப் பல்கலைக்கழக முடிவாக வைஸ்ராய் கர்ஸான் பிரபுவுக்கு அனுப்பி வைத்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தீர்மானத்தை அரசின் தீர்மானமாக ஏற்றுக்கொண்ட கர்ஸான் பிரபு இந்தியாவெங்கும் உள்ள கல்லூரி மாணவர்கட்கு அவரவர் தாய்மொழிக் கல்வி பெற பாடத் திட்டத்தில் வகை செய்தார். இதன் மூலம் இந்தியக் குடிமக்கட்கு அவரவர் தாய்மொழிக் கல்வி, கல்லூரிகளில் ஒரு பாடமாக உறுதி செய்யப் பட்டது. பரிதிமாற்கலைஞர், மு.சி. பூரணலிங்கம் பிள்ளை முயற்சிகளுக்குப் பின்புலமாகவும், மிகப் பெரும் உதவியாகவும் விளங்கிய பெருமை, நான்காம் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் நிறுவிய பாண்டித்துரைத் தேவர் அவர்கட்கும் உண்டு என்பதை

நன்றியுணர்வோடு நினைவுகூரத் தமிழ் மக்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர். இந்த விளக்கங்களை எல்லாம் "செம்மொழி உள்ளும் புறமும்" என்ற நூலில் அருமை நண்பர் திரு. மணவை முஸ்தபா எடுத்து எழுதியிருக்கிறார்.

பா.ஜ.க.வின் தேசிய செயற்குழு உறுப்பினரான அருமை நண்பர் இல. கணேசன் அவர்கள்கூட சமஸ்கிருத வாரம் கொண்டாடுவதால் தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் பாதிப்பில்லை என்றும், அ.தி.மு.க.வில் "அகில" என்பதும், "திராவிட" என்பதும் சமஸ்கிருத வார்த்தைகள்தான் என்றும், சமஸ்கிருதத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்றும், அதே நேரத்தில் செம்மொழி தமிழுக்கு தை மாதத்தின் முதல் ஏழு நாட்களைத் தமிழ் மொழி வாரம் என்று கொண்டாடலாம் என்றும் கூறியிருக்கிறார். அவர் வாதப்படியே சமஸ்கிருத வாரம் கொண்டாடினால் மேலும் மேலும் சமஸ்கிருத வார்த்தைகள் உள்ளே வர வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்பதையும் நினைவிலே கொள்ளவேண்டும்.

இந்தப் பிரச்சினை குறித்துத் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஒவ்வொரு மாநிலத்திலும், அதன் மொழி சார்ந்த கலாச்சாரத்தின் அடிப்படையில் மொழி வாரம் கொண்டாடப்பட வேண்டுமென்றும், தமிழ்நாட்டில் தமிழ்ச் செம்மொழி வாரத்தையும், மற்ற மாநிலங்களில் சம்மந்தப்பட்ட மொழிகளின் வாரத்தையும் கொண்டாட உத்தரவிடுங்கள் என்றும் சமஸ்கிருத வாரம் கொண்டாடுவதை ஏற்க முடியாதென்றும் பிரதமருக்குக் கடிதம் எழுதியதாகக்கூட செய்தி வந்தது. ஆனால் இதே ஜெயலலிதா, 8-7-2014 அன்று தலைமைச் செயலகத்தில் இருந்தவாறே, சென்னையில் காமராஜர் சாலையிலே அமைந்துள்ள விவேகானந்தர் இல்ல வளாகத்தில், தமிழ்நாடு அரசின் இரண்டு கோடி ரூபாய் நிதி உதவியுடன் ராமகிருஷ்ண மடம் நிர்வாகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள விவேகானந்தர் பண்பாட்டு மையத்தைக் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்த நிகழ்ச்சி பற்றி ஏடுகளில் செய்தி வெளிவந்தது. விவேகானந்தரின் 150வது பிறந்த ஆண்டு விழா வினையொட்டி 8000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள விவேகானந்தர் பண்பாட்டு மையத்தில் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிப் பாடங்களைப் பயிற்றுவித்தல் போன்ற பல்வேறு பண்பாட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருந்தார்கள். அதாவது தமிழக அரசே இரண்டு

கோடி ரூபாய் நிதி உதவி செய்து, கட்டப்பட்டு, முதல் அமைச்சரே 8ஆம் தேதி திறந்து வைத்த விவேகானந்தர் பண்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒன்றாகத் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிப் பாடங்களைப் பயிற்றுவிக்கப் போகிறார்களாம்!

தமிழ்நாட்டின் தலைநகரில், தலைமைச் செயலகத்திற்கு அருகிலே உள்ள விவேகானந்தர் பண்பாட்டு மையத்தில் இந்தியையும், சமஸ்கிருதத்தையும் பயிற்றுவிக்க அமைந்துள்ள பண்பாட்டு மையத்திற்கு அரசின் சார்பில் இரண்டு கோடி ரூபாய் நிதி உதவி செய்துவிட்டு, மத்திய அரசுக்குத் தமிழகத்திலே சமஸ்கிருத வாரம் கொண்டாடக் கூடாது என்று முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதுகிறார் என்றால் இது எத்தகைய இரட்டைவேடப் போக்கு என்பதைத் தமிழ்நாட்டு மக்கள்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் இந்தி மொழியையோ, சமஸ்கிருத மொழியையோ எந்தப் பிரிவு மக்கள் மீதும் திணிப்பதை என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாதவர்கள். அந்த வகையில் தமிழ்நாட்டில் உள்ள சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் சமஸ்கிருத வாரம் கொண்டாடுவதை ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு நம்முடைய கடுமையான கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவிப்பதோடு, ஏற்கனவே இந்தி மொழி பற்றிய அறிவிப்பில் மத்திய அரசு அது இந்தி மொழி பேசுகின்ற மாநிலங்களுக்கு மட்டுமே உரிய அறிவிப்பு என்று அறிவித்ததைப் போல, இந்த சமஸ்கிருத வாரம் கொண்டாடுவது பற்றியும் உடனடியாக உரிய திருத்த அறிக்கையினை வெளியிட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். சரஸ்வதி, சமஸ்கிருதம் என்ற அடிப்படை வாதத்தைக் கைவிட்டு, தேர்தலின்போது உறுதியளித்தபடி, மத்திய மோடி அரசு இந்திய நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதே முரண்பாடுகளையும், கருத்து மோதல்களையும் தவிர்த்திடப் பெரிதும் உதவும்.

அன்புள்ள,

மு.க.

22-7-2014

3908. நீதியின் கழுத்தை நெரிக்கும் கட்ஜூவின் நேர்மையற்ற கருத்து!

உடன்பிறப்பே,

நீதித் துறையின் மீதும், நீதிபதிகள் மீதும் எனக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்" அமைந்து, விருப்பு - வெறுப்பு, வேண்டுதல் - வேண்டாமை அகற்றி, நடுநிலை நின்று தீர்ப்பும் கருத்துகளும் வழங்கிட வேண்டியவர்கள் நீதிபதிகள். நீதிபதிகள் பொறுப்பில் இருக்கும் போதும், ஓய்வு பெற்ற பிறகும் நடுநிலை தவறாது நடந்திட வேண்டியவர்கள். ஆனால் அண்மைக் காலமாக ஒரு சிலர் அந்த இலக்கணத்தை மறந்து, மனம் போனபடி கருத்துகளை அறிவிப்பது, ஜனநாயகத்தின் மிக முக்கியமான - நம்பகத்தன்மை வாய்ந்த நீதித் துறை எனும் தூணில் துளை போடுவதைப் போல பலவீனப்படுத்தி வருவதை நமது நாடு கண்டு வருகிறது.

நீதிபதி மார்கண்டேய கட்ஜூ, சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக, 2004ஆம் ஆண்டு நவம்பரில் பதவிக்கு வந்து, ஓராண்டு காலமே அந்தப் பதவியில் இருந்து, அதன் பிறகு உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும் சில காலம் இருந்து ஓய்வு பெற்றவர். உச்சநீதிமன்ற நீதிபதி பொறுப்பிலேயிருந்து 2011 செப்டம்பரில் ஓய்வு பெற்ற பிறகு, இது நாள் வரை வாய் திறக்காமல் இருந்தவர், தற்போது இரண்டு நாட்களாக ஒரு நீதிபதி தனது கண்ணியத்திற்குரிய நிலையிலிருந்து இறங்கிச் சொல்லக்கூடாத சில செய்திகளை ஏதோ ஒரு மறைமுக நிர்ப்பந்தத்தின் காரணமாக வெளியிட்டு வருகிறார். அதனால் அவரது உயரிய பதவிக்குரிய மாண்பு கேள்விக்குள்ளாகி அவரது கடந்த காலப் பின்னணி சந்தேகத்திற்குள்ளாகி, நாடாளுமன்றத்திலேயே விவாதிக்கப்படும் அளவுக்கு வந்திருக்கிறது. ஒரு குடம் பாலைப் பாழாக்கிட ஒரு துளி விஷம் போதுமானதல்லவா? ஜெயலலிதா மீதான பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டித்

தீர்ப்பு வெளிவரவிருக்கிற நிலையில், தீர்ப்பின் மீது அழுத்தம் ஏற்படுத்தும் நோக்கில், ஜெயலலிதாவின் புகழ் பாடுவதற்காகத் திட்டமிட்டுச் சில செய்திகளைச் சொல்ல வேண்டுமென்று அவை வெளியிடப்படுவதாகத் தெரிகிறது.

2004-2005ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக கட்ஜு இருந்த போது என்ன நடைபெற்றது என்பதை அவருடைய "முகநூல்" பக்கத்தில் வலைதளம் ஒன்றில் ஏறத்தாழ பத்தாண்டுகள் கழித்து அவர் குறிப்பிட்டிருப்பதை "இந்து" நாளேடு மிகப் பெரிய அளவில் கட்ஜுவின் புகைப்படத்தோடு வெளியிட்டுள்ளது. அதில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமன விவகாரத்திலோ அல்லது நீதித் துறையின் நேர்மையான, சுதந்திரமான செயல்பாடு களிலோ ஒருபோதும் தலையிட்டதில்லை என்றும், நீதிபதிகள் நியமன விவகாரத்தில் யார் பெயரையும் பரிந்துரை செய்ததில்லை என்றும் நீதித் துறையின் சுதந்திரத்திற்கு முதலமைச்சர் மிகவும் மதிப்பளித்த காரணத்தினால், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகத் தாம் பதவி வகித்த ஓராண்டுக் காலத்தில் தமக்கு எந்த ஒரு பிரச்சினையும் ஏற்பட்டதில்லை என்றும் புகழாரம் சூட்டியிருக்கிறார்.

நீதிபதி கட்ஜு அவர்கள் தமிழக முதலமைச்சரைப் பாராட்டுவதைப் பற்றி நமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால் அதே நேரத்தில் தேவையில்லாமல் தி.மு.க. பற்றியும் பெயர் குறிப்பிடாமல் விமர்சனம் செய்திருக்கிறார். அதனால் இந்த நீதிபதி பற்றிய வரலாற்றை நாம் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது தவிர்க்க முடியாததாகி விட்டது.

21-7-2014 தேதிய "தி டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேட்டில் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு எழுதியுள்ள கட்டுரையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதியாக இருந்த ஒருவர் மீது புகார்கள் இருந்த போதிலும், அவர் அந்தப் பதவியிலே அமர்த்தப்பட்டார் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்க உச்ச நீதிமன்றத்திற்கு அவர் பரிந்துரை செய்தார் என்றும், ஆனால் அப்போது மத்திய அரசில் தோழமைக் கட்சியாக தமிழகத்தில் இருந்த கட்சியின் உதவியினால் அந்த நீதிபதி பாதுகாக்கப்பட்டார்

என்றும், அவருக்கு இந்திய உச்ச நீதிமன்றத்தில் இருந்த மூன்று நீதிபதிகள் உதவியாக இருந்தார்கள் என்றும் எழுதியிருக்கிறார்.

அவருடைய இந்தக் கூற்று உண்மையாக இருக்கும்பட்சத்தில், அவர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த நேரத்திலோ, அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்த நேரத்திலோ அதைத் தெரிவிக்காமல் இருந்தது ஏன்? பிரதமராக இருந்த மன்மோகன்சிங் அவர்களும், காங்கிரஸ் அமைச்சர் ஒருவரும் அதற்குத் துணையாக இருந்தார்கள் என்று தற்போது குற்றம் சாட்டுகின்ற இந்த நீதிபதி காங்கிரஸ் மத்தியில் ஆட்சியில் இருந்தவரை ஏன் வாயே திறக்கவில்லை? உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற பிறகு, தனக்கு பிரஸ் கவுன்சில் ஆப் இண்டியாவில் தலைமைப் பொறுப்பு வேண்டும் என்பதற்காக வாய் மூடி மௌனியாக இருந்தாரா? 2004 ஆம் ஆண்டு நடைபெற்றதாகச் சொல்லப்படும் சம்பவம் பற்றி, பத்தாண்டுகளுக்குப் பிறகு தற்போது புகார் சொல்ல வேண்டிய கட்டாய நிலை இந்த நீதிபதிக்குத் திடீரென்று இப்போது ஏன் ஏற்பட்டது? உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் மீது குற்றம் சாட்டுகிறாரே, அவருடைய பெயரை இவர் கூறாதது ஏன்? அந்த நீதிபதியின் பெயரைச் சொன்னால்தானே, அவரும் உண்மை நிலையை விளக்கிப் பதிலளிக்க முடியும்?

இந்த நீதிபதி பண்டித நேருவின் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர் என்றும், இவருடைய தந்தையே முதலமைச்சராக இருந்தவர் என்றும், நேருவின் மத்திய அமைச்சரவையில் இவருடைய தாத்தா ஒரு அமைச்சராக இருந்தவர் என்றும் சொல்லப்படுகிறது. எனவே காங்கிரஸ் குடும்பப் பாரம்பரியத்திலே வந்த கட்ஜு காங்கிரஸ் ஆட்சி மத்தியிலே இருந்தபோது உயர் நீதிமன்ற நீதிபதியாக - தலைமை நீதிபதியாக - உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவியையும், சலுகைகளையும் முழுமையாக அனுபவித்துவிட்டு - ஓய்வுக்குப் பிறகும் பிரஸ் கவுன்சில் ஆப் இண்டியாவின் மிக உயரிய தலைமைப் பொறுப்பைப் பெற்றிருக்கின்ற நிலையில், காங்கிரஸ் அரசின் மீது - அதன் பிரதமர் மீது பத்தாண்டுகளுக்குப் பிறகு திடீரென்று குறைகூறுகின்ற இக்கட்டான சூழல் எப்படி ஏற்பட்டது? காங்கிரஸ் ஆட்சியிலே பதவியைப் பெற்றுக்கொண்டு, தற்போது அந்த காங்கிரஸ்

ஆட்சி முடிந்தவுடன், அந்த ஆட்சி மீதே குறை சொல்லுபவர் எப்படிப்பட்டவர் என்பதை நான் சொல்ல வேண்டுமா என்ன?

இன்னும் சொல்லப்போனால், குறிப்பிட்ட இந்த நீதிபதி மீதுதான் பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. முரண்பாடான கருத்தினைத் தெரிவித்த நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு பற்றி இன்றைய நிதியமைச்சர் அருண் ஜெட்லி அவர்கள் 18-2-2013 அன்று செய்த விமர்சனம் என்ன தெரியுமா?

மார்க்கண்டேய கட்ஜு; காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சிகள் ஆளுகின்ற மாநில அரசுகளைப் பற்றிக் குற்றம் சாட்டியது பற்றியும், காங்கிரஸ் கட்சியைப் பற்றி எதுவும் கூற முன்வராத நிலையைப் பற்றியும்; அருண் ஜெட்லி கூறும் போது, "கட்ஜு ஓய்வு பெற்ற பிறகு, அவருக்குப் பெரிய பதவி ஒன்றினைக் கொடுத்த கட்சிக்கு "நன்றி" தெரிவிக்கும் வகையில் அந்தக் குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கிறாரா" என்று வினவினார்.

மார்க்கண்டேய கட்ஜு பீகார், குஜராத், மேற்கு வங்க அரசுகளுக்கு எதிராகப் பேசியிருக்கிறார். காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளையும் அவற்றின் முதல் அமைச்சர்களையும் கடுமையாகத் தாக்கிப் பேசியதுடன், பீகார் மாநில முதலமைச்சராக இருந்த நிதீஷ் குமாரைப் பற்றி, அவர் ஊடகங்களை விலைக்கு வாங்கிவிட்டாரென்றார். தற்போது பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி அவர்களைப் பற்றி, கட்ஜு 2002ஆம் ஆண்டு குஜராத்தில் நடைபெற்ற கலவரத்தில் மோடிக்கு எவ்விதப் பங்கும் இல்லை என்ற கதையை தான் நம்பிடத் தயாராக இல்லை என்றார். இதுகுறித்து திரு. அருண் ஜெட்லி, "இந்திய பிரஸ் கவுன்சில் தலைவராக இருக்கும் மார்க்கண்டேய கட்ஜு, தன்னுடைய பதவிக்குரிய கடமைகளை மறந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார். எனவே அவர் உடனடியாகத் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்யவேண்டும். அவர் நீதிபதியாக இருந்தபோதும் அதற்குப் பிறகும் அவர் சொல்வதனைத்தும் ஆச்சரியமானவை மட்டுமல்ல; அதிர்ச்சி அளித்திடக் கூடியவை. கண்ணியமான கருத்து என்பது எப்போதும் அவருக்குத் தொடர்பில்லாதது. நீதிபதியாக இருக்கும் எவரும் அல்லது அந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற எவரும் வெளிப்படையாகவோ, குரூரத்தன்மை

கொண்டதாகவோ, ஆச்சரியப்படத்தக்க விதத்திலோ, அதிகாரப் பேராசை கொண்ட வகையிலோ நடந்து கொள்ளக்கூடாது என்பது நியதி. ஆனால் மார்க் கண்டேய கட்ஜு, இத்தகைய குணநலன் களுக்குச் சம்மந்தம் இல்லாத வகையில் நடந்துகொள்கிறார். அவர் உண்மைகளைத் திரித்துக் கூறுகிறார். அவர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதிலிருந்து விலக வேண்டும். அவருக்கு அரசியல் நடவடிக்கைகளில் அல்லது அரசியலில் கருத்துகளைச் சொல்வதில் மிகுந்த ஆர்வம் இருக்குமானால், அவர் நீதிபதி பதவிக்குச் சமமான தற்போதைய பொறுப்பிலிருந்து உடனே விலகிவிட வேண்டும். ஒரு நீதிபதியின் தகுதியைக் கணிப்பதற்கான அனைத்துச் சோதனைகளிலும் அவர் தோற்றுப்போனவர். அவர் எந்தப் பொருளைப் பற்றிப் பேசினாலும், அதில் அரசியல் கலந்திருக்கிறது. அவராகவே தன்னுடைய பதவியை ராஜினாமா செய்யவேண்டும் அல்லது அவர் அந்தப் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும்”

இவையெல்லாம் தற்போது விவாதத்திற்குரிய கருத்துகளை வெளியிட்டிருக்கும் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு பற்றி இன்றைய மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி அவர்கள் கடந்த ஆண்டு தெரிவித்த கருத்துகளாகும்.

இப்படி மார்க்கண்டேய கட்ஜுவின் நடவடிக்கைகளில் இந்த ஒரு முரண்பாடு மட்டும் தானா?

2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மார்க்கண்டேய கட்ஜு இந்திய நாட்டு மக்களைப் பற்றிச் சொல்லும்போது, “90 சதவிகித இந்தியர்கள் முட்டாள்கள்” (90 percent of Indians are Fools) என்றார். அவர் இப்படிச் சொன்னதற்கு, இந்தியாவின் பல முனைகளிலே இருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பின. அது கண்டு மார்க்கண்டேய கட்ஜு வெளிப்படையாக இந்திய நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரி விடுத்த அறிக்கையில், “From time to time people have been bringing to my notice that the language I use may have been harsh. So if it has hurt some feelings, I thought it fit to apologise” என்று தன்னுடைய நடவடிக்கைக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டவர்தான் நீதிபதி கட்ஜு.

இதே மார்க்கண்டேய கட்ஜு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்களைப் பற்றி என்ன சொன்னார் தெரியுமா?

"இந்தியாவில், பொது வாழ்க்கையில் நேர்மை என்பது காணக் கிடைக்காத ஒன்றாகி வருகிறது. இந்த நிலையில் மம்தா பானர்ஜியின் நேர்மையோ மிக உயர்ந்த தரத்தில் ஆனது" (Integrity is becoming rare in Public Life in the country, but Mamta's integrity is of the highest order) என்று மார்க்கண்டேய கட்ஜு 23-5-2012 அன்று பாராட்டி விட்டு, அதே மம்தா பானர்ஜியைப் பற்றி, "Mamta Banerjee seems to have become Intolerant and Whimsical, and she is autocratic" - அதாவது "மம்தா பானர்ஜி, சகிப்புத் தன்மை அற்றவர் - மனம் போன போக்கில் செயல்படுகிறவர் - சர்வாதிகார மனப்பான்மை கொண்டவர்" என்று 29-11-2012 அன்று அவரே முன்பு சொன்னதிலிருந்து முழுதும் மாறுபட்டுக் கருத்து தெரிவித்தார்.

எனவே ஜெயலலிதாவைப் பற்றி இன்றைக்குப் புகழ்ந்திருக்கின்ற மார்க்கண்டேய கட்ஜு இன்னும் சில மாதங்களில் எப்படியெல்லாம் மாற்றிச் சொல்லப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

கடந்த ஆண்டு இதே மார்க்கண்டேய கட்ஜு இதே முதலமைச்சர் ஜெயலலிதா பற்றி தெரிவித்த "உயர்ந்த கருத்து" என்ன தெரியுமா?

தமிழகப் பத்திரிகையாளர் சம்மந்தப்பட்ட விசாரணைக்கு தலைமை வகித்த மார்க்கண்டேய கட்ஜு விசாரணையின்போது, 5-4-2013 அன்று தமிழக அரசின் வழக்கறிஞர் வருத்தம் தெரிவித்தார். அப்போது பிரஸ் கவுன்சில் ஆப் இண்டியாவின் தலைமைப் பொறுப்பிலே இருந்த இதே மார்க்கண்டேய கட்ஜு கூறும்போது, Press Council of India Chairman Markendey Katju asked the Tamil Nadu Government to quit or run the administration in accordance with the Constitution by immediately ordering the arrest, charge-sheeting and suspension of 30 policemen who had acted in a

high-handed manner against the Editor of a Tamil Daily and his son for writing against illegal granite mining. When the counsel said he felt sorry, the PCI Chairman said, "Your sorry will not do. Let the Chief Minister (Jayalalithaa) say she is unable to run the

Government in accordance to the Constitution and submit resignation to the Government. The Press Council of India inquiry committee had passed two orders on April 27 and August 27 in 2012, Mr. Katju said deeply regretting that neither of the orders was complied with and total disrespect was shown to this Committee by Tamil Nadu authorities. In our opinion, if the Tamil Nadu Government finds itself unable to run the administration in accordance with the Constitution, it has no right to continue in office"

(இந்திய பிரஸ் கவுன்சில் தலைவர், நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு, தமிழ்நாடு அரசு - ஒன்று, பதவி விலகவேண்டும் அல்லது முறையாக நிர்வாகத்தை நடத்தவேண்டும். வரம்பு மீறி நடந்து கொண்ட 30 காவல் துறையினரை உடனடியாகக் கைது செய்து அவர்கள் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்த வேண்டும் என்றார். அப்போது தமிழக அரசின் வழக்கறிஞர், மன்னிப்புக் கோரினார். அதற்கு நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு, "நீங்கள் கேட்கும் மன்னிப்பு எதற்கும் பயன்படாது. உங்களுடைய முதல் அமைச்சர் (ஜெயலலிதா) முறைப்படி இந்திய அரசியல் சட்டத்தின்படி அரசாங்கத்தை நடத்த முடியவில்லை என்று கூறட்டும். அல்லது உடனடியாக ராஜினாமா செய்யட்டும். இந்திய பிரஸ் கவுன்சிலின் விசாரணைக் குழு 2012 ஏப்ரல் 27 மற்றும் ஆகஸ்ட் 27 ஆகிய நாட்களில் இரண்டு ஆணைகளைப் பிறப்பித்தது. அந்த இரண்டு ஆணைகளும் தமிழக அரசு அதிகாரிகளால் மதிக்கப்படவில்லை" என்றார்.)

தி.மு. கழக ஆட்சியில் நடந்த அந்தச் சம்பவத்திற்காக அ.தி.மு.க. ஆட்சியில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்காகவும், அவரது ஆணைகள்படி காரியங்கள் நடக்க வில்லை என்பதற்காகவும் இந்தச் சம்பவம் பற்றிய விசாரணையை நடத்திய நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு தெரிவித்த மிகக் கடுமையான கருத்துகள்தான் இவை.

நீதித்துறையிலேயே ஜெயலலிதா குறுக்கிட்டதில்லை என்று நேற்றையதினம் எந்த நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு பாராட்டுரை வழங்கியிருக்கிறாரோ, அதே நீதிபதிதான் கடந்த ஆண்டு ஜெயலலிதாவைப் பதவியிலிருந்தே விலகும்படி கோபத்தோடு எச்சரித்திருக்கிறார்.

21-7-2014 அன்று ஒளிபரப்பப்பட்ட என்.டி.டி.வி. தொலைக்காட்சிக்கு மார்க்கண்டேய கட்ஜு அளித்த பேட்டியில், "நீதிபதி லகோட்டி, நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன், நீதிபதி ஒய்.கே. சபர்வால் ஆகிய மூன்று இந்தியத் தலைமை நீதிபதிகளும் பொருத்தமில்லாத வகையில், சமரசம் செய்து கொண்டவர்கள் மட்டுமல்லாமல், அரசியல் அழுத்தத்திற்கு இடம்கொடுத்தவர்கள். இந்தியத் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி ஒய்.கே. சபர்வால் லஞ்சக் குற்றச்சாட்டுக்கு ஆளான நீதிபதி ஒருவருக்குப் பதவி நீட்டிப்பு வழங்கினார். இந்தியத் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன், பதவி நீடிப்பு வழங்கப்பட்ட அதே நீதிபதியின் பதவியை நிரந்தரமானது என்று முறைப்படுத்தி ஆணையிட்டார். இந்த மாதிரியான பரபரப்பான குற்றச்சாட்டுகளை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு காலம் கடந்து வெளியிடுவதற்கு என்ன காரணம் என்று என்.டி.டி.வி. தொலைக்காட்சி சிறப்பு நிருபர் நிதி ரஸ்தான் என்பவர் கேட்டபோது, "நான் சொன்னதை சரியானதா என்று மட்டும் பாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் பேட்டியிலிருந்து பாதியிலேயே வெளிநடப்பு செய்துவிட்டார் மார்க் கண்டேய கட்ஜு. இந்தியப் பத்திரிகைக் கவுன்சில் தலைவராக உள்ள ஒருவர், ஊடகம் ஒன்றிடம் பொறுமையை இழந்து நடந்து கொண்டது முறையானதுதானா?

ஜெயலலிதாவைப் பாராட்டியுள்ள நீதிபதி எப்படிப்பட்டவர் என்பதையெல்லாம் இங்கே விளக்கிவிட்டேன். தற்போது நீதிபதியால் பாராட்டப்பட்ட தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நீதிபதிகளிடம் எப்படியெல்லாம் நடந்துகொண்டார் என்று சுருக்கமாகக் கூறட்டுமா?

உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஜெயலலிதாவுக்கு எதிராக தீர்ப்புக் கூறினார் என்பதற்காக அந்த நீதிபதியின் வீட்டிற்கு மின்சார இணைப்பும், குடிநீர் இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

ஒரு நீதிபதியின் மருமகன் மீது அவர் கஞ்சா வைத்திருந்தார் என்று கூறி அ.தி.மு.க. ஆட்சியில் கைதே செய்யப்பட்டார்.

உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஜாமீனில் விடுதலை செய்யவில்லை என்பதற்காக, சொல்ல வேண்டியவர்களிடம் சொல்லி அவர் அந்தப் பதவியில் இருந்தே நீக்கப்பட்டார்.

தன் மீதான வழக்கினைத் தான் குறிப்பிடும் நீதிபதிதான் விசாரிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம்வரை வாதாடியவரும் ஜெயலலிதாதான்.

மார்க்கண்டேய கட்ஜு தெரிவித்துள்ள புகார்களை முன்னாள் தலைமை நீதிபதிகள் லகோதி, கே.ஜி. பாலகிருஷ்ணன் ஆகியோர் மறுத்துள்ளார்கள். இவருடைய புகார் குறித்து உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஆர்.சி. லகோதி நேற்று கூறியபோது, "அனைத்துமே ஆவணமாக உள்ளது. நான் என்ன செய்தேன், என்ன செய்யவில்லை என்பதற்கான காரணங் களுடன் ஆவணங்கள் உள்ளன. நான் என் வாழ்க்கையில் எந்தத் தவறும் செய்யவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார். மற்றொரு முன்னாள் தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், "இந்திய பத்திரிகை கவுன்சிலின் தலைவரான மார்க்கண்டேய கட்ஜு குற்றச்சாட்டு அடிப்படையற்றது. அதில் உண்மை இல்லை. அரசியல் நிர்பந்தத்திற்கு உட்பட்டு நீதிபதியை நியமனம் செய்ததாக அவர் கூறியிருப்பது தவறு. பத்தாண்டுகளுக்குப் பிறகு அவர் இந்தக் குற்றச்சாட்டைக் கூறுவது ஏன்? குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் தற்போது உயிருடன் இல்லாத நிலையில் இதுபோன்ற குற்றச்சாட்டைக் கூறுவது நியாயம் அல்ல. மத்திய புலனாய்வுத் துறை சம்மந்தப்பட்ட நீதிபதி குறித்து அனுப்பிய அறிக்கை எனக்குத் தெரியாது. அவரை ஆந்திர உயர் நீதிமன்றத் துக்கு இட மாற்றம் செய்வது சரியானது என்று நினைத்ததாலேயே நாங்கள் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டோம். இது மட்டுமே உண்மை நிலவரம் ஆகும். இதன் பின்னணியில் எந்த அரசியல் நிர்பந்தமோ அல்லது ஊழலோ இல்லை" என்று விளக்கம் அளித்திருக்கிறார்.

2004-2005ஆம் ஆண்டில் தமிழக உயர் நீதிமன்றத்தில் ஓராண்டு காலம் மட்டுமே தலைமை நீதிபதியாக இருந்திருக்கிறார் கட்ஜு. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நீதித் துறையி லேயே தலையிட்டதில்லை என்று அவர் பாராட்டுப் புராணம் பாடியிருக்கிறார் என்றால் அதிலே பொதிந்திருக்கும் உள்நோக்கம் என்ன? தலைமை நீதிபதியாக இருந்த ஒரே ஆண்டில் ஜெயலலிதாவைப் பற்றிய முழு விபரங்களையும் தெரிந்து கொண்டிருக்க முடியுமா? அதே ஜெயலலிதாவைப் பதவியை

விட்டே விலக வேண்டுமென்று இதே நீதிபதி கடந்த ஆண்டு கூறியது கிடையாதா? நீதிபதியாகப் பல ஆண்டு காலம் இருந்தவர், உச்ச நீதிமன்றம்வரை சென்றவர், அந்த உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகள் பற்றிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு போகிற போக்கில் புழுதி வாரி இறைத்திருப்பது, நீதித் துறையையே இழிவுபடுத்தும் முயற்சி என்றுதான் கூற வேண்டும்.

கட்ஜூவின் கடந்த கால நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசக் கூடியவர்; நீதிபதிகளுக்கே உரிய நடுநிலை தவறி, பொறுமையிழந்து கருத்து சொல்லக்கூடியவர்; கோபக்காரர்; காலையில் அவசரப்பட்டு சொன்னதை மாலையே மறுத்திடக்கூடியவர்; முரண்பாடுகளின் மொத்த உருவம் என்பதையும்; இப்போது அவர் சொல்லியிருப்பது யாருக்கு உதவுவதற்காக என்பதையும்; எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

முன்னாள் நீதிபதி ஒருவரைப் பற்றிய உண்மைகளை எடுத்துரைத்திட நேர்ந்தது, எனக்கு ஏற்பட்ட நல்ல வாய்ப்பு அல்ல என்றே நான் கருதுகிறேன்!

அன்புள்ள,

மு.க.

23-7-2014

3909. தமிழகச் சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு!

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டப்பேரவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 21-7-2014 அன்று இரண்டு முறை வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். என்ன காரணம் தெரியுமா? தொகுதி மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளைப் பற்றி, சட்டசபையில் எதிர்க்கட்சிகளை, குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பேசவே விடுவதில்லை. ஆளுங்கட்சிமீது ஏதாவது குறை, குற்றச்சாட்டு சொல்ல ஆரம்பித்தாலே போதும், உடனே முதலமைச்சரும், அந்தந்தத் துறைகளின் அமைச்சர்களும் எழுந்து, உறுப்பினருக்குத் தரப்பட்ட நேரத்தை எல்லாம் எடுத்துக் கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உணர்வுகளைக் காயப்படுத்திடும் வகையில் வாய்க்குவந்தவாறு ஏதேதோ பேசுகிறார்கள். அவர்கள் கூறுவதற்குக் கழக உறுப்பினர்கள் அவையின் விதிமுறைகளை அனுசரித்துப் பதில் சொன்னால், அதனை அவைக் குறிப்பிலிருந்து எதேச்சாதிகாரமாக நீக்கி விடுகிறார்கள். கடந்த காலத்தில் சட்டப்பேரவையில் கேள்வி நேரம் முடிந்தவுடன் எதிர்க்கட்சிகளால் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம், சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, உறுப்பினர்கள் அதன்மீது தங்கள் கருத்துகளை எடுத்துரைத்து, அதற்குப் பிறகு அமைச்சர்கள் பேசுவார்கள். இதுதான் வழிவழியாகப் பின்பற்றப்படும் பழக்கம். தற்போது அந்த நடைமுறை பின்பற்றப்படுகிறதா?

தமிழ்நாட்டிலே என்ன நடைபெறுகிறது? நேற்று ஒரே நாளில் நடைபெற்றதை மட்டும் கூறவா? சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படுகிறதா? தமிழ்நாடெங்கும் மணல் கொள்ளை கட்டு மீறிப் போய் விட்டது. வேலூர் மாவட்டம், அரக்கோணத்தை அடுத்த தக்கோலம் பகுதியிலே ஜூலை 20ஆம் தேதி மணல் அள்ளப்படுவதாகத் தக்கோலம் காவல் நிலையத்திற்குத் தகவல்

வந்ததையொட்டி, துணை ஆய்வாளர் ராஜனும், தலைமைக் காவலர் கனகராஜும் சென்றபோது, டிராக்டரில் மணல் அள்ளிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அதைத் தடுக்க முயன்ற தலைமைக் காவலர் கனகராஜை டிராக்டர் ஓட்டுனர் இரக்கமற்ற முறையில் கீழே தள்ளி அவர் மீது டிராக்டரை ஏற்றிப் படுகொலை செய்திருக்கிறார்.

தேசிய குற்ற ஆவணக் கழகம் ஆண்டுதோறும் வெளியிடுவதைப் போல இந்த ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களைப் பற்றியும், பாலியல் குற்றங்கள் அதிகரித்திருப்பதைப் பற்றியும் பல தகவல்களை வெளியிட்டுள்ளன. அதைப்பற்றிப் பேரவையில் விவாதிக்கச் சட்டப்பேரவையில் நமது கழகத்தின் சார்பில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் பாலியல் பலாத்கார சம்பவங்கள் அதிகமாவதையொட்டி, அந்த மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் அரசுக்கு அவப்பெயர் ஏற்பட்டுள்ளது என்பதால், அந்த அரசில் உள்துறை அமைச்சராக இருப்பவரிடமிருந்து பதவியைப் பறிக்க முதலமைச்சர் திட்டமிட்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. மேலிடத்திலே அனுமதிகோரி, அதற்குக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஒப்புதல் அளித்துவிட்டதாகவும் செய்தி வந்துள்ளது. இந்த நிலையில் தமிழகத்திலும் பாலியல் குற்றங்கள் அதிகமாகி வருவது குறித்து அ.தி.மு.க. அரசு என்ன செய்யப் போகிறது? கர்நாடகாவின் முன்னுதாரணத்தைப் பின்பற்றப் போகிறதா அல்லது கண்ணை மூடிக்கொண்டு எதுவும் நடக்காததைப் போலக் கபட வேடம் காட்டப்போகிறதா?

காவிரிப் பிரச்சினையில் உச்ச நீதிமன்ற நீதிபதியின் ஆணையின் பேரில் மத்திய அரசின் அரசிதழில் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட்டதை வைத்துக்கொண்டு, தான்தான் அதைச் செய்ததாகத் தஞ்சையிலே பெரிய பாராட்டு விழா ஒன்றினை ஜெயலலிதா நடத்திக் கொண்டு, பட்டத்தையும், பரிசையும் பெற்றார். ஆனால் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் காவிரி மேலாண்மை வாரியம் இதுவரை அமைக்கப்பட வில்லை. அந்த காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டுமென்று டெல்டா மாவட்ட விவசாயிகள் முற்றுகைப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். போராட்டம் நடத்திய விவசாயிகளை காவல் துறையினர் கடுமையாகத் தாக்கியதோடு, ஆயிரக்கணக்கான

விவசாயிகளை அ.தி.மு.க. அரசு கைது செய்திருக்கிறது. அ.தி.மு.க. அரசின் இந்த இரட்டை நிலைப்பாட்டைப் பற்றி பேரவையிலே விவாதிக்க வேண்டாமா?

தமிழ் மாநில முஸ்லீம் லீக் கட்சியின் மத்திய சென்னை மாவட்டத் தலைவராக இருந்த அக்பர் அலி, நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, திடீரென வந்த கும்பல் ஒன்று அவரை அரிவாளால் சரமாரியாக வெட்டிக் கொலை செய்திருக்கிறது. இது தமிழகத்தின் தலைநகரிலே நடைபெற்றுள்ள சம்பவம்.

சென்னையை அடுத்த செங்கல்பட்டு பகுதியில் சிறுத்தை நடமாட்டம் உள்ளதாகக் கடந்த இரண்டு மாதமாகச் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. மக்கள் பெரும் பீதியிலே இருக்கிறார்கள். சிறுத்தையை நேரில் கண்ட பெண்கள் பதறி அடித்து ஓட்டமெடுத்திருக்கிறார்கள். கேமராவில் சிறுத்தைகள் உலா வருவது தெரிந்திருக்கிறது. இதைப்பற்றி அரசு என்ன நட வடிக்கை எடுத்தது என்று பேரவையில் விவாதிக்க வேண்டாமா?

"சாப்ட்வேர்" பெண் பொறியாளர் ஒருவரைக் காரிலே கடத்திப் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக ஒரு செய்தி வந்துள்ளது. பத்து இலட்சம் ரூபாய் முதலீடு செய்தால், 30 இலட்சம் ரூபாய் தருவதாகக்கூறி "ஆன்லைன்" மோசடியில் ஈடுபட்ட கும்பல் ஒன்று பிடிபட்டதாகவும் செய்தி வந்திருக்கிறது.

நெல்லை எக்ஸ்பிரஸ் புகைவண்டியில் 5 வயது சிறுமிக்குப் பாலியல் தொந்தரவு தரப்பட்டுள்ளது.

வடசென்னை அனல் மின் நிலையத்தில் உதவிச் செயற்பொறியாளராகப் பணியாற்றியவர் வைரமணி. இவர் கடந்த 2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஓய்வு பெற்றிருக்கிறார். அதற்குப் பிறகு அவருக்கு வழங்க வேண்டிய பணிப் பலன்களை வழங்கவில்லை என்று இதுவரை முதலமைச்சரின் தனிப் பிரிவில் 127 முறை மனு அளித்தும் எந்தவிதமான பயனும் இல்லை என்று கூறி உண்ணாவிரதம் இருப்பது புகைப்படத்தோடு நேற்று செய்தியாக வந்துள்ளது.

அம்பத்தூர் பட்டரைவாக்கத்தில் தனது உறவினர்களைத் தடுத்து நிறுத்தி வாக்குவாதம் செய்த வாலிபர் ஜான் என்பவரை, அ.தி.மு.க. இளைஞர் பாசறைத்தலைவர் கத்தியால் குத்திக் கொன்றார் என்றும், அவரைத் தடுக்க வந்த நான்கு பேருக்கும்

கத்திக் குத்து விழுந்தது என்றும் நேற்றைய நாளேடுகளில் செய்தி வந்துள்ளது. இது பற்றிப் பேரவையில் பேசப்பட வேண்டாமா?

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் சுயநிதி பாடப் பிரிவு மாணவர்களுக்கு "லேப்-டாப்" வழங்கப்படவில்லை என்பதற்காக மாணவர்கள் நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் மீது போலீசார் தாக்குதல் நடத்திக் கலைந்து செல்ல வைத்திருக்கிறார்கள்.

சேலத்தில் பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

பண்ருட்டி அருகே பெண்ணையாற்றில் மணல் எடுக்க அனுமதி அளிக்கப்படாத நிலையில், அன்றாடம் ராட்சத இயந்திரங்கள் மூலமாக நூற்றுக்கணக்கான லாரிகளில் மணல் அள்ளி வருகிறார்கள். இதைத் தடுக்க அதிகாரிகளுக்குப் பல முறை தகவல் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். இந்த நிலையில் நேற்றுக் கிராம மக்கள் 300 பேர் சேர்ந்து, மணல் அள்ளுவதற்காக நிறுத்தப்பட்டிருந்த 400 லாரிகளைச் சிறைப்பிடித்து முற்றுகைப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். ஆற்றில் மணல் அள்ள நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தும், அதிகாரிகளுக்குப் பணம் கொடுத்து மணல் கடத்தல் தொடர்ந்து நடைபெற்று வருகிறதாம். இந்தப் பிரச்சினை பேரவையில் பேசப்பட வேண்டாமா?

மேட்டூருக்கு நீர் வரத்து 23 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. தற்போது நீர் மட்டம் 56 அடியை எட்டியிருக்கிறது. தொடர்ந்து நீர் மட்டம் உயர்ந்து வருகின்ற நிலையில் மேட்டூர் அணை பாசனத்திற்காக எப்போது திறக்கப்படும் என்று விவசாயிகளின் வாழ்வாதாரம் கருதிக் கேட்க வேண்டாமா?

சேலம் அருகே ஆத்தூரில் அரசுப் பேருந்து ஒன்றில் 250 பேர் பயணம் செய்து, நெரிசல் காரணமாக மூன்று மாணவிகள் மயக்கமுற்றதாக ஒரு செய்தி நேற்றைய நாளேட்டில் வந்துள்ளது. போதிய பேருந்துகள் இயக்கப்படாததால் மக்கள் அவதிப்படுவதாகவும் அந்தச் செய்தியிலே கூறப்பட்டுள்ளது.

இவ்வளவு செய்திகளும் நேற்று ஒருநாள் பத்திரிகையிலே வந்தவை. தமிழகப் பொதுமக்களை நேரடியாகப் பாதித்திடும் இத்தகைய அடுக்கடுக்கான பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசி விவாதிக்கத்தானே சட்டசபை! முதல் அமைச்சருக்கு விருத்தம் பாடுவதற்கு மட்டும்தான் பேரவையா? ஜூலை 10ஆம் தேதி தமிழகச் சட்டப்பேரவை கூடியது. 9 நாட்கள்தான் நடைபெற்றுள்ளன. அதற்குள் எத்தனை முறை வெளி நடப்புகள்? எத்தனை முறை வெளியேற்றங்கள்?

மவுலிவாக்கத்தில் 11 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து 61 பேர் பலியாகியிருக்கிறார்கள். அதுபற்றிப் பேரவையில் விவாதிக்கத்தான் ஜூலை 10ஆம் தேதியன்று எதிர்க் கட்சியினர் அனுமதி கோரினர். ஆனால் பேரவைத் தலைவர் அனுமதி மறுத்து விட்டார். தி.மு.க., தே.மு.தி.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், புதிய தமிழகம், மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் இதற்கான ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டபோது, விபத்து குறித்து விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதால், அனுமதிக்க முடியாது என்று மறுத்து விட்டனர். இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சிகள் எழுப்பும்போதே, துறையின் அமைச்சர் எழுந்து எனது பதிலுரையைக் கேட்க தைரியம் இருக்கிறதா என்று ஆவேசமாகக் கேட்டிருக்கிறார். இதுதான் ஜெயலலிதாவின் சட்டமன்றமா?

அப்போது அவை முன்னவர் இந்தப் பிரச்சினையில் கட்சிக்கு ஒருவர் பேசலாம் என்று கூறிய போதிலும், பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை. அதற்குப்பிறகுதான் அனைத்து எதிர்க்கட்சியினரும் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையின் அமைச்சர் தனது பதிலுரையின்போது, இந்தக் கட்டிட விபத்து பற்றி நீண்ட நேரம் விளக்கம் அளித்திருக்கிறார். விசாரணைக் குழு அமைத்திருக்கும்போது, அமைச்சர் மட்டும் பேரவையில் பேசலாமா? அதே அமைச்சர் பேசிய இறுமாப்பான கருத்துக்கெதிராக ஜனநாயக முறைப்படி எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தது பற்றி "ஓடுகாலிகள் ஓடிவிட்டார்கள்" என்றார் அமைச்சர். இதுதான் ஜெயலலிதாவின் சட்டமன்றமா?

11ஆம் நாள் சட்டப்பேரவை நடைபெற்றபோது அமைச்சர் குறிப்பிட்ட "ஓடுகாலிகள்" என்ற வார்த்தையை அவைக்

குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் கேட்டார்கள். ஆனால் அவ்வாறு கூறிய அதே அமைச்சர், தான் அவ்வாறு கூறியதில் தவறில்லை என்றார். பேரவைத் தலைவரும் "ஓடுகாலிகள்" என்பது தவறான சொல் அல்ல என்றார். முதலமைச்சரோ புன்முறுவலோடு அமர்ந்திருந்தாராம். நம்முடைய அமைச்சர் எவ்வளவு நாகரிகமாகப் பேசியிருக்கிறார் என்ற மகிழ்ச்சியில் இருந்திருப்பார். கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கை முன் சென்று அவை மரபுக்கு ஒவ்வாத அந்த வார்த்தையை நீக்க வேண்டுமென்று கேட்டபோது, "உங்களை யெல்லாம் அவையை விட்டே நீக்குகிறேன் பார்" என்று பேரவை கூடிய இரண்டாம் நாளே கழக உறுப்பினர்களை வெளியேற்றினார். இதுதான் ஜெயலலிதாவின் சட்டப் பேரவையா?

15-7-2014 அன்று சமூக நலத்துறை பற்றிய மானியம். கழகத்தின் சார்பில் புஷ்பலீலா ஆல்பன் பேசும்போது, கழக ஆட்சியில் அந்தத் துறை சார்பில் செய்யப்பட்ட சாதனைகளைக் குறிப்பிட்டார். அப்போது துறையின் அமைச்சரும், முதல் அமைச்சரும் குறுக்கிட்டு, சுனாமி ஏற்பட்டபோது, நான் மருத்துவமனையில் படுத்துக்கொண்டேன் என்று பேசியிருக்கிறார்கள். தேவை தானா? அ.தி.மு.க. ஆட்சி நடந்தபோது சுனாமி வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே என் உடல் நலம் பாதிக்கப்பட்டது. நோய் இல்லாமல் மருத்துவமனையில் படுத்துக்கொள்ள முடியுமா? அதுவும் ஜெயலலிதா ஆட்சியில், மருத்துவமனையிலே அனுமதிப்பார்களா? அவ்வாறு என் மீது குற்றச்சாட்டு கூறும்போது, எங்கள் கட்சியின் உறுப்பினர்கள் அதற்குப் பதில் அளிக்க அனுமதிக்கப்பட வேண்டாமா? முதலமைச்சர் பேசிய பிறகு யாரும் பேச முடியாது என்று பேரவைத் தலைவர் கூறியதுதான் தீர்ப்பா? அதைக் கண்டித்துத்தான் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.

17ஆம் தேதியன்று வறட்சி - கடும் குடிநீர்த் தட்டுப்பாடு - விலைவாசி உயர்வு போன்றவை குறித்து, கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்பு, கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அனுமதிக்காததால் வெளிநடப்பு செய்யப்பட்டது. இதே பிரச்சினைக்காக தே.மு.தி.க., மார்க்சிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், புதிய தமிழகம் ஆகிய கட்சிகளும் அன்று வெளிநடப்பு செய்தன. அதே நாளில் ஆளுங்கட்சி உறுப்பினர்

ஒருவர் என்னைப் பற்றி அநாகரிகமாக அருவருக்கத்தக்க வகையில் பேசியதைத் தொடர்ந்து கழக உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள்.

18ஆம் தேதியன்று விதி 110இன் கீழ் அறிக்கை படிக்கும்போது, தேவையில்லாமல் என் மீது புகார் கூறி, அதற்குப் பதிலளிக்க தம்பி துரைமுருகன் பேச வாய்ப்பு கேட்டு அளிக்காததால் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். அதே நாளில் இதே காரணத்திற்காக மீண்டும் இரண்டு முறை வெளி நடப்பு செய்திருக்கிறார்கள்.

21ஆம் தேதி அ.தி.மு.க. ஆட்சியில் மூன்றாண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து விவாதிக்க அனுமதி தரப்படாததைக் கண்டித்து கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள். அதே நாளில் மின் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மின் திட்டங்களையெல்லாம் அ.தி.மு.க. அரசு கொண்டு வந்ததாகக் கூறியதைத் தொடர்ந்து கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்.

22ஆம் தேதியன்று ஒரு அமைச்சர் பழைய பிரச்சினையையே அதாவது சுனாமி ஏற்பட்டபோது நான் மருத்துவமனையிலே இருந்ததையே கொச்சைப்படுத்தி பேசியதைத் தொடர்ந்து கழக உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, கழக உறுப்பினர்கள் மூன்றாவது முறையாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். ஜூலை 10ஆம் தேதி முதல் நடைபெற்ற இந்தச் சட்டமன்றத் தொடரிலே மட்டும் 9 நாட்கள் நடைபெற்ற சட்டமன்றத்தில் எட்டு முறை வெளிநடப்பு செய்திருக்கிறார்கள் - மூன்று முறை வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதுவும் இந்தக் கூட்டத் தொடரில் நான்கு முறை வெளியேற்றப்பட்ட காரணத்தினால் கழக உறுப்பினர்கள் இந்தத் தொடர் முழுவதற்கும் சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்கக் கூடாதாம். எப்படிப்பட்ட ஜனநாயகம் தமிழகச் சட்டமன்றத்திலே கொடிகட்டிப் பறக்கிறது?

இதுபற்றியெல்லாம்தான் நேற்றையதினம் நடைபெற்ற கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் விரிவாகப் பேசப்பட்டு -

அ.தி.மு.க. அரசின் இந்தப் போக்கினைக் கண்டிக்கின்ற வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக - "தமிழகச் சட்ட மன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு" என்ற தலைப்பில் கண்டனக் கூட்டங்களை மாவட்டத் தலைநகரங்களிலும், மற்றும் முக்கிய நகரங்களிலும் நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஜூலை 31ஆம் தேதி சென்னை மாநகரில் நடைபெறும் கூட்டத்தில் நானும், கழகத்தைச் சேர்ந்த அனைத்துச் சட்டப்பேரவை உறுப்பினர்களும் கலந்துகொள்ளும் கண்டனக் கூட்டம் நடைபெறவுள்ளது. எஞ்சிய நகரங்களில் ஆகஸ்ட் 1, 2 ஆகிய நாட்களில் கண்டனக் கூட்டங்கள் நடைபெறும். அதிலே சட்டமன்றக் கழக உறுப்பினர்களும், கழகப் பேச்சாளர்களும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். அந்தக் கூட்டங்களில் தமிழகச் சட்டமன்றத்தில் ஜனநாயகம் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறது என்பது பற்றி விரிவாகப் பேசப்படும். சட்டப்பேரவையின் மாண்புகளைக் காத்திடவும், சர்வாதிகார எண்ணங்களைத் தடுத்திடவும், அந்தக் கண்டனக் கூட்டங்களை எப்போதும் போலச் சிறப்பாக நடத்தித்தர வேண்டுமென்று கழக உடன்பிறப்புகளையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

24-7-2014

3910. உணரும் காலம் வெகு விரைவில் வந்தே தீரும்!

உடன்பிறப்பே,

கடந்த 22-7-2014 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் ஓர் அறிவிப்பினைச் செய்தார். அந்த அறிவிப்பில் தி.மு. கழக உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்துகொண்டு நான்காவது முறையும் வெளியேற்றப்பட்டதால், தி.மு.க. உறுப்பினர்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள இயலாது என்று ஆணை பிறப்பித்தார்.

தி.மு.கழக உறுப்பினர்கள் உண்மையிலேயே அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தார்களா? சட்டப்பேரவை என்பது ஜனநாயக முறைப்படி இயங்க வேண்டிய ஓர் இடம். அங்கே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் என்றால், அமைச்சர்கள் என்றால், முதலமைச்சர் என்றால் எதை வேண்டுமென்றாலும் ஜனநாயக விரோதமாக விமர்சிக்கலாம். எதிர்க்கட்சிகளை எப்படி வேண்டுமானாலும் இழித்தும் பழித்தும் பேசலாம். ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைத்தையும் கேட்டுக்கொண்டு அடக்கமாக இருக்க வேண்டும். அவைக்கு வராவிட்டாலும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களை மனம் போனபடி தாறுமாறாகப் பேச வேண்டும். அதையெல்லாம் செவியாரக் கேட்டுக்கொண்டு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அச்சடித்த பதுமைகளைப் போல், பொறுமையாக இருக்க வேண்டுமென்றால் அதற்குப் பெயர் சட்டமன்றமா?

தி.மு. கழக உறுப்பினர்கள் ஆளுங்கட்சியின் சார்பில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைப் பற்றியோ, அமைச்சர்களும், உறுப்பினர்களும் பேசும்போது முதல் அமைச்சரை வானளாவப் புகழ்ந்து பாராட்டுப் பத்திரம் படிக்கிறார்களே, மானியங்களிலே அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது, இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது

என்றெல்லாம் இட்டுக்கட்டித் தெரிவிக்கிறார்களே, அப்போது அவையிலே எழுந்து தாங்களாகவே குறுக்கிடுகிறார்களா? தேவையில்லாமல் வீண் வம்புக்கு இழுக்கின்ற முயற்சியிலே இறங்கி, தி.மு.கழகத்தைப் பற்றியோ, அதன் தலைவரைப் பற்றியோ அநாகரிகமாக, அருவருக்கத்தக்க வகையிலே பேசினால், அப்போதுகூட தி.மு. கழக உறுப்பினர்கள் மரக்கட்டைகளைப் போல அமர்ந்திருக்க வேண்டுமென்றால் அது எப்படி இயலும்? அதற்குப் பெயர்தான் இந்த ஆட்சியிலே சட்டமன்ற ஜனநாயகமா?

தி.மு. கழக ஆட்சி நடைபெற்றபோது, கழகத்தைச் சேர்ந்த யாராவது, உறுப்பினர்களோ, அமைச்சர்களோ இவ்வாறு தேவையில்லாமல் அ.தி.மு.க.வைப் பற்றியோ, அதன் தலைவரைப் பற்றியோ விமர்சிப்பது உண்டா? பேரவைத் தலைவர்தான் அதற்கு அனுமதி கொடுப்பாரா?

தமிழகச் சட்டப்பேரவை இந்த முறை ஜூலை 10ஆம் தேதி தொடங்கியது. அன்றிலிருந்து ஜூலை 22ஆம் தேதிவரை சட்டப்பேரவை நடைபெற்ற 9 நாட்களில் கழக உறுப்பினர்கள் 9 முறை வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். என்ன காரணம் தெரியுமா? தொகுதி மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு வாய்ப்பு கேட்டு, தரப்படாத காரணத்தால்தான் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். கழக உறுப்பினர்கள் பேசுவதற்குச் சட்டப்பேரவை விதிகளின்படி உரிய வாய்ப்பு தரப்படாத அதே நேரத்தில், ஆளுங்கட்சியின் அமைச்சர்கள் என்றால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலையில் பேசவில்லை, மாறாகச் சகட்டுமேனிக்கு ஏசுகிறார்கள். அதையெல்லாம் கேட்டுக் கொண்டு எதிர்க்கட்சிகள் வாயைப் பொத்திக் கொண்டு இருக்க வேண்டுமென்றால், அது ஜனநாயகத்தில் சாத்தியமானதா? வெளிநடப்பு செய்த எதிர்க்கட்சிக்காரர்களை "ஓடுகாலிகள்" என்று ஒரு அமைச்சர் கேவலமாகக் கூறலாமா? பேரவைத் தலைவர் இத்தகைய பண்பாட்டுச் சிதைவை அனுமதிக்கலாமா? முதலமைச்சரோ, அவை முன்னவரோ அவையின் கண்ணியத்தைக் காத்திடும் நோக்கில், அந்த எண்ணம் இருந்தால், அதைத் தடுக்க வேண்டாமா?

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தமிழகத்திலே சுனாமி பேராபத்து ஏற்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பே எனது உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலே இருந்தேன்.

சோனியா காந்தி அவர்களும், பிரணாப் முகர்ஜி அவர்களும் மருத்துவமனைக்கே வந்து என்னைப் பார்த்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இத்தனை ஆண்டுகள் கழித்து, சுனாமி ஆபத்து ஏற்பட்டபோது நான் வேண்டுமென்றே மருத்துவமனைக்குச் சென்று படுத்துக் கொண்டேன், பாதிக்கப்பட்டவர்களைப் பார்க்கவில்லை என்று பேரவையில் முதலமைச்சரும், வேறொரு அமைச்சரும் பேசுவதுதான் அரசியல் நாகரிகமா?

இதற்குப் பதிலளிக்க, விளக்கமளிக்க கழக உறுப்பினர்கள் முயன்றால் அதற்கு அனுமதியில்லை என்றுகூறி அவை நடந்த இந்த ஒன்பது நாட்களில் மூன்று முறை வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பேரவை நிகழ்ச்சிகள் முடிவுற்ற பிறகும், வெளியேற்றப்பட்ட பிறகும் கழக உறுப்பினர்கள் என்னைச் சந்தித்து நடைபெற்ற நிகழ்ச்சிகளைச் சொல்வது வழக்கம். அப்போது அவர்கள் "பேரவையிலேயே எங்களால் அமர முடியவில்லை. வேண்டுமென்றே ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு சில அமைச்சர்கள் தங்கள் மனம் போனபடி, முதலமைச்சர் தங்களை அமைச்சர் பொறுப்பிலே இருந்து விலக்கி விடாமல் இருக்கவேண்டு மென்பதற்காகவே தேவையில்லாமல் உங்களைப் பற்றிக் கேவலமாக விமர்சனம் செய்கிறார்கள். எங்களைத் தரம் தாழ்த்திப் பேசினால்கூட நாங்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கத் தயார். ஆனால் உங்களைப் பற்றி விஷமத்தனமாக விமர்சனம் செய்யும்போது அதைக் கேட்டுக்கொண்டு நாங்கள் எப்படி அமர்ந்திருக்க முடியும்?" என்று மிகுந்த கவலையோடு கேட்பார்கள். அவர்களுக்கெல்லாம் சமாதானம் கூறுவதைப் போல, பேரவைத் தலைவர் "நீங்கள் அவைக்கே வர வேண்டாம், நாங்களே நடத்திக்கொள்கிறோம்" என்று மறைமுகமாக உணரும்படி அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புக்குப் பிறகுதான், தி.மு. கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் என்னுடைய தலைமையில் 22-7-2014 அன்று மாலையிலே அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்று, அதில் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில், 31-7-2014 அன்று சென்னை மாநகரில் நானும், கழகப் பொருளாளர் தம்பி தளபதியும், துணைப் பொதுச் செயலாளர் தம்பி துரைமுருகனும் தென் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி ஜெ. அன்பழகன் தலைமையில் உரையாற்றவிருக்கிறோம். ஆகஸ்ட் 1 மற்றும் 2 ஆகிய நாட்களில்

தமிழகத்தின் மற்ற நகரங்களில் நம்முடைய பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களும், ஏனைய சட்டப்பேரவை உறுப்பினர்களும், கழக முன்னணிப் பேச்சாளர்களும் கலந்து கொண்டு "தமிழகச் சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு" என்ற தலைப்பிலே பொது மக்களுக்கு விளக்கிடும் வகையில் கண்டனக் கூட்டங்களில் உரையாற்றவிருக்கிறார்கள்.

"சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு" என்ற தலைப்பில் இந்த ஆட்சியில் இந்த ஆண்டுதான் கண்டனக் கூட்டங்களை நடத்துகிறோமா என்றால் இல்லை. அ.தி.மு.க. 2011இல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே - 16-8-2011 அன்று கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று, அந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் மேலும் கலந்து கொள்வது சரியாக இருக்காதென்று முடிவெடுக்கப் பட்டதோடு, 25-8-2011 அன்று சென்னையில் "சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு" என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நானும், கழகச் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரையாற்றினோம்.

அதுபோலவே 2012ஆம் ஆண்டிலும் சட்டப் பேரவையில் அ.தி.மு.க. அமைச்சர்களும், உறுப்பினர்களும் தி.மு. கழகத்தைப் பண்பாடற்ற முறையில் தாக்குவதையே தொடர்ந்து கடைப் பிடித்த காரணத்தால், அந்த ஆண்டும் 25-4-2012 அன்று "சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு" என்ற தலைப்பிலே சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் கூட்டங்களை நடத்தி மக்கள் முன்னால் நம்முடைய கருத்துகளைத் தெரிவித்தோம்.

கடந்த 2013ஆம் ஆண்டில் பேரவைத் தலைவர் அவர்கள், இந்த ஆண்டைப்போலவே கழக உறுப்பினர்களைத் தொடர் கூட்டம் முழுவதிலும் கலந்துகொள்ள அனுமதி மறுத்த காரணத்தால், 24-4-2013 அன்று திருவான்மியூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் "சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு" என்ற தலைப்பில் நானும், கழகப் பொதுச் செயலாளரும், பொருளாளரும், துணைப் பொதுச் செயலாளரும் கலந்து கொண்டோம்.

"சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு" என்ற தலைப்பிலே நாங்கள் என்ன பேசுகிறோம் என்பதைக் கேட்க வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, இந்த ஆண்டும் கழக உறுப்பினர்கள் எல்லாம் பேரவைத் தலைவரால் வெளியேற்றப்பட்டுவிட்ட காரணத்தால், இந்த ஆண்டும் நான்காவது முறையாக அதே தலைப்பில் கண்டனக் கூட்டங்களைக் கழகம் நடத்துகின்றது. ஜெயலலிதாவின் சாதனைப் பட்டியல்களில் ஒன்றாகக்கூட இதனைச் சேர்த்துக் கொள்ளலாம். ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, சட்டமன்றத்தில் ஜனநாயகம் படாதபாடு படுகிறது என்பதையும், ஜனநாயகம் கேலிப் பொருளாக ஆக்கப்பட்டு வருகிறது என்பதையும் எவரும் மறுப்பதற்கில்லை.

அ.தி.மு.க. ஆட்சியில் தி.மு. கழகத்தைக் கண்டு ஆளுங்கட்சி எந்த அளவுக்கு அஞ்சுகிறது என்பதற்கு ஒரேயொரு உதாரணம் கூற வேண்டுமென்றால், எந்தவொரு சட்டப்பேரவை மன்றமாக இருந்தாலும், ஒரு கட்சி என்றால், அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் எல்லாம் ஒரே பகுதியில்தான் சட்டப்பேரவையில் சேர்ந்தாற் போல அமரவைக்கப்படுவார்கள். இதுதான் சட்டமன்றத்தில் எத்தனையோ ஆண்டு காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் மரபு. ஆனால் இந்தச் சட்டப் பேரவையிலேதான் தி.மு. கழக உறுப்பினர்கள் எல்லாம் ஒரே பகுதியில் அமரவைக்கப்படாமல், ஆங்காங்குத் தனித்தனியே அமர வைக்கப்பட்டுள்ளார்கள். 2011ஆம் ஆண்டில் இந்த ஆட்சி அமைந்தவுடனே இதுபற்றிப் பேரவைத் தலைவருக்குக் கழகத்தின் சார்பில் கடிதம் கொடுக்கப்பட்டும், அதனை ஏற்றுக் கொள்ளவே இல்லை. கழக உறுப்பினர்கள் எல்லாம் ஒரே இடத்தில் அமர்ந்தால், என்ன நேருமோ என்ற அச்சம்தான் இதற்குக் காரணம்.

அதேவழியில்தான் தி.மு. கழக உறுப்பினர்களை எவ்வளவு சீக்கிரம் அவையைவிட்டு வெளியே அனுப்ப முடியும் என்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வெளியேற்றி விடுகிறார்கள். கழக உறுப்பினர்களைச் செயல்படவிடாமல் அவமானப்படுத்தி விட்டதாக அவர்கள் கருதுகிறார்கள். வெளியேற்றுவதன் மூலம், கழகத்திற்கு வாக்களித்த இலட்சோப இலட்சம் மக்களைத்தான் அவமதிக்கிறார்கள். பரவாயில்லை, அது அவர்கள் பின்பற்றும் அக்கிரம வழி. நம்முடைய வழி அமைதியான ஜனநாயக வழி. அண்ணா கற்றுக்கொடுத்த பண்பு வழியும், அன்பு வழியும் அதுதான்.

அந்த வழியில் தமிழகச் சட்டமன்றத்திலே நம்முடைய கருத்துகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்றபோதிலும், மக்கள் மன்றத்திலே அங்கே ஜனநாயகத்திற்குப் புறம்பாக என்ன நடைபெறுகிறது என்பதையும் நாட்டு மக்களின் நலன் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதையும் விளக்குவோம். எந்தெந்த வகையில் எல்லாம் தி.மு. கழக உறுப்பினர்கள் சட்டமன்ற விதிகளுக்குப் புறம்பாக அங்கே நடத்தப்படுகிறார்கள் என்பதையும், அமைச்சர்கள் எவ்வாறு நாகரிகம் பற்றிய அக்கறை சிறிதும் இல்லாமல் சட்டமன்ற மரபுகளையெல்லாம் குழி தோண்டிப் புதைத்துவிட்டுப் பேசுகிறார்கள் என்பதையும் பொதுமக்கள் முன்னால் தெளிவாக்கிடுவதற்காகத்தான், இன்று சென்னை மாநகரில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும், ஆகஸ்ட் 1, 2 ஆகிய நாட்களில் மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் முக்கிய நகரங்களிலும் நடைபெறும் பொதுக் கூட்டங்களிலும் தமிழகச் சட்டமன்றத்தில் ஜனநாயகம் என்ன பாடு படுகிறது என்பதை விளக்கவுரையாற்றவிருக்கிறோம். "ஜனநாயகம்" என்ற ஒன்று அங்கே இருந்தால்தானே, அது என்ன பாடுபடுகிறது என்று பேசலாம். "ஜனநாயகமே" தமிழகச் சட்டமன்றத்தில் கேள்விக்குறியாகி விட்டது. கடந்த மூன்றாண்டு காலமாக இந்த "கோமா" நிலைதான் நீடித்து வருகிறது. அவர்களுக்கு உள்ள தைரியம் எல்லாம், "பணத்தைக் கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கிறோம். அந்தப் பணத்தை வைத்து நாடாளுமன்றத் தேர்தலிலே பெரு வெற்றிபெற்று விட்டோம். மக்கள் நம் பக்கம்தான் என்று பத்திரிகையாளர்களையும் நம்ப வைத்து விட்டோம். நாம் வைத்ததுதான் சட்டம். நாம் நடத்துவதுதான் சட்டமன்றம். நாம் எதைச் செய்தாலும் அதனை வரவேற்று முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் வெளியிடத் தமிழ் நாட்டில் சில பத்திரிகைகள் சித்தமாய் இருக்கின்றன" என்று எண்ணுகிறார்கள். அதற்காக நாம் நம்முடைய ஜனநாயகக் கடமையிலிருந்து ஒதுங்கி விட முடியாதல்லவா? நம் கடன் பணி செய்து கிடப்பதே; மக்கள் உண்மையை உணராமலா போய்விடப் போகிறார்கள்? உணருகின்ற காலம் வெகு விரைவில் வந்தே தீரும்.

அன்புள்ள,

மு.க.

31-7-2014

3911. இதற்குப் பெயரா “பெண்களுக்குப் பாதுகாப்பு”?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சி வந்தாலும் வந்தது; சட்டம், ஒழுங்கு சந்திசிரிக்கிறது. நாளொரு கொலை, பொழுதொரு கொள்ளை, வாரம் ஒரு கற்பழிப்பு என்று செய்திகள் நம்மைச் செந்தேளாய்க் கொட்டுகின்றன. அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய அ.தி.மு.க. அரசினரோ, தங்களுக்கு அதிலே எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்பதைப் போலவும், தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்வதைப் போலவும் ஒரு நாடகம் நடத்தி, தங்களையும் ஏமாற்றித் தமிழக மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம். ஒவ்வொரு ஆண்டும் இரண்டு நாட்கள் காவல்துறை மீதான விவாதம் நடைபெறும். அது இந்த ஆண்டு ஒரு நாளாகச் சுருக்கப்பட்டிருப்பதில் இருந்தே, இந்த ஆட்சியில் ஜனநாயகம் எந்த அளவுக்கு அனுமதிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

காவல்துறை மானியத்தின் மீதான விவாதத்திற்குப் பதில் கூறிய முதல் அமைச்சர் ஜெயலலிதா, “இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக இருக்கின்ற மாநிலம் தமிழகம்தான்” என்று கூறியதாக அனைத்து நாளேடுகளும் வெளியிட்டிருக்கின்றன. ஒருவேளை; ஆண்கள் பாதுகாப்பாகத் தமிழகத்திலே இல்லை என்பதைக் கூற முடியாமல், பெண்கள் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. பெண்கள் எந்த அளவுக்குத் தமிழகத்திலே பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதற்குச் சில உதாரணங்களை முன் வைக்கத்தான் இந்த மடல்!

அ.தி.மு.க. ஆட்சியில், பொள்ளாச்சியில் பள்ளி விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த இரண்டு சிறுமிகள் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். நன்னிலம் அருகே

விமலா - கோயம்பேட்டில் இளம் பெண் மலர் என நீளும் பட்டியலில் - கரூர் மாவட்டம் மாயனூர் அருகே வெற்றிலைக் கொடிக்காலுக்குள் ப்ளஸ் 2 படித்து முடித்த தலித் வகுப்பைச் சேர்ந்த மாணவி வினிதா கற்பழித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

மேலும் தமிழகத்திலே கற்பழிக்கப்பட்டவர்கள் மற்றும் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டவர்களின் ஒரு சிறு பட்டியல் :-

- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரை அடுத்து ஆண்டியப்பன் கிராமத்தில் ஒன்பது வயது சிறுமி காயத்ரி, பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை. 29-12-2012
- சிவகிரியில் நந்தினி என்ற பெண் கற்பழித்துக் கொலை. 22-1-2013
- சைதாப்பேட்டையில் விஜயா என்ற பெண்ணின் சடலம். 11-1-2013 தினத்தந்தி
- தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டத்தில் 13 வயது சிறுமி, பள்ளி மாணவி புனிதா கற்பழிக்கப்பட்டுக் கொலை. 22-12-2012 தினமணி
- நாகை மாவட்டத்தில் 11 வயது தலித் இனத்தைச் சேர்ந்த சிறுமியை இரண்டு பேர் சேர்ந்து கற்பழித்தனர். 23-12-2012 தினமணி
- விருதாசலத்தில் மணிமுத்தாறு நதிக்கரையில் சுகந்தி என்கிற இளம் பெண் கற்பழிக்கப்பட்டார். 27-12-2012 தினமணி
- சிதம்பரம் அருகில் மஞ்சக்குழி கிராமம், சந்தியா என்கிற இளம்பெண், கற்பழிக்கப்பட்டு 3வது மாடியிலிருந்து வீதியிலே எறியப்பட்டாள். 27-12-2012 தீக்கதிர்
- தர்மபுரியில் அரூர் தாலுக்காவில் தாதராவலசை கிராமத்தில் மேனகா என்கிற இளம்பெண் திருமணமானவர் கற்பழித்துப் படுகொலை. 30-12-2012 தினமணி
- தூத்துக்குடி மாநகரில், மாதா நகர் 2வது தெருவில் மாரியம்மாள் என்கிற இளம்பெண் கணவனைப் பிரிந்து

3 குழந்தைகளுடன் தந்தை வீட்டில் வசித்து வந்தார். விடியற் காலையில் வீடு புகுந்து கற்பழிக்கப்பட்டாள். 29-12-2012 தினமணி

❖ விழுப்புரம் வானூர் ருக்மணிபுரம் பள்ளி மாணவி கல்கி என்பவள் கற்பழிக்கப்பட்டுச் சவுக்குத் தோப்பில் பிணமாகத் தொங்கவிடப்பட்டாள். 5-1-2013 தினத்தந்தி

❖ உடுமலையில் 12 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். அவமானம் தாங்க முடியாமல் தீக்குளித்தாள்.

❖ நாமக்கல்லில் 18 வயது இளம்பெண், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நான்கு பேர் கொண்ட கும்பலால் கற்பழிக்கப்பட்டார். 6-1-2013 தினத்தந்தி

❖ வேலூர் மாவட்டம், ஆர்க்காடு அருகில் திமிரி என்கிற ஊரில் அபிநயா என்கிற 17 வயது பெண், அச்சுறுத்தல், மிரட்டல் காரணமாக, கற்பைக் காப்பாற்றிக்கொள்ள தீக்குளித்துத் தற்கொலை. 6-1-2013 தினத்தந்தி

❖ அம்பத்தூரில் முகப்பேர் பகுதியில் பிளஸ் 2 படித்து வந்த மாணவியை வீடு புகுந்து கற்பழித்திட முயற்சி. 6-1-2013 தினத்தந்தி

❖ சென்னை, பொழிச்சலூரில் பிரேமலதா கற்பழித்துக் கொலை செய்யப்பட்டு காட்டில் பிணமாக வீசப்பட்டுக் கிடந்தாள். 6-1-2013 தினத்தந்தி

❖ திருச்சி மாவட்டம், தொட்டியம் அருகில் திருமணமான மீனா என்கிற இளம்பெண் தன் உறவினர் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது 4 பேர் கொண்ட கும்பல் காரில் கடத்திச் சென்று கற்பழிப்பு.

❖ சென்னை கோயம்பேட்டில் வீட்டு வேலை செய்து வந்த பெண் கண்ணம்மாவை வீட்டு உரிமையாளர் கற்பழித்தார். 7-1-2013 தினத்தந்தி

- ஒரத்தநாடு, புதூரில் 6ஆம் வகுப்பு படித்து வந்த 11 வயது சிறுமி, ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது கற்பழிக்கப்பட்டார். 4-1-2013 தினத்தந்தி
- ராணிப்பேட்டை அருகில் சுடுகாட்டில் சிறுமி கொலை செய்யப்பட்டு, எரிந்த நிலையில் பிணமாகக் கிடந்தார். 13-1-2013 தினத்தந்தி
- சென்னை ஆதம்பாக்கம் செல்வி ஜெராக்ஸ் கடையில் வேலை பார்க்கும் பெண் கற்பழிப்பு 4-1-2013 தினத்தந்தி
- 6-2-2013 அன்று மைலாப்பூரில் சிறுமி பாலியல் பலாத்காரம் - தப்பியோடிய டிரைவரின் தாய் தற்கொலை.
- 17-2-2013 அன்று தர்மபுரியில் 16 வயது சிறுமியைக் கடத்தி பாலியல் பலாத்காரம் - இப்படிப் பட்டியல் முடிவின்றி நீண்டு கொண்டே போகிறது.

இதோ "இந்து" 25-6-2014 ஆங்கில நாளேடு இந்தப் பாலியல் கொடுமை சம்பந்தமாக ஒரு நீண்ட கட்டுரையே வெளியிட்டுள்ளது. அதற்குத் தலைப்பே, "Crime against Women, especially against Dalits has been quite frequent in the Central Districts in the past few years; while the Police are tardy in registering complaints, the indifference of authorities to the plight of the marginalised sections continues - HURT and MUTE" அதாவது "பெண்களுக்கு எதிரான குற்றம் - குறிப்பாகத் தலித்களுக்கு எதிரான குற்றங்கள் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் மத்திய மாவட்டங்களில் அடிக்கடி நிகழ்கின்றன - ஆனால் காவல் துறையினர் அந்தக் குற்றங்களைப் பதிவு செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர் - விளிம்பு நிலை மக்களின் துயரங்களைப் பற்றி அதிகார வர்க்கத்தினர் சிறிதும் கவலை கொள்ளவில்லை - காயம்பட்டவர்கள் ஊமையாக" என்பதாகும். பெப்ரவரி 2012இல் ஆமூரில் 19 வயதான மாணவி ஒருவர் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். மார்ச் 2012இல் பன்னிரண்டே வயதான ஒரு தலித் பெண் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டாள். டிசம்பர் 2012இல் நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறில் எட்டு வயதான தலித் பெண் கற்பழிக்கப்பட்டிருக்கிறார். ஜனவரி 2014இல் புதுக்கோட்டை

மாவட்டம், நகுடி காவல் நிலைய எல்லையில் 17 வயதான பெண் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். ஏப்ரல் 2014இல் நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் 8 வயதான மாணவி பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்.

இவ்வாறு "இந்து" நாளிதழ் பட்டியலிட்டுள்ளது.

பாலியல் குற்றங்கள் மட்டுமா? அ.தி.மு.க. ஆட்சியில் எந்த அளவுக்குக் கொள்ளைகள் நடைபெறுகின்றன என்பதைப் பற்றிக் கடந்த 20-6-2014 தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு விரிவாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

"கவனத்தைத் திசை திருப்பி, கொள்ளையடித்து வரும் ஒரு கும்பலைத் தமிழ்நாடு போலீசாரால் இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை. தந்திரமாகக் கொள்ளை அடிக்கும் இந்தக் குழுவினர் 2013 முதல் இதுவரை 180க்கும் அதிகமான சம்பவங்களில் பவுன் நகைகளையும், 20 லட்ச ரூபாய்க்கும் அதிகமான பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்த வகையில் 2013இல் நடத்தப்பட்ட வழக்குகளில் 85 வழக்குகள்வரை இன்னமும் கண்டுபிடிக்கப்பட முடியாமல் உள்ளன. சென்னையில் அப்பாவிகள் கவனத்தைத் திசை திருப்பி நடத்தப்பட்ட 25 கொள்ளைகளில் ஒன்று கூடத் தீர்வு காணப்படவில்லை" என்றெல்லாம் "டைம்ஸ் ஆப் இந்தியா" வெளியிட்டுள்ளது.

ஆனால், சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டின் தொடக்க உரையில் முதலமைச்சர் ஜெயலலிதா "சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரை இங்குள்ளோர் அனைவரும் பெருமையும், திருப்தியும் கொள்ளும் நிலையில்தான் உள்ளது" என்று பேசியிருக்கிறார்.

கடந்த ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதலமைச்சர் பேசியபோதும், "எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழ்நாட்டிலே சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

சட்டம், ஒழுங்கு இந்த ஆட்சியில் எவ்வாறு இருக்கிறது என்பதற்கு ஒரு சில சம்பவங்களை நினைவுபடுத்தினாலே புரிந்து கொள்ள முடியுமென்று நம்புகிறேன்.

வாடிப்பட்டி அருகே உருட்டுக்கட்டையால் தாக்க வந்த அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் தலைமையிலான கும்பலுக்குப் பயந்து சோழவந்தான் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கருப்பையா, ஓட்டல் அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டதால் உயிர் தப்பினார். 2013 நவம்பர் மாதம் நடைபெற்ற நிகழ்ச்சி. பேரவையில் சட்டம் ஒழுங்குச் சீர்குலைவுக்கு தே.மு.தி.க.வினர் காரணம் என்று கூறிய ஜெயலலிதா அ.தி.மு.க.வினரும் சட்டம் ஒழுங்குச் சீர்குலைவுக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை ஏனோ மறைத்துவிட்டார் அல்லது மறந்துவிட்டார்!

2013, நவம்பர் முதல் வாரத்தில், திருச்சி, தஞ்சை, நாகையில் மட்டும் ஒரே நாளில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டதாகச் செய்தி வந்தது.

முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றைய அவருடைய பதிலுரையில், "தமிழ்நாட்டில் அதிகப்படியான போராட்டங்கள் நடைபெறுகின்றன என்றால், மக்கள் அத்தகைய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று பொருள் அல்ல; இங்கே தாராள மனதுடன், உண்மையான ஜனநாயகக் கோட்பாட்டின்படி யார் போராட்டம் நடத்த விரும்பினாலும், அவர்களுக்கு அனுமதியைத் தருகிறோம்" என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார். எந்த அளவுக்கு இந்த ஆட்சியில் தாராள மனதுடன் அனுமதி தருகிறார்கள் என்பதற்கும் சில உதாரணங்கள் இதோ :-

தே.மு.தி.க. சார்பில் கடலூரில் 2013 நவம்பர் மாதத்தில் பொதுக்குழுத் தீர்மானங்களை விளக்குவதற்காகப் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கோரியபோது போலீசார் சட்டம், ஒழுங்கைக் காரணமாகக் காட்டி அனுமதி மறுத்து விட்டனர். அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த நேரத்தில், நீதிபதி சசிதரன், "சட்டம், ஒழுங்கைக் காரணம் காட்டிப் பொதுக் கூட்டத்திற்கு, போலீசார் அனுமதி மறுத்தது தவறானது. பொதுக் கூட்டத்திற்குப் பாதுகாப்புத் தருவது போலீசாரின் கடமை; எனவே பொதுக் கூட்டம் நடத்த அனுமதி தரவேண்டும்" என்று உத்தரவிட்டார்.

மதுரை மாவட்டத்திற்குள் டாக்டர் ராமதாஸ் அவர்களை நுழையக்கூடாது என்று அந்த மாவட்ட ஆட்சியர் ஓர் உத்தரவு பிறப்பித்தார்; கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த

மாவட்டத்திற்குள் அவரை நுழையக் கூடாது என்று ஆணை பிறப்பித்தார்; விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் தொல்.திருமாவளவனை விழுப்புரம் மாவட்டத்திற்குள் நுழையக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; அதுபோலவே தர்மபுரி மாவட்டத்திற்கே 144 தடை என்றெல்லாம் இந்த ஆட்சியில் உத்தரவிடப்பட்டு, ஜனநாயக நடவடிக்கைகள் முழுவதுமாய் நசுக்கப்பட்டன.

16.2.2013 அன்று சேலம் நாடாளுமன்ற கழகச் செயல்வீரர்கள் கூட்டம் நடத்துவதற்காகவும், இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிடவும், காவல்துறை அனுமதி வேண்டி 30.1.2013 அன்று மனுக் கொடுக்கப்பட்டது. அனுமதி கொடுக்கவில்லை. தி.மு.க. சார்பில் சேலம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி புவனேஸ்வரி, "தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தை யாரும் தடுக்கக்கூடாது" என உத்தரவிட்டார். 15-12-2012 அன்று கரூரில் கழகப் பொருளாளர் ஸ்டாலின் பங்கேற்கவிருந்த கூட்டத்திற்கும் அ.தி.மு.க. அரசு தடைவிதித்து, அதனை எதிர்த்து 11-12-2012 அன்று மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. மனுவினை விசாரித்த நீதியரசர் சு. சுப்பையா அவர்கள், அதே இடத்தில் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பித்தார். 28-12-2012 அன்று தூத்துக்குடியில் நாடாளுமன்றத் தொகுதிச் செயல்வீரர்கள் கூட்டத்தில் ஸ்டாலின் கலந்து கொள்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கேயும் ஆளும் கட்சியினரின் தூண்டுதலால், கூட்டம் நடத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் நீதிமன்றத்தில் முறையிட்டு, நீதியரசர் ரவிச்சந்திர பாபு, குறிப்பிட்ட இடத்தில் செயல் வீரர்கள் கூட்டம் நடத்திட அனுமதி அளித்தார். ஜனநாயகத்தின் அடிப்படையான பேச்சுரிமையும், கூட்டம் கூடும் உரிமையும், சர்வாதிகார மனப்பான்மையோடு மறுக்கப்பட்டிருக்கின்றன.

கழக நிகழ்ச்சிகளுக்கு மாத்திரமல்ல; சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பிறந்த நாள் நிகழ்ச்சிக்கு அனுமதி தரப்பட்டதா? நடிகர் விஜய் பிறந்த நாள் கூட்டத்திற்கு அனுமதி தரப்பட்டதா? ஏன்? "டெசோ" மாநாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டதா? கிடையாது. நீதிமன்றம் சென்றுதான் அனுமதி பெற முடிந்தது.

இவ்வளவுதானா? "தினத்தந்தி" நாளேட்டிலேயே - "சென்னையில் ஒரே மாதத்தில 16 கொலைகள்" என்ற தலைப்பில் "சென்னையில் ஒரே மாதத்தில் 16 கொலைகள் நடந்துள்ளன. இதில் 5 கொலையில் குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நுங்கம்பாக்கம் வங்கிப் பெண் அதிகாரி கொலையில் துப்புதுலக்க முடியாமல் போலீசார் திணறி வருகின்றனர்" என்றெல்லாம் செய்தி வந்தது.

ஜெயலலிதாவின் பொறுப்பிலுள்ள போலீசாருக்கு நீதிமன்றம் அளித்த மற்றொரு சான்றிதழ் இதோ :- The Madras High Court Bench here came down heavily on police officers "who think they are a law unto themselves just because they are vested with certain powers under the Code of Criminal Procedure and that the common people are at their mercy" (The Hindu 14-2-2012)

இவ்வாறு அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சரியாகவோ. முறையாகவோ பராமரிக்கப்படவில்லை என்பதற்கான சம்பவங்களை எழுத வேண்டுமேயானால் நேரமும் போதாது, பத்திரிகையில் இடமும் இருக்காது. ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா, அது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு என்றாலும் - ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதில் அளிப்பதாக இருந்தாலும், காவல்துறை மானியக் கோரிக்கையாக இருந்தாலும் தனது ஆட்சியில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழகம் பெருமை மிகு மாநிலமாகத் திகழ்கிறது என்று சொல்லிக் கொள்வதும், அதைத் தமிழக நாளேடுகள் எல்லாம் கொட்டை எழுத்துக்களில் வெளியிடுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. ஒரே பொய்யை, திரும்பத் திரும்பச் சொல்லி விளம்பரப்படுத்திக் கொள்வதாலேயே, அந்தப் பொய் மெய்யாகிவிடுமா?

ஒட்டுமொத்தமாக ஜெயலலிதா ஆட்சியில் சட்டம், ஒழுங்கு எவ்வாறு இருந்தது என்பதற்கு ஆதாரப்பூர்வமாக விளக்கம் கூற வேண்டுமேயானால், அ.தி.மு.க. ஆட்சியின் மூன்றாண்டுகளில் ஏடுகளிலே வெளிவந்த கொலைகள் மாத்திரம் 3,525 - கொள்ளைகள் 1,352 - வழிப்பறி மோசடிகள் 1,023 - செயின் பறிப்புகள் 1,120.

"என்றைக்கு ஒரு பெண் உடல் முழுவதும் நகைகளை அணிந்து கொண்டு, நள்ளிரவில் எவ்வித அசம்பாவிதமும் நேராமல், தனியாக நடந்து செல்ல முடிகிறதோ, அன்றுதான் இந்தியாவுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததாகப் பொருள்" என்று அண்ணல் காந்தி அடிகள் சொன்னார். சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் ஓடிவிட்டன. காந்தியடிகள் கண்ட கனவு இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது நிறைவேறியிருக்கிறதா?

ஒரு பெண் நகைகளை அணிந்துகொண்டு நள்ளிரவில் நடந்து செல்ல முடியுமா? ஏன் சென்னை மாநகரில் ஒவ்வொரு நாளும் நாம் பார்க்கிறோமே, ஒவ்வொரு நாளும் ஆறு இடங்களில் செயின் பறிப்பு, ஒன்பது இடங்களில் செயின் பறிப்பு, பட்டப்பகலில் காவல் நிலையத்திற்கு எதிரே பெண்ணின் சங்கிலிப் பறிப்பு என்று எத்தனை நிகழ்ச்சிகள்? இதுதான் தமிழகத்திலே பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற இலட்சணமா?

அதுமாத்திரமல்ல; 21-12-2012 தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா" இதழில் தமிழகத்தில் "கற்பழிப்புக்" குற்றங்களைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை வெளிவந்தது. அதன் தலைப்பு என்ன தெரியுமா? "செப்டம்பர் வரை 500க்கு மேற்பட்ட வழக்குகள் இந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது - தமிழ்நாட்டில் கற்பழிப்புக் குற்றங்கள் 9 சதவிகிதம் அதிகம்" என்பதாகும். தமிழ்நாடு போலீஸ் பற்றிய வலைதளத்தில், 2011ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர்வரை தமிழகத்தில் 484 கற்பழிப்புக் குற்றங்கள் என்பதற்கு மாறாக; 2012ஆம் ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை 528 கற்பழிப்புக் குற்றங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 528 குற்றங்களில், 75 கற்பழிப்புக் குற்றங்கள் சென்னை மாநகரில் மட்டும் பதிவாகியுள்ளன. பெண்களைப் போற்றிடும் இலட்சணமா இது?

2013ஆம் ஆண்டில் 923 வழக்குகள் கற்பழிப்பு என்ற பிரிவில் தாக்கல் ஆகியுள்ளன என்று முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார். இதுதான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்ததற்கான அடையாளமா? ஆனால் இதை மறைக்கும் வகையில் கற்பழிப்பு வழக்குகளில் வேறு வழக்குகளும் பதிவு செய்யப்பட்டதால்தான் எண்ணிக்கை அதிகம் என்று முதலமைச்சர் சமாளிக்கிறார்! வேறு வழக்குகளை இந்தத் தலைப்பில் பதிவு செய்தது யாருடைய குற்றம்? ஜெயலலிதாவின் பொறுப்பிலே உள்ள காவல் துறையினர்

தானே இந்த வழக்குகளைப் பதிவு செய்தவர்கள். அவர்கள் மீது பழியைப்போட்டு முதல்வர் தப்பிக்க எண்ணுகிறாரா?

தர்மபுரியில் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் மூன்று பேர் பேருந்தில் சென்ற போது, தீ வைத்துக் கொல்லப்பட்ட வழக்கில், தர்மபுரி செஷன்ஸ் நீதிபதி கடுமையாகக் கூறியபோது, "வழக்கில் தொடர்புடையவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், இவ்வழக்கை அனாதைக் குழந்தையைப் போல போலீஸ் அதிகாரிகள் நடத்தியுள்ளனர். போலீஸ் மீதான நம்பிக்கை நன்மதிப்பைக் குலைக்கும் வகையில் அவர்கள் நடந்துள்ளனர். இந்த இமாலயத் தவறுக்காக உள்துறைச் செயலாளர், சி.பி., சி.ஐ.டி. கூடுதல் எஸ்.பி.யை இந்த நீதிமன்றம் கண்டிக்கிறது. அரசுத் தரப்பு சாட்சியங்களைக் கலைப்பதற்கு அனுமதி அளித்த குற்றத்துக்காக சி.பி., சி.ஐ.டி., கூடுதல் எஸ்.பி. மீது, அதன் ஐ.ஜி., ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று வேதனை தெரிவித்தார். மாணவியரைத் தாங்களே தீயிட்டுக் கொளுத்திவிட்டு, பெண்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்று பேசுவது எப்படிப்பட்ட பசப்பு வார்த்தைகள்!

திருச்சியில் அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர் பரஞ்சோதி என்பவர் மீது டாக்டர் ராணி என்பவர் கொடுத்த வழக்கில் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கப் பணித்தும், பல நாட்களாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் இன்னும் பரிகாரம் கிடைத்த பாடில்லை!

1-1-2013 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா கொடநாடு புறப்பட்டுச் சென்ற பிறகு, அவர் பெயரால் ஒரு நீண்ட அறிவிப்பு வந்துள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஒடுக்கிட 13 அம்சத் திட்டம் என்ற பெயரால் வெளியாகியுள்ள அந்த அறிவிப்புக்கு எப்போதும் போலப் பாராட்டுகள் - பள பளப்பான விளம்பரங்கள்! பாலியல் பலாத்காரம் இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை முதலமைச்சர் ஆக்கிவிட்டார் என்றே மிகைப்படுத்தப்பட்ட செய்திகள்.

முதலமைச்சர் அறிவித்துள்ள 13 அம்சத் திட்டங்களில் முதல் மூன்று திட்டங்கள் பாலியல் வன்முறை வழக்குகளை - இனி நடப்பவை மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளை - யார் விசாரித்து நடவடிக்கை மேற்கொள்வது என்பது பற்றிய நிர்வாக

அறிவிப்புகளாகும். நான்காவது அம்சம்தான் "குண்டர் தடுப்புச் சட்டம்" - ஏற்கனவே இந்த ஆட்சியில் இந்தச் சட்டம் முறைதவறிப் பயன்படுத்தப்பட்டுப் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கின்றது. தங்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் இந்தச் சட்டப் பிரிவின் கீழ் கைது செய்து, அவர்கள் எல்லாம் நீதிமன்றங்களின் மூலமாக நியாயம் பெற்று வருகிறார்கள். அடுத்து, பாலியல் வன்முறை வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத் திலும் மகளிர் விரைவு நீதிமன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்போகிறார்களாம். இது முதலமைச்சரின் அறிவிப்பில் ஒரு அம்சம். பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவச் சிகிச்சைக்கான செலவை ஏற்பதும் ஒரு திட்டமாகும். இவ்வாறு அறிவிக்கப்பட்ட அந்த 13 அம்சத் திட்டங்கள் எல்லாம் பிறகு என்னவாயிற்றோ? மற்ற பல அறிவிப்புகளைப் போல, இந்த அறிவிப்புகளும் "ஏட்டுச் சுரைக்காய்" என்ற அளவிலே நின்றுவிட்டதோ; என்னவோ?

அன்புள்ள,

மு.க.

8-8-2014

3912. இந்த நாளில் அன்பு வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

இன்று 10-8-2014

இந்த நாளை கண்டவுடன்தான் எத்தனை எத்தனை நினைவுகள்ஸ

இதே நாளில்தான் - 72 ஆண்டுகளுக்கு முன்பு - 10.8.1942 அன்றுதான் - என்னுடைய முதல் பிள்ளை என்று அனைவராலும் பாராட்டப்படும் "முரசொலி" பிறந்த நாள். அன்றுதான் "முரசொலி" இதழ் தொடங்கப்பட்டது. அந்த முரசொலிக்குத்தான் எத்தனை எத்தனை வரலாறு!

இன்று தமிழகத்திலே உள்ள உடன்பிறப்பு களால் ஆர்வமுடன் ஆதரிக்கப்படுகின்ற "மூரசொலி" ஏடு, முதன் முதலாக திருவாரூரில் துண்டு வெளியீடாக வெளியிடப்பட்டது, தொடக் கத்தில் திங்கள்தோறும் ஆயிரக்கணக்கிலே அச்சிடப்பட்டு ஊர்தோறுமுள்ள திராவிட இயக்கக் கிளைகளுக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கிளைக் கழகத்தினர் திரட்டித் தரும் நன்கொடை களினால் "முரசொலி" துண்டு அறிக்கை வெளி யிட்டு, கழகத்தை முரசொலி வளர்க்க, முரசொலியை கழகம் வளர்த்தது. என்னுடைய எழுத்துக்கலையை வளர்க்கவும் "முரசொலி" காரணமாக அமைந்தது. இன்று "முரசொலி"க்குப் பல எழுத்தாளர்கள் உண்டு, ஆனால் நான் ஆயுள்கால நிரந்தர எழுத்தாளன். "சேரன்" என்பது என் புனைபெயர். தொடக்கத்தில் இதற்குச் செயலாளர் தென்னன், பொருளாளர் டி.எஸ். கோபால் - இருவரும் இன்றைக்கு இல்லை .

70 ஆண்டுகளுக்கு முன், 5.10.1944 அன்று நான் வழங்கிய "முரசொலி" துண்டறிக்கை ஒன் றின் நகல் ஒன்றை இங்கே அப்படியே இளைஞர் களின் நினைவுக்காகத் தருகிறேன்.

முரசொலி

தோற்றம் : ஈ.வெ.ரா. ஆண்டு 67

முரசு : 2 ஒலி : 7

1944 புரட்டாசி 20ஆம் நாள்

எழுத்தாளன் : சேரன்.

செயலாளர் : தென்னன்.

வருணமா? மானமா?

போதை தலைக்கேறிய திராவிடத் தோழன் விழித்தானின்று. வீரத்தை விற்ற படலத்தைக் கண்டு வெட்கினான் துள்ளி. அதன் எதிரொலி சுயமரியாதை இயக்கம் ! புது சகாப்தம் கண்ட தமிழன்! பெரியாரின் சகாப்தம் கண்ட தமிழன்! இத்தகைய தமிழன் வாழ்வில் மறுபடியும் வலை வீச்சா? என்று கேட்கத் துவங்கிவிட்டான். பிள்ளை , முதலியார், ரெட்டியார், தேசிகர் போன்ற வால்களை ஒட்ட வைத்துக் கொள்வதே ஒய்யார் வாழ்வின் உச்சஸ்தானம் எனக் கருதிடும் ஒரு சில முற்போக்கினர் உள்ள வரையில் நால்வகை வருனத்தைக் கண்டிக்க நமக்கும் சிறிது நாக்க கூசுகிறது. முட்டாள் என்று சொல்வது எனக்குப் பொருந்தும், அதுவே எனக்கு “சார் பட்டம் எனக் கூறிடும் காட்டாள்களிடம் நமக்கு வேலையில்லைதான். ஆனாலும், இரங்கும் தன்மை இயற்கையாகவே ஏற்பட்டு விடுகிறதல்லவா? இளித்த வாயர்களை உண்டு பண்ணினால்தான் களித்திருக்க வழி ஏற்படும் எனக் கண்டுபடித்து போன வருணாசிரமப் பிணத்தை மயக்கமென்று கூறித் தண்ணி தெளித்துக் கண்ணீர் பெருக்குகிறார்கள். அந்தக் காட்சிதான் அக்டோபர் 8, 9, 10 தேதிகளில் சிதம்பரத்தில் காட்டப்படப் போகிறது. பிணத்திற்கு மணக்கோலமிட்டு, மக்களிடம் காசு பறிக்கும் இந்த முயற்சிக்குத் தில்லையில் குழி வெட்டப்படும். அழுக்கைப் போக்கிக் கொள்ள அனைவரும் திரண்டு செல்வீர்! பகைவரைக் குறை கூறிப் பல்லவி பாடிட மட்டும் நேரமில்லை இப்பொழுது! விடுதலை விருத்தமுடன் விரைந்து செல்வீர் தில்லைக்கு!

பரணி பலபாடிப் பாங்குடன் வாழ்ந்த
பைந்தமிழ் நாட்டில்
சொரணை சிறிதுமில்லாச் சுயநலத்துச்
சோதரர்கள் சிலர் கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக்
கரணங்கள் போட்டாலும்

மரணத்தின் உச்சியிலே மானங்காக்க
மறத்தமிழா போரோடு
வருணாசிரமம் வீழ்க!

இப்படித் துவங்கிய "முரசொலி தான் இன்று விடுதலைப் படை வீரர் ஏந்துகின்ற கருவிகளில் ஒன்றாக இருக்கிறது.

"முரசொலி" இதழின் பொன் விழா, 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் நாளன்று சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் திருமண மண்டபத்தில் பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் நடைபெற்றது, தம்பி முரசொலி மாறன் வரவேற்புரை ஆற்றிட, நான் முரசொலி பொன் விழா மலரினை வெளியிட்டு உரை யாற்றினேன். நான் முரசொலியைத் தொடங்கிய போது எனக்கு உறுதுணையாக இருந்த என் நண்பன் திருவாரூர் தென்னன், அப்போது முரசொலியை அச்சிட்டுக் கொடுத்த திருவாரூர் கருணாநிதி அச்சக உரிமையாளர் கருணை எம்.ஜமால், முரசொலியின் தொடக்கக்கால நிர்வாகி யாகப் பணியாற்றிய சி.டி.எம். என்று அழைக்கப் படும் சி.டி. மூர்த்தி, முரசொலி சொர்ணம், மேலாளர் பெரியண்ணன் ஆகியோருக்கு என் கையால் பொன்னாடை போர்த்தினேன்.

முரசொலியைத் தொடர்ந்து நடத்துவதற்காக ஒரு அறக்கட்டளை நிறுவுவதென்று அன்றைய தினம் காலையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை பொதுச் செயலாளர் பேராசிரியர் பேசும் போது அறிவித்தார். அந்த விழாவிற்கு வி.பி. சிங் அவர்கள் தன் கைப்பட ஆங்கிலத்தில் வாழ்த்து எழுதி, அதிலே தமிழில் வி.பி. சிங் என்று கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார்.

பொன்விழா மலரையொட்டி நான் எழுதிய கவிதையில்,

"அஞ்சுக அன்னையிடம் உயிர்ப்பால் அருந்தி,
அய்யாவின் கொள்கையின்பால், உவப்பால் தவழ்ந்து
அண்ணாவின் பேரன்பால் ஆளாகி வளர்ந்து,
இளமைத் துடிப்பால் இந்திப் போர்ப்படை கூட்டி
இலட்சிய முனைப்பால் முரசொலிக்க வந்தவன் நான்
ஆதியான் வள்ளுவன் வழி முப்பால் தந்தவனே!

அணுப்பொழுதும் அப்பால் சொன்றிடாமல் - எனை

அரவணைத்துக் காக்கின்ற தமிழே உன் சார்பில்

போர்க்கள முரசின் பொன்விழா மலரை

ஆர்த்தெழும் உடன்பிறப்பாளர் அனைவருக்கும்
நெஞ்சில் என்றும்

பூத்திருக்கும் தாய், தந்தை பெரியார், அண்ணா -
மற்றும்

வாழ்த்துகின்ற ஆன்றோர் சான்றோர்க்கும்,

காணிக்கை ஆக்குகின்றேன்''

- என்று குறிப்பிட்டிருந்தேன்,

கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அந்தப் பொன் விழாவுக்கு எழுதிய வாழ்த்துரை பில், "திராவிட முன்னேற்றக் கழகத்தின் கேடய மாகத் திகழ்ந்து வரும் முரசொலி, தமிழ்ப் பயிர் வளர்க்கும் பண்ணையின் ஏராகவும் விளங்கு கின்றது. எத்தனையோ அரசின் தடைகள், வழக்குகள், எதிர்பாராத இழப்புகள் இத்தனையும் தாங்கிக் கொண்டு, வேலாழ் முகத்த களிறு என வீறு நடைபோட்டு வருவது முரசொலி, அதன் பொன்விழாவில் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நின் பயணம் தொடர்க என்று வாழ்த்துகிறேன். இனமும் மொழியும் இழந்த மானம் மீட்டுத், தமிழர் தலை நிமிர்ந்து வாழும் வழிகாணச் செய்திடும் நாள் காண நீ வாழ்க என்று வாழ்த்துகிறேன். வாழ்த்தி விட்டு முரசொலியைப் புரட்டுகிறேன், கலைஞர் மு.க. வின் திருமுகத்தின் மறு தோற்ற மாகவே காட்சி அளிப்பதைக் காண்கிறேன், வாழ்த்துகிறேன் மறுபடியும் - எந்நாளும் வாழ்க வென்றே" என்று குறிப்பிட்டதையும் இந்த நேரத் தில் நினைவு கூர்கிறேன்.

இப்படியெல்லாம் வளர்ந்த "முரசொலி"க்குத்தான் இன்று வயது 72 ஆகிறது. என்னுடைய வயதோ 90 முடிந்து, 91 நடக்கிறது. 11.3.1984 அன்றுதான் நான் எழுதும்போது, "தள்ளாடும் - தத்தி நடக்கும் - தணலை மிதிக்கும் - விழும்! எழும்! ஆனாலும் எந்த நிலையிலும் கொண்ட கொள்கையை மண்டியிட வைத்ததில்லை; முன்வைத்த காலைப் பின்வைக்க நினைத்தது மில்லை! முரசொலி நான் பெற்ற முதல் பிள்ளை! ஆம்; அந்த முதற்பிள்ளைதான்

தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியனைப் போல கிண்கிணி அணிந்த கால்களுடன் பகைவர்கள் பலரைக் களத்தில் சந்திக்க "சென்று வா மகனே! செருமுனை நோக்கி!" என அனுப்பி வைக்கப்பட்ட "அன்புப் பிள்ளை !" என்றெல்லாம் குறிப் பிட்டிருந்தேன்.

இன்றையதினம் "முரசொலி"யின் பிறந்த நாளைப் பெருமைப்படுத்தும் வகையில் தம்பி கவிச்சுடர் கவிதைப்பித்தன் எழுதிய கவிதையில்,

"முரசொலிநம் உணர்வுக்குப் பெருவிருந்து!
முரசொலிநம் அறிவுக்குத் தமிழ்மருந்து!
முரசொலிநம் படைக்கருவி! தமிழினத்தின்
முகவரி நம் அடையாளம்! ஆக்கம் ஊக்கம்!
முரசொலிநம் உடலியக்கும் குருதி நாளம்
முரசொலியே அச்சாணி கழகத் தேர்க்கு !
முரசொலிநம் உயிர் என்பேன்! தயக்கம் இல்லை!
முரசொலிஇல்லாமல் நம் இயக்கம் இல்லை!"

என்று முரசொலியைப் பற்றி கழக உணர்வுகளைச் சாறு பிழந்து வழங்கியிருக்கிறார்.

முரசொலியின் இந்த 72 ஆண்டு காலவளர்ச்சியில் இடையிடையே தொய்மைகள் உண்டு. அவ அதன் தலை தொங்கியதில்லை. நிமிர்ந்து நில் நான் முரசு கொட்டியதற்கு - கொட்டுவதற்கு பெரும் துணையாய் இருந்து வரும் முரசொலிக்கு இன்று 72வது பிறந்த நாள். இந்த வளர்ச்சிக்கு இதையே போர்வாளாகவும், கேடயமாகவும் ஏந்திக் கொண்டு கழகத்தை நடத்துகின்ற என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே காரணம். அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் நன்றி செலுத்துகிறேன்.

இந்த 72 ஆண்டுகளில் எத்தனையோ அரசியல் நிகழ்ச்சிகள் - குடும்ப நிகழ்ச்சிகள் - கழக நிகழ்ச்சிகள், எத்தனையோ அரசியல் திருப்பங்கள் - கனிவு ஒரு காலகட்டம் - கசப்பு ஒரு காலகட்டம் - இந்தத் தட்பவெட்ப மாறுதல் கள் எல்லாம் முரசொலிக்கு

அத்துப்படி. இந்த முரசொலி - கல்லிலும் முள்ளிலும் பயணம் செய்த முரசொலி - என்றென்றும் களத்தில் நிற்கும் முரசொலி - காட்டாறுகள் கடந்து வந்த முரசொலி - கடும் விலங்குக் கூட்டத்தை வென்று வந்த முரசொலி என்பதற்கு ஒரேயொரு நிகழ்வினை ஞாபகப்படுத்துகிறேன்,

1991ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இந்தி யாவின் இளம் தலைவர் ராஜீவ் காந்தி தி.மு. கழகத்திற்கு எதிரணியில் போட்டியிட்ட காரணத் தினால், ராஜீவ் காந்தியின் மறைவினால் வேதனைக்காளான அந்தக் கட்சியின் தொண்டர்களைத் தூண்டிவிட்டு அதி.மு.க. வினரும், சமூக விரோதிகளும் அந்த நெருக்கடியான நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழகத்தினர் வீடுகளி லும், அலுவலகங்களிலும் புகுந்து கலாம் விளைவித்தனர். முரசொலி அலுவலகத்தில் பெரும் பாலான பகுதிகள் அத்தகைய சக்திகளால் கொளுத்தப்பட்டன. நீண்டகாலமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த "முரசொலி" பழைய கோப்பு கள் எல்லாம் தீயில் கருகிச் சாம்பலாயின. அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல வாகனங்கள் கொளுத்தப்பட்டன. அப்போது முரசொலி அலுவலகத்தைக் கவனித்துக் கொண் டிருந்த தம்பி கலாநிதி மாறன், செய்தியைக் கேள்விப்பட்டு, என் வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு ; எரிந்து கொண்டிருந்த முரசொலி அலுவலகத்தைக் காணச் சென்ற போது, அவரால் உள்ளேயே நுழைய முடியவில்லை என்பதோடு, அவர் சென்ற ஸ்கூட்டரும், அவர் கண் முன்னாலேயே கொளுத்தப்பட்டது. முரசொலி இதழைத் தொடர்ந்து அச்சிட்டு வழங்க முடியாத அளவுக்கு அங்கேயிருந்த இயந்திரங் கள் நாசமாக்கப்பட்டன. இப்படி "முடிந்து விட்டது கதை", என்று மாற்றார்களால் கருதப்பட்ட "முரசொலி தான் இன்றைக்குத் தொடர்கதையாக தனது தூய தொண்டினை தொடர்ந்து ஆற்றி வருகிறது. 72வது அகவையில் அடியெடுத்து வைக்கும் என்னுடைய முதல் பிள்ளை "முரசொலி"க்கு கழக உடன்பிறப்புகள் என்றும் போல் தொடர்ந்து ஆதரவினைக் குவித்திட வேண்டுமென்பதுதான் இந்த நாளில் நான் விடுக்கும் அன்பு வேண்டுகோளாகும்.

அன்புள்ள,

மு.க.

11-08-2014

3913. சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் பிரச்சினை - இந்த அரசின் அணுகுமுறை என்ன?

உடன்பிறப்பே,

தமிழகம் முழுவதும் சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள் இன்று ரெயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். தமிழகத்தில் சுமார் 68 ஆயிரம் சத்துணவு மையங்களும், 35 ஆயிரம் அங்கன்வாடி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் சுமார் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். இந்த இரண்டரை லட்சம் பேரில், சுமார் 40 ஆயிரம் காலி பணி இடங்கள் உள்ளன. கடந்த மூன்றாண்டுகளாகவே இந்தக் காலி இடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதன் காரணமாக ஒரு சத்துணவு அமைப்பாளர் ஐந்துக்கு மேற்பட்ட மையங்களைக் கண்காணிக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறார். எனவே உடனடியாக காலிப் பணி இடங்களை நிரப்ப வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார்கள்.

மேலும் சத்துணவு திட்டத்துக்கு தனித்துறை, வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கவேண்டும், இந்த மையங்களை தனியாருக்கு சில இடங்களில் தாரை வார்ப்பதைத் தவிர்க்க வேண்டும், பணிக் காலத்தில் மறைந்த பணியாளர்களின் வாரிசுகளுக்கு பணி வழங்கிட வேண்டும், சட்டப்பூர்வமான குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் முன் வைத்து போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சத்துணவுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த காய்கறிகள் மற்றும் விறகு செலவுகளுக்காக 18.07.2007 அன்று 35 காசை 44 காசாக கழக அரசு உயர்த்தி வழங்கியது. தொடக்கப்பள்ளியில்

பயிலும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த உணவீட்டுச் செலவினம் 44 காசை 70 காசாகவும், நடுநிலைப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த 44 காசை 80 காசாகவும், 9-10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 44 காசை 80 காசாகவும், குழந்தை மையங்களில் பயன்பெறும் 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த 44 காசை 56 காசாகவும் மேலும் உயர்த்தி கழக அரசு வழங்கியது.

தொடக்கப்பள்ளி மாணவ / மாணவியருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்பட்டு வரும் 1 கிராம் சமையல் எண்ணெய் 3 கிராமாகவும், நடுநிலைப்பள்ளி மாணவ / மாணவியருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்பட்டு வரும் 100 கிராம் அரிசியினை 150 கிராமாகவும், 1 கிராம் சமையல் எண்ணெய் 3 கிராமாகவும் மற்றும் காய்கறி 50 கிராமிலிருந்து 60 கிராமாகவும் உயர்த்தி கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. மேலும், 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்பட்டு வரும் 120 கிராம் அரிசி 150 கிராமாகவும், 1 கிராம் சமையல் எண்ணெய் 3 கிராமாகவும் மற்றும் காய்கறி 50 கிராமிலிருந்து 60 கிராமாகவும் 24.9.2010 அன்று ஆணையிடப்பட்டு உயர்த்தி கழக ஆட்சியில் வழங்கப்பட்டது.

பள்ளி சத்துணவு மையங்களில் பணிபுரிந்து பணியிடையே காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களில் 57 பேருக்குச் சத்துணவு அமைப்பாளர்களாகவும், 8 பேருக்கு சமையலராகவும், 11 பேருக்குச் சமையல் உதவியாளர்களாகவும் ஆக மொத்தம் 76 பேருக்குக் கருணை அடிப்படையில் கழக ஆட்சியில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

பணியிலிருக்கும் பொழுது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணியிடம் வழங்க 25.10.2007 முதல் வகை செய்யப்பட்டு உள்ளது. அதனடிப்படையில் 29 பேருக்கு அங்கன்வாடி பணியாளர்களாகவும் மற்றும் 13 பேருக்கு அங்கன்வாடி உதவியாளர்களாகவும் கருணை அடிப்படையில் பணியிடம் கழக ஆட்சியில் வழங்கப்பட்டது.

27.1.1989 முதல் 30.1.1991 வரை அமைந்த கழக அரசினால் பணியாளர்களை அந்தந்த ஊராட்சியின் நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்கள் என வகைப்படுத்தப்பட்டனர்.

சத்துணவுப் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு மூன்று மாதங்களுக்கு ஊதியத்துடன் வழங்க கழக ஆட்சியில் ஆணையிடப்பட்டது.

13.5.1996 முதல் 13.5.2001 **வரையிலான கழக அரசு காலத்தில்** சத்துணவுப் பணியாளர்களுக்குக் குடும்ப நல நிதித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு; பணியிலிருக்கும் போது காலமான சத்துணவுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போன்று ரூ.1.5 இலட்சம் குடும்ப நல நிதி கழக ஆட்சியில் வழங்கப்பட்டது.

சத்துணவு சமையலர் உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயதை 55 லிருந்து 58 ஆக உயர்த்தியது. சத்துணவு / அங்கன்வாடி பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதித் திட்டம் தொடங்கப்பட்டு; அரசின் பங்குத் தொகை 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு முன்பு அ.தி.மு.க. ஆட்சியில் ஒருமுறை கூட ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் அவர்களுக்கு மூன்று முறை ஊதிய விகிதம் உயர்த்தி வழங்கப்பட்டது.

ரூபாய் 200-5-250-10-400 என அவர்கள் பெற்று வந்த ஊதியம், **1998ஆம் ஆண்டு முதல்முறையாக** ரூபாய் 600-10-700-20-1100 என உயர்த்தப்பட்டதோடு; அப்படி உயர்த்தப்பட்ட ஊதிய விகிதமும் **1.1.1996 முதல் முன்தேதியிட்டு** நடைமுறைப் படுத்தப்பட்டு வழங்கப்பட்டது. அவர்களது ஊதிய விகிதம் **இரண்டாம் முறையாக** 1.9.2006 முதல் ரூபாய் 1300-20-1500-25-2000 என உயர்த்தி வழங்கப்பட்டது. பிறகு மீண்டும் அவர்களது ஊதிய விகிதம் **மூன்றாம் முறையாக** ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி ரூபாய் 2500-5000 எனவும்; ரூபாய் 500 தர ஊதியம் எனவும் உயர்த்தி 1.9.2006 **முதல் முன்தேதியிட்டு வழங்கப்பட்டது.**

கழக ஆட்சியிலேதான், சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களில் பத்தாண்டுப் பணி முடித்தவர்களுக்கு, **ஒரு ஊதிய உயர்வும், 20 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு மற்றொரு ஊதிய உயர்வும்** வழங்கப்பட்டது.

அ.தி.மு.க ஆட்சியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த சத்துணவு சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி

உதவியாளர்கள் ஆகிய அனைவருமே கழக ஆட்சியிலேதான் சிறப்பு ஊதிய விகிதம் பெற்று வருகின்றனர்.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் அகவிலைப்படி தவிர ஏனைய படிகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான், அவர்களுக்கு முதல் முறையாக 1.6.2009 முதல் மாதந்தோறும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவைகளும், 100 ரூபாய் மருத்துவப் படியும், 2000 ரூபாய் பண்டிகைக் கால முன்பணமும் வழங்கப்பட்டு வருகின்றன.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் மாதாந்திர ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான் இதுவரை ஓய்வுப் பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கும், அங்கன்வாடிப் பணியாளர்களில் சமையலர்களுக்கும், முதல் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் - சமையல் உதவியாளர்களுக்கும், இரண்டாம் நிலை அங்கன்வாடி உதவியாளர்களுக்கும் முறையே மாதந்தோறும் ரூபாய் 700, ரூபாய் 600, ரூபாய் 500 என்று **முதல் முறையாக ஓய்வூதியம்** வழங்கப்பட்டு வருகிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் அவர்களுக்குப் பதவி உயர்வு எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியிலேதான், சத்துணவு உதவியாளர்களுக்கு சமையலர்களாகவும், சமையல் மற்றும் உதவியாளர்களுக்கு சத்துணவு அமைப்பாளர்களாகவும் **பதவி உயர்வு** வழங்கப்பட்டு உள்ளது. 1020 சமையலர்களும், உதவியாளர்களும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

கழக ஆட்சியிலேதான், புதிய சலுகைகள் மற்றும் புதிய திட்டங்கள் என்ற முறையில் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் 1.4.2010 முதல் செயல்படுத்தப்படுகிறது. சிறப்பு சேமநல நிதித் திட்டம் பத்தாயிரம் ரூபாயாகவும், குடும்ப நலத் திட்டம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாகவும் வழங்கப்படுவதுடன்; தமிழ்நாடு அரசின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உயர்ந்தபட்சமாக இரண்டு இலட்சம் ரூபாய் வரை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆசிரியர் பட்டயப் படிப்பு பயிற்சி (Diploma in Teacher Education) முடித்த சத்துணவு மற்றும் குழந்தை மைய பணியாளர்கள் இடைநிலை ஆசிரியர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பி.எட். படித்து முடித்த அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஆசிரியர் பணியிடம் வழங்க கழக அரசு ஆணை வெளியிட்டதைத் தொடர்ந்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் சிறப்புத் தேர்வு நடத்தும் பொருட்டு தகுதிவாய்ந்த 59 அங்கன்வாடி பணியாளர்களுக்கும் 405 சத்துணவுப் பணியாளர்களுக்கும் பெயர் பட்டியல் 4.10.2010 அன்று ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட்டு நியமன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2001 முதல் 2006 வரை 5 ஆண்டுகள் நடைபெற்ற அ.தி.மு.க ஆட்சியில் 7655 பணி இடங்களில் மட்டுமே புதியவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். ஆனால் கழக ஆட்சியில் சத்துணவு மற்றும் குழந்தை மையங்களில் 2006 முதல் 6408 அங்கன்வாடிப் பணியாளர்கள்; 1991 குறு அங்கன்வாடிப் பணியாளர்கள்; 13167 உதவியாளர்கள் என மொத்தம் 21566 பேர் உட்பட மொத்தம் 56 ஆயிரத்து 833 பணியிடங்கள் நிரப்பப்பட்டு மகத்தான சாதனை கழக ஆட்சியில் நிகழ்த்தப்பட்டுள்ளது. சத்துணவு அமைப்பாளர்களும், அங்கன்வாடிப் பணியாளர்களும் அ.தி.மு.க. ஆட்சியில் குறைந்தபட்ச ஊதியமாக மாதந்தோறும் 1488 ரூபாயும்; உயர்ந்தபட்ச ஊதியமாக மாதந்தோறும் 2158 ரூபாயும் பெற்று வந்தனர். ஆனால் கழக ஆட்சியிலே அவர்கள் குறைந்த பட்ச ஊதியமாக மாதந்தோறும் 4911 ரூபாயும்; உயர்ந்தபட்ச ஊதியமாக மாதந்தோறும் 5471 ரூபாயும் பெற்றனர்.

சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோர் தமிழகத்தில் தற்போது பெற்றுவரும் ஊதியத்தின் அளவுதான்; இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தை விடவும் அதிகம் என்பது மட்டுமன்றி; அவர்களுக்கு தமிழகத்தில் வழங்கப்படும் சலுகைகளும், நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அங்கன்வாடி ஊழியர்களுக்கென சிறப்பாக தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்

திட்ட ஊழியர்கள் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கழக ஆட்சியில் சத்துணவுப் பணியாளர்களுக்கு செய்த நன்மைகளுக்காக 21-11-2009 அன்று வள்ளுவர் கோட்டத்தில் மிகப் பெரிய "நன்றி பாராட்டும்" கூட்டத்தை என்னை அழைத்து நடத்தினார்கள். அந்தக் கூட்டத்திலே மட்டும் பதினைந்து புதிய அறிவிப்புகளை இந்தப் பணியாளர்களுக்காக நான் அறிவித்தேன்.

கழக ஆட்சியில் இத்தனை சலுகைகளை அளித்த போதிலும், அவர்கள் 30-8-2010 அன்று போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தபோது, இன்றைய முதல் அமைச்சர் ஜெயலலிதா 31-8-2010 அன்று விடுத்த அறிக்கையில், "சத்துணவு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் குறித்து சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் அடக்குமுறையை ஏவி விட்டிருக்கும் மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதிக்கு எனது (ஜெயலலிதாவின்) கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சத்துணவு சங்க மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மீது எடுக்கப்பட்ட பணி நீக்கம் மற்றும் இதர ஒழுங்கு நடவடிக்கைகளை உடனடியாக கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எம்.ஜி.ஆர். ஆட்சி விரைவில் மலரும், சத்துணவு ஊழியர்களின் குறைகள் தீரும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றெல்லாம் தெரிவித்திருந்தாரே, அவர் கூறியது போல அவரது ஆட்சி வந்ததே, சத்துணவு ஊழியர்களின் குறைகள் தீர்ந்ததா? ஆனால் கழக ஆட்சியில் அந்தப் போராட்டமும் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

ஏன், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலேயே "சத்துணவுப் பணியாளர்களின் பணி மற்றும் ஊதியம் தொடர்பாக பிரச்சினைகள் முன்னுரிமையோடு அணுகப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும்" என்று அறிவித்தார்களே, அதையாவது காப்பாற்றினார்களா?

தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பின் இணை கன்வீனர் மு. வரதராசன் விடுத்துள்ள அறிக்கையில், "கடந்த ஆட்சியில் சத்துணவுப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது, சத்துணவுப் பணியாளர்களின் கோரிக்கை நியாயமானது, போராடும் நிர்வாகிகளை அரசு

அழைத்துப் பேச வேண்டும், தேர்தல் வாக்குறுதியில் எங்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென்று ஜெயலலிதா அறிவித்தார். ஆனால் 3 ஆண்டாகியும் நிறைவேற்றவில்லை, போராடும் சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேச வில்லை, மாறாக போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று சமூக நல இயக்குனர் தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார்'' என்றெல்லாம் கூறி யிருக்கிறாரே, அதற்கு அரசின் விளக்கம் என்ன?

தி.மு. கழக ஆட்சியின் போது எங்களுக்கு அறிவுரை கூறிய ஜெயலலிதா தற்போது அதிகாரிகளின் மூலமாக போராட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது என்றும், முன் அறிவிப்பின்றி தலைமை யிடத்தை விட்டுச் செல்லும் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்களாம். சத்துணவு ஊழியர்களின் இந்தக் கோரிக்கைகள் பற்றி 15-7-2014 அன்று இந்தத் துறையின் அமைச்சர் தனது மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின் போதும், 24-7-2014 அன்று முதலமைச்சர் 110வது விதியின் கீழ் படித்த இந்தத் துறை குறித்த அறிவிப்புகளிலும், இந்தப் பணியாளர்களைப் பற்றிய அறிவிப்புகளே இல்லை என்ற போதிலும், அந்த அலுவலர்கள் போராட்டத்தை அறிவித்திருக்கும் நிலையிலாவது அந்தச் சங்கத்தினரை அழைத்துப் பேசி, ஒரு சுமுகமான முடிவு கண்டு, அவர்களின் கோரிக்கைகளின் மீதான அறிவிப்புகளை அரசு செய்திட முன்வர வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

12-08-2014

3914. குண்டர் சட்டத்தை மேலும் கொடுமையாக்குவதா?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. அரசு சட்டப்பேரவையின் இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாளான 12-8-2014 அன்று 19 சட்ட மசோதாக்களை அவசர அவசரமாக முன்மொழிந்து விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிப்பதற்குக்கூட நேரம் தராமல் அவையிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்த மசோதாக்களில் ஒன்று; கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பவர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், பாலியல் தொழில் குற்றவாளிகள், மணல் கடத்துபவர்கள், காணொலித் திருடர்கள் முதல் முறை குற்றம் புரியும்போதே, குண்டர் சட்டத்தில் கைதுசெய்ய வழிவகை செய்து இயற்றப்பட்ட மசோதாவாகும். ஏற்கனவே உள்ள சட்டத்தின்படி, இத்தகைய கொடுங்குற்றம் செய்பவர்களைக் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைதுசெய்ய வழி உள்ளது. தற்போது இந்த அரசு செய்கின்ற திருத்தம், இந்தச் சட்ட விரோதச் செயல்களைச் செய்பவர்கள், தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருபவர்கள் (Habitual Offenders) என்பதற்குப் பதிலாக ஒரு முறை குற்றம் செய்தாலும், (Single Offence) அது சட்டம், ஒழுங்கைச் சீர்குலைக்கக் கூடியதாக இருக்கிறது என்ற காரணத்தால், அவர்களைக் குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்க வழிவகை செய்து கொள்கிறார்கள். இந்த ஆட்சியினர் ஏற்கனவே உள்ள இந்தக் குண்டர் சட்டத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினர் உள்ளிட்ட தங்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் கைது செய்து சிறையிலே அடைத்து வந்தார்கள். தற்போது இந்தச் சட்டத்தில் அவர்களுக்கு மேலும் ஒரு வசதியாக, ஒரு முறை இந்தத் தவறினைச் செய்தாலும், அவர்களை இந்தச் சட்டப் பிரிவில் கைது செய்யலாம் என்றாகிறது. தங்களுக்குப் பிடிக்காதவர்களை இந்த ஆட்சியின் தவறுகளை ஜனநாயகரீதியாகத் தட்டிக் கேட்பவர்களையெல்லாம் அச்சுறுத்தி, அடக்கி, முடக்கி, இந்தக் குண்டர்

சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையிலே அடைக்க அ.திமு.க. ஆட்சியினர் மற்றுமோர் வழியினைத் தேடிக் கொள்கிறார்கள். பாலியல் குற்றவாளிகளை - முதல் முறை அக்குற்றத்தைப் புரிந்தாலும் உண்மையாக தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்துத் தண்டிப்பது பற்றி நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் தவறு செய்யாதவர்களையும், அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராகக் கருத்து சொல்பவர்களையும், ஜனநாயக ரீதியாக எதிர்வினைகளில் ஈடுபடுபவர்களையும் தவறு செய்ததாக இட்டுக்கட்டி இந்த ஆட்சியினர் கைதுசெய்வார்கள்.

இந்தச் சட்டத்தின் "மகாத்மியம்" பற்றி "இந்து" ஆங்கில நாளேடு எழுதும் போது, "If enacted, the amendments will mean that the principle that only habitual offenders will be detained under the Goondas Act will be changed to cover even a single offence, "which has a propensity to disturb public order" என்று தெரிவித்திருப்பதோடு, அதே "இந்து" நாளேட்டில், சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி

திரு. கே. சந்துரு அவர்கள் இந்த சட்டத்தைப் பற்றிக் கூறும்போது, "The amendments will be violative of Article 22 of the Constitution, which prescribes the parameters for such detention laws" என்று கருத்து கூறியிருக்கிறார். நீதிபதி சந்துரு அவர்கள் இப்போது மாத்திரமல்ல; அடிக்கடி இந்தச் சட்டம் பற்றிக் கூறும்போது, "Time and again, Justice Chandru says, High Courts had flagged abuse of the Goondas Act and have struck down numerous such detentions. In such a scenario, removing the term "Habitually" may make way for further misuse of the law by the police, he cautions.

இந்தச் சட்டப் பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டால், ஓராண்டு காலத்திற்கு எந்த விசாரணையும் இல்லாமலேயே சிறையிலே அடைக்கப்படலாம் எனும் அளவுக்கு வெள்ளை ஏகாதிபத்தியத்தை நினைவூட்டும் சட்டம் இது. இந்த ஆட்சியில் இதுவரை இந்தக் குண்டர்கள் சட்டம் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் நன்கறிவோம். குறிப்பாக நீதிமன்றத்திலே இந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மீது நீதியரசர்கள் என்ன தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் நினைவிலே கொள்வது நல்லது.

இதுபோன்றதொரு சட்டப் பிரிவு இல்லாத நேரத்திலேயே அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற உடனேயே 30-7-2011 அன்று வீரபாண்டி ஆறுமுகம், ஜெ. அன்பழகன், எம்.எல்.ஏ. ஆகியோரும், அதே நாளில் திருவாரூரில் பொருளாளர் மு.க. ஸ்டாலின், பூண்டி கலைவாணன் ஆகியோரும், 2-8-2011 அன்று புரசை ரெங்கநாதனும், 4-8-2011 அன்று ஈரோட்டில் என்.கே.கே.பி. ராஜாவும், 6-8-2011 அன்று திருப்பூர் மாநகர துணைச் செயலாளர் டி.கே.டி. நாகராஜும், 10-8-2011 அன்று திருச்செந்தூரில் அனிதா ராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ.வும், சேலம் தம்மம்பட்டி நகரக் கழகச் செயலாளரும், 17-8-2011 அன்று கோவையில் பொங்கலூர் மணியும், 25-8-2011 அன்று முன்னாள் அமைச்சர் கே.என். நேரு, திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் அன்பழகன், கோவை மாநகரச் செயலாளர் வீரகோபால் ஆகியோரும், 27-8-2011 அன்று லால்குடியில் சவுந்தர பாண்டியன், எம்.எல்.ஏ.வும், காங்கேயத்தில் முன்னாள் பேரூராட்சித் தலைவர் ஏ.சி. கோவிந்தசாமியும், 29-8-2011 அன்று மதுரையில் முன்னாள் மேயரின் கணவர் கோபிநாத்தும், 1-9-2011 அன்று திருச்செங்கோடு நகராட்சித் தலைவரும், 9-9-2011 அன்று சென்னையில் பகுதிக் கழகச் செயலாளர் க. தனசேகரனும், மதுரையில் ஜெயராமனும், 10-9-2011 அன்று நெல்லையில் கருப்பசாமி பாண்டியனும், 11-9-2011 அன்று மதுரையில் மின்னல்கொடியும், 18-9-2011 அன்று விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் பொன்முடியும்,

19-9-2011 அன்று கரூரில் கே.சி.பழனிச்சாமி, எம்.எல்.ஏ.வும், 23-9-2011 அன்று சென்னையில் முன்னாள் அமைச்சர் கே.பி.பி. சாமியும், 2-11-2011 அன்று கே.பி.பி. சாமியின் சகோதரர்களும், ஐசரிகணேசும், 3-6-2012 அன்று மீண்டும் முன்னாள் அமைச்சர்கள் வீரபாண்டி ஆறுமுகமும், ஐ. பெரியசாமியும், மதுரை மாநகர மாவட்டச் செயலாளர் தளபதியும் என்று கழக முன்னணியினர் நாட்டில் நடமாடவே கூடாது என்ற தீய நோக்கத்தோடு, ஆட்சிக்கு வந்து ஒரு சில மாதங்களிலேயே தொடர்ந்து கைது செய்யப்பட்டு, அவர்கள் ஜாமீனில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பிறகும், மீண்டும் அவர்கள் மீது ஏதேதோ பொய்ப் புகார்களைப் பெற்று வேண்டுமென்றே வழக்கு தொடுத்தும், அதிலும் நீதிமன்றத்தை அணுகி சட்ட விதிமுறைகளின்படி ஜாமீன் பெற்றால் அவர்களில் சிலர் மீது குண்டர்சட்டத்தைப் பிறப்பித்து விசாரணையே

இன்றிச் சிறையிலே அடைத்தும் தொடர்ந்து நடந்துவந்த பிறகு வேறு வழியில்லாமல் அத்தகைய பழிவாங்கும் காட்டு தர்பார் போக்கினைக் கண்டிக்கும் வகையிலே மாத்திரமல்லாமல், அத்துடன் மக்கள் பிரச்சினைகளையும் இணைத்துக் கழகத் தலைமைச் செயற்குழுவினைக் கூட்டி அதிலே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அதற்குப் பிறகுதான் சிறை நிரப்பும் போராட்டம் அறிவிக்கப்பட்டு முறைப்படி நடைபெற்றது.

திருமங்கலம்-மதுரைச் சாலையில் அமைக்கப்பட்டிருந்த வாகனச் சோதனைச் சாவடியில் போலீசாரைப் பணி செய்ய விடாமல் தடுத்ததோடு, அவர்களை மோசமான வார்த்தைகளால் திட்டியதாகக்கூறி, பின்னர் கொலை செய்யப்பட்டுவிட்ட, பொட்டு சுரேஷ் மீது போலீசார் வழக்கு பதிவுசெய்தனர். மதுரை அண்ணா நகரைச் சேர்ந்த அமர்நாத் என்பவர் பொட்டு சுரேஷ் மீது அளித்த நிலப் பறிப்பு புகாரின் பேரில் மற்றொரு வழக்கையும் போலீசார் பதிவுசெய்தனர். அந்த வழக்குகளின் அடிப்படையில் பொட்டு சுரேஷை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க அ.தி.மு.க. ஆட்சி வந்ததும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவை ரத்துசெய்ய மதுரையைச் சேர்ந்த ஆர்.எல். அசோகன் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்தார். "குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரைச் சிறையில் அடைப்பதற்கு உகந்த போதுமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என சம்பந்தப்பட்ட அதிகாரி திருப்தி அடையும் நிலையில்தான், அதற்கான உத்தரவை அந்த அதிகாரி பிறப்பிக்க முடியும். ஆனால் பொட்டு சுரேஷ் வழக்கில் அவ்வாறு ஆவணங்கள் காட்டப்படாததால், குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது" என்று நீதிபதிகள் சி. நாகப்பன், டி. சுதந்திரம் ஆகியோர் 12-11-2011 அன்று உத்தரவிட்டனர்.

விருதுநகரைச் சேர்ந்த கே. சுப்பிரமணி என்பவர் மீது அ.தி.மு.க. ஆட்சியினர் பிறப்பித்த குண்டர் சட்ட உத்தரவை ரத்து செய்யக்கோரி மதுரை உயர் நீதிமன்ற கிளையில், நீதிபதிகள் கே. சுகுணா, ஆர்.மாலா ஆகியோர்முன் தாக்கல் செய்த வழக்கில்; **"குண்டர் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்படும் நபரை, நீதிமன்ற விசாரணையைச் சந்திக்காமலேயே ஓராண்டுக்குச் சிறையில் அடைக்கலாம். ஒருவரைக் குண்டர் சட்டத்தில்**

சிறையில் அடைக்க உத்தரவிடும் போது, அதற்கான காரணங்களைக் கவனமாக கையாளவேண்டும். மனத்தை செலுத்தாமல் உத்தரவில் அதிகாரிகள் கையெழுத்திடக் கூடாது. இதனால் குண்டர் சட்டத்தின் உண்மையான நோக்கம் அடிபடுவதுடன், அந்தச் சட்டத்தின்கீழ்க் கைது செய்யப்படும் நபரின் தனி மனித சுதந்திரமும் பாதிக்கப்படுகிறது. குண்டர் சட்டத்தை அமல்படுத்தும்போது பல்வேறு கட்டுப்பாடுகளை நீதிமன்றம் விதித்துள்ளது. அதை அதிகாரிகள் கடைப்பிடிக்காமல், இயந்திரத்தனமாகச் செயல்பட்டு உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றனர். ஆதாரங்களைப் பார்க்காமலேயே விருதுநகர் மாவட்ட ஆட்சியர் குண்டர் சட்ட உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார். அவரது உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. இதுபோன்று இயந்திரத்தனமாக செயல்பட்டு குண்டர் சட்டத்தில் கைது செய்வதைத் தடுக்க விருதுநகர் மாவட்ட ஆட்சியருக்கும், மனுதாரர் மகனை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப் பரிந்துரைத்த இன்ஸ்பெக்டர் குருவெங்கட் ராஜுக்கும் தலா ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது. பணத்தைக் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட சுப்பிரமணிக்கு வழங்க வேண்டும்" என்று நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதுமாத்திரமா? சேலம் மாவட்டக் கழகச் செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவருமான தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்களை வேண்டுமென்றே, திட்டமிட்டுக் குண்டர் சட்டத்தின்கீழ் ஜெயலலிதா அரசு சிறையிலே அடைத்தது. அந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் கே.என். பாஷா அவர்களும், பால் வசந்தகுமார் அவர்களும் 13-10-2012 அன்று அளித்த தீர்ப்பில் "நில அபகரிப்பு வழக்கு அடிப்படையில் குண்டர் சட்டத்தைப் பிரயோகிப்பது என்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானதாகும். ஒருவரைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ்ச் சிறையில் அடைப்பதற்கு முன்பு என்ன விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் விதிமுறைகளை வகுத்துள்ளது. இந்த வழக்கில் அந்த விதிமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஒருவரைச் சிறையில் அடைத்ததற்குப் பின்னர், ஐந்து நாட்களுக்குள் வழக்கு

தொடர்பான ஆவணங்களை அவருக்குத் தர வேண்டும். அதன்படி மனுதாரர்களை சிறையில் அடைத்ததற்குப் பின்னர் ஐந்து நாட்களுக்குள் எந்த ஆவணங்களும் அவர்களுக்குத் தரப்படவில்லை. மனுதாரர்கள் மீது 2007ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை நடந்த சம்பவம் தொடர்பாக ஆறு வழக்குகளை போலீசார் பதிவு செய்துள்ளனர். இந்த ஆறு வழக்குகளை வைத்துத்தான் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ்ச் சிறையில் அடைத்தார்கள். சட்டப்படி இந்த ஆறு வழக்குகளும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புள்ளதாக இருக்க வேண்டும். ஆனால் அவைகள் அப்படி இல்லை. இது தவிர, மனுதாரர்களின் செயல் பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். அப்படி எதுவும் மனுதாரர்களின் செயல்களில் இல்லை. வழக்கு சம்பந்தமான ஆவணங் களை முழுமையாகப் படிக்காமல், மனுதாரர்களைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ், சிறையில் அடைக்க வேண்டும் என்பதற்காகச் சேலம் மாநகரக் காவல் ஆணையர் இயந்திரத்தனமாக அவசர அவசரமாகச் செயல்பட்டுள்ளார். இதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 22 (5)இன் கீழ்த் தரப்பட்டுள்ள தனி மனித உரிமை அறவே மறுக்கப்பட்டுள்ளது. மாநகரக் காவல் ஆணையர் எப்படி அவசர அவசரமாகச் செயல்பட்டாரோ, அவ்வாறே அரசும் இது தொடர்பான ஆவணங்களைப் படிக்காமல் இவ்வழக்கினைத் தொடுத்துள்ளது. சொல்லப்பட்ட எந்த வழக்கிலும் வீரபாண்டி ஆறுமுகம் நேரடியாகச் சம்பந்தப்படவில்லை. எனவே சேலம் மாநகரக் காவல் ஆணையர் உள்நோக்கத்தோடு செயல்பட்டு, வழக்கில் உண்மைக்கு மாறாகப் பொய்யான தகவல்களைக் குறிப்பிட்டுத் தடுப்புக் காவல் ஆணை பிறப்பித்துள்ளார் என்பது இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது. மேலும் சுமார் 500 பக்கம் உள்ள ஆவணங்களை எப்படி இரண்டு நாள்களில் அரசு அதிகாரிகள் பரிசீலனை செய்து உத்தரவிட்டனர் என்று தெரியவில்லை. இவைகள் எல்லாமே சட்டத்துக்குப் புறம்பானதாகும். மனுதாரர்களைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ்ச் சிறையில் அடைத்து போலீஸ் கமிஷனர் பிறப்பித்த உத்தரவு செல்லாது. அதை ரத்து செய்கிறோம்”

என்று நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள் என்றால், ஜெயலலிதா அரசுக்கு இதைவிட ஒரு பெரிய கண்டனம் இருக்க முடியுமா?

குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் தங்களை விடுவிக்கக்கோரி தொடர்ந்த வழக்குகள் நிலுவையிலே இருந்ததையொட்டி, அந்த வழக்குகளை விரைந்து முடிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த சதீஷ்குமார் அக்னிஹோத்ரி உத்தரவிட்டார். அந்த அடிப்படையில் இந்த வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்காகச் சிறப்பு தனி டிவிஷன் பெஞ்ச் ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் நீதியரசர்கள் தனபாலன், சொக்கலிங்கம் ஆகியோர் 14-6-2014 அன்று இத்தகைய வழக்குகளை விசாரித்தனர். நீதிபதிகள் காலை 10.30 மணிக்கு விசாரணையைத் தொடங்கி, மதியம் 2 மணிக்குள் 220 வழக்குகளை விசாரித்து 212 வழக்குகளில் தீர்ப்பு கூறினார்கள். அதன்படி இந்த 212 வழக்குகளில் உள்ள குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

5-8-2013 தேதிய "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளேடு, குண்டர்கள் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, "While there is concern over history-sheeters detained under the Goondas Act walking free using legal loop-holes, human rights advocates are equally-worried over the frequent political abuse of the legislation. They say the stringent legislation, whose objective is to contain anti-social elements, has become a political weapon to settle scores" என்றும்;

"Over the years, the Goondas Act has become a toothless law thanks to the sloppy enforcement by the bureaucracy and police. So much so that over 80 per cent of those detained under the Goondas Act manage to walk out of jail within a few months either on the orders of the judiciary or Advisory Board, thereby reducing the invocation of the Act to a mere ritual. Curiously, in most cases, the detentions are quashed on the grounds of `non-application of mind' by the officials/ officers concerned while passing the detention orders. The Madras High Court has time and again quashed the detentions due to the silly mistakes of the officials" என்றும் எழுதியிருப்பதை எண்ணிப் பார்த்தால், இந்தச் சட்டம் எப்படியெல்லாம் சிந்தனை சிறிதுமின்றி

தாறுமாறாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஆனால் அ.தி.மு.க. அரசு, "ஒட்டகக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பதைப் போல, இந்தச் சட்டத்தை மேலும் கடுமையாகவும், கொடுமையானதுமாக மாற்றி, இதுவரை தொடர்ந்து இத்தகைய குற்றம் செய்தவர்களைத்தான் கைது செய்ய முடியும் என்ற நிலையைத் தளர்த்தி, ஒரே முறை தவறு செய்தாலே போதும், கைது செய்யலாம் என்ற அளவுக்கு, பெரும் தீய உள்நோக்கத்தோடு, திருத்தம் கொண்டு வந்திருக்கிறது. தாங்கள் நினைத்தபடி, அரசியல் ரீதியாகப் பழி வாங்க வேண்டுமென்ற நோக்கில், எதிர்க்கட்சியினரைக் கைது செய்யக்கூடிய வகையில் மிகவும் ஆபத்தான இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்து பேரவையில் நிறைவேற்றியிருப்பது, ஜனநாயகம் உயிர்த்தெழ முடியாமல் ஆழக் குழி தோண்டி புதைக்கும் முயற்சி என்று கழகத்தின் சார்பில் அறிவிக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

15-8-2014

3915. நீதிக்குத் தலைவணங்க ஒரு வாய்ப்பு!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1989ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து, அவர்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கித் தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு 13,500 மக்கள் நலப் பணியாளர்கள் 2-7-1990 அன்று நியமனம் செய்யப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவர்கள் நியமனம் பெற்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, 1991ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், அனைத்து மக்கள் நலப் பணியாளர்களையும் பணி நீக்கம் செய்து வெளியேற்றினார்கள். 1996ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சி, என்னுடைய தலைமையில் அமைந்த போது, வீட்டுக்கு அனுப்பப்பட்ட அனைத்து மக்கள் நலப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. 2001இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு 31.5.2001 அன்று மீண்டும் மக்கள் நலப் பணியாளர்களைப் பணிநீக்கம் செய்தது.

2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி என் தலைமையில் ஐந்தாவது முறை அமைந்தபோது, 31-5-2006 அன்று மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை தரப்பட்டது. 2011ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அவர்கள் ஏற்கனவே செய்ததைப்போல, மக்கள் நலப் பணியாளர்கள் அனைவரையும் பணி நீக்கம் செய்து தமிழக அ.தி.மு.க. அரசு, 8-11-2011 அன்று அரசாணை பிறப்பித்தது.

பணி நீக்க உத்தரவை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் வழக்கு அந்தச் சங்கத்தின் அலுவலர்கள் சார்பில் தொடரப்பட்டது. இதற்கான வழக்கில் நீதியரசர் சுகுணா, பணி நீக்க உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தார். 21-11-2011 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, கோர்ட் உத்தரவு

நிறைவேற்றப்படவில்லை; மக்கள் நலப் பணியாளர்களைப் பணியில் சேர்க்கவில்லை என்று கூறப்பட்டது. உடனடியாக அவர்களைப் பணியில் சேர்க்க அனுமதிக்க வேண்டுமென்றும், கோர்ட் உத்தரவை நிறைவேற்றியதற்கான அறிக்கையை 23-11-2011 அன்று தாக்கல்செய்ய வேண்டுமென்றும் நீதிபதி சுகுணா உத்தரவிட்டார்.

மக்கள் நலப் பணியாளர் சங்கத் தேர்தல் 3-4-2012 அன்று நடத்தப்பட்டு, திரு. மதிவாணன் தலைவராகவும், திரு.ராஜேந்திரன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் சார்பில் எந்தவொரு முக்கிய முடிவு எடுக்கப்பட வேண்டுமென்றாலும், சங்கத்தின் செயற்குழுவைக் கூட்டித்தான் எடுக்கப்பட வேண்டும். ஆனால் அந்தச் சங்கத்தின் செயலாளராக ஏற்கனவே இருந்த திரு.பழனி என்பவர் நீக்கப்பட்டிருந்த நேரத்தில், அவர் யாருடனும் கலந்துகொள்ளாமல், அவர் மட்டும் தன்னிச்சையாக ஒப்பந்தம் செய்துகொண்டு, ஐந்து மாதச் சம்பளம் கொடுத்தால் போதும், பணியிலிருந்து நீக்குவதற்கு ஒப்புக் கொள்வதாக ஒரு உடன்பாட்டினைச் செய்துகொண்டு, நீதிமன்றத்திலும் அதனைத் தெரிவித்து விட்டனர். நீதிமன்றமும் அதனை உண்மை என்று ஏற்றுக்கொண்டு, மக்கள் நலப் பணியாளர்களைப் பணிநீக்கம் செய்த ஆணைக்கு ஒப்புதல் கொடுத்து உத்தரவிட்டது.

அதற்குப் பிறகுதான் மக்கள் நலப் பணியாளர் சங்கத்தினர் சார்பில் வாதாடிய மூத்த வழக்கறிஞர் வில்சன், "பழனி என்பவர் பொறுப்பிலேயே இல்லை, மதிவாணன்தான் பொறுப்பிலே இருக்கிறார், எனவே பழனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டுமென்று நீதிமன்றத்தில் எடுத்துக்கூறினார். நீதியரசர் சுகுணா பிறப்பித்த உத்தரவை எதிர்த்துத் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. அதனை விசாரித்த தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதல் பெஞ்ச், "மக்கள் நலப் பணியாளர்கள் நீக்கம் என அரசின் விருப்பத்துக்கு ஏற்ப நடந்துள்ளது தெரிகிறது. இவர்கள் அனைவரும் தற்காலிகப் பணியாளர்கள் என வாதத்துக்குக் கருதினாலும்கூடக் கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றி உள்ளனர். ஒரு கையெழுத்தில் அவர்களைப் பணிநீக்கம் செய்ய வேண்டியிருந்தால் நீதியின் கொள்கைப்படியும், சட்டப்படியும் அவர்களை நீக்கும் முன்பு அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அரசு கருத்துக் கேட்கவில்லை.

இதைக் கருத்தில் கொண்டுதான் தனி நீதிபதி சுகுணா இந்த வழக்கில் தடை உத்தரவைச் சரியாகப் பிறப்பித்துள்ளார். அதை நீக்க முடியாது. மக்கள் நலப் பணியாளர்களின் நிலையைப் பார்க்கும்போது கால்பந்து விளையாட்டு போல உள்ளது. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி சம்பளம் நிர்ணயம் செய்து ஒருவருக்கு அரசுப் பணி வழங்கிய பிறகு, சரியான காரணம் இல்லாமல் அவரை நீக்குவது சட்ட விரோதமானது. இதை வன்மையாகக் கண்டிக் கிறோம். அரசு மாறும்போது மாறிமாறி உத்தரவு பிறப்பிப்பது கடும் கண்டனத்துக்குரியது, வேதனையானது, வருந்தத்தக்கது. எனவே அரசு கோரிக்கையை நிராகரிக்கிறோம். கடந்த ஆட்சியின் திட்டத்தில் மாற்றம் கொண்டுவந்தால் அந்தத் திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட ஊழியர்களை வேறு பணியில் அமர்த்த வேண்டும்; அதை விட்டுவிட்டு அவர்களை டிஸ்மிஸ் செய்வது தவறு. இது எந்த விதத்தில் நியாயமானது? இது அரசியல் சார்புடையது என்பது தெரியும். இருந்தாலும் அதற்குள் நாங்கள் தலையிட விரும்பவில்லை" என்று நீதிபதிகள் கூறினார்கள்.

ஆனால் தமிழக அரசின் சார்பில் இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள். உச்ச நீதிமன்றத்தில் 29-11-2011 அன்று நீதிபதிகள் டி.கே. ஜெயின், தவே ஆகியோர் இந்த மனுவை விசாரித்து, "தமிழகத்தில் என்ன தான் நடக்கிறது? ஆட்சி மாறும்போது முந்தைய அரசின் திட்டங்களை ரத்து செய்வது ஏன்? இனிமேல் இதுபோன்ற நிகழ்வுகள் தமிழகத்தில் நடக்கக்கூடாது" என்று கண்டனம் தெரிவித்தார்கள். இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 11-11-2013 அன்று விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் அணில்தவே, தீபக் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு இதனை விசாரித்து அளித்த தீர்ப்பில், மக்கள் நலப் பணியாளர்களை பணி நீக்கம் செய்யலாம் என்ற உயர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டனர். அனைத்து அம்சங்களையும் தகுதி அடிப்படையில் கணக்கிலே எடுத்துக்கொண்டு, வழக்கை மறுவிசாரணை செய்து, ஆறு மாதங்களுக்குள் முடிக்க வேண்டும். அதே நேரத்தில் தமிழக அரசு வழக்கை ஒத்திவைக்குமாறு கோரக்கூடாது. பொறுப்பில்லாத ஒருவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களின் வாழ்க்கையை அரசு பாழடித்துள்ளது, கண்டிக்கத்தக்கது. இருபது வருடம் அரசுக்காக அவர்கள் தங்களது

வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர் என்பதை அரசு கருத்தில் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்கள்.

மாண்புக்குரிய நீதியரசர்கள், "தமிழகத்திலே என்ன நடக்கிறது?" என்றும், "மக்கள் நலப் பணியாளர்களை பந்துபோல் விளையாடுவது சரிதானா?" என்றும் கேட்டிருக்கிறார்களே, அது இந்த அரசுக்கு அவமானமாகத் தெரியவில்லையா? அதையெல்லாம் தாங்கிக்கொண்டு, தி.மு. கழக ஆட்சியில் மக்கள் நலப் பணியாளர்களுக்கு வேலை கிடைத்தது என்ற ஒரே காரணத்திற்காக அரசு வீம்பு காட்டுவது நல்லதுதானா? அ.தி.மு.க. ஆட்சியில் இவ்வாறு பணி நியமனம் பெற்றவர்கள் யாரையாவது தி.மு. கழக ஆட்சியிலே வீட்டிற்கு அனுப்பிய சம்பவம் நடைபெற்றது உண்டா? உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்தவுடன் நான் கருத்துத் தெரிவிக்கும் போது, "நடந்தது, நடந்ததாக இருக்கட்டும். இனியாவது அ.தி.மு.க. அரசு தெளிவுபெற வேண்டும். யாரையும் பழிவாங்கும் நடவடிக்கைகளை விட்டுவிட வேண்டும். மக்கள் நலப் பணியாளர்களின் வழக்கிலே உச்ச நீதிமன்றம் இன்னும் ஆறு மாதங்களில் உயர் நீதிமன்றம் விசாரித்து முடிக்க வேண்டுமென்று தீர்ப்பு அளித்திருந்த போதிலும், அந்த விசாரணை நடைபெறும்வரை காத்திருக்காமல், தமிழக அரசே முன்வந்து, வழக்கினைத் திரும்பப் பெற்று, அந்த 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களுக்கும் உடனடியாக மீண்டும் வேலை அளித்திட, முன்வர வேண்டும். "ஆறுவது சினம்" என்பது பழமொழி. ஆறிவிடாமல் சினத்தை அப்படியே வைத்திருப்பது, அதலபாதாளத்திற்கே இட்டுச் சென்றுவிடும் என்பதை மறந்துவிடக் கூடாது. தி.மு. கழக ஆட்சியில் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்பதால், மக்கள் நலப் பணியாளர்கள் மீது அ.தி.மு.க. அரசு கொண்டிருக்கும் கோபத்தைத் தணித்துக் கொண்டு, அவர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் காப்பாற்றிட அரசே முன்வரவேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் ஜெயலலிதா அப்படியெல்லாம் கேட்டு விடுவாரா என்ன?

உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில்தான் சென்னை உயர் நீதிமன்றம் மக்கள் நலப் பணியாளர்களின் வழக்கை மீண்டும் விசாரித்து வந்தது. மக்கள் நலப்பணியாளர்களுக்காக வாதாடிய மூத்த வழக்கறிஞர் வில்சன், மக்கள் நலப்


பணியாளர்கள் கழக ஆட்சியில் எவ்வாறு விதிமுறைப்படி, தேர்வுக் குழு அமைத்து, பத்திரிகைகளில் விளம்பரம் செய்து நியமிக்கப்பட்டார்கள் என்பதையும், எவ்வாறு அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதையும், அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே அவர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்பதையும் எடுத்து விளக்கினார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதியரசர்கள் பால் வசந்தகுமார், சத்திய நாராயணா ஆகியோர் 19-8-2014 அன்று நல்லதோர் தீர்ப்பினை வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பில் முக்கியமாக, "பணி நீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களுக்கு, அதே பெயரிலேயோ அல்லது வேறு எந்தப் பெயரிலேயோ, மது ஒழிப்புப் பிரச்சாரப் பணிக்காகவோ அல்லது அரசுப் பள்ளிகள், கிராமப் பஞ்சாயத்து, நகர மன்றங்கள், மாநகராட்சிகள், கிராம நிர்வாக அலுவலகங்கள், வட்ட அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் பல்வேறு அரசு அலுவலகங்களிலே பணி அமர்த்தப்பட வேண்டும். அப்போது அவர்களுடைய உச்ச வயது வரம்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், அவர்களது கல்வித் தகுதிக்கேற்பப் பணி வழங்கவேண்டும். அவர்களுடைய சொந்த நகரங்களிலேயோ அல்லது மாவட்டங்களிலேயோ மேற்காணும் அடிப்படையில் பணி வழங்கப்பட வேண்டும். இந்த நடைமுறைகள் உடனடியாகத் தொடங்கப்பட்டு, 31-10-2014க்குள் முடிக்கப்பட வேண்டும். ஒருவேளை அன்றைய தேதிக்குள் அவர்கள் பணி அமர்த்தப்படவில்லை என்றால், பணி அமர்த்தப்படாத மக்கள் நலப் பணியாளர்களுக்கு 1-11-2014ஆம் தேதி முதல் அவர்கள் இறுதியாக வாங்கிய மாதச் சம்பளத்தைத் தொடர்ந்து வழங்க வேண்டும். தமிழக அரசு மது விற்பனை மூலம் ஆண்டுக்கு சுமார் 21 ஆயிரத்து 600 கோடி ரூபாய் வருவாயை, சுமார் 29 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைப் பணியிலே அமர்த்திப் பெறுகின்ற நிலையில், அந்தக் குடியினால் ஏற்படுகின்ற தீமைகளை விளக்கிடும் வகையில் மது ஒழிப்புப் பிரச்சாரத்திற்கு இந்த மக்கள் நலப் பணியாளர்களைப் பணியிலே அமர்த்திப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் குழந்தை சுகாதாரத் திட்டம், ஊரகத் தூய்மைத் திட்டம் ஆகியவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையில் இவர்களைப் பணியிலே அமர்த்தலாம்" என்றெல்லாம் நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று மூன்றரை ஆண்டுகளாகின்றன. மக்கள் நலப் பணியாளர்களுக்குப் பணி தராமல் இந்த மூன்றரை ஆண்டுகளையும் அ.தி.மு.க. அரசு வீணடித்ததோடு, உச்ச நீதிமன்றம்வரை அவர்களை இழுத்தடித்துப் படாதபாடு படுத்தியிருக்கிறது. நீதியரசர்கள் எல்லாம் தங்களது கடுமையான கண்டனத்தை இந்த அரசுக்குத் தெரிவித்ததோடு, மக்கள் நலப் பணியாளர்களுக்குப் பணி கொடுக்கப்பட வேண்டுமென்று உறுதியாகக் கூறியிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் பிறகும் அ.தி.மு.க. அரசு மேலும் கால தாமதம் செய்யாமல், பணி வாய்ப்பினை இழந்ததால் 19 மக்கள் நலப் பணியாளர்கள் தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கிறார்கள் என்ற சோக நிகழ்வினையும், வேலையிழந்து தவிக்கும் மக்கள் நலப் பணியாளர்களில் மிகப் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் நினைவிலே கொண்டாவது, உடனடியாக அவர்களுக்கு வேலை தர முன்வர வேண்டும். அதற்கு இடம் அளிக்காமல், தி.மு. கழக ஆட்சியில் பணி நியமனம் பெற்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, இந்தத் தீர்ப்பையும் மதிக்காமல், கால தாமதம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, இதற்குப் பிறகும் மேல் முறையீடு செய்ய முற்பட்டால், அதைவிடப் பெரிய கொடுமையோ, அநீதியோ வேறு எதுவும் இருக்க முடியாது. பொதுவாகவே அ.தி.மு.க. அரசுக்கு அரசு அலுவலர்களிடம் எந்த அளவுக்கு நல்ல பெயர்(?) உண்டு என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். எனவே இதற்குப் பிறகாவது அ.தி.மு.க. அரசு மக்கள் நலப் பணியாளர்கள் பணி நியமனத்தைப் பொறுத்தவரை, நீதிமன்றத் தீர்ப்பை மதித்து, மனிதாபிமானத்தோடு நடந்து கொள்வதுதான் அவர்களுக்கும் நல்லது! நாட்டிற்கும் நல்லது! பொதுவாக அ.தி.மு.க. அரசு நியாயத்தையும் மதிப்பதில்லை; நீதிமன்றத் தீர்ப்புகளையும் மதிப்பதில்லை! அந்த முறையையே இப்போதும் பின்பற்றாமல் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்புக்குத் தலைவணங்கக் கிடைத்திருக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள முன்வருவார்களா?

அன்புள்ள,

மு.க.

22-8-2014



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஏ.ஜே. டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022